ஸ்ரீ மஹாபாரதம்.

தமிழ் வசன காவியம்.

ஆதிபர்வம்,

முதலாவது அத்தியாயம்.

அநுக்கிரமணிகா பர்வம்.



நைமிசாரணியமென்ற வனத்திலே சௌனகரென்னும் மஹரிஷியான வர் ஸத்ரம் என்ற பெயருள்ள ஒரு பெரிய யாகத்தைச் செய்துகொண்டிருந் தார். இந்த யாகம் பன்னிரண்டு வருஷங்களான நீண்ட காலஞ் செய்யத் தக் கது. அந்த யாகத்துக்குச் சிறந்த ரிஷிகளான அநேக பிரமரிஷிகள் வந்திருந் தார்கள். அந்த யாகம் நடந்துகொண்டிருக்கும் காலத்தில் ஒரு நாள் சூத புராணிகரும் நைமிசாரணியத்துக்கு வந்தார். இவருக்கு உக்ரச்ரவஸ்ஸென்று பேர். சூதவம்சத்திற்பிறந்த ரோமஹர்ஷணர் என்பவருடைய புத்திரர். சகலமான புராணங்களையும் அறிந்துகொண்டு அவைகளை யாவருக்கும் சொல் லுகிறவர். ஆகையால் இவருக்குச் சூதபுராணிகரென்று பேர் வழங்கிவருகி றது. இவர் சௌனகருடைய ஆச்சிரமத்துக்கு வந்து அங்கே யிருக்கிற ரிஷிக ளெல்லாருக்கும் வணங்கி அவர்களைப் பார்த்துச் சொல்லுகிறார், நான் இன் றைய தினம் உங்களெல்லாரையும் தரிசனம் பண்ணினதினாலே பாக்கியவான் னேன். வியாசபகவான் அருளிச்செய்த தர்மமும், அர்த்தமும் நிறைந்த புராண கதைகளெல்லாம் எனக்குத் தெரியும். அந்தக் கதைகளை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். மஹரிஷிகளாகிய நீங்கள் அவைகளைக் கேட்டரு ளவேண்டும் என்று சொன்னார்.

அதைக் கேட்ட நைமிசாரணிய ரிஷிகளெல்லாரும் விநோதமான அந்தக் கதைகளைக் கேட்பதற்காகச் சூதபுராணிகரைச் சுற்றிக்கொண்டார்கள். சூத புராணிகர் அவர்களை வணங்கி அவர்களுடைய சுகக்ஷேமம் விசாரித்தார். அந்த ரிஷிகளும் சூதபுராணிகருக்கு உபசாரம்சொல்லி ஆஸனம் போட்டுத் தாங்களும் உட்கார்ந்து கொண்டார்கள்; சூதர் ஆஸனத்தின்மேல் உட்கார்

க்து சிரமபரிகாரஞ் செய்துகொண்டார். பின் ஒரு மஹரிஷியானவர் அவரைப் பார்த்து ஓ! சூதபுத்திரரே! இவ்வளவு காலம் நீர் எங்கேயிருக்க போய் வந்தீர்? எந்த இடத்திலிருந்து வருகிறீர்? இன்று எங்களுக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்டார். சூதபுராணிகர் சொல்லுகிறார்.

பரிக்ஷித்து மஹாராஜாவின் புத்திரரான ஜனமேஜய மஹாராஜா ஸர்ப்பயாகஞ்செய்தார். அப்போது வைசம்பாயனர் ஜனமேஜய மஹாராஜனுக்கு மஹாபாரத கதைகளை முழுதும் முறையாகச் சொன்னார். நானும் அற்புதமான அந்தப் புண்ணிய கதைகளைக் கேட்டுக்கொண்டிருந்தேன். பின் அநேக புண்ணிய தீர்த்தங்களுக்கும், க்ஷேத்திரங்களுக்கும் யாத்திரை செய்தேன். அதன்பின் பாண்டவர்களும் கௌரவர்களும் யுத்தஞ்செய்த ஸமந்த பஞ்சகமென்னும் புண்ணிய ஸ்தலத்துக்குப் போயிருந்தேன். அங்கே யிருந்து உங்களைத் தரிசனஞ்செய்யும்பொருட்டு இந்த நைமிச வனத்துக்கு வந்தேன். நீங்கள் சூரியனுக்கும், அக்னிக்கும் சமானமாய் விளங்குகிறீர்கள். நான் உங்களைப் பரமபிரம்மமாகவே நினைக்கிறேன். நீங்களெல்லாரும் உங்களுடைய நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு பரிசுத்தர்களாகிக் கவலையில்லாமல் சுகமாக உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நான் புண்ணியமான புராண கதைகளைச் சொல்லட்டுமா? என்று கேட்டார்.

ரிஷிகள் சொல்லுகிறார்கள்—வியாசபகவானால் சொல்லப்பட்ட மஹாபாரதமானது தேவர்களாலும் ரிஷிகளாலும் புகழப்பட்டது. சூட்சுமமான பொருள்களும், நியாயங்களும் அடங்கியுள்ளது. வேதங்களிலுள்ள பொருள்களை யெல்லாம் விரம்பியது. அநேக சாஸ்திரங்கள் நிறைந்தது. நான்கு வேதங்களுக்கும் சமானமானது. புண்ணியத்தைக் கொடுப்பது. பாவத்தைப் போக்குவது. ஆகையால் கதைகளுக்குள்ளே சிறந்த மஹிமையுள்ள அந்தப் பாரத கதைகளையே கேட்க விரும்பினோம் என்றார்கள்.

சூதமுனிவர், எல்லாவற்றுக்கும் மூலகாரணனும், அழிவில்லாதவனும், நித்தியனும் தானே யுகமாய், அந்த உலகத்துக்கு வேறானவனும் உயர்வும் தாழ்வுமான எல்லாப் பொருள்களையும் படைத்தவனும் விகாரமில்லாதவனும் ஸர்வமங்கள சொரூபியாய், எல்லும் நிறைந்தவனும், பாவத்தைப் போக்குகிறவனும், அசையும் பொருள் அசையாப் பொருள்களிலுள்ள எல்லாவற்றுக்கும் ஆதி பிதாவாய் விளங்குகிற ஸ்ரீமந்நாராயணமூர்த்தியை நமஸ்காரம் பண்ணிப், புண்ணியமான பாரதகதையை உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சொல்லுகிறார்.

நான்கு ஆச்சிரமதர்மங்களால் வருகிற புண்ணியமும், தீர்த்தயாத்திரை முதலியவைகளினாலாகிற புண்ணியமும், ஸ்ரீமந்நாராயணனுடைய கதைகளைக் கேட்பதனால் வரும் புண்ணியத்துக்குச் சமமாகுமோ? இது சொர்க்கமர்த்திய பாதாள மென்கிற மூன்று உலகத்திலும் மேலென்று சொல்லப்பட்டுள்ளது. ஞானம் நிறைந்தவர்

ளது. இதில் தேவர்களுடைய சரித்திரமும், மனிதர்களுடைய சரித்திரமும் விரித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. மூன்று காலங்களிலும் உள்ளதாகச் சொல்லப்பட்டது. வித்துவான்களுக்கு இன்பங்கொடுப்பது. வியாசமுனிவர் தபோபலத்தினால் நித்தியமான வேதத்தைான்காக வகுத்தபின் இந்த இதிகாசத்தைச் செய்தார். இமயமலையின் அடிவாரத்திலே யுள்ள குகையில் தர்ப்பாசனத்தின்மேல் பரிசுத்தமாய் உட்கார்ந்து தபசு பண்ணிக்கொண்டிருந்தார். அந்தத் தபோபலத்தினால், இந்த இதிகாசத்தை முழுமையுந் தெரிந்துகொண்டார். யோகத்தினால் எல்லாவிஷயங்களையும் அறிந்துகொண்டார். எப்படி என்றால் இந்த உலகம் பிறகாசமில்லாமல் இருளால் மறைந்திருந்தது. அப்போது அழிவில்லாத ஒரு பெரிய முட்டை உண்டாயிற்று. அதுவே உலகத்துக்கு ஆதிகாரணமானது. அந்த முட்டையிலேயே பிரபஞ்சமெல்லாம் அடங்கியிருந்தது. சகல பிரபஞ்ச சொரூபமான அழிவற்ற நித்தியமான பரபிரமம் அந்த முட்டையினிடத்திலுண்டென்று வேதங்கள் சொல்லுகின்றன. அந்த முட்டையிலிருந்து சிருஷ்டிகர்த்தாவான பிரமதேவர் முதலில் தோன்றினார். பிறகு தேவர்கள், ஸ்வாயம்புவமனு, ஸப்தரிஷிகள், பதினான்கு மனுக்கள், வீராட்புருஷன், ஆதித்தியர்கள், வசுக்கள், அசுவினிதேவர்கள், யக்ஷர்முதலிய தேவகணங்கள், பிதிர்த்தேவதைகள் அநேக மகரிஷிகள், உணடானார்கள். நீர், நிலம், மேலுலகம் வாயுதிசைகள், வருஷங்கள், ருதுக்கள், மாஸங்கள், பட்சங்கள், பகல், இரவு எல்லாம் உண்டாயின. உலகத்திலுள்ள ஸ்தாவரஜங்கமப்பொருள்கள் எல்லாம் உண்டாயின. இவைகளெல்லாந் தோன்றின முறைப்படியே லயம் அடைகின்றன. ஒவ்வொரு யுகத்தின் ஆரம்பத்திலும், முந்திய யுகத்திலுள்ளபடியே வஸ்துக்கள் தோள்றுகின்றன. முதலும் முடிவுமில்லாத பிரபஞ்சத்துக்குக் காரணமான காலசக்கிரமும் இப்படியே முதலும் முடிவுமில்லாமல் பிரபஞ்சத்தில் சுழன்றுகொண்டிருக்கிறது. சூரியனுக்கு வைவஸ்வதமனு பிறந்தார். அந்த மனுவுக்குத் தேவப்ராட் என்பவர் பிறந்தார். அவருக்கு சுப்ராட் பிறந்தார். ஸுப்ராட்டுக்கு தசஜோதி, சதஜோதி, ஸஹஸ்ரஜோதி யென்று மூன்று புத்திரர் பிறந்தார்கள்.

இவர்களுடைய சந்ததியில் தான் குருவம்சம், யதுவம்சம், பரதவம்சம் யயாதிவம்சம், இக்ஷ்வாகுவம்சம், அநேக இராஜவம்சங்களும், பிராணிசிருஷ்டிகளும் உண்டாயின. இந்தப் பிராணிகளிருக்குமிடமெல்லாம் ஜனனம், மரணம், வேதம், யோகம், ஞானம், அறம் பொருள் இன்பமும், அளவில்லாத சாஸ்திரங்கள், உலகடை எல்லாவற்றையும் வியாசமகரிஷி கண்டறிந்தார். இந்த அத்தியாயத்தில் பரத வம்சத்தினுடைய சரித்திரமும், அபிவிருத்தியும், இலக்கணைகளும், வேதப்பொருள்களும் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த வியாசபகவானிடமிருந்தே, திருதராஷ்டிரன்பாண்டு, விதுரன் ஆகிய மூன்று குருவம்ச புத்திரர்கள் உண்டானார்கள். இவர்கள் காலம் சென்றபின், மனுஷ்ய லோகத்துக்காக இந்தப் பாரதத்தைச் சொன்னார். ஜனமேஜய மஹாராஜாவினுடைய சர்ப்பயாகத்தில் வியாசருடைய கட்டளை

யிஞல் வைசம்பாயினர் இந்தப் பாரதத்தை யாவரும் கேட்கும்படி சொன்னர், குருவம்சவீருத்தி, காந்தாரியின் தர்மாடக்கை, வீதுராருடைய புத்தி, குந்தியின் தைரியம், கிருஷ்ணபகவானுடைய மகிமை, பாண்டவருடைய சத்தியம், திரௌபதனுதியர்களுடைய தர்மடக்கை. இவைகள் விரித்துச் சொல்லப்பட்டன. இலேக்கதைகளோடு கூடிப் பாரதம் நூருயிரம் சுலோகங்களடங்கியதாய் விளங்குறது, இலேக்கதைகளில்லாமல் இருபத்துநாலாயிரம் சுலோகங்கள் அடங்கியுள்ளது. பிறகு பாரதத்தைச் சுருக்கி நூற்றைம்பது சுலோகத்தில் அனுக்கிரமணிகாத்தியாயத்தை வியாசர் செய்தார். செய்தபின் இத்தச் நிறந்த இதிகாசத்தைத் தமது சிஷ்யர்களுக்கு எப்படிப் போதிப்பது என்று கவலைப்பட்டார்.

இதை யறிந்த பிரமதேவர் வியாசருக்குப் பிரத்தியட்சமானர். வியாச முனிவர் பிரமதேவரைக் கண்டு திடுக்கிட்டெழுந்திருந்து, அவரை நமஸ்கரித்து, ஒரு உயர்ந்த ஆசனத்தில் அவரை உட்காரவைத்துத், தாம் அவர் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தார். பிறகு பிரமதேவருடைய உத்தரவினுல் அவருக்குச் சமீபத்தில் உட்கார்ந்துகொண்டு, அவரைப் பார்த்து, பகவானே! மஹா நிலாக்கியமான பாரதமென்னும் காவியத்தை நான் செய்திருக்கிறேன். இதில் வேத இரகசியங்கள், வேதாங்கங்கள், இதிகாசங்கள், புராணங்கள், நடந்தது, நடக்கிறது, நடப்பதாகிய மூன்று காலங்கள், மூப்பு, சாவு, வியாதி, உற்பத்தி, நாசம், தாமம், ஆச்ரமம், வருணம் இவற்றின் இலக்கணம், கிரகங்கள், நட்சத்திரங்கள், ஆத்ம ஞானம், தர்க்கம், வைத்தியம், தேவ மனுஷ்ய ஜாதிகள் அவற்றின் உற்பத்தி காரணங்கள், தனுர்வேதம், யுத்தப்பயிற்சி, நதி, மலே, கடல், புண்ணிய தீர்த்தங்கள், உலகவகை, பரபிரமம் இவைகள் விரிவாக அடங்கியிருக்கின்றன, ஆனல் இதை எழுதுகிறவர் உலகத்தில் ஒருவருமில்லை யென்று சொன்னர்.

பிரமதேவர் வியாசரை நோக்கி, நீர் ஞானத்தினுலே வசிஷ்டருக்கும் மேலானவர், உமது வாக்கு ஒருபோதும் பொய்யாகாது. எப்பொழுதும் வேதத்தையே சொல்வது. நீரே பாரதத்தைக் காவியமென்றதனுல் அது காவியமேயாகும். பிரமசரியம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்கிற மூன்று ஆசிரமங்களும் கிரகஸ்தாச்ரமத்திற்கு மேலாக மாட்டா, அது போல எத்தக் காவியமும் இந்தக் காவியத்துக்கு மேலாகாது. ஜடமாகவும் குருடாகவும் செவிடாகவும், பைத்தியமாகவுமிருக்கிற உலகத்திற்கு ஞானத்தினுல் ஒளியைக் கொடுத்தீர். காலு புருஷார்த்தங்களையும் சுருக்கியும் விரித்தும் சொல்லிய மனிதருடைய அஞ்ஞான இருளே விலக்கிவிட்டீர். உமது பாரதம் பூரண சந்திரனே யொத்தது. அது தன்னுடைய வேதப் பொருளாகிற ஒளியினுலே மனிதருடைய புத்தியரகிய அல்லிப்பூவை மலரச்செய்கின்றது. பாரதமே ஒரு மரம், அனுக்கிரமணிகாபர்வம் அதற்கு வித்து, பௌலோம ஆஸ்தீகபர்வங்கள் அதற்கு வேர்; சமபவபர்வம் அடிமரம், சபாபர்வம் பட்சிகள் தங்குமிடம், ஆரணியபர்வம் சிறு கிளைகள், விராடபர்வம், உத்தியோகபர்வமிரண்டும் அதன் இரசம், பீஷ்மபருவம் பெருங்கிளை, துரோணபர்வம் இலைகள், கர்ணபர்வம்

மலர்கள், சல்லியபர்வம் வாசனை, ஸ்திரீபர்வம், ஐஷிகபர்வமிரண்டும் உச்சி, சாந்திபர்வம் பெரிய பழம், அசுவமேதபர்வம் அந்தப் பழங்களின் இரசம், ஆசிரமபர்வம் பட்சிகளுக்கு இடம், மௌஸலபர்வம் பட்சிகளின் ஒலி, ஷொடர்கள் மரத்தைச் சூழ்ந்த பறவைகள், இந்தப் பாரதம் கவீசுவரர்கள் எல்லாருக்கும் ஆதாரமானது. விக்னேசுவரரைத் தியானித்தால் அவர் வந்து எழுதுவார் என்று சொல்லிப் பிரமதேவர் தமது சந்நியலோகம் போய்விட்டார்.

பிரமதேவர் போனபின் வியாசர் விநாயகரைத் தியானித்தார். அதை யறிந்த விநாயகமூர்த்தி அவருக்குப் பிரத்தியட்சமானார். வியாசர் விக்னேசுவரரை வணங்கிப் பூஜைசெய்து, சுவாமீ! கணாதா! என் மனதிலே முன்னமே தோன்றின பாரதத்தைச் சொல்லுகிறேன். அதை யெழுதி யருளவேண்டும் என்று பிரார்த்தித்தார். விநாயகமூர்த்தி வியாசரைப் பார்த்து, நான் எழுதும்போது என் எழுத்தாணி ஒரு நிமிஷங்கூடத் தடைபடக் கூடாது. அவ்வளவு சீக்கிரமாக நீர் சொல்லிக்கொண்டு வருவீரானால் நான் எழுத ஒத்துக் கொள்வேன் என்றார். அதற்கு வியாசர், நீர் அர்த்தத்தை தெரிந்துகொண்டே எழுதவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். விநாயகர் ஒத்துக்கொண்டு எழுத ஆரம்பித்தார். வியாசர் சொல்லும்போதே அர்த்தமாகாதபடி சில கடின பாகங்களைச் செய்தார். அவ்விதமான எண்ணூயிரத்தொண்ணூறு கடின சுலோகங்கள் அமைந்திருக்கின்றன. விநாயகர் அவற்றின் பொருளை அறியும்படி யோசிக்கும்போது வியாசர் அதிகே கவீசுகளைச் செய்தார். பாரதம் எழுதி முடிந்தபின் வியாசர் அதைத் தமது புத்திரராகிய சுகமுனிவருக்கு உபதேசித்தார். பிறகு முறைப்படி ஷிஷ்யர்களுக்குச் சொன்னார். இது அறுபதுலட்சம் கிரந்தங்கள் அடங்கியது. அவற்றில் முப்பதுலட்சம தேவலோகத்திலுள்ளன; பதினைந்துலட்சம் பிதிர்லோகஞ்சேர்ந்தன. பதினாலுலட்சம் யட்சர் இராட்சதர்களிடம் உள்ளன. இலட்சம் கிரந்தங்கள் மாத்திரம் மனுஷலோகத்தில் நிலைபெற்றன.

இந்தப் பாரதத்தை நாரதமஹரிஷி தேவர்களுக்குச் சொன்னார். தேவலரும் சுவிதரும் பிதிர்களுக்குச் சொன்னார். யட்ச இராட்சஸ கந்தர்வர்களுக்குச் சுகர் உபதேசித்தார். வைசம்பாயனர் பூலோகத்தில் பிரசித்தம் பண்ணினார். வைசம்பாயனர் ஜனமேஜய மஹாராஜாவுக்குச் சொன்னபடி உங்களுக்குச் சொல்லுவேன். முதலில் அனுக்கிரமணிகா பர்வத்தைச் சொல்லுகிறேனென்று சூதமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

துரியோதனன் கோபமே வடிவம் எடுத்ததுபோன்ற ஒரு பெரிய மரம் திருதராஷ்டிரன் அதன் வேர்; கர்ணன் அடிமரம்; சகுனி கிளைகள்; துச்சாஸனன் மலரும் கனியும்.

யுதிஷ்டிரர் தர்மமாகிய மரம்; கிருஷ்ணனும், வேதமுணர்ந்த பிராமணர்களும் வேர், அர்ஜுனன் அடிமரம்; பீமசேனன் கிளைகள், சகுலசகாதேவர்கள் மலரும் கனியுமாம்.

பாண்டுமஹாராஜா பராக்கிரமசாலி, அகேக தேசங்களை ஜயித்தார். வேட்டையாடுவதிலே விருப்பமுள்ளவரானபடியால் வேட்டையாடிக்கொண்டு காட்டிலே வாசம்பண்ணினார். அவர் வேட்டையாடும்போது பெண் மானோடு கூடியிருந்த ஒரு மானை அடித்தார். அதனால் அவர் தமது மனைவியோடு கூடினால் இறந்துபோகும்படியான கொடிய சாபம் அடைந்தார் குந்திதேவி இளம்பருவத்தில் துருவாச முனிவரிடமிருந்து ஐந்து மந்திரங்களைப் பெற்றிருந்தாள். அவற்றினுள் மூன்று மந்திரங்களினால் தருமதேவதை, வாயு, இந்திரன் ஆகிய மூன்று தேவர்களையும் அழைத்து, அவர்களுடைய அனுக்கிரகத்தினால் யுதிஷ்டிரர், பீமன், அர்ஜுனன் மூவர்களையும் பெற்றாள். மாத்திரி குந்திதேவியினிடமிருந்து ஒரு மந்திரத்தை உபதேசஞ் செய்துகொண்டாள். அந்த மந்திர பலத்தினால் அசுவினிதேவர்களை அழைத்து அவர்களுடைய அனுக்கிரகத்தினால், சகுல சகாதேவர்களைப் பெற்றாள். இந்த ஐந்து புத்திரர்களும் அந்த வனத்திலுள்ள மஹரிஷிகளோடு பழகி, ஆசாரமிகுதிகளைக் கற்றுக் கொண்டார்கள். இதன்பின் பாண்டுமஹாராஜா மாத்திரியோடு கலந்து, ரிஷி சாபத்தினால் இறந்துபோனார். மாத்திரியும் உடன்கட்டை யேறித் தன் கணவனோடு கூட மரணமடைந்தாள்.

அந்த வனத்திலுள்ள ரிஷிகள் குந்தியையும் பாண்டவர்களையும் அஸ்தினாபுரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய்ப், பீஷ்மர் திருதராஷ்டிரன் இவர்களிடம் ஒப்புவித்தார்கள். பாண்டவர்கள் நகரத்தில் புகுந்தபோது புஷ்பமழை பொழிந்தது. சந்தனமாரி வருஷித்தது. தேவதுந்துபிகள் முழங்கின. தேவர்களுடைய சந்தோஷ கோஷமும் கேட்கப்பட்டது. பட்டணத்திலுள்ள ஜனங்களுடைய சந்தோஷக்கூச்சல் ஆகாயத்தை அளாவியது. நல்ல காலமாகையால் நாம் பாண்டவின் சந்ததியைக் கண்ணால் பார்க்கிறோமென்று ஜனங்களெல்லாரும் பாண்டவர்களுக்கு உபசாரஞ்சொல்லி மகிழ்ந்தார்கள். பாண்டவர்கள் வேதசாஸ்திரங்களிலும், தனுர்வேதத்திலும் வல்லவர்களாய்த் தங்களுக்குச் சமானமில்லாமல் விளங்கினார்கள். தர்மராஜாவினுடைய பரிசுத்தத்தாலும், பீமசேனனுடைய தைரியத்தினாலும், அர்ஜுனனுடைய பராக்கிரமத்தினாலும், சகுலசகாதேவர்களுடைய சயத்தினாலும், குந்தியினுடைய அடக்கமான குணங்களினாலும் ஜனங்கள் சந்தோஷமடைந்தார்கள். அவர்களுடைய பராக்கிரமத்தினாலும் சிறந்த குணங்களினாலும் உலகமெல்லாம் புகழ்ந்தது.

அர்ஜுனன், பாஞ்சாலராஜசபையில் திரௌபதைக்காக வியமித்திருந்தபடி வில்லை வளைத்து மச்சிய யந்திரத்தை அறுத்து இராஜர்களெல்லாம் ஆச்சரியமடையும்படியாகத் திரௌபதியைக் கைப்பற்றினான். அது முதல் அவன் வில்லாளிகளெல்லாரிலும் மேலானவனென்று எல்லாராலும் புகழப்பட்டான். யுத்தஸ்தலில் தனக்கெதிர் ஒருவருமில்லாதவனைப்போல விளங்கினான். உலகத்திலுள்ள அரசர்கள் எல்லாரையும் ஜயித்துத், தர்மராஜாவினுடைய இராஜசூய யாகத்தை நிறைவேற்றினார். சர்வம்கொண்டிருந்த ஜராசந்தன் சிசுபாலன் என்னும் இராஜர்கள் கிருஷ்ணர்ஜுன பீமசே

னர்களால் ஏதம்பண்ணப்பட்டார்கள். சகல தேசங்களிலுமிருந்து தங்கம், இரத்தினம், முத்து, யானை, குதிரை, பசு, பல வகையான சால்வைகள், ஒஸ்திரங்கள், கம்பளங்கள், உயர்ந்த தோல்கள், தனங்கள் எல்லாம் அபரிமிதமாக வந்துசேர்ந்தன. மயன் என்ற ஒரு அசுரசிற்பி யுதிஷ்டிரருக்கு அற்புதமான ஒரு சபையை நிர்மாணம் பண்ணிக் கொடுத்தான். இவ்வளவு ஏற்பாடமாக இராஜசூய யாகம் தடைபடாமல் நடந்தேறியது. அந்தச் சபையில் துரியோதனன் இடறி விழுந்ததனால் அவனைப் பார்த்துப் பீமசேனன் நகைத்தான். இதனாலும், பாண்டவர்களுக்கு வந்த ஏராளமான ஐசுவரியத்தினாலும் துரியோதனன் பாண்டவர்களிடத்தில் பொறாமைகொண்டான். அவன் சரீரம் வாடி இளைத்தது நிறம்—மாறிப்போயிற்று. துரியோதனனுக்கு வேண்டியவர்கள் இந்தச் சமாசாரத்தைத் திருதராஷ்டிரனுக்குத் தெரிவித்தார்கள். புத்திரனிடத்தில் அன்பு நிறைந்த திருதராஷ்டிரன் தன் குமாரனுடைய இஷ்டப்படி பாண்டவர்களோடு சூதாடி அவர்களுடைய தனங்களை அபகரிக்க உத்தரவு கொடுத்தான். விதுரர், பீஷ்மர், துரோணர், கிருபர் இவர்களுடைய அபிப்பிராயத்தை அங்கீகரிக்கவில்லை. இதனால் கிருஷ்ணசுவாமி திருதராஷ்டிரன் முதலியவர்களிடத்தில் வெறுப்படைந்தார். இந்த அந்நியாயத்தைக் காரணமாக வைத்துக் கொண்டு பூமிபாரந்தீர்க்கும்படி எண்ணிக்கொண்டிருந்தபடியால், கிருஷ்ணசுவாமி அந்தச் சூதாட்டத்தைத் தடுக்காமலிருந்தார். இந்தச் சூதாட்டத்தில் பாண்டவர்கள் தோற்ற இராஜ்யத்தை யிழந்து வனவாசம் போனார்கள். குறிப்பிட்டபடி வனவாசம் முடிந்தபின், பாண்டவர்கள் தங்கள் பூமியைக் கேட்டார்கள், துரியோதனன் கொடுக்க மாட்டேனென்று சொன்னபடியால், பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் யுத்தமுண்டாயிற்று. பாண்டவர் ஜெயம் பெற்றார்கள். துரியோதனாதியர் மடிந்தார்கள். இத்தச் சமாசாரத்தைக் கேட்டபின் திருதராஷ்டிரன் வெகு சோகம் தன் மனதுக்குள் யோசித்துக் கொண்டு பின் ஸஞ்சயனைப் பார்த்துச் சொல்லுகிறான்.

ஸஞ்சயனே! நீ நன்றாய்ச் சாஸ்திரங்களோ கற்றறிந்தவன்; மிகுந்த கேள்வியுடையவன்; நுட்பமான புத்தியுள்ளவன், எல்லாராலும் ஞானியென்று ஒப்புக்கொள்ளப்பட்டவன், என்மேல் வெறுப்படையாமல் நான் சொல்வதைக் கேள். எனக்குச் சண்டையில் விருப்பமில்லை. என் குலம் அழிந்துபோவதில் எனக்கு இஷ்டமில்லை. என் புத்திரர்தானென்றும், பாண்டுபுத்திரர்களென்றும் வித்தியாசமாக நினைக்கவுமில்லை. கேசபமூள்ள என் புத்திரர்களென்னை யெறந்தார்கள். புத்தியில்லாத துரியோதனனுடையபுத்தியைக்கேட்டு நானும் புத்தியில்லாதவனானேன். தர்மராஜாவினுடைய இராஜசூயயாகத்தில் அவனுக்கு வந்த ஐசுவரியத்தையும் அவனுடைய சபையையும் துரியோதனன் பொறாமையடைந்தான். சபையில் தனக்குண்டான அவமானத்தைச் சகிக்க முடியாமற்போனான். பாண்டவர்களை வெல்லச் சக்தியில்லாமையால் சகுனியின் புத்தியைக்கொண்டு சூதாடத் தூண்டினான். இதனால்தான் தெரிந்து

கொண்டிருக்கிறதை உனக்குச் சொல்லுகிறேன். அதைக் கேட்டபின் நான் ஞானத்தைக் கண்ணுக வுடையனனென்று நீ தெரிந்துகொள்வாய்.

இராஜர்களெல்லாரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அர்ஜுனன் வில்லை வளைத்துக் குறியை அறுத்துத் திரௌபதியைக் கொண்டுபோனான் என்று கேட்டபோதே எனக்கு ஜயத்தில் சிரத்தையில்லை. அர்ஜுனன் துவாரகைக்குப் போய்ச் சுபத்திரையைப் பலாத்காரத்தினால் விவாகம் பண்ணிக்கொண்டானென்றும், இராமகிருஷ்ணர்கள் இந்திரப்பிரஸ்தம் போனார்களென்றும் கேட்டபோதே எனக்கு ஜயத்தில் எண்ணமில்லை. அர்ஜுனன் இந்திரனை வென்று காண்டவவனத்தை அக்கினிக்குக் கொடுத்தானென்று கேட்டபோதே எனக்கு ஜயமுண்டாகுமென்கிற கருத்தில்லை. விதுரன் பாண்டவராகாரியத்தில் சிரத்தையுள்ளவனு யிருந்தானென்றும், பாண்டவர் அரக்கு மாளிகையினின்றுந் தப்பிப் பிழைத்தார்களென்றும் கேட்டபோதே எனக்கு ஜயத்தில் நம்பிக்கையில்லை. பராக்கிரமசாலியான ஜராசந்தனைப் பீமசேனன் கொன்றனென்று கேட்டபோதே எனக்கு ஜயத்தில் ஆசையில்லை. பாண்டவர்கள் இராஜாக்களெல்லாரையும் வென்று இராஜசூயயாகத்தை நிறைவேற்றினபோதே எனக்கு ஜயத்தில் நிச்சயமில்லை. திரௌபதியைச் சபையிலிழுத்துக்கொண்டவந்து மானபங்கஞ்செய்தபோதே எனக்குஜயத்திலாசை யொழிந்தது. யுதிஷ்டிரன் சூதாடித் தோற்றப்போன பிறகு, அவனுடைய சகோதரர்கள் அவனுக்கு அநுசரணையாயிருந்தார்களோ அப்போதே ஜயம்வாராதென்று தெரியும். வனத்திற்குப்போன பின்னும் பீமார்ஜுனர்கள் தம் தமையனுக்கடங்கி அநேக அற்புதமான காரியங்களைச் செய்தார்களென்றபோதே எனக்கு ஜயமுண்டாகுமென்ற நானெண்ணவில்லை. தர்மபுத்திரன் வனத்திலிருக்கும்போது அநேக பிராமணர்களும் சகியாகளும் அவனிடம் போய்ச் சேர்ந்தார்களென்ற கேட்டபோதே ஜயமுண்டாகாதென்று எனக்குத் தெரியும், தேவாதி தேவரான பரமசிவன் வேடருபங்கொண்டுவந்து அர்ஜுனனோடு சண்டைசெய்து பாசுபதாஸ்திரங்கொடுத்தானென்றபோதே எனக்கு ஜயமில்லை யென்று தெரியும். பாண்டவர்கள் அநேகமானமஹரிஷிகளுடன்கூடி அவர்களோடுகூடிகேகமானார்களென்று கேட்டபோதே எனக்கு ஜயமில்லை யென்று தெரியும். அர்ஜுனன் சொர்க்கலோகம் போய் இந்திரனிடத்தில் தேவாஸ்திரங்களை கற்றுவென்று கேட்டபோதே ஜயமுண்டாகாதென்கிற நிச்சயமுண்டு. யுதிஷ்டிரன் தீர்த்த யாத்திரைக்குப் போய், ரோமசமஹரிஷியோடு சேர்ந்துகொண்டதும், பிறகு சுவமஹரிஷியிடமிருந்து அகஸ்தியனென்னும் ருத்ராஸ்திரத்தைக் கற்றுக் கொண்டானென்றபோதே ஜயத்திலாசையேயில்லை அர்ஜுனன்காலகேய நிவாதகவசர்களை ஜயித்து இந்திரலோகத்திலிருந்து திரும்பி வந்தானென்றபோதே ஜயத்தில் சிரத்தை கொண்டேன். பாண்டவர்கள் கர்த்தமாதனபர்வதத்தில் குபேரனைத் தரிசித்தார்களென்றபோதே ஜயம்வாராதென்றதெரிந்துகொண்டேன். என்புத்திரர்கள் கர்ணன்புத்தியைக் கேட்டுப் பகடையைப் பார்த்திறதற்காக வனத்துக்குப் போய்க் கர்தர்வர்களால் பிடிபட்டதையும், அர்ஜுனன் வந்து அவர்

களை விவரித்ததையும் கேட்டபோதே எனக்கு ஜயத்திலாசையில்லை. தர்மபுத்திரனை யட்சரூபதாரியுதிஷ்டிரனிடம் வந்துகேட்ட கேள்விகளுக்கு அவன் சரியான உத்தரவு சொன்னானென்றபோதே எனக்கு ஜயமுண்டாகாதென்று தெரியும். பாண்டவர்கள் விராடதேசத்திலே போய் இருந்தபோது துர்புத்திரர்கள் அவர்களை கண்டுபிடிக்க முடியாமற் போனார்களென்றபோதே ஜயத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. அஜ்ஞாதவாசத்தில் பாண்டவர்கள் எனபுத்திமான்களுக்கு தெரியாதபடி வந்து சண்டைசெய்தார்களென்றபோதே ஜயமுண்டாகாதென்று தெரியும். பராக்கிரமசாலியான கீசகனை பீமசேனனால் கொல்லப்பட்டபோதே ஜயமுண்டாகாதென்று தெரியும். விராட தேசத்தில் அர்ஜுனன் ஒருவனுக்கே வந்த கௌரவர்களை ஜயித்தானென்று கேட்டபோதே ஜயமுண்டாகாதென்று தெரியும். விராடராஜன் தன்புத்திரியான உத்தரையை அபிமன்யுவுக்கு கொடுத்ததைக் கேட்டபோதே எனக்கு ஜயமில்லை யென்று தெரியும். இராஜசூயத்தை யிழுந்த யுதிஷ்டிரனுக்கு ஏழு அக்ஷௌஹிணிசேனியங்கள் சேர்ந்தபோதே ஜயம் வாராதென்று நிச்சயமாய்த் தெரியும். ஸ்ரீகிருஷ்ணபகவான் சகல விதத்திலும் பாண்டவாகளுக்குச் சகாயமாயிருக்கிறாரென்றபோதே நான் ஜயத்தை யெதிர்பார்க்கவில்லை. நாரதர் வந்து கிருஷ்ணார்ஜுனர் சகிருவரும் நரநாராயணர்கள் அவர்களே நான் பிரமலோகத்தில் பார்த்திருக்கிறேனென்றபோதே எனக்கு ஜயத்தில் ஆசையொழிந்தது. கிருஷ்ணபகவான் சமாதானஞ்செய்வதற்காக வந்து காரியசித்தியாகாமல் போனபோதே நான் ஜயத்தை யெதிர்பார்க்கவில்லை கர்ணனும் துரியோதனனும் கிருஷ்ணபகவானைக் கட்டத் தீர்மானித்ததையும், கண்ணன் தன் விசுவரூபத்தை யெடுத்துக்கொண்டதையுங்கேட்டபோதே ஜயமில்லை யென்ற நிச்சயமுண்டு. கிருஷ்ணன் திரும்பிப் போகுமபோது குந்திதேவியுடைய தைரியமொழி கூறினதென்றபோதே எனக்கு ஜயத்திலாசையொழிந்தது. பீஷ்மரும் துரோணரும் பாண்டவாகளுக்கு ஆசீர்வசனம் சொன்னாகளென்றபோதே எனக்கு ஜயங்கிடையாதென்று அறிவேன். கர்ணன் பீஷ்மரைப் பார்த்து நீர் யுத்தஞ்செய்யும்வரையில் நான்சண்டைசெய்வதில்லையென்று சொல்லிவிப்பொழுது விலகிப் போய்விட்டானை அப்போதே ஜயங்கிடையாதென்று தெரியும். கிருஷ்ணார்ஜுனர்களும் மஹாகர்த்திபுள்ள காண்டீவமென்கிற வில்லும் அதிய மூன்று பொருளும் ஒன்றுசேர்ந்தபோதே ஜயம் வாராதென்று தெரியும். அர்ஜுனன் மகிமையகி ஒப்புக்கொண்டு நேரின்மேலுட்காதபோது கிருஷ்ணன் தன் விசுவரூபத்தைக் காட்டி தெளிவித்தபோதே ஜயமுண்டாகாதென்று தெரியும். பீஷ்மர் பதினாயிரக் கணசகரான தேராளிகளைக் கொன்றபோது பாண்டவாகளில் ஒருவனாவது கொல்லவில்லை யென்று கேட்டபோதே நான் ஜயத்தை யெதிர்பார்க்கவில்லை, பீஷ்மர் தமது மரணத்துக்குத் தாமே வழி சொன்னதைக் கேட்டபோதே நான் ஜயத்தை யெதிர்பார்க்கவில்லை, சிகண்டியை முன்னே நிறுத்திக்கொண்டு அர்ஜுனன் பீஷ்மரை அடித்தபோதே ஜயமில்லை யென்று தெரியும். பீஷ்மர் பாணங்களினால் அடிபட்டுச் சரசயனத்தில் படுத்தாரென்றபோதே நான்

ஜயத்தை யெதிர்பார்க்கவில்லே. அர்ஜுனன் அந்த இடத்திலிருந்தே பூமியைப் பிளந்து தண்ணீரை யழைத்து பிஷ்மருக்குத் தாகசாந்தி செய்வித்தானென்ற போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லே. பாண்டவர்களுக்கு அனுகூல மாகக் குளிர்ந்த காற்று வீசினதையும், சுக்கிறனும் சூரியனும் நல்ல இடத்தில் கூடியிருந்ததையுங் கேட்டபோதே ஜயமுண்டாகுமென்று தெரியும் சம்மைப் பார்த்து துஷ்டமிருகங்கள் விகாரமாகக் கத்தினபோதே ஜயமுண்டாகா தென்று தெரியும் துரோணர் தமது சாமர்த்தியத்தைக் காட்டியும் பாண்டவர் களைக் கொல்லாதபோதே ஜயமுண்டாகாதென்று நானறிவேன். மஹாரதர்க ளாகிய சம்சப்தகர்களே அர்ஜுனன் கொன்றுவிட்டானென்றபோதே நான் ஜயத்தை யெதிர்பார்க்கவில்லே. துரோணரால் சாக்கப்பட்ட சேனையுகத்தை அபிமன்யு பிளந்துகொண்டு உள்ளே புகுந்தானென்றபோதே ஜயமுண்டாமென் றறிகவில்லே. அர்ஜுனனே ஜயிக்க முடியாத மஹாரதர்கள் அபிமன்யு வைச் சூழ்ந்துகொண்டு அவனைக் கொன்றுவிட்டுக் களிப்படைந்தார்களே! அப் போதே எனக்கு ஜயமில்லே யென்று தெரியும். சிந்துராஜனைக் கொல்வதாக அர்ஜுனன்சபதஞ்செய்து, இராஜாக்கள் அறியும்படி அந்தச் சபதத்தை யிறை வேற்றினனென்றபோதே நான் ஜயத்தை யெதிர்பார்க்கவில்லே. அர்ஜுனன் குதிரைகள் களைத்திருந்தபோது கண்ணன் அவைகளே அவிழ்த்துவிட்டுத் தண் ணீர்காட்டிக் களையாற்றித் தேரிற்பூட்டினார் என்றபோதே ஜயம் வாராதென்று எனக்குத் தெரியும் தேர்க்குதிரைகள் சக்தியற்றிருந்தபோது அர்ஜுனன் தேரின் உட்புறத்தில் உட்கார்ந்துகொண்டு யுத்தவீரராகளைக் கிட்டவரவொட் டாமல் தடுத்தானென்றபோதே நான் ஜயத்தை யெதிர்பார்க்கவில்லே. சாத்யகி யானவன் துரோண சேனையைக் கலங்கவடித்துக்கொண்டு கிருஷ்ணர்ஜுனர் களிடம் வந்தானென்றபோதே நான்ஜயத்தை யெதிர்பார்க்கவில்லே. வீரனுகிய பீமசேனன் கர்ணன்கையில் அகப்பட்டுக்கொண்டபோது கர்ணன் அவனைக் கொல்லாமல் லிட்டபோதே எனக்கு ஜயமுண்டாகுமென்கிற எண்ணமில்லே. துரோணர், கிருபர், அசுவத்தாமா, கர்ணன் முதலானவர்கள் ஜயத்திரதனைத் காப்பாற்ற முடியாமற் போனார்களே அப்போதே நான் ஜயத்தை யெதிர்பார்க் கவில்லே கர்ணனவன் தனக்குத் தேவேந்திரன கொடுத்த சக்தியாயுதத் தைக் கடோத்கசன்மேலேவினபொழுதே எனக்கு ஜயமில்லே யென்று தெரி யும். துரோணாசாரியர் தேரின்மேல் நிஷ்டையிலிருக்கையில் அவரைத் திருஷ்டதுய்மனன் கொன்றபோதே எனக்கு ஜயமுண்டாகாதென்று தெரியும் அசுவத்தாமா நகுலனுக்குச் சரியாக வின்று யுத்தம் பண்ணி அவனே ஜயிக்கா மல் விட்டபோதே ஜயமில்லே யென்று தெரியும். அசுவத்தாமா பிரயோகித்த நாராயணாஸ்திரம் பாண்டவர்களைக் கொல்லாமற் போனபோதே ஜயமில்லேயென் று தெரியும். பீமசேனன் துச்சாதனனுடைய இரத்தத்தைப் பானம் பண்ணினபோது ஒருவரும் அவனைத் தடுக்கச் சக்தியில்லாமலிருந்தார்களென் றறிபோதே எனக்கு ஜயம் வாராதென்று தெரியும். துச்சாதனன், அசுவத் தாமா, கிருதவர்மா இவர்களே யுதிஷ்டிரர் ஜயித்துவிட்டாரென்றபோதே

எனக்கு ஜயம் இடையாதென்று தெரியும். கிருஷ்ணனுக்குச் சமானமான சல்லியன் யுதிஷ்டிரர்கையால் மடிந்தபோதே ஜயமில்லை யென்று தெரியும். வஞ்சகனுடைய சகுனியை சகாதேவன் கொன்றபோதே எனக்கு ஜயம் இட்டாதென்று தெரியும். தார்மிகனான யுதிஷ்டிரனை வலுமையுடனான மடுவுக்குள் மூழ்கிக் கிடந்தானென்று கேட்டபோதே ஜயமில்லை யென்று தெரியும். பாண்டவர்கள் மடுவுக்குப் போய் அவமான வார்த்தைகளால் அவனை வெளிப்படுத்தின போதே ஜயமில்லை யென்று தெரியும். கிருஷ்ணனுடைய தர்மோபாயத்தைக் கொண்டு பீமன் வஞ்சனையாகத் துரியோதனனைக் கொன்றபோதே ஜயமில்லை யென்று தெரியும். அசுவத்தாமர் முதலானவர்கள் தூங்கிக்கொண்டிருந்த பாண்டவ சைனியத்தையும், உப பாண்டவர்களையும் கொன்றார்களென்று கேட்டபொழுதே ஜயத்தை நானெதிர்பார்க்கவில்லை. அசுவத்தாமா பிரயோகித்த ஐஷீகாஸ்திரம் உத்தரையின் கருவை யழிக்க வல்லமையுள்ளதாக மபான்போதே நான் ஜயத்தை யடைவேனென்கிற எண்ணமில்லை. அசுவத்தாமா பிரயோகித்த பிரமசிரஸ் என்னும் பாணத்தை அர்ஜுனன் அடக்கி. அசுவத்தாமருடைய சிரோ ரத்தினத்தைக் கவர்ந்துகொண்டபோதே நான் ஜயத்தை யெதிர் பார்க்கவில்லை. அசுவத்தாமா ஐஷீகாஸ்திரத்திலுல் உத்தரையின் கர்ப்பத்தை அழித்தபோது கிருஷ்ணன் அந்த சற்பத்தை நான் பிழைப்பிக்கி றேனென்று சபதஞ்செய்ததுபோதே நான் ஜயத்தை யெதிர்பார்க்கவில்லை. ஸஞ் சயா! நான் எல்லாவற்றையும் அறிந்திருந்தும் புத்தி மோசத்திலுல் புத்திரடௌ த்திராதிகளோ யிழந்து விசனப்படுகிறேன். பாண்டவர்கள் ஒருவராலும் செய்ய மூடியாத காரியத்தைச் செய்து ஜயம் பெற்றார்கள். இராஜ்யத்தை திரும்பவும் பெற்றார்கள். இத்தப் பெரிய சண்டையில் நம்மவரில் மூவரும், பாண்டவர் களில் ஏழுவருந்தான் தப்பினார்கள். பதினெட்டு அக்ஷௌஹிணி சைனியங் கள் கொல்லப்பட்டன. இருள் மூடுகிறது, மயக்கம் மேலிடுகிறது. எனக்கு நினைவு தப்புகிறது. என் மனஞ்சோர்வடைகிறது என்று புலம்பினான்.

இப்படித் திருதராஷ்டிரன் துக்கத்திலுல் புலம்பி மூர்ச்சித்தான். பின்பு மூர்ச்சை தெளிந்து ஸஞ்சயனைப் பார்த்து, ஸஞ்சயா! இப்படி நடந்த பின்னும் உயிர்வாழ்ந்திருக்க எனக்குப் பிரியமில்லை சீக்கிரத்தில் உயிரை விட நினைக்கி றேன். பிழைத்திருப்பதிலுல் பிரயோசனம் சிறிதுமில்லை யென்று சொன் னான். இப்படித் துக்கப்படுகிற திருதராஷ்டிரனுக்கு ஸஞ்சயன் சொல்லுகி றான். மஹாராஜாவே! இராஜவம்சங்களிற் பிறந்து அஸ்திர சஸ்திரங்களிற் சிறந்தவர்களும், தேவேந்திரனுக்குச் சமானமான பலபராக்கிரமமுடையவர் களும், தார்மிஷ்டர்களுமான அரசர்களைப் பற்றி வியாசரும் நாரதரும் சொல் லக் கேட்டிருக்கிறீர். மஹாரதவீரனுடைய சைப்யன் முதல் யயாதி யீருக இரு பத்துகாலு மஹாராஜாக்களுடைய சரித்தத்தை நாரதர்வாயால் கேட்டிருக்கிறீர் அவர்களுக்கு முன்னும் பின்னுமாக எத்தனையோ அரசர்கள் மடிந்தார்கள் அவர்களைக் கணக்கிடுவதிலுல் எத்தனையோ சோடியாகும். அவர்களெல்லாம்,

ரும் சத்தியம், பரிசுத்தம், தவம், தெய்வபக்தி, கொடை, பராக்கிரமம் முதலிய வற்றால் பிரசித்திபெற்றார்களென்று சரித்திரங்களிற் சொல்லப்பட்ட அள வில்லாத அரசர்கள் மடிந்தார்கள். உமது புத்திரர்களோ துஷ்டர்கள்; துர் நடத்தையுள்ளவர்கள், தோஷிகள்; பேராசையுள்ளவர்கள், அவர்களைப் பற்றி நீர் வருத்தப்படுதல் முறைமையல்ல. நீர் சாஸ்திரங்களைக் கேட்டறிந்தவர் கூர் மை புத்தியுள்ளவர்; சாஸ்திரங்களை யுணர்ந்து புத்திமான்கள் மனம் மயங்குகி றில்லை. மஹாராஜாவே! புத்திரராகளைக் காப்பாற்ற விரும்பினால் அவர்களுடைய மனம் போனபடி விடக்கூடாது. ஆனாலும் அப்படியே நடந்து தீரவேண்டிய தாயிருந்தது. தக்கப்படவேண்டாம். விதியை வெல்ல வல்லவர் யார்? ஒரு வராலும் பிரமலிபியைக் கடக்க முடியாது. பிறப்பு இறப்பு, இன்பம் துன்பம் எல்லாவற்றுக்கும் காலமே காரணம். பிராணிகளை யுண்டாக்குவதும் அழிப்ப தும் காலமே; பொருள்களை நல்லவையாகவும் கெட்டவையாகவும் மாற்றுவ தும் காலமே; எல்லாப்பிராணிகளும் தூங்கும்போதும் காலம் தூங்குகிறதில்லை காலத்தை வெல்ல ஒருவராலுமாகாது. காலம் தடைபடாமல் நடைபெற்று வருகிறது. நடந்தன, நடக்கின்றன, நடப்பன எல்லாம் காலத்தாலேயேயாம். ஆகையால் நீர் புத்தியினால் உணர்ந்து துக்கப்படாமலிருக்க வேண்டும். இப் படியாகச் சமாதான வசனங்களை கூறக் கேட்ட திருதராஷ்டிரனும், இவை யெல்லாம் தெய்வச்செயலால் நடந்தனவென்று கருதி மனந்தேறியிருந்தான்.

வியாசபகவான் உலகோபகாரத்துக்காகப் பகவத்லீலையை இந்த பாரதத்தில் சொல்லியருளினார். உலகத்திலுள்ள விதவான்களெல்லாரும் பரீக்ஷித் பூர்வ கற்பத்தில் நடந்ததே யென்று சொல்லுகிறார்கள். பாரதகதைப் படிப்பதனால் புண்ணியம் பெருகும். இதில் ஒரு சுலோகத்தின் ஓர் பாகத்தைப் படித்தா லும் சகல பாபங்களும் ஒழிந்துபோம். இந்தப் பாரதத்தில் தேவர்கள், தேவ ரிஷிகள், பிரமரிஷிகள், யக்ஷர்கள், நாகர்கள் இவர்களுடைய வரலாறு கூறப் படுகின்றன. ஸ்ரீ கிருஷ்ணபகவான் இதில் ஸ்துதிக்கப்படுகிறார். அவரே தேசகால எல்லை கடந்த பரபிரமம். அவரே பாபத்தை யொழித்துப் புண்ணி யத்தைக் கொடுப்பவர். ஞானகர்மபலன்களும் அவரேயாவர். அவருடைய செய்கையெல்லாம் உலகங்கடந்தனவாமென்று ஞானிகள் கூறுகின்றார்கள். சகலலோகங்களும் பிரமன் முதலானவர்களும், சகல பிராணிகளும், ஜனன மரணங்களும் ஜன்மாந்தரங்களும், சகல செய்கைகளும் அவரிடமிருந் தே வருகின்றன. பஞ்சபூதங்களும், அவற்றின் குணங்களும், மூலப்பிரகிருதி யும், அதன் காரியங்களும் அவரேயாமென்று கூறப்படுகின்றது. சக்தியாசி களும், யோகிகளும், ஞானிகளும் அவரையே ஆத்மாவினிடத்திலே தரிசிக் கின்றார்கள். தர்மநெறியோடு நியமமாக இந்த அத்தியாயத்தைப் பாராயணம் பண்ணுகிறவன் சகல பாபங்களையுந் தவிர்த்துவிடுகிறான். இதை நம்பிக்கை யோடு படிக்கிறவனுக்குக் கஷ்டமே வராது. இந்த அத்தியாயத்தின் ஒருபகு தியை இரண்டு காலங்களிலும் பாராயணம் பண்ணுகிறவன் பகலிலும் இரவி லும், செய்த பாபத்தை ஒழித்துவிடுகிறான். இந்த பாரதமானது தயிரில் வெண்

னைப்போலவும், மனுஷர்களில் பிராமணன்போல்வும் வேதங்களில் ஆரணி கம்போலவும், ஔஷதிகளில் அமிர்தம்போலவும், ஜலாசயங்களில் சமுத்திரம் போலவும், மிருகங்களில் பசுவைப்போலவும், இதிகாசங்களில் மேன்பட்ட தென்று சொல்லப்படுகிறது. இதிலுள்ள ஒரு சுலோகத்தின் ஒரு அடியை யாவது சிராத்த காலத்தில் பிராமணர் சேட்டைச் செய்தால் அவனுடைய பிதிர் களுக்கு அன்னபானங்கள் அக்ஷயமாக இருக்கின்றன இதிகாச புராணங்களா லேயே வேதத்தின் பொருளை யறியவேண்டும். வேதம அற்பஞானியைக் கண் டால் அவன் தன்னை மோசம் செய்வானென்ற பயப்படுகிறது. இந்த பாரத த்தை ஒருவன் பிறருக்குச் சொன்னால் அவன் செல்வத்தை அடைவான். சிசு ஹத்தி முதலிய பாபங்களினின்றும் நிச்சயமாய் விடுபடுவான். ஒவ்வொரு புண் ணிய காலத்திலும் இந்த அநுக்கிரமணிகாத்தியாயத்தைப் பாராயணம் பண் ணினால் பாரதம் முழுதும் படிக்கப்பட்டது போலாகும். அந்த பாரதத்தைச் சிரத்தையோடு தினம் படித்தவன் தீர்க்காயுசுகீர்த்தி சுவர்க்கம் இவைகளை நிச் சயமாய்ப் பெருவான்.

முன்னொரு காலத்தில் தேவர்களெல்லாரும் சேர்ந்து நாலு வேதங்களை ஒரு தட்டிலும், பாரதத்தை ஒரு தட்டிலும், வைத்து நிருத்தார்கள். பாரதம் வேதங்களை விட அதிக பாரமாயிருந்தபடியால் இதனை மஹாபாரதம் என்று கூறினார்கள். அதே பெயராக வழங்கிவருகிறது. அந்தப் பெயர் வந்த காரண த்தை யுறிகிறவனுக்குச் சகல பாபங்களு மொழிகிறது. வேதமும் பாபத்தை ஒழிக்கிறது. வேதத்திற் சொல்லப்படும் வருணாசிரம தர்மங்களும் பாபத்தைப் போக்குகின்றன. ப்ரமத்தைச் சங்கற்பத்தைக்கொண்டு தருமமாகப் பொருள் சம் பாதிப்பதும் பாபத்தை ஒழிக்கின்றது. இவைகளை செட்ட எண்ணத்தோடு செய்யப்பட்டால் பாபங்களாகின்றன.

அனுக்கிரமணிகா பர்வம் முற்றிற்று.

இரண்டாவது அத்தியாயம்.

பர்வஸங்கிரக பர்வம்.

ரிஷிகளை சூதரைப் பார்த்து, ஸூதமுனிவரே! ஸமந்த பஞ்சகமென்று சொன்னீரே, அசன் வரலாற்றை நாங்கள் கன்றாய்த் தெரியும்படி சொல்ல வேண்டுமென்றும் என்று கேட்கச் சூதர் சொல்லுகிறார்.

*ரிஷீசுவரர்களே! இந்தச் சிறந்த கதையைச் சொல்லுகிறேன். இரேதா யுகம் துவாபாயுகம் என்ற இரண்டு யுகசந்தியில், பரசுராமரானவர் கோபங் கொண்டு க்ஷத்திரியராகிய ராஜாக்களைப் பல முறை சங்காரித்தார். அந்த ராஜாக்களுடைய இரத்தத்தினால் ஐந்து மடுக்களை உண்டாக்கினார் அந்த மடுக்

களில் இரத்தத்தினாலேயே தமது பிதாக்களுக்குத் தர்ப்பணஞ் செய்தார். அவருடைய பிதிர்க்கள் பரசுராமரிடம் வந்து ஹாரமா! நீ பாக்கியசாலி, உன்னுடைய பிதிர் பக்தியால் நாங்கள் சந்தோஷமடைந்தோம. உனக்கு இஷ்டமான வரங் கேள் என்று சொன்னார்கள். பரசுராமர், என்னிடத்தில் உங்களுக்குப் பிரியமிருந்தால், நான் கோபத்தினால் க்ஷத்திரியர்களை யழித்த பாபம் என்னை யடையாமலிருக்க வேண்டும். நான் உண்டாக்கின இந்த மடுக்களும் புண்ணிய தீர்த்தங்களாக வேண்டுமென்றார். பிதிர்கள் அப்படியே ஆகக் கடவது என்று வரங்கொடுத்து மறைந்து போனார்கள். ஐந்து இரத்த மடுக்களால் காலு புறமும் சூழப்பட்டதனால் அந்த இடம் ஸமந்தபஞ்சகம் என்ற பெயர் கூறப்படுகின்றது அது புண்ணிய க்ஷேத்திரமாகக் கொண்டாடப்படுகிறது. துவாபர கலியுக சந்தியில் அந்த இடத்தில் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் யுத்தம் நடந்தது. பதினெட்டு அக்ஷௌஹிணி சேனைகள் அந்த இடத்தில் மடிந்தன. இதுதான் ஸமந்தபஞ்சகத்தின் வரலாறு என்று சொன்னார். ரிஷிகளை சூதரைப் பார்த்து, சூதமுனிவரே! அக்ஷௌஹிணி என்பதின் அளவை எங்களுக்குச் சரியாகச் சொல்ல வேண்டுமென்று கேட்கச் சூதர் சொல்லுகிறார்.

ஒரு தேர், ஒரு யானை, மூன்று குதிரை, ஐந்து காலாட்கள் கூடியதற்குப் பத்தி யென்று போ, பத்தி மூன்று கொண்டது ஸேனாமுகம், மூன்று சேனாமுகம் கூடினது குல்மம். மூன்று குல்மங்கள் கூடியதற்குக் கணம் என்று பேர்; மூன்று கணங்கள் சேர்ந்ததற்கு வாகினி என்று பெயர்; வாகினி மூன்று கொண்டதற்குப் பிருதனை என்று பேர், மூன்று பிருதனை சேர்ந்தது சமூ என்று சொல்லப்படும்; மூன்று சமூக்கள் சேர்ந்தது அக்கினி; பத்து அக்கினி சேர்ந்தால் அக்ஷௌஹிணி யென்று அறிஞர் கூறுகின்றார்கள். முனீசுவரர்களே! அக்ஷௌஹிணி ஒன்றுக்குத் தேர்கள் இருபத்தெண்ணாயிரத்து எண்ணூற்றெழுபது; யானைகளும் அவ்வளவே, குதிரைகள் அறுபத்தையாயிரத்து அறுநூற்றுப்பத்து, காலாட்கள் இலட்சத்து ஒன்பதினாயிரத்து முன்னூற்றைம்பது என்ற கணக்கிடப்பட்டிருக்கின்றது. இந்தக் கணக்குள்ள அக்ஷௌஹிணி பதினெட்டு ஸமந்தபஞ்சகத்தில் காலாதியாற் சேர்ந்து மடிந்

அஸ்திரங்களை அரிந்த பீஷ்மர் பத்து நாள் யுத்தஞ் செய்தார். துரோணர் ஐந்து நாள் சண்டை செய்தார். கர்ணன் இரண்டு நாள் போர் புரிந்தான். சல்லியன் அரை நாள் அமராடினான். அதற்கு மேல் கதாயுத்தம் நடந்தது. அன்று இரவில் அசுவத்தாமா, கிருபர், கிருதவன்மா மூவருஞ்சேர்ந்து கவலையற்று தூங்கிக்கொண்டிருந்த பாண்டவசேனைத்தலைவர்களைக் கொன்றனர். நூறு பர்வங்களடங்கிய அந்தப் புண்ணியமான பாரதகதையைச் சொல்லுகிறேன். அறிய வேண்டியவைகளுள் ஆத்மாவைப் போலவும், வீரும்புக் கூடியவற்றுள் உயிரைப் போலவும் இந்த இதிகாசமும் எல்லாவற்றுள்ளும் சிறந்தது. புத்திசாலி

யான வித்துவான்களால் கொண்டாப்பட்டது. ஆகாமில்லாமல் சரீரம் நிலைபெறுததுபோல் இந்தப் பாரதத்தை விட்டு எந்தக் கதையும் நிலைபெறுது. உயர்ந்த ஞானமானது இந்த இதிகாசத்தில் அடங்கியிருக்கிற வேதப் பொருள் நிறைந்த அற்புதமான இந்தப் பாரதத்தினுடைய பருவஸங்கிரஹத்தை சொல்லுகிறேன் கேளுங்களென்று சூதர் செல்லுகிறார்.

முதலாவதான ஆதிபர்வத்தில் அனுக்கிரமணிகாபர்வம், பர்வஸங்கிரஹபர்வம், பௌஷ்யபர்வம், பௌலோமபர்வம், ஆஸ்திகபர்வம். இவை பாரதத்தின் முகவுரை; அம்சாவதரணபர்வம், சம்பவபர்வம், ஜதுகிருகதாபர்வம், ஹிடிம்பவதபர்வம், பகவதபர்வம், சைத்ராதபர்வம், ஸ்வயம்வரபர்வம், விவாஹிகபர்வம், வித்துராகமனபர்வம், இராஜ்யலாபபர்வம், அர்ஜுன வனவாஸபர்வம், சுபத்திராஹரணபர்வம், காண்டவதாஹபர்வம், மயதர்சனபர்வம், மேல் சபாபர்வம்.

சபாபர்வத்தில். மந்திரபர்வம், ஜராஸந்தவதபர்வம், திக்குவிஜயபர்வம், இராஜசூயபர்வம் அர்க்காபிஹரணபர்வம், சிசுபாலவதபர்வம், த்யூதபர்வம் (சூதாடுதல்), அநுத்யூதபர்வம் (இரண்டாமுறை சூதாடுதல்), மேல் ஆரண்ய பர்வம்.

ஆரண்யபர்வத்தில், ஆரண்யகபர்வம், கிர்மீரவதபர்வம், அர்ஜுனபிகமனபர்வம், கைராதபர்வம், இந்திரலோகாபிகமனபர்வம், தீர்த்தயாத்திராபர்வம், ஜடாஸுரவதபர்வம்; யட்சயுத்தபர்வம், நிவாதகவசயுத்தபர்வம், அஜகரபர்வம், மார்க்கண்டேய ஸமாஸ்யாபர்வம், திரௌபதிஸத்தியபாமா ஸம்வாதபர்வம், கோஷயாத்ராபர்வம், தாரியோதனன் பிராயோப வேசஞ்செய்தது சர்ணேஷ்டி மந்திராலோசனைசெய்தது, வ்ரீஹித்ரௌணிகபர்வம், இந்திர தூய்மனேபாக்யானம், திரௌபதிஹரணபர்வம், ஜயித்ரதவிமோக்ஷணபர்வம், இராமோபாக்யானம், பதிவிருதமாஹாத்மியபர்வம், குண்டலாஹரணபர்வம் ஆரணேயபர்வம், மேல் விராடபர்வம்.

விராடபர்வத்தில், பாண்டவ பிரவேசபர்வம், ஸமயபாலனபர்வம, கீசக, வதபர்வம், கோக்கிரஹண பர்வம், வைவாஹிக பர்வம், மேல் உத்தியோக பர்வம்.

உத்தியோக்பர்வதத்தில், ஸைனோத்யோகபர்வம், ஸஞ்சயயானபர்வம், ப்ரஜாகரபர்வம், ஸநத்ஸுஜாதியபர்வம், யானஸந்திபர்வம், பகவத்யானபர்வம், மாதலி உபாக்யானம், காலசரித்திரம், ஸாவித்ரோபாக்யானம், வாமதேவோபாக்யானம், பிருதூபாக்யானம், ஜாமதக்ன்யஉபாக்யானம், வேநாடச இராஜ கோபாக்யானம், திருஷ்ணசபா பிரவேசம், வைஷ்ணவயாயாணபர்வம் விசுவோபாக்யானம், கர்ணகிருஷ்ண சம்வாதமடங்கிய உபாக்யானம் ஸைன்யநிர்யாணபர்வம், ரதஅதிரதசங்கியானபர்வம், உலூகதூதாகமனபர்வம், அம்போக்யாணபர்வம், மேல் பீஷ்மபர்வம்.

உபபர்வத்தில் பீஷ்மாபிஷேகபர்வம், ஜம்பூத்வீபகிர்மாணபர்வம், பூமி பர்வம், பகவத்கீதாபர்வம், பீஷ்மவதபர்வம், மேலே துரோணபர்வம்.

துரோணபர்வத்தில், துரோணாபிஷேகபர்வம், ஸம்ஸப்தகபர்வம், அபி மன்யுவத பர்வம், பிரதிக்ஞாபர்வம் ஜயத்ரதவதபர்வம், கடோத்கசவதபர்வம் துரோணவதபர்வம் நாராயணாஸ்த்ர மோட்சபர்வம்.

அதன் மேலே கர்ணபர்வம், மேலே சல்லியபர்வம்.

சல்லியபர்வத்தில், ஹ்ரதப்ரவேசபர்வம், கதாயுத்தபர்வம், சாரஸ்வதோ பாக்யானம், மேலே ஸௌப்திகபர்வம் பின் ஐஷீகபர்வம் அதன் பின் ஸ்த்ரீ பர்வம், அதில் ஜலபிரதானிகபர்வம், ஸ்த்ரீவிலாபபர்வம், பிறகு சாந்தி பர்வம்.

சாந்திபர்வத்தில், ச்ராத்தபர்வம், சார்வாகநிக்ரகபர்வம் அபிஷேகபர்வம், ராஜதர்மானுசாஸனபர்வம், ஆபத்தர்மபர்வம், மோக்ஷதர்மபர்வம், சுகப்ரஸூதிகமனம், ப்ரம்மப்ரஸ்ன்னுசாஸனம் தாவாசரிஷி யின் உற்பத்தி, தர்வாசர் மாயைபோடி செய்த ஸ்வாதம். மேலே ஆனுசாஸ னிகபர்வம், அதில் பீஷ்மா ஸ்வர்க்காரோஹண-ரவம், பின் ஆசுவமேதிகபர்வம். பிறகு அனுகீதாபர்வம், மேல் அச்ரமவாஸபர்வம், இதில் புத்ரதர்சன பர்வம், நாரதாகமனபர்வம், பின் மௌஸலபர்வம். அதன் பின் மஹாப்ரஸ்தானபர்வம், மேல் சோர்க்காரோஹணபர்வம், மேலே ஹரிவம்சம்.

இதில், ஹரிவம்சபர்வம், கிருஷ்ணன்லீலை, கம்சவதம் அடங்கிய விஷ்ணுபர்வம், பின் பவிஷ்யபர்வம்,

பர்வங்களிலடங்கிய விஷயமும் சுலோகசங்கியையும் சோல்லப்படுகின்றன.

ஆதிபர்வம்.

பௌஷ்யபர்வம், பௌலோமபர்வம், ஆஸ்திகபர்வம், இம்மூன்றும் பாரத திற்கு ஆரம்பம், பௌஷ்யபர்வத்தில் உதங்கமுனிவருடைய மகிமையுள்ள சரித்திரம் விரித்துக் கூறப்பட்டது, பௌலோமபர்வத்தில் ப்ருகுவம்சாபி விருத்தி சொல்லப்பட்டது. ஆஸ்திகபர்வத்தில் பாம்புகளின் உற்பத்தி கருடோற்பத்தி, பாற்கடலைக் கடைந்தது, உதைசச்ரவம் உண்டானது, ஜன மேஜயமஹாராஜாவின் சாப்ப யாகத்தில் பாரதம் கூறிய வரலாறு இவை கள் சொல்லப்படுகின்றன. ஸம்பவபர்வத்தில், இராஜாக்களின் உற்பத்தியும் வியாசர் பிறப்பும் கூறப்பட்டன. தேவர்கள், தானவர்கள், தைத்தியர்கள் அசு ரர்கள், யட்சர்கள், நாகர்கள், கந்தர்வர்கள், ஸர்ப்பங்கள, பட்சிகள், இவை களின் அம்சங்கள் பூமியில் வந்த வரலாறும் கூறப்பட்டுள்ளது, சகுந்தலைக்கும்

துஷ்யந்தனுக்கும் பரதசக்கிரவர்த்தி பிறந்ததும், அவனுலே அந்த வம்சத்துக்குப் பாரதம் என்று பேர் வந்ததும்; சந்தனுவுக்கும் கங்காதேவிக்கும் வசுக்கள் பிறந்து சொர்க்கம் சென்றதும், பீஷ்மர் உற்பத்தி, அவர் இராஜ்யத்தை விட்டு நித்திய பிரமசரிய விரதத்தைக் கைக்கொண்டதும், சித்திராங்கதனைக் காப்பாற்றினதும், அதன்பின் விசித்திரவீரியனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்ததும், மாண்டவ்யர் சாபத்தால் தர்மதேவதை விதுரனுகப் பிறந்ததும், வியாசரால் திருதராஷ்டிரன், பாண்டு இவர்கள் பிறந்ததும், துர்வாசமுனிவரது அனுக்ரகத்தினுல் பாண்டவர்கள் பிறந்ததும், பாண்டவர்களே வாரணவதத்திற்கு அனுப்பியது, அவர்களே அரக்குமாளிகையில் கொல்லும்படி புரோசனனே யனுப்பியதும், விதுரர் யுதிஷ்டிரர்க்குச் செய்த இரகசிய உபதேசமும், அரக்கு மாளிகை எரிந்ததும், புரோசனனும், வேடச்சியும், வேடச்சி புத்திரர்கள் ஐவரும் தகிக்கப்பட்டதும், ஹிடிம்பவதமும், கடோற்கஜன் பிறந்ததும் பாண்டவர்கள் வியாசரைத் தரிசித்து ஏகசக்கர புரியில் வசித்ததும், பகாசுரவதமும் திரௌபதியும், திருஷ்டத்புமனனும் பிறந்ததும் பாண்டவர்கள் திரௌபதியின் சுயவரத்தைப் பார்க்கப் போனதும்; வழியில் சித்ரரதனென்ற கந்தர்வனை ஜெயித்து அவனைச் சிநேகம் செய்துகொண்டதும், அவன் தபதி' வசிஷ்டர் ஒளரு இவர்களுடைய சரித்திரங்களைச் சொன்னதும், பாஞ்சாலதேசம் போய் அர்ஜுனன் இலட்சியத்தை அறுத்துத் திரௌபதியை அடைந்ததும் சண்டைக்கு வந்த கர்ணன் சல்லியன் முதலிய இராஜர்களே ஜயித்ததும், இராமகிருஷ்ணர்கள் பாண்டவர்களிடம் வந்து பார்த்ததும் ஒருத்தி ஐவருக்கு மனைவியாவது தெய்வத்தால் நியமிக்கப்பட்டதென்று வியாசர் கூறியதும், விதுரர்பாண்டவர்களே யழைத்துக்கொண்டு வந்ததும், பாண்டவர்கள் பாதிராஜ்யம் பெற்று காண்டவப்பிரஸ்தம் போனதும், நாரதர்வந்து திரௌபதியினிமித்தம் ஒரு விதியேற்படுத்தினதும், ஸுந்தோபசுந்தர் சரித்திரங் கூறினதும், திரௌபதியும் யுதிஷ்டிரரும் உட்கார்ந்திருக்கும்போது அர்ஜுனன் பிரவேசித்துத் தீர்த்தயாத்திரை சென்றதும், அவன் நாககன்னியை மனம்புரிந்ததும், பப்ருவாகன் உற்பத்தியும் அப்ஸரஸ்திரீகளினுடைய சாபத்தைத் தீர்த்ததும், கிருஷ்ணனுடைத் சகாயத்தினுலே அர்ஜுனன் சுபத்திரையை விவாகஞ்செய்துகொண்டதும் அபிமன்யு உற்பத்தியும் உபபாண்டவர்கள் ஜனித்ததும், காண்டவ வனதகனமும் மயனை இரட்சித்ததும், சாரங்கபட்சிகளின் வரலாறும் ஆதிபர்வத்திலடங்கிய விஷயங்களாம். இருநூற்றெழுபத்தேழு அத்தியாயங்களும்; எண்ணுயிரத் தொண்ணூற்றெண்பத்துகால சுலோகங்களுமுள்ளன.

2. ஸபாபர்வத்தில்; மயன் சபையை யுண்டாக்கினதும், நாரதர் திக்குப்பால கர்களுடைய சபைகளைப் பற்றி கூறியதும். ஜராசந்தனைவதைத்துச் சிறைப்பட்ட அரசர்களை விடுவித்ததும், பாண்டவர்களுடைய திக்குவிஜயமும் இராஜசூய யாகஞ்செய்ததும், சிசுபாலவதமும், யுதிஷ்டிரருடைய செல்வத்திலும், பீமசேனன் கைத்ததனலும் துரியோதனன் பொருமை கொண்டு

சூதாடிப் பாண்டவர்களுடைய இராஜ்யத்தைப் பறித்துக்கொண்டதும், திருதராஷ்டிரன் தக்கப்பட்ட திரௌபதியைப் பரிபாலித்ததும், மறுதாடிண்தும், பாண்டவர்களே வனவாசஞ்செய்யச் சொன்னதும் கூறப்பட்டது. எழுபத்தெட்டு அத்தியாயங்களும், இரண்டாயிரத்தைந்நூற்றுப்பதினெரு சுலோகங்களுமுள்ளன.

3 அரண்யபர்வத்தில்; பாண்டவர்கள் வனவாசம் போனதும் நகரத்து ஜனங்கள் பின்தொடர்ந்தது, யுதிஷ்டிரர் சூரியனை ஆராதித்து அட்சயபாத்திரம் பெற்றதும், திருதராஷ்டிரன் விதுரரை வெறுத்ததும், விதுரர் பாண்டவரிடஞ் சென்ற மீண்டும், அஸ்தினபுரம வந்ததும், கர்ணன் புத்தியைக் கேட்டுத் துரியோதனன பாண்டவர்களைக் கொல்லப் பிராயாணப்பட்டதும், வியாசர் வந்து அதைத் தடுத்ததும், ஸுரபியின் உபாக்கியானம் சொன்னதும், மைத்திரேயர் வந்ததும், அவர் துரியோதனனுக்குச் சாபங்கொடுத்ததும், பீமன் கிமீரனை வதைத்ததும, பாஞ்சாலரும், யாதவரும் பாண்டவாகளைப் பார்க்க வந்ததும், கிருஷ்ணன் கோபித்துகொண்டதும், அர்ஜுனன் அவரைச் சமாதானப்படுத்தினதும், திரௌபதி கிருஷ்ணனிடம் முறையிட்டதும், அவர் அவளைத் தேற்றினதும், ஸௌபவத சரித்திரமும் சுபத்திரை துவாரகைக்குச் சென்றதும், உபபாண்டவர்களைத் திருஷ்டத்யும்ன் அழைத்துக்கொண்டுபோனதும், பாண்டவர்கள் துவைதவனம்போனதும், திரௌபதியும் பீமனும் யுதிஷ்டிரரோடு வாதம் பண்ணினதும், வியாசர் யுதிஷ்டிரருக்கு வித்தையைக் கொடுத்ததும், அர்ஜுனன் பாசுபதாஸ்திரத்திற்காகத் தபசு செய்யப்போனதும், பரமசிவன் வேடனாக வந்து அர்ஜுனனோடு யுத்தம் பண்ணினதும், அர்ஜுனன் திக்குப்பாலகர்களைக் கண்டதும், அஸ்திரங்கள் பெற்றதும், அவன் இந்திரலோகம் போனதும், அது கேட்ட திருதராஷ்டிரன் விசனப்பட்டதும், யுதிஷ்டிரர் பிருகதசுவமஹரிஷியைக் கண்டதும, அவரால் நளோபாக்கியானத்தைக் கேட்டதும், அக்ஷஹ்ருதயம் உற்றுக்கொண்டதும், ரோமசமஹரிஷி பாண்டவரிடம் வந்து அர்ஜுனன் சொர்க்கத்திலிருப்பதைத் தெரிவித்ததும், யுதிஷ்டிரர் தீர்த்தயாத்திரைசெய்ததும்; நாரதமஹரிஷி யுதிஷ்டிரருக்குத் தீர்த்தங்களின் மகிமையும் புலஸ்தியருடைய தீர்த்தயாத்திரையையும் சொன்னதும், கயமஹாராஜாவினுடைய யாகச்சிறப்பும், அகஸ்தியர் வாதாபியைச் சங்கரித்ததும, அவா லோபாமுத்திரையை மணம்புரிந்ததுமான அகஸ்தியோபாக்கியானமும், ரிசியசிருங்கர் (கலேக்கோட்டு மஹரிஷி) சரித்திரமும் கார்த்தவீரியனைப் பரசுராமா சங்கரித்ததும், பிரபாஸதீர்த்தத்தில் பாண்டவர்களும் யாதவர்களும், சந்தித்ததும், சுகன்னியின் உபாக்கியானமும், மாந்தாதாவின் உபாக்கியானமும் ஸோமசன் பூசை வரம் வேண்டியாகஞ்செய்ததும், சேனகபோதிய உபாக்கியானமும், அஷ்டவக்ரோபாக்கியானமும், யவக்ரீதோபாக்கியானமும், பரப்பியோபாக்கியானமும், பாண்டவர் கந்தமாதனபர்வதம் போனதும், பீமன் அநுமானைத் தரிசித்ததும், பீமன் யட்சர்களோடு யுத்தம்செய்ததும், ஜடாசுரவத

மும் விருஷபர்வாவென்னும் இராஜரிஷியைக் கண்டதும், பாண்டவர் ஆர்ஷ்டி ஷேணரிஷியின் ஆச்சிரமத்துக்குப் போனதும், பீமன் புஷ்பயாத்திரைசெய்த தும் பாண்டவர்கள் குபேரனைத் தரிசித்ததும், அர்ஜுனன்தேவலோகத்திலிரு ந்து திரும்பி வந்ததும், அவன் காலகேய நிவாதகவசர்களைச் சங்காரித்த சரித்தி ரம் சொல்லியதும், மலைப்பாம்பினிடமகப்பட்டுக்கொண்ட பீமனை யுதிஷ்டிரா மீட்டுக்கொண்டதும், பாண்டவர்கள் காமியக வனம் போனதும் மறுபடி கண்ணன் வந்ததும், பிருதுசக்கிரவாத்தி சரித்திரமும், ஸரஸ்வதிக்கும் தார்க்ஷிய ரிஷிக்கும் நடந்த ஸம்வாதமும், மற்சியோபாக்கியானமும், இந்திர தும்மனோபாக்கியானமும், துந்துமாரோபாக்கியானமும், பதிலிரதோபாக்கி யானமும், ஆங்கீரஸோபாக்கியானமும், திரௌபதி ஸத்தியபாமாஸம்வாதமும் இதிற் சொல்லப்பட்டிருக்கின்றன; இன்னம் துரியோதனன் கோஷயாத்திரை யும், அவன் கந்தர்வர்களாற்பிடிபட்டு அர்ஜுனனால் விடுவிக்கப்பட்டதும், வ்ரீஹித்ரௌணிகோபாக்கியானமும், துர்வாஸரிஷின் உபாக்கியானமும் ஜயத் ரதன் திரௌபதியைக் கொண்டுபோனதும், பீமன் அவனைபிடித்து ஐக்குவி லை வைத்துப் பங்கப்படுத்தினதும், ஸ்ரீராமர் ராவணவதம் செய்ததும், ஸாவித்திரி உபாக்கியானமும்; கர்ணன் இந்திரனுக்குத் தன் குண்டலங்களைத் தானம் கொ டுத்ததும் ஆரணேயோபாக்கியானமும், பாண்டவர் வரம் பெற்ற மேற்றிசை சென்றதுமாகிய இவையெல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த ஆரணி யபர்வத்தில் இருநூற்றொன்பது அத்தியாயங்களும் பதினேராயிரத்து அறு பத்துநான்கு சுலோகங்களுமடைக்கியுள்ளன.

விராடபர்வத்தில் பாண்டவர்கள் விராடபுரம் போய் ஸ்மசானத்திலுள்ள வன்னிமரத்தில் தங்களுடைய ஆயுதங்களை வைத்ததும், அவர்கள் மாறவேடங் கொண்டு நகரத்துட் பிரவேசித்ததும், சேசனை வதைத்ததும், துரியோதனன் பாண்டவர்களைக் கண்டுபிடிக்கத் தூதர்களை யனுப்பியதும், திரிகர்த்ததேசத் தார் விராடனுடைய பசுக்களை பிடித்துக்கொண்டதும், அவர்களுக்கும் விரா டனுக்கும் நடந்த யுத்தத்தில் விராடன் பிடிபட்டதும், அவனை பீமன் விடுவித்த தும், கௌரவர்கள் விராடனுடைய பசுக்களைப் பிடித்துக் கொண்டதும், அர் ஜுனன் கௌரவர்களை ஜெயித்துப்பசுக்களை மீட்டதும்,விராடன்தன் புத்திரி உத்தரையை அர்ஜுனன் புத்திரனை அபிமன்யுவுக்குக் கொடுத்ததுமாகிய விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. இந்தப் பர்வத்தில் அறுபத்தேழு அத்தியாயங் களும், இரண்டாயிரத்தைம்பது, சுலோகங்களும் அடங்கியுள்ளன.

உத்தியோகபர்வத்தில், பாண்டவர்கள் உபப்பிலாவியத்தில் வசித்துக் கொண்டிருக்கையில்,துரியோதனனும் அர்ஜுனனும் படைஉதவி வேண்டிக் கிருஷ்ணனிடம் வந்ததும், கிருஷ்ணன் அவர்களை நோக்கி நான் மாத்திரம ஒரு கட்சியிலும், என் சேனை ஒரு கட்சியிலுமிருக்க நினைக்கிறேன், இவரிண்டில் நீங்கள் எதை விரும்புகிறீர்கள் என்றுகேட்கத் துரியோதனன

சேனைகளையும், அர்ஜுனன் கிருஷ்ணனையும் விரும்பிக் கேட்டுக்கொண்டதும் பாண்டவரிடம் வந்த சல்லியனைத் துரியோதனன் வஞ்சித்துத் தன் பக்கஞ் சேர்த்துக்கொண்டதும், சல்லியன் பாண்டவர்களுக்கு இந்திரன் விருத்திராசுரனைச் சங்கரித்த கதை சொன்னதும், பாண்டவர்கள் துருபதராஜாவின் புரோகிதரைக் கௌரவரிடம் தூதாக அனுப்பியதும், திருதராஷ்டிரன் பாண்டவர் களிடம் வஞ்சயனை அனுப்பியதும், விதுரர் திருதராஷ்டிரனுக்கு ஹிதங்கூறியதும், ஸனத்ஸுஜாதர் திருதராஷ்டிரனுக்கு ஆத்மஞானங்கூறியதும், சஞ்சயன் மீண்டு வந்து கண்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் உள்ள சேதத்தைச் சொன்னதும், கிருஷ்ணபகவான் துரியோதனனிடம் தூதுபோனதும், துரியோதனன் மறுத்ததும், தம்போத்பவனுடைய கதையும், மாதலி பெண்ணுக்கு வரன் தேடினதும், காலவ மஹரிஷி சரித்திரமும், விதுலை தன் புத்திரனுக்குப் புத்தி சொன்னதும், கிருஷ்ணன் விசுவரூபங்காட்டியதும், கிருஷ்ணன் கர்ணனுக்கு ரகஸ்யம் சொன்னதும், அவன் அதை மறுத்துவிட்டதும், கண்ணன் மீண்டு போய் நடந்தவற்றைப் பாண்டவர்களுக்குச் சொன்னதும், பாண்டவர்களும், கௌரவர்களும் யுத்தத்துக்குப் புறப்பட்டதும், சேனைகளை கணக்கிட்டதும் அம்போபாக்கியானமும், அடங்கியுள்ளன. அத்தியாயங்கள் நூற்று எண்பத்து ஆறு சுலோகங்கள் ஆறுயிரத்தறுநூற்றுத் தொண்ணூற்றெட்டு உள்ளன.

பீஷ்மபர்வத்தில், ஜம்பூத்வீபின் நிர்மாணம், பத்து நாள் நடந்த சண்டை, கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு தத்துவோபதேசஞ்செய்தது. கிருஷ்ணபகவான் தாமே பீஷ்மரைக் கொல்லப்போனது, அர்ஜுனன் சிகண்டியை முன்னிட்டுப் பீஷ்மரை அடித்து விழுத்தியது, அவர் சரசயனத்தில் படுத்தது இவைகள் கூறப்பட்டுள்ளன.

துரோணபர்வத்தில்; துரோணர் சேனாபதியானது, துரோணர் யுதிஷ்டிரரைப் பிடிப்பதாக வாக்குக் கொடுத்தது, ஸம்ஸப்தகர் அர்ஜுனனைத் தூரத்தில் கொண்டுபோனதும், பகதத்தன்வதை, அபிமன்யுவதை, அர்ஜுனன் ஜயத்ரதனைச் சங்கரித்தது, பீமனும், சாத்யகியும் அர்ஜுனனைத் தேடிக்கொண்டு கௌரவசேனைக்குள் புகுந்தது, ஸம்ஸப்தகர்களை வதைத்தது, திருதராஷ்டிர புத்திரர்கள், காரவண கோபாலர்கள், அலம்புஷன், துருபதன் வீராடன் கடோற்கஜன் முதலானவர்கள் மடிந்தது, துரோணர் கொல்லப்பட்டது, அசுவத்தாமா நாராயணாஸ்திர பிரயோகஞ்செய்தது, ருத்திரன் மகிமையாகிய ஆக்நேயம் கூறியது, வியாசர் வரவு, கிருஷ்ணார்ஜுனர்களுடைய, மகிமை இவைகளும் அடங்கியுள்ளன. இந்தப் பர்வத்தில் அத்தியாயங்கள் நூற்றெழுபது, சுலோகம் எண்ணூயிரத்துத் தொளாயிரத்தொன்பது.

கர்ணபர்வத்தில், சல்லியனைச் சாரதியாக நியமித்தது, திரிபுரஸம்ஹார சரித்திரம் சல்லியனுக்கும் கர்ணனுக்கும் நடந்த ஸம்வாதம், ஹம்ஸகாயம்

என்னும் கதை, கர்ணனுக்கும் யுதிஷ்டிரர்க்கும் சண்டை நடந்தது, யுதிஷ்டிரர் தோல்வியடைந்தது, அர்ஜுனனுக்கும் யுதிஷ்டிரர்க்கும் கோபமுண்டானது, கிருஷ்ணன் ஸமாதானஞ்செய்தது, பீமன் துச்சாதனனைக் கொன்றது. கர்ணஸம்ஹாரம் இவைகள் சொல்லப்பட்டன. அத்தியாயங்கள் அறுபத் தொன்பது சுலோகங்கள் நாலாயிரத்துத் தொளாயிரத்து நான்கு.

சல்லியபர்வத்தில், சல்லியன் சேனாதிபதியானது, கௌரவர்களுள் முக்கியமானவர்கள் ஸம்ஹரிக்கப்பட்டது, யுதிஷ்டிரர் சல்லியனைக் கொன்றது, சகுனிவதம், துரியோதனன் மடுவிற் புகுந்தொளித்தது, தர்மராஜா அழைத்ததனால் துரியோதனன் மடுவிலிருந்து வெளிப்பட்டது, பலராமர் வந்தது, புண்ணிய தீர்த்தமஹிமை சொன்னது, துரியோதனவதம் இவைகள் சொல்லப்பட்டன. ஐம்பத்தொன்பது அத்தியாயங்களும், மூவாயிரத்திருநூற்றிருபது சுலோகங்களும் அடங்கியுள்ளன.

ஸௌப்திக பர்வத்தில் துரியோதனன் தொடை முறிபட்டு விழுந்ததின் கிருதவர்மா, கிருபாசாரி, அசுவத்தாமா மூவரும் வந்து கண்டது, அசுவத்தாமா திருஷ்டத்யும்னன், பாண்டவர்கள் அவர்களுடைய சேனைகள், எல்லாரையுஞ் சங்காரிப்பதாகச் சபதஞ்செய்து, துரியோதனனிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டுபோனது. அங்கே ஒரு இராட்சதனிருந்து அசுவத்தாமாவின் அஸ்திரங்களைத் தடுக்க அவன் உருத்திரமூர்த்தியை ஆராதித்து அவரது அநுக்கிரகத்தினாலே மறுபடியும் திருஷ்டதுயும்னன் உபபாண்டவர்கள் மற்றுமுள்ள சேனைகள் எல்லாரையுஞ் சங்காரித்தது, திரௌபதியின் துக்கத்தை நீக்கும் பொருட்டு பீமன் அசுவத்தாமனைத் தேடிச் சென்றது. அசுவத்தாமன் பாண்டவர்களோ காசஞ்செய்யும்படி அஸ்திரப்பிரயோகஞ்செய்தது, அதை அர்ஜுனன் அடக்கிவிட்டது, வியாசரும் கிருஷ்ணனும் அசுவத்தாமனைச் சபித்தது, அசுவத்தாமாவினுடைய சிரோரத்தினத்தைப் பாண்டவர் கவர்ந்தது இவைகள் சொல்லப்பட்டன. பதினெட்டு அத்தியாயங்கள், எண்ணூற்றெழுபது சுலோகங்கள் அடங்கியது.

ஸ்த்ரீபர்வத்தில். கிருஷ்ணரால் கொண்டுவரப்பட்ட இருப்புப் பதுமையைப் பீமசேனனைக் கொல்லக் கருதின திருதராஷ்டிரன் முறித்ததும், அவனுக்கு வித்துர் நியாயங்களினாலே சமாதானஞ்சொன்னதும், திருதராஷ்டிரன் அந்தப்புர ஸ்திரீகளுடன் யுத்தகளத்துக்குப் போய்த் தக்கப்பட்டதும், கிருஷ்ணன் யாவருக்கும் சமாதானஞ்சொன்னதும், தர்மர் இறந்துபோனவர்களுக்குத் தகனகிரியை செய்வித்ததும், குந்திதேவி தனக்கு இரகசியமாகப் பிறந்த கர்ணனுக்கும் ஜலதர்ப்பணஞ் செய்யச் சொன்னதும் உள்ளன. பதினெட்டு அத்தியாயங்களும் எழுநூற்றெழுபத்தைந்து சுலோகங்களும் அடங்கியுள்ளன.

சாந்திபர்வத்தில்; தர்மராஜாவானவர் சகோதரர்கள், பந்துக்களெல்லாரும் மடிந்துபோனதற்காக வருத்தப்பட்டது, பீஷ்மர் தர்மங்கள், ஆபத்தர்மங்

கள், இராஜதர்மங்கள் முதலியன சொன்னது இவை முதலியன அடங்கியுள்ளன. இதில் அத்தியாயங்கள் முந்நூற்றிருபத்தொன்பது, சுலோகங்கள் பதினாயிரத்தெழுநூற்று மூப்பத்திரண்டு.

அனுசாஸன பர்வத்தில்; சர்மபுத்திரர் சாந்தியடைந்ததும், தர்ம அர்த்த விஷயங்கள், தானபலன்கள், தானபாத்திரம், தானம்செய்யும முலம் ஆசாரங்கள், ஸத்தியத்தின் பயன், பசுக்கள பிராமணர்களுடைய மஹிமை, தேசகாலதானுக்கேற்ற தர்ம இரகஸியங்களிவைகள் சொல்லபபட்டுள்ளன. பீஷ்மா சொர்க்கமடைந்ததும் கூறப்பட்டது. இதில் நூற்று நாற்பத்து ஆறு அத்தியாயங்களும் எண்ணுயிரம் சுலோகங்களும் அடங்கியுள்ளன.

அசுவமேதிகபர்வத்தில்; ஸம்வர்த்தமருத்தீய உபாக்கியானம், தர்மராஜா ஸுவர்ணத்தை யடைந்தது, பரிட்சித்தின் உற்பத்தி, குதிரையை விட்டது, அர்ஜுனன் அரசர்களோடு யுத்தஞ்செய்தது, பப்ருவாகனால் அர்ஜுனன் மரணமடைந்தது, சுதர்சனசரித்திரம், விஷ்ணுதர்மம், கீரிப்பிள்ளையின் கதை, இவைகளுள்ளன. இதில் அத்தியாயங்கள் நூற்றுமூன்றுசுலோகங்கள் மூவாயிரத்து முந்நூற்றிருபது.

ஆச்ரமவாசபருவத்தில்; காந்தாரி, திருதராஷ்டிரன், விதுரர் இவர்கள் வனவாசம்போனது, குந்திதேவி யவாகளுடன் சென்றது, யுத்தத்தில் இறந்துபோன புத்திரபௌத்திரர்களேயும், அரசர்களேயும் வியாசர் திருதராஷ்டிரனுக்குக் காட்டினது, அதைக் கண்ட திருதராஷ்டிரன் துக்கத்தை விட்டுத் தவஞ்செய்தது, விதுரர் கதியடைந்தது, ஸஞ்சயன் மந்திரிகளும் நற்கதி பெற்றது, யுதிஷ்டிரர், நாரதரைக் கண்டது, நாரதர் யாதவர்கள் நாசபடைவதை புதிஷ்டிருருக்குச் சொன்னது இவைகளுள்ளன; இதில் அத்தியாயங்கள் நாற்பத்திரண்டு, சுலோகங்கள் ஆயிரத்தைஞ்நூற்றைறு.

மௌசலபர்வத்தில்; யாதவர்களுக்குச் சாபம் சேர்ந்தது, அவர்கள் மதுபானத்தினால் மயங்கிக் கடற்கரையில் சண்டைசெய்து மடிந்தது, இராம கிருஷ்ணர்களும் காலவசப்பட்டுச் சென்றது, அர்ஜுனன் துவாரகைக்குப் போய் யாதவர்களுக்குத் தேகஸம்ஸ்காரஞ் செய்தது, மிகுந்த யாதவர்களே அழைத்துக்கொண்டு வருகையில் ஆபத்து சேர்ந்தது, காண்டீவமும் அஸ்திரமும் பயனில்லாமற்போனது, யாதவஸ்திரீகள் கவர்ந்துகொண்டு போகப்பட்டது, அதனால் துயரமடைந்த அர்ஜுனக்கு வியாஸர் உபதேசஞ்செய்தது, அர்ஜுனன் மீண்டு தர்மராஜாவினிடம் வந்து இராஜ்யத்தை விட்டுப்போக வேண்டுமென்று சொன்னது இவையெல்லாம் சொல்லப்பட்டன. இதில் அத்தியாயங்கள் எட்டு சுலோகங்கள் மூந்நூற்றிருபது.

மஹாபிரஸ்தானிக பாவத்தில், பாண்டவர்கள் இராஜ்யத்தை விட்டுப் போனது, அக்னிதேவன் பிரத்தியட்சமாய்க் காண்டவத்தைப் பெற்றுக

கொண்டது, சகோதரர்களும் திரௌபதியும் மேழே மேழ யுதிஷ்டிரர் அவர்க ளோக கவனியாமல் சென்றது இவைகள் உள்ளன. இதில் மூன்று அத்தியா யங்களும், முந்நூற்றிருபது சுலோகங்களும் அடங்கியுள்ளன.

சொர்க்கபர்வத்தில், தர்மராஜாவுக்கு விமானம் வந்ததும், அவர் தம்மைத் தொடர்ந்து வந்த நாயைவிட்டு விமானத்தில் ஏறமாட்டேனென்றதும், தர்மதே வதை நாயுருவத்தை விட்டுப் பிரத்தியட்சமாய்த் தர்மராஜாவைச் சொர்க்கத் துக்கு அழைத்துக்கொண்டு போனதும, தேவதூதன் தர்மராஜாவுக்கு நரகத் தையும் அதிலிருந்து தூக்கப்படும் ஜீவர்களைக் காட்டினதும், அவர் ஆகாசகங் கையில் ஸ்நானஞ்செய்து திவ்ய சரீரத்தை யடைந்து ஸ்வர்க்கத்தில் வசித்த தும் கூறப்பட்டுள்ளன. இதில் அத்தியாயங்கள் ஐந்து, சுலோகங்கள் இரு நூற்றொன்பது. கிலங்களில் (சிதறுண்டு கிடக்கும் விஷயங்களடங்கியுள்ளது) ஹரிவம்சமும் பவிஷ்யபர்வமும் அடங்கியுள்ளன. ஹரிவம்சம் பன்னீராயிரம் சுலோகங்களிலுற் கூறப்பட்டுள்ளது.

பதினெட்டுப்பர்வங்களும் சங்கிரகமாகக் கூறப்பட்டன. இந்த இதிகாசத் தைப் படியாதவன் வேதவேதாங்கங்களே யோதியும் பயனில்லை. இது தர்மம், அர்த்தம், காமம் என்கிற மூன்றினையும், விளக்கக் கூறுகின்றது. சகலபுரா ணைகளுக்குமிது ஆதாரமானது. தர்மம் ஒன்றுதான் இகபரசாதகமாயுள்ளது. அர்த்தகாமங்கள் நிலையற்றன. இது மனச்சுத்தியையுண்டாக்கும், தர்மததைக் கொடுக்கும், பாபத்தை யொழிக்கும். கீர்த்தியை அளிக்கும். இதைப்படிப்பவ ருக்குச் சகலமான புண்ணிய தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்த பலனுண்டா கும். சாயங்காலம் பாரதம் படித்தால் பகலிற்செய்த பாபங்கள் ஒழியும், காலையில்படித்தால் இரவில் செய்த பாபங்கள் நீங்கும், அலங்காரதோடுகூடிய நூறுபசுக்களைச் சற்பாத்திரத்தில் தானஞ்செய்கிற பலனும், பாரதம் படிப்பத னலுண்டாகும் பலனும் சரியாகவிருக்கும். இந்தப் பர்வசங்கிரகபர்வத்தைப் படிப்பதனலே பாரதம் முழுதும் படித்ததுபோலாகும்.

மூன்றாவது அத்தியாயம்.

பௌஷ்யபர்வம்.

பரிட்சித்தின் புத்திராகிய ஜனமேஜய மஹாராஜா குருக்ஷேத்திரத்தில் நெடுங்காலஞ்செய்யத்தக்க ஸத்ரயாகம் செய்துகொண்டிருந்தார். அப்பொ ழுது தேவலோகத்து நாயாகிய ஸரமையின் பிள்ளை ஸாரமேயன் அந்த யாகத் துக்குச் சமீபத்தில் வந்தது. ராஜாவின் சகோதரர்களான சுருதசேனன், உக்கிரசேனன், பீமசேனனென்கிற மூவரும் ஸாரமேயனை யடித்துத் துர த்தினார்கள். அது அடி பொறுக்கமாட்டாமல் ஊளை யிட்டுக்கொண்டு தன

தாயினிடம் போயிற்று. தாய் அதைப் பார்த்து நீயேன் அழுகிறாயென்று கேட்க ஸாரமேயன் ஜனமேஜய ராஜாவின் சகோதரர்கள் என்னை யடித்தார்கள் என்று சொல்லிற்று. ஸாரமை தன் பிள்ளையை நோக்கி நீ அங்கே போய் ஏதாவது பிழை செய்திருப்பாய், அதனாலேதான் அடிபட்டாயென்றது. ஸாரமேயன் தான் ஒரு பிழையும் செய்யவில்லை. அவர்கள் அநியாயமாக அடித்தார்களென்று உறுதியாகச் சொல்லிற்று. தாய் மனவருத்தப்பட்டு; யாகம்செய்யுமிடத்துக்கு வந்து ஜனமேஜயனைப் பார்த்து என் பிள்ளை யாதொரு பிழையுஞ் செய்யாமலிருக்க அநியாயமாக அடித்தகாரணமென்னவென்று கேட்டது. அரசன் யாதொன்றும் சொல்லவில்லை. ஸாரமை கோபங்கொண்டு, பிழை செய்யாமலிருக்கையில் அடித்ததனாலே உங்களுக்குத் தெரியாமலே ஒரு ஆபத்து வருமென்று சொல்லிப்போயிற்று.

அது கேட்ட ஜனமேஜயன் வருத்தப்பட்டு,யாகமுடிந்ததும் அஸ்தினபுரம் போனார் ஸாரமையின் வாக்கின்படி வரப்போகிற ஆபத்தை விலக்கிக்கொள்ள முயற்சி செய்தார். ஒரு நாள் வேட்டைக்கு போகையில் சுருதசிரவஸ் என்னும் மஹாரிஷியின் ஆசிரமத்தைப் பார்த்தார். அரசன் அந்த ரிஷியினிடம் போய் தனக்குப் புரோஹிதராயிருக்கும்படி கேட்டுக்கொண்டார். அந்த ரிஷி ஓ அரசனே! என் புத்திரன் பெண்பாம்பினிடம் பிறந்தவன், ஸர்வசக்தியுள்ளவன், பரமசிவனுல் விடப்பட்ட பூதத்தைத் தவிர மற்ற எல்லாப் பேய்களையும் ஓட்டுவன்,எவனுவது ஒரு பிராணன் வந்து எதை விரும்பிக் கேட்டாலும் அவனுக்கு அதைக் கொடுத்துவிடுவன். இது அவன் விரதம், இஷ்டமானுல் அவனைப் புரோஹிதனுக அடையலாமென்றனர். அரசன் சம்மதித்து அவரை யழைத்துக்கொண்டுவந்து தம்ஸஹோதரர்களைப் பார்த்து இவர் சொல்லுகிறபடிசெய்யுங்களென்று கூறித் தாம் தட்சிலா நகரத்தை யெதிர்த்து அதை ஜயித்தார். இக்காலததில் நடந்த விசேஷமொன்று சொல்லுகிறேன் கேளுங்களென்று ஸூதர் சொல்லுகிறார்.

அப்போ தௌம்யரென்ற ஒரு மஹாரிஷி யிருந்தார். அவருக்கு உபமன்யு ஆருணி, பைலதன் என்ற மூன்று சிஷ்யர்கள். தௌம்யர் ஆருணியை வயல் மடையைக் கட்டும்படி ஆக்ஞாபித்தார். ஆருணி அந்தப் பணிவிடையை நிறைவேற்றப் போனுன். ஆனுல் முடியாமல் போயிற்று. அதற்காக வருத்தமுற்று அந்த மடையில் தான் படுத்துக்கொண்டு தண்ணீர் போகாமல் நிறுத்தினுன். தௌம்யர் மற்ற இரண்டு சிஷ்யர்களையும் பார்த்து ஆருணி எங்கே யென்று கேட்டார். அவர் தமது ஆக்ஞையினுல் கழனியின் மடையடைக்கப் போனுனென்றார்கள். தௌமியர் அவர்களையும் அழைத்துக்கொண்டு கழனிக்குப் போய் ஆருணி! எங்கே யிருக்கிறாய்? இங்கே வா என்று அழைத்தார். அவன் மடையைப் பிளந்துகொண்டு வந்து, கழனியின் மடை அடைபடாமையால் நான் படுத்துக்கொண்டு மடையை யடைத்தேன். பகவானுடைய குரல்

கேட்டு வந்தேன். நான் செய்யவேண்டுவதைக் கட்டளையிட வேண்டுமென்றேன். நீ கழனி மடையை உடைத்துக்கொண்டு வந்ததனால் உனக்கு உத்தாலகன் என்று பேர் வழங்கக் கடவது. உனக்குச் சகல வேதங்களும் சாஸ்திரங்களும் விளங்குமென்று கூற அவன் விடைபெற்றுக்கொண்டு போனான்.

தௌம்யர், உபமன்யுவை அழைத்து, பசுக்களை மேய்க்கும்படி கட்டளையிட்டார். அவன் அப்படியே செய்துவந்தான். அவன் புஷ்டியாயிருப்பதைத் தௌம்யர் பார்த்து நீ எப்படி ஜீவனம்பண்ணுகிறாயென்று கேட்டார். பிக்ஷையினால் ஜீவனஞ் செய்கிறேனென்று மறுமொழி சொன்னான். உபாத்தியாயர் பிக்ஷையை எனக்குக் காண்பியாமல் புசிக்கவேண்டாமென்றுகட்டளையிட்டார். அவன் சரியென்று பிக்ஷையெடுத்துவந்த அன்னத்தைக் குருசந்நிதியில்வைத்து வந்தான். அவர் பிக்ஷைமுழுவதையும் தாமெடுத்துக்கொண்டுவந்தார். அப்படியும் அவன் புஷ்டியாகவே யிருந்ததைக் கண்டு, உபாத்தியாயர் உபமன்யு! இப்பொழுது நீ யெப்படி ஜீவிக்கிறாயென்றார். அவன் சுவாமீ! நான் இரண்டாந் தடவை பிக்ஷையெடுத்து ஜீவிக்கிறேனென்றான். குரு, நீ யிரண்டாம் முறை பிக்ஷையெடுப்பதனால் பிக்ஷையெடுத்து ஜீவிக்கும் மற்றவர்களுக்கு அபகாரம் செய்தவனாகிறாய்; இது குருகுல வாசமுறைமையன்று என்று சொன்னார். அவன் சரியென்று பசுக்களை மேய்த்துக்கொண்டுவந்தான். அப்பொழுது அவன் புஷ்டியாகவே யிருக்கக் கண்டு குரு அவனைப் பார்த்து நீ இப்பொழுது எப்படி ஜீவிக்கிறாயென்று கேட்டார். அவன் இந்தப் பசுக்களின் பாலால் என்றான். குரு இது நியாயமில்லை; நான் அப்படிச் செய்ய உத்தரவு கொடுக்கவில்லையே யென்றார். சிலகாட்பொறுத்து, அவனைப் பார்த்து நீ இப்பொழுது எப்படி ஜீவிக்கிறாயென்றார். இந்தக் கன்றுகள் ஊட்டினபின் அவற்றின் கடையில் ஒதுக்கும் நுரையைக் குடித்து ஜீவிக்கிறேனென்றான். குரு, நீ அப்படிச் செய்வதனால் கன்றுகளின் ஆகாரத்துக்கு இடையூறு செய்கிறாய். அது சரியல்ல என்று சொன்னார். இதனால் அவனுக்கு ஒன்றும் இல்லாமற்போயிற்று. பசி பொறுக்கமாட்டாமல் எருக்கிலைகளைத் தின்றான். அதனால் அவன் கண் கெட்டுக் குருடனானான். ஒரு நாள் பசுமேய்க்கையில் ஒரு பாழுங்கிணற்றில் விழுந்துவிட்டான். அஸ்தமித்தபின் அவன் வீட்டுக்கு வராமையால் குரு உபமன்யு அஸ்தமித்தும் வரவில்லை. அவனைத் தேடுவோம் வாருங்களென்று சிஷ்யர்களை அழைத்துக்கொண்டு வனத்துக்குப் போய், அப்பா குழந்தாய்! உபமன்யு! எங்கே யிருக்கிறாய் வா, என்று கூப்பிட்டார். அவன் நான் இதோ பாழுங்கிணற்றில் விழுந்து கிடக்கிறேனென்றான். குரு என் கிணற்றில் விழுந்தாயென்று கேட்க, நான் எருக்கிலைகளைப் புசித்ததனால் குருடனானேன். கண் தெரியாமையால் கிணற்றில் விழுந்துவிட்டேனென்றான். தௌம்யர் நீ அசுவினிதேவர்களைத் துதித்தால் கண் பெறுவாயென்று கூறினார். அவன் அப்படியே அசுவினிதேவர்களை வேதமந்திரங்களினால் துதித்தான். அசுவினிதேவர்கள் அவனுக்குப் பிரத்தியட்சமாய், உனக்கு நல்ல பட்சணம் கொண்டு

வர்த்திருக்கிறோம். இதைப் புதியென்றார்கள். அவன் நான் என் குருவுக்குத் தெரியாமல் எதையும் புசிக்கமாட்டேனென்றான். அசுவினிதேவர்கள் உன் குருவும் மூன்றெருகாலத்தில் எங்களை துதித்தார். அவருக்கும் பட்சணம் கொண்டுவந்து கொடுத்தோம். அவர் குருவுக்குத் தெரிவிக்காமலே புசித்தார். ஆகையால் நீயும் புசிக்கலாமென்றார்கள். உபமன்யு, நான் குருவுக்குத் தெரிவிக்காமல் புசிக்கமாட்டேனென்று மறுபடியும் மறுத்தான். அசுவினிதேவர்கள் மகிழ்ந்து, உன் குருபக்தியினால் நாங்கள் மகிழ்ந்தோம். உனக்குக் கண் தெரியும், சகல வேதசாஸ்திரங்களும் விளங்கும், உன் பல் பொன்னாகும் என்று சொல்லி மறைந்தார்கள். உபமன்யு தன் குருவினிடம் வந்து இதைச் சொன்னான், அவரும் மகிழ்ந்து அசுவினிதேவர்கள் சொன்னபடியே உனக்குச் சகல வித்தைகளும் உண்டாகக் கடவது என்று ஆசீர்வதித்தார்.

அயோததௌம்யர் பைதனென்னும் தம்முடைய மற்றொரு சிஷ்யனை நோக்கி, நீ என் வீட்டுக்குரிய பணிவிடையைச் செய்து கொண்டிரு என்று கட்டளையிட்டார். அவன் அப்படியே பசி தாகம் முதலியவற்றைப் பொறுத்துக் கொண்டு மாடுகளைப் போலச் சுமைசுமைத்தலாதிக் கஷ்டவேலைகளைச் செய்து கொண்டிருந்தான். இப்படி நெடுங்காலஞ் சென்றபின் தௌம்யர் மகிழ்ந்து அவனுக்குச் சகல வித்தைகளுமுண்டாகும்படி யனுக்கிரகஞ் செய்தனுப்பினார். அத்தப் பைதர் குருகுல்தாசிரமத்திலிருக்கையில் அவருக்கு மூன்று சிஷ்யர்களிருந்தார்கள். பைதர் யாகஞ்செய்விக்கிறதற்காகத் தூரதேசம் போக நேரிட்டது. அவர் உதங்கனென்னும் சிஷ்யைப் பார்த்து நான் வருகிறவரைக்கும் விட்டு வேலைகளைக் குறைவில்லாமற் செய்யென்று கட்டளையிட்டுப் போனார்.

உதங்கர் பணிவிடைகளைச் செய்துகொண்டு குருகுலவாசம் செய்கையில் சில ஸ்திரீகள் வந்து குருபத்தினி உன்னை விரும்புகிறாள். நீ அவள் விருப்பத்தின்படி நடந்துகொள் என்றார்கள். உதங்கன் அவர்களை நிராகரித்து. அந்தக் காரியம் செய்யத் தகாது. அதை நான் செய்யமாட்டேனென்று கூறிவிட்டார். நெடு நாள் கழித்தபின் குருவந்து உதங்கருடைய கல்நடக்கைகளைக் கேட்டு மகிழ்ந்து, உதங்கரை நோக்கி உனது கல்ல நடக்கையால் நான் மகிழ்ந்தேன். நீ விரும்பின எல்லாவற்றையும் பெறுவாய், நீ உன் வீட்டுக்குப் போ என்று விடைகொடுத்தார். உதங்கன் நான் குருதட்சிணை கொடுக்கவிரும்புகிறேன், விருப்பமானதைச் சொன்னால் அதை நிறைவேற்றின பின் போகிறேன் என்று சொன்னார். குரு எந்த விதஞ்சொல்லித் தடுத்தும் கேட்கவில்லை. அதனால் குருபத்தினியைக் கேட்டு அவள் விரும்பினதைச் செய் யென்று சொன்னார். உதங்கர் குருபத்தினியிடம் போய்க் குருசொன்னதைச் சொல்லி உமக்கு விருப்பமானதைக் கட்டளையிட்டால் அதைத் தட்டாயின்றி அளிப்பேனென்று சொன்னார். குருபத்தினியானவள், பௌஷ்யராஜபத்தினி காதில் அணிந்திருக்கும் குண்டலங்களைக் கொண்டுவந்து கொடுத்தால் அதுவே குருதட்சிணையாகுமென்று கூறினாள். அதுவும் இன்றைக்கு நாலாவது நாள் ஒரு

விரதம் வருகிறது, அதற்குள்ளாக வர வேண்டுமென்றாள். உதங்கர் கல்ல தென்று ஒத்துக்கொண்டு புறப்பட்டுப் போனார்.

போகும்வழியில் ஒரு திவ்ய புருஷன் ரிஷபத்தின்மேலேறிக்கொண்டு வரக் கண்டார். அவன் உதங்கரைப் பார்த்து உதங்கா! இந்த ரிஷபத்தின் கோமயத்தை உட்கொள். உன் குருவும் முன்னே யருந்தினரென்றான். உதங்கர் அப்படியே உண்டுவிட்டு ஆசமனஞ்செய்யாமற் போனார். பௌஷ்ய ராஜனைக் கண்டு தான் உம்மிடத்தில் யாசகத்துக்கு வந்திருக்கிறேனென்று சொன்னார். அவ்வரசன் சுவாமீ! உமது விருப்பத்தைச் சொன்னால் அப் படியே செய்வேனென்றார். நான் குரு தட்சணைக்காக உமது பத்தினி காதி லணிந்திருக்கும் குண்டலத்தை யாசிக்க வந்தேனென்று உதங்கர் சொன் னார். பௌஷ்யன் அந்தப்புரத்திலிருக்கும் அரசியிடம் போய்க் கேட்டு வாங்கிக் கொண்டுபோமென்று சொல்ல, அப்படியே அந்தப்புரம் போய்ப் பார்த்தார் இராஜபத்தினியைக் காணவில்லை. மீண்டும் அரசனிடம் வந்து அரசி அந்தப் புரத்தில் இல்லையென்று சொன்னார். பௌஷ்யன் நீர் ஆசாரக்குறைவா யிருப்பீர். அவள் ஆசாரமில்லாதவர்களுக்கு அகப்படமாட்டாள் என்றான். உதங்கர் ஆசமனம் செய்யாமல் வந்ததைக் கூறி உடனே கைகால் அலம்பிக் கொண்டு ஆசமனஞ்செய்து அந்தப்புரம் போனார். இராஜபத்தினி எதிர் கொண்டுவந்து வணங்கி உபசரித்து, நான் தங்களுக்கு செய்ய வேண்டியதை அநுக்கிரகம் பண்ணவேண்டும் என்றாள். உதங்கர் குரு தக்ஷிணைக்காக உமது காதில்மிளிர்ந்திருக்கும் குண்டலங்களே யாசிக்க வந்தேனென்றார். அரசி மகிழ்ந்து குண்டலங்களைக் கழற்றிக்கொடுத்துவிட்டு, நாகராஜனுடைய தட்சகன் இந்தக் குண்டலங்களுக்காகச் சமயம் பார்த்துக்கொண்டிருக்கிறான். நீர் ஜாக் கிரதையாகக் கொண்டுபோக வேண்டுமென்று சொன்னாள். அவர் சரியென்று கூறி அவளிடம் விடைபெற்றுக்கொண்டு அரசனிடம் போய் நான் வந்த காரியம் நிறைவேறிற்று, விடைகொடுமென்றார். அரசன் போஜனஞ் செய்து விட்டுப் போகலாமென்று கூறி அவருக்கும் போஜனம் அளித்தார். உதங்கர் உண்ணும்போது அதில் ஒரு மயிரிருந்தது. அது கண்ட உதங்கர் கோபித்து எனக்கு அசுசியான அன்னத்தை யிட்டபடியால் உனக்குக் கண் தெரியாமல் போகக்கடவதென்று அரசனைச் சபித்தார். பௌஷ்யன் குற்றமில்லாத என் னைச் சபித்தபடியால் நீர் சக்தியற்றுப்போவீரென்று சபித்தான். பிறகு அரசன் அன்னத்தில் மயிரிருந்ததை யறிந்து சுவாமீ! இது என்தவறன்று, கையால் நீர் கொடுத்த சாபத்தை மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொண் டான். உதங்கர் என்சாபம் வீணுகமாட்டாது நீ சிலகாலம்வரை தெரியாம லிருந்து பின் சுகப்படக்கடவாயென்று கூறி, நீரிட்ட சாபம் என்னை யடை யாதபடி செய்புமென்று கேட்க, அரசன் சுத்தினியரிட்ட சாபம் மாறுகிற தில்லை. ஆதலால் நீர் போமென்ன உதங்கர் சரியென்று போய்விட்டார்.

உதங்கர் போகும்போது ஜலத்தினிமித்தம் குண்டலத்தைக் கீழே வைத்துப் போனர். அப்போது பௌத்த ஒரு சந்நியாசி வந்து அந்தக் குண்டலங்களே யெடுத்துக்கொண்டு ஓடினன். உதங்கர் தம் காரியத்தை முடித்துக்கொண்டு விரைந்து போய் அவனைப் பிடித்தார். உடனே அவன் சந்நியாசி ரூபத்தை விட்டுப் பாம்பு ரூபத்தை யெடுத்துக்கொண்டு அருகிலிருந்த ஒரு வளைக்குள் நுழைந்து நாகலோகம் போய்ச் சேர்ந்தான் உதங்கர் இராஜபத்தினிவாக்கியத்தை மறந்தமையாலிந்தக் கஷ்டம் வந்ததென்று கருதித் தம்கையிலிருந்ததடியினுலே வளையை யிடித்தார். அப்போது இந்திரன் வஜ்ராயுதத்தை அந்தத் தடிக்குள் பிரவேசிக்கச் செய்தான். அதனுல் வளை பிளந்தது. அவர் அதன் வழியாக நாகலோகம் போய் அவ்வுலகத்தின் விநோதங்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டு நாகங்களைப் பலவாறு துதித்தார். நாகங்கள் காணப்படவில்லை. இரண்டு ஸ்திரீகள் கறுப்பும் வெளுப்புமான நூல்களால் வஸ்திரம் நெய்வதையும், பன்னிரண்டு ஆரைக்கால்களுள்ள ஒரு சக்கரத்தை ஆறு குமாரர்கள் சுழற்றுகிறதையும், ஒரு திவ்ய புருஷனையும். ஒரு அழகான குதிரையையும் பார்த்தார். அப்போது திரிபுவன நாயகனுடைய இந்திரனைத் துதித்தார். அந்தத் திவ்ய புருஷன்உதங்கரைப்பார்த்து நான் சந்தோஷமடைந்தேன், உமக்கென்ன வேண்டுமென்று கேட்டான். உதங்கர் நாகங்கள் எனக்கு அடங்கிவரவேண்டும் என்றார். அவன் அப்படியானுல் இந்தக் குதிரையின் அபானத்தில் ஊது என்றான். உதங்கர் அப்படியே ஊதினபோது அந்தக் குதிரையின் மயிர்க்கால்கள்தோறுமிருந்து நெருப்பு ஜ்வாலைகள் புறப்பட்டன அதனுல் நாகலோகம் வெதும்பிற்று. அதனுல் தட்சகன் பயந்து குண்டலங்களே யெடுத்துக்கொண்டு வந்து; உதங்கரைப் பார்த்து இந்தக் குண்டலங்களே வாங்கிக்கொள்ளுங்களென்று வேண்டினன். உதங்கர் குண்டலங்களைப் பெற்றுக்கொண்டு, இன்றையதினந்தானே குருபத்தினி கூறிய விரததினம்,நெடுந்தூரமிருக்கிறதே எப்படிப் போய்ச் சேருவேனென்ற கவலைப்பட்டார். குதிரையின் மேலிருந்த புருஷன் உதங்கா! இந்தக் குதிரையின் மேலேறிக்கொள், நீ விரைவிலே உன் குருவினிடம் போய்ச் சேருவாயென்று சொல்ல, உதங்கர்! அப்படியே குதிரையின் மேலேறிக்கொண்டு உபாத்தியாயரிருக்குமிடம் வந்து சேர்ந்தார். குருபத்தினியானவள் ஸ்நானஞ்செய்துவிட்டு, உதங்கர் இன்னம் வந்திசேரவில்லையே ஆகையால் அவனைச் சபிப்பேன் என்று நினைத்தான். அந்தக் காலத்தில் உதங்கர் குருபத்தினியிடம்போய் வணங்கிக் குண்டலங்களைக் கொடுத்தார். குருபத்தினி அவரைப் பார்த்து குழந்தாய்! நீ இந்தச் சரியான காலத்தில் வந்ததினுல் என்சாபத்தினின்றும் தப்பினுயென்று கூறி, நீ நினைத்தபடி சித்தியடையக் கடவாய், உனக்கு நன்மையுண்டாகட்டுமென்று வாழ்த்தினுள். உபாத்தியாயர்! குழந்தாய் உதங்கா! என் தாமசமாய் வந்தாயென்று கேட்க, உதங்கர் என்காரியத்திற்கு நாகராஜனை தட்சகன் விக்கினஞ்செய்தான். அதனுல் பாதாளலோகம் போய்வந்தேன். அவ்விடத்தில் இரண்டு ஸ்திரீகள் வஸ்திரம் நெய்து கொண்டிருந்தார்கள். அதில் கறுப்பு நூல்களும் வெளுப்பு

நூல்களுமிருந்தன. பன்னிரண்டு ஆரைக்கால்களுன்ன ஒரு சக்கரமிருந்தது. அதை ஆறு குமாரர்கள் சுற்றிக்கொண்டிருந்தார்கள். அவை யென்ன? ஒரு புருஷனையும் ஒரு குதிரையையும் பார்த்தேன். அவன் யார்? வழியில் போகும் போது ஒரு ரிஷபத்தையும் அதன்மேல் ஒரு புருஷனையும் பார்த்தேன். அவன் அன்புடன் என்னைப் பார்த்து இந்த ரிஷபத்தின் கோமயத்தை அருந்து. உன் குருவும் இப்படிச் செய்தார் என்றான். நான் கோமயத்தை உண்டேன். அவன் யார்? இவைகளை எனக்குச் சொல்ல விரும்புகிறேனென்றார். குரு, அப்பா உதங்கா! நீ பார்த்த இரண்டு ஸ்திரீகளும் தாதாவிதாதாவென்னுந் தேவதைகள் கறுப்பும் வெளுப்புமாய்க் கண்ட நூல்கள் இரவும் பகலும், பன்னிரண்டு ஆரைக்கால்களும் பன்னிரண்டு மாதங்கள். அந்தச் சக்கரத்தை சுழற்றின ஆறு குமாரர்களும் ஆறு ரிதுக்கள். சக்கரம் வருஷம் நீ கண்ட புருஷன் பர்ஜன்யனென்னும் மேகதேவதை. குதிரை அக்னிதேவன். நீ வழியிற் பார்த்த விருஷபம் ஐராவதமென்னும் யானை, அதன் மேலிருந்த புருஷன் தேவேந்திரன். நீ உட்கொண்ட கோமயம் அமிர்தம். அதனாலேதான் அந்த நாகலோகத்தில் நீ அழியாமலிருந்தாய். அந்த இந்திரன் எனக்கு ஸ்நேஹன் அதையினுல் உனக்குச் சகாயம் செய்யவந்தான். நீ மேன்மையடைவாய் என்று அநுக்கிரகஞ்செய்து விடைகொடுத்தார். விடைபெற்றுக்கொண்ட உதங்கர் தட்சகனைச் சிக்ஷை செய்யக் கருதி விரைந்து அஸ்தினபுரம் போய் ஜனமேஜய மஹாராஜாவைக் கண்டார். ஜயசீலராகிய ஜனமேஜய மஹாராஜா மந்திரி பிரதானிகள் சூழக் கொலுவிருந்தபோது அவரைக் கண்டு ஆசீர்வதித்துச் சொல்கிறார். மஹாராஜாவே நீர் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யாமல் வீண்காரியஞ் செய்துகொண்டிருக்கிறது பிறபிள்ளைத்தனமாமென்றார். ஜனமேஜயர் அது கேட்டுச் சுவாமீ! நான் செய்ய வேண்டுவதென்ன? தேவரீர் என்னிடம் வந்த காரியம் என்ன என்று கேட்டார். உதங்கர், மஹாராஜாவே தாதாத்மாவான தட்சகனென்னும் சர்ப்பராஜன் தேவதைகளுக்குச் சமானமான உன்பிதாவை அநியாயமாகக் கடித்துக் கொன்றான், அவரைப் பிழைப்பிக்கிறதற்காக வந்த காரியபரையும் அவரிடம் வராமல் தடுத்தான். நான் குரு தட்சணை கொடுப்பதற்காகச் செய்த முயற்சிக்கு விக்னஞ்செய்தான். ஆகையால் நீ சீக்கிரமாகச் சர்ப்பயாகஞ் செய்து, அந்த தோமாக்னியில் தட்சகனைச் சுட்டெரிக்க வேண்டுமென்று சொன்னார். ஜனமேஜய மஹாராஜாவுக்குத் தன் பிதாவின் அநியாயமான மரணத்தைக் கேட்டதும் மஹா தக்கமும் தட்சகன்மேலே கடுக்கோபமுமூண்டாயிற்று என்று சூதர் சொன்னர்.

நாலாவது அத்தியாயம்.

பௌலோம பர்வம்.

பிறகு ஸௌதருனிவர் கைமிசாரணிய வாசிகளான ரிஷிகளுக்கு வந்தவாஞ்செய்து, ஜனமேஜய ராஜாவின் சர்ப்பயாகத்திற்கு வேறொரு காரணமும்

ஆயிற்று. இன்னும் விரும்பினால் அதையும் உமக்குச் சொல்லுகிறேனென்
ரூர். நிஷிகள், சௌனகரே! சாக்ஷன் எல்லாக் கதைகளையும்
கேட்க விரும்புகிறோம்; மலையிற் சிறந்த சௌனகர் அக்கினிஹோத்திர
சமயமிலிருக்கிறார். தேவர்கள், அசுரர், மனிதர்கள் எல்லாருடைய கதைகளை
யுணர்ந்தவர்; வித்வான்; வேதசாஸ்திரகுரு; சத்தியம், சாந்தி, தவசு நிறைந்த
வர்; எல்லோருக்குப் பெரியவரும் குலபதியுமானவர்; அவர் இந்த யாகத்தில்
நிலை வகித்திருக்கிறவர், ஆசாரியராகிய அவர் வந்து உட்கார்ந்தபின் அவர்
கேட்கிறதைச் சொல்லும் என்று சொன்னார்கள். சற்று நேரத்துக்கெல்லாம்
சௌனகமுனிவர் தமது வைதிக நித்தியங்களை முடித்துக்கொண்டு நிஷி
கள் உட்கார்ந்திருக்குமிடத்திற்கு வந்து சேர்ந்தார். யாவரும் சுகமாக உட்
கார்ந்துகொண்ட பிறகு சௌனகர் சொல்லுகிறார்.

ஐந்தாவது அத்தியாயம்.

பௌலோம பர்வந் தொடர்ச்சி.

சௌனகர் சூதரைப் பார்த்து ஐயா! முன்னலே உமது பிதா புராணங்
களை யெல்லாம் சொன்னர். அவைகளெல்லாம் உமக்குத் தெரியுமா? புரா
ணங்களிற் சொல்லப்பட்ட மேன்மையான கதைகளையும், அறிவிற் சிறந்தவர்க
ளுடைய பழைமையான வம்சோற்பத்திகளையும் கேட்டிருக்கிறோம். அவற்
றுள் பிருகுவம்ச கதைகளை முதலிற் கேட்க விரும்புகிறேன். அந்தக் கதை
யைச் சொல்லும் என்று கேட்க ஸூதர் சொல்லுகிறார்.

இந்திரன் முதலிய தேவர்களாலும், நிஷிகளாலும் மற்றுமுள்ள தேவ
ஜாதியாராலும் புகழப்பட்டது. இத்தன்மையதான பிருகுவம்ச சரித்திரத்தை
முறையாகச் சொல்லுகிறேன். வருணனுடைய யாகத்தில், பிரமதேவரால்
அக்கினியிலே யுண்டாக்கப்பட்டவர். அவருக்கு ச்யவனர் பிறந்தார். ச்யவன
ருக்குப் பிரமதி பிறந்தார். பிரமதிக்கு ருரு பிறந்தார். ருருவுக்குத் தர்மஞ்
ஞரும், சத்தியவதியும், சிறந்த பிரமஞானியும், நியமத்தவறுதலவரும், கல்வி
கேள்விகளில் மேலானவருமான சுனகர் பிறந்தார். இவர்தான் உமது கூட
ஸ்தர் என்று சொல்லச், சௌனகர் ஸூதரே! பிருகுபுத்திரருக்கு ச்யவன
ரென்ற பேர் வந்த காரணமென்ன? அதைச் சொல்ல வேண்டுமென்று கேட்
கச் சூதர் சொல்லுகிறார்.

பிருகுவுக்குப் புலோமை யென்ற பேருள்ள ஒரு மனைவி யிருந்தாள்.
அவள் சிறந்தவள்; அழகிற் சிறந்தவள், அவள் கர்ப்பவதியா யிருந்தாள்,
ஒரு நாள் பிருகு ஸ்நானத்திற்குப் போயிருந்தார். அப்போது புலோமா என்ற
ஒரு அசுரன் பிருகுவின் ஆச்ரமத்துக்கு வந்தான். புலோமை அவனுக்கு
முறைப்படி கனி முதலியவற்றைக் கொடுத்து உபசரித்தாள். இந்த ராட்ச

தன் முன்னேயே புலோமையை விரும்பி வரித்திருந்தான். இப்பொழுது அவளைக் கண்டவுடன் காதல்வசப்பட்டு அவளைக் கொண்டுபோகக் கருதினன். அக்கினிஹோத்திர சாலையில் அக்கினி ஜ்வலித்துக்கொண்டிருந்ததைக் கண்டு, ஓ! அக்கினியே உன்னைச் சத்தியமாகக் கேட்கிறேன்; இவள் யாருடைய மனைவி? இத்தப் பெண்ணை நான் தான் முதலில் வரித்தேன். இவள் பிதா என்னை வஞ்சித்துப் பிருகுவுக்குக் கொடுத்துவிட்டான். முதலில் நான் மனைவியாக வரித்த இவளைப் பிருகுமுனி பெற்றுக்கொண்டதனால் நான் மனம் வருந்தியிருக்கிறேன். இந்த விவாகத்தை நான் ஒப்புக்கொள்ளவில்லை. இவளை நான் கொண்டுபோக விரும்புகிறேன்; நீ தேவர்களுக்கு முகமாய்ப் பரிசுத்தனு யிருக்கிறாய்; உண்மைசொல் உன்னிடத்தில் உண்மையைக் கேட்டு இவளை நான் கொண்டுபோக வேண்டுமென்றான். அதைக் கேட்ட அக்கினி வருத்தமடைந்து நான் சத்தியஞ்சொன்னால் பிருகு சபிப்பார். பொய் சொன்னால் நிச்சயமாக நரகம் வரும். என்ன சொல்லவதென்று யோசித்து, ஓ அசுரனே! நீ இவளை முதலில் வரித்தது நிசந்தான். ஆனால் விதிப்படி வரிக்கவில்லை. இவள் பிதா நல்ல வரனை விரும்பி இவளைப் பிருகுவுக்குக் கொடுத்தார். பிருகு என்னைச் சாட்சியாகக் கொண்டு இவளை வேதவிதிப்படி வரித்தார்; ஆகையால் இவள் அவருடைய பாரியை யென்று சொன்னன்.

ஆறுவது அத்தியாயம்.

பௌலோம பர்வத் தொடர்ச்சி.

இப்படி அக்கினி சொன்னதைக் கேட்ட அசுரன் உடனே ஒரு பன்றி வடிவமாய் அவளைத் தூக்கிக்கொண்டு அதிக வேகமாய் ஓடினன். அப்போது புலோமையின் கருப்பத்திலிருந்த குழந்தை கழுவிக் கீழே விழுந்து கண்ணை விழித்து அசுரனைப் பார்த்தது. அதனால் அசுரன் எரிந்து சாம்பலானன். புலோமை தன் குழந்தையை யெடுத்துக்கொண்டு துக்கத்தோடு ஆச்சரமம் வந்து சேர்ந்தாள். இதை யறிந்த பிரமதேவர் அவளிடம் வந்து அவளை தேற்றினர். அவளுடைய கண்ணீர் ஒரு ஆறாய்ப் பெருகிற்று. பிரமதேவர் அந்த நதிக்கு வதூஸரையென்று பேரிட்டார். அந்த நதிக்கரையில் தான் சியவனாச்சமமிருக்கிறது.

பிறகு பிருகு முனிவர் வந்து தன் புத்திரனையும், அழுதுகொண்டிருக்கும் மனைவியையுங்கண்டு, அவளால் எல்லாச் சமாசாரமும் தெரிந்துகொண்டார். அவர் உன்னை அந்த ராட்சதன் அறியானே! அவனுக்கு உன்னைத் தெரிவித்தது யாரென்று கேட்டார். புலோமை சுவாமீ! அக்கினிதான் என்னை ராட்சதனுக்குத் தெரிவித்தான்; அதனாலேதான் ராட்சதன் என்னைத் தூக்கிக் கொண்டு போனன். இந்தப் புத்திரன் இராட்சதனை யெரித்து என்னைக் காப்பாற்றி விடுவித்தானென்றாள். பிருகு அக்கினியைப் பார்த்து நீ எல்லாவற்றையும் பட்சிக்கக் கடவாயென்று சபித்தார்.

ஏழாவது அத்தியாயம்.

பௌஷ்யலோம பர்வத் தொடர்ச்சி.

சாபம் பெற்ற அக்னி கோபித்துப் பிருகு முனிவரைப் பார்த்து, முனிவரே! ஒருவன் கேட்டபோது சத்தியத்தைச் சொன்னதினால் தப்பிதமென்ன? ஒருவன் சாட்சியாக விருமபினபோது உண்மையைச் சொல்லாமல் பொய் சொன்னால் அவனுடைய முன்னேழு வம்சங்களும், பின்னேழு வம்சங்களும், அவனும் நரகத்தில் விழுவான். ஒன்றும் சொல்லாமலிருந்தாலும் அந்தப் பாபமே சம்பவிக்கும். நீர் யோசியாமலென்னைச் சபித்தீர். எனக்கும் உம்மைச் சபிக்க சக்தியுண்டு. ஆனாலும் நீர் ப்ராமணராயிருப்பதினால் சபிக்கவில்லே. என்னிடத்தில் ஹோமஞ் செய்வதனால் தேவர்களும் பிதிர்களும் திருப்தியடைகிறார்கள். தர்சம் பௌர்ணமாஸ்யடி இவற்றால் தேவர்களும் பிதிர்களும் திருப்தியடைகின்றனர். தேவர்களே பிதிர்கள்; பிதிர்களே தேவர்கள். இருவருக்கும் வித்தியாசமில்லே. அந்தத் தேவர்களும் பிதிர்களும் என்னே வாயாகக்கொண்டு ஹவிசைப் புசிக்கிறார்கள். அப்படிப்பட்ட நான் எல்லாவற்றையும் புசிப்பதெப்படி? என்று சொல்லி அக்னிதேவன் ஒளித்துகொண்டான். அதனால் அக்னிஹோத்திரம், யாகங்கள் நடவாமற்போயின. அக்னியில்லாமற் பிரஜைகள் எல்லாரும் வருத்தினர்கள். ரிஷிகளும் தேவர்களும் பிரமதேவரிடம் போய் நடந்த விஷயங்களைச் சொல்லித் தேவர்களுக்கு முகமாயுள்ள அக்னி எல்லாவற்றையும் புசிப்பவனுவதெப்படி? என்று கேட்டார்கள். பிரமதேவர் எல்லாவற்றுக்கும் காரணமான் அக்னியை யழைத்துக் கூறுகிறார்.

ஓ அக்னியே! நீ யெல்லா உலகங்களுக்கும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறாய். சகல திருத்தியங்களையும் நடத்தி மூன்று லோகங்களையும் காகிறாய் ஆகையால் நீ லோகங்களுக்கு ஈசுவரன் கிரியைகளை நடத்தி உலகங்களைக் காப்பாற்று. நீ சக்தியுள்ளவனுயிருந்தும் ஏன் அறியாதவன்போல் நடக்கிறாய்? எல்லாச் சீவர்களுக்கும் நீ தான் ஆதாரம். உன் சரீரத்தின் முழுப்பாகத்தினாலும் நீ எல்லாவற்றையும் புசிப்பதில்லே. உன் பின்புறத்திலுள்ள ஜ்வாலைகளால் எல்லாவற்றையும் புசிப்பாய், உன் ஜ்வாலேப்பட்ட எந்தப் பொருளும் பரிசுத்தமாம். நீ உன் வல்லமையாலேயே பிருகு மஹரிஷியின் வாசகத்தைச் சத்தியமாகும்படி செய் என்று சொன்னர். அக்னி அதைக் கேட்டுத் துயரம் நீங்கிப், பிரமாவின் கட்டளேப்படித் தன் தொழிலேப் புரிந்தான். சகலமான ரிஷிகளும் தேவர்களும் சந்தோஷமடைந்தனர். முன்போலச் சகல வைதிக கிரியைகளும் நடந்துவந்தன.

எட்டாவது அத்தியாயம்
மௌலோம பர்வத்தொடர்ச்சி

சூதா சொலலுகிறார், அதற்பவனார சுகன்னியை மணந்துபிர மதி மகாரிஷியைப்பெற்றார பிரமதிக்கு ருருபிறநதார் அநத ருரு மஹாரிஷியின் சரிதத்திரதைதச சொலலுகிறேன் கேளுங்கள்.

மூற்காலத்திலதவதற்கிறங்கமகிமையுள்ளஸ்தூலகேசாண்டு ஒரு ரிஷியிருநதார் அகாலத்தில மேனகையானவள் விசுவாஸு என்னுங் கநதாவினச்சேரநது காபபநதரித்தாள் ஸ்தூலகேச மஹாரிஷியின ஆச்ரமத்தின் நதிகரையில ஒரு பெண்குழநதை யைப்பெற்று அதை அங்கேயே போட்டு விட்டு மேனகை போய் விட்டாள். ஸ்தூலகேச முனிவா அநதப்பெண் குழநதையைக் கண்டு அதையெடுத்துவநது அனபோடுவளாதது வநதார். அநதப் பெண்ணுககு ஜாதகர்மாதிகளும செய்தார. அநதபபெண் குழநதை வளாநது சகலகுணங்களும நிரம்பிசெறிநத அழகுள்ளவளாயிருந த தனால, அவளுககுப்பிரமதவரைபென்று பேரிட்டார ருருமஹாரிஷி அநத ஆச்ரமதறகு வநதபோது பிரமதவரையைகணடு, அவள் மேல காதல்கொண்டார அதையறிநத பிரமதி மஹாரிஷி ஸ்தூல கேசரிடம போய்பபேசினார் ஸ்தூல கேசரும் அத்தப் பெண்ணை ருருவுககுக் கொடுப்பதாக வாககளிததார சமபதத்தில வருகிற ஹஸ்தகட்சரகத்தில விவாகமுகூரததம நிசசயிககபபட்டது விவாக தறகுச் சமீபமான காலத்தில பிரமதவரை தனதோழிகளோடி விளையாடிககொண்டிருகையில கீழேகிடநத ஒருபாமபைப் பாரா மல் மிதிததாள அது அவளைககடிததது விஷம சரீரதத்திறபரவ பிரமதவரை நிறமாறி, ஒளிமழுஙகிப பூமியில மயஙகி விழுநது பிணமாஞ்ல் அஙகேவநதிருநத ரிஷிகளும, அவருடைய பிதாவும் அநதப் பிரேதத்தைப்பாரத்துக கூவியழுதாகள ருரு மாத்திரம துக்கதத்தினால வெளியிலே போய்விட்டார மற்றவாகள அங்கெயெ யிருநதார்கள

ஒனபதாவது அதியாயம
மௌலோமபாவ்த தொடாச்சி

வெளியிற்புறப்பட்டுபோன ருரு ஒருகாட்டிலதனியாக கதறி யழுதார மிருதுவான சரீரமுளள பிரமதவரை பூமியில அசைவற் றுப படுதத்திருககிறாள் அதனால என் பிராணனும போய்விடும போலிருககிறது. முழுமதி போனற முகமும, தாமரையிதழ ஒத்த நேத்திரமுமுடைய பிரமதவரை பூமியில அசைவறறுப படுதத்திருக் கிறாள. அதனால்என்பிராணனும போய்விடுமபோலிருககிறது. முழு மதி போனறமுகமும், தாமரையிதழ ஒத்த நேத்திரமுமுடைய பிர மத்வரை என் உயிரையும கூடகொண்டுபோவாள என் சாதத்தி லிலாமற் போவதினால்என்னுடையபிரிவகளுககுப்பிண்டகளிரிலை

யில்லாமற் போகின்றது. ஆதலால் இதற்கு மேற்பட்ட துக்கம் எனக்குக் ஏது? நான் தானமும் தவமும் குருசிசுருஷையும் உடைய வனாயிருந்தால் அவள் பிழைத் தெழுந்திருக்கக் கடவள் நான் தெய்வபக்தியுள்ளவனாயிருப்பது மெய்யானால் அவள் பிழைக்கட்டும் என்று கூறிப்புலம்பினார்.

அப்போது ஒரு தேவதூதன்வந்து, ருருவைப்பார்த்து, பிராமணரே! உமக்கு நன்மையான வசனங்களைச் சொல்லும்பொருட்டு என்னைத் தேவர்கள் அனுப்பினார்கள் அதைச் சொல்லுகிறேன் கேளும்; மனிதன் ஆயுசு பரிபூரணமாய் பிழைப்பதில்லை. இத்தப்பிரமத் வரைக்கு ஆயுள் முடிந்த போயிற்ற ஆகையால் நீர் வருத்தப்பட வேண்டாம். இவள் பிழைப்பதற்கு ஓர் உபாயம் இருக்கிறது அப் படிச்செய்தால் மறுபடியும் பிரமத்வரை பிழைத்தெழுந்திருப்பாள் நீர் அவளை யடையலாமென்றான் ருரு அவனைப்பார்த்து தேவர்கள் கூறிய உபாயம் என்ன? சொல அப்படியே நான் செய்கிறேன் என்றார். தேவதூதன். முனிவரே! உமது ஆயுசில் பாதியை அந்தப் பெண்ணுக்குக் கொடுத்தால அவள் பிழைப்பாள் என்றான் ருரு நான் அப்படியே என் ஆயுசிற்பாதி அவளுக்குத் தருகிறேன் என்றார் பின் அந்தத் தேவதூதனும் பிரமத்வரையின் பிதாவான விசுவாவசுவும் எமதர்ம ராஜாவினிடம் போய்த், தர்மராஜாவே! ருரு தன் ஆயுசிற் பாதியை பிரமதவரைக்குக் கொடுக்கிறார், அதைப்பெற்றுக் கொண்டுபிரமத்வரைபிழைத் தெழுந்திருக்கும்படி அதற்கிசைகனசெய்யவேண்டுமென்று கேட்டார்கள் தர்மராஜா அப்படியேயாகட்டுமென்றார் பிரகு பிரமத்வரை ருருவின் ஆயுசிற்பாதியைப் பெற்றுக் கொண்டு தூங்கியெழுந்திருப்பவர்போல் எழுந்திருந்தாள். குறிப் பிட்ட முகூர்த்தத்தில இருவருக்கும் விவாகம்நிறைவேறிற்று இரு வரும் சந்தோஷமாகக்கூடிவாழ்ந்து வந்தார்கள்.

ருரு மஹாரிஷிகளிலாக மாறின் தான்பத்தினியாக விரும்பின பெண்ணைக் கடித்துக்கொன்ற சர்ப்பக்கூட்டங்களை நாசஞ் செய்ய தாகத் தீர்மானஞ்செய்துகொண்டார். எப்பொழுதும் கையில் ஒரு ஆயுதம்வைத்துகொண்டிருப்பார். சர்ப்பங்களைக் கண்டபோதெல் லாம அவைகளை யடித்துக்கொன்று கொண்டுவந்தார். ஒருநாள் காட்டுக்குள் போகையில் அங்கே ஒரு கிழமான தண்ணீர்ப் பாம்பு படுத்திருந்தது அதைக்கொல்லத்தீர்மானித்து தடியைஓங்கினார் அந்த நீர்ப்பாம்பு அவரைப்பார்த்து, ஓ முனிசிரேஷ்டரே! நான் உமக்கு யாதொரு கெடுதியும் செய்யவில்லையே, நீர் ஏன் என்னைக் கொல்ல வருகிறீர் என்று கேட்டது.

பத்தாவது அத்தியாயம்
பௌலோம பர்வதொடர்ச்சி

ஓ பாமபே! ஒரு சர்ப்பம் என்மனைவியைக் கடித்தது, அது முதல் சர்ப்பங்களைக் கண்டவிடத்தில் கொல்லுகிறதென்று நிச்ச

யம் பண்ணிக்கொண்டேன் ஆகையால் நான் உன்னைக் கொல்லப் போகிறேன், இப்பொழுது உன் பிராணன் போகப்போகிறது என் றார் பிராபணரே ! மனிதர்களைக் கடிக்கிற பாம்புகள் வேறு, நீர்ப் பாம்பு கடிக்கிறதில்லை ரூபத்தினல் இரண்டும் ஒரே மாதிரியாக இருப்பதனல் நீர் அவற்றைக் கொல்வது நியாயமில்லை. இரண்டு பாம்புகளுக்கும்ஸ்வபாவகுணம் வேறு தர்மம்தெரிந்தநீர் தண்ணீர்ப் பாம்புகளைக் கொல்வது சரியாகாது என்று சொல்லிற்று.

பாம்பின் வார்த்தையைக் கேட்டு ருரு ! அந்தப்பாம்பு ஒரு ரிஷியாக இருக்க வேண்டுமென்று கருதி யதைக்கொல்ல விரும்ப வில்லை. அதைப்பார்த்துப் பாம்பே ! நீ யார் ? ஏன் உனக்குப் பாம் பின் உருவம்வந்தது என்றார் பாம்பு அவரைப்பார்த்து, நான் ஸஹ ஸ்ரபாத் என்றரிஷி, ஒரு பிராமணனுடைய சாபத்தினலே பாம் புருவம்பெற்றேன் என்றது. ருரு, பாம்பே ! அந்தப் பிராமணன் உன்னை என் சபித்தார் ? இதைச் சாபம எப்பொழுது தீரும ? என்று கேட்டார்.

பதினேராவது அத்தியாயம்

பௌலோம பாவததொடர்ச்சி

நீர்ப்பாம்பு ஐயா! நான் சிறுவயதாயிருந்தபோது கஷமா என்ற பிராமணர் எனக்குச் சினேகமாயிருந்தார். அவர் தவசிரேஷ்டரும், கடுங்கோபமுள்ளவருமாயிருந்தார். அவர் அக்கினிஹோத்ரஞ்செய் துகொண்டிருந்தபோது புல்லினல் ஒரு பாம்பு பண்ணி அவரைப் பயமுறுத்தினேன். அவர் பயந்து மூர்ச்சித்து விழுந்துவிட்டார். மூர்ச்சை தெளிந்தபின கோபமூண்டவராய் நீ மயன்னைச சர்ப்பத் தைக் காட்டிப் பயமுருத்தினபடியால் நீ பாம்பாகக்கடவது என்று சபித்தார். நான் பயந்து அவரைப்பணிந்து, நான் சினேகத்தினல் பரிகாசமாக விளையாடினேன். ஆகையால நீர் பொறுத்துகொண்டு என் சாபத்தை விடுவிக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டேன். பின் அவர் மனம் இரங்கி, நான்சொல்வதாவது, பிரமதிபுத்திரரான ருருமஹாரிஷி உன்னைக் கண்டவுடன் இந்தச் சாபம் ஒழிந்தியா கும. அதுவும சீக்கிறமாகவே சம்பவிக்குமென்று கூறினர். உடனே நான் பாமபுருவமடைந்தேன். ருருமஹாரிஷியே ! இப்பொழுதே நான் என் பழைய ரூபத்தையடைகிறேன என்று கூறி, உடனே பாம்பின் வடிவத்தைவிட்டுத் தம் சுயரூபத்தை யடைந்தார். பின் ருருவைப்பார்த்து, சிறந்த மகிமையுள்ளவரே ! ஜீவிஇம்சை பண் ணுமலிருப்பது தான் எலலாத தர்மங்களிலும் முதன்மையான தர் மம. பிராமணன் சாந்தகுணமுள்ளவனென்று உலகதில பிரசித்தி யடைந்திருக்கிறான, கொல்லாமை, பொய் சொல்லாமை,பொறுமை வேதாத்தியானம இவைகள் பிராமணனுக்கு முக்கிய தர்மம. தண்

டிப்பது, கடுமையாயிருப்பது, பிரஜாபரிபாலனம் இவை இராஜ தர்மம் அந்த க்ஷத்திரிய தர்மத்தை நீர் அனுஷ்டிப்பது கூடாது முன்னே ஜனமேஜய மஹாராஜா சர்ப்பயாகஞ் செய்து சர்ப்பங்களை யெல்லாங் கொன்றார். அப்போது தவஶ்ரேஷ்டராகிய ஆஸ்தீகர் என்ற பிராமணர் இரக்கத்தினால் அந்தப்பாம்புகளைக்காப்பாற்றினார். அந்தக் கதையைக்கேளும், என்று சொல்லுகின்றார்

பன்னிரண்டாவது அத்தியாயம்

பௌலோம பர்வத்தொடர்ச்சி

ருரு, அந்த ரிஷியைப்பார்த்து ஓ முனிவரே! ஜனமேஜயர் சர்ப் பங்களை யெப்படிக் கொன்றார் அப்படிக்கொலைக் காரணமா யாது? ஆஸ்தீகர் ஏன் சர்ப்பங்களைவிடுவித்தார். அந்தக்கதை முழுவதும கேட்க விரும்புகிறேனென்றார். ரிஷி பிராமணரே! அந்தக் கதை விரி வானது அதை நீர் வேறு பிராமணரிடத்தில் கேட்டறிந்து கொள் ளும். நான் அவசரமாகப்போகவேண்டுமென்று திடீரென்று மறை ந்து போனார்

ருரு அவரைத் தேடிக்கொண்டு எங்கும் ஓடிக்களைத்துப் போ னார் அவரைக்காணமுடியவில்லை பிறகு தமது ஆசிரமத்துக்குவந்து பிதாவை வணங்கி அதையெல்லாம் சொல்லி, ஆஸ்தீகர் கதையை நடந்தபடி கேட்க விருமபுகிறேன். நீர் அதை ஆதியோடந்தமாகச் சொல்லவேண்டுமென்று கேட்க அவருடைய பிதா அந்தக் கதை முழுவதையும அவருக்குச் சொன்னார்.

பதிமூன்றாவது அத்தியாயம்

ஆஸ்தீக பர்வம்

சௌனகர் ஸூதரைப்பார்த்து, ஜனமேஜயர்என்னத்திற்காகச் சர்ப்பயாகஞ் செய்தார்? ஆஸ்தீகர் சர்ப்பங்களை யேன்விடுவித்தார் ஸர்ப்பஸத்ர யாகம் செய்த அந்த ராஜா யாருடையபுத்திரர்? பிராவஜ்ஞத்தமராகிய ஆஸ்தீகர் எவருடைய குமாரர்? இவைகளை யெல்லாம்எனக்குச்சொல்லுமென்று கேட்கச்ஞ்ஞமுனிவர்சொல்லு கிறார். முனிவரே! ஆஸ்தீகர் சரித்திரம்பெரிது பெரியோர்கள் சொன்னபடி நான் சொல்லுகிறேன், கேளுங்களென்று சொல்லு கிறார்.

இந்த இதிஹாசம்பூர்வகற்பங்களிலும்உள்ளதென்றுபிராமணர் கள் சொல்லுகிறார்கள் முன்னே நைமிசாரண்ய வாசிகளுக்கு என் பிதாவாகிய ரோமஹர்ஷணர் சொன்னார். நானும் என பிதாவிடம் கேட்டபடி சொல்லுகிறேன். சகல பாபங்களையும் போக்குகிற ஆஸ் தீக சரித்திரத்தைக் கேளுங்கள். ஆஸ்தீகருக்குப் பிதா ஜரத்காரு என்பவர். அவர் பிரமதேவரைப் போனறவர் அவர் பிரமசாரியாக வே யிருந்தார். ஓகாரத்தை யொழித்துக் கடுந்தவம் புரிந்தார். ரோமதத்துக்கு ஒரு இரவு தங்குகிறவர். சூரியன் அஸ்தமித்த

இடத்தில் தங்கிப்பூமி முழுவதும் திரிந்தார். எல்லாப் புண்ணிய தீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்தார். அவர் ஒருவராலுஞ் செய்யமுடியாதக் காரியங்களைச் செய்து ஆகாரமில்லாமல் சுற்றிக் கொண்டிருக்கையில் ஒருபள்ளத்தில் தலைகீழாகத்தொங்கிக்கொண்டிருந்த தமது பிதிர்களைக் கண்டார். அவர்களைப்பார்த்து நீங்கள் யார்? எலிகளகடித்த விலாமிச்சம்வேரைப் பற்றிகொண்டு தலைகீழாகத்தொங்குகிறீர்களே! ஏன் எனறு கேட்டார்.

அந்த ரிஷிகள் பிராமணா! நாங்கள் சக்தி குறைந்து போனமையால் பூமியின் கீழேபோய்க்கொண்டிருக்கிறோம். எங்களுக்கு ஜரத்காரு என்று ஒருவன் தான் ஸந்ததியாக இருக்கிறான் அந்த மூடன் சந்ததி விருத்தியாவதற்காக விவாகம் செய்துக்கொள்ள விலலை தவத்திலேயே நிறைதையுள்ளவனாக இருக்கிறான் அவன் எங்களுக்கு நாதனாக இருந்தும் சந்ததி இல்லாமையால், நாங்கள் இந்தப் பள்ளத்தில தலைகீழாகத் தொங்கநேர்ந்தது. சந்ததியில்லாதவர்கள் புண்ணியம் பண்ணின வர்களாயிருந்தாலும் சொர்க்கத்தை யடைகிறதில்லை. நீ யார்? எங்களைப்பற்றி விருத்தப்படுவானேன்? என்று கேட்க ஜரத்காரு சொலலுகிறார்.

நான் தான் ஜரத்காரு; நீங்கள் பிதாமகர்களும் பிதிர்களும்; இப்போது நான் எனன செய்யவெண்டும்? சொல்லுங்கள் என்றார். பிதிர்கள் புத்திரனே! நீ சந்ததியை விரும்பியானாலும எங்களுக்காகவானாலும் தாமத்தைக் கருதியானாலும விவாகம் புரிந்துகொள்ள முயறசிசெய். சந்ததியுள்ளவர்கள் அடையதக்க கற்கதியைப்பூர்வ புண்ணிய பலனாலும் அடையமுடியாது. இப்பொழுது செய்யும் தவத்தினாலும் முடியாது புத்திரனே! நீ எங்களுக்கு நன்மைசெய்ய விரும்பினால விவாகஞ் செய்துகொள்ள முயறசி செய், இதுதான் எங்களுக்கு வேண்டியது என்று சொன்னார்கள்.

ஜரத்காரு, எனக்கு மனைவியும், ஜீவனத்துக்காகப் பொருளும் வேண்டியதில்லை உங்களுடைய நன்மைக்காக விவாகஞ் செய்து கொள்வேன் என்பெயருள்ள பெண்ணிருக்க வேணடும அவளுடைய பந்துக்கள் தங்களாகவே கொண்டுவந்து கொடுக்கவேண்டும் அப்போது நான் பிசைவாங்குவதுபோல அவளைவாங்கிக்கொண்டு விதிப்படி மணம புரிவேன். இப்படிப் பெண்கிடைக்குமானால விவாகஞ் செய்வேன் இல்லாவிட்டால முடியாது. அப்படிகிடைத்த பெண்ணினிடமாகச் சந்ததியை விருத்திசெய்வேன். என்பிதிர்கள் சந்தோஷமடையக் கடவர்கள் எனறு சொன்னார்.

பதினாலாவது அத்தியாயம.

ஆஸ்திகபர்வத் தொடர்ச்சி.

அதன் பின் அந்த ஜரத்காரு,பெண்ணுக்காகப் பூமிமுழுவதும அலைந்தார். தமது நியமத்தைப்போல மனவிகிடைக்கவில்லை. ஒரு

நாள் அவர் வனத்துக்குப்போய்,பிக்ஷைகேட்பதுபோலக் கன்னிகை யைக்கொடு என்று மெதுவாய் மூன்றுமுறை கேட்டார். வாசுகி தன்சகோதரியைச் சித்தமாகவைத்துக்கொண்டு அழைத்தான் ஜரத் காரு அவனிடம்பார்த்து நாகராஜாவே உன் சகோதரியின பெய ரென்ன ? என்றுகேட்டார். அவள் ஜரத்காரு என்று பேருள்ளவள் அவளை உமக்கு மனைவியாகத் தருகிறேன் வாங்கிக் கொள்ளும் ; இவளை உமக்குக் கொடுப்பதற்காகவே வைத்திருக்கிறேன் என்று சொன்னன். அவரும் அப்படியே அவளை மணம்புரிந்துகொண்டார்

பதினேந்தாவது அத்தியாயம்
ஆஸ்தீக பர்வத்தொடர்ச்சி.

பிரமஞானிகளிற் சிறந்தவரே ! கத்ரு என்பவள் தன்புத்திரர்க ளாகிய சர்ப்பங்களை ஜனமேஜயருடைய சர்ப்பயாகத்தில்மடியும்படி சபித்திருந்தாள் அந்தச் சாபதினின்றும் தப்பித்துக் கொள்ளுமே படியாக வாசுகி தன் சகோதரியை ஜரத்காரு மஹாரிஷிக்குக் கொ டுத்தான். அவரிருவருக்கும ஆஸ்தீகர் பிறந்தார். ஆஸ்தீகர் கல்ல சித்தமுள்ளவர், தவசு சிரேஷ்டர்,எல்லாரிடத்திலும் சமமான புத்தி யுள்ளவர் மஹாத்மா, வேத சாஸ்திரங்களில் கரையைக்கண்ட வர், மாதாப்பிதாக்களின பாபத்தைநீக்குகிறவர். இவர் பிறந்தபின், ஜனமேஜயர் சர்ப்பயாகஞ் செய்தார். அந்த யாகம் சர்ப்பங்களைக் கொலுவிறதற்காகச் செய்யப்பட்டது ஆஸ்தீகர் தமதுசகோதரர் களும அந்தயாகத்தில மடியாதபடி காபபாற்றினர்.பிதிர்களைக்கரை யேறறினர். தேவர், பிதிர், ரிஷிகள்ஆகியமூவர் கடனையும்தீர்த்தார்.

ஜரத்காரு மஹாரிஷியும் பிதிர்க்கடனைத் தீர்த்துப் பிதிர்க்க ளோடுதாமும் சொர்க்கத்துக்குப்போனர். இந்த ஆஸ்தீகசரித்திரத் தை நடந்தபடி உங்களுக்குச் சொன்னேன். பிருகுவம்சோத்தமரே! இன்னம் நான் எதைச்சொல்லவேண்டும் ? என்று கெட்டார்.

பதினறுவது அத்தியாயம்
ஆஸ்தீக பர்வத் தொடர்ச்சி.

சௌனகர், ஸூதபுத்திரரே! ஞானவானுகிய ஆஸ்தீகருடைய சரித்திரத்தை விரிவாகச் சொலலவேண்டும் அதைக்கேட்கஎங்களுக் குவிருப்பமிருக்கிறது. நீர் இன்பமாகச் சொல்லுகிறீர். உமதுபிதா வைப்போலநீரும் சொலலுகிறீர் இந்தஆஸ்தீகர்சரித்திரத்தை யுமது பிதாசொன்னதுபோலவே நீரும் எங்களுக்குச் சொல்ல வே ண்டுமென்று கேட்கச் சூதர் சொல்லுகிறார்.

சௌனகரே ! என்பிதா சொன்னபடி ஆஸ்தீகர் சரித்திரத் தையுங்களுக்கு சொல்லுகிறேன். குற்றமற்ற பிராமணரே ! முன்பு

தேவயுகத்தில் தட்சப்பிரஜாபதியின் புத்திரிகளான கத்ரு, வினதை என்பவர்கள் மிகுந்த அழகுள்ளவர்களாய் பிரிந்தார்கள். அந்த இரண்டுபெண்களையும் கசியபர் மணம் புரிந்துக்கொண்டார் கசிய பருக்கு அவ்விருவரிடத்திலும் ஒருகைக்கோடிமுண்டானபடியால் அவர்களை நோக்கி, நீங்கள் உங்களுக்குப் பிரியமான வரத்தைக் கேட்டால் தருகிறேனென்று சொன்னார் கத்ரு ஒரேவடிவமுள்ள ஆயிரம் சர்ப்பங்களைப்புத்திரர்களாகப் பெறும்படி வரங்கேட்டாள் வினதை கத்ரு வின் புத்திரர்களுக்கு மேலான பலமுள்ள இரண்டு புத்திரர்கள் வேண்டுமென்றும், அவ்விருவரும் ஒளியினும், உருவத்தினும், பராக்கிரமத்தினும் கத்ருவின் புத்திரர்களுக்குமேலான வர்களாக இருக்கவேண்டுமென்றும் வரங்கேட்டாள். கசியபர் அவர்கள் கேட்டபடியே வரமளித்தார் அப்படியே யிருவரும் கர்ப்பந்தரித்தார்கள். வெகு காலத்துக்குப்பின். கத்ரு ஆயிரமுட்டைகளீன்றாள். வினதை இரண்டு முட்டைகளைப்பெற்றாள் அவ்விருவருடைய தோழிக்காரிகளும் அந்த முட்டைகளைப் பாதுகாத்து வந்தார்கள். ஐந்நூறு வருஷங்களானபின் கத்ருவின் ஆயிரம் புத்திரர்களும் வெளிப்பட்டார்கள வினதைக்குமாத்திரம் இன்னமும் புத்திரர்கள் தோன்றவில்லை. அதனால வெட்கம் அடைந்த வினதை ஒருமுட்டையை உடைத்தாள். அதனுள் ஒரு புத்திரனிருந்தான் அவனுக்கு சரீரத்தின் மேற்பாகம் முழுமையும் முடியிருந்தது கீழ்பாகம் தெரியாமலிருந்தது. அதனால் அந்த குமாரன் கோபம் அடைந்து தாயைநோக்கி, அம்மா! நீ அவசரப்பட்டு இப்படிச்செய்ததனால் நீ பொறுமைகொண்ட உன்சகோதரிக்கு ஐந்நூறு வருஷம் அடிமையாய் யிருப்பாயென்று சபித்தான். பின் தாயைப்பார்த்துத், தாயே! இன்னொருமுட்டையையும் உடைத்துக்கெடுத்துவிடாதே. அந்தப் புத்திரன் அடிமைத்தனத்திலிருந்து உன்னை விடுவிப்பான் என்று கூறிவிட்டு ஆகாயத்தில் பறந்துபோனான். அப்போது உதயமான சூரியன் அவனை தனக்குச் சாரதியாகக் கொண்டான். பிறகு சரியான காலத்தில் கருடனும் உதித்தான் உதித்தவுடன் ஆகாரம் தேடுவதற்காக ஆகாயத்திற் பறந்துபோனான்.

பதினேழாவது அத்தியாயம்

ஆஸ்திகபர்வத் தொடர்ச்சி

ஸுதர் ரிஷிகளைப்பார்த்தது, தபோதனர்களே அப்போது அவ்விரண்டு சகோதரிகளும், அமிர்தத்துடன் பிறந்த பிறகு, வேகம அழகு பலமுதலியவற்றில் மேன்மையுள்ள உச்சைச்ரவம் என்னும தேவலோகக் குதிரையைப் பார்த்தார்கள் என்றுசொன்னார் சௌனகர் ஸுதரைப்பார்த்து ஒளியும் வல்லமையுமுள்ள அந்த உச்சைச்ரவம் உண்டாவதற்குக் காரணமான அமிர்தம் கடைந்த

கதையைச்சொல்லவேண்டும். அமிர்தம் கடைந்தபின் என்ன நடந்தது என்று கேட்க, ஸூதர் சொல்லுகிறார்.

எல்லா ஔஷதிகளும் ஒன்றுசேர்க்கமுடியுள்ளது போன்றவடிவமுள்ள சொர்ணமயமான மகாமேரு பர்வதமானது தங்கத்தாலான பல கொடுமுடிகளையுடைய மற்றொரு சூரியனைப்போல விளங்கிக்கொண்டிருக்கும், அநேக வர்ணங்களினால் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அளவிடப்படாத உயரமுள்ளது தேவகந்தர்வர்களாலும் புகமுப்படுவது பாபிகளால் அணுகமுடியாதது. பயங்கரமான நாகங்கள் வசிக்கப்பெற்றது, இரவில் மின்னுகிறதொடிகள் ஔஷதிகொடிகள் கொண்டிருக்கும் சொர்க்கத்தையும் மறைத்துக்கொண்டு உன்னதமாய் வளர்ந்தோங்கி நிற்பது மனத்தாலும் கணக்கற்கரியது ஆறுகளும் மரங்களும் நிரம்பியுள்ளது. அதில் பலவிதமான பறவைகூட்டங்கள் சப்தித்துக்கொண்டிருக்கும் பெருமையுள்ளது. பலவகைமணிகளும் நிரைந்திருப்பது. அழகினால் ஒப்பற்றது விளங்குவது. அந்த மேருவினது கொடுமுடியில் தேவர்கள் எல்லாரும் வந்து கூடியுட்கார்ந்தார்கள். அமிர்தங்கடைவதைப்பற்றி யோசனை செய்தார்கள். அப்பொழுது நாராயணமூர்த்தி பிரமாவைப்பார்த்து, தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலிலுள்ளகடையப்பட்டும் எல்லா ஔஷதிகளையும் இரத்தினங்களையும் அந்தக்கடலில் போட்டுக்கடைந்தால அமிர்தம் முண்டாகும் என்று சொன்னார்.

பதினெட்டாவது அத்தியாயம்.

ஆஸ்தீக பர்வதொடர்ச்சி

தேவர்கள் எல்லாரும் அப்படியே அமிர்தம் கடையத்தொடங்கினார்கள் அதற்கு மத்தாக மந்தர மலையை எடுக்கப்போனார்கள். அது மேகங்களின் சிகரங்கள் போன்ற கொடுமுடிகளினால் அலங்காரமாக விளங்கிக்கொண்டிருப்பது. அதில் கின்னரர்கள் தேவர்கள் அப்ஸரஸ்கள் முதலானவர்கள் எப்போதும் வசித்துக்கொண்டிருப்பார்கள். பதினோராயிரம் யோசனை மேலேயுயர்ந்து, பதினோராயிரம் யோசனை பூமியின் கீழேபடிந்திருப்பது. அப்படிப்பட்ட மந்தர மலையை எடுக்கமுடியாமல பிரம விஷ்ணுக்களிடஞ் சென்றார்கள். அவரிருவரையும் நோக்கி இந்தமலையை எப்படியெடுக்கிறது. அதற்கு உபாயம் யாதென்று கேட்டார்கள் செந்தாமரைபோன்றகண்களையுடைய திருமாலானவர் மந்தரமலையைத் தூக்கிவரும்படி ஆதிசேஷனுக்கு உத்தரவுகொடுத்தார். அந்த ஆதிசேஷன் அந்தமலையை வனங்களோடும் வனவாசிகளோடும் தூக்கிக்கொண்டு தேவர்கள் சூழச்சமுத்திரத்தண்டை வந்தான். தேவர்கள்சமுத்திரத்தைப்பார்த்து அமிர்தத்துக்காக நாங்கள் உன்னைக் கடையப்போறோமென்றார்கள். அந்த அமிர்தத்தில் எனக்கும் ஒரு பாகம் கொடுப்பதாலை

அந்த வருத்தத்தை நான் சகித்திருப்பேனென்று சொல்லிச் சமுத்திரங்கூறி ஒத்துக்கொண்டது. பின் சமுத்திரத்திலுள்ள பெரிய ஆமையைப்பார்த்து நீ இந்த மலைக்கு ஆதாரமாயிருக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதுவும் கல்லதென்று ஒப்புக்கொண்டது. அந்த ஆமையின் முதுகின் மேலே மந்தர மலையை வைத்தார்கள் வாசுகியைக் கயிறாகக்கட்டித் தேவாசுரர்கள் அமிர்தம் கடையத் தொடங்கினார்கள் வாசுகியின் முகமிருந்த பக்கத்தை அசுரர்களும், வாலபுறத்தைத் தேவர்களும் பிடித்துக்கொண்டு கடைந்தார்கள். அசுரர்கள் வாசுகித்தலையை அடிக்கடி வேகமாய்த் தூக்கிப் போட்ட தினால் அது கொடுவையான பெருமூச்சுவிட்டு விஷத்தைக் கக்கிற்று அந்த விஷம் சமுத்திரத்திற்கலந்தபோன படியால் தேவாசுரர்கள் கடைந்தபோது அதிலிருந்து ஆலகால விஷம் தோன்றிறது அதனுடைய உக்கிரத்தைத் தாங்க முடியாமல் தேவாசுரர்கள் அவ்விடம் விட்டோடிப் போஞர்கள். பிரம்மாவினிடம் போய் அமிர்தங்கடையுமபோது பிரளயகாலாக்கினிபோல ஒரு விஷமுண்டாய் உலகதத்தைத் தகிக்கிறது. அதை விலக்கிக் காக்க வண்டுமென்றார்கள்.

பிரம்மதேவர், லோகேசுவரரும ஹரனும், திரிலோகத்திரங்களுள் ளவரும், சூ பாணியும, தேவதேவரும, பார்வதி பதியுமான ருத்திர மூர்த்தியைத நியானிதகச சிவபெருமான் பிரததியட்சமானார். பிரம்மதேவா அவரிடம விஷததின் தன்மையைச் சொலல ருத்திர மூர்தது உலகத்துகது உபகாரமாக அந்த விஷததை யெடத்துவிழுங்கிவிட்டார். அது அவரது கழுத்தில அழகாக நின்றுவிட்டது அதனால அவருகது நீலகண்டரெனறு பேராயிறறு. தேவர்கள்மகிழ்ந்து மறுபடியும் கடலைக் கடைநதார்கள். அசுரர்கள முனபோலவே வாசுகி முகததை வேகமாய் போட்டார்கள. அவன்முகத்திலிருந்து புகையோடும் ஜுவாலைகளோடும மூச்சுக்கள் உண்டாயின அந்த மூச்சுக்காற்றினால் புகைதிரண்டு மின்னலுடன் கூடின மேகமாய் மழைபொழிநது மலையின் சிகரதத்திலிருநது புஷ்பவருஷம சொரிநதது. சமுத்திரதத்திலிருநது மேககாஜனபோல ஒரு சதத மூண்டாயிறறு. சமுதத்திரத்திலுளள பிராணிகளெல்லாம மலையின் சுழறசியால நசுங்கியிறந்தன. மலையிலிருந்தவிருட்சங்கள் பறவைக் கூட்டங்களோடு விழுந்தன மரகதகள உராயவதனால் நெருப்பு எரிந்து கொண்டு யானை சிஙகம் முதலிய பிராணிகளைத்தகிதத்து இந்திரன் மழையினால் அந்தநெருப்பை அணைத்தான். ஆகேகமரங்கள் கொடிகளிலிருநது இரசமபெருகிச் சமுத்திரத்தில் விழுந்தது. தங்கம் உருகி ரீரகபபாய்நதது. அதனால் அந்தச் சமுத்திரம் பாலாயிற்று அதிலிருந்து வெணணெய் பிறந்தது. பிறகு தேவர்கள் பிரம்மாவைப்பாரதது பகவானே! நெடுநாளாகக்கடைந்தும் அமிர்தம் உண்டாகவில்லை. நாங்கள் களைத்துப் பொனனோ மென்றார்கள்.

பிரம்மதேவர் நாராயணனைப்பார்த்து, பகவானே! நீரே இதற்கு

ஆதாரம். இந்தத் தேவர்களுக்குப் பலத்தைக் கொடுத்தருளும் என் றூர். நாராயணன், அப்படியே எல்லாருக்கும் பலத்தைக் கொடுக்கி றேன் என்று சொல்லித் தேவாசுரர்களோ நோக்கி மறுபடியுங் கடை யுங்களென்றூர் பலமுள்ளவாகளாய் மறுபடியுங் கடலைக் கடைந்தா ர்கள் அப்பொழுது கரியவடிவமுள்ள ஜேஷ்டாதேவியுண்டானாள். அதன்பின் நூறுயிரங் கிரணங்களோடு பிரகாசிக்கின்ற நிர்மலமான சந்திரன் உறபத்தியானான் பிறகு இலட்சுமிதேவி. ஸுதாதேவி, உச்சைச்சரவமென்னும் குதிரை யிவர்களுண்டானார்கள் பரந்த கிர ணங்களுள்ள கௌஸ்துபமணி பிறந்தது பாரிஜாதவிருட்சம், காம தேனு, ஐராவதம், கற்பகவிருட்சம், இவைகளும் உண்டாயின அப்ஸரஸுகள் தோன்றினார்கள பின் தன்வந்திரி அமிர்தமுள்ள வெள்ளைக்குடத்தை யெடுத்துக கொண்டு தோன்றினார் அதைக கண்ட அசுரர்கள் இது எங்களுக்குரியது என்று கூச்சலிட்டார கள். அப்போது விஷ்ணுவானவர் தமது மாயையினாலே ஒரு பெண் ணுருவ மெடுத்துக் கொண்டார் அசுரர்கள் அந்தப் பெண்ணைக கண்டு மதிமயங்கி அமிர்தத்தை அவளிடம கொடுத்துவிட்டார்கள் அந்தப்பெண ணாகளையுந் தேவர்களையும் வரிசையாக உட்கார வைக்குமபோதே தேவாகளுக்கு அமிர்தமளித்தாள அது கண்டு அசுராகள் கூகுரலிட்டார்கள.

பதினைநபதாவது அத்தியாயம்
ஆஸ்தீகபர்வத் தொடக்கம்

பிறகு அசுரர்களெல்லாருங்கூடி ஆயுதபாணிகளாயதேவாகளோடு யுத்தஞ்செய்ய ஆரம்பித்தார்கள் நாராயணன் நரரோடு கூடிக கொ ண்டு அசுரர்களிடமிருந்து அமிர்தத்தைக் கவர்ந்து தேவாகளிடம் கொடுத்தார தேவர்கள் அமிர்தபானஞ செயதார்கள் சுரன் விலலி யெடுத்துக்கொண்டு அசுராகளோத தரதந் யடிதார தேவாகள் அமிர்த முண்ணும்போது இராகு வெனனும ஓர் அசுரன்தேவரைப் போல வேஷமபோட்டுகொணடு அமிர்தபானம பண்ணினான சந் திர சூரியர்கள் அதை வெளிப்படுத்திவிட்டார்கள் திருமால சகரச் சக்கரத்தையெறி அம்ருதம அவனுடைய கெஞ்சிலிறங்கும்போ தே அவன தலையை அறுத்தார் அந்தத்தலை ஆகாயத்திற் கிளமபிப்போரிரைச்ச லிட்டது உடல பூமியில விழுந்து துடிதத்தது இதனால பூமியில் பதின்மூவாயிரம் யோசனை தூரம நடுக்கமுண்டாயிறறு இராகுவின தலை சந்திர சூரியர்களுடன பகை கொணடு இனனமும அவர்களை விழுங்கிவருகின்றது பின் தேவாசுராகளுக்குள் பெருமபோர் விளை ந்தது. திருமாலுடைய சகரத்தினாலும, தேவாகளுடைய பலவகை ஆயுதங்களாலும் அசுரர்களில் எண்ணிறந்தோர்மடிந்தார்கள் பயங் கரமான சண்டை நடக்கையில நாராயணர்கள் போர்க்களத்துக குவந்தார்கள். நன் பாணங்களினாலும, நாராயணன் சகராயுதத் தினாலும் அசுரர்களைக் கொன்று குவித்தார்கள். அசுரர்கள்மலைகளை

யும் மரங்களையும் வேரோடு பிடுங்கி யெறிந்து போர் செய்தார்கள். நாராயணர்களுடைய சகாயத்தினாலே தேவர்கள் ஜயம்பெற்றார்கள் அசுரர்கள் பயந்து சமுத்திர ஜலத்துக்குள்ளும், பூமிக்குள்ளும்பதுங்கினார்கள். தேவர்கள் மந்தரகிரியைப் புகழ்ந்து அதை முன்னிருந்த இடத்தில் கொண்டுபோய் வைத்தார்கள். பிறகு தேவர்கள் அமிர்தத்துடன் தேவலோகம் போய்ச் சேர்ந்தார்கள். தேவேந்திரன் அந்தமிர்தகுடத்தை நாகனுடைய காவலில் வைத்தான்.

இருபதாவது அத்தியாயம்.
ஆஸ்தீகபர்வத் தொடர்ச்சி.

ஸூதமுனிவர், ருஷிஸ்வரர்களே! அமிர்தமான சரித்திரத்தை உள்ளபடி சொன்னேன். அதிலுண்டான அந்த உச்சைச்சரவம் என்னும் குதிரையைத் தான் கத்ரு வினதை யிருவரும் கண்டார்கள். கத்ரு, வினதையை நோக்கி இந்தக் குதிரை என்ன நிறம், சொல் என்று கேட்டாள். வினதை, சகோதரியே உச்சைச்சரவம் வெண்மை நிறமுள்ளதுதான் உனக்கு என்ன நிறமாய்க் காணப்படுகிறது சொல் என்றாள். கத்ரு, அந்தக் குதிரையின் வால் கறுப்பு என்றுதோன்றுகிறது எனறாள் பின் கத்ரு, இந்த விவாதத்தில் தோற்றவர்கள் ஜயித்தவர்களுக்கு அடிமையாகிறது என்று பந்தயம் போடுவோமென்றாள் அப்படியே நிச்சயித்துக்கொண்டு, நாளையதினம் குதிரையைப் பார்க்கிறதென்று கூறி யிருவரும் வீடுபோய்ச் சேர்ந்தனர். வீடுபோனபின் கத்ரு தன் ஆயிரம பிள்ளைகளையும் பார்த்து நான் தோற்று அடிமையாகாதபடி நீங்கள் உச்சைச்சரவத்தின் வால்மயிர்களாகி யிருங்கள் என்று சொன்னாள். சர்ப்பங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. கத்ரு கோபித்து அவர்களைப் பார்த்து நீங்கள் ஜனமேஜயன் செய்யப்போகிற சர்ப்பயாகத்தில் மடியக் கடவீர்களென்று சபித்தாள். இதை யறிந்த பிரம்மதேவர் இந்தச சர்ப்பங்கள் கொடிய விஷமுள்ளவைகள். பிறரைக்கடித்துக் கொல்வதற்காகவே இவைகள் சஞ்சரிக்கின்றன. ஆகையால கத்ரு சேய்தது சரியானதுதான். பிறரைக் கெடுக்கும் தொழிலுள்ள எல்லாவறறுக்கும் தெய்வத்தினாலேயே மரணதண்டனை விதிக்கப்படுகிறது என்று கத்ரு செய்ததை யெலலாம் சரியென்று ஒத்துக்கொண்டார். பின் கசியபரைக் கூப்பிட்டு, மாசற்றவனே! நீ இந்தப் பெரிய சர்ப்பங்களே யுண்டாக்கினாய் இவை கொடிய விஷமுள்ளன. எல்லாவறறையுங் கடித்துக் கொல்லும் சுபாவமுள்ளன. அவைகளைக் கத்ரு சபித்துவிட்டாள். இதற்காக நீ அவளைக் கோபித்துக் கொள்ளாதே. இது பூர்வத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது என்றுசொல்லி, அந்தக்கசியபருக்கு விஷத்தைத் தீர்க்கும் மந்திரோபதேசமுஞ் செய்து சமாதானஞ் செய்தார். கத்ருவின் சாபத்துக்குப் பயந்த கார்கோடகனுடைய நாகராஜன் அவளைப்பார்த்து நான் உன் இஷ்டப்படியே உச்சைச்சரவத்தின் வாலில் மயிராகின்று கறுப்பு நிறமுள்ளதாகத் தோற்று விக்

கிறேன். நீ சந்தோஷமாயிரு என்று சொன்னான் அவளும் மன மகிழ்ந்திருந்தாள்.

இருபத்தோராவது அத்தியாயம்
ஆஸ்தீகபர்வத் தொடர்ச்சி

ரிஷீஸ்வரர்களே! சூரியன் உதயமானபின், கத்ரு விநதை இரு வரும் அந்தக் குதிரையினுடைய நிறமின்னதென்று சண்டறிந்து ஒருவரை யொருவர் அடிமையாக்கிக் கொள்ளவேண்டு மென்கிற எண்ணத்தினால் காடுகள் நிறைந்து அழகாயிருக்கிற சமுத்திரக்கரை யின் அருகில்போய்ச் சேர்ந்தார்கள் ஜலாதாரமாகிய அந்தப்பெரியச் சமுத்திரத்தில், கொடிய குணமுள்ள பயங்கரமான எண் ணற்ற திமிங்கலங்கள் உலாவிக்கொண்டிருந்தன. சிறு மீன்கள் ஆமைகள் முதலைகள் நிறைந்திருந்தன. அது வருணனுக்கு வாசஸ்தலமானது பலவகை இரத்தினங்களுக்கு உற்பத்தி ஸ்தானமாயுள்ளது சர்ப் பங்களும் அசுரர்களும் வசிப்பதற் கிடமானது தேவர்கள் உண் ணும் அமிர்தம் உண்டாவதற்கு இடமாயுள்ளது, பாவங்களைபொழி ப்பது. பார்க்கப் பயங்கரமாயுள்ளது காற்றினால் ஊஞ்சல்போல ஆடிகொண்டிருப்பது அலைகள் எழுந்து துள்ளி விழுவதனால் சீர்த்தனம் பண்ணுவது போன்றுள்ளது. நதிகளுக்குப் பதியாயுள் ளது. மிகுந்த நீரினால் நன்மையைச் செய்வது. சந்திரனுடைய உத யத்தினாலும் அஸ்தமனத்தினாலும் அலைகள் மாறுபலியலுள்ளது. பாஞ்சஜன்ய உறபத்திக்கு ஆதாரமானது வராகரூபியான திருமா லினாலே கலக்கப்பட்ட ஜலத்தையுடையது. அதிதியில் அவதரித்த திருமாலுக்குச் சயனஸ்தலமாயுள்ளது தேவேந்திரனுடைய வஜ்ரா யுதத்துக்குப் பயந்த மைநாகபர்வதத்துக்குப் புகலிடமானது. வட வாமுகாக்கினியைச் சமனம்பண்ணுவது. அளவிடற்கரிய விசாலம பொருந்தியது அனேகமான நதிகள் வந்து சேருவதினால் நீர் நிரம் பியிருப்பது. இத்தன்மை யுடையதாய் ஆகாசத்தைப் போல விசா லமாயுள்ள மஹாசமுத்திரத்தைக் கண்டார்கள்.

இருபத்திரண்டாவது அத்தியாயம்.
ஆஸ்தீகபர்வத் தொடர்ச்சி.

இப்படிக் கலக்கமுடியாததாய்ப், பேரிரைச்சலுடையதாய், திமிங்கில முதலை முதலிய கொடிய ஜந்துக்களுக்கும், அசுரர் சர்ப் பங்களுக்கு மிருட்பிடமாய், வருணனுக்கு வீடாய் அண்டாத ஆழ முடையதாய், இரத்தினங்களுக்குப் பிறப்பிடமாய், நதிகளுக்கு, காயகனாய், குறையாத நீரையுடையதாய், அளவிடற்கு அரியதாய நிதிகளுக்குப் புகலிடமாய் பயங்கரமானதாயுள்ள அந்தச் சமுத்திர த்தை பிரண்டு சகோதரிகளும் தாண்டி அக்கரைபோய்ச் சேர்ந்தார் கள்.

இதற்குள்ளாகச் சர்ப்பங்கள் தமது அன்னையின் கருத்து நிறை வேறுமற்போனால் தம்மை சர்ப்பயாகத்தில் எரித்து விடுவாள். அவ ளுடைய மனம் மகிழ்ந்தால் தம்மை யிந்தக்கொடிய சாபத்திலிருந்து

தப்புவிப்பாள் ஆகையால், நாம் அவள்சொன்னபடி செய்யவேண்டும் என்று கருதி, அந்த வெண்ணிறமான குதிரையின் வாலில் கருமை நிறத்தைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தார்கள். கத்ரு விநதை யிருவரும் தங்களுடைய பந்தயத்தை உறுதிப் படுத்திகொண் டார்கள்

இருபத்துமூன்றுவது அதிகாயம்
ஆஸ்திகபர்வத் தொடர்ச்சி.

பிறகு இருவரும் குதிரை இருக்குமிடம் போய்ச் சேர்ந்தார்கள் சந்திரனைப் போல வெண்மையாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கிற அந்தக் குதிரையைப் பார்த்தார்கள் அதன் வால் கறுத்திருக்கிற தை விநதை கண்டு மனவருத்தமுற்றாள் கத்ரு விநதையைத் தனக் கடிமையாக்கிக்கொண்டாள். விநதையும் துக்கத்தோடு அடிமையா யினாள்

இப்படி விநதை அடிமையாயிருக்கையில் ஒளியுள்ள கருடனை ர் முட்டையினின்றும் வெளிப்பட்டார் மஹாபலமுள்ள அந்தக் கருடன் தனதுஒளியினாலே திசைகளையெல்லாம் பிரகாசிக்கச் செய் தார் நினைத்தபடி உருவத்தை யெடுத்துகொண்டு நினைத்த விடத் துகுப் போகத்தக்க சக்தியுள்ள அந்தக கருடனுவர யுகமுடிவு காலத்தில் தோன்றும அக்கினியைப்போல விளங்கினார் பயங்கர மான சரீரத்துடன உக்கிரமாகச் சப்தத்துக்கொண்டுவடவாமுகாக் கினியைப்போல ஆகாசத்தில் பறந்துபோனார் அதைக்கண்டு பயந்த தேவர்கள் அகினி தெவனிடம்போய், அகினிபகவானே! எங்களை யெரித்துவிடாதேயும்; நீர் இப்படி வியாபிக்கிற தற்குக் காரண மென்ன? என்று கேட்டார்கள். அக்கினி பகவான் தேவர்களே! அந்தச் சொரூபம என்னுடைய தலல, மஹா பலமுள்ள கருட னுடைய சரீரம் எனக்குச் சமானமானவன். தோன்றும் காலத்தி லேயே மிகுந்த ஒளியோடு தோன்றினன். கலியபரது குமாரன், விநதைக்கு மகிழ்ச்சி தரும் பாலகன். சர்ப்பங்களுக்குப் பகைவன். அசுரர்களுக்கும் இராட்சதர்களுக்கும் சத்துரு தேவர்களுக்கு நண்மை செய்கிறவன் நீங்கள் இவனைக்கண்டு பயப்படவேண டுவதில்லை. காமெல்லாரும் அவனைப்பார்ப்போம வாருங்கள் என்று கூறினன். அந்த அக்கினிபகவானைடி தேவர்களும் போய்த் தூரத் தில் நின்றுகொண்டு கருடனைத் துதிக்கின்றார்கள்.

நீ முனீசுவரன்; சிறந்த பொருமையுள்ளவன்; பட்சிராஜனுகிய தேவன்; பகைவர்களைத் தனிக்கிறவன்; உன்னதபதவியி லிருப்பவன் நீயே சூரியன, நீயே இருதிரன்; நீயே ஹயக்கிரீவன், நீருதிரன்; லோகேசுவரன், உலகத்துகு முகமபோல்பவனுகிய பிரம்மதேவன்; நீயே அக்கினி: நீயேவாயு; தாதாவிதாதா வென்கிற தேவர்களும் நீயே; நீ அமிர்தம்; நீ யெலலாருக்கும் இரட்சகன்; அழியாத கீர்த் திமான், எந்தக் காரியத்தையும் முடிக்கவல்லவன்; வணங்காதகுண முள்ளவன், எல்லாம் உன்னிடத்திலிருந்து உற்பத்தியாகின்றன.

சராசரமெல்லாவற்றையும் சூரியனைப்போலிருந்து விளங்கச்செய்கிறாய், எல்லாவற்றுக்கும் மேலானவன், எல்லாவற்றிலும் நிறைந்துள்ளவன், சூரியஒளியை மறைக்கின்றாய், நித்தியா நித்திய வஸ்துக்களெல்லாம் நீயே யுகாந்தகால அக்னியை ஒத்துள்ளவன், பயங்கரமானவன், மின்னல்போல் ஒளி விடுகிறாய், இருளை யொழிக்கின்றாய், ஜயிக்கமுடியாதவன், மஹாபராக்கிரமம் உள்ளவன், பட்சிராஜனுடைய உன்னிடத்தில் அடைக்கலமாய் அடைந்தோம் உன்னுடைய பேரொளியினால் உலகெல்லாம் வெதும்புகின்றது. உன்னுடைய சரீரத்தைக்கண்டு தேவர்களும் நடுங்கினார்கள் தேவர்களையும் உலகத்தையும் தயை செய்து கரபபாற்ற வேண்டும் நினைத நினைதத கச்ய பருடைய புதிரனே! இடி போலும் பயங்கரமான தொனியையுடையவனே! ஏமதர்ம ராஜனை போன்றவனே! உன் ஒளியைக்கண்டு உலகம் நடுங்குகிறது தயைசெய்து உனது திருமேனியை ஒடுக்கிக் கொண்டு எங்களையும் உலகதனதையும் இரட்சிக்க வேண்டும் என்று பிரார்தனித்தார்கள்

இருபத்திநான்காவது அத்தியாயம்

ஆஸ்தீக பர்வதனெடாடங்கி

தேவர்கள் வேண்டிக்கொண்டபோது கருடன் என் தேஜஸ தைக்கண்டு எல்லாரும் பயப்படுகிறார்கள் ஆகையால என ஒளியை ஒடுக்கிக கொள்கிறேனென்று ஒடுக்கிக்கொண்டார். அருணனை தன் முதுகின்மேலேற்றிக் கொண்டு பிதாவினுடைய வீட்டினின்று புறப்பட்டு ஆகாசமார்க்கமாய் போனார். சமுதாயதனை அக்கரையிலுள்ள தாயினிடம் அடைந்தார். சூரியன் உலகங்களை யெரிக்க உத்தேசித்திருந்த போது கருடன் அருணனை அந்தச் சூரியனுக்கு எதிரில வைத்தார் என்று ஸூதர் சொன்னார். அதைக்கேட்ட சௌனகர், சூரியன் ஏன் உலகங்களை தஹிக்க நினைததார் அவருக்குத் தேவர்கள் என்ன செய்தார்களா? என்று கேட்க ஸூதர் சொலலுகிறார்.

சௌனகரே! அமிர்தம் குடிதததபோது இராகுவைச் சந்திரனும் சூரியனும்காட்டிக் கொடுததார்களல்லவா? அதுமுதல் அவன சந்திர சூரியர்களிடம் கோபம்கொண்டான். இராகு க்ரகணத்தினால் சூரியனை வருத்தினபோது சூரியனுக்குக் கோப முண்டாயிற்று. தேவர்களுக்குச் சகாயஞ் செய்தன அதனாலே இராகு என்மேற கோபங்கொண்டு வருத்துகிறான். இதத ஆபத்காலததில் தேவர்கள் என் உபகாரத்தை கவனிக்கவில்லை. இராகு என்னை விழுங்குகிறதைப் பார்த்துக்கொண்டிருநதும் சும்மாவிருக்கிறார்கள். ஆகையால் நான் என் கிரணங்களால உலகத்தை யெரிதது விடுகிறேன என்று சூரியன் அஸ்தமன மானனை அங்கிருந்தே உலகமழியும படியான வெப்பத்தை வீசினான். ரிஷிகள் தேவாகளிடம் போய், இன்று இராத்திரியில் ஒரு பெரிய வெப்பமுண்டகும அதனால் உலகம் அழிவதாயிருக்குமென்றார்கள். இதைக் கேட்ட தேவாகள் ரிஷிக

ருடன் பிரமாவினிடம் போய்க் சுவாமி! சூரியன் உதிப்பதற்கு முன் ஜூலேயே இவ்வளவு கொடுமையான உஷ்ணம் உண்டாயிருக் கிறது, உதயமானல் எப்படியாகுமோ தெரியவில்லே. இதற்குக் கார ணமென்ன ? என்றார்கள் பிரம்மதேவர், உலகங்களேத் தஹிக்கிற எண்ணத்தோடு சூரியனுதிக்கப்போகிறன். அதற்கு நிவர்த்தியும் உண்டாயுருக்கிறது.கச்யபருடைய புத்திரனிய பெரியசரீரமுள்ள அருணன் சூரியனுக்குச் சாரதியாக அவனுக்கு முன்னிருந்து சூரி யனுடைய பிரகாசத்தை யிழுத்துக்கொள்வான் அவனுல் எல்லா ருக்கும் க்ஷேமமுண்டாகுமென்றார் பின் பிரம்மதேவனுடைய கட் டளையினுல் அருணன் சென்று சூரியனுக்குச் சாரதியானன். சூரிய னுக்குக் கோபமுண்டானதற்குக் காரண மிதுதான் இனிக் கருடன் கதையைச்சொல்லுகிறேன்கேளுங்களென்று ஸூதர்சொலலுகிறார்

இருபத்தைநதாவது அத்தியாயம
ஆஸ்திக பர்வத தொடர்ச்சி.

பிறகு கருடன், அடிமையாய் வேலேசெய்து வருந்திக் கொண் டிருக்குந்தாண மாதாவிடம போனர் அங்கிருக்கும் போது கத்ரு வினதையைப்பார்த்து, தான் சமுத்திரத்திலிருக்கிற ஒரு இடத்துக் குப்போக விரும்புகிறேன். அதுமிக இன்பமான இடம். அந்த இடத்துக்கு என்னைத் தூக்கிகொண்டு போ என்றாள். விநதை அப்படியே கத்ருவைத் தூக்கிகொண்டு போனுள். கருடன்,தாயின் சொற்படி சர்ப்பங்களேத தூக்கிக்கொண்டு போனுள். கருடன் சூரியனுக்குச் சமீபத்தில் போனர் அப்போது சர்ப்பங்கள் சூரியவெப்பத்தினுல் மயங்கி விழுந்தன அதைக்கண்ட கத்ரு இந் திரனேத் துதித்தாள்

தேவர்களுக்கு அதிபதியே ! உன்னே நமஸ்கரிக்கிறேன். பலா சுரனேச் சங்கரித்து முழுவையைக் கொன்றவனே ! ஐராணிகாதலனே ! உன்னே நமஸ்கரிக்கிறேன சூரியவெப்பத்தால் வெதும்புகின்ற சர்ப் பங்களே ஜலத்தினுல் குளிரச் செய்தருள வேண்டும் தேவேசா ! புரந்தரா ! நீயே வாயு, நீயே மேகம், நீயே அக்கினி, நீ தான் மின் னல, உன்னே மஹா மேக மென்று பெரியோர சொல்லுகிறார்கள். நீயே வஜ்ராயுதம், நீயே சிருஷ்டிகாத்தா, ஸம்ஹார கர்த்தா, நீயே விஷ்ணு, நீயே சந்திரன், வருஷம், நிது, மாசம், பட்சம், நாள், நா ழிகை, விநாடி முதலிய காலபேதங்களும் நீயே, வனங்கள், மலேகள், சமுத்திரம், பூமியாவும் நீயே. யாகத்தில ஆராதிக்கப்படுகிறாய், யா கதத்தில் ஹவிசை நீயே புஜிக்கினறாய். எல்லாராலும புகழப்படுகிறாய் பிராமணர்கள் உனக்காகவே வேத வேதாங்கங்களே யோதுகிறார்கள் என்று பலவாருகத் துதித்தாள்.

இருபத்தாறுவது அத்தியாயம.
ஆஸ்திகபர்வத தொடர்ச்சி

கத்ரு இந்தப் பிரகாரமாக இந்திரனேத் துதித்தபோது, தேவேந்

திரன் மேகங்களைப் பார்த்து நீங்கள் கலல ஜலத்தைக்கொண்டு வருவியுங்களென்று உத்தரவுகொடுத்தான். மேகங்களெலலாம் எங்கும் இருளும்படி ஆகாயதலத மறைத்துக்கொண்டு பரவி இடி மின்னல களுடையனவாய் மழை பொழிந்தன. காறறுவீசிற்று. சந்திரசூரியர் களுடைய கிரணங்கள் ஒளிந்து போயின. நீர் பிரவாகமாயோடிற்று. பாதாளபரியந்தம குளிராகுபோயிறறு. அலலவீசின. இதனல் நாகங் களுக்குச் சுகமுண்டாயிற்று. அப்போது சாப்பங்கலெலலாம் மகிழ்ச்சியடைந்து தம் மாதாவுடன கூடி ராமணீயக மென்னும் தீவு போய்ச் சேர்ந்தன.

இருபத்தேழாவது அத்தியாயம்
ஆஸ்தீக பர்வத்தொடர்ச்சி

அங்கே போய் முதலிகளுக் கிருப்பிடமான இலவண சமுத்திரத்தைப் பார்த்தன. அவவிடததிலுள்ள வனம மிகவும இனிமையானதா யிருந்தது. பலவகைபபான பறவை யினங்கள ஒலித்துக கொண்டிருந்தன. மலா கனிகள நிறைந்த மரங்களடாகத்திருந்தன. அழகிய மாடமாளிகைகளாலும, தாமரை தடாகங்களாலும அலங காரமா யிருந்தன. அளவில்லாத சுகதன மரங்கள் நிறைந்திருந்தன. அவற்றினினறும மலாகள் மழை போலச் சொரிந்துகொண்டிருந தன. அவற்றிறகுகந்த மந்தமாருதம இனபமாக வீசிற்று. பரிமளமிகுந்தின்ற மலாகள் நிறைந்த பல மரங்கள் வளர்ந்திருந்தன. தேவலோகம்போலவது அரமபாஸ்திரீகளுக்கு வாசஸ்தானமானது. கந்தர்வாகள் உலாவுவது. எலலார் மனதுக்கும இன்பததைக் கொடுப்பது. அந்த ஸ்தானதைக் கத்ருவின் புத்திரர்கள் பாத்து மகிழ்ந்தார்கள் அதன்பின் பாமபுகள கருடனிடம்போனது இதைப் பார்க்கிலும் அழகான வேறு தீவுகுக எங்களைக் கொண்டுபோ எனறார்கள். கருடன் சற்று யோசித்துத தன் மாதாவினிடம போய் நான் சாப்பங்களைக் கமக்க வேண்டிய காரணமென்ன வென்று கேட்டான.

விநதை. அப்படிக்கேட்ட தன புததிரனுக்குத் தனக்கும் தன் சகோதரிக்கும கேர்ந்த விவாதததையும, கதரு தனனை வஞ்சித்தது பற்றியதை ஐயித்ததையும, அதனல் தான அவளுக்கு அடிமையானதையும சொன்னாள். கருடன் தன மாதாவின துக்கத்தைப பார்த்து வருந்தி, நாகங்களே நோக்கி, ஓ சாப்பங்களே! நான அடிமைத் தனமையினின்றும் விடுபடுவதற்காக உங்களுக்கு என்ன செய்யவேண்டும? சொல்லுங்களென்று கேட்டான். சாப்பங்கள், நீ உன சாமர்த்தியத்தினுல தேவலோகதது லிருக்கும அமிர்தத்தைக் கொண்டுவருது கொதேதால உன் அடிமைதனம் நீங்கும என்று கூறின.

இருபத்தெட்டாவது அத்தியாயம்
ஆஸ்தீக பர்வத்தொடர்ச்சி.

அதைக்கேட்ட கருடன் தன் தாயைப்பார்த்து அம்மா! நான் அமிர்தம் கொண்டு வரப்போகிறேன். எனக்கு ஆகாரம் வேண்டும். என்ன கட்டளையிடுகிறாயென்றான். வினதை, சமுத்திரத்தின் மத்தியில் ஒரு தீவு இருக்கிறது. அதில்ஒரு வேடச்சேரியுண்டு. அவர்கள் பாவிகள். துஷ்டர்கள்; இரக்கமில்லாதவர்கள்; அளவில்லாத அந்த வேடர்களை நீ புசித்துவிட்டு அமிர்தம்கொண்டுவா. அந்த வேடர்களுக்குள் ஒரு பிராமணன் கலந்திருக்கிறான். அவனைக் கொல்லாதே. எந்தகாரணத்தினாலும்கொல்லக்கூடாது. கோபங்கொண்டபிரமணன் விஷத்துக்கும் ஆயுதத்துக்கும், சூரியனுக்கும், நெருப்புக்கும் சமானமானவன் கொடுந்தவசுள்ள பிராமணன் அக்கினிக்கும் சூரியனுக்கும் மேலானவன். அதிககெடுதியுண்டாம். பிராமணன் முதலியுண்டான படியால் அவன் சிறந்தவன். மனிதர்களுக்குப் பிதாவையும் குருவையும் போலிருக்கிறவன் என்றாள் கருடன், அம்மா! பிராமணன் எவ்விதமான இலக்கணங்களோடு கூடியிருப்பன்? அவன் பார்வைக்கு நெருபபைப் போலிருப்பானா? சந்திரனைப்போல இருப்பானா? அவனுடைய அடையாளங்களை நான் அறியும்படி சொல்லவேண்டும் என்று கேட்க வினதை சொல்லுகிறாள்.

குழந்தாய்; நீ வேடர்களை விழுங்கும்போது உன் தொண்டையில் முள்போலக் காணப்படுகிறவனைப் பிராமணனென்று அறிந்து கொள். நெருபபைப் போல சுடுமானால் அவனைப் பிராமனென்று தெரிந்துகொள். கோபத்தினாலாவது வேறு எதனாலாவது எக்காலும் பிராமணனைக் கொல்லாதே. தவிர உன் வயிற்றில் போனபின் ஜீரணமாகாமலிருப்பவனைப் பிராமணனென்று தெரிந்துக் கொள் என்று சொல்லிவிட்டுத் தன் புத்திரன் அமிர்தங் கொண்டுவரப் போகிறபோது அவனுக்கு ஒரு கெடுதியும் உண்டாகாமலிருக்கும் படி வாழ்த்தினாள்

உனது இரக்கைகளை வாயுதேவன் காப்பாற்றுவாராக. முதுகைச சந்திர சூரியர்கள் காப்பாற்றுக. சிரசை அக்கினிதேவன் காப்பாற்றுக. சரீரம் முழுவதையும் சூழவிருக்கு வசுக்கள்காக்கக்கடவர். சர்வவியாபகனுடைய விஷ்ணு உனது அவயவங்களெல்லாவற்றையும் காப்பாற்றுவாராக. நான் உனக்கு கேடுமம் உண்டாகும்பொருட்டுப் பிரார்த்தனை செய்துகொண்டிருக்கிறேன். சுபமான காரியங்களையே செய்துகொண்டிருக்கிறேன். நீ புறப்பட்டுப் போய் காரியத்தை முடித்துக்கொண்டு தீங்கற்றவனுகத் திரும்பிவரக் கடவாய் என்று வாழ்த்தியனுப்பினாள். கருடனும் தன் சிறகுகளை விரித்துக்கொண்டு ஆகாயத்தில் பறந்துபோய், வேடர் சேரியை அடைந்தான். போனதும் தனது சிறகின் காற்றினால் தூளியை யெழுப்பி ஆகாசத்தை மறையச்செய்தான். பின் சமுத்திர ஜலத்தை வற்றச்செய்து அவர்

கள் வழியை மறைத்து வாயைத் திறந்துக்கொண்டு நின்றான். மலை களும் அசைந்தன. இதனால் வெடர்கள் திகிலடைந்து திக்குத்திசை தெரியாமல் ஓடிக் கருடனது வாயினுட் புகுந்தார்கள். பசியாயிருக் கிற பட்சிராஜனுகிய கருடன் வாயை மூடிக்கொண்டான்.

இருபத்தொன்பதாவது அத்தியாயம்

ஆஸ்தீகபர்வத் தொடர்ச்சி

அப்போது கருடனுடைய தொண்டையில் தணல் சுடுவது போலத் தோன்றிற்று, அதனல் அவன்தான் பிராமணனென்று தெரிந்துகொண்டு ஓ பிராமணோத்தமா ! பாபத்தையே செய்துகொண் டிருக்கிற பிராமணனைக்கூட நான் கொல்லுகிறதில்லை. ஆகையால் நீ சீக்கிரம் வெளியிலே போவென்று தன்வாயைத் திறந்தான். பிராம ணன் என் பாரியாளாகிய இந்த வேடச்சியும் வெளியில் வரவேண்டு மென்று கேட்க, அப்படியே யாகட்டும் ; சீக்கிரம் வெளிப் பட்டுப போவென்றான். பிராமணன் வேடச்சியுடன் வெளியிலேவந்து கரு டனை ஆசீர்வதித்துப் போய்விட்டான். பிறகு கருடன் அதிக வேக மாய்ப் பறந்து தன் பிதாவிடம் போய்ச்சொர்ந்து அவருக்குத் தனது வரலாற்றை.யெல்லாஞ் சொன்னன். கசியபர், குமாரா ! நீயும்உன் சகோதரனும் தாயாரோடு சௌக்கியமா யிருக்கிறீர்களா ? உனக்கு வேண்டிய ஆகாரம் பூலோகத்தில் அகப்படுகிறதா ? நீயெங்கே போ யிருந்தாய் எனக்குச் சொல் என்று கேட்கக் கருடன் சொல்லுகிறான்

என் தாயாருக்கும் தமையனுக்கும் போஜனத்திற்குக் குறை வில்லை. எனக்கு அதிகமான உணவு வேண்டியிருப்பதால் சௌக்கிய மில்லை. சர்ப்பங்களின் விருப்பத்தின்படி அமிர்தம் கொண்டுவரப் போகிறேன். கொண்டுவந்தால் என் தாயாருடைய அடிமைத்தனம் நீங்கும் என்பதி நீங்குப்படி வேடர்களைப் புசிக்கும்படி என்மாதா சொன்னுள். அப்படியுண்டும் என்பதி நீரவில்லை. என்பதி தீரும்படி வான்னன்னத்தை உண்கிறது? அதைப் பிதாவே ! நீங்களே சொல்லி யருள வேண்டும் என்று கேட்க, கசியபர் சொல்லுகிறார்.

இந்த ஏரி தேவர்களாலும் புகழப்பட்ட புண்ணிய தீர்த்தம். இதில் ஒரு ஆமை யிருக்கிறது ; ஒரு யானை அதை யிழுக்கின்றது அதன் சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேள். விபாவசு என்று ஒரு மஹரிஷி யிருந்தார். அவருக்குக் கோபம் மிகுதி. அவருக்கு ஸுப்ரதீகன் என்று ஒரு தம்பியுண்டு. அவருக்குப் பிரிதார் ஜித சொத்தைப் பாகித்துக் கொள்ள விருப்பமிருந்தது. இந்தக் கருத்தைத் தன் தமையனிடத்தில் வெளியிடும் போதெல்லாம் விபாவஸு வினவர், தம்பி ! பாகம் பண்ணிக் கொள்வதில் அநேக கெடுதியுண்டு. மூடர்கள் பாகஞ் செய்துக் கொள்ள விரும்பு வார்கள். பிரித்துக்கொண்டபின் அவர்களுக்குள் ஒற்றுமை யிருப்ப தில்லை. அப்போது பகைவர் இடையிற்புகுந்து கலைத்து விடுவார்கள். அதனல் சகோதரர்களுக்குள்ளே பகை யுண்டாகிறது. பகையுண் டானல் நிச்சயமாக நஷ்டம் வரும். ஆகையால் பெரியோர் வசனத்

தக்கடங்கித் தங்களுக்குள் சந்தேகப்படாமலிருக்கும் சகோதரர்கள் பாகஞ் செய்து கொள்ள விரும்புகிறதில்லை என்று சொன்னர். அதைக் கவனியாமல் மறுபடியும் பாகத்தைப்பற்றியே ஸுப்ரதீகன் பேசினன். விபாவஸு கோபித்து ஸுப்ரதீக! நீ பொருளாசையால் எனக்கு அடங்காமலிருப்பதால் யானையாகக் கடவாய் என்று சபித்தார். ஸுப்ரதீகனும், விபாவஸுவைப்பார்த்து நீயும் நீரில் சஞ்சரிக்கும் ஆமையாகக் கடவாய் என்று சபித்தான். பொருளாசையால் மயங்கி யொருவரை யொருவர் சபித்துக்கொண்டு யானையும் ஆமையுமான ஈன ஜன்மங்களை யடைந்து இன்னம் விரோதம் ஒழியாமல் போர் செய்கிறார்கள். ஆனை அதோவருகிறது ; அதன் அரவத்தைக் கேட்டு ஆமையும் ஜலத்தைக் கலக்கிக்கோண்டு குளத்திலிருந்து வெளியிலேவருகிறது. இரண்டும் போர்புரியச் சித்தப்படுகின்றன. ஆனை ஆறுயோசனை உயரமும் பன்னிரண்டுயோசனை சுற்றளவுமுள்ளது. ஆமை மூன்றுயோசனை உயரமும் பத்துயோசனை சுற்றளவு முள்ளது. அவ்விரண்டையும் புசித்துவிட்டு உன் வேலையைச் சீக்கிரமாய் நிறை வேற்றிக்கொள் என்றார். பின்னும் கருடனைப் பார்த்து, புத்திரா! நீ தேவர்களோடு போர்புரிகையில் உனக்கு ஜயமுண்டாகக் கடவது பூரணகும்பம் பிராமணாசீர்வாதம்,முதலியசுபங்களெல்லாம் உனக்கு உண்டாகக் கடவது. வேதங்கள், மந்திரங்கள் ஞான சாஸ்திரங்களெல்லாமும் உனக்குச் சுபத்தைச் செய்யட்டுமென்று வாழ்த்தினர்.

பிறகு கருடன் ஏரியின் கிட்டப்போய், யானையை ஒருநகத்தாலும், ஆமையை ஒரு நகத்தாலும் தூக்கிக்கொண்டு ஆகாயத்தில் பறந்தார். லம்பதீர்த்தத்தை யடைந்து கற்பக விருட்சங்களைப்பார்த்தார். அந்தக் கற்பகவிருட்சங்கள் சொர்ணவடிவமாய், தங்கம் வெள்ளிகளாலாகிய கனிகளாலும், வைடூர்யமான இலைகளினாலும் பிரகாசித்துக்கொண்டிருந்தன. அவற்றைவிட்டுவேறு மரங்களிடம்போனார் அவற்றின் மத்தியில் ஒருபெரிய ஆலமரமிருந்தது. ஆயிரம்யோசனை உயரமுள்ளது. அநேகம் கிளைகளையுடையதாய்ப் பட்சிகளுக்கு வசிக்கிறதற்கிடமாயுள்ளது. அதன் நிழல் ஸௌக்கியத்தைக் கொடுப்பது அது கருடனைப்பார்த்து, நீ நூறுயோசனை நீளமுள்ள என்கிளையில் உட்கார்ந்து இந்த யானையையும் ஆமையையும் பட்சிக்கக்கடவாயென்றது. பெரிய சரீரமுள்ள கருடன் அதில் உட்கார்ந்த வுடனே யந்தக்கிளை முறிந்து போயிற்று.

மூப்பதாவது அத்தியாயம்
ஆஸ்திகபர்வத் தொடர்ச்சி

கருடன் முறிந்துவீழ்ந்த அந்தக் கிளையைத் தன் காலால்பிடித்துக்கொண்டான். அதை உற்று நோக்குகையில் வாலகில்யர்என்னும் ரிஷிகள் அதில் தலைகீழாகத் தொங்குகிறதைக் கண்டான். இந்தக் கிளைகீழேவிழுந்தால் ரிஷிகளைக் கொன்றுவிடும் என்று நினைத்து வாயினால் அந்தக் கிளையைப்பற்றிக்கொண்டு அதிக வேகமாகத் தன்

பிதாவாசம் பண்ணிக்கொண்டிருக்கிற கந்தமாதன பர்வதம் போய்ச் சேர்ந்தார். அந்தரிஷிகள் பட்சிராஜனுடைய அருமையான செய்கை யைக்கண்டு மகிழ்ந்து இந்தப்பட்சிராஜன் அதிகபாரத்தைச் சுமந்து வானத்தில் பறக்கிறபடியால் இவனுக்குக் கருடனென்று பேர்வழங் கக்கடவதென்று கூறினார்கள். அப்போது கசியபர் மஹாபராக்கிரம சாலியான கருடனைப்பார்த்துப்புத்திரா ! ஸாகஸமான காரியத்தைச் செய்து ஆபத்துக்குள்ளாகாதே. சூரியகிரணங்களைப் புஜிக்கிற இந்த ரிஷிகள் கோபங்கொண்டால் நீ நீறுப்ப்போவாய் என்று சொல்லி, மஹாமகிமையுள்ள அந்தரிஷிகளைப் பார்த்துத் தபோதனர்களே ! ஜனங்களின் க்ஷேமத்துக்காகவே இவன் முயற்சி செய்கிறான். நீங்க ளும் அதற்கு அனுக்கிரகம் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார் அந்த ரிஷிகளும் மகிழ்ந்து மெல்லக் கிளையினின்று பிறங்கி இமய மலைபோய்ச் சேர்ந்தார்கள் பிறகுகருடன் பிதாவைநோக்கிப் பிதாவே இந்தக்கிளையை எங்கே போடுகிறது என்று கேட்டான். அவர்மனித சஞ்சாரமில்லாத ஒரு பெரிய மலையைக்காட்டினார் கருடன் அந்த மலைபோய்ச்சேர்ந்து அந்தக்கிளையைக் கீழேவிட்டான். அது விழுந்த வேகத்தினால்மலையின்சிகரங்கள்தகர்ந்து விழுந்தன. பொன்மயமான அநேக விருட்சங்களும் முறிந்து விழுந்தன. அந்த விருட்சங்கள் தங்கமயமான மலர்களினலே மின்னலோடு கூடிய மேகங்கள் போல விளங்கின. அந்த மரங்களாலும் பொன்மயமான மணலாலும் கலந்து சூரிய பிரகாசத்தினலே யதிக ஒளியுள்ளதாக விளங்கிற்று. அந்த மலையின் சிகரத்தில் கருடன்உட்காந்தது ஆமையையும் யானையையும் புசித்தான். அப்போது தேவலோகத்தில் அபசகுனங்கள்காணப்பட் டன. இந்திரனுடைய வஜ்ரம் எரிபோல விளங்கியது வானில் நின் றும் எரிகொள்ளிகள் விழுந்தன. தேவர்களுடைய ஆயுதங்கள் தமக் குத்தாமே யுத்தஞ்செய்தன. காற்றடித்தது. மேகமில்லாமலே யிடி யிடித்தது. இரத்தமழை பொழிந்தது. புஷ்பங்கள் வாடின. தேவர் களுடைய கிரீடங்களில் புழுதி படிந்தது. தேவேந்திரன் இந்த அப சகுனங்களைக்கண்டுபயந்துதேவர்களோடு பிருகஸ்பதியிடஞ்சென்று சுவாமி ! கொடிய துர்ச்சகுனங்கள் உண்டாகின்றனவே, யாராவது சத்துருக்கள் யுத்தத்துக்கு வருகின்றார்களோ? யாது காரணமென்று கேட்டான். குரு சொல்லுகிறார்.

வாலகில்லியருடைய தபோபலத்தினல் வினதையிடம் கசியப ருக்குப் பிறந்த கருடன் அமிர்தத்தைக் கொண்டுபோக வருகிறான். அவன் நினைத்த வுருவமெடுக்கும் சக்தியுள்ளவன். மஹா பலவான். அவன் எந்தக்காரியத்தையும் முடிப்பான் என்று சொன்னார். அது கேட்ட இந்திரன் காவலாளிகளைப்பார்த்துக் கருடன் அமிர்தத்தைக் கொண்டுபோகாதபடி காப்பாற்றுங்கள் என்றான். அப்படியே தேவர் கள் அமிர்தத்தைக் சூழ்ந்து காத்து நின்றார்கள். தேவேந்திரனும் மற்றுமுள்ள தேவர்களும் யுத்தத்துக்குச் சித்தமாயிருந்தார்கள். ஆபரணங்களாலும் ஆயுதங்களாலும் விளங்குகிற அந்தத் தோற்றம்

சூரியகிரணம் விளங்குகிற ஆகாசமத்தியம் நழுவி விழுவதுபோலிருந்தது.

மூப்பத்தோராவது அத்தியாயம்.

ஆஸ்திகபர்வத் தொடர்ச்சி

சௌனகர், ஸூதரே! தேவேந்திரனிடத்தில் என்ன குற்றம்? வாலகில்லியருடைய தவத்தினால் கருடன் எப்படிப்பிறந்தான்? அவன் கசியபருக்கு எப்படிப் பிள்ளையானான்? அந்தக் கருடன் ஒருவராலும் சொல்லப்படாத பலமுள்ளவன் ஆனதற்குக் காரணமென்ன? இவைகளை யெல்லாமெனக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்க ஸூதர் சொல்லுகிறார்.

இவற்றைக் கருக்கமாகச் சொல்லுகிறேன் கேளுங்கள். கசியபர் புத்திரகாமேஷ்டி யென்னும் யாகஞ்செய்தார். அதற்கு ரிஷிகளும் கந்தர்வர்களும் தேவர்களும் உதவி செய்தார். இந்திரனும் வாலகில்லியாகளும், ரிஷிகளும் ஸமித்துக்கொண்டு வரப்போனார்கள். இந்திரன் ஸமித்துகளை மலைபோலப் பெரிய கட்டாகக்கட்டி யெடுத்துக்கொண்டு வருதான் கட்டைவிரல் ரேகையளவுள்ள வாலகில்லியர்களும் ஒருபலாசக்குச்சியை அநேகம்பேர்கூடிச் சுமந்துகொண்டு வந்தார்கள். தேவேந்திரன் அவர்களைக்கண்டு பரிகாசம் பண்ணிச் சிரித்தான். அவர்களைத தாண்டிகொண்டு போனான், அதனால் வாலகில்லியர்களுக்குக் கோபம் பிறந்தது. அதனால் அவர்கள் யாகக்கிரியைகளைச் செய்யும்போது நினைத்தபடி சஞ்சரிப்பவனும், விரும்பியபசக்தியுள்ளவனும், இந்திரனை விட நூறுமடங்கு அதிக பலமுள்ளவனுமான மற்றோர் தேவேந்திரன் உண்டாகவேண்டும் என்கிற கருத்தைக்கொண்டு மந்திரங்களையுச்சரித்துக் கிரியைசெய்தார்கள். அதை அறிந்த இந்திரன் வருந்திக்கசியபரை வேண்டிக்கொண்டான், அவர் வாலகில்லியர்களைப் பார்த்து நீங்களென்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்க, அவர்கள் செலவச் செருக்கினால் இறுமாந்த இந்திரன் எங்களை அவமதித்தான். அவன் கர்வத்தை அடக்கும்பொருட்டுச் செய்கிறோம். அப்படியே நடக்கவேண்டுமென்றார்கள். கசியபர் இனிய வசனங்களினாலே சுவாமிகளே! இந்திரன் பிரமதேவரால் மூன்று லோகங்களுக்கும் அரசனாயிருக்கிறான். நீங்களும் அவனுக்காகவே முயற்சி செய்கிறீர்கள். நீங்கள் பிரமதேவர் வாக்கைப் பொய்யாக்க கூடாது. ஆகையால் நீங்கள் கருதினபடி யுண்டாகிறவன் பட்சிகளுக்கு அரசனாக இருக்கட்டும் என்று வேண்டிக்கொண்டார். வாலகில்லியர் கசியபரைப் பார்த்து இந்திரனுக்காகவே உமக்குப் புத்திரனுண்டாவதற்காகவும் தொடங்கினோம். இனிமேல் யாம்மிடம் கொடுத்துவிடுகிறோம். உமது இஷ்டம் போலச் செய்து கொள்ளுமென்றார்.

விநதையானவள் புத்திரனைக் குறித்துத் தவம்பண்ணிக்கொண்டிருந்தாள். இந்தச் சமையத்தில் அவள் தன் கணவனிடம் வந்து சேர்ந்தாள். கசியபர் அவளைப்பார்த்து உன்னிஷ்டப்படியே உனக்கு

இரண்டு புத்திரர்கள் பிறப்பார்கள். அவ்விருவரும் சிறந்த மகிமை யுள்ளவர்கள். அவர்களில் ஒருவன் உலகத்தாரால் கொண்டாடப் படுவான். நிணைத்தபடி உருவமெடுப்பான் நிணைத்தகாரியத்தைமுடிப் பான். பட்சியாகப் பிறந்து பட்சிகளுக்கு அரசனுவான்என்று சொன் னர். பின் இந்திரணைப் பார்த்து, அவளுக்குப் பிறக்கும் பலசாலிக ளான இருவரும் உன்சகோதரர்கள். அவர்கள் உனக்குத் தீமை செய்யார்கள். உனக்கு உபகாரியாவார்கள். நீயே இந்திரனுவாய். இனிமேல் பெரியோர்களை அவமானம் பண்ணுதே அவர்களுடைய சொல்லே வஜ்ராயுதமாய்ச் சங்காரிக்கும். கர்வமடையாதே யென்றார் இந்திரன் மகிழ்ந்து அமராவதிக்குப போனுன். அதன்பின் விநதை இரண்டுபுத்திரர்களைப் பெற்றுள் வருணன் சூரியனுக்குச் சாரதி யானுன். கருடன் பட்சிகளுக்கு இராஜாவானுன். மேலே சொல்லு கிறேன் கேளுமென்று சொல்லுகிறார்.

மூப்பதிரண்டாவது அத்தியாயம்
ஆஸ்தீகபர்வத் தொடர்ச்சி

பிறகு கருடன் அநத கலியிலிருந்து புறப்பட்டுத் தேவலோகத் தை நோக்கிப் போனுன். தேவர்கள் அவனைக்கண்டு பயந்தார்கள். மஹாபலமுள்ள பௌமனென்பவன் அமிர்தத்துக்குக் காவலாயிருந தான். அவனோடு கருடன் சற்று நேரம் போர் புரிநது, அவனைச் சிரசினுதடித்து, மூக்கினுற் கொத்தி யடித்துத் தள்ளினுர். பின் மண்ணைவாரி யிரைத்துத் திக்குகளைமறைத்துத் தேவர்களை மயங்கச் செய்தார் தேவகளை சிறகாலும் மூக்கலும் அடித்தார். இநதிரன் புழுதியை விலக்கும்படி வாயுவுக்குச் சொன்னுன். வாயு அப்படியே தூளியை விலக்கினுன் பிறகு தேவர்கள் பலவகை ஆயுதங்களாலும் கருடனை ப்டித்தார்கள். கருடன் ஆகாயத்தில் கிளம்பி இடிமுழக்கம் போலக் கர்ஜித்தான். தேவர்களைத் தன் சிறகினுலே ஒதிக்கினுன். அவனுடைய அடியினுலும் மூக்கின் குத்தினுலும் தேவர்கள் நாலா பக்கமும் சிதறியோடினுர்கள். பிரளயகால ருத்திரனைப்போல விளங் கும் கருடனக்கு ஆற்றுமல்தேவர்களெல்லா மோடினபோதுகருடன் எதிர்த்தவர்களைக் கொன்று, அமிர்தத்தை யெடுக்கப்போனுர். அமிர் தத்தைச்சூழ அக்கினி யெரிந்துகொண்டிருந்தது. கருடன் அதைக் கண்டு எண்ணுயிரத்து நூறுவாய்களை யெடுத்துக் கொண்டு, நதிக ளைக் குடித்து அந்த நீரினுலே எரிகிற அக்கினியை அணைத்தார்.

மூப்பத்து மூன்றுவது அத்தியாயம்.
ஆஸ்தீகபர்வத் தொடர்ச்சி

கருடன் ஒரு சிறிய உருவத்தை யெடுத்துக் கொண்டு, அதிக வேகமாக நுழைந்தார். அங்கே ஒரு சக்கரம் சுழன்று கொண்டிருந் தது. அமிர்தத்தைக்கவர வருகிறவர்களைச் சங்கரிக்கும்படி தேவர்க

ளால் வைக்கப்பட்டது. கருடன் சமையம்பார்த்துக் கொண்டிருந்து கூடவே சுற்றிவந்து, ஒரு சிறிய உருவங்கொண்டு, ஆரைக்காலின் இடை வெளிச் சந்திலில் திடீரென்று உள்ளே புகுந்தார். அந்தச் சக்கரத்தின் மேலே கொடிய சர்ப்பங்க ளிருந்தன. அவைகள் கண்கள் கொட்டாமல் அமிர்தத்தைப் பாதுகாத்து வந்தன. அதுயாரைப் பார்த்தாலும் அவன் சாம்பலாய்விடுவான். கருடன் மண்ணைத் தூவி யவற்றின்கண்களை மறைத்து மேலே பறந்து, அவற்றை இரண்டு துண்டுகளாகச் செய்தான். உடனே உள்ளே யிருந்த அமிர்தத்தை யெடுத்துக்கொண்டு, சுழன்று கொண்டிருந்த சக்கரத்தை முறித்துக் கொண்டு வெளியிலே வந்தார்.

அப்போது விஷ்ணு அவனுக் கெதிரில் வந்தார். அவர் கருட னைப்பார்த்து உனக்கு வரங்கொடுக்கவந்தேன். வேண்டிய வரத்தைக் கேள் என்றார். கருடன், நானுமக்குமேலே இருக்கவேண்டும் ; அமிர் தம் சாப்பிடாமல் நரை திரை மரணங்க ளில்லாமலே இருக்கவெண் டும் என்று கேட்டான். விஷ்ணு அப்படியே தந்தேனென்றார். பின் கருடன் விஷ்ணுவைப்பார்த்து நானும் உமக்குவரம் கொடுக்கிறேன். வேண்டியதைக் கேளுமென்றான். விஷ்ணு, நீ யெனக்கு வாகனமா யிருக்கவேண்டு மென்று கேட்டார். கருடன் நல்லது என்றுசொல்லி மஹாவேகமாய்ப் பறந்துபோனார். அப்படிப் போகின்ற கருடனை இந்திரன் வஜ்ராயுதத்தினாலே யடித்தான். கருடன் நகைத்து இந் திரா ! இந்த வஜ்ராயுதம் என்னை யென்ன செய்யக்கூடும். உனக்கும் வஜ்ராயுதத்துக்கும், இந்த வஜ்ராயுதத்துக்கு உற்பத்தி ஸ்தானமா யிருந்த ததீசிமஹாரிஷிக்கும் மரியாதைக்காக என்சரீரத்திலுனின்றும் ஒரு இறகை நழுவவிடுகிறேன். இதன் மறுமுனையை பார்க்கமாட் டாயென்று ஒரு இறகை விட்டார். அதைப் பார்த்து தேவர்கள் ஸுபர்ணன் என்று கருடனுக்குப் பேரிட்டழைத்தார்கள். இதைக் கண்ட இந்திரன் கருடனைப்பார்த்துப் பட்சிராஜாவே! உன்னுடைய சினேகமெனக் கிருக்கவேண்டும். உன் பல மெவ்வளவு என்று நான் அறிய வேண்டுகிறே னென்றான். கருடன் இந்திரனைப்பார்த்து, ஒரு வன் தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளக் கூடாது. காரண மில்லா மலே தன்னைப்புகழ்ந்து கொள்ளுகிறவன் இழிவடைவான். நீ சினே கிதனுடியால் சொல்லுகிறேன். ஸ்தாவர ஜங்கமங்களடங்கிய உலகங்களெல்லாவற்றையும் சிரமமில்லாமலே தூக்குவேன். அது என் பலம். இனி உனக்கு மெனக்கும் சிநேக மிருக்கட்டு மென்று சொன்னான்.

மூப்பத்து நான்காவது அத்தியாயம்.
ஆஸ்திகபர்வத் தொடர்ச்சி.

பிறகு கருடனைப்பார்த்து இந்திரன் சொல்லுகிறான். நீர் சொல் வதெல்லாஞ்சரி ; நீர் எனக்குச் சிநேகிதராக இருக்க வேண்டும்.

இந்த அமிர்தத்தினால் உமக்குப் பிரயோசனமில்லையே ; அதை யெனக்குக் கொடுத்துவிடும் நீர் இதை யாருக்காகிலும் கொடுத்தால அவர்கள் எங்களைத் துன்பப்படுத்துவார்கள் என்றான் கருடன், அமிர்தத்தை நான ஒருவருக்குங் கொடுப்பதில்லை ஒரு காரியமாக மாக கொண்டுபோகிறேன நான் இதை யெந்த இடத்தில வைக கிறேனோ அந்த இடத்திலிருந்து நீ யெடுத்துக்கொண்டு போய் விடு என்றான இந்திரன் சந்தோஷமடைந்து, படசிராஜாவே உமக்கு வேண்டிய வரத்தைக் கேளும் தருகிறேனென்றான் தேவராஜனே ! நான ஒன்றையும் யாசிக்க வேண்டியதில்லை ஆனாலும ஒரு வரம் கேட்கிறேன் அதாவது சாபங்களெல்லாம எனக்கு ஆகாரமாக வேண்டுமென்றார் இந்திரன் அந்த வரத்தைக் கொடுத்துவிட்டு மஹா விஷ்ணுவினிடம்போய் நடந்ததைச் சொன்னான் அவரும் ஒப்புக கொண்டார் கருடன் அமிர்தத்தை யெடுத்துக்கொண்டு வேகமாபத தன தாயாரிடம்போய் அம்மா ! அமிர்தம் கொண்டுவந்துவிட்டேன் இனி யெனன செய்கிறது எனறு கேட்டான விநதை மனமகிழ்ந்து, புத்திரனைப பாராத்து, ஓ புத்திரா ! உன்னுடைய அசாதியமான செய்கைக்காக நான் மகிழ்ந்தேன் நீ மூப்பு சாகாதில்லாமல தேவாகளுக்குப் பிரியமுள்ளவனு யிருக்கக்கடவாயெனறு ஆசீர்வதித்தாள

பிறகு கருடன், நாகங்களைப பார்த்து, சாபங்களே ! உங்களுக்காக அமிர்தம் கொண்டுவந்திருக்கிறேன அதைத் தர்ப்பையின்மேல் வைக்கிறேன் நீங்கள ஸ்நானம பண்ணிப பரிசுத்தராகளாய் வந்து இதைப புசியுங்கள் எனறான பின உங்களுடைய சொற்படி அமிர்தம கொண்டுவந்தபடியால, இந்த கூடணமுதல் என தாயாருடைய அடிமைத்தனம நீங்குமேபோகவேண்டும என்றார். சாபங்கள் அப்படியே உன்தாயார சுதந்தரை யாய்விட்டாள என்றார்கள். அவள் அடிமைத் தனத்தினின்றும விடுபட்டாள நாகங்கள் ஸ்நானத்துக்கு போயின அப்போது இந்திரன் வந்து அமிர்தத்தை யெடுத்துக கொண்டு தேவலோகத்துக்குப் போய்ச சேர்ந்தான

பிறகு நாகங்கள ஸ்நானஞ்செய்டானங்களை முடித்துக் கொண்டு சுசியாக வந்து பார்த்தன அமிர்தத்தைக் காணைம அப்போது நாம் செய்த மோசத்துக்குச சரியான தண்டனையே நமக்கு கிடைத்தன வென்று நினைத்து வருந்தின அமிர்தம வைத்திருந்த தர்ப்பத்தை நக்கின. அதனால் அவற்றின் நாக்குகள் இருபிளவாகப பிளவுண்டன சாபங்கள் இப்படியே ஏமாந்து வருந்தின கருடனை அந்தக் காட டிலே சர்ப்பங்களை புசிக்கொண்டு யதேச்சையாய்ச சஞ்சரித்தான் வினதை அளவிலாத மகிழ்ச்சி யடைந்தாள் பட்சிகளெல்லாம் தங்க ளரசனுடைய கருடனுக்கு மரியாதை செய்து வணங்கி யிருந்தன இந்தக் கருடனுடைய சரித்திரத்தைக் சிரத்தையோடு பாராயணஞ் செய்கிறவர்கள் சொர்க்கத்தை அடைவதில் ஐயமே யில்லை.

முப்பத்தைந்தாவது அத்தியாயம்.

ஆஸ்திகபர்வத் தொடர்ச்சி.

சௌனகர் ஸூதரைப்பார்த்து, கத்ரு சர்ப்பங்களைச் சபித்ததற்கும் விநதை அடிமைபட்டதற்கும் காரணங் கூறினீர் விநதையின் இரண்டு புத்திரர்களின் பேரும் சொன்னீர். நாகங்களின் பெயரைச் சொலலவில்லை. அவற்றின் பிரதாபமான சிலவற்றின் பெயர்களை மாத்திரமாவது சொல்ல வேண்டும் என்று கேட்க ஸூதர் சொல்லுகிறார்.

சௌனகரே! பாம்புகள் அளவில்லாதன வாதலால் அவறறில் முக்கியமான சிலவற்றின் பெயரைச் சொல்லுகிறேன். சேஷன் எல்லாருக்கு மூத்தவன். பின்னர்முறையே வாசுகி, ஐராவதன், தட்சன், கார்க்கோடகன், தனஞ்சயன், காளியன், மணிநாகன், ஆபூரணன், பிஞ்சரகன், ஏலாபத்திரன், ஆமனன், நீலன், கல்மாஷன், சபலன், ஆரியகன், உக்கிரகன், கலசபோதகன், ஸுமனஸ், தண்டிமுகன், விமலபிண்டகன், ஆப்தன், கோடரகன், சங்கன, வாலிகிதன், நிஷ்டானகன், ஏமகூடன், நகுலன், பிங்களன், பாஹ்யகாணன், ஹஸ்திபதன், முத்கரபிண்டகன், கம்பலன், அசுவதரன், காலீயகன், விருத்தன், ஸுமனர்த்தகன், இரண்டுபதம்கள், சங்கமுகன், கூர்மாண்டகன், சேஷமகன், பிண்டாரகன், கரவீரன், புஷ்பதம்ஷ்டிரன், மூஷிகாதன், சங்கசிரஸ், பூர்ணபத்திரன், ஹரித்திரகன், அபராஜிதன், ஜோதிகன், ஸ்ரீவன், கௌரவ்யன, திருதராஷ்டிரன், சங்கபிண்டன், வரஜஸ், ஸுபாகு, சாலிபிண்டன், ஹஸ்திபிண்டன், பிடரகன், ஸுமுகன், கௌணபாசனன், குடரன், குஞ்சரன், பிரபாகரன், குமுதன், குமுதாட்சன், திதிதி, ஹலிகன், கர்த்தமன், பகுமூலகன், கர்க்கரன், அகர்க்கரன், குண்டோதரன், மகோதரன் முதலானவர்கள் முகியமானவர்கள். இவர்களின் வம்சத்தில் ஜனித்த சதாதிகள் அளவிடப்படாதனவாம்.

முப்பத்தாராவது அத்தியாயம்.

ஆஸ்திக பர்வதொடர்ச்சி.

சௌனகர், ஸூதகுமாரரே! அந்த நாகங்கள் தங்களுக்குச் சாபம கோரிட்டபின் என்னசெய்தன. அவைகளைச் சொல்ல விருமபுகிறேன் என ஸூதர் சொல்லுகிறார்.

அந்தச் சர்ப்பங்களிற் சிரேஷ்டனான ஆதிசேஷன தனித்துப் போய், வாயுபட்சணஞ்செய்து கொடுந்தவம் புரிந்த, நாகதாதன பர்வதம், பதரிகாசிரமம, கோகர்ணம, புஷ்கரவனம், இமயமலைச் சாரல முதலிய தீர்த்தஸ்திரங்களுக்கும் போய் உக்கிரமான தவஞ் செய்தான் இவவாறு தவதாதால மெலிவடைந்த ஆதிசேஷனுக்கும பிரமதேவர் பிரத்தியட்சமானார். அவரைப்பார்த்து, சேஷனே! உன

னுடைய கொடிய தபசினாலே உலகம் வருந்துகின்றது. க்ஷேமத்தை யவர்களுக்கு குண்டாக்கு உனக்கு என்னவரம் வேண்டும் சொல் என்றார். ஆதிசேஷன் பகவானே! என்னுடைய சகோதரர்கள் எல்லாரும் மூடர்கள். அவர்கள் ஒருவரை யொருவர் பகைக்கிறார்கள் விநதையையும் அவளுடைய புத்திரர்களையும் விரோதிக்கிறார்கள் கருடனுக்குக் கபிபர் கல்லவரங் கொடுத்திருப்பதனால் அவன் பல வானையும் ஜயிக்கமுடியாதவனாயு மிருக்கிறான். அவனே பிவர்கள் சத்ருவாகப் பாவித்திருக்கிறகள். ஆகையால் இந்த ஜன்மத்திலு மல்லாமல் மறுஜன்மத்திலும சர்ப்பங்களினுடைய சம்பந்தமெனக்கு இருக்கக்கூடாது அதற்காக நான் இந்த சரீரத்தை விட்டுவிட உத்தேசித்திருக்கிறேன் என்றான்.

பிரமதேவர் சொல்லுகிறார், சேஷ உனமாதாவின் சாபத்தினால் உன் சகோதரர்களுக்குப் பெரிய பயமுண்டாயிருக்கிறது அதை கானறிவேன். அதற்குப் பரிகாரமும் ஆதியிலேயே ஏற்படுத்தப் பட்டது. அவர்களைப்பற்றி நீ கவலைப் படவேண்டாம். உனக்கு வேண்டியவரத்தை நீ கேள், தருகிறேனென்றார் உன்புத்தி எப்போழுதும தர்மத்திலேயே நிலைத்திருக்கக் கடவது என்றும் சொன்னார் ஆதிசேஷன் பிரமாவை நோக்கிப் பிதாமகரே! என் புத்தி தர்மத்திலேயே யெப்போதுஞ் செல்லவேண்டும். இதுதான் எனக்கு வேண்டிய வரமென்று சொன்னன் பிரமதேவர் உன்னுடைய தைரியத்துக்காகவும் உறுதிக்காகவும் நான் சந்தோஷிக்கிறேன் உலகத்துக்கு உபகாரமான ஒரு விஷயஞ் சொலலுகிறேன். அதென்னவென்றால், வனங்களும பர்வதங்களும் சமுத்திரமும நிறைந்திருக்கிற இந்த உலகத்தை நீ சுமந்துகொண்டு, அதறகொரு கெடுதியும்உண்டாகாதபடி காத்துக்கொண்டிரு என்றார். சேஷன், பகவானே தேவரீர் சொல்லுகிறபடியே செய்கிறேன் எனக்கு இந்தப் பூமி வழிவிட வேண்டுமென்றான். அப்படியே பூமி உனக்கு இடந்தரும். நீ இதைச் செய்வதானால் எனக்கு மிகுந்த பிரியமா யிருக்குமென்று கூறிக், கருடனையும் அவனுக்குச் சினேகனாக இருக்கச் செய்து பிரமதேவர் தமது உலகம் சென்றார். அதுமுதல் ஆதிசேஷன் பாதாளம போய்த் தன்னுடைய ஆயிரம் சிரஸிலையும பூமியை அசைய விடாமல தாங்கிக்கொண்டிருக்கிறார் ஆதிசேஷன பிரிந்து போனபின் சாப பங்களெல்லாம் வாசுகிக்குப் பட்டாபிஷேகஞ் செய்தன.

முப்பத்தேழாவது அத்தியாயம்

ஆஸ்தீகபர்வத் தொடர்ச்சி

வாசுகி தாயாரிட்ட சாபத்தினின்றும எப்படித் தப்பித்துக் கொள்ளுகிறதென்று யோசித்தான். ஐராவதன் முதலிய தன்சகோதரர்களுடன் சொல்லுகிறான் சகோதரர்களே! நமக்கு சேர்ந்த சாபத்தை நிவர்த்தி செய்து கொள்ளவேண்டும். தாய்சாபத்துக்கோ

மோசனமே கிடையாது. இதைப் பிரமதேவர்கூடத் தடுக்கவில்லை. இந்தச் சாபத்தை விலக்க முயலவேண்டும். நீங்களெல்லாரும் புத்திமான்களாதலால், ஜனமேஜயனுடைய சர்ப்பயாகம் நடவாதபடி செய்தால் நம் க்ஷேமம் அடையலாம். இதற்கு உபாயம் என்னவோ அதை யோசிப்போமென்றான்.

அப்படியே நாகங்களெல்லாங் கூடி யோசித்துத் தங்களுக்குத் தோன்றியவாறு கூறுகின்றன. சிலர் நாம் பிரமணராக வடிவங் கொண்டு ஜனமேஜயனிடம்போய் யாகம் நடவாமலிருக்க வேண்டுமென்று பிட்சை கேட்போமென்றனர். சிலர் நாம் ஜனமேஜயனுக்கு மந்திரிகளாகப் போவோம், அவன் யாகத்தைப்பற்றி நம்மை அவசியங் கேட்பான் அப்போது அது பாபமென்று பலகாரணங்களைக் கூறித் தடுத்துவிடுவோமென்றனர். சிலர் யாகஞ் செய்துவைக்கிற புரோகிதனைக் கடித்துக்கொன்றுவிடுவோம், யாகஞ் செய்விக்கத் திறமையுள்ளவர்கள் யாவரதாலும் அவர்க ளெல்லாரையுங் கடித்துக் கொன்றுவிடுவோமென்றனர். சிலர் அது அதர்மம். அதர்மத்தை செய்யக்கூடாது, அதனால் தீமையே சம்பவிக்குமென்றனர் சிலர் நாம் மேகவடிவங் கொண்டு மழை பெய்து எரிகிற யாகாக்கினியை அணைத்துவிடுவோமென்றனர். சிலர் இராத்திரி எல்லாரும் நித்திரை செய்கையில் எஞ்சுபாத்திரங்களைத் திருடிக் கொண்டுவந்துவிடுவோமென்றார்கள். சிலர் யாகத்துக்கு வந்திருக்கிறவர்கள் எல்லாரையும் கடித்துக் கொன்றுவிடுவோம் என்றார்கள் சிலர் ஆகாரங்களை உபயோகப்படாமற் செய்துவிடுவது நல்லது என்றார்கள். வேறு சிலர் நாம் அந்த யாகத்துக்குரித்விக்குகளாக இருந்து தட்சணைக்காகக் கலகத்தையுண்டாக்கிக் கெடுத்துவிடலாமென்றார்கள். சிலர், அந்த ராஜாவையே கடித்துக் கொன்றுவிடுவோமென்றார்கள். இப்படிச் சொல்லி அரசனைப் பார்த்து மஹாராஜாவே எங்களுடைய யோசனை யிலைகளை.பிறகுமதுஅபிப்பிராயப்படி செய்யலாமென்றார்கள்.

வாசுகி, சர்ப்பங்களே! உங்களுடைய யோசனை சரியலல. இந்த யோசனைகளால் யாதொரு நன்மையும் உண்டாகாது. நமது பிதாவாகிய கஸ்யபரைச் சரணமடைவதே சரி. உங்களுடைய யோசனை யொன்றுமெனக்குப் பிடிக்கவில்லை. நன்மையும் தீமையு மென்னைச் சேர்ந்தது. உங்களுடைய நன்மைக்காகவே நான்தானே செய்யவேண்டும் இதுபற்றி வருந்துகிறேனென்றான்.

மூப்பத்தெட்டாவது அத்தியாயம்.

ஆஸ்திகபர்வத் தொடர்ச்சி.

இப்படிச் சர்ப்பங்களெல்லா மொன்று சொன்னபடி ஒன்று சொல்லாமல் தகுதியற்ற யோசனை சொல்லியதையும், வாசுகியின்

வசர்த்தையையுங் கேட்ட ஏலாபத்திரன் என்றகபிரேஷ்டன்வாச இனய நோக்கிக் கூறுகிறான்.

மஹாராஜாவே! இவவிஷயத்திலென் யோசனைகளை முன்னு லேயே சொல்லிவிட்டேன். அந்த யுகதி உங்களுக்குப் பிரப்பமில்லை யென்று தோன்றுகிறது. ஆயினும் அதையே மறுபடியும் விரித்துச் சொலலுகிறேன் நீங்கள் எவவித யுக்திகளைச் செய்தபோதிலும்சர்ப் பயாகம் நடவாமலிராது. ஜனமேஜய மஹாராஜாவே அப்படியெனி பவனல்ல இந்த அவலலதை நாகளுத் தெய்வத்தால் நேரிட்டது, ஆகையால் நாம் தெய்வத்தையே சரணமடையவேண்டும் நான் தாயார் மடியி லுட்கார்கிருகும போது தான் இந்தச் சாபங் கொடுக்கப்பட்டது அப்போது தேவர்கள் சர்ப்பங்கள் பிரவுங் கொடியவையென்று கூறுவதை நான் கேட்டுப் பயந்திருந்தேன். தேவர்கள் இரக்குமுடையவராளாய்ப் பிரமாவிடம போய்ப், பக வானே! சுத்தவைப் போலப்பெற்ற பிள்ளைகளுக்குக் கொடிய சாபங் கொடுப்பவர் யார்! நீரும அதைக் கேட்டுக்கொண்டு சரியென்றிருந தீரே, அதறகுக் காரணமென்ன? நீரேன் அந்தச் சாபதததை தடுக காமலிருந்தீர் என்று கேட்டாகள். கொடியவைகளும், அச்ச முண் டாக்குபவைகளும, விஷமுள்ள வைகளுமான சர்ப்பங்கள் ஏராள மாயிருகின்றன ஜனங்களுடைய நன்மைகாகவே நான் அந்தச் சாபத்தைத் தடுக்காமலிருந்தேன் ஆகையால சர்ப்பங்களுக்கு நிச்ச யமாகவே அழிவு நேரிடும அதற்குப பரிகாரமும் ஏன்றிருக்கிறது. அதென்ன வென்றால, ஜரத்காரு என்ற மஹரிஷி ஒருவர் உறபத் திபாவார். அவருகு ஆஸ்திகர் பிறப்பார். அவர அரத யாகத்தை முற்றும நடவாதபடி தடுப்பார். அப்போது புண்ணிய மனசுள்ள நாகங்கள் மாத்திரம தப்பிப் பிழைக்கும் என்றார். அது கேட்ட தேவர்கள் பிரமதேவரே! ஜரத்காரு யாருடைய புத்திரியை மணம புரிவார் என்று கேட்க, வாசுகிக்கு அழகான ஒரு சகோதரி யிருக் கிறாள். வாசுகி அந்தப் பெண்ணை ஜரத்காரு முனிவருக்குக் கொடுப் பான். அந்தப் பெண்ணினிடமரகத தான் ஆஸ்திகர் பிறப்பார்என்று பிரமதேவர் கூறினர், பிறகு தேவாகளும பிரமாவும் தத்தம இருப் பிடம் போனார்கள், ஆகையால வாசுகி மஹாராஜாவே! உன் சகோ தரியை ஜரத்காரு முனிவருக்கு அவர் கேட்டபோது பிகை கொ டுப்பது போலக் கொடு, இதுதான் எனக்குத் தெரிந்த கல்ல யோ சனை யென்றான்.

முப்பத்தொன்பதாவது அத்தியாயம
ஆஸ்திக பர்வத் தொடர்ச்சி.

முனிசுவரர்களே! ஏலாபத்திரன் யோசனையைக் கேட்ட சர்ப் பங்கள் அதுவே தகுந்தயோசனை யென்று ஒத்துக் கொண்டார்கள்.

வாசுகியும் தன் சகோதரியை ஜரத்காரு மஹரிஷிக்கென்றே பாது காத்துவந்தான். இதற்கப்புறந்தான் தேவாசுரர்கள் அமிர்தம் கடை ந்தது. அப்போது வாசுகி கயிறாக இருந்தான். அது முடிந்தபின் தேவர்கள் வாசுகியுடன் பிரமதேவரிடம் போய்த, தேவனே இந்த வாசுகி தேவாகளுக்கு நண்மை செய்கிறவன். இவன் மனதில் தாயா ரிட்ட சாபத்தினால் பயம் நிறைந்திருக்கிறது. அதை நீக்கி யருள வேண்டுமென்று பிராத்தித்தார்கள் தேவாகளே! எலாபத்திரன் சொன்னது உண்மைதான். வாசுகியும் அப்படியே செய்யக்கடவன் காலம் வந்தபோது வாசுகி தன் சகோதரியை ஜரத்காரு முனிவருக் குக் கொடுத்தால அவன் பயம் நீங்கும் பாபிகள் மாதிரம் அந்த யாகத்தில் அழியார்கள். கல்லவர்கள் தப்புவார்கள் எனறு சொன் னர். வாசுகி அதைகேட்டு மகிழ்ந்து சர்ப்பங்களே அழைத்து நீங்கள் ஜரத்காரு வந்து பெண் கேட்கும்போது உடனே எனக்குச் சொல லுங்கள். நீங்கள் அதையே கவனித்துக் கொண்டிருங்கள் என்று கூறித், தன சகோதரியை அவருகுக் கொடுகக் நிதமாக இருந் தான். அதேக சர்பங்களுக்கு ஜரத்காருவுடன மறைந்திருகும்படி கட்டளை யிட்டான்

நாறபதாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வத் தொடர்ச்சி

சௌனகர் ஸூதரைநோக்கி முனிவரே! அந்த மஹரிஷிக்கு ஜரத்காரு என்று பெயர் வந்த காரணமென்ன? அதை நான் அறிய விரும்புகிறேன், விஸ்தாரமாகச் சொல்லவேண்டுமென்று கேட்க ஸூதர் சொலலுகிறார்.

முனிவர்களே! அழிவுடையதை ஜரையென்று சொல்லுகிறார் கள். துன்ப முண்டாக்குகிறதற்குக் காரு என்று பெயர். அவர் வைராகிய முள்ளவராகையால் சரீரம்அவருக்குக் காருவாக இருந் தது. அவர் தபோபலத்தினல் சரீரத்தை வறறச் செய்தார் வாசுகியின் சகோதரியும் தவசு செய்து சரீரத்தை வருத்திபபடியால அவளுக் கும் அந்தப்பெயர் வந்தது என்று சொன்னர் பிறகு சௌனகர் ஸூதரைப் பார்த்து ஏங்கள் திருப்தி படைந்தோம் ஆஸ்தீகர் பிறப்பை யறிய விரும்புகிறேன். அதைச் சொல்லுமெனறு கேட்கச் சொல்லுகிறார். வாசுகி தன் சகோதரியைப் பாதுகாத்துவரும்போது ஜரத்காரு முனிவர் உக்கிரமான தவசு பண்ணிக் கொண்டிருந்தார். கொடிய விரதானுஷ்டானம் பண்ணிக் கொண்டிருந்தார். ஆனல் தவத்திலே சித்தம் வைத்திருந்தாரே ஒழிய விவாகத்தைப் பற்றி அவர் நினைக்கவே யில்லை.

இக்காலத்தில் அபிமன்யு புத்திரனை பரிட்சித்து மஹாராஜா அரசாண்டார். அவர் பாண்டுமஹாராஜாவைப் போலவே வேட்டை

யாடுவதிலேயே விருப்பமுள்ளவர். வனத்தில் மான், பன்றி, புலி முதலிய மிருகங்களையும் பல காட்டு மிருகங்களையும் வேட்டையாடிக்கொண்டு வனத்தில சஞ்சரித்து வந்தார் ஒரு நாள் வேட்டையாடுகையில் ஒரு மானை அம்பினால் அடித்தார் அடிபட்ட மான் கண்ணுக்குத் தெரியாம லோடிப் போயிற்று பரிகூலித்து அதைத் தேடி வனத்தில்அங்குமிங்கும் அலைந்தார் கடைசியில் களைப்படைந்து சமீகர் என்னும் ஒரு ரிஷி ஆச்சிரமத்திக்கு வந்தார் அந்த ஆச்சிரமத்தில் ஒரு ரிஷி மௌனவிரதத்தோடு தவம் பண்ணுகிறவர். கன்று ஊட்டினபின் அதன வாயிலிருக்கும் நுரையே அவருக்கு ஆகாரம் அவர் மாட்டுத் தொழுவத்தில் மௌனவிரதத்தோடுட்கார்ந்திருக்கையில் பரிகூலித்து அங்கே போய்க் கண்டார் அவர்அந்தரிஷியைப் பார்த்து மஹரிஷியே ! நான் அபிமன்யுவின் புத்திரன் என் பேர் பரிகூலித்து, நான்மானை அம்பால் அடித்தேன் அது என் கண்ணுக்கு அகப்படாமல் ஓடிப்போயிறறு நீர் அதைப் பார்த்தால் சொல்லுமென்று கேட்டார் முனிவர் ஒனறும் பேசாமல சும்மா இருந்தார். அரசன் கோபங்கொண்டு, செத்துப்போய்க் கிடந்த ஒரு பாம்பை வில்லிஞ்லெடுத்து அந்தமுனிவர் கழுததில் போட்டுவிட்டுப் போய் விட்டார் அந்த முனிவருடைய மகிமையை அறியாமையினால் அரசன் அவ்வாறு செய்தார் முனிவரோ அதைக் கவனியாமலிருந்து விட்டார் அநத முனிவருக்கு உக்கிரமான தபசும் கொமும்உள்ள ஒரு புத்திரனிருந்தார். அவருக்கு சிருங்கி யென்று பேர் அவர் பிரமதேவரை நோக்கி அரிய தவம் செய்தார் பிரமாவரது வரங் கொடுத்தார், அதனால் சிருங்கிமுனிவர் வீட்டுக்குத் திரும்பிவந்தார் வரும்போது கிருசன் என்னும் அவருடைய சிநேகிதன் அவரைப் பார்த்து ஓ சிருங்கி ! மஹா தபசியாகிய உன் தகப்பனார் செத்த பிணத்தைச் சுமந்து கொண்டிருக்கிறார். ஆகையால நீ கருவமடையாதே. குற்றமற்ற மஹாஞானிகளும, ரிஷி புத்திரர்களுமாகிய நாங்கள் பேசும்போது நீ எங்களுக்குச் சரியாகப் பேசாதே. நீ பிணஞ் சுமக்கிற பிதாவைப் பார்க்கப் போகிறாய் உனக்கு மானமேது ? கருவமடையக் காரணமில்லை யென்று சிரித்துக் கொண்டு சொனனனன. இந்தப் பேச்சுகள் சிருங்கிக்கு கோபத்தை யுண்டாக்கின.

நாற்பத்தோராவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வத் தொடர்ச்சி.

அதைக்கேட்டுக் கோபங்கொண்ட சிருங்கி முனிவர், அந்தக் கிருசனிடத்தில் இனியவசனங்களாற் பேசிச், சகலபிராணிகளுக்கும் இதமானவற்றைச் செய்து கொண்டு மௌனவிரதத்தை விடாமல், தபம் பண்ணிக் கொண்டிருக்கிற என் பிதாபிணம் சுமக்குறார் என்று சொன்னயே ! அதுசரியானது தானு ? உண்மையா ? எனறு கேட்

டார் கிருசன், சிருங்கி பரிட்சித்து மஹாராஜா வேட்டைக்காக வந்திருந்தார், அப்போது செத்தபாம்பை வெடுத்துத் தோளின்மேல் போட்டுப் போனார் என்றார். சிருங்கி, அந்த ராஜனுக்கு என் தகப் பன் என்ன குற்றஞ் செய்தார் என்று கேட்கக் கிருசன் சொல்லு கிறான். இராஜன் வேட்டை யாடும்போது ஒரு மானை அடித்தார். அது எங்கேயோ ஓடிப்போயிற்று. அதைத் தேடித் திரிகையில் பசி தாகங்களால் களைத்து, உன் பிதாவிடம் வந்து காணடித்த மானைக் கண்டீரோ என்று பலதரம் கேட்டார். உன்பிதா வாய்திறந்து பதில் சொல்லவில்லை அதனை கொபித்துக்கொண்டு இறந்தசர்ப்பத்தைத் தூக்கி அவர் தோளில் போட்டாரென்றான். சிருங்கிக்கு உடனே கோபம் மூண்டது கண்கள் சிவந்தன. கோபாவேசம் மீறினதினால் தன்னை மறந்து சொல்லுகிறார். குருவம்சத்துக்கு இழிவுண்டாகின அந்தப் பரிட்சித்து வியோதிகரான என் பிதாவினுடைய தோளிலே பாம்பைப் போட்டு மஹாபாபியானான் பிராமண நிந்தைசெய்தான். ஆகையால், தட்சகனென்னும் கொடிய விஷமுள்ள சர்ப்பராஜன இன்றுமுதல் ஏழாவதுதினங்களுக்குள் அந்தப் பரிகூரித்து ராஜனைக் கடித்துக கொல்லக்கடவன் பரிகூரித்தும எமலோகமடையக் கடவ னென்று சபித்தார்

கோபாவேசங் கொண்ட சிருங்கி யிப்படிச் சபித்துவிட்டுப் பிதாவினிடம் போய்ப பார்த்தார் அவர் தோளில் உண்மையாகவே பாம்பிருந்தது, அதை யேடுத் தெறிந்தார். பின்பு துக்கமேலிட்டுக் கண்ணீர்விட்டழுதார். பிதாவைப் பார்த்து உம்மை அவமானம் பண்ணின துஷ்டனை பரிட்சித்துராஜனை நான் சபித்துவிட்டேன். இன்றைக்கு ஏழாவது நாள் தட்சகன் கடித்து அவனை எமலோகத் துக்கு அனுப்பிவிடுவான் என்று சொன்னான் சமீகர் சிருங்கியைப் பார்த்து, பாலகா ! நீ செய்தது சரியல்ல, அது எனக்குப்பிரியமில்லை தவசிகளுக்கு இது தருமமாகாது நாம அந்தராஜனுடைய இராஜ் யத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அவன் நம்மை இரட்சிக கிறான். இந்த ராஜன் என்ன செய்தபோதிலும் நாம் பொருத்துக் கொள்ள வெண்டும. அவனுக்குக் கெடுதி செய்வது எனக்குப பிரிய மில்லை அரசன் பரிபாலிக்காவிட்டால் நம்தர்மத்தில் அவர்களுக்கும் பாகமுண்டு. பாண்டு மஹாராஜனைப்போல இன்னும் யிராஜ்ய பரி பாலனம் பண்ணுகிறான். இராஜா இல்லாததேசம் கெடுமே. நில்லா தடி மாறின தேசத்தை அரசன் தண்டனையாற் பரிபாலிக்கையால். தண் டத்தால் அச்சமுண்டானபின் சமாதான முண்டாகுமது. கலக்க முடையவன தர்மஞ்செய்யத தகாதவனாகிறான். கலங்கின யாதொரு தொழிலுஞ் செய்யத் தகாதவனாகிறான். அரசனை தர்மம நிலைத திருக்கின்றது. தர்மத்தினாலேதான் சொர்க்காதிகள் கிடைக்கின்றன இராஜன் யக்ஞங்களால் நிலை நிறுத்துகிறான். யாகங்களினால் தேவர்கள் நிலை பெறுகின்றனர். தேவர்களால் மழை பெய்கிறது. மழையாற

பயிர்கள் செழிக்கின்றன. அரசன் பயிர்களால் பிரஜைகளை இரட்சித்துப் பரிபாலனம் பண்ணுகிறான். ஒரு அரசன்பக் தேவதைகளிற்கு பிராமணனுக்குச் சரியென்றுமனு கூறினர். அந்த அரசன் பக்கலில் யோகியாமலிருக்கக் காரியஞ் செய்திருப்பான் நீ யோகிகளைப் பாராமல் அவசரப்பட்டுத் தகாத காரியத்தைச் செய்து விட்டாய். எப்படியானாலும் இராஜனே நீ சபித்தது தகுதியல்ல வென்று சொன்னர்

காற்பத்திரண்டாவது அத்தியாயம்

ஆஸ்தீக பர்வதொடர்ச்சி

அதுகேட்ட சிருங்கிமுனிவர், தான் மீயாசனியிற்றிச் செய்த தானையும், பாவச் செயலாயிருந்தாலும், உங்களுக்குப் பிரியமுள்ள தானையும், பிரியமில்லாத தானையும் என செலதையாறு தான் விளையாட்டாகக்கூடப் பொய் பேசுகிறதில்லை ஆகையால் என் சாபம் பொய்யாகாது என்றார். சமீகர், அப்பா குழந்தாய்! நிமஹாதேபா பலமுடையவனென்றும், சத்தியவந்தனென்றும் எனக்குத் தெரியும் நீ பொய் சொல்வது கிடையாது ஆகையால் உன்சொல் பொய்யாகாது ஆனாலும் பிள்ளை பெரியவனாய் விட்டாலும், சற்குணங்களையடைகிற மார்க்கத்தையும் புகழைப் பெறும் வழியையும் அவனுக்குப் போதித்துக்கொண்டிருப்பது பிதாவினிடமையாகும் நீ சிறு பிள்ளை தபோதலை சிறந்தவனாயிருக்கிறாய் உனக்குச் சொல்வதில் சங்கதமில்லை. கபோதனர்களுக்குக் கோபமாகாது. அதனால் இகலோக இன்பம் பெரிய பொறுமையே தேகாபாதனுக்குப் பரிகாரமாகிறது அவசரப்படுவது கூடாது தேகாபாத்தை யொழித்தவிடு சாகதமுள்ளவனாயிரு கர்ட்டிலை கிடைக்கும் ஆகாரத்தைப் புசித்துக்கொண்டிரு சகியாயினையும் தேகாபம் அவன் புண்ணியத்தை அழிக்கின்றது. புண்ணிய மில்லாவிட்டால் கற்கதியில்லை. பொறுமையுள்ளவனுக்கு இந்திரிய நிக்கிரகபபணச் சகதியுண்டாகிறது இகபரமிரண்டும் பொறுமையுள்ளவர்களுக்கே யுண்டு ஆகையால் இந்திரியங்களை யடக்கிப் பொறுமையாயிரு பிரமாவுக்குச் சரிபமானாயிருக்கும் பதங்களை யடைவாய் தான் பொறுமை யுள்ளவனுய்ச் செயலாகயதைச் செய்திருக்கிறான் நீ சாபமிட்டதை அந்த இராஜாவுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கூறிச் சமீகர் தமமுடைய சிஷ்யாகளில் சிலந்த குணசாலியான கௌரமுகா என்ற முனிவனைப் பரிக்ஷித்துவினிடமனுப்பினார்

அவர் அஸ்தினபுரத்தில் இராஜசபைக்குப் போய இராஜனை செய்த பூசையை ஏறறுக் கொண்டு மந்திரிகளுக்கு முன்னால் சொலலுகிறார். இந்திரியங்களை ஜயித்ததுத தாமதெறி தவறுத சமீகரென்னும் ஒரு ரிஷியிருக்கிறார். அவர் மவுனவிரதம் பூண்டவர் நீர் அவர்தோளில் செத்தபாமபை மாட்டிவிட்டீர். அதை சமீகர் பொருத்துக கொண்டிருந்தார் அவருடைய புத்திர

ரான சிருங்கிமுனிவருக்குக் கோபமுண்டாயிற்று. மஹாராஜாவே! அதனால் அவர் ஏழு இரவுக்குள் தட்சகன் என்னும் நாகம் உமது உயிரை வாங்கக்கடவதென்று சபித்துவிட்டார். அவர் சாபம் ஒரு வராலும் நீக்கத்தக்கதல்ல நீர் உம்மைக் காப்பாற்றிக்கொள்ளும்படி உமக்குத் தெரிவித்துவாவென்று எனக்குச் சமீகர் கட்டளையிட்டார் நீர் உம்மைக் காப்பாற்றிக் கொள்ளுமென்று கூறினர்.

அதுகேட்ட பரிட்சித்து தான்செய்த பாவத்துக்கு வருந்தினார் சாகருடைய மகிமையைக் கேட்டபின் அவருக்குத் தாம் செய்த நிந்தைக்காகமிக பரிதாபமுற்றார். பரிட்சித்துத் தம்முடைய மரணத்துக்காகக்கூட வருந்தவில்லை. கௌரமுகரைப் பார்த்து தான்செய்த இந்த அபராதத்தை மன்னிக்கும் பொருட்டுச் சமீகமுனிவரை தான் பிராததிக்கிறேன் என்று சொல்ல கௌரமுகர் போய்விட்டார்.

பிறகு அரசன் தம் மந்திரிகளுடன் ஆலோசித்தார். ஆலோசித்து ஒரு தூணை நிறுத்தி, அதின்மேல் ஒரு மாளிகைகட்டி, அதில் பல ஔஷதங்களையும் வைத்திபர்களையும், மந்திரவாதிகளையும் வைத்தார். அதில் தாம் மந்திரிகளுடன் அமர்ந்தார். அந்த ராஜாவிடத்தில் ஒருவரும் நெருங்கமுடியாமலிருந்தது. காற்றுப்புகுவதுகூட முடியாததாயிருந்தது. ஏழாவது நாள் காசியபரென்ற பிராமணோத்தமர் அந்த ராஜாவுக்கு விஷநிர்ப்பதற்காக வந்தார். தட்சகராஜனுடைய விஷத்தைத் தீக்கி இராஜாவைச் சுகப்படுத்தினால் பொருளும் தர்மமும் கிடைக்குமென்பது அவரது கருத்து. அப்போது பிராமண ரூபமாக வருகிற தட்சகன் காசியபரைக் கண்டான். காசியபரைப் பார்த்து நீர் எங்கே அவசரமாய்ப் போகிறீர், என்ன காரியத்திற்காக என்று கேட்டான் காசியபர், பிராமணோத்தமர! இன்று தட்சகன் பரிட்சித்துவைக் கடிக்கப்போகிறான். அந்த விஷத்தை நீக்குகிறதற்காக நான் போகிறேன். குரு கோபாக்ஷதனினால விஷத்தைத் தீர்ப்பதில் ஸாமர்த்தியமுள்ளவன் என்றான். தட்சகன் பிராமணரே! நான்தான் தட்சகன், நான் அவனை நிச்சயமாய்க் கடிக்கப்போகிறேன். என் விஷத்துக்கு மந்திர சிகிச்சையில்லை. நீர் திருமபிப்போமென்றான். உன் விஷத்தை நிச்சயமாகவே நீக்கி விடலாம் என்பது என் மந்திரவல்லமையாம். என் மந்திரம் தவறாது என்றார்.

தட்சகன் காசியபரே! இந்த ஆலமரத்தைக் கடிக்கிறேன்: உம்மால் முடியுமானால் உமது மந்திரசக்தியால் இதைப் பிழைக்கச் செய்யும பார்ப்போமென்றான். சர்வம்கொண்ட ராஜாவே! நீ இந்த மரத்தைக் கடி. நான் அதை உயிர்ப்பிக்கிறேன். என் மந்திர பலத்தைப் பார் என்றார். தட்சகன் ஆலமரத்தினருகிற்போய் அதைக் கடித்தவுடனே அது பற்றியெரிந்து நீறாய் விட்டது. காசியபரைப் பார்த்து, இதைப் பிழைப்பியும் பார்ப்போமென்றான். காசியபர் சாம்பலெல்லாம் மொன்றாய் சேர்த்து, சகோதரனே!

உனக்கு எதிரிலேயே இதைப் பிழைக்கச் செய்கிறேன் என்றுகூறித, தமது மந்திரசக்தியால் அதைப் பிழைப்பித்தார். முதலில் மூளை யுண்டாயிற்று. பிறகு அதில் இரண்டு இலைகள் இளம்பின. பிறகு முறையே இலைகளுடன் கிளைகளுமுண்டாய் மரந்தழைத்துச் செழித் துமுன் போலிருந்தது. அதைக் கண்ட தட்சகன், பிராமணரே! நீர் சகல நாகங்களுடைய விஷங்களையும் நீக்கிவிடுவீர். இது உமக்குப் பெரிதன்று நீர் என்னத்தை விரும்பி அங்கே போ கிறீர்! நீர் எதை விரும்பிப் போகிறீரோ அதைபெல்லாம் நானே உமக்குக் கொடுப்பேன் பிராமண சாபத்தினால் ஆயுஸ் முடிந்த இராஜாவின் விஷயத்தில் உமது வித்தை பலிப்பது கஷ்டம் இதனால் மூன்று உலகங்களிலும் பரவிய உமது கீர்த்தி ஒளி மழுங்கிப போகுமென்றான். காசியபர் நாகராஜாவே! நான் பொருளை விரும்பித் தான் போகிறேன். அத்தச் லரியதை நீ கொடுத்தால் நானுடனே திரும்பிப்போய் விடுவேனென்றார் தட்சகன் நான் உமது விருப்பத்துக்கு மேலான திரவியம் கொடுக்கிறேன், உடனே திரும புமென்றான். காசியபர் இராஜனுடைய ஆயுளைத் தமது ஞான திருஷ்டியால் ஆராய்ந்தார் அரசனுக்கு ஆயுசு குறைந்தது. நிசசய மென்று உணர்ந்தார். அதனால் தட்சகனைப் பார்த்து எனக்கு இஷ் டமானமட்டும் திரவியம் கொடு என்று கேட்டு வாங்கிக்கொண்டு திரும்பிப் போய் விட்டார். பிறகு தட்சகன் வேகமாப் அஸ்தினபுரம் போய்ச் சேர்ந்தான்.

தட்சகன் போனபோது இராஜா சிறந்த விஷ மந்திரக்களினால காபபாற்றப்படுகிறதைக் கேட்டு, இந்த இராஜாவை வஞ்சகத்தினால கொல்லவேண்டுமென்று எண்ணினான். பிறகு அநேக சர்ப்பவகை ரிஷிவேஷம் தரித்து, கனிகள் இலைகள் போ முதலிய எடுத்துக்கொண்டு போகும்படி கட்டளையிட்டான். அப்படியே சர்ப்பங்கள் கொண்டுபோய்க் கொடுத்தன. அரசன் அவற்றை வாங்கிகொண்டு, அவர்களுடைய காரியா காரியங்களை விசாரித்து அனுப்பி விட்டார். பிறகு அரசன் மந்திரிகளைப் பார்த்து ரிஷிகள் கொண்டு வந்த கனிகளை நாமெல்லாரும் உண்போமென்று கூறி அவர்களுட னிருந்து புசிக்கத் தொடங்கினார்

விதிவசத்தினால் தட்சகனிருந்த பழத்தையே அரசன் உண் டான். அவர் அதைத் தின்னுமபோது அதிலிருந்து ஒரு சிறிய புழு வெளிப்பட்டது. அரசன் அந்தப் புழுவை யெடுத்து மந்திரி களைக் கூப்பிட்டுச், சூரியன் அஸ்தமிக்கின்றது. இனி எனக்குச் சர்ப்பம் கடிக்குமென்ற பயமில்லை. சபித்த முனிவர் வாக்கு பொய் யாகமலிருக்கட்டும் இந்தப் புழு தட்சகனென்று பெயர் கொண்டு என்னைக் கடிக்கட்டுமென்றார். மந்திரிகள் சும்மாவிருந்தனர். அர சன் புழுவைத் தமது தலைமேல் வைத்துக்கொண்டு சிரித்தார். உட னே தட்சகன் தன் உடலினால் அவரைச் சுற்றிக்கொண்டு சிரித்தார்.

உடனே தட்சகன் தன் உடலினால் அவரைச் சுற்றிக்கொண்டு இறைந்து சீறிக்கொண்டு இராஜாவைக் கடித்தான். அந்த பாம்பைப் பார்த்ததும் மந்திரிகளோடிப் போனார்கள்.

நாற்பத்திமூன்றுவது அத்தியாயம்.
ஆஸ்தீகபர்வத் தொடர்ச்சி.

மந்திரிகள் மஹா தககத்தை யடைந்து வருந்தினார்கள். அப்போது தட்சகன் ஆகாயமார்க்கம் போனான். தாமரை வண்ணமுள்ளவனை அகத தட்சகன் ஆகாயமார்க்கத்தில் போவதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அந்த மாளிகை சர்ப்பவிஷாக்கினியால் பற்றி பெரிதது. மந்திரிமுதலானவர்கள் அந்த வீட்டைவிட்டு ஓடிப்போனார்கள். பின் அரசனுக்கு அபரகிரியையெல்லாம் செய்தார்கள். அந்த நகரத்தாரும் மந்திரிகளும், புரோகிதரும் யோசித்து பரிட்சித்துவின் புத்திரனுகிய ஜனமேஜயனுக்குப் பட்டம் கட்டினார்கள்.

அந்த ஜனமேஜய மஹாராஜா குழந்தைப் பருவத்திலேயே சிம்மாசன மேறினனும், கன் பாட்டனான யுதிஷ்டிர ராஜாவைப்போல இராஜ்ய பரிபாலனம் பண்ணிவந்தார். பருவகாலத்தில் காசிராஜனுடைய புத்திரி வபுஷ்டமையென்ற பெண்ணை மணம் பேசினார்கள். சுவர்னவர்மாவென்னும் காசிராஜனும் தன் குமார்த்தியைக் கொடுத்தான். ஜனமேஜயன் அந்த வபுஷ்டமையை மணம் புரிந்து அவளோடுகூடி யில்லறம் நடத்தி வந்தார்.

நாறபத்துநான்காவது அத்தியாயம்.
ஆஸ்தீகபர்வத் தொடர்ச்சி.

இந்தச் சமையத்தில் தான் ஜரத்காரு மஹரிஷி காட்டினிடத்தில் ஒரு பள்ளத்தில் தலை கீழாகத் தொங்கிக்கொண்டிருந்த தமது பிதுர்க்களைக் கண்டு சம்பாஷித்தார். அததப் பிதிர்கள் ஒரு விலாமிச்சம் வேரைப் பற்றித் தாங்கி கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்து நீங்கள் யார்? ஒரு விலாமிச்சம் வேரைப்பற்றித் தலைகீழாகத் தொங்குகிறீர்கள், அதையும் ஒரு எலி கடித்துக் கொண்டிருகிறது. ஆதலால் இது சிக்கிரம அற்றுப்போம். அப்போது நிச்சயமாய் இதைப் பள்ளத்தில் விழுவீர்கள். உங்களுடைய கஷ்டத்தைப்பார்க் கும்போது எனக்கும் அதிக துக்கமுண்டாகிறது. என் தபசை முழுதும் கொடுத்தாவது உங்களைக் காப்பாற்றுவேன் என்று சொன்னார்.

பிதிர்கள், அப்பா! நீ யாவன்? எங்களைக் காபாறறமுடியாது தபசினாலும் காப்பாற்றமுடியாது. எங்களுக்கும் தபோபலமுண்டு, சந்ததியில்லாமையால் நரகத்தில் விழுகிறோம். பிரம்மதேவன் சந்ததியைப் புண்டரீகருவதேமுக்கிய தர்மமென்று கூறினார். உன்னை யின்னுனென்று சொல்லக்கூட வில்லை. சந்ததியில்லாமையால்

சொர்க்கத்திலிருந்து விழுகிறோம். எங்களுக்கு ஒரே ஒருவன் சந்தியாக இருக்கிறான். அவனும் பிரமசாரியாகத் தபசு பண்ணிக் கொண்டு திரிகிறான். அவன் பெயர் ஜரத்காரு. அவன் வேதவேதாங்கங்களை யுணர்ந்து மனமடங்கினவன் மஹாத்மா, தவசையே பெரிதாக நினைத்திருப்பதால் எங்களுக்கு இத்தக்கஷ்டம் வந்தது. விவாகம் செய்து கொள்ளாமையால் புத்திரனில்லை. நீ அவனைக் கண்டால், நீ பார்த்ததைச் சொல்லி விவகளுஞ்செய்துகொண்டு சந்ததியை விருத்தியாக்கும்படி சொல்லு அப்பா நீ பார்க்கிற இந்த வேர்கள் எங்கள் சந்ததிகள். காலத்திலை அற்றுப் போயின காங்கள் பிடித்துக்கொண்டிருக்கிற இந்த வேர்தான் எங்கள் சந்ததியான ஜரத்காரு. நீ பார்க்கிற எலிதான் காலம். அந்தக்காலம தபசில் விருப்பமுள்ளவனுய், அறிவினுல் நல்லெண்ணமிலலாத வனுயிருக்கிற ஜரத்காருவைப் பட்சிக்கின்றது அவனுடைய தவம் எங்களைச்சாப்பாற்றுது நாங்கள் நரகில் விழுகிறோம் விழுந்தபின் அவனும் இந்த நரகத்துக்கே வருவான்.யாகம் தவாமுதலியவைகள் சந்ததிக்கு ஈடாகாது நீ ஜரத்காருவைக் கண்டு நீ பார்த்தையெல் லாம் அவனுடன்சொல்லி எப்படியாவது சந்ததியை யுண்டாக்கச் சொல்லு. நீ பின்னுமென்று நாங்களறிந்து கொள்ளும்படிசொல்ல வேண்டுமென்று கேட்டார்கள் ஜரத்காரு இதைக்கேட்டு வருத்த மண்டைந்து சொல்லுகிறார்.

நாற்பத்தைந்தாவது அத்தியாயம்

ஆஸ்திகபர்வத் தொடர்ச்சி.

நீங்களெல்லாரும் என்னுடைய பிதிர்க்கள் ; அந்த ஜரத்காரு என்பவன் நான்தான். உங்களுக்குத்திருப்தி யுண்டாவதற்காக நான் என்னசெய்யவேண்டும் சொல்லுங்களென்று அழுதுகொண் டே சொன்னார். பிதிர்க்கள் குழந்தாய் ! நீ தெய்வச்செயலா யிங்கே வந்தது எங்களுக்குச் சந்தோஷ முண்டாயிற்று. நீ ஏன் விவாகஞ் செய்துகொள்ளவில்லை யென்று கேட்டார்கள். அவன், பிதிர்களே! இகதிரியத்தைச் சுவறச்செய்து இந்தச்சரீரத்தைச் சொர்க்கத்துக் குக் கொண்டு போகவேண்டுமென்பதே என்னுடைய எண்ணம். ஆதலால் ரிரியமில்லை உங்களுடைய கஷ்டநிவர்த்திக்காக விவாகஞ் செய்துகொள்ளுகிறேன். இந்தப்பெண் என் பெயருள்ளவளாயிருக்க வேண்டும். அவளுடைய உறவினர் பிரார்த்தனையின்பேரல அவளை எனக்குக் கொடுக்கவேண்டும். அவளை விவாகஞ்செய்து கொள் ளுகிறேன். அவளை நான் கர்ப்பரக்ஷை மாட்டேன் அப்படி நடந்தால் அவளிடம் சந்ததியுண்டாகும். என் பிதிர்க்கள் பெரிதாகம கொள்ளுதலில் அதிலிலையாயிருப்பார்கள் என்றுகூறி உலகமெல்லா மசலுனித்துச் சென்றுவிட்டார். இவருக்கு மூப்புப் பருவம் வரு மிதாலும் தபசாலும் தருமருடைய பெண்களைக்கேட்கவில்லை. நம் இடம்போல்

பாரியைகிடையாமையால் வருத்தமுற்று வனத்துக்குப்போய் நான் கன்னிகையை யாசிகிறேனென்று மூன்றுதரம் உரத்துக்கூவினர். பின் இந்த வனத்திலுள்ள தாவரஜங்கமங்களும் தெய்வங்களும் நான் சொல்வதைக்கேட்கவேண்டும். கஷ்டப்படிறேன் என்பிதிர்க்கள் விவரஞ்சொய்து சொல்லுகிறார்கள் நான் தரித்திரன். கஷ்டத்தை யனுபவிக்கிறவன். கன்னிகைக்காக உலகெங்கும் திரிகிறேன். அகப்படவிலலே. நான் அழைத்தவர்களில் எவராவனும் எனக்குக் கன்னிகையைக் கொடுக்கவேண்டும் என் பெயர் கொண்டவளை யெனக்குப் பிரகூயாக வலுவில் கொடுக்கவேண்டும். நான் அவ ளைக் காப்பாற்றமாட்டேன் என்று சொன்னர்.

அந்தச் சமயத்துக்காக காத்துக்கொண்டிருந்த நாகங்கள் வாசு கிக்குச் சொலலின வாசுகி தன் சகோதரியை அலங்கரித்து ஜரத்காவிடம் அழைத்துக்கொண்டு போனன். ஜரத்காருவைக் கண்டு அவளைப் பிரகூயாகக் கொடுத்தான். ஜரத்காரு அந்தப் பெண் பெயர் என்னவென்றார். ஜரத்காரு என்று வாசுகி சொன் னன் மூனிவர் அந்தப் பெண்ணை நான் காப்பாற்றமாட்டேனென் றார் உமது பெயருள்ள இதைப் பெண் உமது மனைவி தான். அவளை நான் காப்பாறறுகிறேன். நீர் இவளை மணவியாய்ப் பெற் றுகொள்ளுமென்றனன.

நாற்பத்தாறவது அத்தியாயம்
ஆஸ்தீகபர்வத் தொடர்ச்சி.

ஜரத்காரு ரிஷி, இதைப் பெண் எனக்கு விருப்பமில்லாததைச் செய்யக்கூடாது, செய்தால நான் இவளை விட்டுவிட்டுப் போய் விடு வேன். இது என்னுடைய நிச்சயம் என்றார். வாசுகி இந்தப் பெ ண்ணை நான் காபபாற்றுகிறேன் என்று உறுதி சொன்னபின் ஜரத் காரு வாசுகியின் வீட்டுக்குபபோய் அவளை பாணிக்கிரகணம் செய் து கொண்டார். அதன்பின் தமக்கென்றிருந்த கிருகத்துக்குப் போய், மனைவியைப் பார்த்து நீ எப்போதும எனக்குப் பிரியமில் லாததைச் செய்யவும் கூடாது, சொலலவுங்கூடாது. நீ இதைத் தவறி நடந்தால் அப்போதே உன்னையும் உன் வீட்டையும் விட்டுப் போய்விடுவேன் என்று வற்புறுத்தினர். அந்தப் பெண் அப்படியே நலலதென்று ஒத்துக்கொண்டு வெகுபயத்தோடு பணிவிடைசெய்து கொண்டிருந்தாள். கொஞ்ச காடகளுக்குப் பின் அந்தப் பெண் கர்ப்பகரித்தாள். ஒரு நாள் ரிஷியானவர் தன் மனைவியின மடி யில் தலையை வைத்துகொண்டு தூங்கினர். சூரியன் அஸ்தமித தான். அந்தப் பெண் தர்மம் கெட்டுபபோருமென்று பயந்து, இவர் தர்மச் சின்னையுள்ளவர், வந்தனை யனுபவிப்பவர், எழு ப்பினால் கோபிப்பார், எழுப்பாவிட்டால் தர்மம் கெடுமே றது. இவ்விரண்டில் எனன செய்கிறது தர்மமே சிறிது

என்று கினைத்துப் பகவானே! சூரியன் அஸ்தமனமாகிறான். எழுந்திருமென்று இனிமையான குரலோடு மெதுவாகச் சொன்னாள். அதினால் ஹோத்திரத்துக்குச் சித்தமாயிருக்கிறது, மேற்சையில் செல்வானாக் காணப்படுகிறது என்றாள். ரிஷியானவர் மணவியைப் பார்த்து நீ என்னே அவமானம் பண்ணினாய்; கான் தூங்கும்போது சூரியன் அஸ்தமிக்கமுடியாது. அவமானம் அடைந்தபின் அந்த இடத்திலிருக்கக் கூடாது. கான் உன்னிடத்தில இருக்கமாட்டேன். கான் போகிறேனென்றார். அந்தப் பெண் பர்த்தாவின் கோபத்தைக்கண்டு மனம் நடுங்கிச், சுவாமீ! தர்மலோபம் வரக்கூடாது என்பதற்காக இப்படிச் சொன்னேன் என்றாள். அவர் பெண்ணே! கான் பொய் சொல்வதில்லே. ஆகையால் நான் போகிறேன். கான் போனபின் இதை வாசுகிக்குச் சொல். நீயும் விசனப்படாதே யென்றார். ராக கன்னிகை பயத்தாடுகடுங்கி அழுதுகொண்டு, பகவானே! தர்மம் உலருமலும், உமக்குப் பிரியத்தையே செய்துகொண்டுமிருக்கிற என்னே விடத்தகாது. என்ன பிரயோஜனத்துக்காக என்னே உமக்குக் கொடுத்தேர அதைப் பெருமலிருக்கிறபோது வாசுகி என்னே என்ன சொல்லுவான். என் ஞாதிகளுக்கு உம்மாலுண்டாம் சந்ததி அவசியம். அதனால் தான் என் பந்துக்களுக்கு க்ஷேமம். நிச்சயப்படாமலிருக்கிற இந்தக் கர்ப்பத்துடன் என்னே விட்டுப் போவது தகுதியாமோ என்றாள். அவர், பெண்ணே! வேத வேதாங்கங்களைக் கரை கண்டவனும் அக்கினியைப் போலிருப்பவனுமான ஒரு குழந்தை உன் கர்ப்பத்திலிருக்கிறான் என்று சொல்லிவிட்டு ஜாத்காரு முனிவர் தவஞ்செய்ய விரும்பிப போய் விட்டார்.

ஐம்பத்தேழாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வத் தொடர்ச்சி.

சௌமிசாண்ய முனிவர்களே! ராக கன்னிகையான ஜாத்காருவானவள் தனது கணவன் போன பின் தன் சகோதரனுடைய வாசுகியினிடத்துக்குப் போய் அதைச் சொன்னாள், அதைக் கேட்டு வாசுகியும் அவனோடு கூட வருத்தமுற்றான் பெண்ணே! உன் கணவன் ஸ்ரேஷ்டராஞ் தடுக்கமுடியாதவர் என்பது எனக்குத் தெரியும். தெரிந்து தான் உன்னே அவருக்குக் கொடுத்தேன். அதற்குக் காரணம் தெரியுமா? அவர் மூலமாக நீ கர்ப்பவதியாய் ஒரு புத்திரனைப் பேற்றால் அந்தப் புத்திரன் ஜனமேஜயன் செய்யப்போகிற சர்ப்ப யாகத்தில் நாகங்கள் அழியாமற காப்பாற்றுவான். அந்த பிரயோசனத்துக்காகத் தான் உன்னே அவருக்குக் கொடுத்தது. அவ்வாறே பிரமதேவர் சொல்லியிருக்கிறார். அந்த மஹாத்மாவின் விவாகம் வியர்த்தமாகக்கூடாது. நீ கர்ப்பமடைந்தி

ருக்கிறாயா? இதைப்பற்றி நான் உன்னைக் கேட்பது தகாது ஆனும் பிரயோசனமிருப்பதால் கேட்கிறேன். உன் பர்த்தா உன்னிடத்தில் எப்படி நடந்துகொண்டார். அந்த எனக்குச் சொல்லி என் மனச்சஞ்சலத்தை நீக்கு. ஒரு வேளை அவர் என்னைச் சபித்தாலுஞ் சபிப்பார் என்று சொன்னான், ஜரத்காரு சொல்லுகிறாள்.

மஹா தபசியாகிய அவரை என் கர்ப்பத்தைக் குறித்துக் கேட்டேன். உன்னிடத்தில் சந்ததி யுண்டாயிருக்கிறதென்று சொல்லிப் போய் விட்டார். அவர் வாக்கில் பொய்யிராது என்றாள். பெண்ணே! நீ வருத்தப்படாதே. தேஜசுள்ள புத்திரன் உனக்குப் பிறப்பான் என்று சொல்லிவிட்டுப் போனார். ஆகையால் நீ வருத்தப்பட வேண்டாமென்றாள் அதைக்கேட்ட வாசுகி சந்தோஷமடைந்து தன் சகோதரிக்கு யாதொரு குறைவுமில்லாமல் வஸ்திராபரணங்கள் தனம் முதலியன கொடுத்து மகிழ்வித்துப் பெருமையாக நடத்தினான் அந்தக் கர்ப்பம் விருத்தியடைந்தது. கொஞ்சநாளில் தேவனுக்குச் சமானமான ஒரு குமாரனைப் பெற்றாள்.

அந்தப் புத்திரன வாசுகி வீட்டிலேயே வளர்ந்தார். சியவனருடைய புத்திரரிடத்தில் வேதசாஸ்திரங்களைக் கற்றுணர்ந்தார். அவர் புத்தியும் குணமும் நிறைந்தவர். பிரமசாரி விரதத்தை நிறைவேற்றினர். அவர் கர்ப்பத்திலிருக்கிறபோது அவருடைய பிதா இருக்கிறானென்று அர்த்தங்கொள்ளும் "அஸ்தி" என்னும் வார்த்தையைச் சொல்லிப் போனபடியால் அவருக்கு ஆஸ்தீகரென்று பெயரிட்டார்கள். ஆஸ்தீகர் இளம்பிராயத்திலேயே ஞானமுடையவராக இருந்தார், வாசுகி அவரை வெகு ஜாக்கிறதையாகக் காப்பாற்றி வந்தான். அவரைக் கண்டு நாகக் கூட்டங்கள் மகிழ்ச்சியடைந்தன.

நாற்பத்தெட்டாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வத் தொடர்ச்சி

சௌனகர், ஸூதரைப்பார்த்து, ஜனமேஜய மஹாராஜா தமது பிதா இறந்ததைப்பற்றி மந்திரிகளிடத்தில் எவ்வாறு கேட்டுத் தெரிந்துக்கொண்டார்? அதைச் சொலல வேண்டுமென ஸூதர் சொல்லுகிறார்,

ஜனமேஜயர் மந்திரிகளே! என் பிதாவினுடைய சரித்திரமும், அவர் மரணமடைந்த விதமும் உங்களுக்கு நன்றாய்த் தெரியுமே? நீங்கள் அனைத்தையும் சொல்லுங்கள். அதை அறிந்துகொ

ண்டு பின் தகுதியாயிருக்கையால் சர்ப்பயாகஞ் செய்கிறேன். நியாயமில்லாவிட்டால செய்கிறதில்லை யென்றார். மந்திரிகள் சொல்லுகிறார்கள்.

மஹாராஜாவே! உமது பிதா தர்மசீத்தமுள்ளவர் நாலு வருணங்களும் தத்தம் குலாசாரம் தவாமல் நடக்கும்படி அரசு செய்தார் தருமமே வடிவம் கொண்டது போன்றவர். உப்பில்லாத ஐசுவரிய பாக்கியமங்களே யுடையவர் அவருக்குப் பகைவர்களில்லை. அவரும் ஒருவரைப் பகைத்ததில்லை பிரம்மாவைப்போல எல்லாப் பிராணிகளையும் சமானமாகப் பார்ப்பவர் அவருடைய ஆளுகையில் நாலு வருணத்தாரும் லக்ஷக் தத்தம் தருமத்தைச் செய்துவந்தார்கள். கணவனில்லாத ஸ்திரீகளையும், அதிகியாணவர்களையும் அங்கப் பழுதாயுள்ளவர்களையும் பரிபாலித்து வந்தார். அவருடைய பிரஜைகளும் அவரை நேசித்தது ஐசுவரியத்துடன வாழ்ந்தார்கள் கிருபாசாரியாரிடம் தனுர்வேதம கற்றுணர்ந்தவர், கௌரவர்கள் பரிக்ஷயம (அழிவை) அடைந்தபின் புறந்தவராதலால் பரிக்ஷித்து என்று பெயர் பெற்றார் இராஜதர்மங்களில சிரேஷ்டராகுந்தில் மிகுந்தவர். சகல குணங்களிலும் நிறைந்தவர். இந்திரியங்களை ஜெயித்தவர். மனதை வசப்படுத்தினவர். காமக்குரோதாதி ஆறு பகைகளையும் வென்றவர் நீதி நூல்களை யுணர்ந்தவர். இந்த உலகத்தை அறுபது வருஷம் பரிபாலித்தார். பிறகு பிரஜைகளெல்லாரும் தகைக்கப்பட்டு இறந்து போனார் என்றார்கள் ஜனமேஜய மஹாராஜா, இந்த வமசத்தில பிரஜைகளால விரும்பப்படாத அரசனொருவனும் பிறந்திருக்கமாட்டான். பிதாமகர்களான பாண்டவர்களுடைய ஒழுக்கங்களைப் பார்த்த பிறகும் சொல்லவேண்டுமா, என பிதா எவ்வாறு மரணமடைந்தார்' அந்த வரலாற்றை உள்ளபடி சொல்லவேண்டுமென மந்திரிகள் சொல்லுகிறார்கள

மஹாராஜாவே! உமது பிதா பாண்டு மஹாராஜாவைப போலவே இராஜ்ய பரிபாலன காரியங்களை எங்களிடத்தில ஒப்புவித்து வேட்டையாடுதலிலேயே காலங் கழித்து வந்தார். ஒருகள் ஒரு மானை அடித்தார் அது ஒடிப்போயிற்று. அதைத் தொடர்ந்து போனார். அந்த மான் அகப்பட்டவிலலை இராஜ பசியால்களைத்திருக்கையில மௌனவிரதம் பூண்டிருந்த சமீக முனிவனைக்கண்டு, மானைப்பார்த்தீரோ வென்றார். அம்முனிவர் மறுமொழி சொல்லவில்லை இதனால் கோபங்கொண்டு செந்த பாம்பை யெடுத்து அவர் தோளிற் போட்டார் அந்த முனிவர் அப்போது ஒன்றும் செய்யாமல் சும்மா யிருந்து விட்டார்

நூற்றாவது அத்தியாயம்
ஆஸ்தீகபர்வத் தொடர்ச்சி.

பரீக்ஷித்துச் சிருங்கியென்ற ரிஷியின் சாபத்தால் ஒரு புத்திரியிருந்தாள். அவள் உத்தரையாவாள். பாண்டவர்களுடைய பேரனும், மஹா பராக்ரமசாலியும், அதிக தேஜஸுள்ளவனும், ஆயிரம் அச்வமேதயாகம் ஆசரித்துக் கொண்டிருக்கிறவனுமாகிய பரீக்ஷித்தரசன் என்பவன் தன் ஆயுள் முடிவில் சிலகாலம் பிறந்துகொண்டு மீண்டுவரும்போது அவருடைய பிதாவாகிய சிருங்கி ரிஷியின் சாபத்தை அவருக்குத் தெரிவித்தார். அதுகேட்ட சிருங்கி கோபித்துக் கொண்டு; உடனே ஆசமனஞ்செய்து, குற்றமற்றவனான என் பிதாவின் மேல் இறந்த பாம்பைப் போட்டவனை அந்தப் பாவியைத் தட்சகன் என்னும் நாகராஜன் இன்றுமுதல் ஏழாம் நாட்களுக்குள் கடித்துக் கொல்லக் கடவன் என்று சபித்தார் பிறகு தன் பிதாவினிடம்போய்த் தான் மஹாராஜாவைச் சபித்ததை அவருக்குத் தெரிவித்தார். அதுகேட்ட சமீக முனிவர் கௌரமுகர் என்ற முனிவரை அனுப்பி உமது பிதாவுக்கு அதை யறிவித்தார். உமது பிதாவும் தக்க முயற்சியோடு ஜாகரூகராயாக இருந்தார். சமீக முனிவரால் அனுப்பப்பட்ட கௌரமுகர் என்பவர் மிகவும் சீக்கிரத்தில் இங்கு வந்து சேர்ந்தார். அப்போது பிராமண உருவங் கொண்டு வந்த தட்சகர் அவரைப் பார்த்து நீர் இவ்வழியாக எங்கே போகிறீர்? என்று கேட்டான். காசியபர், பிராமணரே! இன்று பரீக்ஷித்து மஹாராஜாவைத் தட்சகனென்னும் நாகராஜன் கடித்துக் கொல்லப் போகிறானென்று அவன் வருகிறவரை அந்த விஷத்தைப் போக்கி அவரைக் காப்பாற்றப் போகிறேன் என்றார். தட்சகன், பிராமணரே! நான் தட்சகன் தான் சாபத்துக்கொண்டும் அரசனை நீர் பிழைப்பிக்க வேண்டுமென்ன? என்ன விலைக்கு நீர் அரசனைப் பிழைப்பிக்க முடியுமோ அதை நான் தருகிறேன் என்று கூறி அவரிடமிருந்த ஒரு ஆலமரத்தைத் தந்தான். அந்த மரம் உடனே பொடியாய் விட்டது. காசியபர் உடனே அந்த மரத்தை பிழைப்பித்தார். அதைக் கண்ட தட்சகன் ஐயரே! உமக்கு வேண்டிய தனத்தை நான் தருகிறேன், அதை விரும்பாமல் ஏன் திரும்பிப் போகிறீர்? என்று கேட்க, அதற்கு காசியபர் நான் அரசனிடம் போகிறேனென்றார். தட்சகன் அவருக்குத் திருப்தியுண்டாகும்படி வேண்டிய திரவியம் கொடுத்து அனுப்பிவிட்டான். அவரும் திரும்பிப் போய்விட்டார். பிறகு தட்சகன் மாறுவேஷம் பூண்டு அரசன் மாளிகையிற் புகுந்து எவ்வளவோ ஜாக்கிரதையுடனிருந்த மஹா ராஜாவைக் கடித்துக் கொன்று விட்டான் என்று சொன்னார்கள். மறுபடியும் அரசனைப் பார்த்து நாங்கள் கண்டதும் கேட்டதுமான உண்மைகளிவைகளே. ஐயையோ உங்கள் மஹாராஜனுக்கும், உமது பிதாவுக்கும் கெடுதிசெ

து அவமானம் பண்ணின தட்சகனைக் குறித்து யாது செயலே
ண்டுமோ அதை யோசித்துச் செய்யுங்கள் என்றார்கள்

தட்சகனால் எரிக்கப்பட்ட மரத்தைக் காசியபர் பிழைப்பித்தா
சென்பது மஹா ஆச்சரியம். இந்தப் பிராமணன் தான் கடித்துக்
கொன்ற அரசனைப் பிழைப்பித்தால் தட்சகனுக்கு விஷம் பேரய்
விட்டதென்று உலகத்தில் அபவாதம் வரும் என்று எண்ணியே
அந்தத் துஷ்டனாகன் காசியபருக்குத் திரவியம் கொடுத்து அவ
ப்பிவிட்டான். காசியபர் வந்திருந்தால் என் பிதா இறந்திருக்கமாட்
டார். அந்தத் துஷ்டனை நான் தண்டிக்கத்தான் வேண்டும். மனித
சஞ்சாரமில்லாத காட்டில் தட்சகனுக்கும் காசியபருக்கும் நடந்த
சம்பாஷணைகள் எப்படி வெளிப்பட்டது? உங்களுக்கு யார் சொன்
னார்? இதுகளை யறிய விரும்புகிறேன். அதைச் சொல்லுங்கள்.
பின் சர்ப்பங்களை நாசஞ்செய்ய உபாயம் செய்வோமென்றார்

மஹாராஜாவே? விறகு வேண்டுமென்னும் சாக்கில் ஒரு
மனிதன் அந்த மரத்தின் மேலேறியிருந்தான். அதை வேரோடுட
கார்த்துகொண்டு உலர்ந்த விறகுகளைத் தேடிப் பார்த்துக்கொண்டி
ருக்கும்போது காசியபரும் தட்சகனும் பேசிக்கொண்டிருந்தார்கள்.
மரத்தின் மேலிருந்தவனை அவர்கள் பார்க்கவில்லை. அவனோ இவர்
களுடைய சம்பாஷணையைக் கேட்டுகொண்டிருந்தான். தட்சகன்
மரத்தைக் கடித்தபோது மரத்தின் மேலிருந்த மனிதனும் அந்த
பாத்தோடு நீரில்விட்டான். அந்த மரம் காசியபர் மந்திரவல்லமை
யால் பிழைத்தபோது அவனும் பிழைத்தான். அந்த மனிதன்தான்
காசியபருக்கும் தட்சகனுக்கும் நடந்த சம்பாஷணையை முழுதும
எங்களுக்குச் சொன்னான் என்றார்கள். அதைக் கேட்ட ஜனமேஜய
மஹாராஜாவுக்கு அடங்காத கிங்கமுண்டாயிற்று. கண்ணீர் விட்ட
முதார். பிறகு சம்மைத்தாமே தேறுதல் செய்துகொண்டு, ஆசமனம் செய்து
விட்டுச் சற்றுநேரம் யோசித்துப் பின் மந்திரிகளை நோக்கிக கூறினா
ர்.

மந்திரிகளே! நீங்கள் சொன்னதைக் கேட்டபின் ஆதங்கத் தட
சகனை பாபியைத் தண்டிப்பதி தான் திருப்தியென்று நினைகிறேன்.
ஒரு முனிவருடைய சொல்லையே பிதாளமான காரணமாகக் கொ
ண்டு என் பிதாவைக் கொன்றான். அது போகட்டும்; காசியபரைத்
திரும்பிப் போகச் சொன்னது நியாயமாகாது. அவர் வந்திருந்தால்
என் பிதா ஜீவித்திருப்பார். அவர் ஜீவித்திருப்பதனால் இவனுக்கு
என்ன குறைவு வரும். பிராமணோத்தமராகிய காசியபரைத் தடுத்
தது பெரிய அநியாயந்தான். ஆகையால் சர்ப்ப யாகத்தைத் தொ
டங்கி உதங்க முனிவருக்கும், உங்களுக்குந் திருப்தியைச் செய்து,
பழிக்குப்பழி வாங்குகிறதே நியாயம். நான் அந்தக் காரியத்தைச்
செய்யப்போகிறேனென்று சொன்னார்.

ஐம்பத்தாராவது அத்தியாயம்.

ஆஸ்திகபர்வத் தொடர்ச்சி

இல்வாறு சொன்னதை மந்திரிகளுமொப்புக் கொண்டார்களா பிறகு புரோகிதரையும், மித்துவிக்குகளையும் அழைத்துச் சொல்லுகிறார், கேளுங்கள் என் பிதாவைக் கொன்ற துராத்மாவான தட்சகனுக்குப் பிரதி செய்ய வேண்டும் அவனை அவன் கூட்டத்தோடு அக்கினியில் சுட்டெரிக்க வேண்டும். அதற்குரிய கிரியைச் செய்யுவகளுக்குத் தெரியுமா? என் பிதாவை விஷாக்கினியால் எரித்த தட்சகனை என் ப்ரஹ்மாக்கினியால் அவசியம் தகிக்கவேண்டும் என்றார். அவர்கள் மஹாராஜரே! தேவர்களால் நியமிக்கப்பட்ட சர்ப்பசத்ரயாகம் உமக்குச் சாதகமானது அது புராண பிரசித்தமானதுவென்றார்கள். அதை உம்மைத்தவிர வேறெவராலுஞ் செய்ய முடியாது சனமுஞ் சொன்னார்கள் அரசனை மகிழ்ந்து ரித்விக்குகளை பார்த்து பிராமணோத்தமர்களே! அந்த யாகத்தை நான் செய்ய விரும்புகிறேன். அதற்குப் பிரயத்தனம் பண்ணுங்களென்றார் அந்த பிராமணர்களெல்லாரும் வேதங்களைக் குறையறக்கற்ற புத்திமான்கள். ஆகையால் சாஸ்திரப்படி யாகசாலையை நிர்மித்து ராஜாவுக்கு யாகதீட்சை செய்வித்தார்கள். அந்த யக்ஞசாலையை நிர்மித்த சிற்பியானவன், இப்பொழுது காணப்படுகிற சகுனமாவது. இந்த யாகத்துக்கு விக்கினம் நேருமென்பதை முன்னறிவிக்கின்றது. அந்த விக்னமுமொரு பிராமணரால் வருமென்று சொன்னான். அவனைக்கேட்ட அரசன் கால்லாளரை நோக்கி என் உத்தரவில்லாமல் ஒருவனையும் உள்ளே விடவேண்டாமென்று கண்டிப்பாக கட்டளையிட்டார.

ஐம்பத்திரண்டாவது அத்தியாயம்.

ஆஸ்திகபர்வத் தொடர்ச்சி.

பின் சர்ப்பயாகஞ் செய்யத் தொடங்கினார்கள். யாகஞ் செய்விக்குமரித்துவிஜருகள் முறைமை தவறாமல் தந்தம் கார்யங்களைச் செய்தார்கள் கரிய நிறமுள்ள வஸ்திரங்களணிந்தும் பேர்த்து மகரங்களி புகையிலுள்ள கண்கள் சிவக்க அக்கினியில் நேராமஞ் செய்தார்களை மந்திரங்களினால் சர்ப்பங்களை அழைத்தார்கள். சர்ப்பங்களெல்லாம் இப்போதுங்கிருக்கமாட்டாதன. சனதாதியுடன், படமெடுத்தது சீறிக்கொண்டு, ஒன்றையொன்று வாலாற் சுற்றிக் கட்டிக்கொண்டுவந்து தீயில் விழுந்திறந்தன. கரும்பாம்பு, வெண்பாம்பு நீல நிறப்பாம்புகள் குஞ்சுகளும் பெரியதுமாய் வந்து அக்கினியில் விழுந்து மடிந்தன. தக்ஷனை காதைப் போன்று அடியும் னியும் சிறுத்து மத்தியபாமும் பெருத்திருக்கிறதும் ஒரு யோசனை நீளமுள்ளதுமான அளவில்லாத பாம்புகள் ஓயாமல்வந்து அக்

மில் விழுந்து சரிந்தன. குதிரைகளைப் போன்றவைகளும், யானைகளைப் போன்றவைகளும், யானைத் துதிக்கைகள் போன்றவைகளுமான சர்ப்பங்கள் கணக்கில்லாமல் தீயில் வந்து விழுந்து மடிந்தும்பாயின நாயர் சாபவசப்பட்ட விஷப்பாம்புகள் அவ்விஸ்தாரமில் வந்துவிழுந்து எரிந்துகொண்டேயிருந்தன.

ஐம்பத்துமூன்றாவது அத்தியாயம்

ஆஸ்தீகபர்வத தொடர்ச்சி.

சௌனகர், ஸூதரே! ஜனமேஜய மஹாராஜரின் சர்ப்பயாகத்தில் ரித்துவிக்குகளாயிருந்தவர்களையும் மற்றவர்களையும் சொல்லுங்கள். சபையிலிருந்தவர்களைப்பற்றியும் கேட்டிருக்கிறேன். சபையிருந்த வண்ணத்தில் பிறகு வேறு முனிவர்களான சண்டபார்க்கவர், கோபதர், குதரு வம்சத்தில் பிறந்த மரியாதையான, ரினி கொளபர், உத்தாலகர், சாங்கரவர், பாலகர், அத்தவர், பிர்ஹ மகத்தர், பிரம்மதர்கு, பிர்களர், அவிஹித், தேவலர், நாரதர், பர்வதர், ஆத்ரேயர், குண்டர், ஜடர், காலகடர், வத்ஸகோத்ர விருத்தரான சருதசிரவஸ், கோஹலர், விதபாசமர், மௌஞ்சாயனர், ஸமஸ்ரௌடபர் முதலானவர்களும் இன்னும் அதிக பிராமணர்களும் சபையில் வந்திருந்தார்கள். அந்த நிகழ்ச்சிகளுக்காகச் செய்யப்பட்ட சர்ப்பயாகத்தில் பயங்கரமான கொடிய சர்ப்பங்கள் எண்ணிறந்தன. ஸர்ப்பங்களினுடைய ஊன் ஜலம் வர்ணிக்கமுடியாமல் முழுமூறு. எரிகிற பாம்புகளின் நாற்றம் வீசியது; ஜனமேஜய மஹாராஜர் சர்ப்பயாகத்தைத் தொடங்கினவுடனே ரிட்விக்குகள் இந்திரனுடைய அரண்மனையில் போய்வசித்தான் இந்திரன் அவ்வாப பயப்படாதே உன்னைக் குறித்து ப்ரமதுவையரசு கேட்டேன். அந்தச் சர்ப்பயாகத்தில் உன்னுடைய பாம்பு போகும் பயமில்லை! நீ கவலைப்படாமலிரு என்று சொல்லி அவனைச் சமாதானப் படுத்தினான். அதைக் கேட்ட தக்ஷகன் கவலை நீங்கி அங்கேயே சுகமாக வசித்தான். இப்படிச் சர்ப்பங்களெல்லாம் ஹோமாக்கினியில் விழுந்துகொண்டிருக்கிறபோது, வாசுகிக்கு மிகுந்த விசனமுண்டாயிற்று. தன் பரிஜனங்களில் சிலரை மிச்சமாயிருக்கிறார்கள். அவனுக்கும் கவலைமிஞ்சிட்டது அப்போது தன் சகோதரியைப் பார்த்து கடுங்கிக்கொண்டு சொல்லுகிறான

அனபுள்ளவளே! என் சரீரமெல்லா மெரிகிறது. மனம் மயங்குகிறது. கனல மேலிடுகிறது. கண்கள் சுழலுகின்றன. இருதயம் பிளகிறது போகும் போலிருக்கிறது. சுவாசிக்க தப்பிப்போயிற்று, ராஜ்ஜியபாரத கெருப்பில் விழப்போகிறவன இருதயகம் என்னைக் கொல்வதற்காகவே பெய்யப்படுகிறது. நான் நிச்சயமாகவே மரணமடையவேண்டும். தங்கரய் என்ன பலனுக்காக உன்னை ஜரத்காரு முனிவரிடத்தில் கொடுத்தேனோ அந்தக் காரியம் நிறைவேறுகிறகாலம் இதுதான். எனது பன்னிரண்டு ஜனங்களையும் என்னையும் நீ காப்பாற்ற வேண்டும. அந்த வாசுகியை ஆஸ்திகனென்னும் புத்திரனுக்கு நான் பிரமா சொல்லியிருக்கிறேன் ஆகையால் நம்மை புத்திரனுக்கு மனைவியாகிய தன்னிடத்தில் கொண்டுபோய் பாதுகாப்பாற்றுவது நீ செய்யவேண்டுமென்றான்.

ஜரத்காரு முனிவர் ஆஸ்திகனைப் பெறுதல்

அதைக்கேட்ட ஜரத்காரு முனிவர் மனைவியை நோக்கி ஓ பதிவிரதையே! என் தமையனை வாசுகி ஒரு காரணத்தினால் எனக்கு உதவி செய்வதற்கு மணம் புரிவித்தான். அந்தக் காரியத்தை எப்படி நிறைவேற்றவேண்டுமோ அப்படி நீ செய்யவேண்டுமென்றான். ஆஸ்திகன், இந்த என்ன காரணம்! அதை யெனக்கு சொல்லுங்கள் என்ன அப்பொழுது ஜரத்காரு தன் புத்திரனுக்கு அந்தக் காரணத்தைச் சொல்லுகிறான்.

அப்பா நமது தாய் பாம்புகளுக்குத் தாயாகிய கத்ருவும் அவள் சகோதரியாகிய வினதையும் உச்சைசிரவமென்னும் குதிரையின் நிறத்தைப் பற்றி பந்தயம் போட்டுக்கொண்டார்கள். அந்தவுடன் உச்சைசிரவத்தைக் கருநிறமாகச் செய்யவேண்டுமென்று தன புத்திரர்களாகிய சர்ப்பங்களுக்குக் கட்டளை யிட்டாள். அவைகள் நாங்கள் செய்யமாட்டோமென்று மறுத்தன. அதனால் அவன் கோபித்துக் கொண்டு, ஓ சர்ப்பங்களே! நான வினதைக்கு அடிமையாக நிருப்படி செய்ய உங்களை வேண்டினால் நீங்கள் நாட்டமிடாமென்றீர்கள், ஆகையால் நீங்கள் ஜனமேஜயனுடைய சர்ப்பயாகத்தில் நீங்கள் எல்லாரும் மடியக் கடவீர்களென்னறு சபித்துவிட்டாள். பிரமாவும் அதற்கு ஒத்துக்கொண்டார். அபிராதம் கலைந்ததபின், வாசுகி தேவர்களை பிரார்த்தித்தான். தேவர்கள் பிரமதேவரிடம் போய்த் தேவதேவா! இந்த வாசுகியானவன் தாயாருடைய சாபத்தைப்பற்றி வருந்துகிறான். அந்தச் சாபம் நிவர்த்தியாகும் உபாயம் என்ன? என்று கேட்டார்கள். பிரமதேவா வாசுகியின் சகோதரியான ஜரத்காருவானவள் ஜரத்காரு மஹரிஷிக்கு மனைவியாய் ஒரு புத்திரனைப்

பெறுவாள். அந்தப் பதிவிரதன் சாபத்தினால் கர்ப்பந்தரிப்பினை முர். இந்தக் காரணத்தால் எண்ணை உன் பிதாவுக்குக் கொடுத்து ப்ரமதிவல் வாங்கினபடியே நீ பிறந்திருக்கிறாய். ஆகையால் நீ எப கணிடயிருந்தும் பயத்தினை நீயும் காபபாற்று வண்டுமென்றாள். அதைக் கேட்ட ஆஸ்திகர் தான் அப்படியே செய்கிறேனென்று தாயாருக் குச் சொல்லிவிட்டு வாசுகியை நோக்கி மகாதபோதனரே! உலகை உண்டாக சாபபயாகத்தில் இறவாமல் நி ருத்தபடி செய்தீரல்லவா இது ஆச்சரியம், நீ பயபபடவேண்டாம் நான் இப்பொழுதே ஜனமேஜய மஹாராஜனுடைய யாகசாலைக்குப் போய்த் தக்ஷகனை அக்கினிகுண்டத்தில் வரவழைத்து விழுங்கச் செய்கிறேன். வாசுகி, ஆஸ்திக! நான் பிரமாவினுடைய கண்டினியால் வருந்தித் தினை தெரியாமல் நீங்கள் என்னை நிந்தித்தீர்கள் நான் பிள்ளைகளாலும் மனைவியாலும் அந்த ஆஸ்திகர் ரதபரீக்ஷித்து ஸ்வர்க்கத்துக்கு பயபபட்டு யாகசாலைக்கு பயணமாகும் ப்ரமதவரையிலே தண்டனையை விலக்குகிறேன். நீ பயப்படவேண்டாம் என்று சொல்லி, அவனுடைய பரிதாபகரமான பரார்த்தனையை அங்கீகரித்து அவனுக்கு ஜனமேஜய பரீக்ஷித்து யாகசாலையை நீங்கி விரைவாக ஓடுவாயாக என்று யாகசாலைக்கு வெளியே போகச் சொன்னார். அவர் ஆஸ்திகர் வாசுகியிடம் விடைபெற்றுக் கொண்டு ஜனமேஜய பரீக்ஷித்து யாகசாலையை நோக்கி விரைவாக நடந்தார். அப்பொழுது அங்கு யாகசாலையில் ஹோதாவான அக்னி பகவான் ஆஸ்திகரைப் பார்த்து, ஐயனே! நீ யாகசாலைக்கு வந்த காரணம் என்ன? என்று கேட்டார்.

ஸ்ரீ மஹாபாரதம் ஆதிபர்வம் முற்றும்

ஜனமேஜயன் யாகமும் ஆஸ்திக பர்வத தொடர்ச்சியும்

பரீக்ஷித்து குமாரரே! பாரத குலோத்தமரே! பிரபாவமுடைய வருணனும் சந்திரனும் ப்ரமாவும் யாகஞ்செய்தார்கள். இந்த யாகமும் அவைகளைப்போலவே பிரகாசிக்கின்றது. இந்திரனும் ஆறு யாகங்கள் செய்தானென்று கூறுகிறார்கள். உமது முன்னோர்களான ஆறு பாகமும் அவனுடைய பதினெட்டாவது யாகத்தைத் தடையாமல் முடிக்கச் செய்தீர். நமது அனைவர்களுக்கும் நீர் மிகவும் கடவுள். யமனுடைய யாகம், அரிச்சந்திரனுடைய யாகம், வருணனுடைய யாகம், அம்பரீஷனுடைய யாகம், மருத்தனுடைய யாகம் ஆகிய இந்த ஆறு யாகங்களும் பிரபலமாக நடந்தன. சுஷேபர், கயன், குசபர்ணிவாகள் செய்த யாகங்களுக்கும் உமது யாகம் ஒப்பாயிருக்கிறது. கிருகராஜனே. அதிகமானது. தர்மத சாமன், இவர்கள் செய்த யாகங்களை போலவும் உமது யாகமும் இருக்கின்றது. தர்ம தேவலோகத்தினை புதுப்பிக்கச் செய்தபோல நீரும் தேவலோகத்திலும் புகழப்பட்டுச் சிறந்தது அதுபோலவே உமது யாகமும் இருக்கிறது. பரீக்ஷி

நமோநமே! வியாசர் முதலானோர் செய்தார் அந்த யாகத்தைப் போலவே இதுவுமிருக்கிறது. பரதரிலோத்தமர்களே! சூரியனைப் போன்ற தேஜஸுள்ள இந்த ரித்துவிக்குகள் இந்திரனுடைய யாகத்திலிருந்தவர்களைப் போலவே யிருக்கிறார்கள். இவர்கள் அறிந்து தொன்னவெண்டியவை ஏதும் ஒன்றுமில்லை. இவர்களுக்குச் சமானமான ரித்துவிக்கு எங்கும் எவராலும் இல்லை என்று ஞானதிருஷ்டியுள்ள உலகத்திலுள்ள ரித்துவிக்குகளெல்லோரும் அபிநயத்துடன் ஒரே குரலாக ஒலிப்பார்களே, பலவர்ணமான கிரணங்களையுடைய அக்னி பகவான் வலமாகச் சுழலித்துக்கொண்டு உமது ஆவிசை விரும்பிப் புசிக்கின்றார். குடிகளைப்பரிபாலிக்கிற அரசர்கள் உம்மைப்போல ஒருவருமில்லை. உம்முடைய தைரியத்துக்காகநான் மகிழ்ச்சியடைகிறேன். நீரும், வருணனும் யமனுமே தர்மத்துக்கு ராஜாக்கள். தேவேந்திரனே பூலோகத்தில் வந்து பிரஜாபாலனம் பண்ணுகிறதுபோல நீர் பரிபாலிக்கிறீர். உம்மைப்போன்ற அரசர்கள் உலகாலத்திலுமில்லை, நீர் கட்டவாங்கனையும் நிலிபிணையும் ஒத்து இருக்கிறீர். யயாதிக்கும் மாந்தாதாவுக்கும் ஒப்பான சக்தியுள்ளவராயிருக்கிறீர். சூரியனைபோல பிரகாசிக்கிறீர். பிருகஸ்பதிபோல உறுதியுள்ளவராயிருக்கிறீர். உம்முடைய சக்தி வால்மீகியைப்போலிருக்கிறது. வஸிஷ்டரைப்போல தீக்ஷாடனங்கியுடையவராயிருக்கிறீர். இதிகாசபுராணங்களை பிரபுத்தனுடையவராயிருக்கிறீர். காரியங்களை நிர்த்தியைபோல பகுவை வரிசை விவகரிக்கிறீர். தருமஞானத்தில் யமனைப்போல இருக்கிறீர். சகல குணங்களும் நிறைந்திருப்பதாலும் இலட்சுமிக்கு வாசஸ்தானமாயிருப்பதாலும் தருமராஜருக்கு ஒப்பாக விளங்குகிறீர். ஐசுவரியத்துக்கதிபதியாயிருப்பதுபோலயாகத்துக்கும் நிதிபாயிருக்கிறீர். பலத்திலே தடிபோதபலனுக்கு ஒப்பாக இருக்கிறீர். பிராமண வாயிலைப்போல அல்லதிரளிதையில் சிறந்திருக்கிறீர். ஓ! ராஜா, நிறைந்த முதலானவைகளைப் போன்ற மகிமையுள்ளவராய் இருக்கிறீர். எதிரிகளால் கண்ணெடுத்து பார்க்க முடியாதவராயிரிர். கலை ஆஸ்திகர் தேதாத்திரம்பண்ண அக்கினியும் சரியாரும், அரசனும் சக்திதோஷமடைதர்கள் அவர்களுடைய கருத்தையறிந்து அரசன் சொல்லுகிறார்.

ஐம்பத்தாறுவது அத்தியாயம்
ஆஸ்திகபர்வத்தொடர்ச்சி.

அரசன் சபையரைப்பார்த்து, இதற்குப்பிள்ளையாண்டான் சிறுவனாயிருந்தாலும் பெரியோர்களைப் போலப்பேசுகின்றானே. இவன் பாலகனைத்தானா வில்லை. ஆகையால் நான் இந்தச் சிறுவனுக்கு வரங்கொடுக்கப்பிரியப்படுகிறேனென்றார். சபையார் மஹாராஜாவே! இவனுடைய தகப்பனாரிடத்தில் நீர் பிராமணர் சிறுவனாயிருந்த போதிலும் அரசன் சிலனுக்கு மரியாதை பண்ணவேண்டும் உம்முடைய எண்ணங்க

செல்லாம் நிறைவேறுகிறதற்காக இந்தப் பிராமணனுக்குரிய கர்மங்களை நீ செய்ய வேண்டும். அதனால் தட்சகன் உன்னிடம் சீக்கிரமாக வருவான் என்றார்கள். அரசன் ஆஸ்தீகரை நோக்கி உமக்குவேண்டியதைக் கேளுமென்று சொல்ல ஆரம்பித்தார். அதற்குமுன் தௌமிய தாவானவர் தட்சகன் இவ்வளவு வரையில்லையேயென்று கூறி மனஞ்சலித்திருந்தார். அரசன் அவரிடம் சென்று நமஸ்காரம் செய்து அவனல்லவோ எனக்கு விரோதியென்றார். ரித்விக்குகள் மஹாராஜாவே தட்சகன் பயந்து இந்திராணியுடைய மடியில் இருக்கிறான். அக்னிபகவானை மௌனமாயிருந்து தெளிவுறச் சொல்லியிருக்கிறோம் என்றும் ஸர்ப்பகுலம் அப்படியே பங்கமுறுமாறு சாஸ்திரமிருக்கிறதென்றார்கள். அரசன், அச்சமயமிருந்த தௌமிய தட்சனென்னும் ஸுதரைக்கேட்க, அவர் மஹாராஜாவே! பிராமணர்கள் சொல்லுகிறபடி கடந்திருக்கிறது. பூர்வ கற்பத்தின் சரித்திரத்தினால் நான் அறிந்திருக்கிறேன். இந்திரன் தட்சகனிடம்பாத்து நீ கொஞ்சம் கூடப்பயப்படாமல் இங்கேயிரு என்று அவனுக்கு அபயம் கொடுத்திருக்கிறான் என்றார். இதைக்கேட்டு அரசன். இந்திரனோடு கூட தக்ஷகனையும் அக்னியிலிட்டுவிடுங்களென்று தட்சகனிடம் பயங்கரச் சம்மதமில்லை என்று தௌமிய தாவுக்குச் சொன்னார். அப்படியே மந்திரபாதத்தினால் அழைத்தார். உடனே இந்திரன் மேலில் வந்தான். தௌமிய தாவானவர் தட்சனோடுகூட தேவேந்திரனும் அக்னியில் விழுந்திடுவான் என்று தீவிரமாகச் செய்தார். அப்போது தக்ஷனை இந்திரன் தேவர்களை நோக்க, அப்போது ஸாஸ்திரீகன் சூழ்ந்துவர, மேகங்கள் போல் பிரகாசமான தேரில் ஏறிக்கொண்டு வந்தான். இந்திரன் தட்சகனைத் தன் உத்தரீயத்தினால் மறைத்துக்கொண்டு நின்றான். தட்சகன் புயத்தினால் இந்திரனை கட்டிக்கொண்டு நின்றான். ஜனமேஜய மஹாராஜாவே அந்தத் தட்சகனை இந்திரனோடு கூட அக்னியிலே சிக்ஷாமாய்த் தன்னுடனேயுள்ள ஸர்ப்பங்களோடு சொன்னார். தௌமிய தாவும் அப்படியே செய்தார். ஸர்ப்பங்கள் இந்திரனுக்கு தட்சகனை விட்டு விட்டுத் தன் பேரில் சேர்ந்தான். பின் தட்சகன் மந்திரத்தினால் தன் பிரக்ஞையை தப்பி அக்னியின் கிட்ட வந்தான். அப்போது ரித்விக்குகள், மஹாராஜாவே இந்திரன் தட்சகனை விட்டுவிட்டான் தட்சகன் பெருமூச்சு விட்டுக்கொண்டு இதோ வருகிறானென்று சொன்னார்கள். ஆனால் இதைப் பிராமணோத்தமருக்கு தீர் வரம் கொடுக்கவேண்டுமென்றார்கள். அரசன் ஆஸ்தீகரைநோக்கி, பெருமையுள்ள முனிவரே! நீர் விரும்பின வரத்தைக் கேளும். அது எதுவாயிருந்தாலும் கொடுப்பேனென்று சொன்னார். ஆஸ்தீகர் மஹாராஜாவே நீர் வரம் கொடுப்பதாயிருந்தால் கேட்கிறேன். நீர் இந்த

யாகத்தை நிறுத்தும. சர்ப்பங்கள் அக்கினியில் மடியாமலிருக்க வேண்டும். இது தான் எனக்கு வேண்டிய வரமென்று சொன்னார்.

அரசன், மனவருத்தப்பட்டு பிராமணர்களை நோக்கி 'பொன் வெள்ளி பசு முதலிய இன்னமும் எதை வேண்டுமானாலும் கேளுங்கள், தருகிறேன். இந்தயாகத்தை நிறுத்தக்கூடாது' என்றார். ஆஸ்தீகர் மஹாராஜாவே! எனக்கு பொன்னும் வெள்ளியும் வேண்டுவதில்லை. என் மாதாவின் மனசை அமிர்தமழையால் குளிரச்செய்ய வேண்டும். ஆகையால் யாகத்தை நிறுத்த வேண்டுமென்னும் மற்றபடியும் கேட்டார். அரசன் பிராமணர்களை நோக்கி 'நீர் வேறு வரங்களைக் கேளுங்கள்' என்று பலதடவை சொன்னார். ஆஸ்தீகர் எனக்கு வேறு வரமொன்றும் வேண்டுவதில்லை என்று மறுத்துவிட்டார். அப்போது அச்சபையிலிருந்த பிராமணர்களெல்லாரும் பிராமணர் கேட்டபடி வரத்தைக் கொடுமென்று சொன்னார்கள்.

ஸர்ப்பக்ஷயாலது அத்தியாயம்
ஆஸ்தீகபர்வத் தொடர்ச்சி.

சௌனகர் 'ஸூத புராணிகரே! அக்னியில் விழுந்து மடிந்த நாகங்களின் பெயரைக் கேட்க விரும்புகிறேன்' என்று சொல்ல ஸூதர் சொல்லுகிறார். சோடிசன், பூர்ணசசன், பாலன், ஹரிமகன், பிரிக்கலன், கௌணபன், சக்கிரன், கபிலவேகன், பிரகாலனன், ஹரிண்யபாகு, சரணன் கடசகன், காலதந்தன் முதலிய வாசுகியின் வம்சத்காரர்களான நாகர்களும், இன்னும் அநேக நாகங்களும், தட்சகன் குலத்திற பிறக்க புத்சாண்டகன், மண்டலகன், பிண்டமேஷக்தர, ரபிணகன், உக்ரகன், சரபன், பங்கன், பிலவிதேஜஸ், விரோஹிணன், சிலி, சலகரன், மூகன. முதலியோரும்: ஜாரவதன் குலத்திற் பிறந்த பாண்டரன், பாரியாத்திரன், ஹரிணன், கிருசன, விஹங்கன், சரபன், மேராகன் முதலியவர்களும்; கௌரவ்யன் குலத்திற் பிறந்த ஏரகன், குண்டகன், வேணி, வேணிஸ்கந்தன், குமாரகன், பாருகன். திருங்கபேரன், துர்த்தகன், பிராதன், ரதகன் ஆகிய இவர்களு எல்லாரும் அந்த யாகாக்னியில் விழுந்து எரிந்து மடிந்தார்கள். திருதராஷ்டனென்ற நாகராஜனுடைய வம்சத்திற்பிறந்தவர்களான சுகநாகாணன், குடாரகன், பிடாரகன், சேசகன், பூரணாங்கதன், பூரணமுகன், பிரகாசன், சகுனி, தரி, அமாகடன், கரமடகன், ஸுஷேணன், மானஸன், அவ்யயன, அஷ்டவக்ரன், முதலான அநேக நாகங்கள் சர்ப்பயாகாக்னியில் மடிந்தன இப்படியாக எழுகோடி சொல்லிவர்த்த வைகளின் சந்ததிகளுக்கு கணக்கே கிடையாது. இருநூறு நாகம், ஐநூறு நாகம், ஏழு நூறு நாகங்கள், பத்து நூறு நாகங்களுள்ளனவாகவுள்ளும் கணக்கில்லாமல் ஹோமஞ் செய்யப்பட்டன. கிணற்றிலுள்ளபடியே கூடியவைகளும்மலைபோல்பலவைகளும், மரங்களைபோல்பலவையுமான அளவுக்குட்பட்டதான பர்வதங்கள் மடிந்தன.

ஐம்பத்தெட்டாவது அத்தியாயம்.
ஆஸ்தீகபர்வத் தொடர்ச்சி.

சௌனகர் முனிசுவரர்களே! திக்கிரன் தட்சகனை விட்டுப்போன பிறகு, ஆஸ்தேசனை ஆகாசத் திலேயே நிறுத்திவிட்டார் தட்சகன் அக்கினியில் விழாமல் ஆகாசத்திலேயே நின்றான். எல்லாரும் ஆச்சரியமடைந்தார்கள. அரசன் மரணவாசலிற்றன் சிக்கித்தக் கொண்டிருந்தார் என்று ஸூதர் சொல்லச் சௌனகர், ஸூத பத்திரரே! யாகஞ் செய்பவர்களுக்கு மந்திரங்கள் தான் முமல் போயிற்று அவர்கள் ஏன் தட்சகனை நேயில் தள்ளவில்லை என்று கேட்க ஸூதர் சொல்லுகிறார்

அக்கினியில் விழுந்து கொண்டிருக்கும் தட்சகனை நோக்கி நில் நில் என்று ஆஸ்தீகர் மூன்முறை கூறினர். உடனே சொல்லிலே தான் தட்சகன் ஆகாசத்திலே பனிதன் நிற்பதுபோல நேராக நின்று வருத்தப்பட்டுக்கொண்டிருந்தான்; பிறகு சபையிலுள்ளவர்கள் அரசனைப் பார்த்து ஆஸ்தீகர் கேட்ட வரத்தைக் கொடுக்கும் படி செட்டுக் கொண்டார்கள். அரசன் அப்படியே யாகட்டும். யாகத்தை நிறுத்துங்களென்று கூறினார். ஆஸ்தீகரும் கேட்ட வரம் பெறுவாராக; பாம்புகளும் தாகாதிருக்கக்கடவன என்றார். அப்போது சபையிலுள்ளோர் சந்தோஷத்திலே ஆரவாரித்தார்கள். யாகமும் நின்றுபோயிற்று. ரித்விர்களும், சபையிலுள்ளவர்கள் எல்லாருக்கும் அரசன் திருப்தியாகும் பட்டும் திரவியமும் கொடுத்தார். இப்படி யாகம் நின்றுபோயிற்று. அப்படி யாருமென்று கூறின லோஹிதாட்சருக்கும், சிற்பிக்கும் மிகுந்த திரவியமளித்தார் பிறகு அபபிருதஸ்நானமுஞ் செய்து முடித்தார். ஆஸ்திகருக்கும் விடை கொடுத்தனுப்பினார். ஆஸ்திகர் விரைந்த வீடுபோய்ச் சேர்ந்து தமது தாயாருக்கும், மாமனுக்கும் நடந்ததைச் சொல்லி மகிழ்வித்தார் அப்போது சாப்பங்களும் வாசுகியும் ஆஸ்திகரை நோக்கி, உனக்கு வேண்டியவரங்களை தருகிறோமென்றார்கள். நாகங்களெலலாரும உனால் விடுபட்டுச் சுகமடைந்து சந்தோஷப் படுகிறோம் ஆகையால் நீ விரும்பினதைத் தருவோமென்றார்கள்.

ஆஸ்திகர் நாகங்களைப் பார்த்து, என்னுடைய சரித்திரத்தைப் படிப்பவர்கள் எவர்களாயிருந்தாலும அவர்களுச்சுச் சர்ப்ப பயமில்லாமலிருக்க வேண்டும். என்று கேட்டார். நாகங்கள் சந்தோஷமடைந்து, ஆஸ்திகா! நீ கேட்ட வரத்தை நாங்கள் கொடுத்தோம். இது சத்தியமாயிருக்கும். அஸ்திதன் ஆர்த்தமான், ஸுகீதன் இவர்களை நினைப்பவர்களுக்கு இரவிலும பகலிலும் சர்ப்பபயம இடையலே இடையாது. மஹாதபாவர்களான சாப்பங்களே! ஜரத்காரு மஹரிஷிக்கு ஜரத்காரு வென்னும் நாக கன்னிகையிடம் பிறந்து உங்களைச் சர்ப்பயாகத்திலிருந்து காப்பாற்றின மஹா மஹிமை

யுள்ள ஆஸ்தீகரை நான் தியானிக்கிறேன், நீங்களென்னை வருத்தா மலிருக்கவேண்டும். சர்ப்பமே நீ தனைசெய்து ஓடிப்போ. மஹரா ஷிஷ்முனிவர் சர்ப்பமே ஓடிப்போ. ஜனமேஜய மஹாராஜாவின் யாக முடிவில் ஆஸ்தீகர் சொல்லை நினைத்துக் கொள், எனது பொருளுள்ள மந்திரத்தைக் கேட்டும் அதை கவனியாமலிருக்கிற சர்ப்பத்தின் தலை நூறுசுக்கலாக வெடித்து போகும் என்று சொல்லி ஆஸ்தீகர் கேட்ட வரத்தைக் கொடுத்தார்கள். வாசுகியும் அப்படியே யாகட்டுமென்று சொல்லித் தன்னிருப்பிடம் போனான். ஆஸ்தீகரும் தமதிருப்பிடம் போய்க் கொஞ்சகாலம் வாழ்ந்திருந்து முறைவந்ததை யடைந்தார் நடந்தபடி ஆஸ்தீக சரித்திரத்தைச் சொல்லினான் இதைச் சொல்லுல எவ்விடத்திலும் சர்ப்ப பயமில்லை. உமது பூர்வ பிதாக்களிலொருவராகிய பிரமதி என்பவர் ருரு மஹரிஷிக்குச் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்தபடி இந்த ஆஸ்தீக சரித்திரத்தை உமக்குச் சொன்னேன். தர்மதனத்தையும் புணனியத்தையு மளிப்பதாகிய ஆஸ்தீக சரித்திரத்தைக் கேட்பவ னுடைய பயமெல்லா மோடிப்போம். அவன் தீர்க்காயுசாக வாழ்வான்.

சௌனகர், ஸௌதி குமாரரே! பிருகுவம்சம் முதலிய பெரிய சரித்திரங்களைச் சொல்லி முடித்தீர், எனக்கு மிகவும் திருப்தி யாயிற்று இன்னமும் அந்த கதைகளைக் கேட்க விரும்புகிறேன். அந்தச் சர்ப்பயாகத்தில் வந்திருந்த பெரிய்பாகள் யாகத்தின் இடையில் என்னென்ன விஷயங்களைப் பேசிக கொண்டிருந்தார் கள். வியாச மஹரிஷி பாண்டவ மஹா பாரத கதைகளைச் சொல் லிக்கொண்டிருந்தாரென்று ஸௌதி சொன்னார். அந்தச் சர்ப்பய கத்தின் மத்தியில் வியாச மஹாபாரதத்தைச் சொன்னரென்றால் அந்தப புண்ணியமான மஹா பாரத கதைகளை முறையாகக்கேட்க விருபபுகிறோம். யாகத்தால் பரிசுத்தமாயுள்ள வியாச மஹரிஷி யினுடைய மனமாகிய சமுத்திரத்திலுற்பத்தியான இரத்தினங்கள் போன்ற விஷயங்களை நிறைந்த அந்தப பாரதத்தைச் சொல்லவேண் டுமென்றுகேட்க ஸௌதி சொல்லுகிறார் வியாசரால்சொலலப்பட்ட மஹாபாரதத்தை முழுதும் சொலலுகிறோம். எனகும அதைச் சொலலுவதில் சக்தி வதமாயிருக்கிறது என்று சொலலுகிறார்.

அறுபதாவது அத்தியாயம்
ஆஸ்தீகபர்வத தொடர்ச்சி.

சத்தியவதிகுவிவாகமாகாததற்கு முன்னாலேய அவளிடத்தில் பராசர முனிவருக்குப பிறந்து,உடனே தபதிச்சையால் தேகத்தை வளரச் செய்துகொண்டு, வேதவேதாங்கங்களையும் இதிஹாசங்களை யும் உணர்ந்து, வேதம், விரதம், தவம், பிறப்பு, யாகம் முதலியவை

தனாலே ஒப்பில்லாதவராய, உயர்வு தாழ்வான எல்லாவற்றையு மறிந்து, சத்தியத்தை விரதமாகக்கொண்டு, வேதத்தை நாலாக் வகுத்து, சந்தனுவின் சந்ததி அபிவிர்த்தி யாவதற்காகத் திருதரா ஷ்டிரன், பாண்டு, விதுரன் மூவரையும் உற்பத்திபாக்கிய கிருஷ்ண த்வைபாயன ரென்னும் வியாச மஹரிஷி பாராசர், ஜனமேஜய மஹாராஜா சர்ப்பயாகஞ் செய்வதைக் கேட்டுத் தமது சிஷ்யர்களு டனே அந்த யாகசாலைக்கு வருந்தருளினர். அந்தச் சபையில் ரிக் வர்கள் சூழவிருக்கும் தேவராஜரைப் போல வீற்றிருக்க ஜனமேஜ யர் அவரை எதிர்கொண்டழைத்து, சமையமா அறிப்பிராயகதின படி அவருக்கு ஒரு பொற் பீடமளித்து, அவர் உட்கார்ந்த பிற், அவருக்கு விதிப்படி பூஜை செய்தார். பின் அவருக்குச் சமீபத்தில் உட்கார்ந்து யோக க்ஷேமங்களை விசாரித்தார். வியாசரும் அரசனு க்கு உபசாரம் கூறினர். பிறகு ஜனமேஜய மஹாராஜா, அந்த சபையில்தாராய் வியாசரைப் பாரதகதை சொல்லுகவும் கௌரவர களையும், பாண்டவர்களையும் உமக்கு நன்றாய்த் தெரியும். அவர்களுடை ய சரித்திரத்தை உமது வாக்கால் கேட்டுக் களிகமபுகிறேன். கௌரவ ர்களுக்கும் பாண்டவர்களுக்கும் சப்படிப் பகை யுண்டாயிறறு? அவர்களுடைய யுத்தம் எப்படி நடந்தது? நீர் முழுதும் தெரிந் தவராதலால் உம்மிடம் கேட்கிறேன். அதை எனக்குச் சொல்லவே ண்டுமென்று கேட்டார்.

அதைக்கேட்ட வியாசர், தமது பக்கத்திலிட்கார்ந்து கொண் டிருந்த சிஷ்யராய வைசம்பாயனரைப் பார்த்துப் பாண்டவர்களுக் கும் கௌரவர்களுக்கும் பகையுண்டானதை எனிடத்தில் கேட்ட படி சொல்லுமென்று சட்டளையிட்டார். அந்த சட்டளையைச் சிறமேற்கொண்டு வைசம்பாயனர் மஹாபாரத சரித்திரத்தை நட த்தபடி சொலல ஆரமபித்தார்.

அறுபத்தோராவது அத்தியாயம்

ஆஸ்தீகபர்வத் தொடர்ச்சி

ஜனமேஜய மஹாராஜாவே! பௌரவகுலத்தும் பாண்டவர்க ளுக்கும் யுத்தம் நடந்தான பாரதத்தைச் சொல்லுகிறேன் கேளு மென்று சொல்லுகிறார். பாண்டு மஹாராஜா இறந்தபின் பிறகு பாண்டவர்கள் அஸ்தினாபுரம் வந்து வசித்திருந்தும், தருமரிதையி லும் தோர்சியடைந்தார்கள். ஜனங்களெல்லாரும் பதிகரப் பட் டார்கள். இராஜ்யாதிபத்தியத்தையும் பொறாச் சிறுபுத்தியடைந் தபதைப் பார்த்துக் கௌரவர்களுக்கு அவகளிடம் பொறாமையுண் டாயிற்று. காணை, சகுனி, துசசாதனன், துரியோதனன் இந் நாலவரும் கூடிக்கொண்டு பாண்டவர்களை பலவகையாலும் இம்சி த்துநாட்டைவிட்டுத் துரத்த ஆலோசித்தார்கள். பீமசேனனுக்கு விஷமூட்டினார்கள், பீமன் அந்த விஷத்தை யுண்டு ஜீரணம் செய்

துக்கொண்டான். கங்கா நதிக்கரையில் தூங்கிக்கொண்டிருந்த பீம னைக் கட்டி கங்கையில் போட்டார்கள. பராக்கிரமசாலியான பீமன் விழிதுபபார்த்துக் கட்டை யுதறிவிட்டு வருது சேர்ந்தான். பீமன் தூங்கும்போது சர்ப்பங்களாலே கடிப்பித்தான் அதனாலும் பீமன் சாகவில்லை விதுரர் துரியோதனன் செய்த தீமைகளினைமேல் துன்பம டையாதபடி பாண்டவர்களைக் காப்பாறறுங் கொறிலே ஏப கவ னஞ் செலுத்தி வருகார். துரியோதனாதிகள் செய்த தகாதீமைபய ங்களுக்கு அஞ்சாமல் பாண்டவர்கள் தப்பிதது வருவதைக் கண்டு. துரியோதனன் திருதராஷ்டிரனை யுடனபபட்டிலைப் பாண்டவர்களை கொல்ல அரசதபரிவாரங்களை சடபடுஞ்ஞ திருதர ஷ்டிரனும் தன்பிள்ளை களின் மேலுள்ள பிரியபகதியால பாண்டவர்களை அரசகு பாளிலை யில் வசிக்கும்படி கட்டளையிட்டனுபபினான். அவர்கள் ஏபாகும் போது விதுரர் அவரகளுக்குப் புதது தெளிவுரை ஆகப் பாண்ட வர்களை நகரத்தை பாருடனகூட வாரணவத நகரததில ஏறு வரு ஷம் வசிதது வாகள். விதுரர் கூறிய தொறறபடி சுரங்கஞ் செயது கொ ண்டு அரகு மாளிகைக் ரிபபறறி எரியுமபோது பாண்டவாகளை கப பிப் போய்விடடார்கள பாண்டவர்களைக் கொளுதுவதறகு ஏறபடுதி யோதனனால் நியமிக்கபபட்ட புரோசனன அரகமாளிகை யில் ஈறபபோதனன் இடையில் வந்து எரிந்து மறிடமபாகு வதைக் கொளுறவிட்டு, அவனுடைய ஜீவகாரியதை முடிதது வைய பீமன மண்மே புரிந்தான் அவளிடததில கூடடிபபோன பிறகு. பின் ஒரு சகதிரவனதில் வேடாய் வளிதது வரபபட அவளிடதிலிருது கையில் ரமாபிசபட்டனதை விருபபிக் தி னுகுரபகுரண பிமசேனன கொனறு அநதகரதது நகுக் மேஷ் ரதனச் செய்தான் பின் பாஞ்சாலநகர ம்பாய்த தெளபதியை விவாகம புரிந்தார கள் ஒரு வருஷம அவளிக வசிததாகள, பிறகு அஸ்தினபுரம வந து சேர்ந்தாகள்.

கொஞ்ச காட்சளுக்கு பின் பீஷ்மராதியோர் அவர்களைக் காண் டலப் பிரஸ்தநிலிருது அரசரிடமபடி செல்லி இபாஜ்யத்தை இரணடு பகுதிகளாகப் பிரித்தனை அவரகளுக்குக் கொடுதது அனுப்பி னார்கள். அவர்கள் தங்களுக்கு சம்மதியுடனவர்களுடன அதற்குப் போ யிச் சேரந்து வசித்தாகள். புஜபல பராக்கிரமத்தால சதுருகங்களை கிளங்கச் செய்தாகள். பீமசேனன திக்குவிகையும், சகதேவன் தெறறுத திக்கையும், நகுலன் மேறபரிசையையும, அரஜுனன வட திசையையும ஜயித்தும பூமிமுழுவதையும் தங்களுக்கு வசப்படுத தி கொணடாகள். பாண்டவர்களுக்கு சூரியனும ஆகாசமணியா கிய சூரியனும் பிரகாசிபபதினாலபூமியானது ஆறுசூரியர்களுள்ளது எனறு சொலலுபபடடி யிருந்தது. கொஞ்ச நாடகளுக்குப் பின அரஜுனன் ஒரு காரணதைமாதத தீரத்தயாதிரை செய்தான். பதின்மூன்று மாசங்களா வனவாசத்திலும தீரதத யாத்திரையிலும

கழித்தான். அப்போது ஒரு கண்ணிகையையும், பாண்டியன் புத்திரியாகிய சித்திராங்கதையையும் மணம் புரிந்தான். துவாரகா புரிக்குப் போய்ச் சுபத்திரையையும் கிருஷ்ணனுடைய சகாயத்தினால் மணம் புரிந்தான்.

பிறகு கிருஷ்ணனும் அர்ஜுனனும் விநோதார்த்தமாக பழைய நதிக் கரையிலிருந்த போது அக்கினி பகவான் வந்து வேண்டிக் கொண்டவை வனத்தை அவருக்கு உணவாக கொடுத்தான். அப்போது தேவன் அர்ஜுனனுக்கு காண்டீபமென்கிற வில்லையும் குறைபாத பாணங்களையுடைய இரண்டு தூணிகளையும் கொடுத்தான். காண்டவதகனஞ் செய்தபோது அர்ஜுனன் மயனையும் அசுர சிற்பியைக் காப்பாற்றினான். அந்த மயன் அற்புதமான ஒரு சபையைக் கட்டினான் பொருமைகொண்ட துரியோதனன் சூதாடி அவர்களுடைய செல்வங்களை அபகரித்துக்கொண்டு பாண்டவர்களை பன்னிரண்டுவருஷம் வனவாசம் செய்யவும் ஒரு வருஷம் அக்ஞாதவாசம் பண்ணவும் செய்தான். பாண்டவர்கள் அப்படியே பதினாலு வருஷங்களையுங்கழித்துப் பதினைந்தாவது வருஷத்தில் தங்களுடைய இராஜ்யத்தைக் கேட்டபோது துரியோதனன் கொடுக்கமாட்டேனென்று மறுத்தபடியால் பாண்டவர்களும் மகாராஜர்களும் யுத்தஞ்செய்ய நேரிட்டது பாண்டவர்கள் வெற்றிகொண்டு துரியோதனியர்களைக் கொன்று பட்டத்தையடைந்தார்கள். அசுவமேத யாகஞ் செய்தார்கள். பிறகு திருதராஷ்டிரனும் விதுரனும் மறு உலகம் சென்றார்கள். யுதிஷ்டிரர் அவசரஞ்செய்ய வேண்டிய கிரியைகளெல்லாஞ் செய்தார் கிருஷ்ணனும் பூலோகத்தை விட்டுத் தமது உலகம் சென்றார். அதன்மேல் பாண்டவர்களும் சொர்க்கம் சேர்ந்தார்கள். இந்தவான் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் யுத்தம் நடந்ததாகிய பூர்வ சரித்திரம் என்று வைசம்பாயனர் கூறினார்.

ஜனமேஜய மஹாராஜா, மகிழ்ச்சியடைந்து, பிராமணோத்தம சே. மஹாபாரதத்தைச் சுருக்கமாகச் சொன்னீர்கள். அதை விரிவாகக் கேட்க விரும்புகிறேன். தர்மிஷ்டர்களான பாண்டவர்கள் கொல்லக் கூடாதவர்களெல்லாரையும் கொன்றதும் புகழ்பெற்றிருப்பதற்குத் தகுந்த காரணங்களிருக்கிறதென்கிறதால் மிகவும் அதலால் அந்தப் பெரிய சரித்திரத்தை விரிவாகச் சொல்லவேணுமே. மஹா பலசாலிகளாகிய பாண்டவர்கள் சகதியுள்ளவர்களாக இருந்தும் துஷ்டர்கள் செய்த இம்சைகளை ஏன் சகித்துக்கொண்டிருந்தார்கள்? பதினாயிரம் யானை பலமுள்ள பீமசேனன் கிடைபத்தை எப்படி அடக்கிக் கொண்டிருந்தான்? நெருப்பைத் தனக்குத் தானே தோன்றாமலுண்டாக்கின துஷ்டர்களை ஏன் சபிக்கவில்லை? சூதாடினால் தர்மராஜாவிடத்தில் எப்படி மனம் ஒத்திருந்தார்கள்? பெரிய வராயெ யுதிஷ்டிரர் அந்தக் கஷ்ட நஷ்டங்களை எல்லாம் எப்படிச் சகித்

துக்கொண்டிருந்தார். கிருஷ்ணரைச் சாரதியாகக்கொண்டு அர்ஜுனன் தன் வலிமை அவ்வளவு சேனைகளை எப்படி நாசஞ் செய்தான். இவைகளெல்லாவற்றையும் நடந்தபடி சொல்லவேண்டுமென்று கேட்ட வைசம்பாயனர் சொல்லுகிறார்.

மஹாராஜாவே! வியாச மஹரிஷியால் சொல்லப்பட்ட மஹாபாரதகதையை விரிவாகச் சொல்லுகிறேன். இது பெரிய இதிகாசம். மஹா மகிமையுள்ள வியாசர் இதை நூறுபர்வம் சுலோகங்களாகச் செய்திருக்கிறார். இது விரிவாகக் கேட்கவேண்டியது அவசியமே. பர்வ இதிஹாஸ புராணங்களும் இரண்டாயிரம் அத்யாயகளும் இலட்சம் கிரந்தங்களுமடங்கி யிருக்கின்றன. அந்த நூறு பர்வங்களும் பதினெட்டுப் பர்வங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. இந்த இதிகாசத்தைச் சொல்லுகிறவனும் கேட்கிறவனும் பிரமலோகஞ் சென்று பிரமதேவனுக்குச் சமானமாயிருப்பார்கள். நிலவைப் புகழப்பட்டது புண்ணிய நதிகளைப்போன் றிருக்கிறது. அரம்பொருவம். இவைபோல், மோட்சம் அடியவைகள் இதில் நன்றும் விளக்கப்பட்டிருக்கின்றன. அறிவுள்ளவனையிருக்கிறவன் இந்த இதிகாசத்தை ஆரம்பிக்க புத்தியுடன். பெருந்தன்மையும், சாந்தியும், கொடையும், உள்ளவனுக்குச் சொல்லித்தரவேண்டும் சாப்பாதிப்பான். மஹாபாபியானவனும் இதைக் கேட்டால் அவன் பாபம் ஒழியும் சர்வ ஜயத்தையும் விரும்புகிறவன் இதைக் கேட்கவேண்டும் இதைப் பாரதம் ஜயம் என்று போற்றுவர். இதைப் படிக்கிற அரசன் இராஜயம் பெறுவான்; சந்ததியை விரும்புகிறவன் சந்ததியை யடைவான். இராஜஸ்திரீ கேட்டால் வீரனை புதல்வர்களை, இராஜியத்தை அடையக்கூடிய புத்திரிகளைப் பெறுவாள். இந்த மஹாபாரதம், தர்மசாஸ்திரமாகவும், நீதி சாஸ்திரமாகவும் மோட்ச சாஸ்திரமாகவும் விவரிக்கிறது. நான்கு புருஷார்த்தங்களையும் இதில் கூறப்பட்டுள்ளபடி தான வேறு நூல்களை சொல்லுகின்றன. இதில் இல்லாதது எதிலுமில்லை. இது முக்காலத்திலுமுள்ள சரித்திரம். இதைக் கேட்பவருக்கு வியாதி பயமே கிடையாது. இதில் பாண்டவர்கள் முதலான தனம் பராக்கிரமங்களால் புகழ்பெற்ற அரசர் சரித்திரங்களிருக்கின்றன. மழைக்காலமாகிய நான்கு மாதங்களிலும் இதைப் படிக்கிறவன் சகல பாபங்களையும் மொழிதல் விடுவான். இதைப் படித்தவன் வேதமுழுதும் கற்றுணர்ந்தவனாவான். புண்ணியம் நிறைந்த தேவர்கள், ராஜரிஷிகள், பிரமரிஷிகள் இவர்களுடைய சரித்திரங்கள் கூறப்படுகின்றன. நசுவான், திருமால், தேவி, சுபிரமண்யர் இவர்களுடைய சரிதரிதங்களுமிருக்கின்றன. பசுக்களினுடைய மகிமை பிராமணர்களின் மகிமைகளும் கூறப்படுகின்றன. சிராதத காலத்தில் ஒரு சுலோகத்தின் பூர்த்தியாவது பிராமணர்கள் கேட்க வாசித்தால் அந்தச் சிராத்தம் அட்சய பலனைத்தரும். அதிற்

தும் அறியாமலும் செய்யப்பட்டுள்ள எல்லாப் பாபமும் பாரதத்தை கேட்டவுடனே தூர்ந்து போய்விடும். பலரா மகிமையுள்ள வியாச மஹரிஷி மூன்று வருஷகாலம் நித்திரையில்லாமலிருந்து மஹாபாரதத்தைச் சொன்னார். அவர் நியாகதாடனிருந்து கொண்டபடியால் இதைக் கேட்பதும் நியாகதாடனிருந்து கேட்கவேண்டும். இதைச் சித்தத்தையுடன் படிக்கிறவனும் கேட்கிறவனும், இராஜஸூய யாகமும் அசுவமேதமும் செய்தவனின் பதவியை அடைவான். பலரா மரே! புவி சமுத்திரமும் இரத்தினங்களுடனிருப்பதுபோல இந்த பாரதமும் எல்லா விஷயங்களையும் நியாயபிரகாரம் சொல்லுகிறது. இது சகல வேதங்களுக்கும் ஒப்பாயுள்ளது. பாபங்களைப் போக்கும் வல்லமை பெற்றது. பக்தியுடனும் விஸ்வாசத்துடனும் இதை பரிசுத்தம் செய்வது ஆசாரங்களை அபிவிருத்தியாக்குவது. பாரதம் வாசிப்பவனுக்குச் செய்த தானம் பூமி முழுதும் தானஞ்செய்த பலனுக்கு ஒப்பானது. ஆகலால் யாவரும் இதை மூபரிசியாய் கேட்கவேண்டிய தலையாய இதிகாசத்தை உரைக்க ஆரம்பிக்கிறேன். மஹாராஜாவே புண்ணியதத்திக்காகவும் ஜயமுண்டாவதற்காகவும் கேளும் என்று சொல்லுகிறார்.

அறுபத்தைமூன்றாவது அத்தியாயம்

ஆஸ்தீகபர்வத் தொடர்ச்சி.

மஹாராஜாவே! உமது முன்னோர்களான பூருவம்ச ராஜாக்களுடைய சரித்திரத்தைக் கேளும். அவ்வம்சத்திலுள்ள பிரமதத்தினிடத்திலிருந்து குற்றமற்ற பிரமதேவருண்டானார். அவருடைய கண்ணிலிருந்து பரீரியும் சட்டை விலிலிருந்து தட்சரும் பிறந்தார்கள். மரீசுக்குக் கரியர் பிறந்தார். தட்சருக்கு அதிதி பிறந்தாள். கசியர் அதிதியை மணம் புரிந்தார். அவ்விருவருக்கும் சூரியன் பிறந்தான். அவனுக்கு மனுபிறந்தான். அந்த வைவசுவத மனுவுக்கு இளை என்பவள் பிறந்தாள். இவளை புததிரன் புரூரவஸ் அவனை புததிரன் ஆயு ஆயுவின் புதிரன் நகுஷனாக நகுஷனுக்கு யயாதி பிறந்தான். யயாதி சுக்கிராச்சாரி பெண்ணாகிய தேவயானையையும், விருஷபர்வனுடைய அசுரராஜன் புத்திரி சர்மிஷ்டையையும் மணந்தான். தேவயானிக்கு யது, துர்வசு என்னும் இருவர் குமாரர் பிறந்தார்கள். சர்மிஷ்டை திருஹ்யு, அநு, பூரு என்பவர்களைப் பெற்றாள். அவர்களுள் யதுவம்சத்தார் யாதவரென்று பேர் பெற்றார்கள். பூருவின் வம்சத்தார் பௌரவரென்று பேர் பெற்றார்கள். பூரு கௌசல்யை என்னும் பெண்ணை மணந்து ஜனமேஜயனைப் பெற்றான். அவன் மூன்று அசுவமேதமும், விசுவஜித் என்ற யாகமும்

செய்து வனத்துக்குப் போய்விட்டான். அவன் மகதராஜாவின் குமாரத்தி ஸுநந்தை என்பவளை மணம்புரிந்து பிராசின்வான் என்னும் அரசனைப் பெற்றான். அவன் கிழக்குத் திக்கில் சூரியனுதயமாகிற இடம்வரையிலும் ஜயித்துக்கொண்டான். அதனால்தான் அவனுக்குப் பிராசின்வான் என்றபெயர் உண்டாயிற்று. அவன் யதுவம்சத்து ஆச்மகியை விவாகம் செய்துகொண்டான். அவளிடத்தில் சையாதி பிறந்தான். சையாதி திரிசங்கு மஹாராஜாவின் புத்திரி வராங்கியை வரித்தான். அவளிடத்தில் அஹம்யாதி பிறந்தான். அவன் கிருதன் மகள் பானுமதியை மணந்து ஸார்வபௌமனைப் பெற்றான். ஸார்வபௌமன் கேகயராஜன் புத்திரியை ஜயத்தினால் அடைந்து மணந்தான், அவளிடத்தில் ஜயத்ஸேனன் பிறந்தான் ஜயத்ஸேனனுக்கு விதர்ப்பராஜன் குமார்த்தி ஸுச்ரவையிடமாக அபராசீனன் பிறந்தான். அபராசீனன் வேறொரு விதர்ப்பராஜபுத்திரி மரியாதையை மணம்புணர்ந்து, அரிஹனைப் பெற்றான். அரிஹன் அங்கராஜன் பெண்ணைப் பாணிகிரகணம் செய்துகொண்டு மஹாபௌமனைப் பெற்றான். அவன் பிரேஷ்யஜித்தின் குமாரத்தி ஸுயக்ஞையைப் பாணிக்கிரகணம் பண்ணி அயுதாயுவென்பவனைப் பெற்றான். அவன் நர்மதையாகத்தில் பதினாயிரம் பேரைச் சிறையாக்கிக்கொண்டு வந்தான் அதனாலே தான் அவனுக்கு அந்தப் பெயர் வந்தது அவன் பிறகு சிரவசினுடைய புத்திரி பரஸை என்பவளை விவாகம்புரிந்து, அக்ரோதனனைப் பெற்றான். அக்குரோதனன் களிங்கராஜன் மகள் கண்டு என்பவளை மணம் புரிந்தான். தேவாதிதி என்பவனைப் பெற்றான். தேவாதிதி விதர்ப்பராஜன் பெண் மரியாதை என்பவளை விவாகம் புரிந்தான். அவளிடம் ரிசன் பிறந்தான். ரிகன் அங்கராஜன் பெண் வாமதேவியை மணந்து ரிக்ஷனைப்பெற்றான் ரிக்ஷனுக்கு தட்சகன் பெண்ணாகிய ஜ்வலந்தி என்பவளிடமாக அந்தியநாரன் பிறந்தான். அந்தியநாரன் ஸரஸ்வதி நதிதீரத்தில் பன்னிரண்டு வருஷமளவும் ஸத்ரயாகம் செய்தான். அந்த ஸரஸ்வதி நதிதேவியானவள் யாகமுடிவில் பிரத்தியட்சமாய் அவனிக்கணவனுக வரித்தாள். அவனிடமாக திரஸ்ணு பிறந்தான். திரஸ்ணு காளிங்கியை மணம்புரிந்து இலிலனைப் பெற்றான். இலிலனுக்கு சதந்தரி என்பவளிடமாகத் துஷ்யந்தன் பிறந்தான். துஷ்யந்தனுக்குப சகோதரர் நால்வர். துஷ்யந்தன் பகிரதன குமார்த்தி லாட்சியை மணந்து ஜனமேஜயனைப் பெற்றான் பின்னும் விசுவாமித்திரர் குமாரத்தி சகுந்தலையை மணம் புணர்ந்து பரதனைப் பெற்றான். துஷ்யந்தன சகுந்தலையையும் பரதனையும் மறுத்தபோது ஆகாசவாணி சகுந்தலை உன்மனவி; இவன்உன் குமாரன் இவர்களை நீ ஏற்றுக்கொள் என கூறிற்று. அசரீரி இவனைப் பரிஎன்று கூறினதினால் அந்தப் புத்திரனுக்குப் பரதனென்று பேரிட்டார்கள்.

பரதன் காசிராஜனுடைய ஸர்வசேனன பெண்ணை மணம் புரிந்து கொண்டான். அவனிடத்தில் புமன்யு என்பவன் பிறந்தான். புமன்யு யதுவம்சத்து சுவர்ணையை மணந்தான். அவளிடம் சுஹோத்திரன்

பிறந்தான் சுஹோத்திரன் இக்ஷ்வாகு வம்சத்து ஜயந்தியை மணந்து ஹஸ்தியைப் பெற்றான் ஹஸ்தியான் இந்த நகரத்தை உண்டாக்கினான் அதனாலேதான் இதற்கு ஹஸ்தினபுரம் என்று பேர் வந்தது. ஹஸ்தி திரிகர்த்தராஜன் மகளாகிய யசோதையை மணம்புரிந்து விகுஞ்சனைப் பெற்றான். விகுஞ்சன் யதுவம்சத்து சுந்தரையை மணந்து அஜமீடனைப் பெற்றான். அஜமீடனுக்குக், கைகேயி, காகை, காந்தாரி, விமலை, ரிக்ஷையென்று ஐந்து பத்தினிகளுண்டு அவனுக்கு ஐந்து மனைவிகளிடத்திலுமாக இரண்டாயிரத்து நானூறு புத்திரர்கள் பிறந்தார்கள். ரிக்ஷையினிடம் ஸம்வர்ணன் பிறந்தான். ஸம்வரணன் சூரியன் புத்திரி தபதியை விவாகம்புரிந்து குருவைப்பெற்றான் குருவுக்கு யதுவம்சத்துச் சுபாங்கியினிடம் விதுரதன் பிறந்தான் விதுரதன் மகத ராஜபுத்திரி ஸம்பரியை என்பவளை விவாகம் செய்துக்கொண்டான். அவ்விருவருக்கும் அனச்வான் பிறந்தான். அவனுக்கு மகதராஜன் புத்திரி அமிர்தை மனைவியானாள் அவளிடத்தில் பரிட்சித்து பிறந்தான் பரிக்ஷித்து பாகுகன் குமாரத்தி ஸுவேவையைக் கல்யாணம் செய்துகொண்டு பீமசெனனைப் பெற்றான். பீமசேனன் கேகய ராஜபுத்திரி சுகுமாரியை மணந்து பரிசிரவஸைப் பெற்றான் இவனுக்குப் பிரதீபன் என்றும்பேர். பிரதீபன் சிபிசக்கிரவர்த்தி புத்திரி ஸுநந்தியை விவாகம் புரிந்து தேவாபி, சந்தனு, பாக்லீகன் என்று மூன்று குமாரர்களைப் பெற்றான். தேவாபி சிறு வயதிலேயே தவம் செய்யக் காட்டுக்குப் போய்விட்டான். சந்தனு அரசனானான். சந்தனு யாரை தொட்டாலும் அவர்கள் யௌவனத்தை யடைந்தார்கள் என்ற ஒரு வசனமுண்டு. இதனால் காரணத்தினாலேயே இவனுக்கு சந்தனுவென்று பேர்

இந்தச் சந்தனு கங்கையை மணம் புரிந்து காங்கேயரைப் பெற்றான். காங்கேயருக்குத் தேவவிரதர், பீஷ்மர் என்கிற பெயருமுண்டு. பீஷ்மர் தம பிதாவுக்கு ஸத்தியவதியை மணம புரிவித்தார். சத்தியவதிக்குக் காளி என்றும்பேர். அவள் கன்னிகையாயிருக்கையில் பராசரரைச் சேர்ந்து கிருஷ்ணத்வைபாயனரைப் பெற்றாள். சத்தியவதி சந்தனுவுக்கு சித்திராங்கதன் விசித்திரவீரியன் என்பவர்களைப் பெற்றாள். சித்திராங்கதன் இராஜ்யத்தைப் பெற்றவுடனே ஒரு கந்தர்வனால் கொல்லப்பட்டான். பின் விசித்திரவீரியன் பட்டத்தை யடைந்தான். அவன் காசிராஜன் புத்திரிகள் அம்பிகை அம்பாலிகை என்பவர்களை மணந்து சந்ததியில்லாமல் மரித்தான். சத்யவதி தன் புத்திரரான வியாசரை நினைத்தாள். அவர் வந்தவுடன் விசித்திரவீரியனுக்குச் சந்ததியுண்டாக்க வேண்டுமென்று சொன்னாள். அப்படியே திருதராஷ்டிரன், பாண்டு, விதுரன் என்ற மூன்று புத்திரர்களைத் தந்தார். வியாசர் அனுக்கிரகத்தினால் திருதராஷ்டிரனுக்கு காந்தாரியினிடமாக நூறு புத்திரர்கள பிறந்தார்கள். நூறு பேர்களுக்குள் துரியோதனன், துச்சாதனன், விகர்ணன், சித்திரசேனன் என்ற நான்கு பேர் பிரதானமானவர்கள். பாண்டுவுக்குக் குந்தி

மாத்திரி என்று இரண்டு மனைவிகளுண்டு. பாண்டு வனத்தில் வேட்டையாடிக்கொண்டிருந்தார். அப்போது மான் ரூபமாகக் கலவியிலிருந்த ஒரு ரிஷியை அடித்தார். அந்த ரிஷி பாண்டுவைப் பார்த்து, துஷ்டா! மிருகரூபத்தோடு கலவியிலிருந்து விருப்பம் நிறைவேறாமலிருக்கும்போது என்னை அம்பாலடித்தது போல் நீயும் என்னைப் போலக் கலவிகாலத்தில் மரிக்கக் கடவாயென்று சபித்து இறந்து போனார்.

பாண்டு அந்தச் சாபத்தை விலக்கிக் கொள்வதற்காக மனைவியரோடு கலவாமலிருந்தான். அவன் குந்தியை நோக்கிப், புத்திரரில்லாதவர்கள் புண்ணிய லோகத்தை அடைவதில்லை. ஆதலால் நீ எனக்காகப் புத்திரர்களைப் பெறுவதற்குக் கொள்ள வேண்டுமென்றான். குந்தி தருமதேவதையினிடமாக யுதிஷ்டரரையும், வாயுதேவனிடமாக பீமசேனனையும், இந்திரனிலே அர்ஜுனனையும் பெற்றாள். பாண்டு குந்தியைப் பார்த்து இந்த மாத்திரிக்கும் சந்ததியை உண்டாக்கு என்றான். குந்தி மாத்திரிக்கு மந்திரோபதேசம் செய்தாள். மாத்திரிக்கு அசுவினி தேவர்களால் நகுல சகா தேவர்கள் பிறந்தார்கள். பின்பு ஒருநாள் அலங்கரித்துக்கொண்டு அழகாய் விளங்கின மாத்திரியைக் கண்டு மோகித்து அவளோடு கூடினான், உடனே மரணமடைந்தான் மாத்திரி உடன் கட்டையேறித் தன் பதியோடு கூடச் சொர்க்கம் சென்றாள்.

அந்த வனத்தரிஷிகள்,பாண்டவர்களையும் குந்தியையும் அழைத்துக்கொண்டு அஸ்தினபுரம் போய்,பீஷ்மர் திருதராஷ்டிரன் முதலானவர்களுக்குப் பாண்டு மரணமடைந்ததையும சொலலிவிட்டுப் போனார்கள். திருதராஷ்டிரன் பாண்டவர்களை அரக்குமாளிகையில எரிக்கத் தீமானித்தான். அவர்களை விதுரர் காப்பாற்றிவிட்டார். பீமன் இடும்பனைக் கொன்று இடும்பியை மணந்து கடோற்கஜனைப் பெற்றான். பின் ஏகசக்கிரநகரத்தில் போய்ச் சுகமாக வசித்தார்கள். பாஞ்சால நாட்டில் திரௌபதியை அடைந்து, பாதி ராஜயத்தையும் பெறறுக்கொண்டு இந்திரப் பிரஸ்தத்தில வசித்தார்கள். அப்போது திரௌபதி ஐவருக்கும புத்தரரைப் பெற்றாள். யுதிஷ்டிரருக்குப் பிரதிவிந்தியன் பிறந்தான். பீமசேனனுக்கு ஸுதசோமன் பிறந்தான் அர்ஜுனனுக்குத் திரௌபதியினிடமாகச் சுருதகீர்த்தி பிறந்தான். நகுலனுக்குச் சதானீகனும்,சகாதேவனுக்குச் சுருதகர்மனும் பிறந்தார்கள். யுதிஷ்டிரர் சைப்யனுடைய புத்திரி தேவகியை விவாகம் புரிந்து யௌதேயனைப் பெற்றாள். பீமசேனன் காசிராஜன புத்திரி ஜலந்தரையை சுயம்வரத்தில் மணந்து சர்வதராதனைப் பெறறான். அர்ஜுனன கிருஷ்ணன் தங்கை சுபத்திரையை விவாகஞ்செய்து கொண்டு அபிமன்யுவைப் பெற்றான். நாக கன்னிகையான உலூபியை மணந்து இராவானையும், பாண்டியராஜன் புத்திரி சித்திராங்கதையைப் பாணிக்ரகணம் பண்ணி பப்ருவாகனையும் பெற்றான். நகுலன் சேதிராஜன் பெண் ரேணுமதியை மணம் புரிந்து நிரமித்தி

ரக்ஷிப் பெற்றுள் சகாதேவன் மத்திரதேசத்து ராஜாவின் குமாரத்தி விஜயை என்பவளை சுயம்வரத்தில் அடைந்து மணந்து ஸுஹோத்திரரைப் பெற்றான். பீமசேனனுக்கு இடும்பியிடம் கடோற்கஜன் பிறந்தான், பாண்டவர்களின் புத்திரர்கள், பதின்மூன்று பேர். அர்ஜுனன் புத்திரன் அபிமன்யு விராடராஜன் புத்திரி உத்தரையை மணந்திருந்தான். உத்தரை கர்ப்பவதியாயிருக்கும்போது அபிமன்யு யுத்தத்தில் மடிந்தான். அவள் பிரசவித்தபோது சிசு செத்துப் பிறந்தது, கிருஷ்ணன் அந்த சிசுவின்மேல் தன் பாதத்தினால் தொட்டுப் பிழைப்பித்தார். குலமெல்லாம் பரிக்ஷீணமான பின் பிறந்த படியால அவனுக்குப் பரிக்ஷித்து என்று சுபத்திரை பேரிட்டாள், பரிக்ஷித்து பத்திரவதியை மணந்து ஜனமேஜய மஹாராஜாவே உம்மைப் பெற்றார். உமக்கு வபுஷ்டமையிடத்தில் சதானீகன், சங்கு கர்ணன் என்பவர்கள் பிறந்திருக்கிறார்கள்.

அறுபத்தொன்பதாவது அத்தியாயம்
அம்சாவதரணபர்வத் தொடர்ச்சி.

பூருவம்சத்தில் உபரிசரவஸ் என்று ஒரு அரசனிருந்தான். அவன் தாமம் தவறாதவன், வேதாத்தியானந தவறாமல் செய்பவன், நிர்மலமானவன் அவன் எப்போதும் வேட்டையாடுவதிலேயே விருப்பமுள்ளவன். அவன் இந்திரனுடைய வேண்டுகோளின்படி சேதி தேசத்தைப் பிடித்துக்கொண்டான் அவன் ஆயுதங்களை விட்டு உக்கிரமான தபசு பண்ணிக்கொண்டிருந்தான். அந்தத் தவத்தைக் கண்ட தேவேந்திரன் முதலான தேவர்கள் தங்கன் பதவிக்கு இடையூறு நேருமென்று கருதிப் பயந்தார்கள். அதனால் தேவர்கள் அரசனிடம் வந்து ராஜாவே! நீ தருமத்தை நிலைநிறுத்துவதினாலே தான் அந்தத்தருமம உலகத்தை எல்லாம தாங்கிக்கொண்டிருக்கிறது என்றார்கள் தேவேந்திரன், இராஜனே! நான் தேவர்களைப் பரிபாலிக்கிறேன் நீ மனிதர்களைப் பரிபாலனம் பண்ணு; உலகத்திலே தர்மத்தை விருத்திசெய்; நீயும் தர்மத்தைச்செய்து அழிவில்லாத புண்ணியலோகங்களை யடை எனக்கு நீ சிநேகிதனுமாய்விட்டாய், இந்த தேசம் பூமியாகிய பசுவுக்கு மடி போன்றது. இது புண்ணிய க்ஷேத்திரம். பசுக்கள், தனம், தானியம் நிறைந்திருக்கின்றது. சுகமான பூலாமுள்ளது. சுகமாக ரக்ஷிக்கக்கூடியது. சாந்தமானது. இந்தச் சேதி தேசத்தில் சகல சம்பத்துகளும் நிறைந்திருக்கின்றன. ஆதலால் நீ இங்கேயே இருந்து அரசுபுரி. இத்தேசத்திலுள்ள பிரஜைகள் யோகியர்கள், தர்மந தவறாதவர்கள். எளிதிலே திருப்தியடைபவர்கள், பொய் சொல்லுகிறதில்லை புத்திரர்கள் பிதாவிடத்திலிருந்து பாகம் பிரித்துக்கொள்ளுகிறதில்லை. நன்மை செய்வதிலேயே எண்ணமுள்ளவர்கள், இவர்களை நியமங்களைக் கலப்பையில் கட்டார்கள். அயறாமல் போஷிக்கின்றார்கள். எல்லா வருணத்தாரும் தத்தம குலாசாரதெறி தவறாமலிருக்கிறார்கள், தேவர்களுக்குரிய ஸ்படிகமயமான ஒரு தெய்வவிமானம் தரு

கிறேன். நீ அதிலேறிக்கொண்டு தேவர்களைப்போல் ஆகாயத்தில் சஞ்சாரம் பண்ணு. வாடாத வைஜயந்தி என்கிற தாமரைப் பூமாலை ஒன்று தருகிறேன். அது யுத்தங்களில் ஆயுதங்களால் காயமடையாதபடி உன்னைக் காப்பாற்றும் என்று கூறிச், சிஷ்டர்களைப் பாதுகாத்தற்குரிய ஒரு மூங்கிற்கோலையும் கொடுத்தான். இப்படியாக இந்திரன் அரசனை சந்தோஷிப்பித்து தேவர்களோடு சொர்க்கலோகஞ்சென்றான். பிறகு,ருபரிசரவஸ் இந்திரன் கொடுத்த விமானத்திலேறிக்கொண்டு, வைஜயந்தி மாலையை யணிந்தவனாய் நகரஞ் சேர்ந்தான். இந்திரன் கொடுத்த மூங்கிற்கோலை நகர்வலஞ் செய்வித்தான். அது ராஜாக்கள்எல்லாரும் மார்கழி மாதம் சுக்கிலபட்சத்தில இந்த உற்சவங்கொண்டாடுகிறார்கள். அதற்கு மறுநாள் மூங்கிற்கோலை சந்தனபுஷ்பங்களாலும்,பலவகை ஆபரணங்களாலலங்கரித்து ஸ்வர்ணம் தரிப்பித்து பிராமணபோஜன முதலிய செய்து, ஆறுகஜம் உயரமிருக்கும்படி பூமியில் நாட்டுகிறார்கள். அந்தக்கோல் முப்பத்திரண்டு சாண் நீளமுள்ளது. அந்தக் கோவில் இந்திரனை பூஜிக்கப்படுகிறான். சகலவாத்தியங்களும்அப்போது முழங்கிக்கொண்டிருக்கும்.மாணிபத்திரன் முதலியவர்களுக்கும் ஆராதனை நடக்கின்றது பலவகையான தானங்களும் ஏழைகளுக்குக் கொடுக்கப்படும். ஜனங்களெல்லாரும் ஆடையாபரணங்களை யணிந்துகொண்டு,வேடிக்கையாகக் காலமகழிப்பார்கள், எல்லாரும் வெகு சந்தோஷமாயிருப்பார்கள். அரசனும் சகலவிதமான அலங்காரத்துடன் மந்திரிகள் அந்தப்புர ஸ்திரீகளுடன் உல்லாசமாயிருந்தான. அப்போது தேவேந்திரன் தேவர்கள் சூழ இந்திராணியோடுகூட விமானத்திலேறி வந்து ஆகாயத்தில் நின்றுகொண்டு ஜனங்களையும் அரசனையும பார்த்துச் சேதிராஜாவைப் போல என் உற்சவத்தைக் கொண்டாடுகிறவர்கள் சகல சமபத்துக்களையும் பெறுவார்கள். அத்தேசமும் யாதொரு குறைவுமில்லாமல் சந்தோஷமாக இருக்கும். பயிர்களெல்லாம கெடுதியில்லாமல் நன்றாய் விளையும. அத்தேசத்தில் ராக்ஷச பயம், பிசாசுகளாலுண்டாம் பீடை ஒன்றும் சேராது என்று வரங்கொடுத்தான். வசுராஜனே இந்திரன் இப்படி மகிமைப்படுத்தினான். தானங்களோடு இந்திரோற்சவத்தைக் கொண்டாடுகிறவர்கள் உபரிசரவஸைப் போலவே பெருமையடைவார்கள். உபரிசரவஸ் சேதி தேசத்திலிருந்து தர்மமாகப் பிரஜாபாலனம் செய்துவந்தான். அவனுக்கு ஐந்து புத்திரர்கள் இருந்தார்கள். அவர்கள் முறையே பிருகதரதன,பிரதியகிருதன,மாவாஹன்,மத்ஸில்லன்,யது என்று பேருள்ளவர்கள். இவர்கள் வெவ்வேறு இராஜ்யங்களுக்கு அரசர்களாயிருந்தார்கள. இந்த அரசன இந்திரன் கிருகத்தினுமவசித்தான். விமானத்தின் மேலேறி த்ரியதத்தில் சஞ்சரித்தான். கந்தர்வர்கள் அப்ஸரஸுகள் முதலாயினோர் வசுராஜனே வணங்கினார்கள். அப்படி அவன் ஆகாயத்தில்சஞ்சரித்ததால் உபரிசரனென்று பேர் பெற்றான்.

அவனுடைய நகரத்துக்குச் சமீபத்தில் சுத்திமதி என்றொரு நதியிருந்தது. அது வெள்ளமாய்ப் பெருகி ஓடும்போது கோலாஹலம் என்றமகீ புருஷரூபங்கொண்டு அந்த வெள்ளத்தைத் தடுத்தது. வசுராஜன் அதைத் தன் காலால் உதைத்தான். உதைத்த விடத்தில் துவாரமுண்டாயிற்று. அந்தத் துவாரத்தின் வழியாகநதி தடையின்றி ஓடிற்று. அந்த நதிக்கு ஒரு ஆணும் பெண்ணுமாக இரண்டு குழந்தைகள் பிறந்தன. சேதிராஜன் மலையை உதைத்து தன்னை விடுவித்ததனால் மகிழ்ந்தநதியானது அந்தப் பெண்ணை நீ பட்டமஹிஷியாகக்கொள், இந்தப் பிள்ளையை சேனாதிபதியாகக்கொள். இது எனக்கு விருப்பம் என்றது. அரசன் அப்படியே பெண்ணைத்தான் விவாகஞ்செய்துகொண்டு,பிள்ளையைச் சேனாதிபதியாக்கினான். அந்தப்பெண்ணுக்குக் கிரிகை என்றபெயர். ஒருநாள் அவனுடைய பிதிர்க்கள் வந்து காட்டிலுள்ள மிருகங்களைக் கொல்லுஎன்ற கட்டளையிட்டுப் போனார்கள். அவன் அப்படியே வனம்போய் வேட்டையாடினான்.

பிறகு அசோகம்,மா,சண்பகம்,புன்னை,கொன்றை,மகிழ்,பாதிரி, பலா,தென்னை,சந்தனம்,மருதமுதலிய மரங்கள் நிறைந்த வனத்தை யடைந்தான். அந்த வனத்தில் குயிலகள் கூவிக்கொண்டிருந்தன வண்டு ரீங்காரஞ் செய்தன. அந்த வனம பார்க்க இனிமையாயிருந்தது. குபேரனுடைய நந்தவனம் போன்றிருந்தது. அதில் தனிர்க ளும் மலர்கள் நிறைந்து செழித்திருந்த ஒரு அசோக மரத்தை யரசன் கண்டான். அதனுடைய குளிர்ந்த நிழலில் உட்கார்ந்துகொண்டிருந்தான். மலரின்து சுகந்தம் வீசினது. காற்று மெதுவாய் உலாவிற்று அரசன் அப்போது தன் பத்தினி கிரிகையை நினைத்தான். உடனே வீரியம் சிதறிற்று. அதை ஒரு இலையிலேந்தி, அங்கிருந்த ஒரு பருந்தையழைத்து,இதை என் பத்தினியிடம் கொண்டுபோய்ச் சேர்த்துவிடு என்று கொடுத்தனுப்பினான். பருந்து அதை எடுத்துக் கொண்டு யமுனையாற்றுக்கு மத்தியில் வருமபோது மற்றொரு பருந்து வந்து அதனோடு சண்டையிட்டது. அதனால் இந்த இலை யமுனை ஆற்றில் விழுந்தது. அததிரிகை என்ற ஒரு அப்ஸரஸ் பிரமாவின் சாபத்தினால் மீன் வடிவங்கொண்டு அந்த யமுனையில வசித்தாள். அவள் அந்த வீரியத்தை விழுங்கினாள். உடனே கர்ப்பமானாள். பத்தாவது மாசத்தில் செம்படவர் யமுனையிலவலை வீசினார்கள். அந்த வலையில் அத்திரிகை அகப்பட்டது. அதைப் பிளந்து அதன் வயிற்றிலிருந்த மனுஷ்யவடிவமான ஒரு பிள்ளையையும பெண்ணையுங்கண்டு எடுத்துகொண்டார்கள். அவர்கள் உடனே வசுராஜனிடம்சென்று மஹாராஜாவே! ஒரு மீனின் வயற்றில இந்த இரண்டு குழந்தைகளிருந்தனவென்று ஆச்சரியத்தோடு சொன்னார்கள். அரசன் ஆண் குழந்தையைத் தான் வாங்கிக்கொண்டு,பெண குழந்தையைச் செடவராஜனுக்குக் கொடுத்தான். அரசனிடமிருந்த பிள்ளையே பின்னால் மதிய ராஜனென்று பேர்பெற்றவன். அத்திரிகை சாபவிமோசனமாய் இருப்பிடம் போனாள்.

செம்படவனிடமிருந்த பெண் மச்ச நாற்ற மூள்ளவளாயிருந்த படியால் மச்சகந்தி என்று பேர் பெற்றாள். இவளுக்குச் சத்தியவதி என்னும் பேருமுண்டு இவள் சகல சற்குணங்களாலும் அழகாலும் நிறைந்திருந்தாள் தன் தகப்பன் கட்டளைப்படி யமுனையில் ஓடம் ஓட்டிக்கொண்டிருந்தாள் ஒருநாள் தீர்த்தயாத்திரையாக வந்த பராசரமுனிவர் அவளைக் கண்டு மோகித்தார். பின் அவளுடைய பிறப்பைப்பற்றி ஞானதிருஷ்டியால் ஆராய்ந்து வசுராஜன் புத்திரி என்று தெரிந்துகொண்டார். பிறகு அவளைப் பார்த்து பெண்ணே! ஓடக்காரனெங்கே என்றார்! அவள் நான் சந்ததியில்லாத செம்படவனுடைய மகள். அவனுக்காக நான் இந்த ஓடத்தை ஓட்டுகிறேன். அதில் ஆயிரம் பேர் இருக்கலாமென்றாள். பராசரர். வசுராஜன் புத்திரியே! ஐந்நூறு பொன் உனக்கு வரும்தாமதிக்காதே ஓடத்தைச் செலுத்து என்றார். அவள் அப்படியே ஓடத்தை ஓட்டிகொண்டு போகையில் முனிவரைப் பார்த்து என்னைச் செம்படவன் மகளான மச்சகந்தி என்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். அதனால எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது. என் பிறப்பின் வரலாற்றைச் சொலலவேண்டுமென்றாள். வசுராஜன் புத்திரியே! உன் வடிவத்தைக் கண்ட மாத்திரத்தில் உன்னிடத்தில் விருப்பங்கொண்டு ஞானதிருஷ்டியால் ஆராய்ந்து வரலாற்றை யறிந்துகொண்டேன், அதைச் சொல்லுகிறேன கேள்.

பர்ஹிஷித்துக்கள் என்று கூறும் பிதிர்த்தேவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மனதினால் உன்னை உண்டாக்கினார்கள். தேவலோகத்தில் அச்சோதம் என்ற ஒரு தடாகமிருக்கின்றது. அச்சோதம் என்ற தடாகத்தில் நீ உண்டானதினால் உனக்கு அச்சோதை என்று பெயராயிருந்தது நீ உன் பிதாக்களைக் கண்டதேயில்லை, ஆகையால் தேவ விமானத்திலேறி ஆகாயத்தில் உலாவிக்கொண்டிருந்த வசுராஜனைப் பார்த்து அவனை உனக்குப் பிதாவாக விரும்பினாய். நீ வேறு பிதாவை விரும்பினதனால் உன் யோகசக்தி குறைந்து கீழே விழுந்தாய். நீ கீழே விழும்போது மூன்று விமானங்கள் உனக்கெதிரில வந்தன. அவற்றுள் கண்ணுக்கு புலப்படாத சூட்மரூபத்தையுடைய உன் பிதிர்க்களிருந்தார்கள். நீ அவரைப்பார்த்து பிதாக்களே என்றாய். அவர்கள் உன்னைப் பயப்படாதே என்று சொன்னார்கள். அதனால் நீ கீழே விழாமல் ஆகாயத்திலேயே நின்றாய். அவர்கள் உன்னைப் பார்த்து நீ உன் குற்றத்தினாலேயே யோக சக்தியற்றுக் கீழே விழுகிறாய். இந்த லோகத்திலுள்ள தேவர்கள் செய்கிற கர்ம பலன்களை இதுதக் சரீரத்திலிருந்தே அனுபவிக்கிறார்கள். மனுஷர் மகள் தாங்கள் செய்கிற கர்ம பலன்களை மறு சரீரமெடுத்தே அனுபவிக்கிறார்கள். ஆகையால் தேவர்கள் செய்த கர்மங்கள் அப்போதே பலிக்கும். மனிதர் செய்தவைகள் மறுஜன்மங்களில தான் பலிக்கும். நீ வசுவின் புத்திரியாக இருக்க நினைத்தாய். அதனாலே கீழே விழு

கிறாய். அத்திரிகை யென்கிற தெய்வப்பெண் கங்கை யமுனை ஆறு களின் சங்கமத்தில் மீனாக இருக்கிறாள் அந்த மீன் வயற்றில் வசு ராஜனுக்குப் புத்திரியாகப் பிறப்பாய். நீ பராசரமுனிவருக்கு ஒரு புத்திரனைப் பெறுவாய். பிறகு சந்தனுவுக்குச் சித்திராங்கதன் விசித் திரவீரியன் என்று இரண்டு புத்திரர்களைப் பெறுவாய் பிறகு நீ உன் உலகத்துக்கு மறுபடியும் வருவாய் என்று கூறினர்கள். ஆகை யால் நீ அழகான சத்தியவதியாக பிறந்திருக்கிறாய். சுராஜனுக்கு மச்சத்தினிடமாக நீ பிறந்தாய் உன் மாதா சொர்க்கலோகஞ் சென் றாள். உனக்கு மங்களமுண்டாகும். எனக்கு வம்ச விருத்திக்காக ஒரு புத்ரன் வேண்டும். இதை நீ பெற்றளிக்க வேண்டுகிறேனென்றார்.

இப்படி பராசார் சொல்ல, சத்தியவதிக்குத் தன் பூர்வ ஜன்ம ஞாபகமுண்டாயிற்று, ஆச்சரியமடைந்தாள். சகோதரனில் உட லம் பூரித்தாள். முனிவரைப் பார்த்து பகவானே! அக்கரையில ரிஷி களிருந்து பார்க்கிறார்களே இப்பொழுது நான் எப்படி கூடுவேன் என்றாள் அவர் உடனே பனியை உண்டாக்கி மறைத்துவிட்டார். மறுபடியும் அவள் முனிவரைப் பார்த்துச் சொல்லுகிறாள். நான் பிதாவுக்கு அடங்கினவள் நான் உம்மைக் கூடினால் கன்னிகழிந்த வளாவேன். கன்னிகழிந்து வீடுபோனால் அவமானம் சேருமே' என் ன செய்கிறது என்றாள். பராசார் அவளைப் பார்த்து நீ என் எண் ணத்தை நிறைவேற்றினபின் மறுபடியும் கன்னிகையாவாய் பயப்ப டவேண்டியதில்லை உனக்கு வரங்களும் தருகிறேனென்றார். அவள் என் சரீரத்திலிருக்கும் மச்சநாற்றம் நீங்கவேண்டுமென்று வரங்கேட் டாள். அவர் அப்படியே வரங்கொடுத்தார். அவள் சரீரத்தின் மச்ச நாற்றமொழிந்தது. யோசனை தூரம் சுகந்தம் வீசியது. அதனால் அவளுக்கு யோசனைகந்தி என்று பேராயிற்று. பிறகு சத்தியவதி பராசரரைத் தழுவிக்கர்ப்பமாய் உடனே ஒரு புத்திரனைப் பெற்றாள் அந்த புத்திரர் யமுனையின் தீவில் பிறந்தபடியால் த்வைபாயனர் என்று பேர்பெற்றார். அவர் தாயாரை நோக்கி நீ நினைக்கும்போது நான் உனக்குப் பிரதயட்சமாய் வந்து உன் மனோபீஷ்டத்தை நிறை வேறறுவேனென்று கூறி விடைபெற்றுக்கொண்டு போய்த் தவத்தி லமர்ந்தார். அவர் மனுஷர்களுடைய க்ஷேமத்தைக் கருதி வேதத் தை நாலாகப் பிரித்தார். அதனால் வியாசர் என்று பேர் பெற் றார். ஸுமந்து, ஜைமினி, பைலவர், எனபவர்களுக்கும் தன் புத்திரர்க்கும் வேதத்தையும், மஹாபாரதத்தையும் உபதேசித் தார். சந்தனுவுக்கும் கங்காதேவிக்கும் வஸுக்களின் அம்சத்தி னால் பீஷ்மர் பிறந்தார்.

மஹாமகிமையுள்ள மாண்டவ்யரென்னும் முனிவர் தவம்பண்ணிக் கொண்டிருந்தார். அத்தேசத்தரசன் அவரை திருடனென்று கருதிக்

கழுவிலேற்றினேன் அந்தரிஷியானவர் கழுவினின்றும்விடுபட்டபின் தர்ம தேவதையை அழைத்து ஓ தர்மராஜாவே! நான்சிறுவனுயிருந்தபோது ஒரு பட்சியைப் பிடித்து அதை எஃதினறுத்திநேன். அதைத்தவிர வேறு பாபக்கோ நான் செய்ததாகத் தோன்றவில்லை. அந்தப் பாபம் என்னுடைய தபசினுல் எரிந்துபோயிருக்கும் அந்தப் பாபத்துக்காக நீ யெண்ணிக் கழுவிலேற்றுவித்தாய் பட்சிகளை வதைப்பதைவிடப் பிராமணனை வதைக்கிற பாபம் பெரியது நீபிராமணனை இயற்றபடியால் பூலோகத்தில் சூத்திரனுகப் பிறக்கக் கடவாயென்று சபித்தார் அந்தச் சாபத்தினுல் யமதர்மராஜன் விதுரராகப் பிறந்தார் ஞானியாகிய ஸஞ்சயன் கவல்கணனுக்குப் பிறந்தான். கர்ணன் கவசகுண்டலங்களோடு சூரியனுக்குக் குந்தியினிடத்தில் பிறந்தான். அதிபக்தியில்லாத லோகேசுவரராய் ஸ்வயம்பிரகாசராகிய திருமால் வசுதேவருக்குத் தேவகியிடம் அவதாரம்செய்தார். இவரையே பிரமமென்றும், மூலப்பிரகிருதி யென்றும, ஆத்மாவென்றும், மஹத்தென்றும, ஈசுவரனென்றும், அந்தர்யாமியென்றும், விசுவகாமாவென்றும், அக்ஷரமாகிய பிரணவ மென்றும, ஹம்ஸரென்றும, கேவலரென்றும் கூறப்படுகிறவர் அவர் தருமதேவதை நீங்கலாகத்தகாத இடங்களிலெல்லாம் சஞ்சரித்தார் அஸ்திர சஸ்திரங்களிற் சிறந்த பராக்கிரமசாலியாகிய சாத்யகியும், கிருதவர்மாவும் ஸதாகனிடத்திலும், ஹார்திக்கனிடத்திலும் பிறந்தார்கள் பரமராஜ மஹாரிஷிக்குத் துரோணர் பிறந்தார். கௌதம கோத்திரத்தாராகிய சரத்வானென்னும் ரிஷிக்குக் கிருபரும், கிருபி யென்பவளும் பிறந்தார்கள், துரோணருக்கு அசுவத்தாமா பிறந்தான்.

துரோணரை யழிப்பதற்காகத் திருஷ்டத்யுமனன் அக்கினியினின்று தனுசுடன் பிறந்தான் திரௌபதி யென்கிற திலோத்தமையும் அந்த யாகாக்கினியிற் பிறந்தாள். பிரக்ஞாதனுடைய சிஷ்யனுகிய நச்னஜித்துக்கு ஸுபலனை பிறந்தான். ஸுபலனுக்குத் தர்மத்தைச்செய்கிற சகுனியும். காந்தாரியும் பிறந்தார்கள் விசித்திரவீரியனுடைய பணிவிடைக்கில் திருதராஷ்டிரன், பாண்டு இருவரும் விபாசருக்குப் பிறந்தார்கள் சூத்திர ஸ்திரீயினிடத்தில் விதுரர் பிறந்தார் பாண்டுவுக்கு இரண்டு பத்னிகளிடத்தில் ஐந்துபுத்திரர்கள் பிறந்தார்கள். எமன், வாயு, இந்திரன் இவர்களாலமுறையே யுதிஷ்டிரர், பீமன், அர்ஜுனன மூவருமே குந்திக்குப பிறந்தார்கள். அசுவினி தேவர்களால நகுல சகாதேவரிருவரும் மாத்திரியினிடத்தில் உதித்தார்கள. திருதராஷ்டிரனுக்குத துரியோதனன் முதலான நூறு புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்களில துர்யோதனன், கர்ணன், துச்சாஸனன, துஸ்ஸகன், துர்மர்ஷணன, விகர்ணன், சித்திரசேனன், விவிம்சதி, ஜயன, ஸத்யவிரதன், புருமித்திரன் இந்தப் பதினேழுபேரும மஹாரதவீர்கள். கரணனென்பவன் திருதராஷ்டிரனுக்கு வைசியப பெண்ணினிடம் பிறந்தவன்.

கிருஷ்ணருடைய சகோதரி சுபத்திரை அர்ஜுனனுக்கு அபிமன்யுவைப்பெற்றாள். பாண்டவர்கள் ஐவரக்குந் தனித்தனியே திரௌபதியினிடம் ஒவ்வொருபுத்திரனாக ஐந்துபேர்பிறந்தார்கள். திருபதனுக்கு ஒரு பெண்பிறந்தாள் அவள் பிறகு ஆண் வடிவம் பெற்றுற் சிகண்டியென்று பேர்பெற்றாள். பிறகு பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் யுத்தம் நேர்ந்தது இருதிறத்தாருக்கும சகாயமாக அநேக இராஜாக்கள் வந்து கூடினார்கள். அவர்களுடைய பேர்களைச் சொல்லமுடியாது என்று வைசம்பாயனர் கூற, ஜனமேஜய மஹாராஜன் ரிஷீசுவரரே! இதுவரைக்கும் சொல்லப்பட்டவர்களும் சொல்லப்படாதவர்களுமான எல்லா ராஜாக்களையும்பற்றி விரிவாகச் சொல்ல வேண்டுமென்று கேட்க வைசம்பாயனர் சொல்லுகின்றார்.

அறுபத்தைந்தாவது அத்தியாயம்

அர்சாவதரணபர்வத் தொடர்ச்சி

இது தெய்வ இரகசியம். நான் பிரமதேவரை ஸ்தோத்திரம் செய்துசொல்லுகிறேன். பூர்வத்தில் ஜமதக்கினி புத்திரராகிய பரசுராமர், க்ஷத்திரியகுலத்தை நாசமாகுமபடி இருபத்தொரு தலைமுறை சங்காரம் பண்ணினார். க்ஷத்திரியவம்சமே யில்லாமற் போய்விட்டது. அதனாலே அந்த க்ஷத்திரிய ஸ்திரீகள் சந்ததியைவிரும்பிப் பிராமணர்களைச் சேர்ந்து முன்னிலும் அதிகபலவானகளான புத்திரர்களைப் பெற்றார்கள். அந்த க்ஷத்திரியர்கள தர்மமுமதீர்க்காயுசும் உடையவர்களாயிருந்தார்கள். பிரஜைகள் நோயில்லாதவர்களாயும் கவலையற்றவர்களாயுமிருந்தார்கள். க்ஷத்திரியர்கள் பூமியைத் தர்மமாகப் பரிபாலனம் பண்ணினார்கள். அதனால் தேவேந்திரன் காலந்தவறாமல் மழை பொழியச் செய்தான். பிராமணர்களெல்லாரும் சேதங்களை அத்தியயனம் செய்தார்கள். க்ஷத்திரியர்கள் பூர்ண தட்சிணையோடு யாகஞ் செய்தார்கள. வைசியர்கள் பூமியைத் திருத்தி பயிரிட்டார்கள். நியாயமார்க்கமாய் வர்த்தகம் நடந்துவந்தது எல்லாரும் தர்மத்தையே விருபபிச் செய்தார்கள். பிரஜைகள, தர்மம் வர்ணச்சிரமந் தவறாமல் நடந்தார்கள். விருட்சாதிகள் தக்ககாலத்தில பூததக்காய்த்துப் பலன் தந்தன. அபபோது கிருதயுகமபோலிருந்தது

இப்படி பூலோகம சிறபபடைந்திருக்குமபோது இராஜஸ்திரீகளிடம் அசுராகள் ஜனித்தார்கள் இந்த அசுரர்கள் பூர்வம்முடன்ற தேவாசுர யுத்தத்தில தேவர்கள் சங்கரிக்கபபட்டவர்கள். சேரகர்கள், கழுதைகள், குதிரைகள, மூதலிய மிருகங்களிடத்திலும் அசுரர்கள் ஜனித்தார்கள் தைதேயர் தனுஜர்களும் பூமியிற் பிறந்தார்கள். அவர்களால் பூமி நிடமபினபடியால பூமிகிலத்து நிற்கமுடியாமற்போயிற்று. அவர்கள் எல்லாப்பிராணிகளையும் வருத்தினர்கள். பிராமணர்களுக்கு விரோதிகளானார்கள். பூமியில் அதர்மம் மிகுந்துபோயிற்று.

அதனலே பூமிதேவி பாரந்தாங்கமாட்டாமல் பிரமதேவரிடம் போனுள். ஆதிசேஷனும் திக்குயானைகளும் கூட கிலி தளர்ந்தன. அதனல் பூமிதேவி, தேவகந்தர்வர்கள் சூழ வீற்றிருந்த பிரமதேவரிடம் போய் அவரை நமஸ்கரித்து கின்ருள். இந்த விஷயந்தை முன்னமே தானே அறிந்திருந்த பிரமதேவர் பூமிதேவியை நோகாகி நீ வந்த காரியம் எனக்குத்தெரியும், அதற்காகவே தேவர்களைப் பூமியில் அனுப்பப்போகிறேன், நீ போகலாமென்று சொல்ல, அவள் தன்னிடம்போய்ச் சேர்ந்தாள் பின்பு பிரமதேவர் தேவர்களை நோக்கி நீங்கள் உங்களுடைய அம்சங்களினலே பூமியில் மனுஷர்களாகப் பிறந்து பூபாரம் தீர்க்கவேண்டுமென்று கட்டளையிட்டார். தேவர்களெல்லாரும் பிரமதேவர் கூறியதைச் சரி யென்று ஒப்புக்கொண்டார்கள் அவர்களெல்லாரும் அப்படியே பூமியிற்பிறக்கத் தீர்மானஞ் செய்துகொண்டு திருமாலிடம்போய், ஜகத்துக்குக் கர்த்தாவ், தேவர்களுக்கு நாயகராயிருக்கும அவரை நோகாகி நீரும் பூமியை இரக்ஷிக்கும்பொருட்டுப் பூலோகத்தில் மனுஷரூபமாக அவதரிக்கவேண்டுமென்று வேண்டினர்கள். அவரும் சரியென்று ஒத்துக் கொண்டார்.

அபிபத்தாருவது அத்தியாயம்.

ஸம்பவ பர்வம்.

இப்படித் தீர்மானஞ் செய்துகொண்ட தேவர், கந்தர்வர், யட்சர்கள் பூமியில் பிராமணர்கள் வமசத்திலும், க்ஷத்திரியர்கள் வம்சத்திலும் ஜன்மமெடுத்து, பிராணிகளைக்கொன்று தின்று ஜீவிக்கும் அசுரர்களைக் சங்கரிக்கார்கள். அவர்கள் பிறக்கும்போதே மஹாபலத்தோடும் பிறந்தபடியால் அவர்கள் குழந்தைப் பருவமாக இருக்கும்போது கூட அவர்களை அசுரர்களை அசுரர்களால் கொல்ல முடியவில்லையென்றுவைசம்பாயனர் கூற,ஜனமேஜயர் அந்தக்கதை களை விரிவாகச் சேட்க விரும்புகிறேனென்று கூறச் சொல்லுகிறார்.

மரீசி, அத்திரி, அங்கிரஸ், புலஸ்தியர், புலகர், கிரது ஆகிய இந்த அறுவரும் பிரமதேவரது மனதிலிருந்து தோன்றினர்கள். பரிசியின் புத்திரர் கசியபர். கசிபர் தட்சருடைய பதின்மூன்று புத்திரிகளை விவாகஞ் செய்துகொண்டார். அதிதி, திதி, தனு, காலே, தனயு, ஹிபவிஷை, குரோதை, பிராதை, விச்வை, விந்தை, கபிலே, மூனி, கத்ரு, என்பவர்களே அந்தப் புத்திரிகள். அதிதிக்கு தாதா, மித்திரன், அரியமா, சக்ரன், வருணன், அம்சன், பகன், விவஸ்வான், பூஷா, ஸவிதா, த்வஷ்டா, விஷ்ணு, என்கிற பன்னிரண்டு சூரியர்கள் பிறந்தார்கள். அவர்களுள் விஷ்ணுகுணங்களிற் சிறந்தவன். திதிக்கு ஹிரண்யகசிபு பிறந்தான். அவனுக்குப் பிரக்லாதன், ஸம்ஹ்லாதன, அனுஹ்லாதன், சிபி, பாஷ்கலன் என்று புத்திரர்கள் பிறந்தார்கள். பிரகலாதனுக்கு விரோசனன், கும்பன, நிகும்பன் என்று மூன்று புத்திரர்கள். விரோசனனுக்குப் பலி பிறந்தான். பலியின் புத்திரன் பாணன். இந்தப் பாணன்தான் சிவபக்த சிரேஷ்டனுய்ச் சிறந்தவன்.

தனுவுக்கு விப்ரசித்தி, சம்பரன், நமுசி, புலோமன், அயோமுகன், கேசி, துர்ஜயன், அசுவசிரன், அசுவசங்கு, சகுனமூர்த்தர், வேகவான், கேதுமான், ஸுவர்பானு, அசுவன், அசுவபதி, வருஷபர்வா, அஜகன், அசுவகிரீவன், ஸூக்ஷ்மன், துருண்டன், இஷுபாரு, ஏகசக்ரன், விரூபாட்சன், ஹரன், நிசந்திரன், நிகும்பன், குபடன், கபடன், சரபன், சலபன், சூரியன், சந்திரமஸ் என்னு நாற்பது புத்திரர்கள் பிறந்தார்கள். மூத்தவனான விப்ரசித்தி அபரான்டான். இன்னும் ஏகாட்சன், ப்ருதபன், ப்ரலம்பன், நாஹுன, வாதாபி, சத்ருந தபனன், சடன், கவிஷ்டன், வனாயு, தீர்க்ஜிஹ்வன் என்கிற பதின்மூவரும் தனுவின் புத்திரர்களாகப் பிறந்தார்கள் இவர்களால் தனுவம்சம் விருத்தியடைந்தது விம்ஹிணை நாகு, சுக்ரர்ர்நமர்த்தனன், ஸுசந்திரன, சுநதிரஹர்த்தா, சுநதிரபிரமர்த்தனன், என்பவர்களைப் பெற்றாள். குரோதையினுடைய புத்திரர்கள் குரோதவசர்கள் என்னுஞ கூட்டத்தாராகப் பிரசித்திபெற்ற தஷ்டர்கள் தர்ச்செய்கையுள்ளவர்கள். தனுஸுக்கு விக்ஷரன், பலன், வீரன், விருதராஸுரன் என்கிற நால்வர் பிறந்தார்கள்.

காலை யென்பவளுக்கு விநாசனன், குரோதன், குரோதஹந்தா, குரோதசத்ரு, காலகேயர்கள் இவர்கள் பிறந்தார்கள். பிருகுவின் புத்திரரான சுக்கிராசாரி அசுரகுருவாயிருந்தார். த்வஷ்டா, அதரி, ரௌத்திரன், கர்பி, இந்தகாவென்னும் சுக்கிரனுடைய புத்திரர்கள். ஸ்ரீயினிடம்போல்லும் தேஜஸ்களையுடையவர்கள், பிரமலோகம் முதலிய இடங்களுக்குப் போகத்தக்கவர்கள் பிரஹித்தி பெற்றவர்கள். விக்ரதைக்குத தாக்ஷியன், அரிஷ்டநேமி, சருடன், அருணன், ஆருணி, வாருணி யென்பவர்கள் பிறந்தார்கள். ஆதிதேஷன் முதலிய நாங்கள் கத்ருவுக்குப் பிறந்தவர்கள்.

முனி யென்பவளுக்குப் பீமசேனன், உக்ரசேனன், ஸுபர்ணன், வருணன, தேவபதி, திருதராஷ்டிரன், ஸூர்யவர்ச்சஸ், ஸுதியவர்சு, அர்க்கபர்ணன், பிரயுதன் பீமன், பிரஹித்தன், எல்லாவற்றையும் அறிந்த சித்தரதன், சாலிசிரஸு, பர்ஜன்யன், கலி, நாரதன் என்ற தேவர்களும் கந்தர்வர்களுமபிறந்தார்கள். பிராதைக்கு அனவதையை, பனு, வம்சை, அசுரை, மார்க்கண்டிபிரியை, அருஷை, சுபகை, பாஹி என்னும் பெண்களும், விபத்தன், பூர்ணன், பர்ஹிஸ், பூர்ணயுஸு, பிரமசாரி, ரதிகுணன், ஸுபர்ணன், விசுவாவஸு, பானு, ஸுசந்திரன் என்கிற புத்திரர்களும் பிறந்தார்கள்.

அலம்புஷை, மிசிரகேசி, வித்யுத்பர்ணை, திலோத்தமை, அருணை, ரட்சிதை ரம்பை, மனோரமை, கேசினி, சுபாகு, ஸுரதை, ஸுரஜை, ஸுப்பிரியை, என்கிற அப்ஸரஸ்கள் ஸுபகைக்குப் பிறந்தார்கள். இப்பொழுது தேவர்கள், கந்தர்வர்கள், அப்ஸரஸ்கள், நாகர், பிராமணர்கள முதலியவரது உற்பத்திகளைச் சொன்னேன். இது புண்ணியம், ஆயுஸ், பாகியம் முதலியவற்றை யளிப்பது. இதைத் தேவபிராமணசந்நிதியில் நியமமாகப் படிப்பவன்

படிக்கிறவன் இகத்தில் சந்ததி பாக்கியம், கீர்த்தி முதலியவற்றைப் பெற்று அந்தத்தில் மேலான பதவியையும் பெறுவான்.

அறுபத்தேழாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வத் தொடர்ச்சி.

முன் பிரமாவின் மானச புத்திரர்கள் அறுவரையும் சொன்னேன். மஹியையுள்ளருக்திருடைய புத்திரர்கள் பதினொருவர். அவர்கள் மிருகவ்யாதர், ஸர்ப்பர், நிருருதி, அஜைகபாதர், அஹிர்புத்னியர், பினாகிடதஹனர், ஈசுவரர், சபாலி, ஸ்தாணு, பகன் என்பவர்கள். இவர்களே ஏாதசருத்திரர்கள் என்னப்படுகிறவர்கள். பிரமபுத்திரர்களில் அங்கிரஸுக்கு பிருகஸ்பதி, உதத்தியர், ஸம்வர்த்தர் என மூன்று குமாரர்கள். அத்திரி முனிவருக்குத் தபசித்திபெற்ற சாந்தகுணமுள்ள அநேக புத்திரர்கள். இராக்ஷஸர்கள், வானரர்கள், கின்னரர்கள் ஆகிய இவர்கள் புலஸ்தியருடைய சந்ததிகள். சரபம், சிங்கம், புலி, கரடி, ஓநாய், கிம்புருஷர் எல்லாரும் புலகருக்குப் பிறந்தவர்கள். க்ரதுமஹாரிஷிக்கு வாலகில்லியர் பிறந்தார்கள். தட்சர் என்பவர் பிரமாவின் உலக்கைக் கட்டைவிரலினின்றும் பிறந்தார். பிரமாவின் இடக்கைக் கட்டை விரலினின்றும் பிறந்த பெண்ணை தக்ஷர் மணம புரிந்து கொண்டார. அவளுக்கு ஐம்பது பெண் பிறந்தார்கள். அவர்களில் கீர்த்தி, லெட்சுமி, திருதி, மேதை, புஷ்டி, சிரத்தை, கிரியை, புத்தி, லஜ்ஜை, மதி என்பவற்றுக்கு அதிஷ்டான தேவதைகளாகிய பத்துப் பெண்களைத் தாமதேவனுக்குக் கொடுத்தார். அசுவினி முதலிய இருபத்தேழு நட்சத்திர தேவதைகளைச் சந்திரன் விவாகம புரிந்துகொண்டான். மற்றைய பதின்மூவரைக் கசியபர் விவாகம் செய்துகொண்டார். தர்மதேவதையும் பிரமதேவருடைய புத்திரர்தான். த்ருவன், ஸோமன், அஹஸ், அநிலன், அநலன், ப்ரத்யூஷன், பிரபாஸன் என்னும அஷ்டவசுக்களும் தர்மதேவதையின் புத்திரர்கள்.

தரனுக்குத் த்ரவணனும் ஹுதஹவ்யவஹனும் பிறந்தார்கள். வைதண்டியன, சிரமன், சாந்தன், முனி யிவாகள் ஆபனுடைய குமாரர்கள். த்ருவனுக்குக் காலபுருஷன் பிறந்தான். ஸோமனுக்கு வர்ச்சஸ் பிறந்தான். சிசிரன், பிராணன், ரமணன் என்பவர்கள் மனோஹரையின் புத்திரர்கள். அஹஸுக்கு ஜோதி, சமன், சாந்தன், முனியென்பவர்கள் பிறந்தார்கள். குமாரகடவுள் அநலனுக்குப் புத்திரனாக அவதரித்தார். கிருத்திகாதேவி யெடுத்து வளர்த்தபடியால் கார்த்திகேயர் என்னப்படுகிறார். அவருக்குப் பின் சாகன், விசாகன், நைகமேயன் என்பவர்கள் பிறந்தார்கள். அநிலனுக்குச் சிவை யென்பவளிடத்தில் மனோஜவன், அக்ஞாதகதி யென்பவர்கள் பிறந்தார்கள். பிரத்யூஷனுக்குத் தேவலமஹாரிஷி பிறந்தார். அவருக்கு இரண்டு புத்திரர்கள். பிரபாஸனென்னும் வஸு பிருகஸ்பதியின் சகோதரி யோகசித்தியைமணம் புரிந்தான். அவளிடமாக விசுவகர்மா பிறந்தான்.

பிரமதேவருடைய வலது ஸ்தனத்தினின்றும் உற்பத்தியான தர்மதேவதைக்குச் சமன், காமன், ஹர்ஷன் என்று மூன்று புத்திரர்கள் பிறந்தார்கள். சமன் பிராப்தி யென்பவளே மணந்தான். காமனுக்கு ரதி மனைவியாளுள். ஹர்ஷனுடைய மனைவி நந்தை யென்பவள். இவர்களாலேயே உலகம் நடைபெற்று வருகிறது. மரீசியின் புத்திரர் கசியபர்; அவருக்குத் தான் தேவாசுரர்களெல்லாரும் பிறந்தார்கள். அந்தக் கசியபரே உலகோற்பத்திக்குக் காரணமானவர்.

விசுவகர்மாவின் புத்திரிபைச்சுரியன் விவாகஞ்செய்துகொண்டான். அவளுக்கு அசுவினிதேவர்கள் பிறந்தார்கள். தேவர்களின் வகை மூப்பத்து மூன்று. ருத்திரர்கள் ஸ்ரத்தியர்கள் மருத்துக்கள் இவர்களுக்குக் கிருஷ்ணபட்சம் உரியது. சுக்கிரனும் விசுவே தேவர்களும் வசுக்களைச் சேர்ந்தவர்கள். அருணன், கருடன், பிருகஸ்பதி, யிவர்கள் ஆதித்தியர்களில் சேர்ந்தவர்கள். இவர்களுக்குச் சுக்கிலபட்சம் ஓ அசுவினிதேவர்களும், ஓஷதிகளும், பசுக்களும், யட்சர் கூட்டத்தில் சேர்ந்தவர்கள் இவர்களைத் தியானித்தால் பாபங்களெல்லாமொழியும்.

பிருகுவின் புத்திரரான சுக்கிராசாரியர் தேவருக்கும் அசுரருக்கும் குருவாயிருந்தார். இவர் நவக்கிரங்களிலொருவர். மழை, மழைபெய்யாமை, பயம், பயமில்லாமை யாகிய இவற்றுக்கு உரியவரா யிருக்கிறார். சுக்கிராசாரியர் கிரகங்களிலொருவரானபின் பிருகு மஹரிஷிக்குச் சியவனர் பிறந்தார். சியவனர் ஆருஷி யென்ற மனுவின் பெண்ணை மணம் புரிந்துகொண்டார். அவருக்கு ஔர்வர் பிறந்தார். ஔர்வருக்கு ரிசீகர் பிறந்தார். ரிசீகருக்கு ஜமதக்னி முதலாக நூறுபுத்திரர்கள் பிறந்தார்கள் ஜமதக்னிக்கு நாலு புத்திரர்கள். அவர்களில் இராமர் கடைசியானவர் இவர் தான் சிவனைக்குறித்துத் தபசு பண்ணிப் பரசு ஆயுதம் பெற்றமையால் பரசுராமரென்னப்பட்டார், பிரமாவுக்குத் தாதா விதாதா என்று வேறிரண்டு புத்திரர்களுமுண்டு. இலட்சுமிதேவி யிவர்களுடைய சகோதரி. இலட்சுமியின் மனசிலிருந்து வானத்தில் சஞ்சரிக்கும் சூரியனுடைய குதிரைகளுண்டாயின. சுக்கிரனுக்கு ஜெஷ்டாமேட்வி பிறந்து வருணனுக்கு மனைவியாளுள். பலன், ஸுரை யென்றும் புத்திரனும், புத்திரியும் அவளுக்குப் பிறந்தவர்கள். ஸுரைக்கு அதர்மன் பிறந்தான், அதருமன் நிருருதி யென்பவளை மணந்தான். இவளுக்குப் பிறந்த ராட்சதர்களுக்கு நிருருத ரென்றுபெயர். பயன், மஹாபயன், பருத்யு என்பவர்களும் அவளுக்குப் பிறந்தவர்களே.

தாம்ராதேவி, சாகி, சேனி, பாவி, திருதராஷ்டரி, சுகி யென்பவர்களைப்பெற்றாள். சாகிக்கு கோடானுகோடி பிறந்தன. சேனி பருந்துகளைப் பெற்றாள். பாவி கழுகு, கள்ளிக்காக்கைகளைப்பெற்றாள். திருதராஷ்டிரி அன்னங்களையும் காரன்னங்களையும் சக்ரவாகங்களையும் பெற்றாள். சுகி கிளிகளைப் பெற்றாள். குரோதவசை

யென்பவள் கோப தேவதையை மணம்புரிந்து மருகி, ப்ருகமந்தா, ஹரி, பத்ரமனஸ், மாதங்கி, சார்த்தூலி, சுவேதை, சுரபி, ஸுரஸை யென்கிற ஒன்பது பெண்களைப் பெற்றாள். மருகிக்கு மிருகங்கள் பிறந்தன. கரடிகளும், கவரிமான்களும் ப்ருகமந்தாவுக்குப் பிறந்தன. பத்ரமனஸுக்கு ஐராவதமென்னும் யானைபிறந்தது. ஹரிக்கு குரங்குகள் பிறந்தன சார்த்தூலிக்குச் சிங்கம், புலி முதலிய பிறந்தன. மாதங்கிக்கு யானைகள் பிறந்தன சுவேதைக்குத் திக்குயானைகள் பிறந்தன. ஸுரபி, ரோஹிணி, கந்தர்வி, விமலை, அநகை, யென்கிற பெண்களைப் பெற்றாள் ரோஹிணிகளுக்குப் பசுக்கள் பிறந்தன. கந்தர்விக்குக் குதிரைகள் பிறந்தன. இரையென்பவளிடமிருந்து மூன்று பெண்கள் பிறந்தார்கள். ஸுரை, ருஹை என்பவர்கள் பிரசித்தமானவர்கள். இவர்களாலேதான் மரங்கள், கொடிகள், செடிகள் உற்பத்தியாயின. பூவாமல் காய்க்கும் மரங்களெல்லாம் ஸுரையென்பவளுக்குப் பிறந்தன. இவற்றுக்கு வனஸ்பதிகளென்று பேர் வழங்குகிறது. பூத்துக் காய்க்கும் மரங்கள் ருஹையினிடமிருந்து தோன்றினவாயின. அநகை உருண்டையான பழந்தரும் எழு கிருட்சங்களைப் பெற்றாள் சுகி யென்பவளுக்கு அனலையின் பெண், ஸுரஸைக்குக் கங்கன் பிறந்தான். ஸுலஸை சதரு இவ் விருவரும் நாகங்களைப் பெற்றார்கள். சேணி அருணை மணந்து சம்பாதி ஜடாயு என்னும் கழுக்களைப் பெற்றாள். இதுவே ஜகதாணுற்பத்தி. இதைக்கேட்பவன் எல்லாஞானமு முடையவனுப் பாபங்களினின்றும் விடுபட்டுச் சுகம் பெறுவான்.

அறுபத்தேட்டாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வத் தொடர்ச்சி

ஜனமேஜய மஹாராஜன் வைசம்பாயனரைப் பார்த்து, பகவானே இப்பொழுது சொல்லிக்கொண்டுவந்த தேவர், அசுராதிகள், மனிதர்கள், மிருகம் முதலியவற்றின் பிறப்பை விரிவாகச் சொல்லவேண்டுமென வைசம்பாயனர் சொல்லுகிறார்.

மஹாராஜாவே! மனுஷ்ய ஜன்மமெடுத்த அசுரர்கள் தேவர்களில் சில முக்கியமானவர்களை மாத்திரம் சொல்லுகிறேன் கேளும். விப்ரசித்தி யென்னும் அசுரன் ஜராசந்தனை ஜனித்தான். ஹிரண்யகசிபுவே சிசுபாலன். ஸம்ஹ்லாதனென்னும் அசுர சிரேஷ்டன் சல்லியனைப் பிறந்தான். பாஷ்கலனென்று கீர்த்திபெற்ற அசுரன் பகதத்தனை ஜனித்தான். ஸங்க்ஷயனென்ற அசுரன் ப்ருஹத்ரதனை ஜனித்தான். அஹ்ரனென்ற அசுரன் பாஹ்லீகனைப் பிறந்தான். பாஹ்லீகன், தந்தவக்தரன், ஏகலவ்யன், நீலன, ருக்மி, சிருதாயுஸு முதலிய அநேக இராஜர்கள் குரோதவசாகளென்னும் அசுரர்களின் வர்க்கத்தைச்சேர்ந்தவர்கள் காலநேமிதான்கம்ஸன்.

துரோணர் பிருகஸ்பதியின் அம்சம்; அவர் வேதங்களையும், தநுர்வேதத்தையும் நன்றுயறிந்தவர். அசுவத்தாமா என்னும்

த்ரோணபுத்திரர் ருக்திரன்யமன் இவர்களுடைய அம்சங்கள்களத்து பிறந்தவர். பிரபாஸன் என்னும் வஸுவே பீஷ்மராக ஜனித்தது ருத்திரர்களுடைய வர்க்கத்தில் ஒருவர் கிருபராகப் பிறந்தார். துவாபரயுக தெய்வமே சகுனி; மருத்துக்களின் அம்சம் ஸாத்யகி திருபதமஹாராஜா பாண்டு விராடன் திருதவர்மாவுமாம், ஹம்ஸன் என்னும் சங்கீவராஜன் திருதராஷ்டிர பஹ்ராராஜாவாகப் பிறந்தான். விதுரர் தர்மதேவதையின அம்சமாம்; துர்யோதனன் கலியினுடைய அம்சம்; புலஸ்தியருடைய வபசத்தாராகிய இராட்சதர்கள் துரியோதனனுடைய தம்பிகளாக ஜனித்தார்கள், என்று கூற ஜனமேஜய பஹ்ராராஜர், சுவாமீ! துரியோதனனுடைய தம்பி மார்களை முறையாகச் சொல்லவேண்டுமென வைசம்பாயனர் சொல்லுகிறார். திருதராஷ்டிர புத்திரவர்களில் மூத்தவன் துரியோதனன், யியுத்ஸு, துச்சாதனன், துஸ்ஸஹன், துர்முகன், விவிம்சதி, விகர்ணன், ஜலஸந்தன், சுலோசனன், விந்தன், அனுவிந்தன், துர்தர்ஷன், ஸுபாகு, துஷ்ப்ரதர்ஷன், துர்பர்ஷணன, துர்முகன் துஷ்கர்ணன், கர்ணன், சித்ரன், உபசித்தன், சித்ராக்ஷன், சாரு, சித்ராங்கன், துர்மதன், துஷ்ப்ரஹர்ஷணன், விவித்ஸு, விகடன, ஸஸன், உளாணகுபன், பதபகபன், நந்தன், உபநந்தன், லேஞபதி, ஸுஷேணன், குண்டோதரன், மஹோதரன், சித்ரபாஹு, சித்ரவர்மா, ஸுவர்மா, துவிரோசனன், அயோபாஹு, பஹராபாஹு, திக்ரசாபன், ஸுகுண்டலன், பீமவேகன், பீமபலன், பலாகி, பீமவிக்ரமன். உக்ராயுதன், பீமசரன். கனகாயு, த்ருடாயுதன், த்ருடவர்மா, த்ருடக்ஷத்ரன், ஸோமகீர்த்தி, அனூதரன், ஜராஸந்தன், த்ருடஸந்தன், ஸத்யஸந்தன், ஸுஹஸ்தவாக்கு, உக்ரசிரவஸ், உக்ரஸேனன், சேகூமமூர்த்தி, அபராஜிதன், பண்டிதகன, விசாலாட்சன், துராதனன, த்ருடஹஸ்தன், ஸுஹஸ்தன். வாதவேகன், ஸுவர்சஸ், ஆதித்யகேது, பஹ்வாசி, நாகதத்தன், அக்ரயாயி, கவசி, நிஷங்கி, கவடி, தண்டதான, தனுர்கிரகன, உக்ரன், பீமரதன், வீரன், வீரபாஹு, அலோலுபன், அபயன், ரௌத்ரகர்மா, த்ருடரதன், அனுதரிஷ்பன், குண்டபேதி, விராவி, தீர்க்கலோசனன், தீர்க்கபாஹு, மஹாபாஹு, வியூபோரு, கனகாங்கதன், குண்டஜன், சித்ரகன், இவர்களே; கடைசியில் துச்சலை என்றொரு பெண். வைசியஸ்திரீயிடத்தில் திருதராஷ்டிரனுக்கு யுயுத்ஸு என்றொரு புத்திரன் பிறந்தான். ஆகத திருதராஷ்டிரனுக்குப்பிறந்தவர்கள் நூற்றிரண்டு பேர்கள். துச்சலையை விர்த்ர தேசாதிபதியான ஜயத்ரதன் விவாகம் பண்ணிகொண்டான். பாண்டவர்கள் தேவாம்சமானது முன்னமே கூறப்பட்டது சந்திரனுடைய புத்திரனுகிய வர்ச்சஸ் என்பனே அபிமன்யு. சந்திரன் தேவர்களை நோக்கி என் புத்திரன் அபிமன்யு என்னும் பேரோடு அர்ஜுனனுக்குப் புத்திரனாகப் பிறப்பான். அவனைப் பிரிந்திருக்க எனக்குப் பிரியமில்லை.

ஆகையால் இவன் பதினறு வருஷம் தான் பூமியிலிருப்பான். இவனுடைய பதினறும் வயதில் பாரதயுத்தம் ஸம்பவிக்கும். அந்த யுத்தத்தில் சத்துரு சேனையில் காற்பங்கை ஒரு காளிலொழித்துவிட்டு, அன்று தினம் மாலையில் தேகத்தை விட்டு என்னிடம்! வருவானென்று கூறத் தேவர்களும் சம்மதித்தார்கள். திருஷ்டதுய்மனன் அக்கினியின் அம்சம். உபபாண்டவர்கள் விசுவதென்னுந்தேவர்கள்.

வசுதேவருடைய பிதாவான சூரனென்று ஒருவரிருந்தார். அவருடைய அத்தை குமாரனுகிய குந்திபோஜனுக்குங் சந்ததியில்லை. சூரன் தனக்குப் பிறக்கும் முதற்குழைந்தையைச் சந்ததி விருத்திக்காகக் குந்திபோஜனுக்குத் தருவதாகச் சொன்னர். முதலில் பிருதை யென்றொரு பெண் பிறந்தது. அந்தப் பெண்ணை வாக்கின்படி குந்திபோஜனுக்குக் கொடுத்தான். அவள் தன் பிதாவின் வீட்டிற்கு வரும் அதிதிகளுக்கு உபசாரம் பண்ணிக்கொண்டிருந்தாள். அக்காலத்தில் கொப குணமுள்ள துர்வாஸ ரிஷிக்கு உபசரிக்கும்படி கேரிட்டது. அவருக்குச் சந்தோஷம் வரும்படி நடந்து கொண்டாள். அதனல் அவர் அவளுக்கு மந்திரோபதேசஞ்செய்து, பெண்ணே! நீ எந்தெந்த தேவதையைச் சிந்தித்து இம்மந்திரத்தைத் தியானித்தாலும் அந்தந்தத் தேவதை வந்து உனக்குப் புத்திரபாக்கியமருள் புரியுமென்று கூறிப் போனர்.

குந்திபோஜன் மகளாதலால் அவள் குந்தி யென்று கூறப்படுவாள். அவள் அந்த மந்திரமகிமையைப் பார்க்க விரும்பிச் சூரியனைச் சிந்தித்தாள் அவர் உடனே பிரத்தியட்சமானர். அவருடைய அனுக்கிரகத்தினல் அவள் கர்ப்பந்தரித்து உடனே ஒரு புத்திரனைப் பெற்றாள். குந்தி அபவாதத்துக்குப் பயந்து அந்தக் குழைந்தையை ஒரு பெடியில் வைத்துக் கங்கையில் விடடு விட்டாள். அந்தக் குழந்தையை ஒரு ஸூதனெடுத்து வளர்த்தான். அந்தக் குழைந்தைக்கு வஸுஷேணன் என்று பேரிட்டார்கள். இவன் அஸ்திர வித்தையிற் சிறந்தவன். துர்யோதனனுக்குத் தோழன். பிறக்கும்போதே கவச குண்டலங்களுடன் பிறந்தான். பிராமணர்கள் விரும்பினதைத் தடையறக் கொடுக்குந் தியாகி, தேவேந்திரன் வந்து யாசிக்கக் கவசகுண்டலங்களை யறுத்துக் கொடுத்தான். இந்திரன மகிழ்ந்து யார்மேல் பட்டாலும் தப்பாமல் கொல்லுகிற ஒரு சத்தியாயுதத்தைக் கொடுத்தான். இந்த வஸுஷேணனே கர்ணனென்று கீர்த்தி பெற்றவன். சூரியனுடைய அம்சம். கிருஷ்ணர் நாராயணம்சம். பலராமர் ஆதிசேஷனுடைய அம்சம். கிருஷ்ண பகவானுடைய பதினயிரம ஸ்திரீகளும் அப்ஸரஸுகளுடைய அம்சப். ருக்மணி இலட்சுமியின் அம்சம. திரௌபதி இந்திராணியின் அம்சம். ஸத்தி, த்ருதி என்பவர்களுடைய அம்சந்தான். குந்தி, மாத்ரி இருவரும். காந்தாரி மதி யென்னும் தெய்வாம்சம். பூமியிற் பிறந்த தேவாசுரர்களுடைய அம்சங்களிவைகளே. இதைப் படிப்பவன் சகல கஷ்டங்களினின்றும் விடுபடுவான்.

அறுபத்தோன்பதாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வத் தொடர்ச்சி.

பிரம புத்திரராகிய தக்ஷர் ஐம்பது புத்திரிகளைப்பெற்றுத் தர்மதேவனுக்குப் பத்துப் பெண்களையும், சந்திரனுக்கு இருபத்தேழு பேரையும், கசியபருக்குப் பதின்மூன்று பெண்களையும் கொடுத்தாரென்று சொன்னேமல்லவா, அந்தக் கசியபருக்கு அதிதி யென்ப வளிடத்தில் தேவர்கள் சூரியன் முதலானவர்களும், தர்ம தேவதையும், யமுனையென்கிற பெண்ணும். மனுவும் பிறந்தார்கள், மனுவினுலே மனுஷ வம்சம் உற்பத்தியாய் நிலே பெற்றது. அதனுலே பிரஜைகள் மனுஷர் என்னப்பட்டார்கள். மனுபுத்திரர்களாகிய பிராமணர்களும் க்ஷத்திரியர்களும் கூடி வாழ்ந்தார்கள். பிராமணர்கள் க்ஷத்திரியர்களுக்கு வேதசாஸ்திரங்களே உபதேசம் செய்தார்கள். இந்த மனுவுக்கு வேனன், திருஷ்ணு, நரிஷ்யந்த, நாபாகு, இக்ஷ்வாகு, காருஷன், சர்யாதி, இளே, பிருஷதரன். அரிஷ்டன் என்னும் பத்துப்பேரும் மனுவின்சந்ததி. இளே யென்னும் பெண்ணுக்குப் புரூரவன், பிறந்தான். இவன் பஹூ பராக்கிரமசாலி தேவர்களுமிவன் சகாயத்தை விரும்பினர்கள். பஹூ காவமுடையவன். பிராமணர்களிடத்தில் சண்டை யிட்டுக்கொண்டிருந்தான். அவர்களுடைய சொத்துக்களே யெல்லாம் பறித்துக்கொண்டான். பிரமலோகத்திலிருந்து ஸனத் குமாரர்வந்து நீதியை உபதேசித்தார். அதையும் அவன் கவனியாமல் பிராமணர்களேவிரோதித்துக் கொண்டிருந்தான். ஆதலால் ரிஷிகள் சபித்தார்கள், அதனுல் அவன் அழிந்துபோனன். அவனுக்கு ஆயு - தீமான், அமாவஸு, த்ரடாயுஸ், வனாயுஸ், சதாயுஸ் என்று ஆறுகுமாரர்கள். ஆயுவுக்கு நகுஷன், விருத்தசர்மா, ரஜி, கயன், அநே நஸ் என்பவர் பிறந்தார்கள். நகுஷன் பூமியைத் தர்மமாய்ப் பரிபாலித்தான். ரிஷிகளிடத்தில் சாபம்வாங்கினன். மிருகங்களேப் போல அவர்கள் தன்னேத் தூக்கும்படி கட்டாயம பண்ணினன். இந்திர பட்டத்தையும் பெற்றான். ரிஷிகளுடைய சாபத்தினுல் அதை இழந்து மலேப்பாம்பாய்ப் பூமியில விழுந்தான். நகுஷனுக்கு யதி, யயாதி, ஸம்யாதி, ஆயாதி, அவதி, தருவன் என ஆறு குமாரர்கள், யதிதவஞ்செய்து மோட்சமடைந்தான். யயாதிபட்டதை யடைந்து சிம்மாசனமேறினன். தர்மமாயுலகை அரசாண்டான். யாகங்களேச் செய்தான். பிதிர்க்களேயும் தேவர்களேயும் ஆராதித்தான். அவனுக்கு தேவயானே, சர்மிஷ்டை யென்று இரு மனேவிகள். தேவயானேக்கு, யது துர்வஸு என்பவர்கள் பிறந்தார்கள். சுக்கிராசாரியாருடைய சாபத்தால் மூப்பை யடைந்து யயாதிவருந்திய போது அவன் தன் புத்திரர்களே அழைத்து என் மூப்பை நீங்களில் யாராவது வாங்கிக்கொண்டு உங்கள் யௌவன பருவத்தை யெனக்குக் கொடுங்கள் என்றான். எல்லாரும் மறுத்துவிட்டார்கள், பூரு மாத்திரம் என் யௌவனத்தைப் பெற்றுக்கொண்டு

இன்பத்தை அநுபவியும், உமது மூப்பை நான் பெற்றுக்கொள் கிறேனென்று கூற, யயாதி தன் மூப்பை அவனுக்குக் கொடுத்து விட்டு அவன் யௌவனத்தைத் தான் வாங்கிக்கொண்டு நெடுங்கா லம் இன்பத்தை அநுபவித்தான். பிறகு விசுவாசியென்னும் தெய் வமங்கையுடன் கூடிக் குபேரனுடைய சைத்ரரதவனத்தில் இன்ப மனுபவித்துக் கொண்டிருந்தான். அப்போதும் அவனுக்குப் போ கங்களில் வெறுப்புஉண்டாகாமையால் விரும்பினபடி காமசுகத்தை அனுபவித்தாலும் ஆசை ஒழியாமல் மேன்மேலும் அதிகரிக்கின் றது. தானியம், பொன், பசு, பெண்கள் எவ்வளவு கிடைத்தாலும் ஆசை அடங்குவதில்லை. ஆகையால் தானே தன் மனதை அடக் கித் திருப்தியடையவேண்டும். மனிஷாக்குக் காயங்களாலே பிரா ணிகளுக்குத் தன்பமுண்டாகாமலிருக்கவேண்டும். தானுமொரு பிராணிக்குப் பயப்படாமலும், தன்னிடத்தில் ஒரு ஜந்துவும் பயம அடையாமலும் இருக்கும்போது அவன் பிரமம் ஆய் விடுகிறான் என்று சொல்லி, யயாதி தன் யௌவனத்தை மீண்டும் பூருவுக்குக் கொடுத்து மூப்பைத் தான் வாங்கிக்கொண்டு, பூருவுக்குப் பட்டா பிஷேகம் செய்து அரசாட்சியை அவனிடமொப்புவித்து, அவனை நோக்கி நீதான் எனக்குப் புத்திரன். என் வம்சம் உன்னாலேதான் அபிவிருத்தியாகு மென்று இந்த வம்சம் கௌரவ வம்சமென்று பெயர்பெறும் என்று கூறிப் பிருகு துங்கமென்னும் மலையில் தவஞ் செய்துகொண்டிருந்து பத்தினிகளோடு முத்தியடைந்தான்.

எழுபதாவது அத்தியாம்.
ஸம்பவபர்வத் தொடர்ச்சி.

ஜனமேஜயர் மஹரிஷியே! யயாதி சுக்கிராசாரி புத்திரியை மணந்த தெப்படி? மூல புருஷர்களாய் வம்சங்களை உற்பத்திசெய்த மஹாராஜாக்களின் சரித்திரத்தையும் விவரமாய்ச் சொல்லவேண்டு மென்று கேட்க வைசம்பாயனர் சொல்லுகிறார்.

அரசாட்சியைப் பற்றித் தேவர்களுக்கும அசுரர்களுக்கும் யுத் தம் உண்டாயிற்று. தேவர்கள் பிருகஸ்பதியைத் தங்களுக்குக் குரு வாயிருந்து வேள்விகள்செய்து வைக்கும்படி வேண்டிக்கொண்டார் கள். அசுரர்கள் சுக்கிராசாரியைக் குருவாயடைந்தார்கள். இந்த இரண்டு குருக்களும் ஒருவரை யொருவர் மேம்படவேண்டு மென் கிற எண்ணங்கொண்டார்கள். யுத்ததில் மடிந்துபோன அசுரர்க ளைச் சுக்கிராசாரியார் சஞ்ஜீவினியந்திரதால பிழைக்குமபடி செய் தார் பிருகஸ்பதிகரு அந்தவித்தை தெரியாமையால மடிந்த தேவர் களை உயிர்ப்பிக்கவல்லவ அதனால் தேவர்கள் மனவருத்தமடைந்து பிருகஸ்பதி புத்திரனாகிய கஜ என்பவனைப் பார்த்து நீ எப்படி யாவது சுக்கிராசாரியாருக்குப் பணிவிடைகளைச் செய்து அவரிட மிருக்கும் சஞ்ஜீவினி மந்திரத்தைக் கற்றுக்கொண்டுவா. சுக்கிராசா யின் புத்திரி தேவயானிகரு மகிழ்ச்சியுண்டாகுமல் உன்காரியம் சித் தியாவதில் தடையில்லை எனறு சொன்னார்கள்.

கஜன் ஒத்துக்கொண்டு சுக்கிராசாரியிடம் போய் நமஸ்கரித்து, நான் அங்கிரஸர் புத்திரரான பிருகஸ்பதியின் குமாரன். என்னைச் சிஷ்யனைக் கொள்ளவேண்டு மென்றான் நான் ஆயிரம் வருஷம் உமக்கு பணிவிடை செய்வேனென்றான். சுக்கிராசாரியார் சரியென்று ஒத்துக்கொண்டு அவனைச் சிஷ்யனைக் கொண்டார். கஜன் குருவின் கட்டளைப்படி தவறாமல் நடந்தான். தேவயானிக்கும் சந்தோஷமுண்டாகும்படி நடந்துவந்தான். அவளிட்ட ஏவல்களையும் தவறாமல் நிறைவேற்றினான். அந்தப் பெண்ணும் அவனிடத்தில் பிரியமாயிருந்தாள். இப்படி ஐந்நூறு வருஷங்கள் கடந்தன. அசுரர்களுக்குக் கஜன் வந்திருக்கும் விஷயம் தெரிந்தது அதனால் கஜன் மாடு மேய்த்துக்கொண்டிருக்கும் போது அவனை யடித்துத் துண்டுகளாக வெட்டி நாய்களுக்குப் போட்டார்கள். சாயங்காலம் பசுக்கள் மாத்திரம் வீடுவந்தன, கஜன் வரவில்லை அப்போது தேவயானி தந்தையை நோக்கி, சூரியாஸ்தமனமாயிற்று மாடுகள் வீடுவந்து சேர்ந்தன. கஜன் நிச்சயமாய் இறந்துபோனான். அவனில்லாமல் நான் ஜீவித்திருக்கமாட்டேனென்றாள். சுக்கிராசாரியார் உண்மை தெரிந்துகொண்டு, சஞ்ஜீவினி பலத்தால் கஜனைக்கூப்பிட அவன் உடனே காயின் உடல்களைப் பிளந்துகொண்டு வெளிப்பட்டுவந்து நின்றான். தேவயானி அவனைப்பார்த்து நீயேன் வரத் தாமதித்தாயென்று கேட்டாள். அவன், நான் நிழலுக்காக ஓருமரத்தின் அடியில் படுத்தேன். அப்போது அசுரர்கள்வந்து என்னை கொன்றுவிட்டு போய்விட்டார்கள். உன் பிதா பிழைப்பித்தமையால் உன்னிடம் வந்தேனென்றான் பின்பு ஒருநாள் கஜன் புஷ்பங்கொண்டுவர வனத்துக்குப் போனான். அசுரர்கள் அவனை மறுபடியும் அடித்துக்கொன்று அரைத்துச் சமுத்திரத்தில் கரைத்து விட்டார்கள் வனம் போன வன் வாராமையால் தேவயானி பிதாவிடம் போய்ச் சொன்னாள். அவர் முன் போலவே கஜனைப் பிழைப்பித்தார். மறுபடியும் அசுரர்கள் கஜனைக்கொன்று சுட்டுப் பொடியாக்கி மதுவோடு கலந்து சுக்கிராசாரியர்க்குக் கொடுத்தார். அவர் அதை குடித்துவிட்டார்.

தேவயானி வந்து பிதாவே! அஸ்தமனமாயிற்று; மாடுகள் வந்தன. கஜன்மாத்திரம் வரவில்லை அவனின்றி நான ஜீவிக்கமாட்டேன் என்றாள். அவர் கஜன் வெளியிருப்பதாகக் கருதி மந்திரத்தினாலழைத்தார். அவன் வராமலே பின் தேவயானியைப் பார்த்துக் கஜனைப் பிழைப்பிப்பதால் பிரயோசனமில்லை. பிழைப்பித்தால் மறுபடியும் அசுரர்கள் கொல்லுவார்கள். தேவர்களாலும் வணங்கத்தக்க நீ மரணமானவனைப் பற்றி விசனப்படாதே. என்றார். அவள் பிருகஸ்பதி புத்திரனை கஜனை மறந்திருக்க முடியாது அவன் பிழைக்காவிட்டால நானும் உயிரை விடுவேனென்றாள். சுக்கிராசாரியார் அசுரர்களிடம கோபக்கொண்டு கஜனைக்கூப்பிட்டார் அவன் அவருடைய வயிற்றுக்குள்ள உருக்கொண்டுசொல்லுகிறான சுவாமீ! நமஸ்கரிக்கின்றேன் என்னைப் புத்திரனைப்போல கிணைத்து

அனுக்கிரகம் செய்யவேண்டு மென்றான். உனக்கு இந்தக் கதி யெப் படி நேர்ந்தது என்றார். அவன் அசுரர்கள் கொன்று மதுவில் கல ந்து உமக்குக் கொடுத்தார்கள் என்று சொன்னான். அவர் தம் மக னைப்பார்த்துப், பெண்ணே! நான் என்னசெய்கிறது கஜன் என் வயிற்றைப்பிளந்து கொண்டுதான் வரவேண்டும் என்ன செய்யலா மென்றார். அவள் பிதாவே! நீர் இறந்தாலும் கஜன் இறந்தாலும் எனக்குச் சுகமில்லை நான் சாகத்தான் வேண்டுமென்றாள். பின் சுக் கிராசாரியார் கஜனைப்பார்த்து உன் எண்ணம் பலித்தது. மந்திரத் தைப்பெற்றுக்கொண்டு என்னைப்பிழைக்கசெய் என்றார். அவன் பிழைத்து அவருடை வயிற்றைப் பிளந்துகொண்டு வந்து குருவை யும் பிழைப்பித்தான். அவருக்கு வந்தனஞ்செய்து சொல்லுகிறான்.

நீர் அமிர்தம் போன்ற மந்திரத்தை யெனக்குக் கொடுத்தபடி யால் உம்மையே நான் மாதா பிதாவாக நினைக்கிறேன். குருவினு டைய உபகாரத்தை யறிந்துள்ள ஒருவன் அவருக்குக் கெடுதியைச் செய்ய நினைக்கமாட்டான். வித்தையை உபதேசித்த குருவைப் பூஜிக்காமலிருப்பவர்கள் நரகத்தையே யடைவார்கள் என்றான். அவர் மதுவினுல் சஜனைக்கூட உண்டு விட்டபடியால் வருத்தபபட் டுச் சொல்லுகிறார் இன்று முதல் புத்திகெட்டு மதுபானஞ் செய்கி றவன் பிரமஹத்தி செய்த தோஷத்தை யடைந்து இகபரங்களில் இகழ்ச்சியடைவான். இது எல்லா லோகங்களுந்தும் பொதுவான வசனமாம் கற்றுணர்ந்தவர்களும் தேவர்களு மிதைக்கேட்கக் கட வர்கள் என்று கூறிவிட்டு அசுரர்களே யழைத்துக் கூறுகிறார். அசு ரர்களே! நீங்கள் அறிவில்லாத மூடர்கள். கஜன் சஞ்சீவினி மந்தி ரத்தை யடைந்துவிட்டான். அவன் எண்ணப் போலப் பிரமாவுக் குச்சமீபத்திலிருப்பான். அவன் புகழ் அழிவற்றது. யக்ஞத்திலும் அவல் பாகம் பெற்றான் என்று சொன்னார் அசுரர்கள். அதை கே ட்டு அதிசயித்து வீட்டுக்கு போய்விட்டார்கள் கஜனும் ஆயிரம வருஷங்களானபடியால் வீட்டுக்குப்போக நினைத்தான.

எழுபத்தோராவது அத்தியாயம்.

ஸம்பவபர்வத் தொடர்ச்சி.

கஜன் தன் விரதத்தை முடித்து விட்டுக் குருவினிடத்தில் உத் தரவு பெற்றுக்கொண்டு புறப்பட்டான். அப்போது தேவயானை அவனுக்குச் சொல்லுகிறாள். நீ கல்வி தவம் ஒழுக்கங்களினுல் சிறந் தவன். இந்திரியங்களே வென்றவன். உன் பிதாவான பிரஹஸ்பதி யிடத்தில் நான் மிகுந்த மரியாதையுடையவள். நான் சொல்வதைக் கேள். நான் உன்னிடத்தில் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறேனோ அப்படியே நீயும் பிரியமுள்ளவனுய் என்னை மணம் புரிகதுகொள எண்றாள். கஜன், உன் பிதாவிடத்தில் நான் மரியாதை செலுத்துவ தைபோல் உன்னிடத்திலும் மரியாதையாயிருக்கவேண்டும். உன்

பிதாவும் நீயும் எனக்குச் சமமான கௌரதையுள்ளவர்கள் ஆதலால் அந்த எண்ணத்தை விட்டுவிடு என்றான். தேவயானீ ஆங்கிரஸின் புத்திரனை பிரஹஸ்பதியின் குமாரனே தவிர என் பிதாவின் புத்திரனல்ல. நீ வந்த காலம் முதல் உனனிடத்தில் அன்பு வைத்தது சிநேகத்தினாலும் உன் மேலுள்ள விருப்பத்தினாலும் தான். அசுரர்கள் உன்னைக் கொன்றபோது நான் செய்தவற்றை நினைகுற்ற பில்லாதஅன்புள்ளநான் உனக்குரியவள் மறுக்கத்தகாது என்றாள். கஜன் தேவயானியே! நீ வஹித்தசுக்கிராசாரியாருடைய வயிற்றிலே நானும் வஹிதனேன். ஆகையால் நீ எனக்குச் சகோதரிதகாத வார்த்தைகளைச் சொல்லாதே என்றான். தேவயானீ கஜ! நீ பெண்ணை மணம் புரியாவிட்டால் இந்த வித்தை உனக்குப் பலிக்காது என்றாள். கஜன் குரு புத்திரியாதலால் உனக்கு மரியாதைசெய்தேன் உன்மேல் விருப்பத்தினலன்று நீ தர்மத்தைமறந்து காமத்தினல் என்னைச் சபித்தாய். அந்த வித்தை எனக்கு பலிக்காவிட்டாலும் நான் உபதேசிக்கிறவனுக்குப் பலியாமற் போகாது. ஆனல் உன்னை ரிஷி புத்திரர்கள மனம செய்யமாட்டார்கள்! க்ஷத்திரியன் பாணிகிரகணம செய்வானென்று கூறிவிட்டுச் சொர்க்கத்துக்குப் போயினன் அதைக்கண்ட தேவர்கள் பிருஹஸ்பதியைப் புகழ்ந்து, கஜனைப்பார்த்து நீ தேவர்களுக்கு அருமையான காரியத்தைச் செய்தாய். நீ எல்லத்தில் பாகம் பெறக்கடவாய் என்றார்கள்.

எழுபத்திரண்டாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வத் தொடர்ச்சி.

தேவர்கள் இப்படியாகத் தங்களுடையகாரியம் ஸித்தியான பிறகு இந்திரனே நோக்கி நீ இனி சத்துருக்களைக் கொல்லலாமென்றார்கள். இந்திரன் தத்துக்கொண்டு புறபபட்டுப் போனன் போகும்போது ஒருவனநிலசர்மிஷ்டை தேவயானீ முதலிய கன்னிகைகள் வஸ்திரங்களைக் களைந்து வைத்துவிட்டு நீராடினர்கள். இந்திரன் காற்றுக வீசி அவற்றை ஒன்றுகக் கலந்துவிட்டுப் போனன். விருஷபர்வாவின் புத்திரியான சர்மிஷ்டை அதையுணராமல் தேவயானியின் வஸ்திரத்தை உடுத்துகொண்டாள். இதனால் தேவயானைக்கும் சர்மிஷ்டைக்கும் சணடை உண்டாயிற்று. தேவயானீ சர்மிஷ்டையே! நீ எனக்குத சிஷ்யத்தன்மையடைந்தவளாதலால் என் வஸ்திரத்தை உடுப்பது மரியாதையல்லவென்றாள். சர்மிஷ்டை நீ என் தந்தையைப் புகழ்ந்து துதிதசி சீவனம் பண்ணுகிறவனுடைய மகள். நானை உன் தந்தைக்குக் கொடுப்பவரான அரசன் மகள். ஆகையால் நீ பிச்சைக்காரி; நீ எனக்குச் சரியானவளல்ல. அதிகமாய் பேசாதே என்று கூறி அவளை யொரு கிணற்றிலே தள்ளிவிட்டுத் தன் நகரம் போய்ச் சேர்ந்தாள். அப்போது யயாதி வேட்டையாடிக் களைத்ததாகத்திற்காக அங்கே வந்து அந்தக் கிணற்றை யெட்டிபார்த்துத் தேவயானியைக் கண்டான் அவளைப்

பார்த்து அழகானபெண்ணே! நீயாருடைய புத்திரி? இக்கக் கிணற் றில் எப்படி விழுந்தாயென்று கேட்டான். தேவயானை நான் சுக்கி ராசாரியின் புத்திரி. என்னைக் கிணற்றிலிருந்து தூக்கிவிடு. நீ சாந்த குணமுள்ளவன். கீர்த்திமான் என்று கூறித் தன்வலக்கையை நீட் டினாள். யயாதி அவளைத் தூக்கிக் கரையிலே விட்டு உன்னிட த்திற் குப் பயப்படாமல் போ என்றான். அவள் நீ என் கையைப்பிடித் தாய் ஆதலால் நீயே எனக்கு நாயகன். என்னையும் அழைத்துக் கொண்டு போ என்றாள். யயாதி நான் க்ஷத்திரியன், நீ பிராமணப் பெண், நமக்கு விவாகம் தகாது. எல்லா உலகங்களுக்கும் ஆசாரி யரான சுக்கிராசாரியாரின் மகளாதலாலும் நான் உன்னை மணக் கத்தகாது என்றான். தேவயானை அப்படியானால் என் தகப்பனையே உனக்கு என்னைகொடுப்பார். நீர் போமென்றாள். யயாதி அவளி டம் உத்தரவு பெற்றுக்கொண்டு தன் வீடு போய்ச் சேர்ந்தான். தேவயானை ஒரு மரத்தடியில் நின்று அழுதுகொண்டிருந்தாள். சுக கிராசாரியார் தன் புத்திரி வரக்காலதாமத மானபடியால தாதியை அழைத்துத் தேவயானையை அழைதுக்கொண்டுவா வென்றார். அவள் எங்குந் தேடிப்பார்த்து மரத்தடியில் அவளைக் கண்டு, நீ யேன் விசனப்படுகிறாய்? உனக்கு என்ன நேரிட்டது என்று கேட் டாள். தேவயானை நடந்ததைச் சொல்லி நான் இனி அரசனுடைய நகரதுக்கு வரமாட்டேனென்று என் பிதாவுக்குச்சொல் என்று அனுப்பினாள். அந்தத்தாதி சுக்கிராசாரியாரிடம போய் நடந்த தைச்சொன்னாள். அதி கேட்டு அவர் மனம் வருந்தித் தன் புத்தி ரியை நோக்கி வனத்துக்குச் சென்றார். தேவயானையைக் கண்டு அவளை அணைத்து மடியில வைத்துகொண்டு, குழந்தாய்! ஒவ் வொருவரும் தமக்கு வரும் சுகதுக்கங்களுக்குத தாமே காரணமா கிறார்கள். நீயும் உன் குற்றதாலேதான் கஷ்டத்தை யடைந்தா யென்று நினைக்கிறேனென்றார். தேவயானை அது இருக்கட்டும். நீ தான் தகப்பனை யாசிக்கிறதினால் நான் பிசாசைக்காரனுடைய புத திரியென்றும் தன் தகப்பன் உடக்குக் கொடுப்பவராகையால்தான் மேன்மை யுடையவளென்றும் சொன்னாளே. அப்படியானால் நான் உன்னைத்தயவு செய்யும்படி கேட்கிறேனென்று கெஞ்சினேன். அப்போதும் அவள் இரங்காமல் என்னைக் கிணற்றில்தள்ளிவிட்டுப் போனாள் என்றாள்.

சுக்கிசாரியார் மகளைப் பார்த்துக் குழந்தாய்! நீ துஷ்டி யாச கம் பண்ணுகிற பிசாசைக்காரனுடைய புதிரியில்லை. நீ எல்லாரா லும் துதிக்கப்படுகிறவனுடைய பெண். சர்மிஷ்டையினுடைய தகப னும். இந்திரனும், யயாதியும், மற்ற எல்லாரும இவ்விஷ்யத்தை யறிவார்கள். என் வல்லமை எப்படிபட்டதெனபதை நீயும் அறி வாய். பிரமதேவரே என்னை எல்லாவற்றுக்கும ஈசுவரனென்று புகழ்ந்துகூறியிருக்கிறார். உலக க்ஷேமத்துகாக மழையை வருஷிப் பேன். சகல பயிர்களையும் தழைத்துப் பெருகச் செய்வேன். இது

நிச்சயம். ஆகையால் கோபியாதே. பொறுமையாயிரு. பொறுமை யுள்ளவன் எல்லாவுலகங்களையும் வசமாக்கிச் கொள்வான் என்று தேறுதல் கூறி வீட்டுக்குப்போவோம் வா என்று, பின்னும் சொல் லுகிறார்.

எழுபத்துமூன்றாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வத் தொடர்ச்சி.

பெண்ணே! பிறர் செய்த குற்றத்தைப் பொறுக்கிறவன் உலக முழுமையும் வென்றவனாகிறன். மூர்க்கக் குதிரையை அடக்கு கிறதுபோலக், கோபத்தை அடக்கிக்கொள்கிறவனுக்குத் தான் பாகன் என்று பேர். கடிவாளத்தைப் பிடித்துக்கொள்ளுகிறவன் சாரதியாகமாட்டான். பாம்பு பழமையான சட்டையை உரித்து விடுகிறதைப்போல, பொறுமையினால் கோபத்தை அடக்கிகொள் பவனே புருஷனென்று சொல்லப்படுகிறன். அவனே சகல சித்தி களையும் பெறுவான். மாசந் தவறாமல், நூறு வருஷகாலம் யாகம் செய்வதால் உண்டாகும் பலனைவிடக் கோபியாமலிருப்பவனுக்குப் புண்ணிய பலன் அதிகம். சுருமமு ர. கோபமும், எப்போதும் நிதா க்கத்தக்கவையாம் தவம் தானம முதலியன கோபத்தால் அழியும், அவனுக்கு ஒன்றும் பலியாது அவனுக்கு இகபரலோக சுகங் களில்லை கோபமுள்ளவனை, மனைவி, புத்திரன், சினேகிதன், வேலைக் காரன், சகோதரன் ஒருவரும் அபிமானிக்கமாட்டாகள். அவனி டத்தில் சந்தியம், தருமம் இவை நில்லா. சிறியோர்களுக்குக்கோ பம் பொறுமை யிவற்றின் பயன் தெரியாது. ஆதலால் அவர்களைப் போல அறிவுள்ளவன் கோபித்துக்கொள்ளக் கூடாது என்றார்.

தேவயானி, பிதாவே! அந்தத்தர்ம இரகசியங்க ளெல்லா மெனக்குத் தெரியும். பொறுமைக்கும் சினத்துக்கு மூள்ள இலாப நஷ்டங்களு மெனக்குத் தெரியும். ஆனால் நெறிதவறிய தர்மத்தை விட்ட சிஷ்யனிடத்தில பொறுமை கூடாது. அப்படிப்பட்ட சிஷ்ய னிடத்தில் வசிப்பது இருவருக்கும் பிரயோசனமில்லை. ஒழுக்கந் தப்பினவர்கள் குலமுதலியவற்றைத் தூஷித்துப் பிறரை நிந்திக்கிற வர்களிடத்தில் அறிவுள்ளவனிருக்கக் கூடாது. தனகுருசமானமான மரியாதை செய்கிறவரிடத்திலேதான் வசிக்கவேண்டும். ஒழுக்கங் கெட்டவர்களும் பாபிகளும சண்டாளர்களே யாவார். குலமேன் மையிலேயும் வித்தையிலேயும் ஆசைவைத்து இறுமாந்திருப்பவர் களிடத்திலிருக்கக்கூடாது. சர்மிஷ்டை சொன்னசொல் என் மனத் தைத் தகிக்கின்றது. தனவான்களிடத்தில் காத்து ஜீவனம் செய்வ தைவிட வேறு இழிவானதொன்று மில்லை. வாளினுலறுத்த புண் ணும், தீயினுற்சுட்ட புண்ணும் ஆறும். வாயினுற் சுட்டபுண் ஆறுவ தில்லை என்றாள்,

---

எழுபத்துநான்காவது அத்தியாயம்.

ஸம்பவபர்வத் தொடர்ச்சி.

அதைக்கேட்ட சுக்கிராசாரியார் விருஷபர்வா விடம் போய்க் கோபத்தோடு சொல்லுகிறார். மஹாராஜாவே! ஒருவன் செய்த பாபம் உடனே பலனைத்தராது அடித்தடித்துச் செய்துகொண்டுவந்தால் அது முதிர்ந்து அவனை நிர்மூலமாக்கும் ஒருவன் தன் பாபத்தையும், தன் புத்திர பௌத்திரர்கள் செய்கிற பாவத்தையும் கவனிக்காவிட்டால் அமித போஜனத்தைப் போலத் தீமைசெய்யும். கல்வியிற் சிறந்த தர்மத்தை யறிந்தவனை பிருஹஸ்பதி புத்திரன் என் வீட்டிலிருந்து வளர்த்தான் அந்தக் கஜன் எனனுடைய சிஷ்யன். அவனை அநியாயமாய்க் கொலை செய்வித்தாய்; இப்போது உன் புத்திரிசார்மிஷ்டையானவள் என்புத்திரி தேவயானையைப் பல படியாகத் துன்புறுத்தி மிகுந்த பாழுங்கிணற்றில் தள்ளிவிட்டாள். அதனாலே தேவயானை தேஹத்தைத்தொலைத்துவிட்டே னென்கிறாள். அவளை விட்டு நான் தரிக்கமாட்டேன். என் புத்திரி தேவயானை இவர்கள் விஷயமாக நீங்கள் செய்த பாபத்தினாலே நான் இந்தத் தேசத்தை விட்டுவிடுகிறேன் என்றார் விருஷபர்வா, ஸ்வாமீ! நான் தேவயானையை அடிக்கவாவது திட்டவாவது சொல்லவில்லை அதற்காக கோபித்துக்கொண்டு என்னை விட்டுப்போவது கூடாது. நீங்கள் போய்விட்டால் நானும் இராஜ்யத்தை விட்டுப் போகவேண்டும். உங்களாலேதானே நாங்கள ஜீவிக்கிறோம் தாங்களில்லாவிட்டால் நான் தீயில் விழுந்திறப்பேனென்றான் சுக்கிராசாரியர் என் புத்திரி தேவயானை தான் எனக்கு உயிர். அவளை விட்டு நானிருக்கமாட்டேன். அவளைச் சமாதானப் படுத்து என்றார். விருஷபர்வா தன் பந்துக்களோடு தேவயானை பிடம்போய், நான் எப்போதும் உமது பிதாவைத் தோத்திரம் செய்கிறேன். அவரையே வணங்கிக் கொண்டிருக்கிறேன். உமது இஷ்டத்தைச் சொன்னால் அப்படியே செயவேனென்றான். உன் புத்திரி சர்மிஷ்டை ஆயிரம் பெண்களுடன் எனக்குப் பணிவிடைக்காரியா யிருக்க வேண்டும். நான் போகுமிடந்தொறும் வந்து வசிக்கவேண்டுமென்றாள் அவன் உடனே ஒரு தாதியை அழைத்து நீ போய் ஆயிரம் பணிப் பெண்களுடனே எம புத்திரியை அழைத்துக்கொண்டு வா என்றான். அவள் போய சர்மிஷ்டைடைப் பார்த்து அம்மா! உன் பிதா உன்னை அழைக்கிறார் நீ தேவயானைக்கு அபசாரம பண்ணினபடியால் சுக்கிராசாரியார் இவ்விராஜ்யத்தை விட்டுப்போகிறார். அவர் போனால் உன் பந்துக்களுக்குச் சுகம்போயிற்று. அதற்காக நீ தேவயானைக்கு ஆயிரம கன்னிகைகளோடு பணிவிடை செய்துகொண்டிருக்கவேண்டுமாமென்றாள் அவள் உடனே பிதாவின உத்தரவுப்படி புறப்பட்டுத தேவயானியினிடம் போய் நான் ஆயிரம் பெண்களுடன் உனக்குப் பணிவிடைக்காரி யாகிறேன் நீவிவாகமாய்ப் போகிற இடத்துக்கும் கூட வருகிறேனென்றாள். தேவ

யாணி நீ தூதிக்கப்படுகிற மஹாராஜாவின் மகளாயிற்றே! பிச்சை யெடுப்பவன் பெண்ணுக்குப் பணிவிடைக்காரியாவாயா என்றாள். என் சுற்றத்தாருடைய சௌக்கியத்துக்காக நான் உனக்குப் பணி விடைக்காரியாகிறேனென்றாள். தேவயாணி தன் பிதாவைநோக்கி நான் சந்தோஷத்தை யடைந்தேன். இனிப் பட்டணம் போகலா மென்றாள். சுக்கிராசாரியார் மகிழ்ந்து அவளுடன் பட்டணத்தில் பிரவேசித்து அசுரர்கள் துதிக்க வீற்றிருந்தார்.

எழுபத்தைந்தாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வத தொடர்ச்சி

வெகுகாலஞ் சென்ற பின், தேவயாணி சர்மிஷ்டையோடு கூட விளையாடுகிறதற்காக முன போன வனத்துக்கே போனாள். ஆபரண வேலைக்காரிகளும் கூடப் போனார்கள். எல்லாரும் பலவகையாய் விளையாடிக்கொண்டிருந்தார்கள். யயாதிமஹாராஜாவும் வேட்டை யாடிக் களைத்துத் தண்ணீருக்காக அங்கேவந்து அவர்களைப் பார்த்தான். பாடி யாடி விளையாடிக்கொண்டிருந்த அந்தப் பெண்கள் அவனைக் கண்டதும் வெடுகிதத்திலெழுந்து நின்றார்கள். யயாதி உன்னதமான ஆசனத்திலிருந்த தேவயாணியைப் பார்த்து, உங்களுடைய குலகோத்திரத்தை நான் விரும்புகிறேன் என்றான். அவள் நான் சுக்கிராசாரியுதிரி; இவள் விருஷபர்வாவென்னும் அசுரராஜாவின் மகள். எனக்குத் தாதியும் தோழியுமானவள் என்றாள். யயாதி தேவ கந்தர்வர்களிலுங் கூடக் கிடைப்பதற்கரிய சௌந்தரியமுள்ள இவள் தாதியா யிருப்பதேன்? இவளுடைய அழகுக்கு உன்னழகு எம்மாத்திரம்? இவள உனக்கு அடிமையாகத் தகாததா மென்றான். பஹாராஜாவே! இது விதிவசமென்று கருதவேண்டும. நீர் யார்? எங்கிருந்து வருகிறீர என்று கேட்டாள். நான் யயாதி யென்று பேர்கொண்ட இராஜன் என்றான். யயாதி நான் போகிறேனென்றுசூறத் தேவயாணி மஹாராஜாவே! நான் உமக்குரியவள். நீர் எனக்கு அன்பருமை நாயகருமானவர். என்னைக் கைபபற்றும் என்றாள். சர்மிஷ்டையிடம் ஆசையுள்ள அரசன், தேவயாணியைப்பார்த்து, அயலான மனைவி, சகோதரி, மேலான ஜாதியிற் பிறந்தவள், சகோத்திரமானவள், மருமகள், பிசசைக்காரி, வியாதியாயிருப்பவள் இவளை மணம்புரியக் கூடாது. ஆகையால் பிராமணப்பெண்ணாகிய உன்னை மணம்புரியக்கூடாது எனறான். க்ஷத்திரிய ஜாதிக்கும பிராமணஜாதிக்கும் அதிசவித்தியாசமில்லை. உம மைத்தவிர என்னையை ஒருவருந் தொட்டதில்லை. நீரே என்னையை முதலில் தொட்டவர். ஆகையால என்னை மற்றொருவரும விவாகஞ் செய்யக்கூடாது எனறு தேவயாணி சொன்னாள். யயாதி பிராமணப் பெண்ணை விவாகஞ்செய்வது க்ஷத்திரியனுக்கு எவ்வகையிலுந் தகாது. உன் பிதா கன்னிகாதானஞ் செய்யாவிடுக்க எப்படி நான் மணப்பது என்றான். அப்படியானால் என் பிதாவின் அனுமதியினாலேயே என்னை மணம் புரிந்து கொள்ளும், எனறு கூறி, ஒரு

தாதியைப்பார்த்து நீ என் பிதாவைச் சீக்கிரமாய் அழைத்துக்கொண்டுவா என்றாள். அவள் போய்ச் சொன்னவுடனே சுக்கிராசாரியார் அவ்விடம் வந்தார். அரசன் அவருக்கு வணங்கினான். அப்போது தேவயானி பிதாவைப் பார்த்து இந்த அரசன் என் கையைப்பிடித்து எடுத்து எனைக் காப்பாற்றினார். ஆகையால் அவருக்கு என்னை விவாகஞ் செய்துகொடுவெமன்று கூறினாள். சுக்கிராசாரியார் அரசனைப்பார்த்து மஹாராஜாவே! எனக்கும்பிரியமான இந்தத்தேவயானியை உனக்குக் கொடுக்கிறேன் அவள் விதிவசத்தால் உனக்கே மனைவியாகத் தக்கவள். அதனாலுண்டாகும் பாபம் உன்னைச்சேராது. இவளை மனைவியாகக்கொள். இந்தச்சர்மிஷ்டையையும் அழைத்துக்கொண்டு போ. ஆனால்அவளை நீ தொடாதே. மற்றெல்லாப் பெருமைகளையும் செய் உனக்கு வேண்டிய வரத்தையுங்கேள் கருகிறேனென்றார் யயாதி சுக்கிராசாரியாரை வணங்கி அவர் இஷ்டப்படியே தேவயானியை மணம் புரிந்து, சர்மிஷ்டையையாடு அவளையும் அழைத்துக்கொண்டு தன் நகரம் போய்ச்சேர்ந்தான்.

எழுபத்தாறுவது அத்தியாயம்
ஸம்பவபர்வத் தொடர்ச்சி

யயாதி தன் நகரம்போய் அந்தப்புரத்தில் தேவயானியை வைத்து அசோகவனிகை யெனனும் தோட்டத்தினருகில் ஒருமிடி கட்டி அதில் சர்மிஷ்டையை வைத்தான். நெடுங்காலம் தேவயானியும் அரசனும்நேசமாகக்கூடி வாழ்ந்திருந்தார்கள் தேவயானிசர்ப்பாதரித்து ஒருகுழந்தையையும் பெற்றாள். இப்படியிருக்க,ஒருநாள் சர்மிஷ்டை சர்வாபரணங்களோடு தரிதத்துக்கொண்டு அசோகமரத்தினடியில்நின்று, கண்ணாடியில் தன்முகத்தைப்பார்த்துச், ரணவீனையடையக் காதல்கொண்டு தானே சொலலிக் கொள்கிறாள். தேவயானிப் புத்திரனைப் பெற்றாள். அந்த அரசனே எனக்கும நாயகன். அரசன் தனித்திருக்காலத்தில் எப்படியாவது அவனிடையடையலாம்என்று எண்ணிக கொண்டிருக்குமபோது அரசன தற்செயலாக வந்து சேர்ந்தான். சர்மிஷ்டை சந்தோஷத்துடன அவனிப் பார்த்துச் சொலலுகிறாள். என்னுடைய ரூபம், குலம், ஒழுக்கமெல்லாமுமக்கத் தெரியும். எனக்குப புத்திரபாகியபோ தருமபடி நான் உம்மைப் பிரார்த்திக கிறேனென்றாள் அரசன் நான் உன்னைப் பார்த்தது முதல் உன்னையே நினைத்துக்கொண்டிருக்கிறேன். உன் அழகுக்குச் சமானமே கிடையாது. ஆனால் சுக்கிராசாரியார் உன்னைத் தொடக் கூடாது என்று கட்டளை யிட்டிருக்கிறார் என்றான். சர்மிஷ்டை, மஹாராஜாவே! பரிகாசத்திலும், ஸ்திரீகள் விஷயத்திலும, விவாக காலத்திலும், மரணபாய காலத்திலும், எல்லாப் பொருள்களையும் இழந்துபோகும்படி நேரிட்டபோதும் பொய் சொல்வது குற்ற மாகாது என்று பெரியோர்கூறுகிறார்கள் தன் நாயகனும், தன்தோழியின் நாயகனும் சமம்தான். என தோழியான தேவயானிக்குநீர்

நாயகன். சுக்கிராசாரியாரும் தேவயானிக்குச் சமமாகவே என்னை வைத்திருக்கும்படி சொன்னார். நீர், யார் எதைக்கேட்டாலும் தரு வதாகப் பறைசாற்றுவித்திருக்கிறீர். ஆதலால் நான் கேட்டதை மறுக்காமல் கொடும் என்றாள் யயாதி உனக்கு என்ன வேண்டும் சொல். தனம், பூமி எதைக்கேட்டாலும் தடையின்றித் தருவேனென் றான். அவள் அவையெல்லாம் எனக்கு என்னத்துக்கு? புத்திரபாக் கியத்துக்கு மேற்பட்ட தொன்றுமில்லை. புத்திரனும் பதியுமில்லாத பெண்ணுக்கு இகபர லாபங்களொன்றுமில்லை. தேவயானி உமது மனைவி நான் அவளுக்குத்தோழி. ஆகையால் எங்களிருவருக்கும நீரே நாயகன். புத்திரபாக்கியத்தை அருளுமென்றாள். அறனும சம்மதித்தான். சர்மிஷ்டை அதே கர்ப்பமாய் ஒரு புத்திரனையும் பெற் றாள். அரசனுக்குத் தேவயானிபிடத்தில் விருப்பம குறைந்தது. சர்மிஷ்டைமேல் கரைகடந்த ஆசை உண்டாயிற்று.

எழுபத்தேழாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வத் தொடர்ச்சி.

சர்மிஷ்டை புத்திரனைப் பெற்றதைத் தேவயானி கேட்டு அதைப் பற்றி யோசித்துகொண்டு, அவளுடைய வீட்டுக்குப் போய், அரசருக்குத்தர ஆசைப்பட்டுப பாபத்தைச் செய்து விட் டாயேயென்று கேட்டாள் அவள் நான் பாபஞ்செய்யவில்லை. ஒரு பிரமரிஷி என் கிருகத்துக்கு வந்தார். அவரைப் புத்திரப்பேறு அருளும்படி கேட்டேன். அவர் கொடுத்த வரத்தினால இந்தப் புத் திரனைப் பெற்றேனென்றாள், தேவயானி சரிதானென்று நம்பிக கொண்டு வீடுபோய்சேர்ந்தாள். பின் தேவயானிக்கு யது, துர்வ ஸு என்று இரண்டு புத்திரர் பிறந்தார்கள். அபோது தேவயா னிக்கு அரசன் மதுவைக்கொடுத்தான். அவள் குடித்து வெறித்தி ருந்தாள். அதனால வாயில் வந்தபடி பிதற்றிக்கொண்டிருந்தாள். அப்போது யயாதி அவளுக்கு அனுகூலப்பர், அங்கரீர்சகரீயும் காவலாக வைத்தான். சர்மிஷ்டையோடு கூடியிருந்தான். சர்மிஷ் டைக்கு மூன்று புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்கள் முறையே திருஹ்யு, அது, பூரு என்னப்படுவார்கள்.

பிறகு ஒருநாள் யயாதியும் தேவயானியும நோட்டத்திற்குப் போனார்கள் வனத்தில் விளையாடிகொண்டிருந்த குழந்தைகளைத் தேவயானி பார்த்தாள். அரசனைப்பார்த்து, இவர்கள யாருடைய புத்திரர்கள். இவாகள சாயலால் உம்மைப போனதிருகிறார்கள் எனறு சொலலி அருகப் புத்திராசலையுமகேடடாள். அந்தப புதத ரர்கள் இராஜாவையே காடடி யிவர்தாம் எங்களுக்குப் பிதாவனறு சொல்லி அரசன் கிடடப்போனார்கள். அரசன் அவர்களைக்கவனிக் கவில்லை. அவர்கள் அழுதுகொணடு சர்மிஷ்டையிடம் போனார்கள் அரசன் வெகுநேரமபேசாமலிருந்துவிட்டான். பின் தேவயானி

சர்மிஷ்டையைப் பார்த்து நீ இப்படிப் பொய் சொல்லலாமா? ஒரு ரிஷிக்குப் பெற்றோனென்றுயே இது நியாயமா என்றாள். சர்மிஷ்டை நீர் அரசனைப் பர்த்தாவாக அடைந்தபோதே நானும் அவரையே பர்த்தாவாக வரித்துவிட்டேன். சுக்கிராசாரியார் நம்மிருவரையும் அரசனுக்குக் கொடுத்தார் ஆகலால் அரசன் நம்மிருவரையும் சமமாகவே பரிபாலிக்கின்றார் என்றாள். நான் ரிஷியினுலே புத்திரசந்தானம் பெற்றோனென்று தானே சொன்னேன். தோழியினை அவன் பார்த்தாவா யிருக்கிறானென்றாள். அது கேட்ட தேவயானி, இராஜனைப்பார்த்து மஹாராஜாவே! எனக்குப் பிரியமில்லாதைச் செய்தீர் நீர் சர்மிஷ்டையோடு கூடிவாழ்ந்திரும். நான் இங்கே யிருப்பதில்லை என்று சொல்லித் தன் பூஷணங்களைக் கழற்றி யெறிந்துவிட்டுப் புறப்பட்டாள். இராஜா அவளுக்குச் சமாதானம் சொல்லிக்கொண்டே பின்னுலே போனன் அவள் திரும்பிப் பாராமல் தன் பிதாவிடம் போய்விட்டாள். இராஜாவும் கூடப் போய்ச் சுக்கிராசாரியரைப் பணிந்தான் தேவயானி பிதாவே! தர்மந் தவறிப்போயிற்று இந்த அரசன் முறை தவறிச் சர்மிஷ்டையைக் கூடி மூன்று புத்திரர்களைப்பெற்றான். எனக்கு இரண்டு புத்திரர்கள் தானே என்றாள் அதைக் கேட்ட சுக்கிராசாரியார் அரசனைப் பார்த்து நீ தர்மதவறிய பிசகான காரியஞ் செய்தபடியால் நீ மெலிவனாகுதியிழந்து மூப்பை அடையக் கடவாய் என்று சபித்தார்.

அரசன், சுவாமீ! இந்தச் சர்மிஷ்டை ருதுகாலத்தில் கர்ப்பம் வேண்டுமென்றுகேட்டாள் ருதுகாலத்தில் கர்ப்பதானத்தை விரும்பினவளுக்கு அதைக்கொடாமலிட்டால அவனுக்குக் கருவழித்த பாவம் வருமென்று வேதபுராணாந்தவர்கள் கூறுகின்றார்களே! அதை உத்தேசித்தும், யார் யார் எந்தெந்த விருப்பினுலும் அதைக் கொடுத்து அவர்களைத் திருப்தி செய்யவேண்டுமென்றும் நான விதம் பூண்டிருக்கிறபடி அவளும் உபமாலே கொடுக்கப்பட்டவள். அவள்வேறொரு கணவனை வரிக்க விருப்பமில்லை இதனுலே நான அவளைச் சேர்ந்தேன். இந்தக் குற்றத்தை மன்னிக்கவேண்டுமென்று வேண்டிக் கொண்டான சுக்கிராசாரியார் அரசனே! நீ யெனக்கு தெரிவித்தபடி பின்செய்திருக்கவேண்டும் அப்படியிலலாமல் நடந்ததற்பு எனறார் உடனே அரசனுக்கு மூப்புப் பருவம் வந்துவிட்டது.

அரசன் சுக்கிராசாரியாரைப் பார்த்துச் சுவாமீ! இந்த விருத்தர்ப்பியம் எனக்கு அடையாமலிருக்கவேண்டுமென்றான். சுக்கிராசாரியர் அரசனே நான சொன்னது தவறாது ஆனுல் இந்தமூப்புப் பருவத்தை வேறெவரவது வாங்கிகொள்கிறவர்கள் உண்டானுலை இதை அவனுக்குக் கொடுத்து அவனுடைய யௌவனத்தை வாங்கிக்கொள என்றார். யயாதி சுவாமீ! என்புத்திரர்களில் என் விருத்தாபயத்தை வாங்கிக்கொண்டு தன் யௌவனத்தை யெனக்குக்

கொடுக்கிறவனே என் பட்டத்துக்குரியவனாக வேண்டும். இதற்கு உத்தரவு அருளவேண்டுகிறேன் என்றான். அவர் சரி யென்று ஒப்புக்கொண்டார்.

எழுபத்தெட்டாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வத் தொடர்ச்சி.

யயாதி ஒளரநக்குப்போய், பூரு என்னும் தன் புத்திரனை பழித்துப், புத்திரனே! கக்ஷிரசாரியார் நான் மூப்பை அடையுபடி சபித்துவிட்டார். நீ இதைப்பெற்றுக்கொண்டு உன் யௌவனத்தை யெனக்குத் தாவு, ஆயிரம் வருஷம் சென்றபின் உன் யௌவனத்தைப் பெற்றுச்கொள் என்றான். யதி, மஹாராஜரவே! மூப்பில அநேக குற்றங்களிருக்கின்றன. மூப்பினால் சரீரமெல்லாம் அவலட்சணமாகின்றது. சக்திகுறைகின்றது சிறு பெண்களும், பணிவிடைக்காரர்களும் பரிகாசம்பண்ணி அவமதிக்கின்றார்கள். ஆகையால நான் வாங்கிக்கொள்ளமாட்டேன் உமக்குப் பிரியமுள்ள வேறு புத்திரனுக்குக் கொடுமென்றான். மஹாராஜ யதுவைப் பார்த்து நீ யென்னுடைய எண்ணப்படி நடவாமையால் நீ இராஜ்யத்தை அடையமாட்டா யென்று சொல்லிந, துர்வஸுவைப் பார்த்து நீ யாவது என் விருதாதாப்பிபதாபத்தை பெற்றுக்கொண்டு உன் யௌவனத்தைக்கொடு; ஆயிரம வருஷங்களுக்குப் பின் மறுபடியும் உன் யௌவனத்தை உனக்குக் கொடுபபேனென்றான். அவன் பிதாவே! இந்தஜரையானது காமத்தை அழிக்கின்றது. பலத்தைக் கெடுக்கின்றது. ரூபத்தை விகாரப் படுகின்றது. : ஆதலால் இந்த மூப்பை நான் வாங்கிக்கொள்ளமாட்டேனென்றான். அரசன் அவனைப பார்த்து, நீ யென்னை மறுதலித்துவிட்டபடியால் உன சந்ததி விருத்தியாகாது. மிருகாதிகளுக்குச சமானமாயத், தர்மத்தை யுணராமல் சாஸ்திரமெறி கடந்தவாய், மாம்சபட்சணம பண்ணிகொண்டு காட்டில் வசிச்சும் மிலேச்சகர்களுக்கு அரசனாக்க கடவாயென்று சபித்தான். தருஹ்யுவை அழைத்து அவனிடம் சொலல, அவன ஜரையை யடைந்து பாதி, குதிரை, தேர் முதலிய வாகனங்களிலேறவும ஸ்திரீகளை அநுபவிக்கவும சக்திபற்றுப போகிறான். பேச்சுக தடுமாறுகிறது. ஆகையால அந்த ஜரை யெனக்கு வேண்டாமென்றான். அரசன அவனைபபார்த்து நீ என்னை அவமதித்தபடியால் யானை குதிரைகள் பேரகூடாத இடத்திலிருந்து போஜனம் பண்ணிகொண்டு இருக்கக்கடவாய் எனறு சபித்தான்.

பிறகு அனுவைப பார்த்து, நீ என் இழப்பருவத்தை ஆயிரம் வருஷம் வாங்கிக்கொள, பின உன யௌவனத்தை உனக்குத்தரு வேனென்றான். அவன, பிதாவே! பாலனுக்கும கிழவனுகும பேதமில்லை. சுதந்திரமில்லாதவனாகிறான். நினைத்தபடி உண்கிறான, அகஸ்மாத் காரியங்களைக் கிரமமாகச செய்யமாட்டான். ஆகையால

அந்தமூப்பு எனக்கு வேண்டாமென்றான் யயாதி அவனிடம்பார்த்து நீ யென் இருதயத்திலிருந்து உத்பத்தியானாய் அப்படி யிருந்தும் என் சொல்லை மறுத்தாய்; ஆசையால் உன் சந்ததியும் அற்பாயுசாய்ப் போம் நீ அக்கினி கிருத்தியமில்லாதவனாவாய் என்று சபித்தான்.

பின், பூரு என்கிற தன் புத்திரனை அழைத்து, என் மூப்பை நீ வாங்கிக்கொண்டு ஆயிரவருஷம் தன்பத்தை அனுபவி இந்த மூப்பு சுக்கிராசாரியருடைய சாபத்தால் வந்தது. கொஞ்சகாலம் நான் சுகத்தை அனுபவிக்கிறேன். பின் நான் வாங்கிகொண்டு உன் யௌவனத்தை உனக்குத் தருகிறேன் என்றான் அது கேட்ட பூரு, மஹாராஜாவே! நீங்கள் சொல்வது எது ஆனாலும் அதன்படியே நடக்க நான் சித்தமாயிருக்கிறேன். குரு வாக்கியத்தை அசட்டை செய்யலாகாது குரு வசனமானது புண்ணியத்தைத் தரும் பாபத்தைப் போக்கும். ஆயுசை விருத்திபாக்கும். சொர்க்கம் போகங்களையும் தரும இந்திரன் குருவாசகிய பரிபாலனத்தினாலேயே நிரிபுவனங்களையும் ஆளுகிறான் நீர் எத்தனை வருஷம் வேண்டுமானாலும என் யௌவனத்தைப் பெறுகொண்டு சுகத்தை அனுபவியும். உமது ஐசையை நான் அனுபவிக்கிறேன் என்றான். யயாதி மனமகிழ்ந்து, புத்திரசிகாமணியே! உன் இராஜ்பாரதில பிரஜைகள் நோயற்றவர்களாயிருப்பார்கள். அவர்களுக்கு ஒரு குறைவும் வாராது என்று கூறித் தன் மூப்பை அவனுக்கு கொடுத்து அவனுடைய யௌவனத்தை வாங்கிக கொண்டான.

எழுபத்தோன்பதாவது அத்தியாயம்.
ஸம்பவபர்வத் தொடர்ச்சி.

யயாதி யௌவனத்தைப பெற்று இஷ்டப்படி சுகபோகங்களை அனுபவித்தான். வேள்விகளைச் செய்து தேவர்களுக்குத் திருப்தி செய்தான. சிரார்த்தத்தினால் பிதிர்களை மகிழ்வித்தான். ஏழைகளுக்கு உபகாரம் பணனி மகிழவித்தான். பிராமணர்களுக்கு அவாகளுடைய விருப்பங்களை யெலாம நிறைவேற்றிவைத்தான். வைசியர்களுக்குத் திரவியத்தினால் சந்தோஷம் வருவித்தான், சூத்திரர்களுக்குத் தயை பாராட்டினான். இப்படியாக அரசுபுரிந்து சுகபோகங்களை அனுபவித்தும் திருப்தி அடையவில்லை ஆயிரம் வருஷம் முடியப்போகிறதே யென்று வருந்தினான். விசுவாசி யெனனும் அப்ஸரஸுடன் கூடி அளகாபுரி, மேருமலை முதலிய இடங்களுக்குப் போய் இன்பம அனுபவித்தான். ஆயிரம வருஷமும் முடிந்தன. பிறகு பூருவைப் பார்த்து, ஆயிரம வருஷம் சுகமனுபவித்தேன். விருப்பின சுகபோகங்களை அனுபவிப்பதினாலே பனம் திருப்தி அடைகிறதில்லை. மேலும் மேலும விருப்பம அதிகரிக்கின்றது. மனிதனுகுத் தேகம் மெலிந்தாலும் ஆசை மெலிவதில்லை. மூடர்களால் ஆசை ஒழிக்க முடியாதது. சரீரமுள்ளவரைக்கும் ஆசை

ஒழியாத ரோகமாயிருக்கிறது. ஆசையை விட்டவனுக்குத்தான் சுகம். நான் ஆசையை ஒழித்து வனத்துக்குப் போய்த் தவம் புரிந்து வீடு அடைய விரும்புகிறேன். உன் யௌவனத்தை மறுபடியும் வாங்கிக்கொள். உனக்கு இஷ்டமுள்ளவரைக்கும் யௌவனம் உன்னிடம் இருக்கட்டும். இராஜ்யத்தையும் நீயே பெற்றுக்கொள். தீர்க்காயுசை யடைந்து இராஜ்யத்தைப் பரிபாலித்து விருப்பியபோகங்களை அனுபவி யென்று கூறித் தன் மூப்பை வாங்கிக்கொண்டு அவனுக்கு யௌவனத்தைக் கொடுத்தான். பிறகு பூருவுக்குப் பட்டாபிஷேகம் செய்பத தொடங்கினான். அப்போது இராஜ்பத்திலுள்ள நாலு வருணத்தாரும் அரசனே! மூத்தபிள்ளை யது; அவனை விட்டு இளைய தாகிய பூருவுக்கு அரசளிப்பது முறைமை யல்லவே! நியாயமல்லாதவற்றை ஏன் செய்கிறாய் என்றார்கள

அரசன், அவர்களை நோக்கி யதுவும் மற்றவர்களும் என் பேச்சைக் கேட்கவில்லை. பிதாவின் பேச்சைக் கேளாதவர்கள் புகழ்கிறாராக மாட்டார்களென்று சாஸ்திரமும் கூறுகின்றது. பெரியோர் சொல்லுகிறார்கள். பிதாவின் சொற்கடவாமல் நடக்கிறவனை ஜேஷ்டபுத்திரன். ஊர்மை, குரு, குஷ்டம் முதலிய குறைபாடுகளும், பிதாவுக்கு ஒத்திருப்பவனே புத்திரன். யது என்னை அலட்சியம செய்தான். மற்றவர்களும் அப்படியே செய்தார்கள். பூரு ஒருவனே பிதாவாக்கியத்தைக் கடைப்பிடித்து நடந்தான். அவனே இராஜ்பத்திற்கு உரியவன் சுக்கிராசாரியர் உன் மனதுக்கு ஒத்திருக்கும புத்திரனுக்கே இராஜ்யம் கொடு என்றார். ஆகையால பூருவுக்கு முடி சூடுமபடி உங்களை வேண்டுகிறேனென்றான. எல்லாரும ஒப்புக்கொண்டார்கள். பூருவுக்குஇராஜ்பத்தைக் கொடுத்து, மற்ற நாலவரையும இராஜ்பதின நாலுதிசைகளிலுள்ள இடங்களில அரசு புரியவைத்து யயாதி தவத்துக்குச் சென்றான். சர்மிஷ்டை, தேவயானி யிருவரும் கூடவே போனார்கள். யயாதி வனம் போய உக்கிரமான தவம் புரிந்தான். யதுவின் வம்சத்தார் யாதவர் என்றைப்படுகிறார். துர்வஸு சுக்ததிபார்யவனென்றைப் படுகிறார்கள். துருஹ்யுவின புத்திரர்கள் போஜர் அனுவின் சந்ததியார் மிலேச்சராயினர். பூருவினிடமிருந்து உற்பத்தியானது தான் பௌரவவமசம்.

எண்பதாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வத் தொடர்ச்சி.

பரஜனிகளோடு வனஞ்சென்ற யயாதி வானப் பிரஸ்தருக்காய் கனி பிழங்குகளைப் பரிதது, இந்திரியங்களை வென் கொடுதவம் புரிந்து, சொர்க்

கதையடைந்தான், என்று சொல்ல, ஜமேஜய மஹாராஜன் வைசம்பாயனரைப் பார்த்து, சுவாமீ! யயாதி மஹாராஜா சொர்க்கத்துக்குப் போயிருந்து மறுபடியும் இந்திரனால் தள்ளப்பட்டாரென்றும், அந்தரத்திலிருந்து பின் சொர்க்கஞ் சென்றாரென்றும் சொல்லக் கேட்டிருக்கிறேன். அதை விவரமாகச் சொல்லவேண்டுமென்று கேட்க வைசம்பாயனர் சொல்லுகிறார் அவர் ஏன் கீழே வந்தார், மறுபடியும் எப்படிச் சொர்க்கத்துக்குச் சென்றாரென்பதையும் கேளும்.

யயாதி மஹாராஜன் வனத்திலே வானம்பிரஸ்த தர்மத்தைத் அனுசரிக்கத்தக், காய், கனி மூதலியவற்றால் தேவர்களையும் பிதிர்களையும் திருப்தி செய்வித்துக்கொண்டும், உதிர்ந்த தானியங்களினால் அதிதிகளைப் பூஜித்தும், மிஞ்சின உணவினாலே தான் ஜீவனம் பண்ணிக்கொண்டுமே ஆயிரவருஷம தவப்புரிந்தான். மூப்பது வருஷம் நீரை மாத்திரம் அருந்தினான். ஒரு வருஷம் வாயுபட்சணம் செய்தான். பின்னும் ஆறுமாசம வாயுபட்சணம்பண்ணினான். ஒரு காலால் நின்றுகொண்டும், பஞ்சாக்கினிகளின் இடையிலிருந்தும் தவம்பண்ணிக்கொண்டிருந்து மஹாமகிமையுள்ளவனுய்ச் சொர்க்கம் போனான்.

எண்பத்தோராவது அத்தியாயம்.

ஸம்பவபர்வத் தொடர்ச்சி.

சொர்க்கலோகம் சென்ற அரசன் தேவர்களாலே பூஜிக்கப்பட்டுச் சொர்க்கதலியர், பிரமலோகத்திலுமாக வசித்தான். ஒரு நாள் இந்திரன் யயாதியைப் பார்த்து நீ பூருவுக்குப் பட்டாபிஷேகஞ் செய்தபோது அவனுக்கு என்ன உபதேசஞ் செய்தாய் அதை உண்மையாகச் சொல்லு என்று கேட்டான். யயாதிசொல்லுகிறான். கங்கை யமுனைக்குட்பட்ட பூமி முழுதும் உனக்குச் சொந்தம். பூமியின் கோடிகளில் உன் சகோதரர்கள் அரசராயிருப்பார்கள். பொறுமை, கோபம், கபடம், துவேஷரா, மோசம் முதலிய தீர்க்குணங்களை விட்டுவிடவேண்டும். மாதா, பிதா, ஜேஷ்டன், வித்துவான், ரிஷிகள் இவர்களைப்பூஜிக்கவேண்டும் வல்லமைசாலி பொறுமையாயிருப்பான்; வல்லமை யற்றவன் கோபிப்பான். தீர்க்கன் சாதுவைப் பகைப்பான். தருமத்தை விட்டவன், தருமிஷ்டனையும் சக்தியில்லாதவன் பலவானையும, குரூபியானவன் ரூபவானையும், ஏழையானவன் தனவானையும் வெறுப்பார்கள். இது கலியுக தருமம். கிருதயுக தர்மம் இவற்றுக்கு மாறுக இருக்கும். எந்த ஜாதியிற் பிறந்தாலும் நல்லவாகளுக்குக் கீர்த்தியுண்டு. மனிதன் எப்போதும் சற்காரியங்களையே செய்ய நினைக்கவேண்டும். உன் சகோதரர்கள் பிதாவின் பேச்சைத் தட்டினார்கள். பூமியின் கோடியில் ஒதுக்கப்பட்டார்கள். நீ தர்மமாய் அரசாளு என்று கூறினேனென்றான். இந்திரன் மகிழ்ந்து உலகத்தில் சிறந்த தருமங்களை எனக்குச் செய்ல் என்று கேட்கச் சொல்லுகிறான்.

கோபமில்லாதவன் கோபமுள்ளவனை விடச் சிறந்தவன். பொறுமை யற்றவனிலும் பொறுமையுள்ளவன் மேலானவன். எல்லாப் பிராணிகளிலும் மனிதன்சிரேஷ்டன். மனிதனிலும் வித்துவான் உயர்ந்தவன். வைதால் அவனை வையக்கூடாது. பொறுத்திருந்தால் அதுவே அவன் யழித்துவிடும். வைகிறவனுடைய புண்ணியம் வையப்பட்டவனைச் சேரும். ஒருவனுக்கும் தின்பஞ் செய்யலாகாது. பிறருக்கு மனவருத்தமுண்டாக்குஞ் சொற்களைச் சொல்லலாகாது. யோக்கியன் யோக்கியர்களைச் சேரவேண்டும். யோக்கியர்களாலே சீர்திருத்தவேண்டும். தான் நல்லொழுக்க முள்ளவனுய்ச்சாதுக்களுடைய நல்லொழுக்கங்களையும் சற்றுக் கொள்ளவேண்டும். கடுஞ்சொற்களாகிற அம்புகளால் அடிபட்டவன்வருந்திக்கொண்டே யிருப்பான், தெரிந்தவன் அப்படிப்பேசக் கூடாது. கருணை, அன்பு. இன்சொல் இவைகள் எல்லா உலகங்களையும் வசமாக்கும் கருவிகள். ஆகையால் எப்போதும்இன் சொல்லே சொல்லவேண்டும். பெரியோர்களைப் பூசிக்கவேண்டும. தான் பிறருக்குக் கொடுக்கவேண்டும். ஒருபோதும் யாசிக்கக் கூடாது. இவைகளே உலகத்துக்குரிய தர்மங்களாமென்றன்.

எண்பத்திரண்டாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வத் தொடர்ச்சி.

இந்திரன் மகிழ்ந்து, யயாதியைப் பார்த்து; தவத்தில் நீ யாருக்கு ஒப்பாயிருக்கிறுயென்று கேட்க, யயாதி தேவர்கள், மனிதர்கள், கந்தர்வர்கள், ரிஷிகள் இவர்களுக்குள் எனக்கு ஒப்பான தவமுடையவர் ஒருவருமிலலே யென்றன். அது கேட்ட தேவேந்திரன் ராஜாவே! நீ புண்ணிப் புகழ்ந்து மற்ற தேவ கந்தர்வர்களையும் ரிஷிகளையும் அவமானஞ் செய்தபடியால் நீ கீழே விழக்கடவாயென்றன். அதுகேட்ட யயாதி அப்படியானால் நான் ஸ்லோர்களுக்கு மத்தியில் விழவேண்டுமென்றன். இந்திரன் நீ நல்லோர்களுக்கு மத்தியில் விழுந்து மீண்டும்தவத்தால்இவ்வுலகத்தைஅடையக்கடவாய. இனிமேல பிறரை அவமதிக்காதே என்றன். உடனே யயாதி கீழே நழுவி விழுந்தான். அப்படி விழுகிற யயாதியை அஷ்டகனென்னும் இராஜரிஷி பார்த்து, நீ இந்திரனைப்போலிருக்கிறாய்; நீ ஆகாயத்திலிருந்து விழுகிறதைப் பார்த்தால் சூரியனேவிழுகிறது போலிருக்கிறது. நீ யார்? நீ கீழே விழுகிறதற்குக் காரணமென்ன? தக்கப்படவேண்டாம். யோகியர்களுக்கு யோக்கியர்களே உதவியாகிறார்கள். எரிப்பதில் தீக்கட்வுள் பெரியவ. ன்ஓளிதருவதில்சூரியன் பெரியவன். பயிர் விஷயத்தில் பூமி சிறப்புடையது. யோக்கியர்களுக்குத் தம்மை யடைந்த அதிதிகளே பெரியவர்.

எண்பத்துமூன்றுவது அத்தியாயம்.

ஸம்பவபர்வத் தொடர்ச்சி.

யயாதி அஷ்டகனைநோக்கி நான் பூருவின் பிதாவாகியயயாதி, நான் பிறரை அலட்சியமாகப் பேசின குற்றத்திற்காகத் தேவர்கள் ரிஷிகள் வசிக்கும உலகத்திலிருந்து விழுகிறேன். சற்கருமங்களுக்கு பாபம் பகை, அது இழிவான உலகங்களைக் கொடுக்கிறது. அந்தப் பாபம் அடக்கமில்லாதவனிடத்தி லிருக்கிறது. சாதுக்கள் அதைப் பற்றி நடப்பதில்லை. சன்மார்க்கத்திலேயே நடக்கிறார்கள். நான் ஐசுவரியத்தை யிழந்துவிட்டேன். பிரயத்தனம் செய்தும் கிடைக்க வில்லை. ஆதலால் அது விதிவசம் என்று அறிந்து ஆன்மலாபத்தை யே தேடவேண்டும். தனமுள்ளபோது யாக யக்ஞங்களைச்செய்து, வேதங்களை யோதிச் சொர்க்கத்தையடையவேண்டும். தனத்தினால் கருவமடையக்கூடாது. அகங்காரத்தை ஒழிக்கவேண்டும். தேவர் களைப்போல வல்லமையுள்ளவர்களா யிருந்த பலர் மாண்டுபோனார் கள். எல்லம் தெய்வச்செயலென்று அறிகிறவன் சுகதுக்கங்களைச் சமமாகப் பார்ப்பான். அவன் மனம் வேறுபடாது. அறிவுள்ள வன் சுகத்தில் மகிழ்வதும், துக்கத்தில் வருந்துவதுங் கூடாது. அண்டஜம், சுவேதஜம், ஜாயுஜம், உற்பிஜமென்கிற நால்வகைத் தோற்றத்தலாம் எழுவகைப் பிறப்பில் சென்றுள்ள ஜீவராசிகளெ ல்லாம் கண்மபலமுடிவிலே லயத்தை யடைக்கின்றன ஆதலால்சுக துக்கங்கள் நிலையற்றன என்பதை நான் அறிவேனதலால் எனக்கு விசனமில்லை என்று யயாதி சொன்னன். அஷ்டகன், ராஜரிஷியே! எந்தெந்த புண்ணிய லோகத்தில் வசித்தாய்? அவற்றில் எத்தனை காலந் தங்கினை யென்று கேட்க யயாதி சொல்லுகிறான்.

புண்ணியபலத்தால் பல புண்ணிய உலகங்களில் ஆயிரம்வருஷ மிருந்தேன். அதன் பின் பிரமலோகத்தில் ஆயிரம் வஷரும் தங்கி னேன். பத்துலட்சவருஷம் நந்தவனங்களில் உல்லாசமா யிருந் தேன். அது பின் நெடுங்காலஞ் சென்ற பின் நந்தவனத்திலிருந்த என்னை ஒரு தேவதூதன் ஒருவன் நீ அழிந்துபோவென்று மூன்று தரம் சொன்னன். உடனே புண்ணிய லோகத்திலிருந்து கழுவி விழுந்தேன். விழும்போது என்னைப் பார்த்த தேவர்கள் யயாதி புண்ணியம் இழந்து கீழே விழுகிறான் என்று சொன்னார்கள். நான் அவர்களை நோக்கி நான் புண்ணியவான்களிடம் போகும் வகை யெப்படி யென்று கேட்டேன். அவர்கள்யாகஞ்செய்கிறஇத்தலத் தைக் குறித்துச்சொன்னார்கள். ஓமப்புகையின் வாசனையால் உணர் ந்துகொண்டு இங்கே வந்தேன் என்றான்.

எண்பத்துநான்காவது அத்தியாயம்.

ஸம்பவபர்வத் தொடர்ச்சி.

அஷ்டகன், யயாதியை நோக்கி, பத்தலட்சம் வருஷகாலம் நந்தவனத்தில் வசித்துக்கொண்டிருந்த நீ பூமிக்கு வரக்காரணமென்ன? என்றான். யயாதி இவ்வுலகத்தில் பொருளில்லாதவனிடத்தில் சுற்றத்தார்கள் கை விடுவதைப்போலப் புண்ணியம் இல்லாதவனைத் தேவர்கள் கை விடுகிறார்கள் என்றான். எந்தப் புண்ணியம் செய்தவன் எந்த லோகத்தை அடைவான்? அப்படி யடைந்தவன் புண்ணிய மில்லாமற் போகிறதெப்படி? இவற்றைச் சொல்லவேண்டுகிறேன். நீர் சகலமும் முணர்ந்த தத்துவ�ஞானியென்று கருதுகிறேன். ஆதலால் உம்மைக் கேட்கிறேன் என்றான். யயாதி சொல்லுகிறான்.

புண்ணிய மில்லாதவர்கள் அழுதுகொண்டு இந்தப் பூமியிலுள்ள நரகத்தில் விழுகிறார்கள். தன ஜன்மத்தையெடுத்து கரி கழுகுகளுக்கு ஆகாரமாகிறார்கள். ஆகையால் எப்போதும் பாபகர்மத்தைச் செய்யக்கூடாது என்றான். அஷ்டகன், மகாராஜாவே! கழுகு முதலியவை அந்த ஜந்துக்களை உண்டுவிட்டபின் அவைகள் மறுபடியும் எப்படி உண்டாகின்றன? பூமியில் நரகமென்பதும் உண்டா? என்று கேட்டான். யயாதி, தேகம் போனபின் கருமம் முதிர்ச்சியடைவதினால் மறுபடியும் ஸ்தூல சரீரமெடுத்து வளர்கின்றன. பூமியில் இப்படிச் சஞ்சரிப்பவைகளே பூலோக நரகவாசிகளாம். அப்படி அளவில்லாத காலம் கழிகின்றன. அறுபதினாயிரம் எண்பதினாயிரவருஷம் சொர்க்கத்தில் வாழ்கின்றன ஆகாயத்தில் பறக்கின்றன. பின் பூமியில் விழும்போது பசி முதலிய பகைகள் அவற்றை வருத்துகின்றன. பூமியிலுள்ள இராக்ஷதர்களும் கடித்துத் தின்கிறார்கள் என்றான். அஷ்டகன், இராட்சதர்கள் கடித்துத்தின்றபின அவை மீண்டும் மெய்படியுண்டாகின்றன என்றான். யயாதி, புஷ்பங்களையும், கனிகளையும் புசிப்பதால் இரத்தமானது வீரியமாக மாறும் அந்த வீரியம் ஸ்திரீகளின் கர்பபாசயத்தை யடைந்து ஸ்தூலசரீரத்தைப் பெறுகின்றன. இப்படி கர்மவசத்தால் வெவ்வேறு வகைப்பட்ட ஜந்துக்களின் கர்ப்பத்திலும் தங்கிப் பிறக்கின்றன என்றான்.

அஷ்டகன், சரீரத்தை விட்ட ஜீவன் வேறு சரீரத்தையெடுத்துக்கொண்டு கெர்ப்பத்தில் பிரவேசிக்கிறானே? அலலது தன் சுய சொரூபத்தோடு செல்லுகிறானே? என்றான். வீரியத்தைக்கர்ப்பவாயு கர்ப்பாசயத்திலே சேர்த்துவிட்டுப், பின்பு தான் வீரியத்திலிருக்கும் சூட்சுமமான அவயவங்களில் கலக்கிறது அதனால் ஸ்தூலசரீரமுண்டாகிறது. அவயவங்களெலலாம் பரிபாகப்பட்டு முதிர்ந்தால் புத்தியை யடைந்து ஜனிக்கின்றது. பஞ்சேந்திரிய உணர்ச்சிகளையடைகின்றது என்றான். அஷ்டகன் யயாதியை நோக்கி இறந்துபோனபின் அந்தச் சரீரத்தைக் கொளுத்துகிறார்கள். புதைத்துவிடுகிறார்கள் அதன்பின் அது எப்படி உருக்கொண்டு வருகிறது என்று கேட்

டான். இறந்த ஆன்மா நிக்கிரைசெய்கிறவனைப் போலத் தன்புண்ணிய பாபத்துக்குக் காரணமான சரீரத்தின் தர்ப்பத்தை யடைகிறான்: புண்ணியமூள்ளவர்கள் புண்ணிய சரீரத்தை யடைகிறார்கள் பாபிகள் ஈனமான புழு, பூச்சிகளாகவும் பிறக்கிறார்கள் என்றான்.

அஷ்டகன், இராஜாவே! மனிதன் மேலான லோகங்களை யெதனாலே அடைகிறான் என்று கேட்க யயாதி தவம், தானம். இந்திரியஜயம், மன வடக்கம், நாணம், அகமும் புறமுமாத்திருத்தல், ஜீவகாருண்யம், இவ்வேழும் சொர்க்கத்திற்குப் போகும் வழிகளாம். தாமத குணமுடையவர் அகங்காரத்தினால் அழிகின்றார்கள். தன்னைக் கல்விமானென்று மதித்துப் பிறரைத் தூஷிப்பவன் புண்ணியலோகங்களை அடையமாட்டான். தெய்வமும் அவனுக்குச் சாதகமா யிருப்பதில்லை. அக்னி ஹோத்திரம், மௌனவிரதம். வேதமோதல், வேள்விபுரிதல் இவை பாபத்தைப் போக்குகின்றன. இவைகளைப் பெருமைக்காகச் செய்தால் நரகபயத்தை யுண்டாக்குகின்றன. அவமானத்தினால் துக்கமும், வெகுமானத்தினால் சந்தோஷமும் அடையக்கூடாது. சாதுக்களைச் சாதுக்களே கனம் பண்ணுகிறார்கள். மூர்க்கர் சாதுக்களை அடைவதில்லை. நான் தானம் பண்ணினேன். தவம் பண்ணினேனென்று சொல்லிக்கொண்டால் அவனை அது நரகில் தள்ளும். மனத்தை யடக்கிப் பிரமத்தை ஆராய்ந்து அறிகிறவன் மோட்சத்தையே அடைவான் என்றான்.

எண்பத்தைந்தாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வத் தொடர்ச்சி.

அஷ்டகன் யயாதியை நோக்கி, மஹாராஜாவே! பிரமசாரி முதலிய நாலு ஆச்சிரமத்தவரும் செய்யவேண்டிய தருமம் என்ன? என்றான். யயாதி சொல்லுகிறான். உபாத்தியாயர் வாவென்று கூப்பிட்டபின் வந்து அத்தியயனஞ் செய்தல், குருவின் பணிவிடைகளைக் குறிப்பறிந்துசெய்தல், உபாத்தியாயர் படுத்துக்கொண்டபின் படுத்தல், அவர் எழுந்திருக்க முன்னமே எழுந்திருத்தல், இந்திரியங்களை யடக்குதல், திருப்தி யடைந்திருப்பது, ஊக்கம் விடாதிருத்தலை இவைகளே பிரமசரிய தருமங்களாம். தர்மத்தால் பொருள் தேடுதல், யாகம் செய்தல், தானம் செய்தல், அதிதிகளை உபசரித்தல், பிறர் பொருளை விரும்பாமலிருத்தல் இவைகள் கிருகஸ்த தர்மமாம். தன் சக்திபால் ஜீவிப்பது, பாபகர்மத்தை விடுதல், பிறரை இம்சியாதிருத்தல், கொடுத்தல், ஆகாரவிகாரங்களை யடக்குதல், வனத்தில் வாசம் பண்ணுதல் இவைகள் வானப்பிரஸ்த தருமமாம். தன் ஜீவனத்துக்காகத் தொழில் முயற்சி செய்யாமை, நற்குணமுடைமை, இந்திரிய ஜயம், யாவற்றையும் துறத்தல், வீட்டில் சயனியாமை கையிற் பொருளொன்றும் வைத்துக்கொள்ளாமை, தேசங்கள் தோறும் பிரயாணம்போதல் இவைகள் சந்நியாசதருமங்களாம். இந்தத் தருமங்களைக் கைக்கொண்டவன் தனக்கு முன்

ஸ்ரீம் பின்னுமான இருபத்தொரு தலை முறைகளை நிர்மலமாக்கிச் சொர்க்கவாழ்வைக் கொடுக்கிறான்.

அஷ்டகன், மூனிவர்களைத்தானே வகை? மௌனங்களைத் தானே வகை? என்று கேட்க யயாதி சொல்லுகிறான். வனத்தில் வாழும்போது கிராமத்திலுள்ள பொருள் ஒன்றையும் உபயோகப் படுத்தக்கூடாது. நகரத்தில் வசிக்கும்போது அக்கினி, குலம், வீடு களில்லாதவனும், மானத்தை மறைப்பதற்கு வேண்டியவளவு வஸ் திரந்தரித்து, உயிர்நிற்குமளவு ஆகாரம் புசித்து, ஜீவிக்கவேண்டும். இப்படிச் செய்கிறவர்களுக்கு காடும் நாடும் ஒத்ததாகவே யிருக் கிறது. அவனே முனி யென்னப்படுவான். ஆசையை ஒழித்து, கரு மத்தைவிட்டு, இந்திரியங்களை ஜயிக்கிறவனே முனியெனப்படுவான் சாந்தி, தயைமுதலிய குணங்கள் நிறைந்து, ஒன்றிலும் பற்றில்லா மலிருக்கிறவனே பூஜிக்கப்படுவான். தவத்தினுற் சரீரமெலிந்து, மௌன விரதானுஷ்டான முடையவனுய்ச் சுகதுக்கங்களையொழித் தமுனி இகலோக பரலோகங்களை ஜபிக்கிறான். அவன் முக்தியை யும் அடைவான் என்று கூறினன். அஷ்டகன், பிரமசாரி முதலிய நாலு ஆசிரமங்களிலுமுள்ளவர்கள் ஆகாரம் உண்டுகொண்டிருக் தும் பாபத்தை யடையாமலிருப்பது எவ்வாறு என்றுகேட்க, சன் னியாசி எட்டுக் கவளங்களும், வானப்பிரஸ்தன் பதினறு கவளங் மளும், கிழிகஸ்தன் மூப்பத்திரண்டு கவளங்களும் உண்ணவேண் டும். பிரமசாரிக்கு அளவு கூறப் படவில்லை. அவனது திருப்தியே அவனுக்கு ஆகாரஅளவாம். இவ்வாறு செய்கிறவர்கள் பாபத்தை யடைவதில்லை என்று யயாதி கூறினர்.

எண்பத்தாறுவது அத்தியாயம்.

ஞ்ம்பவபர்வத் தொடர்ச்சி.

அஷ்டகன், ஐயா! வனத்தில் வசிக்கிறவனும், நகரத்தில் வசிக் கிறவனுமாகிய முனிவர்களுள் முதலில் தெய்வத்தோடு ஒப்பாகிற வன் எவன் என்ன, யயாதி அவ்விருவருள் ஆசையை ஒழித்து நக ரத்தில் வசிப்பவனே முதலில் யேன்மை பெறுவானென்றான். பா பச்செயல்களுக்குப் பயந்திருப்பவனும் இன்பத்தைப் பெறுவான். பிறஜீவனுக்குத் தன்பமுண்டாக்குவதுதான் அசத்தியமென்னப் படுவது. இது என்பொருளென்று கருதியும், பலனை விரும்பியும் செய்யப்படுஞ் சற்கருமம் பயன்படாது. பலனைக் கருதாமலே செ ய்யவேண்டும். அதுவே தவமும் மேன்மையு முடையதாமென்று கூறினன். அஷ்டகன், மஹாராஜாவே நீ எங்கிருந்து எங்கே போகி றாய், பூமியில் உனக்கு அடையத்தக்க இடமிருக்கிறதா! என்று கே ட்க, யயாதி, புண்ணியம் ஒழிந்து பூமியிலுள்ள நரகத்தை யனுப விக்கப் போகிறேன்என்றான் அஷ்டகன், ஆகாயத்திலாவது சொர்க் கத்திலாவது எனக்கு இடமுண்டா என்ன, யயாதி உனக்கு அள விடப்படாத காலம் அனுபவிக்கத் தக்க புண்ணியலோகங்களிருக்

கின்றன வென்றான். அஷ்டகன் அவற்றையெல்லாம் நானுனக்குத் தருகிறேன். நீயவற்றை யனுபவித்துக்கொண்டிருவென்றான். யயாதி பிராமணன் மாத்திரமே வாங்குகிறதற்கு உரியவன். க்ஷத்திரியன் வாங்கக் கூடாது. கொடுக்க வேண்டியது. ஆகையால் நான் வாங்க மாட்டே னென்றான்.

பிறகு பிரதர்த்தன் அரசனை நோக்கி, ராஜாவே! எனக்குப்புண் ணிய லோகங்களிருக்கின்றனவா என்று கேட்டான். யயாதி, உன க்கு அநேக புண்ணியலோகங்களிருக்கின்றன. ஒருலகத்தில் ஏழு நாள் வசித்துக்கொண்டு போனாலும் அவை முடிவடையாவாம். அவ் வளவு புண்ணிய லோகங்களிருக்கின்றன பிரதர்த்தன், நான் அவை களை யுனக்குக் கொடுக்கிறேன். நீ அவைகளை அனுபவி. கீழேவிடா தே பென்றான். யயாதி, ராஜாவாக இருக்கிறவன் பிறர் புண்ணி யத்தை வாங்கக்கூடாது. விதியினாலே கஷ்டப்படும்போதும வாங் ககூடாது. தர்மத்தையே செய்யவேண்டும் என்றான். வஸுமா னென்பவன் யயாதியைப் பார்த்து, அரசனே! எனக்குப் புண்ணி யங்களுண்டா வென்றான். யயாதி, ஆகாயம், பூமி, திசை எவ்வள வோ அவ்வளவு புண்ணிய லோகங்களிருக்கின்றன வென்றான். வஸுமான், அரசனே! அவற்றையெல்லாம உனக்குத் தருகிறேன். நீ இவ்வுலகங்களுக்குப் போகலாம்; தானம் வாங்குவது பாப மென்று உனக்குத் தோன்றினால், ஒரு தூரும்பையாவது கிரயமா கக்கொடுத்து வாங்கிக்கொள் என்றான். சிபி என்பவன், ராஜாவே! எனக்குப் புண்ணியலோகங்களிருக்கின்றனவா? என்றான். யயாதி, உனக்கும் அளவற்ற உலகங்கள் மின்னலைப் பிரகாசித்துக்கொண்டு இருக்கின்றன வென்றான். சிபி, அவற்றை உனக்குக்கொடுக்கிறேன். கிரயத்துக்கு வாங்கிக்கொள்ள மனமிலலாவிட்டால் தானமாக வாங் கிக்கொள் என்றான். நீ புண்ணியலோகங்களை யடைய இருக்கிறது போலவே நானும் அடைந்திருந்தேன். அந்நியர் கொடுத்தவற்றில் இன்பமில்லை. எனக்கு வேண்டாமென்றான்.

அஷ்டகன் ஐயா! நாங்கள் கொடுத்தவற்றை நீவாங்கிக்கொள் ளாவிட்டால், உனக்குக்கொடுததற்காக நாங்கள் நரகத்தை அடை வோமென்றான். யயாதி செய்யத்தகாத கர்மத்தை நான் செய்ய மாட்டேனென்றான். அப்போது அஷ்டகன் அதோ ஐந்து விமா னங்கள் நிற்கின்றனவே அவை யாருகளுடையவென்றான். யயாதி இவை உங்களுக்குத்தானென்று கூறினான். அப்போது அஷ்டகன் முதல நால்வரும அசுவமேதயாகஞ் செய்துகொண்டிருந்தார்கள். அவர்க ளுடைய தாயாரான மாதவியும் அங்கேவந்தாள். அவள் தன் பிதா வான யயாதியைப் பார்த்து அவனை வணங்கினாள். வஸுமான், தாயே! யிவர் யாரென்றான. மாதவி அப்பா! இவர் என் பிதா. உங் களுடைய மாதாமகன். இவர் சொர்க்கத்திலிருந்தாரே! எப்படி இங் கே வந்தார் என்றான். வஸுமான், இவர் புண்ணியம் குறைந்து

கீழே விழுகிறார் என்றான். மாதவி பதைத்துப் பிதாவே! எனக்குள்ள புண்ணிய லோகத்தை நீரடையும். புததிரர்களைப் போலத் தெளஹித்திரர்களும் ஆகிறார்கள் என்றாள்; யயாதி அப்படியானால் சரி; இன்று முதல் பெண் ஸந்ததியும் பிதிர் கருமத்திலே புண்ணிய பலனைத்தரக்கடவது. தெளஹித்திரன், எள்ளு, குதபகாலம்இம்மூன்றும் சிராத்தத்தில் சிறந்தனவாம். சுததம், ஸினமின்மை, அவசரப்படாமை, என்னும் இவை சிராத்தத்துக்கு முக்கியம். பகலின் எட்டாவது முகூர்த்தத்தில் சூரிய உஷ்ணம குறைந்திருக்கிற காலம் குதப காலமாம். அதில் பிதிர்களுக்குக கொடுப்பது அந்தபலனைத் தரும் வேதமுணர்ந்தவன், ஞானவான், சுகியுள்ளவன், தனமுள்ளவனுமாகியவனே சற்பாத்திரமாவான். அவன் கிடைத்தால் அதுவே நல்ல காலமுமாம். எள்ளு பிசாசை விலக்கும், தர்ப்பை இராக்ஷதர்களை விலக்கும். வேதமோதின பிராமணர்கள் பந்தியைப் பாவனம் பண்ணுகிறார்கள் என்று சொன்னான். பிறகு எல்லாரும் சொர்க்கம போனார்கள். அப்போது சிபி எலலாருக்கும முந்திபோனான். அஷ்டகன் யயாதியைப் பார்த்து சிபி முந்திபோகிறதேன்? இந்தச் சிபி சம்பாதித்த தனம் எலலாவற்றையும் தானம கொடுத்தான், ஆதலால் முந்திச் செலலுகிறானென்று கூறினான். தர்மம், பொறை, உற்சாகம், புத்தி யிவைகளோடு தானமும உடையவனதலால சிபி உன்னைக்கடந்து முந்துகிறானென்றான். அஷ்டகன் நீர் யார்? என்றான். யயாதி நான் நகுஷனுடைய புதிரன். பூலோகத்தில் சக்கிரவர்த்தியாக இருந்தேன். நான் உங்களுடைய மாதாவினதந்தை. உங்களுக்கும் பாட்டன். நான் பொன், வெள்ளி, பூமி பசு, முதலிய வற்றைக் கணக்கில்லாமல் தானம் செய்தேன். சத்தியம் தவறுமலிருந்தேன். சத்தியத்தினாலேதான் உலகம் ஒருவனைப் பூஜிக்கிறது. நமதுசரித்திரத்தைப் பிறர்கேட்கச் சொலலுகிறவன் புண்ணியலோகத்தை அடைவான் என்றான. இப்படி யயாதி தன் பேரர்களோடு சொர்க்கமபோய்ச் சேர்ந்தான்.

எண்பத்தேழாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வத தொடர்ச்சி.

ஜனமேஜயன், வைசம்பாயனரைப்பார்த்துப் பூருவின் வம்சத்தையும், துஷ்யந்தன் புத்திரன் ஜனமேஜயனிருக்கப, பரதன் எவ்வாறுபட்டமடைந்தான் இவற்றைச்சொல்லுமெனச் சொலலுகிறார்.

பூரு பௌஷ்டி என்பவளை மணம் புரிந்துகொண்டு, யயாதியைப்போலவே தர்மமாக இராஜ்ய பரிபாலனம் செய்தான். அவனுக்கு பிரவீரன், ஈசுவரன், ரௌத்திராசுவன் என்று மூன்று குமாரர்கள். பிரவீரனுல் பூருவமசம் விருத்தியாயிற்று. அவன் சூரசேனியென்பவளை மணந்து மனஸ்யுவைப பெற்றான். அவன் ஸௌவீரியை மணந்து சக்தன், ஸம்ஹனன், வாக்மினி யென்பவர்களைப் பெற்றான். ரௌத்திராசுவன மிததிரகேசியை மணந்து பத்துப்

புத்திரர்களைப் பெற்றான். அவர்களில் அனுதிருஷ்டி, அல்லது நிசேயு என்பவன் பூலோக தேவேந்திரன் போன்றிருந்தான். அவனுக்கு மதிகாரான் பிறந்தான். மதிகாரனுக்குத் தம்ஸு, மஹான். அதிரதன், த்ருஹ்யு என்று நான்கு புத்திரர்கள். தம்ஸு பூருவைப்போலக் கீர்த்தியை யுடையவனு யுலகைப் பரிபாலித்தான். அவனுக்கு இலிலன் பிறந்தான். இலிலன் ரதத்வனி என்பவனை மணந்து துஷ்யந்தன், சூரன், பீமன், பிரவஸு என்பவர்களைப் பெற்றான். துஷ்யந்தன் அரசனானன். இவனுலே பாதவம்சம் உண்டாயிற்று.

எண்பத்தொன்பதாவது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

ஜனமேஜய மஹாராஜாவே! துஷ்யந்தன் உலக முழுவதையும் ஜயித்துத் தர்ம பரிபாலனம் பண்ணினான். வருணசிம தருமங்களைக் காப்பாற்றினான். அவன் அரசாட்சியில் பாபம் செய்கிறவர் ஒருவருமில்லை. திருடர் பயம், ரோக பயம், பசி முதலியவும் அவன் காட்டிலில்லை. கால மழை பொழிந்தது. பிராமணர்கள் நெறி நவரு தொழுகினர்கள். மஹா பராக்கிரமசாலியும், யுத்தத்திற் சிறந்த வீரனுமான அவ்வரசன் தர்மத்தைச் செய்து, ஜனங்களைப் பிரியத்தோடு பாதுகாத்தான். சகல வகையான இரத்தினங்களும், பசு, தானியங்களும் குறைவற்றிருந்தன. பயிர்கள் செழித்து வளர்ந்தன. துஷ்யந்தன் பலத்தால் விஷ்ணுவுக்கு ஒப்பானனன். கீர்த்தியில் சூரியனேப்போன்றிருந்தான். கலங்காததினுல் சமுத்திரம் போன்றான். பொறுமையால் பூமியை ஒத்தான். பூமியைக் குறை வொன்றுமில்லாதபடி பரிபாலித்தான்.

தொண்ணூறாவது அத்தியாயம்

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

இந்தத் துஷ்யந்த மஹாராஜன் ஒரு நாள் நால்வகைச் சேனைகளுடன் வேட்டைக்குச் சென்றான். அப்போது பலவகை வாத்தியங்களும் முழங்கின. அப்பொழுது ஸ்திரீகள் மாளிகையின் மேலிருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இராஜாவின்மேல் புஷ்ப மழை பொழிந்தார்கள். இப்படிப் புறப்பட்ட அரசன் வனத்திட் புகுந்தான். அந்த வனம் கருங்காலி, வில்வம், வீளா, வேல், முதலிய விருட்சங்களால் நிறைந்திருந்தது. மான் சிங்கம், பசு முதலிய மிருகங்கள் உலாவிக்கொண்டிருந்தன. மனித சஞ்சாரமேயில்லை. மேடும் பள்ளமுமான பூமி யுள்ளது. தேவர்களுடைய நந்தவனம் போன்றிருந்தது.

அந்த வனத்தில் அரசன் சேனைகளோடு வேட்டையாடினன். பாணங்களாலும், சக்தியாலும், வேலாலும், ஈட்டியாலும் புலி, சிங்கம், மான், முதலிய

மிருகங்களை அடித்து வீழ்த்தினான். சிங்கங்கள் பயந்து ஓடின. இப்படி வேட்டை யாடினதினால் சேனைகளிலெல்லாரும் களைத்தனர். பசி தாகத் தால் வருந்தினார்கள். யானைகள் அடிபட்டுச் சில இறந்தன அநேகம் ஓடிப் போயின. அநேகம் மானுங்களை மிதித்துக் கொன்றன சேனையிலுள்ளவர் கள் இறந்த மிருகங்களைச் சுட்டுத் தின்றனர்.

தொண்ணூற்றேராவது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

இப்படி வேட்டையாடின அரசன் ஒரு மானைத் தூரத்திக்கொண்டு மற் றொரு வனத்தில் புகுந்தான் அந்த வனத்தில் அநேக ஆச்சிரமங்களிருந்தன. புஷ்பங்களும் விருட்சங்கள் அடர்ந்திருந்தன. குளிர்ந்த காற்று வீசியது. நறு மணம் கமழ்ந்தது. பார்க்க இரமணியமாயிருந்தது. இனிய குரலோடு குயில் கள் கூவின. வண்டுகள் ஒலித்துக்கொண்டிருந்தன. எல்லா மரங்களும் பூத்துக் காய்த்துத் தழைத்திருந்தன சதா நிழலாயிருப்பது. அழகாயிருப் பது. அந்த வனத்தில் அரசன் உலாவித்திரிந்தான். மரத்தின் இலைகள் மலர்களினால் சாய்ந்து இருந்தன புஷ்பங்களிலுள்ள மதுவை உண்டு வண்டு கள் பாடிக்கொண்டிருந்தன. மலர்களுதிர்ந்து நிறைந்து அழகாயிருந்தது. கொடிப் பந்தல்கள் அநேகம் காணப்பட்டன. சித்தர், சாரணர், இனனார் முதலிய தேவர்களும் அவ்விடத்தில் வசிக்கிறார்கள் அழகிய நதிகள் ஓடிக் கொண்டிருந்தன. அந்த வனத்தில் ஒரு ரிஷி ஆச்சிரமத்தை யடைந்தான். அந்த ஆச்சிரமத்தை யடுத்த தூரமட பிருகங்கள் கூடச் சாந்தமாயிருந்தன. அங்கே பிரமசாரிகள், சந்நியாசிகள், அநேக ரிஷிகள் நிறைந்திருந்தார்கள். அநேக அக்னிஹோத்திர சாலைகளிருந்தன. அதன் பக்கத்தில் மாலினி யென்னும் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. வேதாத்தியயனம் பண்ணுகிற ஒலி செவிக்கினிமையாகப் பரவிக்கொண்டிருந்தது. அந்த நதியின் கரையில் கண் ணுவமஹா ரிஷியின் ஆச்சிரமத்தைக் கண்டான் தன்னுடைய பரிவாரங்களை அங்கேயே நிறுத்திவிட்டுக் கண்ணுவரைப் பார்க்கும் பொருட்டுத் தான் மாத் திரம் சென்றான். நான்கு வேதங்களின் முழக்கத்தைக கேட்டுக்கொண்டே போனான். நியாய சாஸ்திர வித்தன்னர்களும், பிரமஞான முணர்ந்தவர்களும் வேதத்தை முற்று முணர்ந்த வேதியாகளும், மீமாசாசாத்திரிகளும், வியா கரணமறிந்தவர்களும் நிறைந்து பேசுவதைக் கேட்டுக்கொண்டே கண்ணுவ ருடைய ஆசிரமத்தில் நுழைந்தான்.

தொண்ணூற்றிரண்டாவது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

உள்ளே போய்ப் பார்க்க, ஒருவரும் அங்கே யில்லை. அரசன் யார் அங் கே யிருக்கிறது என்று உக்கர சொன்னான். அது கேட்டு ஒரு பெண்

வெளியில் வந்தாள். அவள் அரசனை உபசரித்து, அர்க்கிய பாத்தியாதிகள் கொடுத்து ஒரு ஆசனத்தில் உட்காரவைத்தாள். பிறகு என்ன காரியமாக இங்கே வந்தீர்! நீங்கள் யாரென்று கேட்டாள். அரசன், பெண்ணே! நான் துஷ்யந்த ராஜன். கண்ணுவ மஹரிஷியைப் பார்க்க வந்தேன். அவர் எங்கே யிருக்கிறார்? என்று கேட்டான். அந்தப் பெண், ரிஷியானவர் கனிகள் கொண்டு வருகிறதற்காக போயிருக்கிறார். சற்று நேரத்தில் வருவாரென்று சொன்னாள். அந்தப் பெண்ணின் அழகினால் மகிழ்ந்த அரசன் பெண்ணே! நீ யாருடைய புத்திரி? என்னத்திற்காக இந்த வனத்திற்கு வந்தாய்? நான் உன்னுடைய அழகினால் மகிழ்ந்து உன்னை வரிக்கிறேன். என் மனம் உன் வசமாய்விட்ட தென்றான். என் மனம் க்ஷத்திரியப் பெண்ணை யன்றி வேறு குலத்துப் பெண்ணை விரும்பாது. ஆதலால் நீ க்ஷத்திரியப் பெண்ணென்றே கருதுகிறேன் நீயும் என்னை நேசித்து வாழக் கருது. இராஜ்ய முழுவ உனக்குச் சொந்தம். வேறெண்ணம் கொள்ளாதே யென்றான். அது கேட்ட அப்பெண் சொல்லுகிறாள்.

மஹாராஜாவே! கண்ணுவ மஹரிஷி யென்னைப் பெண்ணை வளர்க்கிறார். அவருடைய அனுக்ஞையின்றி காலென்றும் செய்யக்கூடாது. நீர் மண்பூரிய விரும்பினால் அவரையே கேளும் என்றாள். துஷ்யந்தன் பெண்ணே! நீ யெப்படிக் கண்ணுவருக்குப் புத்திரியானாய்? அதைச் சொல்லவேண்டும் என்று கேட்கச் சொல்லுகிறான். இராஜாவே! ஒரு ரிஷிக்குக் கண்ணுவ முனிவர் சொன்னபடி சொல்லுகிறேன் பூர்வத்தில் விசுவாமித்திர முனிவர் உக்கிரமான தபம் பண்ணினார். அதைக் கண்டு இந்திரன் பயந்து மேனகையை யழைத்து, விசுவாமித்திரர் கொடிய தவசு செய்கிறார். அதனால் நான் பயப்படுகிறேன். நீ போய் உனதுடைய அழகினாலும் செயலாலும் மயக்கி அவருடைய தவசை கெடுத்திவிடு என்றான். மேனகை இந்திரனை நோக்கி, விசுவாமித்திரர் மஹாத்மா, கோபமுள்ளவர். க்ஷத்திரியராய்ப் பிறந்து பிராமணராஞர். தான் ஸ்நானம் பண்ண ஆழமான கௌசிகி நதியை உண்டாக்கினார். சண்டாளனுக்கு வேள்வி செய்து வைத்தார். வேறு உலகங்களைப் படைத்தார். திரிசங்குக்குச் சொர்க்கம் அளித்தார். அவர் மகிமை அளவிடப்படாதது. நீரும் அவருக்கு அஞ்சுகிறீர். காலைப்படி அவரிடம் போவேன். அவர் கோபமுண்டானால் உலகங்களை யெல்லாம் எரித்துவிடுவார். காலால் பூமியை எற்றுவார். மேருவையும் உதைத்து தள்ளுவர். திசைகளைச் சுழலச்செய்வார். நான் போனால் என்னை நீருகுகி விடுவார். அவரிடம் போகமுடியுமா வென்றாள். ஆயினும் உமது வாக்கியத்தைத் தட்ட முடியாது. நான் போகிறேன். மன்மதனும், வாயுவும் எனக்குத் துணையாக வந்து உதவி செய்யவேண்டும் என்று கேட்டாள். இந்திரன் அப்படியே மன்மதனுக்கும் வாயுவுக்கும் உத்தரவளித்தான். மேனகை விசுவாமித்திரருடைய ஆச்சிரமம் போனாள்.

தொண்ணூற்றுமூன்றுவது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

மேனகை விசுவாமித்திரருடையஆச்சிரமத்துக்குப் போய் அவரைக்கண்டு வணங்கி அவருக்கெதிரில் விளையாடிக் கொண்டிருந்தாள் அப்போது வாயு அவளுடுத்த வஸ்திரத்தைத் தள்ளித் தள்ளிவிட்டான். மேனகை வெட்கப் பட்டவள்போலத் தலை குனிந்து காற்றை வைதுகொண்டு வஸ்திரத்தைப் பின் தொடர்ந்து எடுக்கச் சென்றாள். அவள் வஸ்திரமில்லாமலிருப்பதை விசுவா மித்திரர் பார்த்தார். மன்மதன் அவருடைய மனதைக் கலக்கி விட்டான். அவர் அந்தப் பெண்மேல் மோகங்கொண்டு அவளை யருகில் அழைத்துத் தன் விருப்பத்தைக் கூறிச் சம்மதம் பெற்று அவளோடு கலந்தார். நெடுங்காலம் அவளுடைய அழகில் மயங்கி அவளைப் பிரியாமலிருந்தார். மேனகையும் கர்ப்பவதியாய் ஒரு பெண்ணைப்பெற்று மாலினி நதிக்கரையில் அதை வைத்து விட்டுச் சொர்க்கம் போய்ச் சேர்ந்தாள். அந்தக் குழந்தையைப் பட்சிகள் சுற்றிக்கொண்டன. குழந்தையைக் காத்துக்கொண்டிருந்தன. ஸ்நானத் திற்காகச் சென்ற நான் அந்தக் குழந்தையைக் கண்டெடுத்து வந்து வளர்க்கி றேன். பெற்றவனும், பிராண பாயத்தி னின்றும் காப்பவனும், அன்னமிட் டவனும் பிதாவென்ற சாஸ்திரங்கள் சொல்வதால் நான் இவளுக்குப் பிதா வானேன் பட்சிகளுக்கு மதியிலிருந்ததனால் இவளுக்குச் சகுந்தலை யென்ற பேர் வைத்தேனென்றார். நானும் அவளையே பிதாவாக வேனென்றாள்.

தொண்ணூற்றுநான்காவது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

துஷ்யந்தன், சகுந்தலாய்! நீ க்ஷத்திரியப் பெண்ணென்று நிச்சயமான படியால் நான் உன்னை மனைவியாகக் கொண்கிறேன். என் இராஜ்யமும், சகல பொருள்களும் உன்னுடையனவே. நீ அஞ்சாதே. காந்தர்வ விவாகமுறை ப்படி நீ யென்னைச் சேரு வென்றான். மஹா ராஜாவே! ஸ்திரீகளுக்கு எப்போ தும் சுதந்தரமில்லை. பால்யத்தில் பிதாவும், யௌவனத்தில் கணவனும், முதிர் வயதில் புத்திரனும் காப்பாற்றுகிறார்கள். சற்றுப்பொறும், என் பிதா வருவார். அவர் என்னை உமக்கு கொடுப்பார். அவர் பார்த்து யாருக்குக் கொடுப்பாரோ அவரே எனக்கு சரியகர். அவரே என்னைக் கொடுக்கும் அதி காரமுடையவரென்றாள். துஷ்யந்தன் பெண்ணே! கண்ணுவரை யெனக் குத் தெரியும். 'அவருக்குக் கோபமே கிடையாது. நான் உன்னை எல் லாக நேசிக்கிறேன். என் மனம் உன்னிடத்தில் வந்து விட்டது. தனக்குத் தானே யுறவும் உதவியுமாம். ஆகையால் நீயே உன்னைத் தானம் செய்யலாம், இன்னும் கேள. பிராமம், தைவம், ஆரிஷம், பிராஜாபத்தியம், ஆசுரம்,

காந்தர்வம், இராட்சதம், பைசாசமென எட்டுவகை விவாகங்களுண்டு. பிராமம், தைவம், ஆரிஷம், பிராஜாபத்தியமிக்ஙான்கும் பிராமணருக்குரியன. பைசாசம் தவிர மற்றவை அரசர்க்குரியன. வைசிய சூத்திரர்களுக்கு ஆசுரம் உரியது. பைசாசமொருவருக்கும் கூடாது. ராட்சதமும், காந்தர்வமும் அரசர்க்குத் தர்மமானவை. ஆகையால் காந்தர்வ விவாக முறைப்படி நீ யென்னைச் சேரலாமென்றான்.

சகுந்தலை, மஹாராஜாவே! நீர் சொல்வது சாஸ்திர சம்மதமாக இருக்கால், நான் சொல்வதைக் கேட்டு அதன்படி நடப்பதாக வாக்களித்தால் எனக்குத் தடையில்லை. அதாவது என் வயிற்றில் பிறக்கும் பிள்ளை உமக்குப் பின் பட்டத்துக்கு வரவேண்டும். இளவரசாகவும் ஆகவேண்டும். இதன்படி நடக்கிறதாக வாக்குத்தத்தம் செய்யவேண்டுமென்றாள். அரசன் அப்படியே உறுதியிட்டுச் சொன்னான். பின்னும் உனக்கு வேண்டியது எதுவாயிருந்தாலும் கேளு. சந்ததித்துக்குச் சாஸ்திர விவாகமே சிறந்தது என்று பெரியோர் சொல்லுகிறார்கள். விவாகம் சரியானதாக இருந்தால் சந்ததியும் யோக்கிய முள்ளதாகவே யிருக்கும். விவாகத்துக்கு வேண்டிய பொருள்களெல்லாம் சித்தமாயிருக்கின்றன முறைப்படி விவாகத்தை நிறைவேற்றும். என்மேல் கோபங்கொள்ள வேண்டாமென்றாள். அவனும் அப்படியே சம்மதித்துப் புரோகிதரை யழைத்துச் சகுந்தலையின் எண்ணப்படி விவாகம் நடத்துக எனறான. அவர்களும் அப்படியே ஒத்துக்கொண்டு முறைப்படி விவாகஞ் செய்து வைத்தார்கள். துஷ்பந்தன் முறைப்படி சகுந்தலையைப் பாணிக்கிரகணம் செய்துகொண்டு அவளோடுகூடி யிருந்தான். பின் பிரயாணப்படும்போது, நீ அஞ்சவேண்டாம். நான் ஊருக்குப் போனதும் சேனைகளை அனுப்புவேன். உன்னைப் பெருமையோடு அழைத்துக்கொள்வேன் என்று சத்தியம் செய்து அவளைத் தேற்றி விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டுப் போய்விட்டான்.

பின் கொஞ்ச நேரத்துக்குள் கண்ணுவர் வந்து சேர்ந்தார். சகுந்தலை தான் செய்த பிழையை நினைத்து வெட்கத்தினாலே மெல்ல அவரிடம் போனாள். அவர் குழந்தாய் அஞ்சவேண்டாம். நடந்ததைச் சொல்லு என்றார். சகுந்தலை அவருக்குக் காய் கனி கிழங்குகளைக் கொடுத்து உபசரித்த பின் அவரை நோக்கிப் பிதாவே! பௌரவ வம்சத்து அரசனாகிய துஷ்யந்த மஹாராஜன் இங்கே வந்தார். அவரைக் கண்டவுடனே வரித்துப் பாணிக்கிரகணஞ்செய்து கொண்டேன். மற்றவையெல்லாம் உமக்குத் தெரியும் அவரை அநுக்கிரகிக்க வேண்டும் என்றாள். கண்ணுவர் ஞான திருஷ்டியினால் அறிந்து மகிழ்ந்தார். பின் சகுந்தலையைப் பார்த்துக் குழந்தாய்! நீ செய்தது தாமமே விரோதமில்லை. காந்தர்வ விவாகம் சாஸ்திரீயமே. நீ அஞ்சாதே துஷ்யந்தன் மஹாதமா. நீ நல்ல சற்புத்திரனைப் பெறுவாய். நீ செய்தது தர்மமே. நான் அரசனுக்கு அநுக்கிரகம் செய்கிறேன். நீ வேண்டிய வரத்தைக் கேள் என்றார். அவள் துஷ்யந்தனுக்கு அரசாட்சி இடையூறில்லாமல்

கடக்கவேண்டுமென்றும், அவன் தர்மந்தவறாமல் இருக்கவேண்டுமென்றும் வரங்கேட்டாள். அவரும் அப்படியே யாகட்டுமென்று வரங்கொடுத்து அவளை யனுப்பிவித்தார்.

தொண்ணூற்றைந்தாவது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

சகுந்தலை கர்ப்பந்தரித்து இருந்தாள். அது நாளுக்கு நாள் விருத்தியடைந்தது. அவள் தன் கணவன் பரிவாரங்கள் இன்று வரும் நாளை வருமென்று எதிர் பார்த்திருந்தாள். அப்படி மூன்று வருஷங்களாயின. அப்போது சில ரிஷி பத்தினிகள் சகுந்தலையை நோக்கி அம்மா! தேவதைகளுக்குத் தெய்வம் விஷ்ணு. பிராமணர்களுக்கு வேதமும் அக்கினியும், பெண்களுக்குத் தெய்வம் கணவன். ஜனங்களுக்குத் தெய்வம் பிராமணர்கள். உன் பிதாவைத் தெய்வமாகக் கொண்டு அவர் சொன்னபடி பிரசவித்து விடுவாயாக என்றார்கள். அவளும் அதை அங்கீகரித்து ஒரு புமானைப் பெற்றாள். அந்தக் குழந்தை பிறந்தபோது தேவர்கள் பூமாரி பெய்தார்கள். தேவதுந்துபிகள் முழங்கின. இந்திரன் வந்து சகுந்தலாய்! உன் புத்திரன் சக்கிரவர்த்தியாவான். நூறு அசுவமேதம், இராஜசூயம் முதலிய அளவற்ற யாகங்களைப் செய்வானென்று கூறிப்போனான். அதைக்கேட்ட சகுந்தலை மகிழ்ந்தாள், அங்கிருந்தவர்கள் சகுந்தலையைக் கனம் பண்ணினார்கள். கண்ணுவர் அந்தக் குழந்தைக்கு ஜாதகர்மாதி கிரியைகளோ கூத்திரிய தாமப்படி செய்வித்தார். அந்தக் குழந்தை வனத்தில் வளர்ந்தான். துஷ்பந்தன் சகுந்தலையை அழைக்கவில்லை. கண்ணுவருக்குப் பயந்திருந்தான்.

துஷ்யந்தன் குமாரனுக்கு வயது ஆறுயிற்று. அப்போது ரிஷிகளுக்கு உபத்திரவம் செய்கிற சிங்கம் புலி முதலிய மிருகங்களையும், குரங்கு, பன்றி, செந்நாய் முதலிய வற்றையும் காலாலுதைத்து விரட்டுவான். அதேக ராக்ஷதர்களைக் குத்துச் சண்டையில் கொன்று வெற்றி கொண்டான். அதைக் கண்ட ஒரு அரக்கன் அவனைக் கொல்லவந்தான். அந்தச் சிறுவன் வீளையாட்டாக அவனைக்கட்டிப் பிடித்து இறுகத் தழுவினான். அதனால் அரக்கன் மூக்காலும் வாயாலும் இரத்தங்கக்கி அலறிக்கொண்டு பிராணனை விட்டான். அந்தச் சந்தத்தைக் கேட்டு ஆச்சரமத்திலிருந்தவர்களெல்லாரும் ஓடிவந்து பார்த்து ஆச்சரியப் பட்டார்கள். இவன் எல்லாவற்றையும் அடக்கும் சக்தியுள்ளவனுக இருப்பதால் இவனுக்கு ஸர்வதமனன் என்று பேர் வழங்கக் கடவதென்றார்கள். தன் கணவன் தன்னை அழைக்காமையால் சகுந்தலை வருந்தித் துக்கமோலத்துடனிருந்தாள். பின்னர்க்கு சகல லோகங்களும் உபதேசஞ் செய்யப்பட்டன.

தொண்ணூற்றுரண்டாவது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி

கண்ணுவர் சகுந்தலையை அழைத்துக், குழந்தாய்! பெண்களுக்குப் பதி யின் சிசுரூஷை செய்வதே தருமம். அதுவே சிறந்தது. நீ மேலான ஐசுவரி யத்தையும், புண்ணியத்தையும் அடைவாய். குறிப்பிட்டகாலம் தவறிப்போன படியால் அரசன் வராமலிருக்கிறான். ஆதையால் நீயே நகரத்துக்குப்போய் அரசனை மகிழச்செய். தேவதைகளிடத்திலும், அரசரிடத்திலும், பெரியோர் களிடத்திலும், கணவனிடத்திலும் தாமாகவே செல்வது சிறந்தது. என் வார்த்தையைத் தட்டாமல் புத்திரனோடு புறப்பட்டுப்போ என்று சொல்லிப், பேரனை யழைத்து ஆலிங்கனஞ் செய்துகொண்டு, தருமந்தனென்று ஒரு அரசனிருக்கிறான். உன் தாய் அவனுடைய மனைவி; நீ அவனுடைய புத் திரன். நீ உன் தாயொடு கூட அவரிடம் போய் இளவரசனாகக் கடவாய். நீ அரசனுய் இராஜ்ய பரிபாலனம் பண்ணும்போது என்னை நினை யென்றார்.

ஸர்வதமனன், கண்ணுவரை வணங்கி என் தாயார் கணவனிடம் போ கட்டும். நான் உமது திருவடித் தொண்டுகளைச் செய்துகொண்டு இங்கேயே யிருக்கிறேன். எனக்குத் தந்தையும், தாயும், தெய்வமும் நீரே யென்றான். நான் இனி துஷ்ட பிருகங்களுடன் விளையாடாமல் உமது கட்டளைக்கு ஆடங்கி யிருக்கிறேன என்றான். அது கண்டு சகுந்தலை மனம் வருந்தி அழுது கொண்டிருந்தாள். புத்திரன் வந்து அம்மா! ஏன் அழுகிறாய்? ரிஷியின் உத்தரவின்படி காலபிலெழுந்திருந்து போகவேண்டு மென்றான். சகுந்தலை அப்பா! நீ துஷ்டத்தனத்தினால் துஷ்ட பிருகங்களோடு விளையாடி வனத்தைக் கலங்க அடித்து ரிஷிக்குக் கோப முண்டாக்கினாய். அதனாலேதான் நம்மை அரசனிடம் போம்படி அனுப்புகிறார். நான் அங்கே போகமாட்டேன் என்றான். பின் கண்ணுவரிடத்திலும் அப்படியே சொல்லி அழுதாள் கண்ணுவர் பெண் ணே! பதிவிரதைகளுக்குத் தேவர்களும் பிரத்தியட்சமாய் வரங்கொடுப்பார் கள். துன்பங்களைத் தீர்ப்பார்கள். விரும்பின வரங்களைத் தருவார்கள். அதுக்கிரகம் புரிவார்கள். பதிவிரதைகள் கணவன் அநுக்கிரகத்தினால் புண் ணியத்தை யடைகிறார்கள். பாபம் அவர்களை அணுகாது. ஆதலால் நீ போய் உன் கணவன் பணிவிடைகளைச் செய் என்று சொன்னார். பின் பேரனைப் பார்த்து நீ உன் தாயாரோடு கூடப்போ வென்று சொன்னார். பின் தமது சிஷ யர்களை அழைத்து நீங்கள் சகுந்தலையையும், அவள் புத்திரனையும் அழைத்துக் கொண்டு போய்த் துஷ்பந்த மஹா ராஜனிடம்விட்டு வாருங்கள் என்று சொன்னார். சகுந்தலையும் குழந்தையும் கண்ணுவரை வணங்கி விடைபெற் றுக்கொண்டு புறப்படும்போது கண்ணுவர் கண்ணீர் விட்டழுது ரிஷிகளைப் பார்த்து, நீங்கள் இவர்களை யழைத்துக்கொண்டு போங்கள். இரண்டு யோசனை தூரத்தில் கங்கை யமுனை யாறுகளின் சங்கமத்தில் பிரதிஷ்டானம்

என்ற நகரமிருக்கின்றது. அதில்தான் புரூரவன் இருந்தான். அதில் தங்கி உங்களுடைய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கனி காய்களைப் புசித்து விட்டுப் போங்கள் என்றார். அப்படியே அவர்கள் சகுந்தலையை அழைத்துக் கொண்டு போய் மத்தியான்ன சக்கமத்தில் தங்கினார்கள். அந்தப் பிரதிஷ்டான நகரம் புதனுக்காகத் தேவர்கள் நிர்மாணஞ் செய்து அதில் தான் துஷ்யந்த ராஜன் வசிக்கிறான். அப்போது அரசன் சர்வாபரணங்களையுந் தரித்துக் கொண்டு கொலுவில் வந்து உட்கார்ந்து ஜனங்களின் வழக்கத்தை தீர்த்து உட்கார்ந்திருந்தான். அப்போது ரிஷிகள் சகுந்தலையையும் ஸர்வதமனையும் அழைத்துக்கொண்டு கோட்டை வாசலிற் புகுந்தார்கள். பார்த்தவர்களெல்லாரும் சகுந்தலையையும் குழந்தையையும் புகழ்ந்தார்கள். ரிஷிகளுக்கு வந்தனம் பண்ணி மகிழ்ந்தார்கள் ஏலர் ரிஷிகளைப் பார்க்க விரும்பாமல் இவர்கள் பிசாசுகள் போலிருக்கிறார்க ளென்றகூறி நிந்தித்தார்கள். அப்போது அந்த ரிஷிகள் ஒருவரை பொருவர் பார்த்துக் கண்ணுவர் நகரத்துக்குட் போக வேண்டாமென்று கட்டளை யிட்டிருக்கிறர். 'ஆதலால் நாம் துர்ஜனர்கள் வசிக்குமிந்த நகரத்திற் புகவேண்டாமென்று' கூறி வனத்துக்குத் திரும்பிப் போனார்கள்.

தொண்ணூற்றேழாவது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

ரிஷிகள் போனபின், அவர்கள் மறைகிறவரைக்கும் அவர்களைப் பார்த்து அழுதுகொண் டிருந்தான். மறைந்த பின் புத்திரனையும் அழைத்துக்கொண்டு நகரத்துக்குள் போனன். அங்குள்ள ஜனங்களெல்லாரும் அவனைப் பார்த்து இவன் உருக்கின தங்கம்போலப் பிரகாசிக்கிறான். சகல லட்சணங்களும் இவனிடம் பொருந்தி யிருக்கின்றன இவன் தேவலோகத்துப் பெண்ணை வேண்டு மென்று சொன்னார்கள். குழந்தையைப் பார்த்து இவன் சிங்கத்தைப் போன்ற வீரபராக்கிரமத்தாலும். இராஜ லட்சணங்களாலும், துஷ்யந்த ராஜனைப்போலவே யிருக்கிறான். இவன் யாரோ தெரியவில்லை யென்று கூறிப் புகழ்ந்தார்கள் சகுந்தலை அரண்மனை வாயிலை அடைந்து வெட்கப்பட்டுக் கொண்டு நின்றாள். இராஜாவினிடம் போய் என்ன சொல்லுகிறதென்று சிந்தித்தாள். த்வாரபாலகர் உள்ளே போய் அரசன் உத்தரவின்மேல் அவளை உள்ளே அனுப்பினார்கள். அவள் இராஜனைக்கண்டு மனமகிழ்ந்து முறைப்படி வணங்கித் தன் புத்திரனையும் வணங்கச் சொல்லித், தான் ஒரு ஆசனத்தைக் கட்டிக்கொண்டு வெட்கத்தினால் தலைகுனிந்து, இருபை செய்யவேண்டுமென்றாள். அரசன் அவளைப் பார்த்து, உனக்கு என்ன செய்ய வேண்டுமென்று கேட்டான். அவள் மஹாராஜாவே! நீர் வனத்துக்கு வந்திருந்தபோது இவன் என்னிடத்தில் உமக்குப் பிறந்தவன். நீர் செய்த பிரதிக்ஞையை நிறைவேற்று

மென்றான். அவன் சொன்னதும் அவனுக்கு நினைவு வந்தது. ஆயினும் வெளிக் குக் காட்டாமல் அவளைப் பார்த்துப் பெண்ணே! நான் உன்னைச் சேர்ந்தது எனக்கு ரூபகமில்லை. ஆகையால் இங்கே யிருந்தாலும், போவதானாலும் சரி, நீ சொல்வது எனக்குத் தெரியவில்லை. வேறென்ன வேண்டும் சொல் என்றான்.

தொண்ணூற்றேட்டாவது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

இதைக் கேட்ட சகுந்தலை வெட்கத்தையும் துக்கத்தையும் அடைந்து, பய பக்தியோடு அரசனைப் பார்த்துச் சொல்லுகிறாள்.—அரசனே! நீர் எல்லாம் அறிந்தவர். நீர் சொல்வது நியாயமல்ல. நீர் சொல்வது மெய் யென்பதும் பொய் யென்பதும் உமக்கே தெரியும். மனச்சாட்சிக்கு விரோதமாகப் பேசுகி றீர். உண்மையை மறைப்பது போன்ற பாபம் வேறில்லை. உமது சித்தத்தில் அந்தர்யாமியாய் மறைந்து வசிக்கும் தெய்வம் நன்றாயறியும். தர்மம் ஒன்றுதான் பாபத்தை யொழித்துத் நன்மை செய்வது. ஒருவரும் அறியாமல் பாபத்தை செய்தாலும் அதைக் கடவுளும் தேவருமறிவார்கள். சூரியன், சந்திரன், வாயு, அக்னி, ஆகாயம், பூமி, யமன், இரவு, பகல், தன்மனசு, தர்மதேவதை இவர் கள் அறிவார்கள். தன் இருதயத்திலுள்ள ஜீவாத்மா திருப்தி யடைந்தால் அவனை யமனும் தண்டிக்க மாட்டான். அப்படி யில்லாமல் தன் ஜீவாத் மாவை வஞ்சித்து மனம் போனபடி நடக்கிறவனுக்குத் தேவதைகள் கிருபை புரியார்கள். பதிவிரதையாய்த் தன் கணவனைத் தானுதித் தேடிவந்திருக்கிற என்னை அவமானஞ் செய்யக்கூடாது. மஹாராஜாவே! நாயகன் தன் மனைவி யின் கர்ப்பத்தில் புகுந்து மீண்டும் வருகிறான். அதனாலே தான் மனைவிக்கு ஜாயை யென்று பேர் கூறப்படுகிறது. ஒருவன் புத்திரனாலே புண்ணியலோ கத்தை அடைகிறான். பௌத்திரனாலே நித்தியத் தன்மையைப் பெறுகிறான். கிருஹத்துக்குரிய வேலைகளில் சேர்ந்து, சந்ததியை விருத்தியாக்கி, நாயகனை உயிராகப் பாவித்துக், கற்புடைமை தவறாமல் இருக்கிறவளே மனைவியாவாள். தர்மார்த்த காமங்களுக்கு மனைவியே சிறந்த துணை. இனிய மனைவிகள் சயனகாலத்தில் சினேகிதர்களாகவும், தர்ம காரியங்களில் பிதாவாகவும், கஷ்டகாலத்தில் அன்னையாகவும். வழி நடையில் களையாற்றுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். மனைவியே சிறந்த துணையாகிறான். உயிரோடிருக்கிறபோ தும், இறந்தபோலும் பிறகும், ஆபத்தால் வருந்துகிற காலத்திலும் மனைவியே தன் கணவனை விடாமலிருக்கிறாள். கணவனுக்கு முன் இறந்த மனைவி பரலோகத்தில் தன் கணவனுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறாள். கற்புள்ள மனைவி உலகத்தில் தன் கணவன் சரீரத்தை வளர்க்கிறாள். பரலோ கத்துக்கும் துணையாயிருக்கிறாள். கணவன் தன் மனைவியிடம் தானே புத்தி ரனாகப் பிறக்கிறபடியால் மனைவியைத் தாயைப்போலவே மரியாதை செய்ய

வேண்டும். தன் முகத்தைக் கண்ணுடியிற் பார்ப்பதுபோலவே தன் மனைவியிடத்தில் புத்திர ரூபமாய்ப் பார்த்து மகிழ்கிறான். அந்நிய புருஷனிடத்தில் ஆசை வைத்துக் கர்ப்பந் தரிக்கும் மனைவிகள் வேஷதாரிகளாவார்கள். அந்த புத்திரர்களும் மனமொத்திராமல் சத்துருக்களுமாவார்கள். தனக்குப் பிறந்தப் மகன் பிதாவை விரோதிக்க மாட்டான் பிதாவுக்கு அடக்கியிருப்பான். வெயிலால் வருந்தினவர்கள் தண்ணீரால் சாந்தியடைவது போலத் துன்பத்தால் வருந்துகிறவர்கள் தன் மனைவியால் சாந்தியடைகிறார்கள். தரித்திரன் தன் மனைவியைப் பெருஞ் செல்வமாக மதிக்கிறான். மனைவியால் சுகமிருப்பதை யறிந்துகொண்ட அறிவுள்ள கணவன், அவள் வெறுப்பாய்ப்பேசினலும் அவளை வருத்தப்படச் செய்யக்கூடாது. மனைவியில்லாமல் சந்ததி யுண்டாக்க எவராலுமுடியாது. பதிவிரதையான மனைவியே கணவனுற்பத்தியாகிற நிலம் போன்றிருக்கிறாள். பூமியிற் புரண்டு புழுதியடைந்த உடம்போடிருக்கும் தன் மகனை ஆலிங்கனஞ் செய்வதை விட வேறென்ன இன்பமுண்டு. மஹாராஜாவே! உம்மிடத்தில் பிரியமாய் வந்திருக்கும் புத்திரனை அவமானஞ் செய்யலாகாது. மனுஷரில் பிராமணன் மேலானவன், மிருகங்களில் பசு மேலானது; பூஜிக்கப்படுவார்களுள் ஆசாரியார் சிறந்தவர். ஸ்பரிசிக்கத்தக்கவைகளுள் புத்திரன் சிறந்தவன். இந்தப் புத்திரன் நூறு அசுவமேதங்களும், இராஜசூயமும் செய்வானென்று ஆகாசவாணி கூறிற்று. ஜாதகர்மத்தில், நீ என்னுடைய ஒவ்வொரு அவயத்தினின்றும் பிறந்தாய்,என் இருதயத்திலிருந்து விசேஷமாய் உற்பத்தியா யிருக்கிறாய்; புத்திர னென்னப்பட்ட நீ நானுகவே யிருக்கிறாய், என் உயிர் உன்னுல் நிலைத்திருக்கும், என் சந்ததி உன்னுல் குறையாமல் விருத்தியாகவேண்டும். அப்படிப்பட்ட நீ நூறு வருஷம் ஜீவித்திருக்கக் கடவாய் என்று சொல்லி யிருக்கிறது. தெளிவான ஜலத்தில் தனது பிரதிபிம்பத்தைப் பார்ப்பது போல இந்தப் புத்திரனைப் பார்த்தருளும் தெளிவான நீரில் சந்திரனைப் பார்ப்பது போல என்னிடத்தில் உம்மை ப்பாரும். வேட்டைக்கு வந்த நீர் ஆசிரமத்தில் என்னை மனைவியாக அடைந்தீர். மேனகைக்கும் விசுவாமித்திரர்க்கும் பிறந்தேன். கண்ணுவாசிரமத்தில் வளர்ந்தேன். எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர். அப்போது நீர் எனக்குக் கொடுத்த வாக்குத் தவறுவது நியாயமாகுமா ? மாஹாராஜாவே! சூழ்ந்தைப் பருவத்தில் என்னை மாதாவும் பிதாவும் கைவிட்டார்கள். இப்போது கணவராகிய நீரும் கைவிட்டீர். ஆகையால் பூர்வ ஜன்மத்தில் நான் பாபஞ் செய்திருப்பேன், நான் ஆசிரமத்துக்குப் போகிறேன். இந்தப் பிள்ளையை மாத்திரம் கைவிடாதிருக்கவேண்டும் என்றாள்.

இவற்றை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அரசன் சகுந்தலாய்! உன்னிடத்தில் எனக்குப் புத்திரன் பிறந்தது எனக்குத் தெரியவில்லை. பெண்கள் பொய் சொல்வது வழக்கம். உன் சொல்லை யார் நம்புவார்கள் ? நீ வெட்கமில்லாமல் இந்தச் சொல்லைக் கூறினாய். இந்தப் புத்திரன் உனக்குப் பிறந்தவனுக இருந்தும் எப்படி வளர்ந்திருக்கிறான். சிறுவனுயிருந்தும் பருத்ததேக

முள்ள வனுகவும் பல முள்ளவனுகவும் இருக்கிறன். ஆகையால நீ விபசாரி யாக இருகவேணடும். பூலோகத்தில் பெண்களெல்லாரும் கெட்டவாகள். கணணுவரைப் பறறி நீ பேசக்கூடாது. ஏனெனறால் மேனகை வியபசாரி, விசுவாமிதிரரும கெட்டவா, காமியானவா, தயையில்லாதவர். ஆகையால் உன் பிறப்பு ஈனப்பிறப்பு இந்த ஈனமான பேசசை அரசனிடம் பேசலாமா? உனகு வேண்டிய பொருளைத் தருகிறேன். வாங்கிகொண்டு இஷடமான இடத்துகுப் போ. உன்னைப் பார்ககப் பிரியமில்லை. சிககிரம புறப்பட்டுப போகலாமெனறு கூறினன்.

99-வது அத்தியாயம்.

ஸமபவ பாவத தொடாசசி

சகுநதலை, பிறருடைய குற்றம் கடுகளவாயினும் அதைப பெரிதாகப பாவிக்கிறீர. உமது குறறம மலையளவாஞலும அதைக கடுகதனையாகப பாவிககினறீர நான தேவஸ்திரீயாகிய மேனகைகுப் பிறந்தவள நீர மனிதர. காடு வானததில சஞசரிபபவள் நீர பூமியில் சஞசரிப்பவர. உமமை விட நானே பிறப்பினுல் உயாநதவள உமகும எனகும மேருவுகும கடுகுக்கு மூள்ள வித்தியாசமிருகிறது நான தேவேநதிரன், குபோன் முதலான தேவாகளிருகுயிடததுக்குப் போவேன. உமகு மூல புருஷரான ஆயுவும ஊாவசிகுப் பிறநதவாதான் விகார ரூபமுள்ளவன கணணுடியிற் பாரப் பதறகு முன தன்னை அழகுள்ளவனுகவே நினைகினறன கண்ணுடியில் பாரததபின தனகுள் தானே வெட்கமடைகிறன. அபபோது தனகும் பிறருகு மூள்ள வித்தியாசததையுமறிகிறன அழகுள்ளவன் பிறரையிகழான். துஷ்டன அனனியாகளை நிந்தித்து மகிழ்கிறன் ஞானத்தையும சததியத்தையும கவனியாதவனை ஞாஸகிகனகூட வெறுகிறன் தாம மில்லாதவன, பொய்யன் சுத்தமில்லாதவன், உபகாரசிந்தை யில்லாதவன் இவாகளிடம கலி அந்த கூணததிலேயே வந்து சோகிறது. தாமவானிடம் வருகிறதில்லை துஷ்டன் பிறரிடதிலுள்ள கெட்ட குணத்தையே எடுததுககொள்ளுகிறன். நல்ல விஷ நற்குணங்களையே கிரகிககிறன. அன்ன பட்சியானது நீரோடு கலந்த பாலைத் தனியாகப் பிரிதெடுத்துக் கொள்வதுபோலக் கெட்டசொற்களையொழித்து நல்லவறறை மாத்திரம எடுத்துக் கொள்கிறவனே உத்தமன் அதமர்களாயிருப்பவாகள் தனகளுக்குக் கிடைப்பதற்கரிய பெரும புகழை யுடைய மற்றவரைக் கண்டு மனம புழுங்கி, அவாகள்மேல் பலகுற்றஙகளைச சுமத்துவார். நற்குணமுள்ளவன் பிறரைத் தூஷிப்பதனுல் வருத்தப்படுகிறன். துஷ்டனே ஆநந்தமடைகிறன். நான மூாக்களுயிருப்பதை அறியாமல் பிறரைத தூஷிப்பது மூடதனமாம். தன் பத்தினிகுப் பிறந்தவன், அனாதையாகிவந்து சொந்தவன், தத்தாகக் கொள்ளப்பட்டவன், அபிமானததால் வளாக்கப்பட்டவன, கிரயகொடுதது வாங்கப்பட்டவன், கனனிகையினிடம பிறநதவன

ஆகிய அறுவரும் சாயபாகம் பெறுவதற்குரிய புத்திரர்களென்பார்கள். அரசனே! நூறு கிணறுகளைவிட ஒரு குளம் உயர்ந்தது. நூறு குளங்களை விட ஒரு யாகம் சிறந்தது. நூறு யாகங்களிலும் ஒரு புத்திரன் மேலானவன். நூறு புத்திரர்களைவிடச் சத்தியம் மேன்மையானது. ஆதலால் சத்தியத்தைப் பாதுகாத்துக்கொள்ளும். சத்தியத்துக்குச் சமானமான தர்மம் ஒன்றுமில்லை. அசத்தியத்திற்கு மேற்பட்ட பாபமும் இல்லை. நீர் என்னைக் கூடியதும், நான் சொல்வதும் பொய் யென்று நீர் சொன்னால் நான் ஆச்சிரமவாசம் பண்ணப் போகிறேன். உம்மைப் போன்றவருடைய சிநேகமும் எனக்கு வேண்டாம். இவன் உமது புத்திரனென்பதில் சந்தேகமுண்டானால் நீரே சிந்தித்து அறிந்து கொள்ளலாம். இந்தப் புத்திரன் உமக்குப் பிறந்தவன் என்பதை நடை, ஒழுக்கம், குணம் முதலியவற்றால் ஊகித்தறியலாம். உமது தயவை விரும்பாமலே இவன் பூமி முழுவதையும் அரசளிப்பான் என்பதில் சந்தேகமில்லை. உன் குமாரன் சக்கிரவர்த்தியாவானென்று தேவேந்திரனே சொல்லியிருக்கிறான். அது நடவாது. நீர் என்னைக் கலக்தபோது தேவர்கள் ஆகாசவாணி முதலியோரைச் சாட்சியாக விரும்பினேன். என் துர்அதிர்ஷ்டம் அவர்கள் சும்மா இருக்கிறார்கள். சாட்சி யில்லாமையால் நான் போகிறேன் என்று சொல்லி விட்டுத் தன் பத்திரனையும் அழைத்துக்கொண்டு வனம போகப் புறப்பட்டாள்.

100-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடாசசி.

அப்போது சபையிலுள்ளவர்கள் எல்லாரும் கேட்கும்படி ஆகாசவாணி அரசனைக் கூப்பிட்டு, தாய் தோலால் செய்த பையை ஒத்தவள். புத்திரன் பிதாவைச் சேர்ந்தவன். எவன் எவனுக்குப் பிறந்தானே அவன் அவனேயாம். சகுந்தலை சத்தியத்தையே பேசுகிறாள். உன்னுடைய புத்திரனை ஒப்புக்கொள். குற்றமற்ற சகுந்தலையை மரியாதையாக ஏற்றுக்கொள் என்றது. தேவர்களும் அப்படியே சொன்னார்கள். இந்தப் புத்திரனை நாங்கள் சொல்லுதற்காகவும், நீயாகவும் பரிக்கிறபடியால் பரதன் என்னப்படுவான். இவனால் இந்த வம்சம் பாரத வம்சமென்று புகழ் பெறும். இவனுக்கு முந்தினவர்களும் பிந்திப் பிறப்பவர்களும் பாரதர் என்னப்படுவார்கள் என்றும் சொன்னார்கள். உடனே துஷ்யந்தன் சிம்மாசனத்தை விட்டெழுந்திருந்து, தேவர்களை வணங்கி, மகிழ்ச்சியோடு சபையிலுள்ளவர்களைப் பார்த்துச் சொல்லுகிறான். ஆகாசவாணியும், தேவர்களும் ரிஷிகளும் சொன்னதைக் கேட்டீர்களே. இவன் என்னுடைய புத்திரனென்பது எனக்குத் தெரியும். சகுந்தலையின் பேச்சை மாத்திரம் நம்பி நான் ஒப்புக்கொண்டால் எல்லாருக்கும் சந்தேகமுண்டாகும். அப்போது இவன் என் புத்திரனென்று ருவரும் ஜனங்க மாட்டார்களென்று சொன்னான்.

பின் புத்திரனை யழைத்து முத்திசெய்து மகிழ்ந்தான். சகுந்தலையை தக்க மரியாதையோடு அங்கீகரித்து, அவளை நோக்கிச் சொல்லுகிறான். நீ சொல்வதை நல் உன்னை நான் அங்கீகரித்தால் ஜனங்கள் சந்தேகிப்பார்கள் என்று நினைத்து நான் உன்னை மறுத்தேன். இப்போது சந்தேகமில்லாமல் எல்லாரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆதலால் நீயே என் பட்டமகிஷி. இவன் பட்டத்துக்குரிய புத்திரன். நான் உன்னை அவமரியாதையாகப் பேசினவற்றை நீ பொறுத்துக்கொள். நீ சொன்ன கொடுஞ் சொற்களை நானும் பொறுத்துக் கொள்கிறேன் என்று அவளோடு புத்திரனையும் அழைத்துக்கொண்டு அந்தப்புரம் போனான். தன் தாயாகிய ரதந்தரியை வணங்கித், தாயே! இவள் விசுவாமித்திரருடைய பெண். எனக்கு மனைவி. உனக்கு மருமகள். இவன் உனது பேரன். நீ கருணை செய்யவேண்டுமென்று சொன்னான். அவள் தன் பேரனைத் தழுவிக்கொண்டாள். தன்னை வணங்கின சகுந்தலையை ஆலிங்கனஞ் செய்துகொண்டு மனமகிழ்ந்தாள். பின்னும் அவளைப் பார்த்து நீ சொன்னது சரி. இந்தக் குழந்தையிடத்தில் துஷ்யந்தனுடைய இலட்சணங்கள் பொருந்தியிருக்கின்றன. இவன் சக்கிரவர்த்தியாவான். உன் கணவனை திரிலோகங்களையும் ஜெயிப்பான். நீயும் மேலான போகங்களை அனுபவிப்பாயென்று வாழ்த்தினாள். அரசனும் சகுந்தலையைப் பட்டமகிஷியாக அபிஷேகஞ் செய்து பரதனுக்கும் இளவரசப் பட்டஞ் சூட்டினான். பின் நூறு வருஷம் துஷ்யந்தன் அரசாண்டு, தன் புத்திரனிடம் அரசை ஒப்புவித்துத் தான் தவஞ்செய்து சொர்க்கமடைந்தான்.

101-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

பரதன் இராஜியத்தைத் தர்மமாகப் பரிபாலனம் செய்தான். மேலோர்கள் தர்மத்தை அனுஷ்டித்தான். அரசர்களை யெல்லாம் வென்று ஜயக்கொண்டான். பூமி முழுமைக்கும் சக்கிரவர்த்தி யானான். பூலோக தேவேந்திரனைப் போல விளங்கினான். கண்ணுவரை ஆசாரியராகக் கொண்டு, அநேகயாகங்கள் செய்தான். யமுனைக்கரையில் அநேக அசுவமேதங்களையும், கங்கைக்கரையில் அநேக அசுவமேதங்களையும் செய்தான். இவன்காலம் முதல் சந்திர வம்சம் பெரும் கீர்த்தி பெற்றது. பரதனுக்குப் பார்த்துவாஜருடைய அனுக்கிரகத்தினால் புமன்யு என்னும் புத்திரன் பிறந்தான். அந்தப் புத்திரன் இளவரசானான். புமன்யுவுக்குப் புஷ்கரணி மனைவியானாள். அவளிடம் ஸுஹோத்திரன் முதலாக ஐந்து புத்திரர் பிறந்தார்கள். ஸுஹோத்திரன் பட்டத்தை யடைந்தான். அவன் இராஜசூயம் முதலிய அநேக யாகங்கள் செய்தான். அவன் ஆளுகையில் பூமி தேவாலயங்களாலும், பூபஸ்தம்பங்களாலும் நிறைந்திருந்தது. அவனுக்கு அஜமீடன், ஸுமீடன், புருமீடன் என்ற புத்திரர்கள் பிறந்தார்கள். அஜமீடன் அரசனானான். அவனுக்குத் தாரினி, நீலி,

தேவாபி மூன்றாவது மனிதன். இம்மூவரிடமிலும் நூறு புத்திரர்கள் பிறந்தனர். அவர்களுள் தமினி புத்திரனுடைய ரிகுன் என்பவன் அரசனு னான். இவனுக்கு சம்வரணன் பிறந்தான். சம்வரணன் அரசாளுகையில் மழையின்மை, பயிர், சோம் முதலியவற்றில் பூமிக்கு மிகக் கெடுதி விளைந்தது. இவைகளெல்லாரும் தெரிந்தவர்கள். பாதசேனை எதிரிக்கு தோல்வி யடைந்தது. பாஞ்சால ராஜன் சம்வரணனை ஜயித்தான். சம்வரணன் அவனுக்குப் பயந்து பூமியை விட்டு ஓடிப்போனான். சிந்து நதிக்கரையிலுள்ள மலையடிவாரத்தில் பாரதர் வசித்தார்கள். வெரு காலத்துக்குப் பின் வசிஷ்ட மஹரிஷி அரசனிடம் வந்தார். அரசன் அவரை யெதிர்கொண்டழைத்துப் பூஜித்து, நாங்கள் இராஜ்யத்துக்காக முயற்சி செய்கிறோம். நீர் எங்களுக்குப் புரோஹிதராகவேண்டுமென்றனர். அவர் உடன் பட்டமையால் அரசன் மறு படியும் சக்கிரவர்த்தியானான். அவன் நெடுங்காலம் அரசாண்டான். அவனுக்குச் சூரியன் புத்திரி தபதி என்பவளிடம் குரு பிறந்தான். அந்தக் குரு குரு க்ஷேத்திரத்தைப் புண்ணிய பூமியாகச் செய்தான். அவனுக்கு அசுவவான் முதலாக ஐந்து புத்திரர்கள். அசுவவானுக்குப் பரிக்ஷித்து முதலாக எட்டுப் புத்திரர்கள். இவர்களுடைய வமசத்தில் ஜனமேஜயன் முதலாக எழுவர் பிறந்தார்கள். ஜனமேயனுக்கு திருதராஷ்டிரனுதியாக எட்டுப் புத்திரர்கள். திருதராஷ்டிரனுக்குப் பிரதீபன் முதலாவார்கள் பிறந்தார்கள். பிரதீபன் பிறந்த அரசன். அவனுக்குத தேவாபி, சந்தனு, பாஹ்லீகன் என்று மூன்று புத்திரர்கள். தேவாபி தவத்தை விரும்பி வனத்துக்குப் போய்விட்டபடியால் சந்தனு அரசனானான். இந்தப் பாரத வம்சத்திற் பிறந்த முக்கியமான சிலரை சொல்லுகிறேன்.

102-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

இக்ஷ்வாகு வம்சத்தில் மஹாபிஷக் என்ற அரசன் அரசாண்டான். அவன் அசுவமேதயாகங்களைச் செய்து பூமியைத் தர்மமாகப் பரிபாலித்துச் சொர்க்கமடைந்தான். ஒரு காலத்தில் பிரமதேவருடைய சபையில் இந்த மஹாபிஷக்கும் இருந்தான். அப்போது கங்கை பிரமதேவரிடம் வந்தாள். வருகையில் காற்றினால் அவளுடைய வஸ்திரம் விலகிற்று. எல்லாரும் தலை குனிந்து கொண்டார்கள். மஹாபிஷக்கு மாத்திரம் அவளை வெட்கமில்லாமல் பார்த்தான். பிரமதேவர் மஹாபிஷகைப் பார்த்து நீ மனிதனாக பிறந்து பின் வரக்கடவாயென்று சபித்தார். புத்தியில்லாத அரசனே கங்காதேவி உனக்கு மனைவியாய் இஷ்டமில்லாததைச் செய்வாள். அதனால் எப்போது அவளிடத்தில் வெறுப்பை அடைவாயோ அப்போது சாபவிமோசனமாம். கங்கையும் அந்த அரசனை நினைத்துக்கொண்டு திரும்பினாள். வரும்போது வருத்தத்துடனிருந்த வசுக்களைக் கண்டாள். அவர்கள் ஒளி மழுங்கி மனங்கலங்கி

யிருக்தார்கள். அவர்களைப் பார்த்து நீங்கள் என் வருத்தப்பட்டுக் கொண்டிரு க்கிறீர்கள் என்றாள். வசுக்கள், அம்மணீ! நாங்கள் வசிஷ்ட மஹா முனிவரு க்குத் தவறுதலைச் செய்தோம். அதற்காக அவர் சபித்தார். அந்தச் சாபம் நீங்காது. நீ பூலோகத்தில் மனுஷியாகப் பிறந்து எங்களைப் புத்திரராக பெற வேண்டுமென்று கேட்டார்கள். கங்கை அப்படியே ஒப்புகொண்டு எந்த அரசனிடத்தில் நீங்கள் பிறகைப் போகிறீர்களென்று கேட்டாள். அவர்கள் சந்தனு மஹாராஜா சிறந்தவன். அவன்தான் சரியான அரசனென்றார்கள். கங்கையும் சம்மதித்தாள். வசுக்கள் நாங்கள் நெடுங்காலம் இந்தச்சாப வசப் பட்டுக் கெடாமலிருக்கும்படி பிறந்த வுடனே யெங்களைக் கொன்றுவிடவேண் டும். அப்படி செய்தால் நாங்கள் சாபம் நீங்கிச் சுகப்படுவோமென்றார்கள். கங்கை சம்மதித்து, அந்த அரசனுக்கு ஒரு புத்திரனை உயிரோடு வைப்பேன். அரசன் சந்ததி யற்றுப்போகக் கூடாது என்றாள். வசுக்கள் அப்படியே யாகட்டும் அவன் பூலோகத்தில் சந்ததியில்லாதவனாவான் என்று கூறிப்போ னார்கள்

103-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

பரதவம்சத்தில் பிரதிபனென்று ஒரு அரசனிருந்தான். அவன் கங் கா நதிக்கரையில் வெகு நாள் ஜபஞ் செய்து கொண்டிருந்தான். அவன் வேத மோதிக்கொண்டிருக்கையில் கங்கையானவள் அழகான பெண் வடிவங் கொண்டு அவனை நோக்கி வந்து அவ்வரசனது வலது துடையில் உட்கார்ந் தான். அரசன், அவளைப் பார்த்து அழகான பெண்ணே! உனக்கென்ன வேண் டும் என்றான். அவள் அரசே! உன் மேல் ஆசைகொண்டு வந்தேன். நீர் என்னை அங்கீகரியும். விரும்பி வந்த பெண்ணை நிராகரிப்பது சாதுக்களுக்கு அழகல்ல என்றாள். அரசன் பெண்ணே! நான் பிறர் தாரத்தையும் வேறு வருணத்துப் பெண்ணையும் இச்சிப்பதில்லை. இது என்னுடைய விரதம். தன் மனைவியை விட்டு அன்னியன் மனைவியைச் சேர்ந்தால் கற்பகாலம் வரைக்கும் நரகத்தில் கிடந்து வருந்துவான். கங்கை, அரசனே! நான் தாழ்ந்த பிறப்பு டையவளல்ல. கூடாத்தக்கவளே. தேவ கன்னிகையாகிய நான் வலுவில் உன் னிடம் வந்திருக்கிறேன். நீர் என்னை யேற்றுக்கொள்ளுமென்றாள். அர சன் பெண்ணே! நான் உன்னைக் கூடேன். எனென்றால் நீ வந்து என் வலது துடையிலுட்கார்ந்தாய். தன்னுடைய புத்திரியும் மருமகளுந்தான் வலது துடை யில் உட்காரலாம். நீ என் வலது துடையில் உட்கார்ந்த படியால் நீ என்க்கு மருமகளாயிரு. என் புத்திரனுக்கு உன்னை விவாகஞ் செய்விக்கிறேனென் றான். கங்கை அப்படியே உன் மகனுக்கு மனைவியாகிறேன். உமது வம்சம் உலகில் சிறப்புடையதாம். உலகிலுள்ள இராஜாக்களெல்லாருக்கும் நீங்களே மூலமானவர்கள். ஆனால் நான் எதைச் செய்தாலும் உமது புத்திரன் அதை

விசாரிக்கூடாது என்றாள். அவன் நல்லது என்றான். கங்கை உடனே மறைந்து போனாள். பின் பிரதீபன் புத்திரனைக் குறித்து தவம் புரிந்தான். தவத்திலுல் அவனுக்கு ஒரு புத்திரன் பிறந்தான். அவனுக்குச் சந்தனுவென்று பேரிட்டான். வைதிக நெறிப்படி ஜாதகர்மாதிகள் செய்வித்தான். தக்க பருவம் வந்தபோது பிரதீபன் சந்தனுவைப் பார்த்து, நான் உனக்காக ஒரு பெண்ணை சித்தம் செய்து வைத்திருக்கிறேன். அவள் தேவலோகத்துப் பெண், அவளை நீ யார் என்று கேளாதே. அவள் எப்படிப்பட்ட காரியத்தைச் செய்தாலும அதை நீ கவனியாதே என்று சொன்னான். பிறகு சந்தனுவுக்குப் பட்டாபிஷேகஞ் செய்துவிட்டுப் பிரதீபன் தவசு பண்ணப் போய்விட்டான். பிறகு சந்தனு தர்மமாய் அரசு புரிந்தான். அரசர்களெல்லாரையும் ஜயித்துப் பூமி முழுவதையுந் தன்னுடையதாக்கிக்கொண்டான். அநேக யாகங்களைச் செய்தான். முயற்சி, ரூபம், தனம், பல பராக்கிரமங்கள் நிறைந்த வஞ்சியும், சத்தியவாளும், தர்மிஷ்டனுமு மிருந்தான். நான்கு வருணத்தாரும் ஒருவருக்கொருவர் ஒத்தாசையா யிருந்தார்கள். சகல ஜீவன்களுக்கும் இவன் பிதாவைப்போலிருந்தான். அவன் வேட்டை யாடுவதில் விருப்பமுள்ளவனு யிருந்தான். வனத்திலேயே சஞ்சரித்துக்கொண்டிருந்தான். அப்படி யிருக்கையில் ஒரு நாள் இணை யில்லாத ஒரு தெய்வப்பெண் சந்தனுவை நோக்கி வந்தாள். அரசன் அவளுடைய அழகைக் கண்டு மதிமயங்கினான். அவளுடைய அழகாகிய கடலில் முழுகிக் கரை காணுதவனுனான். அவளும் அரசனை மிருந்த ஆசையோடு பார்த்தான். அரசன் அவளைப் பார்த்து சொல்லுகிறான். அழகிய பெண்ணே! நீ தெய்வப் பெண்ணு! அசுரப் பெண்ணு! கந்தர்வ பெண்ணு? நாகலோகத்துப் பெண்ணு? மனுஷ கன்னிகையா? நான் உன் அழகில் முழுகிப்போனேன். ஆகையால் நான் உன்னை மனைவியாக அடைய விரும்புகிறேன். என் உடல் பொருள் ஆவியெல்லாம் உனக்குச் சொந்தம். நீ அங்கீகாரம் பண்ணவேண்டுமென்று கேட்டான்.

104-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

அரசன் கூறியதைக் கேட்ட கங்கை அரசனிடம் வந்து அரசனே! நான் உனக்கு மனைவி யாகிறேன். ஆனால் நீராவது யாராவது என்னைப்பற்றிக் கேட்கக் கூடாது. நான் நல்லது செய்தாலும், கெட்டது செய்தாலும் அதைத் தடுக்கப்படாது. எனக்குப் பிரியமில்லாததைப் பேசக்கூடாது. அப்படி யிருக்கும் வரையில்தான் நான் உம்மிடம் இருப்பேனென்றாள். இதற்கு விரோதமாக நடந்தால் அப்பொழுதே உம்மை விட்டுப் பிரிந்துபோவேன். இதற்கொத்துக்கொண்டால் நீரென்னை மனைவியாகத் தடையின்றி யடையலாம். உமது பிதாவும் என்னை மருமகளாக ஒப்புக்கொண்டிருக்கிறார் என்றாள். அரசன்

சரி யென்று ஒத்துக்கொண்டு, அவளைத் தேரின்மேலேற்றிக்கொண்டு நகரம் போய் அவளுடன் கூடி வாழ்ந்திருந்தான். அவளுடைய உபசாரம், குணம், ஒழுக்கம் முதலியவற்றால் அரசன் மகிழ்வடைந்தான். அவளைவிட்டுப் பிரியாமற் கூடி வாழ்ந்தான்.

105-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

இப்படி நெடுங்காலம் அவளோடு கூடி வாழ்ந்திருக்கையில் அவள் கர்ப்பந்தரித்தாள். காலம் வந்து புத்திரனைப் பெற்றபோது அந்தக் குழந்தையைத் தண்ணீரில் எறிந்துவிட்டாள். இப்படி ஏழு குழந்தைகளைக் கொன்று விட்டாள். அரசன் தான் வாக்குக் கொடுத்ததையும், அவன் பிரிந்துபோவான் என்பதையும் நினைத்து வாய்திறவாமல் இருந்தான். ஆனாலும் அரசனுக்கு அது சம்மதமே யில்லை. எட்டாவது புத்திரன் பிறந்தபோது, அதையும் கொல்ல ஆரம்பித்தாள். அப்போது அரசன் விசனமடைந்து, பெண்ணே குழந்தையைக் கொல்லாதே நீ யார்? என் குழந்தைகளைக் கொல்லுகிறாய்? அப்படிச் செய்வது மஹா பாவமல்லவா? என்றான். கங்கை சினந்து, அரசனே! உன் புத்திரனை நான் கொல்வதில்லை. நமது ஏற்பாடு தவறிப்போயிற்று. ஆதலால் நான் இனி உன்னோடு வசிப்பதில்லை. நான் கங்கை, தேவர்களுடைய காரியமாக உன்னிடம் வந்தேன். இந்த எட்டுப் புத்திரர்களும் வசுக்கள். வசிஷ்டர் சாபத்தால் மனித ஜன்மமடைந்தார்கள். நம்மிருவரையும் தவிர வேறு மநுஷ்ய ஸ்திரீகளில்லை. வசுக்கள் பிறந்தவுடன் அந்தச் சாபத்தினின்றும் விடுவிக்கிறேனென்று உறுதி சொல்லி பிருந்தேன். அதற்காகவே அவர்களைக் கொன்றேன். நான் வந்த காரியம் முடிந்தது. நான் போகிறேன். இந்தப் புத்திரனைக் காப்பாற்று. இவன் பெருங் காரியத்தைச் செய்வான் என்று சொன்னாள்.

106-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

அரசன் அவளை நோக்கிப், பெண்ணே! வசுக்கள் என்னைக் குற்றம் செய்து சாபத்தை யடைந்தார்கள். அவர்களுள் இவன்மட்டும் இறவாமல் பூமியிலிருக்கவேண்டிய காரணமென்ன? இவைகளை யெனக்குச் சொல்லவேண்டுமென்றான். கங்கை சொல்லுகிறாள். அரசனே! வருணனுக்குப் பிறந்தவனுக்கு ஆபவர் என்று பேர் பெற்றவர் வசிஷ்டர். அவருடைய ஆச்சிரமம் மேருமலையின் அடிவாரத்திலுள்ளது. இவ்விடத்தில் அவர் தபம் பண்ணிக்கொண்டிருந்தார். தட்ச புத்திரியாகிய சுரபி யென்பவள் காமதேனுவைப் பெற்

ருள். அதை வசிஷ்டர் பெற்றுக கொண்டார். ஒரு காலத்தில் வசுக்கள் எண்மரும் தங்களுடைய பத்தினிகளோடு அந்த வனத்துக்குள் வினோயாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுள் எட்டாவது வசுவினுடைய மனைவி அந்த காமதேனுவைப் பார்த்து அதனிடம் விருப்பம் கொண்டு தன் கணவனை நோக்கி, இந்த அழகான பசுவை எனக்குப் பிடித்துத்தா வென்று கேட்டாள்.

அவன் தன் மனைவியை நோக்கிப் பெண்ணே! இந்தக் காமதேனுவென்னும் பசு வசிஷ்ட மஹா ரிஷியுடையது. இதன் பாலைக் குடிப்பவர் நாறைதிரையில்லாமல் பதினாயிரம் வருஷம் ஜீவித்திருப்பார்கள் என்றான். அவள் சொல்லுகிறாள். உனோன் என்னும் அரசனுக்கு ஜிலவதி யென்ற ஒரு புத்திரி யிருக்கிறாள். அவள் எனக்குத்தோழி.அவளுக்காக இந்தப் பசுவைக் கன்றோடு பிடித்துக் கொண்டுவா என்றாள். அவன் இந்த பசுவின் பாலைக்குடித்து மூப்பினைப் பில்லாமல் நெடுங்காலம் ஜீவித்திருக்கட்டுமென்றாள். அவன் அப்படியே மற்ற வசுக்களோடு சேர்ந்து அதைப் பிடித்துக்கொண்டு போனான். கனி சம்பாதிக்கப் போயிருந்த வசிஷ்டர் ஆச்சிரமத்துக்கு வந்தார் பசுவைக் காணுமல் எங்குந் தேடினார். அது அகப்படவில்லை. பின் அவர் தமது ஞான திருஷ்டியினால் வசுக்கள் கொண்டு போனதை யுணர்ந்தார். அதனால் அவர் கோபங் கொண்டு என் பசுவைக் கொண்டுபோன அந்த வசுக்கள் மனிதர்களாக ஜனிக்கக்கடவர்கள் என்று சபித்தார். இதை யுணர்ந்த வசுக்கள் வசிஷ்டருடைய ஆசிரமம் வந்து தங்களுடைய சாபத்தை நிவர்த்தி செய்யும்படி வேண்டிக் கொண்டார்கள் அப்போது வசிஷ்டர் நீங்கள் எழு பேரும் ஒரு வருஷத்தில் விமோசன மடையலாம். என் பசுவை திருடின தியோ என்னும் வசுமட்டும் சாபம் நீங்காமல் பூமியில் மனுஷ்யராக நெடுங்காலமிருப்பானென்று சொன்னர். பின்னும் இவனுக்குப் பூலோகத்தில் விவாகமில்லை. சந்ததியுமில்லை. ஆனல் சகல சாஸ்திர வல்லவனாகவும், சன்மார்க்க முடையவனாகவுமிருப்பானென்றார். அதனபின் வசுக்கள் என்னிடம் வந்தார்கள். நாங்கள் உன்னிடம் புத்திரர்களாகப் பிறக்கிறோம். பிறந்தவுடனே ஜலத்திலெறிந்து விடு என்று என்னை வேண்டிக்கொண்டார்கள் நான் சம்மதித்த படியால் அப்படியே செய்தேன். இந்தப் புத்திரன் மாத்திரம் பூமியிலிருப்பான். இவனை நான் அழைத்துக்கொண்டு போகிறேன். பெரியவனை பின் உன்னிடம் வந்து சேருவான். காணும் போது வருவேனென்று சொல்லிக் குழந்தையோடு மறைந்து போனாள். அந்தப் புத்திரனுக்குக் காங்கேயனென்று பேர். போனபின் அரசன் கங்கையை நினைத்து வருந்திக் கொண்டிருந்தான்.

107-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

சந்தனு மஹா ராஜன் மேலான அறிவுள்ளவன். தர்ம சித்தமுள்ளவன். எல்லாராலும் புகழப்பட்டவன். சத்தியந் தவறுதவன். கொடை, பொறு

மை. அறிவு, இந்திரிய நிக்கிரகம், பராக்கிரமம் முதலியவற்றால் நிறைந்தவன். இராஜ நீதியில் தேர்ந்தவன். இராஜ லட்சணங்களெல்லாம் குறை வில்லா மல் நிறைந்தவன். எல்லா இராஜர்களையும் கீழ்ப்படித்தி உலக முழுவதையும தனக்குச் சொந்தமாகச் செய்துகொண்டி அரசர்களுக்கெல்லாம் அரசனுய்ச சிறந்து, தர்மந்தவருமல் பிரஜாபாலனஞ் செய்து வந்தான். பட்சபாதமின்றி யரசு செலுத்தினன். ஒரு பிராணிக்கும் இம்சை யில்லை. எல்லா ஜீவனும அவன் அரசாட்சியில் சுவலே யற்றுச் சுகமாக வாழ்ந்தன. மனிதர் சத்தியத்தை பேசினர்கள். எல்லாரும் தர்ம சிந்தை யுள்ளவர்களாகவே யிருந்தார்கள். கங்கை பிரிந்த பின் முப்பத்தாறு வருஷம் சந்தனு ஸ்திரீசங்கமில்லாமலே யிருந்தான் ஒரு நாள் சந்தனு வேட்டையாடிக் கொண்டிருக்கையில் கங்கைக் கரைக்குப் போனன். அவ்விடத்தில் தேவனைப் போன்ற ஒரு சிறுவன் கூர் மையான அம்புகளால் கங்கா ஜலத்தை ஓட வொட்டாமல் தடுத்துக்கொண் டிருந்தான். அதைக் கண்டு சந்தனு மனிதர்களால் செய்ய முடியாத இந்தச் செய்கை செய்பவன் யாரோ என்று அதிசயித்துப் பார்த்துக்கொண்டிருந்தான் அப்போது அந்தச் சிறுவன் சந்தனுவை மயங்கச் செய்துவிட்டு மறைந்துவிட் டான். இதை யுணர்ந்த சந்தனு இவன் புத்திரனை இருக்கவேண்டுமென்று கருதிக் கங்கையை வினவினான். கங்கை மனித உருவத்துடன் புத்திரனை யும் கையில் பிடித்துக்கொண்டு வெளிப்பட்டு வந்தாள். அரசனை நோக்கி அரசனே இவன் உமது புத்திரன். இவன் அஸ்திர இரகசியமெல்லாமுணர்ந் தவன் இவனுக்கு மிஞ்சினவர்கள் ஒருவருமில்லை. இவனை வீட்டுக்கு அழை த்துக்கொண்டு போம். சுக்கிராசாரியாருக்குத் தெரிந்த சாஸ்திரரகஸ்யமெல்லா மிவனுக்குந் தெரியும். தேவாகளும் அசுரர்களும் இவனை புகழ்வார்கள். பரசுராமரிடம் தனுர்வேத முழுதுமுணர்ந்துகொண்டான். பிரகஸ்பதியிடம் சாஸ்திரங்கள் பயின்றான். வசிஷ்டரிடத்தில் சே வேதாங்கங்களை ஓதி னன். இவனை யழைத்துக்கொண்டு போ மென்று சொல்லிவிட்டு மறைந்து போனாள். சந்தனு தன் புத்திரனை யழைத்துக்கொண்டு தன்நகரம் போனன். போனபின் தன் புத்திரனுக்கு இளவரசு பட்டங் கட்டினன். கங்கையை யிடைய ஒழுக்கத்தினாலும், குணங்களினாலும் எல்லாரும் மகிழ்வடைந்தார்கள். இவ்வாறு நாலு வருஷங்களாயின. பின்பு ஒரு நாள் அரசன் யமுனையாற்றங் கரைக்குப் போனன். அவ்விடத்தில் அற்புதமான ஒரு வாசனை தோன்றியது அதைப் பற்றி அது வருமிடத்தை நோக்கிச் சென்றான். அங்கே தெய்வப் பெண் போன்ற ஒரு செம்படவப் பெண்ணைக் கண்டான். அவள்மேல் மோ கம் கொண்டு அவள் தந்தை யிடம் போய் அவளைத் தனக்குத் தரும்படி கேட் டான். செம்படவன் மஹாராஜாவே! நான் பெண்ணைக் கொடுப்பதில் தடை யே யில்லை. ஆனல், நான் கேட்கிறபடி எனக்கு வாக்கு தத்தம் செய்வதா யிருந்தால் கொடுப்பேனென்றான். அரசன் உன்னுடைய கருத்தைச சொல் கொடுக்கக் கூடியதா யிருந்தால் வாக்குத தத்தம் செய்வேன். கூடாததாயி

ருந்தால் உடன்பட மாட்டேனென்றான். செம்படவன், இந்தப் பெண் வயிற் றில் பிறக்கும் புத்திரனே உனக்குப் பிறகு அரசனுகவேண்டும். இதுதான் எனது வேண்டுகோளென்றான். அது மீறை வேற்றக் கூடாதாலால் அரசன் பதில் கூறவில்லை. பேசாமல் போய்விட்டான். ஆனலும் அந்தச் செம்படவப் பெண்ணின் அழகில் சிக்கிகொண்ட மனதையுடைய அரசன் சதா அவளையே கருதி புத்தி மயங்கி யிருந்தான். அப்போது தேவவிருதன் தன் பிதாவிடம் போய், பிதாவே! உமக்கென்ன கவலே! என் தக்காயிருக் கிறீர். ஒன்றலும் குறை வில்லாமலிருக்கின்றது. உமக்கோ சரீரம் மெலி கின்றது, உமது கவலேக்குக் காரணமின்னதென்று எனக்குத் தெரிந்தால் அது எதுவானலும் அதை நிவர்த்தி செய்வேனென்றான்.

அது கேட்ட சந்தனு, நான் கவலேப்பட்டுக்கொண்டிருப்பது நிசமே. அதற்குக் காரணம் நீ க்ஷேமமா யிருக்கவேண்டுமென்பதுதான். நீ ஒருவன் தான் இந்த வம்சத்தை விருத்திசெய்யவிருக்கிறாய். நீ ஒருவனே நூறு புத்திரர் களுக்குச் சமானம். தர்ம சாஸ்திரம் ஒரு புத்திரீனிருப்பதும் புத்திரனில்லாதி ருப்பதும் சரியாமென்கின்றது. ஒரேகண் இருப்பதும் ஒரேபுத்திரனிருப்பதும் சமம். இரண்டும் இல்லாமையே யாம். கண்ணிழந்தால் தேகம் செடும் புத்திரனில்லாமலிருந்தால் குலம் நாசமாம். ஆயினும் நான் மறு விவாகத் தை விரும்பவில்லே. நீயோ யுத்தத்தில் தேர்ந்தவன். உனக்கு அபாயமுண் டானல் என்ன செய்கிறதென்கிற எச்சமே தவிர வேறென்றுமில்லே என் றான். சூட்சும புத்தியுள்ள பீஷ்மர் தன் பிதாவின் சாரதியை அழைத்து, என் பிதாவுக்கு எந்தப் பெண்மேல் விருப்பமிருக்கிறது! நீ அறிந்தால் சொல் என்றார். அவன் அரசரே! ஒரு செம்படவப் பெண் இருக்கிறள். உமது பிதா அந்தப் பெண்மேல் மோகங்கொண்டு செம்படவனைக் கேட்டார். அவனே இந்தப் பெண்ணுக்குப் பிறக்கும் பின்னேக்குப் பட்டங்கட்டுகிறதானல் பெண் கொடுக்கத் தடையில்லே யென்றான். அதற்கு இராஜா சம்மதிக்கவில்லே. இதுதான் எனக்குத் தெரியுமென்றான். பீஷ்மர் சில க்ஷத்திரியப் பெரியோ ர்களே முன்னிட்டுக்கொண்டு செம்படவனிடம் போனர். செம்படவனைக் கண்டு பெண் கேட்டார். அவன் மஹாராஜாவே! இந்தப் பெண் வயிற்றுப் பின்னேக்கு பட்டங்கட்டுவதானல் பெண் கொடுக்கத் தடையில்லே. இந்தப் பெண் எனக்குப் பிறந்தவளல்ல வசுராஜன் பெற்ற பெண் நான் அவருடைய கட்டளேயால் வளர்க்கிறேன். வசுராஜனும் இந்தப் பெண் சந்தனுவுக்கு மாலே யிடவேண்டுமென்று கூறி யிருக்கிறார். இந்தப் பெண்ணும் இராஜ் யத்தையே விரும்புகிறள். நீர் பட்டத்துக்கு உரியவராயிருக்கையில் அவரு டைய எண்ணம் எப்படி நிறைவேறும். இந்த எண்ணத்தினுலே உமது பிதா கேட்டபோது அவரை மறுத்துவிட்டேனென்றான்.

பீஷ்மர் அவனே நோக்கி, நான் சொல்வதைக் கேள். நீ கேட்டபடியே செய்கிறேன். இந்தப் பெண்ணுக்குப் பிறக்கிற பிள்ளே யிராஜனுக இருப்பான்.

இதில் சந்தேகமில்லை. என்ன சொல்லுகிறு பெண்ணே. செம்படவன் மஹாராஜாவே! நீர் சொல்வதிலெள்ளளவும் பிசகு இராது, நீர் சொன்னப்படியே நிறைவேற்றுவீர். ஆனால் உமது சந்ததி அங்கீகாரம் செய்யவேண்டுமே, அது விஷயத்தில் சந்தேகமிருக்கிறது என்றான். அதன் கருத்தை உணர்ந்து கொண்ட பீஷ்மர் எல்லாரும் அறியச் சொல்லுகிறார் செம்படவனே! யிப்போது நான் செய்கிற சபதத்தைக் கேள். இங்குள்ளவர்களும் தேவர்களும் ரிஷிகளும் கேட்கச் சொல்லுகிறேன். என் பிதாவுக்காக இராஜ்யத்தை முன்னமே விட்டுவிட்டேன். எனக்குச் சந்ததி யுண்டாகமலிருக்கும் பொருட்டு நான் விவாகம் செய்வதில்லை. நான் பிரமசாரியாகவே யிருக்கிறேன். இது நிச்சயம், சத்தியம். உன் பெண்ணை யென் பிதாவுக்குக் கொடு என்றார். செம்படவன் இனி எனக்கு யாதொரு ஆக்ஷேபணையுமில்லை. "என் பெண்ணைக் கொடுக்கிறேனென்றான். அப்போது தேவர்கள் நாங்கேயர்மேல் புஷ்ப வருஷம் பொழிந்து இன்று முதல் உன்போ பீஷ்மர் என்று வழங்கக்கடவது என்றார்கள். பீஷ்மர் அந்தப் பெண்ணையும் அழைத்துக்கொண்டு அஸ்தினபுரம் வந்து சேர்ந்தார். அதைக் கண்ட அரசர்கள் எல்லாரும் பீஷ்மருடைய அரிய பெரிய செய்கைக்காக அவரை வாயாரப் புகழ்ந்தார்கள். சந்தனு அதைக் கேட்டு மனம் வருந்தினன் பிறகு தன் புத்திரனுக்கு அவன் நினைத்தபோது மரணம் வரக்கடவது என்று வரம் கொடுத்துச் சத்தியவதியை மணம் புரிந்து கொண்டான். பீஷ்மரை நோக்கி உன்னிடத்தில் எமனுக்கு அதிகாரமில்லை. நீ நினைத்தபோது மரணமடைவாய். உலகத்தில் நீ எவ்வளவு காலம் இருக்க விரும்புவாயோ அது வரையில் உலகத்தில் இருக்கலாம் எனறு வரங் கொடுத்தான்.

108-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

அது முதல் சந்தனு மனம் மகிழ்ந்து சத்தியவதியோடு கூடி வாழ்ந்தான். சத்தியவதிக்கு சித்திராங்கதனென்றும், விசித்திர வீரியனென்றும் இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள் சந்தனு கொஞ்ச காலத்துக்கெல்லாம் சொர்க்கம் போய்ச் சேர்ந்தான். பீஷ்மர் சித்திராங்கதனுக்கு முடி சூட்டினார். சித்திராங்கதன் எல்லா அரசர்களையும் கீழ்ப்படுத்தினான். சித்திராங்கதனென்ற ஒரு கந்தர்வன் அவனை யெதிர்த்து, நீ என் பெயரை வைத்துக்கொண்டிருக்கிறாய் யுத்தத்துக்கு வா. அதற்கு இஷ்டமில்லா விட்டால் உன் பெயரை மாற்றிக்கொள் என்றான். சித்திராங்கதன் கந்தர்வனோடு போர் புரிய உத்தேசித்து ஹிரண்யவதி நதிக்கரைக்குச் சென்றான். குரு க்ஷேத்திரத்தில் இருவரும் மூன்று வருஷம் போர் புரிந்தார்கள். அந்த யுத்தத்தில் சித்திராங்கதன் சொர்க்கம் சென்றான். அப்போது பீஷ்மர் விசித்திர வீரியனுக்குப்

பட்டங்கட்டித் தாமே யிராஜ்ய பரிபாலனஞ் செய்துவந்தார். விசித்திர வீரியன் பீஷ்மருடைய சொற்படி தவறுமல் நடந்தான்.

109வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

விசித்திர வீரியன் யௌவன தசையை யடைந்தான். அவனுக்கு விவாகஞ் செய்வதைப் பற்றிப் பீஷ்மர் யோசித்துக் கொண்டிருந்தார். அப்போது காசி ராஜா தனது மூன்று புத்திரிகளுக்கும் சுயம்வரம் நியமித்திருந்தான். பீஷ்மர் அதை உத்தேசித்துத் தாமொருவராகவே காசிக்குப் போனார். அந்தப் பெண்களைக் குறித்துப் பற்பல தேச மன்னவர்கள் வந்து கூடியிருந்தார்கள். சுயம்வர மண்டபத்தில் உள்ள இராஜாக்களின் பேரை அந்தப் பெண்களுக்குச் சொல்லிக்கொண்டு வரும்போது அந்தப் பெண்கள் பீஷ்மரைக் கண்டு கிழவ ரென்று கருதித் தூர ஒதுங்கிப் போனார்கள். சபையிலுள்ளவர்களிற் சில மூட அரசர்கள் இந்தப் பீஷ்மர் ஏன் இங்கே வந்தார். பிரமசாரி யென்ற உலகமெல்லாம் பேராயிருக்க இவர் விவாகத்தைக் குறித்து வந்திருப்பது நியாயமாமோ? என்று கூறிப் பரிகாசம் பண்ணினார்கள். அதைக் கேட்ட பீஷ்மர் கோபித்து அந்தப் பெண்களே யெடுத்துத் தேரின்மேல் வைத்துக்கொண்டு அரசர்களே நோக்கி, அரசர்களே! எண்ணுகை மணத்துக்குள்ளே பலாத்காரமாகக் கன்னிகைகளைக் கொண்டுபோய் விவாகஞ் செய்துகொள்வதாகிய இராட்சச மணமே க்ஷத்திரியர்களுக்குச் சிறந்தது என்பது பெரியோர்களுடைய அபிப்பிராயம். ஆகையால் இந்தப் பெண்களே நான் பலாத்காரமாகக் கொண்டுபோகிறேன். உங்களுக்கு வல்லமை யிருந்தால் யுத்தஞ் செய்து என்னை ஜயித்துக் கன்னிகைகளை அடையுங்களென்று கூறித் தமது தேரை விரைவில் செலுத்தினார்.

அதைக் கண்ட அரசர்கள் கோபங் கொண்டவர்களாய் யுத்தத்துக்கு ஆரம்பஞ் செய்தார்கள். பீஷ்மருக்கும் அரசர்களுக்கும் பயங்கரமான யுத்த மூண்டாயிற்று. அது தேவாசுர யுத்தம் போல இருந்தது. பீஷ்மர் எதிரிகளுடைய அம்புகளைத் தடித்து, அவர்களுடைய தேர் குதிரைகளையும் கொன்று அவர்களையும் நோக அடித்து வெற்றிகொண்டு கன்னிகைகளோடு அஸ்தினபுரம்நோக்கிச் சென்றார். அதைக் கண்ட அரசர்கள் தாம் ஒருவராலும் அடிபடாமல் எதிரிகளை யடித்து வெற்றிகொண்டு போகிற பீஷ்மருடைய பராக்கிரமத்தைப் புகழ்ந்தார்கள். சால்வ ராஜன் மட்டும் அவரைப் பின்தொடர்ந்து வந்தான். அப்போது பீஷ்மருக்கும் சால்வராஜனுக்கும் யுத்தம் நேரிட்டது. சால்வன் பீஷ்மரை அம்புகளினால் மறைத்தான். அதைக் கண்ட அரசர்கள் அவனை மெச்சினார்கள். பீஷ்மர் கோபங்கொண்டு வருணாஸ்திரத்தினால் அவனது தேர்க் குதிரைகளைக் கொன்றார். அவனையும் நோக அடி

த்து வெற்றிகொண்டு பெண்களோடு அஸ்தினபுரி வந்து சேர்ந்தார், சால்வனும் தன்னகரம் போய்ச் சேர்ந்தான். பீஷ்மர் பெண்களைக் கொண்டுவந்து பின் சத்தியவதியோடு ஆலோசனை செய்து விசித்திர வீரியனுக்கு விவாகஞ் செய்ய தொடங்கினர். அப்போது மூத்த பெண்ணை அம்பை என்பவள் பீஷ்மரை நோக்கி நான் சால்வனைக் கணவனாக வரித்தேன். அவனும் அப் படியே என்னை வரித்தான். என் பிதாவும் அப்படியே சம்மதித்திருந்தார். ஆகையால் தருமம் தெரிந்த நீர் தருமப்படி நடத்தும் என்றாள். அதைக் கேட்ட பீஷ்மர் அம்பையை அவளிஷ்டபடியே சால்வ ராஜனிடம் அனுப்பி விட்டார். அம்பிகை அம்பாலிகை யென்னும் இருவரையும் விசித்திர வீரியன் பாணிக்ரஹணஞ் செய்து கொண்டான்.

அம்பை சால்வ ராஜனிடம் போனாள். அவனை பார்த்து நீ முன்னமே யென்னை வரித்தபடியால் நான் உன்னை நாடி வந்திருக்கிறேன். என்னை விவாகம் செய்துகொள் என்றாள். அவன் நகைத்துப் பெண்ணே! பீஷ்மர் அரசர்களுக்கு மத்தியில் என்னை ஜயித்து உன்னைக்கொண்டு போனார். வேறொருவனுக்கு வசமான பெண்ணை வரிக்கலாகாது. ஆதலால் நான் உன்னை விரும்பேன். நீ அங்கேயே போ என்றான். அவள் மீண்டு அஸ்தினபுரம் வந்து பீஷ்மரை நோக்கி நீர் என்னை யுத்தத்தில் ஜயித்துக்கொண்டு வந்தீர் ஆதலால் நீர்தான் எனக்குக் கணவன் என்னை விவாகம் செய்துகொள்ளுமென்றாள். பீஷ்மர் நான் பிரமசாரி விரதமுடையவன். விவாகம்செய்துகொள்வதில்லை. மற்றொரு புருஷனை விரும்பின உன்னை யென் தம்பிக்கும் மணம் புரிவிக்க எனக்குச் சம்மதமில்லை. நீ விரும்பின சால்வனிடமே போ என்றார். மறுபடியும் சால்வனிடம் போனாள். அவன் வேறொருவன் ஜயித்த வளை நான் விவாகம் பண்ணமாட்டே னென்று சொல்லி விட்டான். இப்படி ஆறுவருஷம் அலைந்து பார்த்தாள். அதன்பின் இமய மலைச் சாரலில் பாஹுதா என்னும் நதிக்கரையில் பன்னிரண்டு வருஷம் கொடுந்தவம் செய்தாள். அதைக் கண்டு தேவர்கள் பயந்தார்கள். சர்வ சக்தியுடைய சுப்பிரமண்யக் கடவுள் அவளுடைய தவத்தைக்கிரங்கி அவளுக்குப் பிரத்தியட்சமானார். அவளைப் பார்த்து, இந்தத் தாமரைப் பூமாலையை நீ பெற்றுக்கொள். இந்த மாலையை எவன் அணிந்து கொள்கிறானோ அவன் பீஷ்மரைக் கொல்வான் என்று கூறிக்கொடுத்தார்.

110-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

அம்பை அந்த மாலையை வாங்கிக்கொண்டு ரிஷிகளிடம் போய், அரசர்களே மூடனான சால்வன் என்னை வெறுத்துவிட்டான். நான் கணவனில்லாமல் வருந்துகிறேன். இந்த மாலையை அணிபவன் பீஷ்மனைக் கொல்

வான். இதை யாராவது வாங்கிக்கொள்ளுங்கள். பீஷ்மனைக் கொன்றவனுக்கு நான் மாலை யென்று சொன்னாள். பீஷ்மருக்கு பயந்த அரசகர்களில் ஒருவரும் அந்த மாலையை வாங்கிக்கொள்ள வில்லை. இப்படி ஐந்து வருஷங்கள் கடந்தன. பின் பாஞ்சால தேசத்தையாளும் ஸோமக ராஜன் சபைக்குப் போனாள். அவனைப் பார்த்து எக்ஞஸேந மஹாராஜாவே! பீஷ்மன் என்னை கெடுத்தான். அவனால் இம்மை மறுமை யிரண்டையும் இழந்தேன் நீ இந்த மாலையைப் பெற்றுக்கொண்டு பீஷ்மனைக் கொன்று என்னை காப்பாற்று என்றாள். ஸோமகனென்கிற எக்ஞஸேந ராஜன், அவளைப் பார்த்துப் பெண்ணே! நான் என் சக்திக்குத் தக்கபடி சேனை வைத்துக் கொண்டிருக்கிறேன். மற்ற அரசர்களிடமிருந்து உன்னைக் காப்பாற்ற என்னால் முடியும். பீஷ்மரை எதிர்க்கவும் அவரை ஜயிக்கவும் என்னால் முடியாது என்று சொல்லிவிட்டான்.

அம்பை அந்த மாலையை இராஜாவின் அரண்மனை வாசலில் மாட்டிவிட்டு போய் விட்டாள். துருபதனெனனும் எக்ஞஸேனன அவளைப் பின் தொடர்ந்து மாலையை எடுத்துக்கொண்டு போ என்று கூறினான் அவள் கவனியாமல் ஓடிப்போனான். போகும்போது நான் சொன்னபடியே நீ நடக்கவேண்டும். இப்படித்தான் விதியும் இருக்கிறது. விதியை வெல்ல யாரால் முடியும். இந்த மாலை யிப்படியே தானிருக்கவேண்டும். இந்த மாலையை யார்தானே யெடுத்து கழுத்தில் அணிந்த கொள்வானோ அவன் பீஷ்மரைக் கொல்வானென்று சொல்லிப் போயினாள். துருபதன் அதை ஒருவரும் தொடமாட்டார்களென்று கருதிஅதைக கவனியாமலிருந்தான். துருபதனுக்குச் சிகண்டினி என்று ஒரு பெண்ணிருந்தாள். அவள் அந்த மாலையை யெடுத்துத் தன் கழுத்தில் அணிந்து கொண்டாள். அதைக் கண்ட துருபதன் பீஷ்மருக்கு பயந்து அந்த பெண்ணைத் தள்ளி விட்டான. சிகண்டினி தவ வேஷம் பூனந்துகொண்டு கந்தமாதன பர்வதத்திலிருக்கும் இஷீகர் என்னும் பிரமசாரியினிடம் போய்ச் சேர்ந்தாள். அவருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தாள். ரிஷீசுவரர் மகிழ்ந்து அவளை தோக்கி கந்தமாதன பர்வதத்தில் விபஜனமென்னும் உற்சவம் நடக்கும். தும்புரு என்னும் கந்தர்வராஜன் வருவான். நான் சொன்னபடி அவனுக்குப் பணி செய்து அவனை மகிழச் செய். நானும் உதவி செய்கிறேன். அவன் உனக்கு நன்மை செய்வான் என்றார். அப்படியே உற்சவமும் வந்து விட்டது இரண்டு கந்தர்வர்கள் வந்திருந்தார்கள். அவர்களில் ஒருவன் சிகண்டினியைப் பார்த்து உன் ஸ்திரீ வடிவத்தை நான் பெற்றுக்கொள்கிறேன். நீ என் புருஷ ரூபத்தைப் பெற்றுக்கொள் என்றான். அவளும் சம்மதித்தாள். இருவரும் மாற்றிக்கொண்டார்கள். சிகண்டினி ஆண்பிள்ளையாய்ச் சிகண்டி என்று பேர் பெற்றாள். சிகண்டி புத்புதகம் என்னும் இடத்துக்குப் போய் அஸ்திராப்பியாசம் செய்து நிறைந்தவனானன். பின்னர் பாஞ்சால தேசம் வந்து தகப்பனை வணங்கி நீங்கள் பீஷ்மருக்கு எவ்வகையிலும் பயப்படவேண்டிய தில்லை யென்று கூறிச் சமாதானப்படுத்தினான்.

111-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

விசித்திர வீரியன் தன் பத்தினிமார்களுடன் கூடி வாழ்ந்துகொண்டிருந்தான். சிற்றின்பப் பிரியனாய் அதிலேயே முழுகிக் கிடந்தான். அந்தப் பெண்கள் இருவரும் மனமொத்து ஒருமித்து விசித்திர வீரியனுக்கு உபசரித்தனர். இப்படி ஏழு வருஷம் வாழ்ந்தபின் விசித்திர வீரியனுக்கு க்ஷயரோக முண்டாயிற்று. எவ்வகை வைத்தியமும் பலிக்கவில்லை. விசித்திர வீரியன் சந்ததியில்லாமல் சொர்க்க லோகம் சென்றான். காங்கேயர் அவனுக்குச் செய்யவேண்டிய கர்மக்களை யெல்லாம் செய்வித்தார். எல்லாரும் விசனத்தில் மூழ்கினார்கள். சத்தியவதி தன் மருமகளைத் தேற்றிக்கொண்டிருந்தாள்.

112-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

சத்தியவதி, பீஷ்மரை நோக்கிச் சொல்லுகிறான். சந்தனு மஹாராஜனுக்குப் பிண்டம், புகழ், சந்ததி எல்லாம் நீயே. விசித்திர வீரியன் சொர்க்கம் சென்றான். அவனுக்குச் சந்ததியில்லை. உனக்குத் தெரியாத தர்மமில்லை. சகலமும் உனக்குத் தெரியும். ஆகையால் நான் சொல்வதைக் கேட்டு, நீ தர்மமான விஷயத்தில் பிரவேசிக்கவேண்டும். அதாவது நீ உன் சகோதரன் மனைவிகளைக் கூடி உன் சகோதரனுக்குச் சந்ததியை உண்டாக்கு. அவ்விரண்டு பெண்களுக்கும் புத்திரனே யடைய விருப்பமிருக்கிறது. இராஜ்யத்தையும் பரிபாலிக்க வேண்டும். தர்மப்படி வீவாகஞ் செய்துகொள் என்றாள். அது கேட்ட பீஷ்மர் சொல்லுகிறார்.

தாயே! நீ கூறியது தர்மமே. ஆனாலும் நான் உன் நிமித்தம் பிரதிக்ஞை செய்துகொண்டது உனக்குத் தெரியும். நான் பூலோகத்தையும் சொர்க்க லோகத்தையும் விட்டுவிடச் சித்தமாயிருக்கிறேன். மோட்சத்தையும் விட்டு விடுகிறேன். சத்தியத்தை மட்டும் விட்டுவிட மாட்டேன் என்று கூறினார். சத்தியவதி சொல்லுகிறாள். குழந்தாய் உன் உறுதி எனக்குத் தெரியும் நீ சத்தியம் தவறமாட்டாய் என்பதில் சிச்சயம். ஆனால் ஆபத் தர்மம் ஒன்று உண்டல்லவா? அதை அனுசரித்துத் தருந்தபடி செய். மறுபடியும் பீஷ்மர் தாயைப் பார்த்துத் தாயே! தர்மத்தைப் பார். க்ஷத்திரியன் எவ்வகையிலும் சத்தியம் தவறுமலிருப்பதே புரம தருமம். நீ பிராமணருடனும் புரோஹிதருடனும் ஆராய்ந்து தக்கபடி செய் என்றார்.

113-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

தாயே! பூர்வதிலே பரசுராமா இராஜ வம்சத்தை யழித்தபோது, க்ஷத்திரிய பெண்கள் எல்லாரும் வேதமுணர்ந்த பிராமணர்களைச் சேர்ந்து புத்திரர்களைப் பெற்றுக்கொண்டார்கள். இப்படித் தர்ம சந்தானம் பெறுவதும் க்ஷத்திரிய தர்மந்தான். பூர்வத்தில் உசத்தியர் என்று ஒரு ரிஷி யிருந்தார். அவருக்கு மமதை யென்றொரு மனைவி. உசத்தியருடைய ஜ்யேஷ சகோதரர் பிருகஸ்பதி. பிரகஸ்பதி மமதையிடம் மோகம் கொண்டு சென்றார். மமதை நான் கர்ப்பக் தரித்திருப்பதால் நீர் என்னை விரும்பத்தகாது. உசத்தியருடைய புத்திரன் என் வயிற்றுக்குள் இருந்துகொண்டே வேதங்களை அத்தியயனம் பண்ணி யிருக்கிறான். உமது கர்ப்பமுமிருக்க என் வயிற்றிலிடம் போதாது என்று சொல்லப், பிருகஸ்பதி கேளாமல் அவளைக் கலந்தார். அப்போது கர்ப்பத்திலிருந்த புத்திரன் சிற்றப்பா! இவ்விடத்தில் இருவர் இருக இடமில்லை. ஆதலால் உமது வீரியத்தை விடாதேயுமென்று கூறித் தடுக்கவும் அவர் கேட்கவில்லை. கர்ப்பத்திலிருந்த குழந்தை பிருகஸ்பதி வீர்யம் வரும் மார்க்கத்தைக் காலால் அடைத்துத் தடித்து விட்டது. பிருகஸ்பதி கோபங் கொண்டு அந்தக் குழந்தையைக் குருடனு யிருக்கும்படி சபித்தார். அந்தச் சாபத்தினாலே உசத்தியருடைய குமாரன் தீர்க்கதமஸ் என்ற பேருடையவராய்க் குருடராயிருந்தார். பின் பிரத்வேஷி யென்னும் பெண்ணை மணந்து கௌதமர் முதலியவர்களைப் பெற்றார். அவர் காமதேனுவின் புத்திரனிடமிருந்து டசுக்களின் தர்மத்தைத் தெரிந்துகொண்டு அதை அனுஷ்டித்தார். அந்த அச்சிரமத்திலிருந்த ரிஷிகளெல்லாரும் அவருடைய செய்கையைக் கண்டு, இவர் வரம்பு கடந்துவிட்டாராதலால் பாபியானார். இவரை நாம் ஒழித்து விடவேண்டுமென்று சொல்லிக்கொண்டார்கள். புத்திரர்களையடைந்த கர்வத்தினாலே மனைவி கூடக் கணவனை மதிக்கவில்லை, அவர் மனைவியை நோக்கி நீ யேன் என்னை அவமதிக்கின்றா யென்று கேட்டார். அவன், கணவன் மனைவியைக் காப்பதனால் பர்த்தா வென்றும், காப்பாற்றுவதினால் பதி யென்றும் கூறப்படுகிறான். நானோ உம்மைப் போஷிக்கவேண்டியவளா யிருக்கிறேன். பிறவிக் குருடரான உம்மையும், உமது புத்திரர்களையும் போஷிக்கச் சக்தியற்றவளென்று கூறினாள். தீர்க்கதமஸ், பெண்ணே! நீ என்னை அரசனுடைய அரண்மனைக்குத் தூக்கிக்கொண்டு போனால் உனக்கு வேண்டிய அளவு பொருள் கிடைக்குமென்றார். அவள் உமது பணம் தண்பித்துக்கு ஆதாரம். ஆதலால் அது எனக்கு வேண்டாம். நானும் உம்மைப் போஷிக்கமாட்டேனென்றாள். அது கேட்ட அந்த ரிஷி இது முதல் பெண்கள் ஒரே கணவனைத்தான் அடையவேண்டும். அவனிருந்தாலும் இறந்தாலும் அவள் வேறு புருஷனை யடையக்கூடாது. அடைந்தால் பாபி

யாய் நரகத்தை யடையக் கடவனென்று சபித்தார். அந்தச் சாபத்தைக் கேட்டதும் கோபித்துப் புத்திரர்களே நோக்கிக் குழந்தைகளே யிவரைக் கங்கையாற்றில் போட்டு விடுங்கள் என்றான், புத்திரர்கள் தாயின் கட்டளைப படியே அவரை ஆற்றில் விட்டுவிட்டார்கள். அந்த ரிஷி ஓடத்துடன் கலகையில் மிதந்துகொண்டு போனார். பலி யென்னும் அரசன் நீராடவந்தான். அவ்வரசன் அவரை யெடுத்து அவரது சரித்திரத்தைக் கேட்டபின், தனக்கு புத்திரோற்பத்தி செய்யும்படி அவரை வேண்டினான். அவர் சம்மதித்தார். அரசன் தன் மனைவி சுதேஷ்ணையை இவரிடம் அனுப்பினான். அவள் அந்த ரிஷியை விரும்பாமல் தன் தாதிமகளே அவரிடம் அனுப்பினாள். அந்தச் சூத்திரப்பெண் கட்சீவான் முதலிய பதினேரு புத்திரர்களைக் கர்ப்பந்தரித்துப்பெற்றாள். அந்தப் புத்திரர்கள் வேதமோதிக்கொண்டிருந்தார்கள். அரசன் அந்தப் புத்திரர்களைக் கண்டு மகிழ்ந்து ரிஷியை நோக்கி இவர் என்னுடைய புத்திரர்களென்றான். தீர்க்கதமஸ் அரசனே! உமது மனைவி என்னை அவமதித்துத் தன் தாதியை என்னிடமனுப்பினாள். ஆதலால் இவர்கள் என்னுடைய புத்திரர்களென்றார். பின்பு பலி அம்முனிவரை வேண்டிக்கொண்டு தன் மனைவியை மறுதரமும் அவரிடம் அனுப்பினான். அவர் அவளுடைய அங்கஙகளோத் தொட்டு உனக்கு அங்கன், வங்கன், களிங்கன், புண்டரன், ஸும்மன் என்று ஐந்து புத்திரர் பிறப்பார்களென்று வரமளித்தார் இவ்வைந்து புத்திரர்களும் அரசாண்ட தேசங்கள் அவர்கள் பேரால், அங்கம், வங்கம், களிங்கம், புண்டரம், ஸும்மம் என்று பெயர் பெற்றுச் சிறந்திருக்கின்றன. இன்னும் அநேக க்ஷத்திரியர்கள் பிராமணரால் புத்திர சந்தானம பெற்றுச் சிறந்திருக்கிறார்கள். ஆகையால் இனி யோசித்துத் தக்கபடி செய் என்றார்.

114-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

மீண்டும் பீஷ்மர் சத்தியவதியை நோக்கித் தாயே! நான் சொல்வதைக் கேள். விசித்திர வீரியனுடைய சந்ததி விருத்திக்காக ஒரு பிரம்மணனைப் பார்த்துக் கொள்ளவேண்டுமென்றார். அதைக் கேட்ட சத்தியவதி சொல்லுகிறாள்.

மூழ்த்தாய்! நீ சொல்வதெல்லாம சரியே, ஆனாலும் அவை யெல்லாம் பூர்வ கால விதி. நற்காலத்துக்கேற்றதல்ல. ஆதலால் உன் ஸம்பிமனவிகளிடம் நீயே புத்திரோற்பத்தி செய்யவேண்டும். அந்தப் பெண்களுக்குச் சந்தானபாக்கியம் பெறுவதில் அதிக விருப்பமிருக்கிறது என்றாள். பீஷ்மர் தாயே! நீ சொல்வது தர்மந்தான். நான் பிரதிகளை நவறமாட்டேனென்

ரூர். சத்தியவதி குழந்தாய் சரிதான். நீ சத்தியம் தவறமாட்டாய். பரத வம்சம் சந்ததியில்லாமற் போகிறதே இதற்கென்ன செய்யலாமென்றாள். பீஷ்மர் தாயே! நீ தான் இந்தக் குலத்துக்குத் தலைவி. பெண்கள் குலத்தின் இரகசியமான வைகளைக் காப்பாற்றி வைத்தக்கொண்டிருப்பார்கள். நீ தான் யோசித்துச் சொல்லவேண்டுமென்றார். பின் சத்தியவதி சொல்லுகிறாள்.

புத்திரா நீ சொன்னது சரிதான். நானொரு விஷயம் சொல்லுகிறேன். இந்த ஆபத்து வேளையில் இரகசியத்தை மறைப்பது கூடாது. அதை கேட்ட பின் அபிப்பிராயத்தோடு கலந்து யோசித்துச் சொல்லு. நான் வசுராஜனுடைய புத்திரி. ஒரு செம்படவன் என்னை வளர்த்தான் எனக்குப் பருவம் வந்த காலத்தில் யமுனை யாற்றில் ஓடம் விட்டுக் கொண்டிருந்தேன். ஒரு நாள் பராசர மஹா முனிவர் வந்து என்னைக் கண்டு மோகித்துத், தம்மைக் கூடி ஒரு புத்திரனைப் பெற்றுத் தரும்படி வேண்டினார். அவருடைய சாபத்துக்குப் பயந்து சம்மதித்தேன். அன்று பிறந்த பிள்ளைதான் வியாசர் என்று சொல்லப படுகிறார். அவர் இப்போது மஹாரிஷி யென்று நீ யறிவாய். நான் எப்போது நினைத்தாலும் உடனே வந்து என் மனோ பீஷ்டத்தை நிறைவேற்றுகிறதாக வாக்களித்தார்; நீயும் நானும் சொன்னால் அப்படியே செய்யத் தடையிராது. என்ன சொல்லுகிறு யென்றாள். பீஷ்மர் அதைக் கேட்டுக் கைகளை அஞ்சலியாகக் கூப்பிக்கொண்டு சொல்லுகிறார்

தாயே! நீ சொன்னது எனக்குச் சம்மதந்தான். தர்ம்மானது நமது குலத்துக்கு மேன்மை தரத்தக்கது. அப்படியே தடையில்லாமல் அவரை அழை யென்றார். சத்தியவதி பீஷ்மர் சொல்லைக் கேட்டுத் தன் புத்திராகிய வியாசரை நினைத்தாள். உடனே வியாசர் அவள் கண்களுக்கு மாத்திரம் பிரத்யட்சமானார். வெகு காலத்துக்குப் பின் தன் புத்திரனைக் கண்டு மகிழ்ச்சியும் வியசனமும் அடைத்து, அவரை முறைப்படி பூஜித்து, அவரை ஆலிங்கனஞ் செய்துகொண்டு கண்ணீர் விட்டழுதாள். வியாசர் தம் தாயைத் தேற்றிப் பின் சொல்லுகிறார். அமமா! உன் விருப்பத்தை நிறைவேற்றத்தான் வந்திருக்கிறேன். உனக்கு என்ன விருப்பமோ அதைச் சொல்லு. தடையில்லாமல் செய்கிறேன் என்றார். புரோஹிதர் விதிப்படி வியாசருக்குப் பூஜை செய்தார். வியாசர் அதை அங்கோரம் பண்ணிக்கொண்டார். பின் சத்தியவதி சொல்லுகிறாள். குழந்தாய்! புத்திரர்கள், தாய்க்கும் தகப்பனுக்கும் பொதுவாய்ப் பிறக்கின்றனர். நீ என் புத்திரன். விசித்திர வீரியன் இரண்டாவது புத்திரன். பீஷ்மனைப் போல நீயும் தாய்வழியில் விசித்திர வீரியனுக்குச் சகோதரன். விசித்திர வீரியன் சந்ததியில்லாமல் மரித்தான். அவனுக்கு அழகிற் சிறந்த இரண்டு மனைவிகளுண்டு. அவர்கள் சந்ததியை விரும்புகிறார்கள். சந்ததி வம்சம் விருத்தியாகும் பொருட்டு, நானும் பீஷ்மனும் கட்டளை யிடுவதை மேற்கொண்டு அப்பெண்களிடத்தில் சந்ததியை உண்டாக்கு

என்றாள். வியாசர் தாயே அப்படியே செய்கிறேன். விரதானுஷ்டானமில் லாத பெண்களை என்னைத் தொடலாகாது. நான் சொல்லுகிறபடி அவ்விரு பெண்களும் ஒரு வருஷம் வரை விரதம் அனுஷ்டிக்கவேண்டும். அப்படிச் செய்தால் அவர்களுக்கு சூரியனையும், வருணனையும் போன்ற புத்திரர்கள் பிறப்பார்கள் என்றார். சத்தியவதி, புத்திரனே! அரசனில்லாமல் இராஜ் யம் சீர்குலைகின்றது. ஆதலால் சீக்கிரத்தில் புத்திரனுண்டாகும் மார்க்கத்தை தேடு என்றாள். வியாசர் அகாலத்தில் புத்திரோத்பத்தி வேண்டுமானால் அந் தப் பெண்கள் என் சொரூபத்தையும், சரீரவாசனையையும் பொறுத்திருக்க வேண்டும் அம்பிகை அலங்காரம் பண்ணிக்கொண்டு என் வருகைக்காகப் படுக்கையில் காத்திருக்கவேண்டும் என்று சொல்லி மறைந்து போனார்.

சத்தியவதி அம்பிகையைத் தனியாக அழைத்து, நான் கருமத்தை உத் தேசித்துச் சொல்வதைக் கேள். அதிர்ஷ்ட ஈனத்தினால் நமது பரதவம்சத் துக்குக் குறைவு சேரிட்டிருக்கிறதல்லவா? என் விசனத்தையும் வம்ச விருத்தி யையும் ஆராய்ந்து பீஷ்மனிடம் சொன்னதைச் சொல்லுகிறேன். அதைக் கேட்டு அதன்படி நடந்து என் விசனத்தை ஒழி. நமது வம்சத்தை விருத்தியாக்கு. இந்திரனுக்கு சமானமான புத்திரனைப் பெறு. அவன் தான் இந்த இரா ஜ்யத்தைப் பரிபாலிக்கவேண்டுமென்று கூறி அவளை உடன்படச் செய் தாள்.

115-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

பின் தகுந்த காலத்தில் அம்பிகையை அலங்கரித்துப் படுக்கையில் இருத் தி, உனது மைத்துனன் வருவார். அவருக்காகக் காத்திருந்து அவரைத் தழுவு என்று சொன்னாள். அம்பிகை மாமியார் சொற்படியே படுக்கையில் படுத்துக்கொண்டு தன் வம்சத்து வீரர்களானவர்களையும் பீஷ்மரையும் நினைத் துக்கொண்டே யிருந்தாள். நடு ராத்திரியில் வியாசர் வந்தார். தாயின் உத் தரவுப்படி அம்பிகை யிடம் போனார். அவருடைய விகார ரூபத்தைக் கண்ட அம்பிகை இரண்டு கண்களையும் மூடிக்கொண்டாள். வியாசர் தாயாரின் கட்டளையை நிறைவேறறக் கருதி, அவளைக் கலந்தார். அவர் வெளியில் வந்த போது சத்தியவதி அவரை விசாரித்தான். வியாசரிஷி, அம்மா! ஒரு மஹாத் மாவான புத்திரன் பிறப்பான். அவனுடைய தாய் தவறு செய்தாள். அத னால் அந்தப் புத்திரன் கண்ணில்லாத குருடனாய்ப் பிறப்பான். அவனுக்கு நூறு புத்திரர்களுண்டாவார்க ளென்றார். சத்தியவதி அப்படியானால் இரா ஜ்யத்தைப் பரிபாலிக்கத்தக்க மற்றொரு புத்திரனை உதவு. அம்பிகைக்கு இளையவளான அம்பாலிகை யென்று பெயருள்ள மற்றொரு மனைவி உன் சகோதரனுக்குண்டு. அவளிடம் நல்ல புதிரனை உண்டாக்கு என்றாள். வியா

கர் ஒத்துக்கொண்டு போனார். வியாசர் சொன்னப்படி அம்பிகை குருட்டு புத்திரனைப் பெற்றாள். பின் சத்தியவதி வியாசரை அழைத்து அம்பாலிகை யிடம் புத்திரனை உண்டாக்கு என்றாள். அம்பாலிகை மாமியார் சொற்படி படுக்கையில் உட்கார்ந்துகொண்டு, யார் வருவாரோ வென்று சிந்தித்துக் கொண்டிருந்தாள். வியாசர் வந்தவுடன் அவரைப் பார்த்துப் பயத்தினால் உடம்பு வெளுத்தாள். பின் வியாசர் அவளைப் பார்த்து நீ என்னைக் கண்டு உடம்பு வெளுத்துப் போனபடியால் உனக்குப்பிறக்கும் புத்திரனும்வெண்மையாகவே யிருப்பான். அவனுக்குப் பெரும் பாண்டு என்றே வழங்கும் என்று சொல்லி வெளியில் வந்தார். சத்தியவதி வியாசரைப் பார்த்து இந்தக் குமாரன் எப்படி யென்றாள். அவன் நிறம் வெண்மையா யிருப்பான். அதுவும் தாயின் தவறே யாம். அந்தப் புத்திரன் மஹா பராக்கிரமசாலியா யிருப்பானென்று கூறி னார். சத்தியவதி மற்றொரு புத்திரனை அளிக்கவேண்டு மென்றாள். அவர் உடன்பட்டார். சரியான காலத்தில் அம்பாலிகை பாண்டுவைப் பெற்றாள். பீஷ்மா அவ்விரு புத்திரர்களுக்கும் ஜாத கர்மாதிகளைச் செய்து வளர்த்தார்.

பிறகு சத்தியவதி வியாசரை அழைத்து, அம்பிகையினிடத்தில் மற்றொரு நல்ல புத்திரனைக் கொடு என்றாள். அவர் சம்மதித்தார் சத்தியவதி அம்பி கையைத் தெளிவித்து வியாசரிடம் அனுப்பினாள். அவள் அப்படிச் செய்ய வில்லை. தன்னுடைய வேலைக்காரியை அனுப்பினாள். அவள் வியாசரைக் கண்டவுடன் மனமகிழ்ந்து, அவரை வணங்கி உபசரித்து அவரை மகிழ்வித்துக் கலந்தாள். வியாசர் அவளைப் பார்த்து உலகமெல்லாம் புகழும்படியான ஒரு புத்திரன் பிறப்பான். அவன் பிரஜ்ஞாவியா யிருப்பான். நீயும் அடிமைத் தனம் நீங்கிச் சுகப்படுவா யென்று கூறிப் போனார். தன் தாயாருக்கும் சமா சாரத்தைத் தெரிவித்துவிட்டுப் போனார். பின்பு அந்தச் சூத்திரப் பெண்ணி னிடத்தில் தர்மராஜன் விதுரராகப் பிறந்தான்.

116-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

ஜனமேஜய மஹாராஜா, வைசம்பாயனரைப் பார்த்துத், தர்மதேவதை என்ன தப்புச் செய்தான்? எந்த மஹா ரிஷியின் சாபத்தால் சூத்திரனுக்குப் பிறந்தான் என்று கேட்க வைசம்பாயனர் சொல்லுகிறார்.

சகல தருமங்களையும் அறிந்து தவத்தில் சிறந்தவராகிய மாண்டவ்யர் என்ற ஒரு ரிஷி யிருந்தார். அவர் தவஞ் செய்துகொண்டு மௌனவிரதமாயி ருந்துகொண்டிருந்தார். ஒரு நாள் சில திருடர்கள் கொள்ளையிட்டுக்கொண்டு போகையில் காவற்காரர்கள் தொடர்ந்தார்கள். திருடர்கள் ரிஷி ஆசிரமத்திற் சொத்துக்களை வைத்துவிட்டு அங்கேயே பதுங்கிக்கொண்டிருந்தார்கள்

பின்தொடர்ந்து வந்த காவலாளிகளும் அங்கே வந்து புகுந்து பார்க்கையில் ரிஷியை நோக்கித், திருடர்கள் எப்படி போனார்கள் என்று கேட்டார்கள். ரிஷி பதில் சொல்லாமலிருந்தார். காவற்காரர் அச்சிரமம் முற்றும் தேடிப் பார்த்துப் பொருளையும் திருடருளையும் கண்டு பிடித்தார்கள். அதனால் ரிஷி மேல் சந்தேக முண்டாயிற்று. காவற்காரர்கள் திருடர்களையும் ரிஷியையும் பிடித்துக்கொண்டுபோய் இராஜாவிடம் விட்டார்கள். அரசன் யோசனை யின்றி அவரைக் கழுவிலேற்ற உத்தரவளித்தான் அப்படியே மாண்டவ்யரைக் கழுவிலேற்றினார்கள். அவர் நெடுங்காலம் கழுவில் சாகாமல் தவஞ் செய்து கொண்டிருந்தார். பின் ரிஷி கணங்களைச் சிந்தித்தார். ரிஷி கூட்டங்கள் பட்சி யுருவங்கொண்டு அவரிடம் வந்து கூடினார்கள். வந்தவர்கள் ரிஷியை நோக்கி இங்கக் கொடுந்தண்டனை யடையும்படியாக என்ன பாபஞ் செய்தீர். அதைச் சொல்லுமென்று கேட்டார்கள்.

117-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

மாண்டவ்யர் நான் ஒருவருக்குத் தீங்கு செய்யவில்லை யென்றார். பின்பு ஒரு நாள் காவற்காரர்கள் அரசனிடம் போய் ரிஷி சாகாமல் தவஞ் செய்கிறதைச் சொன்னார்கள். அரசன் உடனே ரிஷியிடம் வந்து நான் தெரியாமற் செய்ததைப் பொறுக்கவேண்டுமென்று பிரார்த்தித்தான். அவரும் பொறுமை காட்டினார். பிறகு ரிஷீசுவரரைக் கீழே யிறக்கிச் சூலத்தை யெடுக்கப் பார்த்தான். எடுக்க முடியாமையால் அடியில் வெட்டிவிட்டான். அந்த ஆணியுடனிருந்தமையால் அவருக்கு ஆணிமாண்டவ்யர் என்று பெயராயிற்று. அந்த ஆணி புஷ்பக்குடலை மாட்ட உபயோகமாயிற்று. அவர் தர்ம ராஜாவாகிய எமனிடம்போய் அவனைக் கண்டு, நீ எனக்கு இப்படிப்பட்ட தண்டனை விதிக்கக் காரணமென்ன என்று கேட்டார் தர்மராஜர் ரிஷியை நோக்கி நீர் பட்சிகளைப் பிடித்து ஊசியில் குத்தினீர். அதற்காக தண்டனை விதிக்கப் பட்டதென்றார். மாண்டவ்யர் எப்போது அந்த பாபத்தை நான் செய்தேனென்று கேட்டார். குழந்தைப் பருவத்திலென்று தர்ம ராஜா கூறினான். மாண்டவ்யர் பன்னிரண்டு வயதுவரையில் செய்தது பாபமாகாது. இந்தச் சிறிய குற்றத்திற்காக நீ பெருந்தண்டனை விதித்தாய். எல்லாவதையையும் விடப் பிராமணவதம் பெரியது. ஆகையால் நீ பூலோகத்தில் சூத்திரனாக ஜனிக்கக் கடவாயென்று சபித்தார். பின் இன்று முதல் பாபத்துக்கு ஒரு எல்லை குறிக்கிறேன். பதினாலு வயது வரையில் செய்யப்படுவது பாபமாகாது. அதற்குமேல் செய்வதே பாபமாகும் என்று வரை யறத்துக் கூறினார். மாண்டவ்ய ரிஷி சாபத்தால் எமதர்மராஜன் விதுராராகப் பிறந்தான். விதுரர் சாந்தமுள்ளவர் குருவம்சத்தாருடைய க்ஷேமையையே சிந்திப்பவராயிருந்தார்.

118-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

திருதராஷ்டிரன், பாண்டு, விதுரன் மூவரும் பிறந்த பின் குருவேந்திரம் சிறப்புப் பெற்றது. அந்தக் காலம் கிருத யுகத்தைப் போலப் பாபம் அற்று பிரஜைகள் கவலையற்றுச் சுகமாக வாழ்ந்தார்கள். திருடர் பயம் மிருகபயம் முதலியன இல்லை. எல்லாரும் ஒருவரை யொருவர் நேசித்து ஒருமித்திருந்தார்கள். ஏழைகளில்லை. விதவைகள் இடையாது. பீஷ்மர் ஸ்தாபித்த தர்ம சக்கரம் சதா சுழன்று கொண்டிருந்தது. எங்கும் தேவாலயங்களும் யூபஸ்தம்பங்களுமாயிருந்தன.

பாண்டு, விதுரர் முதலானவர்களுக்குப் பீஷ்மர் சகல சாஸ்திரமும் கற்பித்துவைத்தார். வேதாத்தியயனம் செய்வித்தார். அவர்கள் தனுர்வேதத்திலும் பிரசித்தியடைந்தார்கள். ராஜ நீதிகளில் கரை கண்டவரானார்கள். எல்லா விஷயங்களிலும் ஒப்புயர்வற்றிருந்தார்கள். பிறகு பீஷ்மர் திருதராஷ்டிரனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்தார். சகல சாஸ்திரங்களிலும் வல்லவனுகிய பாண்டுவைச் சேனாபதியாக்கினர். அக்காலத்தில் பாண்டு வில்வித்தையில் எல்லாருக்கும் மேலானவனுயிருந்தான் விதுரரை மந்திரியாக்கினர். விதுரரைப் போல ஞானியும் தர்மிஷ்டரும் திரிலோகங்களிலும் இடையாது. கிரமத்தில் பாண்டுவே அரசனுக இருந்தான். பிறகு பீஷ்மர் திருதராஷ்டிரன் முதலியவர்களுக்கு விவாகம் புரிய உத்தேசம் பண்ணினர் விதுரரோடு ஆலோசனை செய்தார். காந்தார தேசத்தரசனுக்கொரு பெண்ணிருப்பதாகவும், அவள் நூறு பிள்ளைகளைப் பெறும்படி பரமசிவனிடம் வரம் வாங்கியிருப்பதாகவும் கேள்விப்பட்டுக், காந்தார ராஜாவுக்கு ஒரு தூதனை அனுப்பினர். அந்த இராசனுடைய சுபலன் திருதராஷ்டிரனுக்குக் கண்ணில்லை யென்பதைப் பற்றி விருப்பமில்லை. ஆனாலும் கொடுக்க சம்மதித்தான். அதைக் கேட்ட காந்தாரி என்ற அந்தப் பெண் ஒரு வஸ்திரத்தினுல் தன் கண்களைக்கட்டி மறைத்துக்கொண்டாள். அவளுடைய சகோதரனுன சகுனி அவளையும் அழைத்துக்கொண்டு குரு நாடு வந்து சேர்ந்தான். பீஷ்மர் காந்தாரியை திருதராஷ்டிரனுக்கு விவாகம் செய்து வைத்தார். காந்தாரி தன் நடக்கையாலும் பதிவிரதா தர்மத்தினுலும் எல்லாருக்கும் சந்தோஷ முண்டாக்கினுள். தன் கண்ணை மறைத்துக் கொண்டதனுல் தன் புருஷனுக்குச் சமானமுள்ளவளாய், எவ்விஷயிலும் அவனுக்கு மாறுபடாமல் நடந்து வந்தாள். காந்தார ராஜன் தன்னுடைய மற்றப் பத்து புத்திரிகளையும் திருதராஷ்டிரனுக்குக் கொடுத்தான்.

120-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

வசுதேவருக்குப் பிதாவான சூரனுக்குப் பிருதை யென்றொரு பெண் பிறந்தாள். சூரன் அவளைக் குந்திபோஜனுக்குத் தத்தாகக் கொடுத்தான். அவள் அங்கே வளருகையில் துர்வாஸருக்குத் தவறில்லாமல் பணிவிடை செய்ததனால் அவர் ஒரு மந்திரத்தை உபதேசித்தார். உனக்குச் சக்தி வேண்டியபோது இந்த மந்திரத்தை உச்சரித்து எந்தத் தேவதையை நினைத்தாலும் அந்தத் தேவதை பிரத்தியட்சமாய்த் தன்னைப் போன்ற புத்திரனை உனக்குத் தருமென்றும் கூறிப் போனார். பிறகு குந்தி கன்னிகையாயிருக்கும்போதே சூரியனை யழைத்தாள். சூரியன் பிரத்தியட்சமானான். குந்தி நீர் யார் என்று கேட்டாள். சூரியன் நான்தான சூரியன். நீ அழைத்தபடியால் உனக்குப் புத்திரனை யளிக்க வந்தேன் என்றான். குந்தி நான் கன்னிகையாயிற்றே என்றாள். சூரியன் நீ பயப்படாதே. உனக்கு ஒரு கெடுதியும் வராது. என்னைப் போன்ற ஒரு புத்திரன் பிறப்பான். அவன் மஹா தியாகியாவான். ஒருவராலும் ஜயிக்க முடியாதவனாயிருப்பான். நீ மறுத்தால் உன் குலத்தையும் உனக்கு வரமளித்த ரிஷியையும் எரித்துவிடுவேனென்றான். குந்தி நான் கன்னிகையாயிருக்கிறேன். கன்னிகையின் தர்மத்தைக் கைக்கொண்டிருக்கிறேன். அதைக் கெடுப்பது உமக்கு நீதி யல்ல என்றாள். சூரியன் என்னுடைய அனுக்கிரகத்தினால் உனக்குப் புத்திரன் பிறந்த பின் கன்னிகையே ஆய்விடுவாய் என்று கூறிச் சமாதானப்படுத்திக் கலந்தான். உடனே குந்திக்கு கவசகுண்டலங்களுடனே கூடக் கர்ணன் பிறந்தான். மறுபடியும் குந்தி கன்னிகையாயினாள் பின் சூரியன் போய்விட்டான். குந்தி புத்திரனைக் கண்டு மனம் வருந்திச், சுற்றத்தாருக்குப் பயந்து, ஒரு பெட்டியில் நிரம்ப இரத்தினத்தை வைத்து, அதில் அந்தப் பிள்ளையையும் வைத்துக் கங்கையில் விட்டுவிட்டாள். ராதையின் கணவனாகிய சூதன் அந்தப் பெட்டியை யெடுத்து அந்தக் குழந்தையைத் தன் புத்திரனைக் கருதி வளர்த்தான். இவன் தனத்துடன் வந்து சேர்ந்தமையால் இவனுக்கு வஸுஷேணனென்று பேரிருக்க வேண்டுமென்று கூறினான். அந்தக் குமாரன் சகல அஸ்திர சஸ்திரங்களிலும் வல்லவனாயினான். பிராமணர்கள் விரும்பின எல்லாவற்றையும் தானமாகக் கொடுத்துக் கீர்த்திப் பெற்றான். ஒரு நாளிரவில் சூரியன் பிராமண ரூபமாகத் தோன்றி விடிந்த பின் தேவேந்திரன் பிராமண ரூபங்கொண்டு வருவான். உன்னுடன் பிறந்த கவசகுண்டலங்களைக் கேட்டபான். அப்போது நான் சொன்னதை நினைத்துக்கொள் என்றான். கர்ணன், ஐயா! தேவேந்திரன் வந்து யாசித்தால் அவனை மறுக்க முடியாது என்றான். பிராமணன் அப்படியானால், இந்திரனும் உனக்கு ஒரு வரங்கொடுப்பான். சத்துருக்களைக் கொல்லுகிற சத்தியாயுதத்தைக் கேளென்று சொல்லி மறைந்து போனான். கர்ணன் விழித்துக் கொண்டு அந்தக் கனவைச் சிந்தித்துக்கொண்டிருந்தான். விடிந்த பின் இந்தி

ரன் வந்து கவசகுண்டலங்களை யாசித்தான். கர்ணன் மனதில் வருத்தமில்லாமல் தன் விலாப்புறத்தை யறுத்துக் கவசத்தை யெடுத்து இந்திரனை வணங்கிக் கொடுத்தான். இந்திரன் மனமகிழ்ந்து வாங்கிக்கொண்டு. தேவர்கள், அசுரர்கள் கந்தர்வர்கள் முதலியவர்களில் கூட இப்படிப்பட்ட காரியம் செய்கிறவனில்லை. ஆதலால் நீ விரும்பின வரத்தைக் கேள் என்றான். கர்ணன் சத்துருக்களைக் கொல்லத்தக்க ஒரு சக்தியாயுதம் தரவேண்டுமென்றான். இந்திரன் அப்படியே கொடுத்து, இதை எவன் மேலெறிந்தாலும் அவன் தப்பாமல் சாவான் ஒரு சத்துருவைக் கொன்றுவிட்டு என்னிடம் வந்து விடும் என்று கூறி மறைந்து போனான். இந்த அரிய செய்கையால் அவன் கர்ணன், வைகர்த்தனன் என்கிற பேர்களையும் பெற்றான்.

121-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

குந்தி அழகாலும், குணங்களாலும், நடக்கையாலும் சிறந்தவளாக வினங்கினாள். அநேக அரசர்கள் அவளைக் கேட்டார்கள். குந்திபோஜன் அவளைச் சுயம்வரத்தில் கொடுக்க நினைத்துப் பறை சாற்றினான். அநேக அரசர்கள் வந்திருந்தார்கள். குந்தி பாண்டு மஹாராஜனுக்கு மாலை சூட்டினாள். பிறகு குந்திபோஜன் முறைப்படி விவாகம் நடத்தினான். தன் பெண்ணுக்குச் சீதனமாக அளவற்ற செல்வம் கொடுத்தான். பாண்டு தன் மனைவியோடு அஸ்தினாபுரம் போய்ச் சேர்ந்தான். குந்தி பட்டமகிஷியானாள்.

122வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

பிறகு பீஷ்மர் பாண்டுவுக்கு இன்னொரு விவாகஞ் செய்விக்கக் கருதி மந்திரிகளும் பிராமணர்களும சூழ மத்திர தேசம் போனார். மத்திர ராஜன் பீஷ்மரை யெதிர்கொண்டழைத்துத் தகுந்தபடி பூஜை செய்தான். பின் வந்த காரியம் யாது என்று கேட்டான். பீஷ்மர், அரசனே, உன் சகோதரி அழகினாலும், குணத்தினாலும் சிறந்த பதிவிரதை யென்று கேள்விப்பட்டேன். அந்தக் கன்னிகையைப் பாண்டுவுக்குக் கேட்க வந்தேன். நமக்கு சம்பந்தஞ் செய்துகொள்வதுந் தகுந்தது. யோசித்துச் சொல் என்றார். மத்திர ராஜன் பீஷ்மரை நோக்கி, உமது சம்பந்தமெனக்குக் கிடைக்கத் தகாதது. எனக்கு யாதோரு ஆக்ஷேபணையுமில்லை. ஆனால் பெரியோர்கள் வழக்கத்தை மறுக்க எனக்கு இஷ்டமில்லை. அதென்ன வென்றால் கன்னியா சுல்கமில்லாமற் கொடுப்பதில்லை யென்று சொன்னான். பீஷ்மர் சம்மதித்து அவனுக்கு அள

வற்ற திரவியமும், யானை, குதிரைகளும் கொடுத்தார். சல்லியராஜன் அவற்றைப் பெற்றுக்கொண்டு தன் சகோதரியை அலங்கரித்துப் பீஷ்மரிடம் கொடுத்தான். பீஷ்மர் நல்ல முகூர்த்தத்தில் மாத்திரியைப் பாண்டுவுக்கு விவாகஞ் செய்வித்தார். பாண்டு மூப்பது நாள் இரு மனைவிகளுடனும் வசித்துப் பின் திக்கு விஜயத்தைக் குறித்துப் புறப்பட்டான். பெரியோர்களால் ஆசீர்வதிக்கப் பெற்றுச் சுப முகூர்த்தத்தில் நால்வகைச் சேனையுடன் பிரயாணமானான். முதலில் தசார்ண தேசத்தரசர்களை வென்று கீழ்ப்படுத்தினான். பின் மகததேசத்தரசனுடைய யதீர்க்கன் என்பவனை யுத்தத்தில் கொன்றான். அங்கிருந்து மிதிலைக்கு போய் விதேக ராஜர்களை வென்றான், காசிராஜனையும் ஸும்மதேச ராஜனையும் வென்றான். எதிர்த்து வந்த அரசர்களை யெல்லாம் வென்று தன் வலியில் நிற்கும்படி செய்தான். அரசர்களெல்லாரும் பாண்டுவை வணங்கித் தங்கள் தங்கள் தேசங்களில் சிறந்த பொருள்களையும், யானை, குதிரை, கோவேறுகழுதை முதலியவைகளையும் அளவில்லாத திரவியங்களையும் கப்பமாகக் கொண்டுவந்து கொடுத்தார்கள். பாண்டு அவற்றை யெல்லாமெடுத்துக் கொண்டு அஸ்தினபுரம் வந்து சேர்ந்தான். சந்தனு, பரதன் அவர்களாலுண்டான புகழ் மறைத்து போயிற்று. பாண்டு மஹாராஜாவினால் மீண்டும் தழைத்தோங்கியதென்று எல்லாரும் கொண்டாடினார்கள். எல்லாரும் எதிர்கொண்டு அழைத்து வந்தார்கள். அவன் கொண்டுவந்த பொருள்களைக் காண்பதற்காகப் பீஷ்மர் முதலியவர்கள் போனார்கள். அந்தச் செல்வத்துக்கு எல்லையை ஒருவரும் காணவில்லை. பீஷ்மர் சத்துருக்களை ஜயித்து பிரதாபத்துடன் வந்த தமது புத்திரனுடைய பாண்டுவைத் தழுவிக்கொண்டு சந்தோஷித்தார். பாண்டு எல்லாருக்குந் தக்கபடி மரியாதை செய்தான். பீஷ்மர் சகலவித வாத்தியங்களும் முழங்கப் பட்டணத்தார் சூழ நகரத்துக்குள் அழைத்துகொண்டு போனார்

123-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

திருதராஷ்டிரனுடைய அனுமதியின்மேல் பாண்டு தான் கொண்டுவந்த திரவியத்தைப் பீஷ்மர், சத்தியவதி, தன் தாயார். விதுரர் முதலியவர்களுக்குக் கொடுத்து மகிழச் செய்தான். அந்த ஐசுவரியத்தினால் திருதராஷ்டிரன் அதிகோயாகங்கள் செய்தான். பின் பாண்டு தன் இரண்டு பத்தினிகளோடு வனத்தில் சஞ்சாரத்தக்கொண்டிருந்தான் அப்போது அவ்வனத்திலுள்ளவர்கள் குந்தி மாத்திரியோடு கூடிய பாண்டுவைத் தேவனென்று புகழ்ந்தார்கள். பாண்டுவுக்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் திருதராஷ்டிரன் தினந்தோறும் அனுப்பிக்கொண்டு வந்தான். ஒரு நாள் வேட்டையாடுகையில் கலவி செய்துகொண்டிருந்த ஒரு மானைக் கண்டான். அந்த ஆண் மானையும்

பெண் மானையும் அம்பாலடித்தான். கிந்தமன் என்ற முனிவர் மான் வடிவங் கொண்டு மானிவியோடு புணர்ந்தார். அவரைத்தான் பாண்டு அடித்து வீழ்த் தினான். அவர் வீழும்போது பாப காரியங்களையே செய்கிறவர்கள் கூட இப் படிபட்ட காரியத்தைச் செய்ய மாட்டார்கள். உயர்ந்த வம்சத்திற் பிறந்த அரசனே! உனக்கேன் இந்தத் தூர்ப்புத்தி தோன்றிற்று என்றார். மானே! என்னை யேன் கிந்திக்கிறாய்? சத்துருக்களைக் கொல்வதும் வேட்டையாடி மிரு கங்களைக் கொல்வதும் க்ஷத்திரியருக்குரிய தர்மமாம். நான் க்ஷத்திரிய தர்மத் தையே செய்தேன். ஆதலால் நான் குற்றமற்றவன். என்னை கிந்திப்பது தகுதியல்ல வென்றான். முனிவா அரசனே! நீ வேட்டையாடி மிருகங்களைக் கொல்வதை நிந்திக்கவில்லை. என்னை அடித்ததற்காகவும் நிந்திக்கவில்லை. எந்த ஜந்துவையும் புணரும் காலத்தில் கொல்வது பாபமேயாம். புணர்ச்சி முடிகிறவரைக்கும் நீ காத்திருக்கவேண்டும். நான் சந்ததி யுண்டாக்கும் பொ ருட்டு இந்த மானுடன் புணர்ந்தேன். சந்ததி விருத்தியைக கெடுத்துவிட் டாய். இப்படிபட்ட செய்கைசெய்கிற துஷ்டரீகளை நீ தண்டிக்கவேண்டிய வன். நீ இந்தக் காரியம் செய்தது தகாது. ஆகையால் நீயும் உன் மானவி யோடு புணர்ந்து இன்பம அனுபவிக்கும்போது மரணம் சம்பவிக்கும். எந்த மானவியோடு கூடுகிறாயோ அவளே உனக்கு மிருத்தியுவாயும்,உன்னை யம பர த்துக்குப் பின் தொடர்ந்து வருகிறவளாயுமிருப்பாள் என்று கூறிக் கிந்தம முனிவர் உயிரை விட்டார்.

124-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

பாண்டு அந்த முனிவரை அடக்கஞ் செய்தான். பின் மனதில் மஹா வருத்தமுற்றான். உயர்ந்த குலத்தில் பிறந்தவர்களும் காமத்தால் மயல்கி அழிகின்றார்கள். என் தந்தையும் அப்படித்தான் இறந்தார். இப்போது நான் தர்மத்தை விட்டு வேட்டையாடித் தீராத் துன்பத்தை யடைந்தேன். இனி மோட்சத்தை யடைய விரும்புகிறேன். வியாசா செயலே நான் கைப்பற்றிக் கொடுக் தவம் புரிவேன். விருப்பு வெறுப்பு, இன்பதுன்பம், இகழ்ச்சி புகழ்ச்சி, சீதம் உஷ்ணம் எல்லாவற்றையும் சமமாகக் கருதுவேன். ஒரு ஜீவனுக்குந் துன்பஞ் செய்வதில்லை. ஓங்காரத்தை ஒடுக்க வேண்டும். ஐந்து பத்து வீடுக ளில் பிக்ஷை யெடித்துப் புசிப்பேன். பிக்ஷை கிடையாவிட்டால் உபவாசமிருப் பேன். முதல் பிக்ஷை கிடையாமற் போனால் வேறு இடங்களில் பிக்ஷை யெடுக்க மாட்டேன். ஒரு கையை வெட்டுகிறவனையும், மற்றொரு கையைச சந்தன முதலியவற்றால் உபசரிப்பவனையும் சமமாகப் பார்ப்பேன். அரித்திய பொருள்களில் மனதைச் செலுத்தாமலும இந்திரியங்களை விஷயங்களில் செல்லவிடாமலும் அடக்கிக்கொள்வேன். இப்படியாக மோட்சநெறியில்

ன்று மீதியாயுள்ள ஆயுளைக் கழிப்பேன். உலக சுகத்தை விரும்பி அவமான வெகுமானங்களைக் கருதாமல் ஈன ஜீவனம் செய்கிறவன் நாய்க்குச் சமானம். அப்படி நடக்க எனக்குப் பிரியமில்லை என்று சித்தித்தக்கொண்டு பின் தன் மனைவிகளைப் பார்த்துச் சொல்லுகிறான்.

நீங்கள் அஸ்தினபுரம் போய அங்கே வசிக்கிற ஜனங்கள், என் தாய் விதுரர், பீஷ்மர், திருதராஷ்டிர மஹாராஜா, ஸத்தியவதி, மற்றுமுள்ள பந்துக்கள் எல்லாருகளும் நான் சக்கியாசி யானேனென்று சொல்லுங்கள் என்றான். அவர்கள் மஹா ராஜாவே! துறவியாக வேண்டுவதில்லை. எங்களுடன் கூடி யிருந்தே தவம் புரியும்படியான வேறு ஒரு ஆசிரமம் இருக்கிறது. ஆதலால் எங்களை கைவிடாமலிருந்து தவம் புரிந்து மோட்சம் அடையத்தக்க மார்க்கத்தை தினைபுங்கள். சொர்க்க லோகத்திலும் கூட எங்களுக்கு நீரே நாயகராக விருப்பீரென்பதில் சந்தேகமில்லை. நாங்களும் உம்மோடு கூடவே வந்து பரலோகத்தில் வசிக்கத்தக்க பெருந் தவம் செய்கிறோம். அப்படியில்லாமல் எங்களைத் துறந்து நீர் தவஞ் செய்ய விரும்பினால் நாங்கள் இப்போதே ஜீவனை விட்டு விடுகிறோம் என்றார்கள். பாண்டு அவர்களை நோக்கி உங்களுக்கு இப்படிபட்ட எண்ணமிருந்தால் நான் அப்படியே என் பிதாவாகிய வியாசரைப் போலவே கவம் புரிவேன். வானப்பிரஸ்த ஆசிரமத்தை அடைகிறேன் அந்த ஆசிரமமே பதினிகளுடனிருந்து, காய் கனி கிழங்குகளைக் கொண்டு பிதிரு சிராத்தாதியும், அக்கினி ஹோத்திரமும் செய்து முத்தி பெறும் வழியாகும் என்று சொன்னான். உடனே ஹாரகுண்டல கடக கங்கண பாகுவலயாதி ஆபரணங்களையும், கிரீடத்தையும் கழற்றி விட்டு, வேலைக்காரர்களை நோக்கி, நீங்கள் என்னுடைய ஆடையாபரணம், ஆயுதம், வாகனம் முதலியவற்றை எடுத்துக்கொண்டு போய் திருதராஷ்டிர மஹா ராஜாவிடம் ஒப்புவித்துவிட்டு, பாண்டு துறவியானான் என்று அவர்களுக்குச் சொல்லுங்களென்று கட்டளை யிட்டான். அவர்கள் பாண்டுவின் பிரிவைச் சகியாமல் கண்ணீர் விட்டழுதுகொண்டே அஸ்தினபுரம் போனார்கள். திருதராஷ்டிரன், பீஷ்மா முதலானவர்களைக் கண்டு நடந்த சமாசாரங்களை யெல்லாஞ் சொன்னார்கள். தாங்கள் கொண்டுவந்த எல்லாவற்றையும் கொடுத்தார்கள். பாண்டு மனைவிமார்களுடன் கூடி நாகசதமென்னும் மலைக்குப் போனான். பிறகு கந்தமாதன பர்வதத்தை அடைந்தான். கடைசியில் சதசிருங்கம் என்னும் மலைக்குப் போய்த் தன் விருப்பம் போலப் பத்தினிகளோடு தவம் புரிந்தான்.

125-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

அங்கே அவன் தவம் புரிவதைக் கண்டு சித்தசாரணர்களும் மகிழ்ந்தார்கள். அதங்காரத்தை அடக்கினான், மனதையும புலனையும் வென்றான், பெரி

யோர்களுக்குப் பணிவிடை புரிந்தான். சில ரிஷிகளுக்குச் சகோதரனுக்குச் சமானமாயிருந்தான். சில ரிஷிகளுக்குச் சிநேகனாக இருந்தான். சில ரிஷிகளுக்குப் புத்திரனைப் போன்றிருந்தான். தன் தபோ பலத்தினால் பிரம்ம ரிஷிக்கு ஒப்பானான். அப்போது அமாவாஸை வந்தது. அன்று தினம் ரிஷிகளெல்லாரும் பிரம்மாவைக காணச் சென்றார்கள் அவர்களோ பாண்டு பார்த்து ரிஷீசுவரர்களே? நீங்கள் எங்கே போகிறீர்கள் என்று கேட்டான் இன்றைய தினம் பிரமலோகத்தில் ஒரு சபை நடக்கிறது அதில் தேவர்களும் ரிஷிகளும் பித்ருக்களும் கூடுவார்கள். இந்தச் சபையில் பிரமதேவரைக் கண்டு தரிசிக்கப் போகிறோம் என்றார்கள். பாண்டுவும் அவர் கூடப் போகப் புறப்பட்டான். அவனைப் பார்த்துச சொல்லுகிறார்கள். இந்த மலையின் மேல் கஷ்டமான இடங்கள் அதிகம். அங்கே தேவர்களும் ரிஷிகளும் தவிர மற்றவர்கள் போகக் கூடாது. பட்சிகளும் பறவா. உன் பத்தினிகளைப்படி மேலே ஏறிச் செல்லுவார்கள். ஆகையால் நீ போகவேண்டா மென்றார்கள். பாண்டு மஹா ரிஷிகளே! நான் சொர்க்கத்தை யடைவதற்குரிய புத்திரபாக்கியமற்றவனாக இருக்கிறேன். புத்திர சந்தானமில்லாதவர்க்குச் சொர்க்கமில்லையல்லவா? என்றான். ரிஷிகள் உனக்கு புத்திரபாக்கிய மிருக்கிறது புத்தியுள்ள மனிதன் எளிதாகப் பலனை அடையலாம். நீ முயற்சி செய, நீ நிச்சயமாய் அடைவாயென்று கூறிப்போனார்கள். பாண்டு அதைக் குறித்து மிகுந்த கவலையுள்ளவனாக இருந்தான்.

126-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

தேவகன் என்ற அரசனுடைய காமக்கிழத்தியின் மகள் அழகும் யௌவனமுமுள்ளவளாயிருப்பதைக் கேட்ட பீஷ்மர் அந்தப் பெண்ணை விதுரர்க்கு விவாகம் செய்வித்தார். அவளிடத்தில் விதுரர்க்கு சற்குணமுள்ள குமாரர்கள் பிறந்தார்கள். திருதராஷ்டிரனுக்கு நூறு புத்திரர்களும், பாண்டுவுக்கு ஐந்துப் புத்திரர்களும் பிறந்தார்கள் என்று வைசம்பாயனர் சொல்ல, ஜனமேஜய ராஜா! அவர்களுடைய உற்பத்தியை விரிவாகச் சொல்லவேண்டுமென்று கேட்கச் சொல்லுகிறார்.

வியாச முனிவரைக் காந்தாரி ஆராதனை பண்ணினாள். அவளுக்குத் தன் கணவனைப் போல நூறு புத்திரர்கள் வேண்டுமென்கிற விருப்பம் இருந்தது. வியாசர் அப்படியே புத்திரர்களுண்டாகும்படி அவளுக்கு வரங் கொடுத்தார். அந்த வரத்தினால் காந்தாரி கர்ப்பந் தரித்தாள். அது கேட்ட பாண்டு தனக்கு சந்ததியில்லாமையால் வருத்தப்பட்டுத் தன் பத்தினிகளுக்குச் சொல்லுகிறான் நான் சொல்வதைக் கேளுங்கள். ஒரு மனிதன் பிறக்கும்போது தேவர்,

பிதிர், மனிதர், ரிஷிகள் நால்வருக்கும் கடனுளியாகவே பிறக்கிறான். இந்தக் கடன்களில் நின்றும் விடுபடாமலிருந்தால் அவனுக்கு நல்லகதியில்லை யென்பது சாஸ்திரங்களின் கருத்து. யக்ஞத்தால் தேவர் கடனைத் தீர்க்கவேண்டும் வேதாத்தியயனத்தால் ரிஷிகள் கடனைத் தீர்க்கவேண்டும். அன்பினால் மனிதர் கடனைத் தீர்க்கவேண்டும். புத்திரர்களைப் பெற்றுச் சிராத்தகிரியைகளை முடிப்பதால் பிதிர்கடனைத் தீர்க்கவேண்டும். நான் மூவர் கடனையும் தீர்த்து விட்டேன். பிதிர்க் கடனைத் தீர்க்கச் சக்தியற்றுப் போனேன். அதுதான் கடன்களெல்லா வற்றிலும் பெரியது. ஆகையால் என் மாதாவிடத்தில் நான் என் பிதாவுக்குப் பிறந்ததுபோலப் புத்திரோற்பத்தியை உண்டாக்கிக்கொள்ளக்கூடுமோ என்று சிந்திக்கிறேன். ஆபத் காலத்தில் உயர்ந்த குலத்தோரால் புத்திர பாக்கியத்தை யடைவது தர்ம பலனைத் தருமென்று பெரியோர் கூறுகின்றார்கள். புத்திரனில்லாதவனுக்கு யாகம், தவம் முதலியன பலன்தாரா. எனக்குச் சாபம் நேரிட்டதை நீ அறிவாய். எனக்குப் புத்திரன் உண்டாவதற்கு மார்க்கமில்லை அபூர்வகையான புத்திரர்களுண்டு. தன் தர்ம பத்தினியிடம் தனக்குப் பிறந்தவன் ஔரஸ புத்திரன். தன்னுடைய கட்டளையினால் தன் பத்தினியிடம் உயர் குலத்தோனுக்குப் பிறப்பவன் க்ஷேத்திரஜன் தாய் தந்தைகளால் கைவிடப் பட்டவனைப் புத்திரனாக கொள்வதுண்டு. அப்புத்திரன் அபவித்தன் என்னப்படுவான். தத்தாக எடுத்துக்கொள்ளப்பட்டவன் கூடோற்பன்னன். அவ்வறவரும் தாயபாகத்துக்குரியவர்கள். தாய பாகத்துக்குரியவரில்லாத அறுவகையான புத்திரர்களுமுண்டு ஆபத்துக் காலத்தில் உயர் குலத்தானிடமிருந்தும், மைத்துனன் மூலமாகவும் பெண்கள் புத்திரரைப் பெறலாம். இது தர்மமேயாம். ஆதலால் குந்தி! தன் வீரியத்துக்குப் பிறந்தவனைவிட மேலான குலத்தானுக்குப் பிறந்த புத்திரன் விசேஷமானவனென்று மனு கூறியிருக்கின்றார். நான் உனக்குக் கட்டளை யிடுகிறேன். நமது ஞானிகள் மூலமாகவாவது, பிராண குலத்தானிட மிருந்தாவது சந்ததியை விருத்தியாக்கக் கருது. பதிவிரதையான சுருதசேனை யென்னும் உன் சகோதரி சாரதண்டாயனி யென்னும் கேகய ராஜனுக்கு மனைவியாளாள். அவள் கணவனுடைய அனுகூலையிலால் ஒரு பிராமணனைக் கலந்து மூன்று மஹாரத வீரர்களான புத்திரர்களைப் பெற்றாள் ஆகையால் நீயும் என் அனுக்ஞையின்படி தவத்திற் சிறந்த பிராமணனால் புத்திரரை யுண்டாக்கிக் கொள் என்றான்.

127-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

குந்தி கணவனை நோக்கிச் சொல்லுகிறாள். உம்மிடத்திலேயே பக்தி மிகுத்துள்ள என்னைப் பார்த்து நீர் அப்படிச் சொல்லத் தகாது. உம்மாலேயே

என்னிடத்தில் புத்திரருண்டாவார்கள். உம்மோடு கூடவே நானும் சொர்க்கம் போவேன். சந்ததிகாக நீரே என்னை சேரவேண்டும். நான் கேட்ட ஒரு கதை சொல்லுகிறேன். பூர்வ காலத்தில் நமது பூரு வம்சத்தில் வியுஷி நாசுவன் என்று ஒரு அரசனிருந்தான். அவன் ஒரு யாகம் செய்தான். அப்போது இந்திரன் முதலானவர்கள் அவனிடம் வந்தார்கள். அந்த யாகத்தில் தேவர்களும் பிரம ரிஷிகளும் வேலை செய்தார்கள். அந்த அரசன் கக்ஷீவானுடைய புத்திரி பத்திரையை மணம் புரிந்தான். அவ்வீருவரும் ஒருவரை யொருவர் உயிர்போல நேசித்திருந்தார்கள். அந்த அரசனுக்கு க்ஷயரோகம் உண்டாயிற்று. சந்ததி யில்லாமல் மரித்தான். பத்திரை துக்கத்தினால் வருந்திப் புருஷனுக்குப் பின் பெண்களிருந்தால் அவள் உயிருள்ளவளாக மாட்டாள். கணவனில்லாத பெண் சாவதே நல்லது. ஆகையால் நான் உம்மைப் பின்பற்றிவர விரும்புகிறேன். கிருபை கூர்ந்து என்னையும் கூட அழைத்துக் கொண்டு போகவேண்டும். காயனில்லாத பெண் நரகத்திலிருப்பதுபோன்ற துன்பத்தையே அடைகிறாள். இனி நான் ஒரு நிமிஷமாவது இங்கே தனித்திருக்கமாட்டேன். தர்ப்ப சயனத்தில் படுத்திருந்து பிராணனை விடப்போகிறேனென்று புலம்பினாள். பிரேதத்தைத் தழுவிக் கொண்டே புலம்புகையில் ஒரு அசரீரி, பெண்ணே! நீ எழுந்திரு. நானே உன்னிடம் வந்து உனக்குப் புத்திரலாபம் தருவேன். சதுர்த்தசி, அஷ்டமி தினங்களில் நீ யென்னுடன் சயனித்திருப்பா யென்று கூறிற்று. பத்திரை அதைக் கேட்டபின் அப்படியே கடத்து இறந்துபோன தன் கணவனால் ஏழு புத்திரர்களைப் பெற்றாள். தவத்தினாலே மேன்மை யடைந்திருக்கிற நீரும் அதுபோலவே எனக்குப்புத்திரரை அருள் புரியுமென்றாள்.

128-வது அத்தியாயம்.

ஸம்பவ பாவுக் தொடர்ச்சி.

பாண்டு சொல்லுகிறான். குந்தி! நீ சொன்னது சரி. புராதனமான ஒரு இரகசியத்தைச் சொல்லுகிறேன். பூர்வ காலத்தில் பெண்கள் கட்டுப்பாட்டில்லாமல் தமதிச்சைபோல நடந்து வந்தார்கள். இது பூர்வகால தர்மம். அவர்களுக்கு விபசார தோஷமில்லை. உத்தர குரு தேசங்களில் இந்த தருமம் இப்போதுமிருக்கிறது. பெண்களுக்கு புருஷர்மேலாசை ஒழிவதில்லை. சில பெண்களுக்குப் புத்திரனுலும், பெரனுலும், பிதா சகோதரனுலும் தனிமையிற் புருஷனைக் கண்டால் ஆசையுண்டாய் விடுகிறது. இது பெண்களின் இயல்பு. ஆகையால் இவ்வுலகத்தில் ஒரு விவஸ்தை யேற்பட்டது. உத்தாலகரென்றொரு ரிஷி யிருந்தார். அவருக்குச் சுவேதகேது என்று ஒரு புத்திரருண்டு. அந்தச் சுவேதகேது தர்மத்தைக் காப்பாற்றுவதற்கு ஒரு வரம்பு உண்டாக்கினார். உத்தாலகர் கொடுந் தவம் பண்ணிக்கொண்டி

ருந்தார். சுவேதகேது அவருக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தார். ஒரு நாள் ஒரு கிழப் பிராமணர் அந்த ரிஷியிடம் வந்தார். அவர் சுவேதகேதுவைப் பார்த்தார். பின் உத்தாலகரை நோக்கி இந்தக் குமாரன் யாரென்று கேட்டார். குரிசருடைய பெண்ணை நான் மணம் புரிந்திருக்கிறேன். அவன் அருந்ததி போன்ற கற்புள்ளவள். தவத்தால் மெலிந்தவள். அவளிடத்தில் எனக்குப் பிறந்த புத்திரன்தான் இவன் என்று உத்தாலகர் பதில் சொன்னார். அந்த பிராமணர் எனக்குப் புத்திரன் வேண்டும். பாரியை யில்லை. பிதிர்க் கடன் தீர்க்கவேண்டும். அதற்காக உமது மனைவியை அழைத்துக் கொண்டுபோகிறேனென்று கூறித், தவத்தினால் மெலிந்து நடக்கவும் சக்தி யற்றிருந்த அந்தப் பெண்ணின் கையைப் பிடித்துக்கொண்டு வாவென்று கூப் பிட்டார். அதைக் கண்ட சுவேதகேதுவுக்கு மஹா கோபம் உண்டாயிற்று. உடனே அவன் தன் தாயாருடைய கையைப் பிடித்துக்கொண்டு, அந்தக் கிழ வரைப் பார்த்து, ஓ பிராமணு! என் தாயாரைத் தொடாதேயும்; விட்டுவிடும். இவள் உமக்குத் தாய் போலிருக்கிறாள். என் தகப்பனார் சாந்த குணமுள்ளவ ராதலால் பேசாமலிருக்கிறார். பலாத்காரம் பண்ணுதேயும் என்று சொன் னார். அதைக் கேட்ட கிழவர் சுவேதகேதுவே! நான் கிழவன்; எனக்குச் சந் ததிவேண்டும். எனக்கு ஒருவரும் பெண் கொடுக்கமாட்டார்கள். ஒரு புத் திரன் பிறந்ததும் இவளை உம்மிடத்தில் கொண்டுவந்து விட்டுவிடுகிறேன் என் றார். சுவேதகேதுவுக்கு வெட்கமும் கோப முண்டாயிற்று. அதைக் கண்ட பிதா சொல்லுகிறார். குழந்தாய்! நீ கோபியாதே. பசுக்கள் போலவே மனிதர்களு மிருந்தனர். இருந்தாலும் ரு து காலத்தில் பெண்கள் தங்கள் புருஷர்களையே யடைந்தார்கள். குடும்பத்தில் தவறுமல் நடந்தார்கள் என்றார். சுவேதகேதுவு க்கு அந்த நீதி சகிக்க முடியவில்லை மனிதர்களுக்கு மாத்திரம் வரம்பை அமைத்தார். பசு பட்சிகளுக்கு ஏற்படுத்த லில்லை. அதென்னவென்றால் கண வனை விட்டு விபசரிக்கும் பெண்ணுக்குக் கருவழித்த பாபம் வரு மென்பதும், அவர்கள் மஹா நரகங்களை யடைந்து வருந்துவார்கள் என்பதுமாம். கற்புள்ள மனைவியை விட்டு விபசரிக்கும் புருஷனுக்கும் இதுவே பாபமும் தண்டனையு மாம். கணவன் உத்தரவு கொடுத்தால் அதன்படி நடக்கவேண்டும். தவறி னால் அவளுக்கு மஹா பாபம் உண்டாகும். மதயந்தி என்னும் இராஜஸ்தி கணவன் உத்தரவினால் வசிஷ்டரைக் கலந்து புத்திரனை அடைந்தாள். கௌ ரவ வம்சம் அபிவிருத்தியாகும் பொருட்டு நாங்கள் உற்பத்தியான விதமும் நீ யறிந்திருப்பாய். ஆதலால் புத்திரனை விரும்பிக் கட்டளை யிடுகிற என் சொல்லைக் கேட்டு, அதன் படியே நட என்று இருகைகளையும் அஞ்சலியாகக் குவித்துச் சிரசின்மேல் வைத்துக்கொண்டு வேண்டினான். பதிவிரதையான குந்தி கூறுகின்றாள்.

மஹா ராஜாவே! மனைவியே கணவனை வேண்டிக்கொள்ள வேண்டும். கணவன் மனைவியைப் பிரார்த்தித்துக் கொள்வது பாபமேயாம். நான் சொல் வதைக் கேளும். நான் சிறு வயதாயிருக்கும்போது துர்வாஸருக்குத் திருப்தி

யுண்டாம்படி பணிவிடை செய்தேன். அவர் எனக்கு ஒரு மந்திரத்தை உபதேசித்து, இந்த மந்திரத்தினால் எந்த தேவதையை அழைத்தாலும் அந்தத் தேவதை உனக்கு வசப்பட்டு வந்து புத்திரனை அனுக்கிரகிக்கும் என்று வரம் கொடுத்தார். அதற்கு இதுதான் தருணகாலம். கட்டளை யிட்டால் அந்தத் தெய்வத்தை அழைக்கிறேன். அந்தத் தேவதை வந்து தனக்கு ஒப்பான புத்திரனைக் கொடுக்கும் என்று சொன்னாள். அப்படி யில்லாவிட்டால் உத்தம பிராமணனாவது புத்திரனை யடைகிறேன். உமது வார்த்தைக்கு மறு வார்த்தை பேசுவதில்லை. ஆனால் தேவதையால் உடனே புத்திரனைக் காணலாம். பிராமணனால் பெறுவதனால் நீண்டகாலமாகும். உமது கட்டளைக்கு எதிர் பார்க்கிறேனென்றாள்.

129-வது அத்தியாயம்.

ஸம்பவ பாவத் தொடர்ச்சி.

பாண்டு அதைக் கேட்டு மனமகிழ்ந்து, இப்பொழுதாள் என் ஜன்மம் ஸபலம் அடைந்தது. உன்னால் நானும் தெய்வாநுக்கிரகம் பெற்றவனானேன். உனக்கு வரம்கொடுத்த துர்வாஸ மஹரிஷிக்கு வந்தனம் செய்கிறேன். தருமதேவதையை அழை என்றான். குந்திதேவி தன் கணவனுடைய அனுமதி பெற்றுக்கொண்டு தருமதேவதையை அழைத்தாள். தருமதேவதை உடனே குந்தியினிடம் வந்தான். குந்தியை நோக்கி உனக்கு என்னவேண்டுமென்று கேட்டான். குந்தி எனக்குப் புத்திரனைத் தாருமென்று கேட்டாள். தர்ம தேவதை குந்தியைக் கலந்து புத்திரனைக் கொடுத்தான். துலாமாசம் பூர்ண பஞ்சமியில் கேட்டை நட்சத்திரம் கூடின சுப தினத்தில் ஒரு புத்திரனைப் பெற்றாள். அப்போது தர்மாத்மாக்களெல்லாரிலும் இவன் சிறந்தவனாக இருப்பான். பூமியில் சத்தியசந்தனும் பராக்கிரம மூள்ளவனுமான ராஜாவாக இருப்பான். இவனுக்கு யுதிஷ்டிரனென்று பேர் வழங்கும் என்று ஓர் அசரீரி வாக்கு உண்டாயிற்று. இப்பொழுது காந்தாரி கர்ப்பந்தரித்து ஒரு வருஷமாயிற்று, இரண்டாம் வருஷம தொடங்கிற்று அவளுக்குப் புத்திரன் பிறக்கவில்லை. அதனால் தக்கபலமும் பொறுமையும் உடையவளாய் ஒருவருக்குந் தெரியாமல் தன் வயிற்றில் இடித்துக் கொண்டாள். அப்போது அவள் வயிற்றிலிருந்து இருப்புக குண்டு போல ஒரு மாமிச பிண்டம் வெளிப்பட்டது. அதைக் காந்தாரி எறிந்துவிட உத்தேசித்தாள். உடனே வியாச மஹரிஷி அங்கே வந்தார். காந்தாரியைப் பார்த்து என்ன காரியம் செய்தாய். நூறு குடங்களில் சீக்கிரமாக நெய்யை நிரப்பு என்று சொல்லி, அந்தப் பிண்டத்தை நீரால் நனைத்தார். அது நூறுபாகமாயிற்று. அவற்றை நூறு நெய்க்குடங்களிலும் முறையாக வைத்தார். ஒருதுண்டு அதிகமாக இருந்தது. அதையும் ஒரு நெய்க குடத்தில் இட்டு அவற்றைச் காப்பாற்றும் முறைமையினையும் கூறி

னர். இந்தக் குடங்கள் வெடிக்கும்போது புத்திரர் பிறந்ததாக வினையென்று கூறி இமயமலைக்குச் சென்றார். இந்த முறைமையாலேதான் அவர்களுள் ஜேஷ்ட னிஷ்டர்களேற்பட்டார்கள். குந்தி புத்திரன் எல்லாரிலும் மூத்தவனாக இருந்தான். பிறகு பாண்டு குந்தியைப் பார்த்துப் பெண்ணே! நீ பலவானான ஒரு புத்திரனைப் பெறக் கடவாய். க்ஷத்திரியர்களுக்குப் பலத்தினாலேதான் மேன்மை. ஆகையால் வாயுதேவனை அழையென்றான். கணவனுடைய வரவின்படியே குந்தி வாயுதேவனை நியமத்துடன் அழைத்தாள். வாயுதேவன் பிரத்தியட்சமாய்ப் புத்திரனை யளித்துவிட்டுப் போனான். துலாமாசம், மகா நட்சத்திரம், திரயோதசி சேர்ந்த சுபதினத்தில் பீமனைப் பெற்றாள். அப்போது ஆகாயவாணி பலவான்கள் எல்லாரிலும் இவனே சிறந்தவனென்று கூறிற்று. பத்தாவது நாள் குந்தி ஸ்நானம் பண்ணிவிட்டுத், தேவபூஜை செய்வதற்காகக் குழந்தையை யெடுத்துக் கொண்டு புறப்பட்டு, மலையோரமாகப் போனாள். குகையிலிருந்து ஒரு புலி புறப்பட்டுக் குழந்தையை நோக்கிவந்தது. குந்தி பயந்து மலைமேலேறினாள். இப்பிலிருந்த குழந்தை நழுவிக் கீழே விழுந்து விட்டது. உடனே பாண்டு அந்தப் புலியை அம்புகளாற் கொன்று விட்டுக் குழந்தையினிடம் ஓடிவந்தான். குழந்தைக்குச் சேதமில்லை. அந்தப் பாறை நூறு சுக்கல்களாக உடைந்திருந்தது. பாண்டு அதைக்கண்டு ஆச்சரியமடைந்தான். பீமன் பிறந்த அதே தினத்தில் துரியோதனன் பிறந்தான். அவன் கழுதைமாதிரி கத்தினான். கழுதை, நரி, காக்கை, கழுகுமுதலிய குரூர ஜந்துக்கள் அவனுக்கு எதிராகக் கத்தின. பெருங்காற்றடித்தது. திக்குகளிலெங்கும் நெருப்புப் பற்றி யெரிந்தது. அதனால் திருதராஷ்டிரன் பீஷ்மர், விதுரர் முதலிய பெரியோர்களையும், நகரத்தாரையும், பிராமணர்களையும், அழைப்பித்துச் சொல்லுகிறான். யுதிஷ்டிரன் நமது வம்சத்துக்கு மூத்த குமாரன். அவன் அரசுக்கு யோக்கியனாயிருக்கிறான். இவன் பிறந்தவுடன் அநேக துர் நிமித்தங்களுண்டாகின்றன. அதனால் நான் பயப்படுகிறேன். விதுரா! என்ன சொல்லுகிறாயென்று கேட்டான். இவன் பேசி முடித்தவுடன் நரி முதலிய ஜந்துக்கள் பயங்கரமுண்டாகும்படி கத்தின அதைக் கண்டு பிராமணர்களும் விதுரரும் சொல்லுகிறார்கள். இந்தப் பயங்கரமான துர் நிமித்தங்கள் உமது புத்திரனால் குலநாசமாகும் என்பதைத் தெரிவிக்கின்றது. இவனால் பெரிய அபாயம் நேரிடும். இதற்குப் பரிகாரம் அவனை விட்டொழிப்பதை விட வேறில்லை. இவனுலகத்திலுள்ள க்ஷத்திரியர் வம்சங்களுக்கே நாசம் உண்டாகும். ஒரு குலத்திற்காக ஒருவனை விடலாம். ஒரு கிராமத்திற்காக ஒரு குலத்தை விட்டுவிடலாம் ஒரு தேசத்துக்காக ஒரு கிராமத்தை விட்டுவிடலாம். தனக்காகப் பூமி முழுவதையும் விடலாம் என்று கூறினார்கள். திருதராஷ்டிரன் அதற்குச் சம்மதிக்கவில்லை. அன்று முதல் ஒரு நாளைக்கு ஒருவனாக நூறு நாள்களில் நூறு புத்திரர்களும், ஒரு புத்திரியும் உற்பத்தியானார்கள். காந்தாரி கர்ப்பத்தால் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கையில் ஒரு வைசிய மாது திருதராஷ்டிரனுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தாள். திருதராஷ்டிரன்

அவளுடன் கலந்தான். அவளிடம் நல்ல புத்திமானுகிய காரணன் என்கிற யுயுத்ஸு என்பவன் பிறந்தான்.

130-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

ஜனமேஜய மஹாராஜா வைசம்பாயனரை நோக்கி, வியாசர் திருதராஷ்டிரனுக்கு நூறு புத்திரர்கள் தானே கொடுத்தார் அதன்படி மாம்ச பிண்டமும் நூறுதண்டுகளாகப் பகுக்கப்பட்டது. அப்படியிருக்கப் பெண்ணைப் பற்றிப் பேசப்பட வில்லையே, பெண் எப்படி யுண்டானுள்? இவற்றை எனக்கு விரிவாகச் சொல்ல வேண்டுமென்று கேட்க, வைசம்பாயனர் சொல்லுகிறார்.

வியாச பகவான் அந்த மாம்ச பிண்டத்தைத் தண்ணீரால் நனைத்து நூறு துண்டுகளாக்கி, அவற்றைத் தாதியைக் கொண்டு நெய்க்குடங்களில் போடுவித்தார். அப்போது காந்தாரிக்குப் பெண் வேண்டுமென்கிற ஆசை மிகுதியாய் உண்டாயிற்று. அவள் தன் மனதுக்குள், எனக்கு நூறு புத்திரர்கள் உண்டாவதில் தடையில்லை. வியாச மஹரிஷி வசனம் தவறுது. ஆனலும் எனக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தால் சந்தோஷமாயிருக்கும். அவள் நூறு பிள்ளைகளுக்கும் கடைசியாய், நூற்றொராவது குழந்தையா யிருக்கவேண்டும். அவளால் என் கணவன் தெளஹித்திரனை அடைவார். தெளஹித்திரனுல் புண்ணியலோகம் கிடைக்கும். பெண்களுக்கு மருமகனைக் காண்பது எல்லாவற்றிலும் சந்தோஷம். ஒரு பெண் பிறந்தால் புத்திரர் தெளஹித்திரர்கள் சூழ இருந்து ஆனந்தத்தில் முழுகுவேன். நான் பெரியோர்களை ஆராதித்தது உண்மையாயிருந்தால் ஒரு பெண்ணும் பிறக்கவேண்டும் என்று நினைத்தாள். அச்சமயத்தில் வியாசர் மாம்சபிண்டத்தை நூறு துண்டுகளாகப் பகுத்தார். அவற்றை நூறு குடங்களில் போடும்போது அவரது இடக்கரத்தில் ஒரு துண்டமு மிருந்தது. வியாசர் காந்தாரியைப் பார்த்து நான் சொன்னபடி நூறு புத்திரர்களுயினர். தெய்வச் செயலால் ஒருதுண்டு மிருந்திருக்கிறது. இது நீ எண்ணிக் கொண்டபடியே பெண்ணைப் பிறக்கும் என்று கூறி அதையும் மற்றொரு நெய்க்குடத்தில் இட்டார். அதுதான்துச்சலேயென்கிற நூற்றொராவது பெண்.

131-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

ஜனமேஜயர், வைசம்பாயனரை நோக்கித் திருதராஷ்டிர புத்திரர்களின் பெயரை வரிசையாகச் சொல்லவேண்டு மென்று கேட்க வைசம்பாயனர் சொல்லுகிறார்.

துரியோதனன், கரணனென்கிற யுயுத்ஸு, துஸ்ஸகன். துச்சலன், துர்மு கன், விவிம்சதி, விசர்ணன், ஜலசந்தன், ஸுலோசனன் விந்தன், அநு துர்த்தர்ஷன், ஸுபாகு, துஷ்ப்ரதர்சன், துர்மர்ஷணன், ப்ரமாதி, துஷ்கர் ணன், கர்ணன், சித்ரன், உபசித்ரன், சித்ராட்சன், சாருசித்திராங்கதன், துர்மதன், துஷ்ப்ரஹர்ஷன், விவித்ஸு, விகடன், சமன், ஊர்ணநாபன், பத்மநாபன், நந்தன், உபநந்தன், ஸேநாபதி, ஸுஷேணன், குண்டோதரன், மஹாசாபன், ஸுகுண்டலன், பீமபலன், பலாகி, பீமவிக்ரமன், உக்ரா யுதன், பீமசரன், கனகாயு, த்ருடாயுதன். த்ருடவர்மா, த்ருடக்ஷத்ரன், ஸோ மகீர்த்தி. அநுதரன், ஜராஸந்தன், த்ருடஸந்தன், ஸத்தியசந்தன், ஸுரஸ்ரவாக், உக்ரச்ரவாக், உக்ரச்ரவஸ், உகரஸேனன், க்ஷேமமூர்த்தி, அபராஜிதன், பண் டிதன், விசாலாட்சன், துராதரன், த்ருடஹஸ்தன், ஸுஹஸ்தன், வாதவே கன், ரௌத்திரகர்மா, த்ருடரதன், அனாத்ருஷ்யன், குண்டபேதி, விராவி, தீர்க்கலோசனன், தீர்க்கபாகு தீர்க்கரோமன், வ்யூடோரு, கனகாங்கதன், குண் டஜன், சித்ரகன், ப்ரமதன், துஷ்பராஜயன், கடைசியான துச்சலை யென்னும் பெண்.

ஜனமேஜய ராஜாவே! பிறந்த ஜேஷ்ட களிஷ்ட முறைப்படியே சொ ன்னேன். இவர்களெல்லாரும் வேதபுணர்ந்தவர்கள், வீரர்கள், அதிரதர்கள், அவர்களுக்குத் தக்க பருவத்தில் திருதராஷ்டிரன் விவாகஞ் செய்துவைத் தான். திருதராஷ்டிரனுக்கு யுயுத்ஸு, துச்சலை இருவரோடு நூற்றிரண்டு குழந்தைகள். துச்சலைக்குப் பர்வகாலம் வந்தபோது ஜயத்ரதனுக்கு விவாகஞ் செய்து கொடுத்தான்.

132-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

பீமசேனன் பிறந்த பின் பாண்டு மற்றொரு புத்திரன் வேண்டுமென்று நினைத்தான். இந்திரன் தேவர்களுக்கு ராஜாவாக இருக்கிறான். உத்ஸாகத் தையும் மஹிமையையும் பராக்கிரமத்தையும் உடையவன். ஆகையால் அவ னால் ஒரு புத்திரனை அடையவேண்டும் என்று கருதினான். அந்த இந்திரனால் பிறக்கும் புத்திரன் மஹா பராக்கிரம சாலியாய்த் தேவாசுரர்களையும் போரில் வெல்லத்தக்க வல்லமை யுள்ளவனு யிருப்பான் என்று கருதி, குந்தியை ஒரு வருஷம் தவம்புரியச் சொன்னான். தானும் உக்ரமான தவம் புரிந்தான். இந் திரன் பிரத்தியட்சமாய் நான் உனக்கு ஒரு புத்திரனைத் தருவேன். அவன் பிராமணர்களுக்கும் பசுக்களுக்கும், தன நேசர்களுக்கும் நன்மையைச் செய் வான். மூன்று உலகங்களிலும் கீர்த்திபெறுவான். சத்துருக்களுக்குப் பயங்கர மாயிருப்பான். உலகத்திற்கு சேஷத்தை செய்வான் என்று சொல்லிப் போ

னென். பாண்டு குந்தியை நோக்கிப் பெண்ணே? தேவேந்திரன் உனக்கு நல்ல புத்திரனைக் கொடுப்பதாகக் கூறினனென். அந்தப் புத்திரன் மஹா கீர்த்தியும், ஜயிக்க முடியாத பராக்கிரமமும், க்ஷத்திரியர்களுக்குள்ளே சிறந்தவனும் ஆவான் ஆகையால் இந்திரனை அழையென்று கூறினனென். குந்தியும் அப்படியே இந்திரனை அழைத்தாள். இந்திரன் வந்து குந்தியைக் கலந்து ஒரு புத்திரனை அருளிப் போனனென், பால்குணமாசம் (பங்குனி) பூர்வ பல்குனி (பூரம்) உத்தர பல்குனி (உத்திரம்) சேர்ந்த பகலில், அர்ஜுனன் பிறந்தான். அதனால் அவனுக்குப் பல்குனன் என்று பேரிட்டார்கள். பல்குனன் பிறந்த போது ஒரு அசரீரி பிரசவ அறையிலிருக்கும் குந்தியை நோக்கிச் சொல்லிற்று, குந்தி! இவன் கார்த்தவீரியார்ஜுனனை யொத்திருப்பான். ருத்திரமூர்த்தியை ஒத்த பராக்கிரமம் உடையவனு மிருப்பான், தேவேந்திரனுக்குச் சமானமாய் ஒருவராலும் ஜயிக்க முடியாதவனு மிருப்பான். உனக்கு மூடிவில்லாத ஆனந்தத்தை அளிப்பான். காண்டவ வனத்தை அக்கினிதேவருக்குத் தத்தம் செய்து திருப்தி செய்விப்பான். இவனுடைய புஜபல பராக்கிரமத்தால் மூன்று அசுவமேதம் செய்விப்பான். இவன் தலைமையானவனு மிருந்து அரசர்கள் எல்லாரையும் ஜயித்து சகோதரர்களுடன்கூடி கௌரவர்களுடைய இராஜ்ய லட்சுமியைத் தாங்குவான். சங்கரபகவானுக்கு சந்தோஷமுண்டாக்குவான். அவரிடமிருந்து பாசுபதம் என்னும் அஸ்திரத்தைப் பெறுவான். இந்திரன் கட்டளையால் நிவாத கவசர்கள் என்னும் தேவ சத்துருக்களான அரக்கர்களைச் சங்காரிப்பான். தேவர்களுடைய அஸ்திரங்கள் எல்லாவற்றையும் பெறுவான் என்று கூறிற்று.

இந்த வார்த்தை கேட்டுக் குந்தியும், அவ்விடத்திலுள்ள தேவரிஷிகளும் பிரமரிஷிகளும் சந்தோஷம் அடைந்தார்கள். தேவதுந்துபிகள் ஆகாயத்தில் முழங்கின. மலர்மாரி சொரிந்தது. தேவர்கள் அர்ஜுனனை வாழ்த்தினார்கள். தேவஸ்திரீகள் நர்த்தனம் செய்தார்கள். ரிஷிகள் வேதகோஷஞ் செய்தார்கள். சகல தேவர்களும், தேவரிஷிகளும் அங்கே வந்தார்கள். வசு ருத்திராதித்தியர்களும் அவ்விடம்வந்து சேர்ந்தனர். அங்கே வாராத தேவர்களும் தேவரிஷிகளும் கிடையாது. அதைக் கண்டபின் அங்குள்ள ரிஷிகள் அர்ஜுனனிடத்தில் கௌரதை பாராட்டினார்கள். பாண்டு எல்லாத் தேவர்களையும் பூஜித்தான். தேவர்கள் பாண்டுவை நோக்கித், தர்மதேவதையே யுதிஷ்டிரனுகப்பிறந்தான், வாயுதேவனே பீமன். தேவேந்திரனே அர்ஜுனன் நீ தேவர்களுக்குத் தந்தையானுய். ஆதலால் நீ புண்ணியசாலி, சொர்க்கத்தை யடைவாயென்றார்கள். பிறகு பாண்டு இன்னும் புத்திரர் வேண்டுமென்னும் விருப்பத்தால் குந்தியை வேண்டினன். குந்தி பாண்டுவை நோக்கி ஆபத் காலத்தில் மூன்று புத்திரர்களைத் தர்மசந்தானமாகப் பெறலாம். அதற்குமேல் கூடாது நாலாவது புத்திரனை யிச்சித்தவள் கற்பில்லாதவள். ஐந்தாவது புத்திரனை யிச்சித்தால் அவள் வேசி, ஆதலால் வரம்பு கடத்தல் கூடாது என்றனள்.

133-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

மாத்திரி பாண்டுவினிடத்தில் எனக்குப் புத்திரனில்லாமலிருப்பது துக்கமாயிருக்கிறது குந்தி எனக்குப் புத்திரனுண்டாம்படி செய்தால் எனக்கு அவள் உபதேசம் செய்த குரு ஆவாள். அவளைக் கேட்க எனக்கு வெட்கமாயிருக்கிறது. நீரே அவளுக்குச் சொல்லவேண்டுமென்றாள். பாண்டு சரி, அப்படியே குந்திக்குச் சொல்லுகிறேன். அவள் என்சொல்லைத் தட்டமாட்டாள் என்று கூறிக் குந்திக்கு இரகசியத்தில் சொன்னான். மாத்திரிக்கும் புத்திரனுண்டாம்படி உபதேசஞ் செய்து கீர்த்தியை அடையக்கடவாய் என்றான் குந்தி அப்படியே செய்வேன் என்று கூறினாள். பின் மாத்திரிக்கு மந்திரோபதேசஞ்செய்து, நீ ஒரு தரம் தேவதையைத் தியானஞ்செய், நிச்சயமாய் உனக்குச் சந்ததி உண்டாகுமென்றாள். மாத்திரி தன் யுக்தியால் அசுவினி தேவர்களைச் சிந்தித்தாள். அவர்கள் வந்து இரண்டு புத்திரர்களை யளித்துப் போனார்கள். மாத்திரிக்கு நகுல சகாதேவர்கள் பிறந்தார்கள். சதசிருங்க மலையிலுள்ள ரிஷிகள் பாண்டவர்களுக்குச் சாஸ்திரப்படி நாமகரணஞ் செய்தார்கள். மூத்தவருக்கு யுதிஷ்டிரனென்றும், இரண்டாவது புத்திரனுக்குப் பீமனெனென்றும், மூன்றாவது புத்திரனுக்கு அர்ஜுனனென்றும் பேரிட்டார்கள். மாத்ரிபுத்திரர்களில் மூத்தவனுக்கு நகுலனென்றும், இளையவனுக்கு ஸஹாதேவனென்றும் பேரிட்டார்கள். பாண்டு புத்திரர்கள் ஐவரும் நற்குண நற் செய்கைகளாலும், புத்தியினாலும், பலபராக்கிரமங்களினாலும் சிறந்து விளங்கினார்கள். பாண்டு புத்திரர்களைக் கண்டு சந்தோஷம் அடைந்தான். பாண்டு குந்தியை நோக்கி மறுபடியும் மாத்திரிக்கு அனுக்கிரகம் பண்ணவேண்டுமென்றான். அவள் நாதா! மாத்திரி என்னை வஞ்சித்து எமாற்றிவிட்டாள் இரட்டையான தேவர்களை அழைப்பதினால் இரண்டு மடங்குபலன் அடைவதை நான் அறியவில்லை. துஷ்டபெண்களுக்கு உபதேசிப்பதினால் இப்படிப்பட்ட பலன் பெறுகிறார்கள். கெட்ட பெண்களின் நடக்கையும் கெட்டதுதான். நீர் எனக்கு இனிமேல் கட்டளை யிடவேண்டாம். இந்த வரத்தை யெனக்கு அருளுமென்று கூறினாள். பாண்டு பிறகு புத்திரர்களைப் பற்றிக் கவனிக்கவில்லை. தனக்குண்டான ஐந்து புத்திரர்களைக்கொண்டு திருப்தியடைந்தான்.

பாண்டு சதசிருங்க மலைக்குப் போய்த் தவஞ்செய்து ரிஷியாய்விட்டானென்று வசுதேவர் கேட்டுத் துக்கப்படிக் கொண்டிருந்தார். அப்போது பாண்டுவுக்குப் புத்திரர்கள் பிறந்திருக்கிறார்களென்று கேள்விப்பட்டு யாதவர்கள் எல்லாரும் களிப்படைந்தார்கள். யாதவர்கள் ஒப்புக்கொண்டு தன் புரோகிதரை அனுப்பிப், பாண்டுவின் புத்திரர்களுக்குச் சாஸ்திரப்படி ஜாதகர்மாதிகளைச் செய்விக்க வேண்டுமென்று கூறினார்கள். வசுதேவர் சரியென்று ஒப்புக்

கொண்டு தன் புரோஹிதரை யனுப்பினார். பசுக்கள், தங்கம், வெள்ளி, இரத்தினம், ஆடை ஆபரணங்களையும் அனுப்பினார். அத்தப் புரோஹிதர்பாண்டவர்களுக்குச் சௌளம் முதலிய ஸம்ஸ்காரங்களை முறைப்படி செய்வித்தார். பிறகு பாண்டவர்கள் வேதாத்தியயனஞ் செய்து முடித்தார்கள். சர்யாதியின் புத்திரன் சுகனென்ற ஒருவன் வில்லினால் பூமி முழுவதையுஞ் ஜெயித்திருந்தான். அவன் இராஜ ரிஷியாய்ச் சத சிருங்க மலையில் தவசு பண்ணிக்கொண்டிருந்தான். அவன் பாண்டவர்களுக்குத் தனுர்வேதத கற்பித்தான். பாண்டவரும் வில்வித்தையிற் சிறந்தவரானார்கள், நகுல சகாதேவர்கள் கத்திகேடகங்களில் வல்லவரானார்கள் அர்ஜுனன் வில்லில் வல்லவனுனன். சுகன், அர்ஜுனன் வில்வித்தையில் எனக்குச் சரியானவனென்று விடை யளித்தான். தன்னுடைய வில்லையும், சகல அஸ்திர சஸ்திரங்களையும் அவனுக்குக் கொடுத்தான். இவைகளைப் பெற்றுக்கொண்டு சிறந்த அர்ஜுனன் உலகத்திலுள்ள அரசர்களெல்லாரையும் அற்பமாகக கருதினன். அவ்வளவு சக்தியுள்ளவனுனன்.

134-வது அத்தியாயம்.

ஸம்பவ பாவத் தொடர்ச்சி.

ஜனமேஜய மஹாராஜன், பாண்டவர்கள் எத்தனைவது வயதில் அஸ்தினாபுரத்துக்குப் போனார்கள்?! அவர்களுடைய பூர்ணாயுசு எவ்வளவு என்று கேட்க வைசம்பாயனர் சொல்லுகிறார்.

அஸ்தினாபுரம் போனபோது யுதிஷ்டிரருக்குப் பதினாறு வயது. பீமசேனனுக்குப் பதினேந்து. அர்ஜுனனுக்குப் பதினாலு நகுல சகாதேவர்களுக்குப் பதின்மூன்று. திருதராஷ்டிரனுடைய புத்திரர்களுடன் பதின்மூன்று வருஷம் கூடிவாழ்ந்தார்கள் அரக்கு மாளிகையை விட்டுப் புறப்பட்டு ஆறுமாசம் வசித்தார்கள் ஏகசக்கிரவனத்தில் ஆறுமாசம் வசிததார்கள் பாஞ்சால தேசத்தில் ஒருவருஷம் இருந்தார்கள். மறுபடியும் அஸ்தினாபுரத்தில் ஐந்து வருஷமிருந்தார்கள். இந்திரப் பிரஸ்தத்தில் இருபத்து மூன்று வருஷம். அதன் பின் சூதாடப்பட்டது. அதன் பின் வனவாச அக்ஞாத வாசத்தில் பதின்மூன்று வருஷம் கழிததார்கள். அதன் பின் மூப்பத்தாறு வருஷம் அரசு புரிந்தனர். அதன் பிறகு ஆறு மாசம் கழித்துப் பரிக்ஷித்துக் மகுடாபிஷேகஞ் செய்துவிட்டுப் பரலோகம் போனார்கள். யுதிஷ்டிரருடைய ஆயுசு நூற்றெட்டு வருஷம். கிருஷ்ணமூர்த்தி அர்ஜுனனுக்கு மூன்றுமாதம் பெரியவர், பலராமர் கிருஷ்ணனை விட மூன்றுமாதம் பெரியவர். நிற்க, பாண்டு சத சிருங்கமலையில் தன் புத்திரருடனும் புரோஹிதராகிய காஸ்யபரோடும் மனைவிமார்களோடும் வசித்துக்கொண்டிருந்தான். அர்ஜுனனுக்குப் பதினாலாவது வயது பூர்ணமாயிற்று. அவனுக்கு பிறந்த நாள் வந்தது. குந்திதேவி பிராமணபோஜனம் முதலிய காரியங்க

லோக் கவனித்துக் கொண்டிருந்தாள். பாண்டு புத்திரர்களுடனும் பத்தினியான மாத்திரியுடனும் கூடி வனத்தில் உலாவிக்கொண்டிருந்தான். அவ்வனத்தின் காட்சி பாண்டுவின் மனதை உருக்கியது. அவனுக்குச் சிற்றின்பத்தில் மனது சென்றது. மாத்திரியின் அழகில் படிந்து அவளைப் பலாத்காரம்செய்தான். மாத்திரி யெவ்வளவு தடுத்தும் முடியாமல் போயிற்று. விதிவசத்தினால் புத்தி மயங்கி மாத்திரியோடு பலாத்காரமாகக் கலந்தான். கலந்தவுடனே பாண்டு சாபத்தின்படி மரித்தான். மாத்திரி பாண்டுவைக் கட்டிக்கொண்டு கதறி அழுதாள். அந்த சத்தம் கேட்டுக் குந்தியும் பாண்டவர்களும் வந்தனர். மாத்திரி புத்திரர்களை விட்டு நீ மாத்திரம் தனியாக வாவென்று கூப்பிடக் குந்தி தனியாகப் போய் அரசனுடைய நிலைமையைக் கண்டு புலம்பி மாத்திரியே எல்லாரிடத்திலும் ஒப்புத்துவிட்டாயே என்றாள். மாத்திரி நான் எவ்வளவு தடுத்தும் முடியாமற் போயிற்று என்று புலம்பினாள். குந்தி வேரற்ற மரம் போலப் பூமியில் விழுந்தாள் மாத்திரி பாண்டுவுக்கு ஸ்நானஞ் செய்து வைத்து அலங்காரம் பண்ணிப் படுக்கையில் வைத்துப் பின் குந்தியை அழைத்தாள். குந்தி அரசனைக் கண்டு புலம்பி யழுதாள். வனத்திலுள்ள ரிஷிகளும் விசனப்பட்டார்கள். பிராமணர்கள் குந்தியையும் மாத்திரியையும் தேற்றினார்கள்.

குந்திதேவி, மஹாராஜாவே எங்களை எவரிடத்தில் ஒப்புவித்துவிட்டுச் சொர்க்கம் போனீர். ராஜாவே நான் தூர்ப்பாக்கியத்தி னாதலாலேதான் நீர் மரணமடைந்தீர். நீர் மஹாதபசியானபடியால் தேவர்கள் உம்மைக கண்டு மகிழ்ந்திருப்பார்கள் என்பதில் ஐயமேயில்லை. நான் உம்மை விட்டுத் தனித்திருப்பதில்லை. நானும் கூடவந்து உம்மைப் பார்ப்பேன். சற்று நேரத்துக்குள் வருவேன் என்று கூறிப் புலம்பினாள். பாண்டவர்கள் பிதாவின் கிட்டவந்து பார்த்துப் பிதாவே! நாங்கள் அநாதர்களாய் விட்டோம். நாங்கள் எப்படிப் பிழைப்போம் எங்களுக்குக் கதியென்ன என்று கூறிப் புலம்பி அழுதார்கள். குந்தி மாத்திரியை நோக்கி மாத்திரி! நான் முதலாவது தர்மபத்தினியாதலால் நான் அவரோடுகூடச் செல்வேன், அவரை விட்டு எழுந்திரு. இந்தப் பிள்ளைகளைக்காப்பாற்று என்றாள். மாத்திரி என்னுலே அவர் இறந்தார்? ஆதலால் நான் அவரைப் பின்பற்றிப் போவேன். நான் என் புத்திரர்களைப் பார்ப்பது போல் உன் புத்திரர்களைப் பார்க்கமாட்டேன். வித்தியாச மாகத்தான் நடப்பேன். அதனுலே பெரும் பாவியாவேன். நீ உன் புத்திரர்களிடத்திலிருப்பதுபோல என் புத்திரர்களிடத்திலும் நடந்துகொள். என்னை யிச்சித்துப் பிராணனை விட்ட மஹாராஜாவை நான் யமலோகத்துக்குத் தொடர்ந்து போகிறேன். நான் உடன்கட்டை யேறுகிறேனென்றாள். ரிஷிகள் எல்லாரையும் தேற்றிச் சொல்லுகிறார்கள்.

உடன்கட்டை யேறுவது சிறந்ததுதான். ஆனலும் உங்களுக்கு அவ்வளவு உசிதமல்ல. வீரர்களான புத்திரர்களைப் பரிபாலிக்க வேண்டும். நிருநூர

ஷ்டிரன் ஆசையுள்ளவன். அவன் பாண்டவர்களைக் கவனிக்காமலுமிருப்பான் ஆகையால் புத்திரர்களைக் காப்பாற்றிக் கொண்டு பிரமசரியவிரதந் தவறாமலிருந்தால் புத்திரர்களும், கணவனும் நீங்களும் நற்கதி பெறலாம் ஆகையால் உடன்கட்டை யேறவேண்டாமென்று கூறினர்கள். குந்தி பிராமண வாக்கியத்தை என் கணவனுடைய கட்டளையாகவே கொள்கிறேன். அப்படியே நடக்கிறேன். அதுவே எனக்கும் புத்திரர்களுக்கும் கணவனுக்கும் நன்மை தருமென்று நம்புகிறேனென்று சொன்னாள்.

மாத்திரி குந்திதேவி! நீ புத்திரர்களைக் காப்பாற்றுவதைப் போல நான் காப்பாற்ற மாட்டேன். நீ புத்திசாலி. உனக்குக் குந்திபோஜனும் யாதவர்களும் சகாயமாக இருக்கிறார்கள். ஆகையால் கணவனுடன் நான் போகிறேன். எனக்கு உத்தரவுகொடு என்று கூறிப், பின் புத்திரர்களோடு தரூவி, யுதிஷ்டிரரைக் கையில் பிடித்துக்கொண்டு, புத்திரர்களைப் பார்த்துக் குந்திதான் உங்களுக்குத் தாய். யுதிஷ்டிரன் ஜேஷ்டனுமைபடியால் முறைப்படி உங்களுக்குப் பிதா, யுதிஷ்டிரனைப் போன்றவர்கள் அழியார்கள். தோல்வியடைய மாட்டார்கள் ஆகையால் நீங்களெல்லாரும் யுதிஷ்டிரன் வார்த்தையைக் கடந்து நடவாதிர்கள் என்ற கூறிக் குந்தியைப் பார்த்து, நீ முதல் மனைவி. பெரியவள். எந்த வகையிலும் மரியாதை செய்யத் தக்கவள் உனக்குச் சமானமான பெண்களில்லை உன்னுலே நான் புண்ணிய லோகத்தை அடையவேண்டும். சணவனைப் பின் தொடர்ந்துபோய்ச் சொர்க்கத்திலும் பணிவிடை செய்யவேண்டும் எனக்குக் கவலைப்படாமல் உத்தரவுகொடு என்று வணங்கிக் கேட்டுக கொண்டாள். குந்தி உனக்கு அனுமதி தந்தேன் கணவனுடன் கூடச் சொர்க்கத்துக்குப் போய் பணிசெய் யென்று அழுதுகொண்டே சொன்னாள். புரோகிதராகிய காஷ்யபர் பாண்டுவுக்கு உத்தரகிரியைகளைக் கிரமப்படி செய்வித்தார். யுதிஷ்டிரர் புரோகிதர் சொற்படி அசுவமேதாதிகளால் பிதாவைத் தகனஞ் செய்தார். மாத்திரி புத்திராக ளிடத்திலும் குந்தியிடத்திலும் உத்தரவு பெற்றுக்கொண்டு, பிராமணர்களுடைய அநுகூலத்தினால் சிதையிலேறிக் கணவனுடன் கூடசென்றாள்.

135-வது அத்தியாயம்.

சம்பவ பர்வத் தொடர்ச்சி.

பிறகு ரிஷிகளெல்லாரும் யோசனைசெய்து குந்தியையும் பாண்டவர்களையும் அழைத்துக்கொண்டு, பாண்டுவின் சரீரத்துடன் அஸ்தினபுரம் போனார்கள். குந்தி தன் புத்திரர்களுடன் அஸ்தினபுரத்தின் கோட்டை வாசலையடைந்தாள். ரிஷிகள் வாயில் காப்பாளரை நோக்கி நாங்கள் வந்திருப்பதை அரசனுக்கு அறிவியுங்களென்று சொன்னார்கள். அது கேட்ட நகரத்தாரனைவரும் தங்கள் தங்கள் பத்தினி புத்திரர்களோடும் புறப்பட்டு வந்தனர்கள்.

பீஷ்மர், விதுரர், திருதராஷ்டிரன், சத்தியவதி, அம்பிகை, அம்பாலிகை, காந்தாரி முதலானவர்களும் புறப்பட்டு வந்தார்கள். திருதராஷ்டிரபுத்திரர் களும் வந்தார்கள். வந்தவர்களெல்லாரும் ரிஷிகளுக்கு வணக்கிப் பூமியில் உட்கார்ந்தார்கள். அப்போது சப்தமில்லாமலிருந்தது. பீஷ்மரிஷிகளுக்கு அர்க் கியபாத்தியாதிகளினால் உபசரித்தார். ரிஷி சிரேஷ்டர் ஒருவர் சொல்லுகிறார்.

பாண்டு மஹாராஜா தபசியானது உங்களுக்குத் தெரியுமல்லவா? அவர் கொஞ்சகாலம் கொடுந்தவம் புரிந்தார். ஒரு நாள் சொர்க்கலோகம் போம்படி யெழுந்திருந்தார். ரிஷிகள் அவரைத் தடுத்துப், புத்திரரில்லாத நீ சொர்க்க லோகம் போகக்கூடாது. தர்மன், வாயு, இந்திரன், அசுவினிதேவர்கள் இவர் களே யாராதனை செய்தால் உனக்குப் புத்திரர்களுற்பத்தி யாவர்கள் என்று சொன்னார்கள். நாங்கள் ஞான திருஷ்டியால் அறிந்து சொல்கிறோம். நீ அப் படியே செய்யக்கடவாய் என்றார்கள். பாண்டு அப்படியே செய்து தர்மதேவ தையால் யுதிஷ்டிரரையும், வாயுவால் பீமனையும், இந்திரனால் அர்ஜுனனை யும் அசுவினி தேவர்களால் நகுல சகாதேவர்களையும் புத்திரர்களாகப் பெற் றான். அர்ஜுனன் பிறந்ததும் இந்திரன் சூந்தியை நோக்கி, இவன் வில்லாளிக ளெல்லாரிலும் சிறந்தவன். ஜயிக்க முடியாத தேவாசுரர்களையும் இவன் ஜயி ப்பான். இவனை ஒருவரும் ஜயிக்கமாட்டார்கள் என்று சொன்னான். யுதிஷ்டி ரன் இந்திர சகோதரனுடைய பராக்கிரமத்தினால் இராஜசூயயாகத்தைச் செய்யப்போகிறான், இந்தப் புத்திரர்களைவிட்டு பாண்டு சொர்க்கலோகம் போய் பதினேழுநாளாயின. மாத்திரி அருந்தமனஞ் செய்து கணவனோடு சொர்க்கம் அடைந்தாள். இந்தப் புத்திரர்களைக் கிரமப்படி ஏற்றுக் கொள்ளு வீர்கள். தகனஞ்செய்யப்பட்ட பாண்டு மாத்திரி யிருவருடைய சரீரங்களும் இதோ இருக்கின்றன, நீங்கள் சூந்தியையும் பாண்டவர்களையும் காப்பாற்றக் கடவீர்களென்று கூறித் திடீரென்று ரிஷிக்கூட்டங்கள் மறைந்துபோயின, எல்லாரும் அதைப் பார்த்து ஆச்சரிய மடைந்தார்கள்.

136-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

திருதராஷ்டிரன் விதுரரை நோக்கிப் பாண்டுவுக்கும் மாதந்திரிக்கும் செய்ய வேண்டியதைக் கிரமமாகச் செய். தானங்களைக் குறை வில்லாமலே செய்யக்கடவாய், ஜீவந்துபோன பாண்டுவைப்பற்றி நாம் துக்கப்பட வேண்டி யதில்லை. அவன் தபோபலத்தால் சொர்க்கத்தை அடைந்தான் என்று கூறி னான். அப்படியே விதுரர் மாத்திரி பாண்டு இருவர் சரீரத்தையும் அலங்கரி த்துப் புஷ்பப் பல்லக்கில் ஏற்றினார். கால்வகைச் சாதியாரும் சூழப் பிரேத த்தை யெடுத்துக்கொண்டு போனார்கள். அதேக தானங்கள் செய்தார்கள்.

கங்கைக் கரையிலுள்ள வனத்தில் உள்ள சமபூமியில் பிரேதப் பல்லக்கை வைத்துச்செய்ய வேண்டுவனவற்றைக் கிரமமாகச் செய்து மேதவியிப்படி அசுவமேதாக்கினியால் தகனஞ் செய்வித்தார்கள். அப்போது அம்பாலிகைக் குண்டான துக்கத்துக்கு அளவில்லை. துக்கத்தால் புலம்பிமூர்ச்சையடைந்து பூமியில் விழுந்தாள். பீஷ்மர் முதலிய எல்லாரும் அழுதார்கள். பசுபட்சிகள்கூட அழுதன. பீஷ்மர்முதலிய எல்லாரும் ஜலதர்ப்பணம் செய்தார்கள். பன்னிரண்டு நாள் நகரத்தார் அனைவரும் துக்கங் கொண்டாடினார்கள்.

137-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

பிறகு பாண்டுவுக்குச் சிராத்தஞ் செய்தார்கள். அநேகமாயிரம் பிராமணர்களுக்கு அன்னமிட்டனர். இரத்தினம், பொன் பூமிமுதலிய தானங்களுங் கொடுத்தார்கள். பிறகு பாண்டவர்களை அழைத்துகொண்டு நகரத்தில் பிரவேசித்தார்கள். துக்கங்கொண்டிருந்த சத்தியவதிக்கு வியாசர் சொல்லினார். சென்றகாலம் சுகமானது. இனிப் பூமியில் வஞ்சனை தோராகங்கள் மலியும். பாபம் மிகும், வர்ணசிரம தருமங்கள் கெடும். கல்லொழுக்கம் குளரும். அப்படிப்பட்ட கெட்ட காலம் வரப்போகிறது. இந்தக் கௌரவர்களுடைய அக்கிரமத்தினால் பூமி நிலைகெடும். ஆகையால் நீ தவஞ் செய்யும்படி வனத்துக்குப் போகவேண்டும். இந்தக் குலம் நாசமாய்ப் போகும். அதை நீ பார்க்கவேண்டாமென்றார். சத்தியவதி ஒப்புக்கொண்டு, அம்பிகை யிடம்போய் உன்பேரனுகிய துர்யோதனனால் பரதவம்சமும், பிரஜைகளும் அழிவார்கள் என்று அறிஞர் கூறுகிறார்கள். ஆகையால் தக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அம்பாலிகையையும் அழைத்துக்கொண்டு வனத்துக்குப் போவோமென்றாள். அவளும் ஒத்துக்கொண்டாள். சத்தியவதி பீஷ்மருடைய உத்தரவின்மேல் இரண்டு மருமகளையும் அழைத்துக்கொண்டு வனத்துக்குப் போனாள். அங்கே போய்த் தவஞ்செய்து புண்ணியலோகம் போனார்கள்.

பிறகு பாண்டவர்கள் தமது பிதா இருந்த வீட்டில் வசித்தார்கள். திருதராஷ்டிர புத்திரர்களுடன் விளையாடிக்கொண்டிருந்தார்கள். விளையாட்டிலும் கூடப் பாண்டவர்கள் மேன்மை யடைந்திருந்தார்கள். பீமசேனன் எல்லாரையும் அடக்கித்தான் சிறந்து விளங்கினான். எல்லாரையும் தரையில் தள்ளி யிழுப்பான். ஐந்துபேரைப் பிடித்துக்கொண்டு ஜலத்தில் முழுகுவான். அவர்கள் இறந்தவர்கள் போலாதலில் விட்டுவிடுவான். துர்யோதனனியர் மரத்தில் பழம் பறிக்கையில் பீமன் தன் காலால் மரத்தை உதைப்பான். அதனால் மரம் வேகமாக அசையும், அதன்மேலிருந்தவர்கள் அதினின்றும் கீழே விழுவார்கள் கைசண்டையிலும் விளையாட்டிலும் ஒருவரும் பீமனை ஜயிக்க

முடியவில்லை. இதனால் துரியோதனன் முதலிய கௌரவர்கள் பீமனை விரோதித்தார்கள். துர்யோதனன் தன்னுடைய மற்ற சகோதரர்களுடன் ஆலோசித்தான். இந்தப் பீமன் பலவான். இவன் ஒருவனுகவே நம்மெல்லாரையும் ஜயிக்கிறான். இவனை வஞ்சனையால் கொல்லவேண்டும். இவன் தூங்கும்போது இவனைக் கங்கையில் தள்ளிக் கொன்றுவிடுவோ மென்று தீர்மானித்தான். அப்படிச் செய்தால் யுதிஷ்டிரனையும் அர்ஜுனனையும் சிறையிலிட்டு நான் பூமியை ஆள்வேன் என்றான். இப்படி நிச்சயித்துச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான்.

ஒரு நாள் பாண்டவர்களும், திருதராஷ்டிர புத்திரர்களும் ஜலக்கிரீடை செய்யத் தீர்மானித்தார்கள். துர்யோதனன் பலவகையான கூடாரங்களை யடித்தான், வசிப்பதற்கு கேற்றதும் சகல பதார்த்தங்களாலும் நிறைந்ததுமான பல வீடுகளைக் கட்டுவித்தான். பிரமாண கோடியென்னு மிடத்தில் ஜலக்கிரீடை ஸ்தானத்தை யேற்படுத்தினன். அவ்விடத்தில் ஜலக்கிரீடை செய்து வஸ்திராபரணங்களைத் தரித்துக்கொண்டு, அறுசுவை யுண்டியைப் புசித்தார்கள். சாயங்கால பரியந்தம் விளையாடியபின் களைப்பினல் அங்கேயே தங்கினர்கள். பீமசேனன் அதிக களைப்பினல் மதபானஞ் செய்து மயக்கங்கொண்டு தன்னை மறந்து தூங்கினன். அப்போது துரியோதனன் கொடிகளினல் பீமனைக் கட்டிக் கங்கையில் போட்டுவிட்டான். உடனே பீமன் விழித்துக் கட்டுக்களை யறுத்துக்கொண்டு கரையேறினன். அது துர்யோதனன் செய்த வஞ்சனையென்று அவன் நினைக்கவில்லை. அதேயிடத்தில் மறுபடியும் படுத்து அயர்ந்து தூங்கினன். நடுராத்திரியில் பாண்டவர்களும் கௌரவர்களும் எழுந்திருந்தார்கள், துர்யோதனன் பீமனைக் கண்டு தன்பமும் வியப்புமடைந்தான். பின்பு அவன் தூங்குகையில் தொடிய சர்ப்பங்களை விட்டுக் கடிக்கச்செய்தான். சர்ப்பங்களுடைய பற்கள் பீமனுடைய தோலைக் குத்தச் சக்தியற்றிருந்தன, பீமன் விழித்துக்கொண்டு சர்ப்பங்களை நசுக்கித் தள்ளிவிட்டுத் துர்யோதனனுக்குப் பிரியமான சாரதியையும் அடித்துக் கொன்றுவிட்டான். பின்பு துர்யோதனன் சகுனியின் யுக்தியைக் கேட்டுப் பீமனுடைய ஆகாரங்களில் விஷத்தைக் கலந்தான் பீமன் அதையும் புசித்துப் பிழைத்திருந்தான். கர்ணன் சகுனி யிவர்களுடைய உபாயத்தினல் பீமனைக் கொல்ல உபாயந் தேடிக்கொண்டு அதே கவலையாக இருந்தான். வைசியப் பெண்ணினுடைய பிள்ளையாகிய யுயுத்ஸு பாண்டவரிடம் பிரியமுள்ளவனுகையால் இதை அவர்களுக்கு இரகசியத்தில் தெரிவித்தான். பாண்டவர்கள் விதுரருடைய புத்திமதியைக் கேட்டு இவற்றை வெளிக்குக் காட்டாமல் மனதுக்குள்ளேயே அடக்கிக்கொண்டு ஜாக்கிரதையாக இருந்தார்கள்.

———

138-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

பின்பு ஒரு நாள் துர்யோதனன் பிரமாண கோடியில் ஜலக்கிரீடை செய்ய நினைத்தான். கங்காதீரத்தில் அநேக சூலங்களை நாட்டினான், அவ்விடத்தில் முன்போலப் போஜனமும் செய்வித்தான், பின் பாண்டவர்களையும் அழைத்துக்கொண்டு கங்கைக் கரைக்குப போனான், அங்கே போன பின் சகோதரர்களை நோக்கி, நாம் ஜலக்கிரீடை செய்வோமென்று கூறினான். எல்லாரும் சம்மதித்தார்கள். எல்லாரும் ஜலக்கிரீடை செய்த பின், அறுசுவையுண்டி யருந்தினார்கள், பலவகையான பட்சணங்களைத் தின்றார்கள். துர்யோதனன் தானே பீமனுக்கு விஷம் கலந்த பட்சணங்களைச் சிரித்துக்கொண்டே கொடுத்தான் பீமசேனன் வஞ்சனையை அறியாமல் எல்லாவற்றையுந் தின்றான். பின்பு ஜலக்கிரீடை செய்து மகிழ்ந்தார்கள், எல்லாரும் அங்கேயே தங்கினார்கள். பீமன் அலுப்பினாலும், சரீரத்தில் விஷமேறினதினாலும், மதமயக்கத்தாலும் களைத்து அயர்ந்து தூங்கினான், துர்யோதனன் பீமனைக் கொடிகளினாலே தன் கையாலேயே கட்டிச், சூலம் நாட்டி யிருக்குமிடத்தில் தள்ளிவிட்டான். நல்ல காலத்தினால், பீமசேனன் சூலம் நாட்டிய இடத்தில் விழவில்லை, பீமன் நாககுமாரர்களைப் படித்துக்கொண்டு மூழ்கி நாகலோகம்போய்ச் சேர்ந்தான். நாகங்கள் பீமனை விஷப்பல் அழுந்தக் கடித்தன, அந்தச் சாப்ப விஷத்தால் பீமன் சரீரத்திலிருந்த விஷம் எடுபட்டுப் போயிற்று, பிறகு பீமன் விழித்துக்கொண்டான் கட்டுக்களை யறுத்துவிட்டுச் சர்ப்பங்களை நசுக்கிக் கொன்றான், சர்ப்பங்களெல்லாம் வாசுகியினிடம்போய் ஒரு மனிதன் கொடிகளாற் கட்டிண்டு கங்கையில் விழுந்தான். பிரக்ஞை யில்லாமல் எங்களிடம் வந்தான், நாங்கள் கடித்தும் பிழைத்துக் கொண்டான். அவன் மஹாவீரன். நீங்கள் அவனை இன்னனென்று தெரிந்து கொள்ளுங்க ளென்றார், வாசுகி சர்ப்பங்களை அழைத்துக்கொண்டு பீமனிடம் வந்து பார்த்தான் குந்திக்குக் கூடஸ்தனாகிய ஆர்யகன் என்கிற நாகனும் அவனைப் பார்த்தான். ஆர்யகன் தனது கொள்ளுப்போனை பீமனை இறுகத் தழுவிக் கொண்டான. அப்போது வாசுகி யிவனுக்கு என்ன வெகுமானஞ் செய்யலாமென்று யோசித்தான். ஆர்யகன் மஹாராஜாவே! இவனுக்கு இரத்தினங்களாலும் திரவியங்களாலும் பயனில்லை, உமக்குப் பிரியமிருந்தால் குடத்தில் நிரப்பியிருக்கும் இரசத்தை யிவன் குடிக்கிற வரையிலுங் கொடுக்கவேண்டு மென்றான், அப்படியே கொடுக்க உத்தரவளித்தான், பீமசேனன் ஸ்நானஞ்செய்து சுத்தனாய்க் கிழக்கு முகமாயுட்கார்ந்து ஒரு மூச்சில் ஒரு குடத்தைக் குடித்தான். இப்படி எட்டுக் குடங்களைப் பீமன் குடித்தான், பிறகு பீமன் சுகமாய்ப் படுத்து நித்திரை செய்தான்.

139-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

துரியோதனன் பீமனை நதியில் தள்ளிவிட்டு மகிழ்ந்திருந்தான், விடிந்த வுடன் பீமன் நமக்கு முன்னாலே எழுந்திருந்து நகரத்துக்குப் போய்விட்ட னென்று சொல்லிக்கொண்டு பறப்பட்டுப் போனான். யுதிஷ்டிரர் வீட்டுக்குப் போய்த் தாயே! எல்லாரும் தூங்கினோம். எழுந்திருந்து பார்க்கையில் பீமனைக் காணோம் எங்கும் தேடிப்பார்த்தேன். அவன் அகப்படவில்லை இங்கே வந்திருப்பானென்று நினைத்துக் கொண்டு வந்தேன். அவன் இங்கே வந்தானு? நீ யெங்கேயாவது அனுப்பினாயா? அப்படி யில்லாவிட்டால் அவன் கொலையுண்டிருப்பான் என்றுதான் நினைக்கவேண்டும் என்றார். குந்தி, அப்பா! அவன் இங்கே வரவேயில்லை, நீ உன் தம்பிகளோடு அவனைத் தேடி என்றாள். நால்வரும்போய் எங்கும் தேடிப்பார்த்தும் அவனைக் காணமல் வீடுவந்த குந்தியிடம் பீமன் அகப்பட வில்லையென்று சொன்னார்கள் குந்தி விதுரரை அழைத்து, பாண்டவரும் கௌரவரும் தோட்டத்திற்கு வினோயாடப் போனார்கள், பீமன் மாத்திரம் வரவில்லை, இராஜ்யத்திலும் பொருளிலும் ஆசையுள்ள துஷ்டனை துர்யோதனன் பீமனைக் கொன்றிருப்பானே என்று கருதி என் மனம் வருந்துகிறது. பீமனை அவன் வெறுக்கிறான் என்றாள். அவர் இவ் விஷயத்தை சொல்லாதே, இது துர்யோதனனுக்குத் தெரிந்தால் உன்னுடைய மற்றப் புத்திரர்களையும் கொல்வான். வியாசர் உன் புத்திரர்களுக்குத் தீர்க்காயுசு என்று சொல்லியிருக்கிறார், அது தவறாது. பீமன் வந்துசேருவான் என்று கூறி விதுரர் தமது வீட்டுக்குப் போனார். குந்தி தன் புத்திரர்களோடு கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

எட்டு நாட்களுக்குப் பின் பீமன் நித்திரை தெளிந்து எழுந்திருந்தான். பீமன் மஹா பலவானாயுள்ளவன். அப்போது நாகர்கள் பீமனைப் பார்த்து நீ எட்டுக் குடம் இரசத்தைக் குடித்தபடியால் உனக்குப் பதினாயிரம் யானை பலம் வந்திருக்கிறது. உன்னை ஒருவரும்வெல்ல மாட்டார்கள் உன் சகோதரர்கள் உன்னைக் காணமல் துன்பப்படுகிறார்கள். இந்த ஜலத்திலே ஸ்நானஞ் செய்து விட்டு உன் வீடு போய்ச் சேரு என்றார்கள். பீமன் ஸ்நானம் பண்ணிவிட்டுப் போஜனஞ்செய்து ஆடையாபரணங்களை அணிந்துக்கொண்டு புறப்பட்டான். அவனைத் தூக்கிக் கொண்டு முன்னிருந்த இடத்தில் கொண்டு வந்துவிட்டு மறைந்து போனார்கள். பீமசேனன் வீடுவந்து சேர்ந்தான், தாயாரையும் தமையனையும் வணங்கினான். தம்பிகளைத் தழுவிக் கொண்டான், சகோதரர்கள் நற்காலம் நற்காலம் என்று கூறிக் களித்தார்கள். பிறகு பீமசேனன் துர்யோதனன் செய்த வஞ்சனைகளையும், நாக லோகத்தில் நடந்தவகளையும் விடாமற் சொன்னான். யுதிஷ்டிரர் பீமனைப் பார்த்து இதை யினிச் சொல்லாதே என்று கூறி மற்றைய சகோதரர்களைப் பார்த்து நீங்கள் இதமு

தல் பீமனை விடாமல் பார்த்துக்கொண் டிருங்கள் என்று கட்டளையிட்டார். அவர்கள் இரகசியத்தை வெளிவிடாமல் ஜாக்கிரதையா யிருந்தார்கள். துர்யோதனன் மாத்திரம் பீமன் மீண்டு வந்ததைப் பார்த்து பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தான். திருதராஷ்டிரன் கிருபாசாரியாரை அழைத்துப் பாண்டவா கௌரவர்களாகிய இருதிறப் பிள்ளைகளையும் அவரிடம் ஒப்புவித்துத் தனுர் வேதங் கற்பிக்கச் சொன்னான். புத்திரர்கள் எல்லாரும் அவரிடம் தனுர்வேதம் கற்றுக் கொண்டிருந்தார்கள்.

140-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி

ஜனமேஜய மஹாராஜா வைசம்பாயனரைப் பார்த்துக் கிருபர் எப்படி நாணல் தண்டில் பிறந்தார். தனுர் வேதத்தை யெப்படி யாரிடம் கற்றுக் கொண்டார் என்று கேட்க வைசம்பாயனர் சொல்லுகிறார்.

கௌதமருஷிக்குச் சரத்வானென்று பேருள்ள ஒரு புத்திரன் பாணங்களோடு பிறந்தார். அவருக்குத் தனுர் வேதத்தில் அதிக விருப்பமிருந்தது. அவர் சகல அஸ்திரங்களையும் தவத்தினாலே யடைந்தார். அவருடைய தபசினாலே தேவேந்திரன் பயந்து ஜாலவதி யென்னும் தெய்வப் பெண்ணை அனுப்பினான். அவள் அப்படியே சரத்வானுடைய அந்திமத்துக்குப் போய் அவரை மயக்கி விட்டாள். அதனால் அவருடைய கைகளிலிருந்து அம்பும் வில்லும் நழுவி விழுந்தன. அப்பொழுது அவருக்கு மீரியமும் நழுவிற்று. அவருக்கு அது தெரியாது; அவர் அம்புவில் எல்லாவற்றையும் அங்கேயே போட்டுவிட்டு வேறிடம் சென்றார். அவர் மீரியம் இருபாகமாய்ப் பிரிந்து நாணற்றண்டில் விழுந்தது. அதிலிருந்து ஒரு ஆணும் ஒரு பெண்ணும் பிறந்தன. சந்தனு மஹாராஜன் வேட்டைக்கு வந்தபோது போர்வீரனால் கேள்விப்பட்டு அவ் வீரண்டு குழந்தைகளையும் எடுத்துக் கொண்டுபோய் வளர்த்தான். அதற்கு ஜாதகர்மாதிகளும் செய்தான். அரசன் இருபெயோடு வளர்த்தபடியால் பிள்ளைக்குக் கிருபர் என்றும் பெண்ணுக்குக் கிருபி என்றும் பேரிவைத்தான். சரத்வான் தம் புத்திரர்கள் அங்கிருப்பதை யறிந்து அஸ்தினபுரம்வந்து அவற்றின் உற்பத்தியை அரசனுக்குத் தெரிவித்தார். கிருபரும் தனுர் வேதத்தில் விருப்பமாய் கற்றுவந்தார், சரத்வான் எல்லாவற்றையும் அவருக்குக் கற்பித்தார் கிருபர் தனுர்வேதத்தில் சிறந்தவரானார் பீஷ்மர் அவரை அழைத்துக் கொண்டுவந்து தமது பேரன்மார்களுக்கு ஆசாரியராகினர். யாதவர்களும் மற்றும் அநேக அரச குமாரர்களும் வந்து தனுர்வேதம் பயின்றார்கள். பிறகு பீஷ்மர் தமது பேரன்மார்களுக்கு இன்னும் அதிகமாகக் கற்பிக்க விரும்பித் தகுந்த ஆசாரியரைத் தேடிக் கொண்டிருந்தார் தவத்காலும் தனுர் வேதத்தினாலும் சிறந்த

மஹிமையுள்ள துரோணரிடம் அந்தப் புத்திரர்களை ஒப்புவித்தார் என்றுகூற, ஜனமேஜயன், துரோணர் என்பவர்யார்? அவர் எப்படித் தனுர் வேதத்தில் வல்லவரானார்? பீஷ்மரிடம் எப்படிவந்தார் என்று கேட்க வைசம்பாயனர் சொல்லுகிறார்

கங்கோற்பத்திக்கு அருகில் பரத்வாஜர் என்ற ஒரு ரிஷி தவசு செய்து கொண்டிருந்தார். அவர் ஸ்நானஞ் செய்யப் போனார். அதற்கு முன்பாகவே கிருதாசி யென்னும் தெய்வப் பெண் வந்து அவலிடத்தில் ஸ்நானம் பண்ணிக் கொண்டிருந்தாள் ரிஷி அவள் மேல் ஆசைகொண்டார். அவருடைய வீரியம் உடனே வெளிப்பட்டது. அவர் அதைத் துரோணம் என்னும் பாத்திரத்திலேந்திக் கொண்டார். அந்தத் துரோண பாத்திரத்திலிருந்து ஒரு குழந்தை பிறந்தது; துரோணத்திலிருந்து பிறந்தபடியால் அந்தக் குழந்தைக்கு துரோணன் என்ற பேரிட்டார். துரோணர் சரியான வயது தொடங்கி வேதாத்தியயனஞ் செய்து நிறைவேற்றினார் பரத்துவாஜர் காலபரிடமிருந்து சகல அஸ்திரங்களையும் பெற்றுகொண்டார். அக்கினியாஸ்திரத்தையும் அடைந்தார். பரத்துவாஜர் அந்த அக்கினியாஸ்திரத்தை அக்கினி வேசியருக்குக் கொடுத்தார். அக்கினி வேசியர் அதைத் தன் சகோதரரான துரோணருக்குத் தந்தார். பிருஷத னென்னும் பாஞ்சால ராஜ புத்திரனுடன் துருபதன் அந்த ஆச்சிரமத்துக்கு வந்து துரோணரோடு அத்தியயனம் பண்ணிக்கொண்டு வந்தான். துருபதன் தகப்பனிறந்த பின் வடபாஞ்சால நாட்டில் அரசு புரிந்தான். பரத்துவாஜரும் சொர்க்கம் சென்றார். துரோணர் அங்கேயே யிருந்தார். சரத்வானுடைய புத்திரி கிருபியைப் பாணிக்கிரகணம் செய்தார். அவளிடம் அசுவத்தாமா பிறந்தான். துரோணர் தவஞ் செய்து கொண்டிருந்தார் அவருக்குத் தனுர்வேதத்திலேயே மனஞ் சென்றிருந்தது.

பரசுராமர் தமது பொருள்களை யெல்லாம் தானம் அளித்து விடுவதாகப் பிரசித்தம் பண்ணி யிருந்தார். துரோணர் அதைக் கேள்விப்பட்டுத் தனுர் வித்தையையும் ராஜ நீதி சாஸ்திரத்தையும் அவரிடமிருந்து கிரகிக்க விரும்பினார். துரோணர் தமது சிஷ்யாகளோடு புறப்பட்டு மஹேந்திர மலைக்குப் போய்ப் பரசுராமரைப் பார்த்தார். உடனே அவர் பாதத்தில் வணங்கி தான் பொருளை உத்தேசித்து வந்தே னென்று சொன்னார். பரசுராமர் என்னுடைய பொருள் எல்லாவற்றையும் பிராமணர்களுக்குக் கொடுத்து விட்டேன். பூமி முழுவதையும் கசியபருக்குத் தானம் செய்து விட்டேன். இப்போது என்னிடத்தில் என் சரீரமும் அஸ்திரசஸ்திரங்களுமே யிருக்கின்றன. இவற்றில் உனக்கு வேண்டுவதென்ன சொல்லு என்றார். துரோணர், உம்மிடத்திலுள்ள அஸ்திரசஸ்திரங்கள் எல்லாவற்றையும் மந்திரதந்திர யந்திரங்களோடு எனக்கு அருளவேண்டு மென்று கேட்டார். பரசுராமர் அப்படியே கொடுத்தார்.

141-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

பிறகு துரோணர் தன் சிநேகிதனுடைய துருபதனிடம் போய், இராஜாவே! நான் உம்முடைய சிநேகிதன் என்று சொன்னார். துருபதன் கோபங்கொண்டு சொல்லுகிறான். பிராமணரே! நீர் புத்தியில்லாமல் பேசுகிறீர். உன்னை பதவியிலிருக்கும் அரசனுக்கு உம்மைப் போன்ற தரித்திரன் சிநேகிதனுவது பொருத்தாது. முன் புண்டான சிநேகமும் நாளடைவில் சோர்ந்து போம். முன்பு உமது சாமர்த்தியத்தால் உம்மைச் சிநேகித்தேன். ஒருவரிடத்திலும் சிநேகம் நிலைப்பதில்லை. காமமும் கோபமும் கூடச் சிநேகத்தை ஒழிக்கும். தரித்திரன் ஐசுவரியவானுக்கும், மூடன் வித்துவானுக்கும், பேடன் வீரனுக்கும் சிநேகனுகான். செல்வம் கல்விகளில் சமமாயிருப்பவர்களுக்கே சிநேகித முண்டாகிறது. வேத மோதாதவன் வேத மோதினவனுக்குச் சிநேகிதனுகான். ரதமில்லாதவன் ரதமுள்ளவனுக்குச் சிநேகிதனுக மாட்டான். இராஜ்யமில்லாதவன் இராஜ்யமுள்ளவனுக்குச் சிநேகிதனுக மாட்டான். ஆகையால்என்னே உமக்குச் சிநேகிதனென்ற எண்ண வேண்டாமென்றான். துரோணருக்கு அதனுல் வருத்தமும் கோபமும் உண்டாயின. சிக்கிரத்தில் தாம் நினைவேற்றக் கூடியதான ஒரு பிரதிக்ஞையைச் செய்துகொண்டு அஸ்தினுபுரம் வந்து சிறுபர் வீட்டில் தங்கினர். ஒருவருக்குந் தெரியாமல் மறைந்து வசித்தார்.

பின்பு ஒரு நாள் இராஜ குமாரர்கள் எல்லாரும் வெளியிலே போய்ப் பந்து விளையாடினர்கள். அப்போது யுதிஷ்டிரருடைய மோதிரம் கிணற்றில் விழுந்து விட்டது. பந்தும் கிணற்றிலே விழுந்தது. இராஜ குமாரர்கள் அந்தக் கிணற்றைச் சூழ்ந்து கொண்டார்கள். பந்தை எடுக்கும் வழி தெரியாமல் மயங்கியிருந்தார்கள். அங்கே ஒரு கிழப் பிராமணர் வந்தார். இராஜகுமாரர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். அந்தப் பிரமணர் அவர்களைப் பார்த்துப் பந்தை யெடுக்க முடியாமலிருக்கின்றீர்கள். உங்களுடைய அஸ்திரவித்தை என்ன. சீவு ஈர்க்குகளினுலே பந்தையும் மோதிரத்தையும் நானே எடுத்து விடுவேன். எனக்குப் போஜன மிடுங்கள் என்றார். இராஜ குமாரர்கள், இருபருடைய உத்தரவினுல் நிரந்தரமான போஜனம் கிடைக்கும் என்றார்கள். துரோணர், ஒரு பிடி ஈர்க்கை மந்திரித்திருக்கிறேன்; இவற்றின் வல்லமையைப் பாருங்கள் என்று சொன்னர். அப்படியே அந்த ஈர்க்கில் ஒன்றைப் பந்தின்மேல் தைக்கச்செய்து பின் ஒன்றின்மேல் ஒன்றுக ஈர்க்கை ஒட்டிக்கொண்டச் செய்து பந்தை எடுத்தார். இராஜ குமாரர்கள் வியப்பை அடைந்தார்கள். இந்த மோதிரத்தையும் எடுக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள். அதையும் அப்படியே எடுத்தார். பிறகு இராஜ குமாரர்கள், மஹா ரிஷியே! இந்தச் சாமர்த்தியம் ஒருவருக்கும் கிடையாது. நீர்

யாவர்? உமக்கு நாங்கள் என்ன செய்யவேண்டும். அதை யறிய விரும்புகி றோமென்றார்கள். நீங்கள் என் குணங்களையும், வடிவத்தையும் பீஷ்மருக்குச் சொல்லுங்கள் அவர் அறிந்துகொள்வார் என்று சொன்னீர். இராஜகுமா ரர்கள் பீஷ்மரிடம் போய்த் துரோணர் சொன்னதை யெல்லாஞ் சொன் னார்கள். பீஷ்மர் அதைக் கேட்டு அவர் துரோணர் தானென்று உணர்ந்து கொண்டு, துரோணரை அழைத்து, அவர் அங்கே வந்த காரணத்தைக் கேட் டார். துரோணர் சொல்லுகிறார்,

பீஷ்மரே! நான் அக்னி வேசியரிடம் தனுர்வேதத் கற்றுக்கொண்டி ருந்தேன், பாஞ்சால ராஜகுமாரன் துருபதனும் அதை உத்தேசித்து அந்த ஆச்சிரமத்துக்கு வந்து குருகுல வாசஞ் செய்தான், அவன் எனக்குச் சினே கிதனாக இருந்தான். அப்போது துருபதன் என்னைப் பார்த்து, எனக்குப் பட்டாபிஷேகமான பின் உமக்குப் பாதி இராஜ்யம் தருவேன், என் சுகமும் பொருள்களும் உம்முடையதே என்றான். பிறகு அவன் இராஜ்யத்துக்குச் சென்று அரசனானன். எனக்கு அசுவத்தாமா என்கிற புத்திரன் பிறந்தான். அந்தப் பிள்ளைக்குப் பால் கொடுப்பதற்காக ஒரு பசு வேண்டுமென்று எங்கும் அலைந்தேன் கிடைக்கவில்லை நான் யவைமாவைக் கஞ்சியாக்கிக் கொடுத்துக் குழந்தையை ஏமாற்றிக்கொண்டு வந்தேன். அவன் நானும் பால் குடித்தே னென்று மற்றக் குழந்தைகளுக்கு எதிரில் குதித்துக்கொண்டு சொன்னான். மற்றப் பிள்ளைகள் பரிகாசம் செய்தார்கள். அதனால் எனக்கு வருத்த முண் டாயிற்று. அதை உத்தேசித்து மனைவி புத்திரர்களுடன் துருபதனிடம் போனேன். அவனைப் பார்த்துக் கபடமில்லாத மனத்தோடு நான் உன்பழைய சினேகிதனென்று சொன்னேன். அவன் என்னை அலட்சியம் பண்ணிச் சிரித்துப் பரிகாசம் செய்தது மல்லாமல், சமான ஸ்திதியின் ஒற்றுமையினாலே ஒருவர்க் கொருவர் சினேகமாகிறார்கள். தரித்திரன் தனவானுக்கும், மூடன் வித்துவானுக்கும், சக்தியில்லாதவன் சூரனுக்கும் சினேகமாகிறதில்லை. ஐசு வரியத்தில் சிறந்த அரசர்களுக்கு உம்மைப்போன்ற தரித்திரனும், பொரு ளில்லாதவனும் சினேகிதமாகிறதில்லை, இராஜ்ய விஷயமாக உமக்கு நான் வாக்குக்கொடுத்தது எனக்கு ஞாபகமில்லை. ஒரு ராத்திரி மட்டும் உமக்கு வேண்டிய போஜனத்தை உண்டுபோமென்றான் அதனால் எனக்குக் கோபம் உண்டாயிற்று. அப்பொழுது ஒரு சிறிய சபதம் செய்து கொண்டேன். அதற் காகச் சிஷ்யர்களை லீரும்பி அஸ்தினபுரம் வந்தேனென்றார். பீஷ்மர் மகிழ் ந்து துரோணரே! கௌரவ புத்திரர்களுக்குத் தனுர்வேதத்தைக் கற்பியும். உமது சபதத்தை நிறைவேற்றிக்கொள்ளும். இந்த ராஜ்யம் தனம் எல்லாம் உம்மூடையனவே இஷ்டம்போல் இருக்கலாமென்றார்.

142-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

பீஷ்மர் துரோணரைக் கௌரவர்களுக்குக் குருவாகஏற்புக்கொண்டார். நூற்றைந்து பேரன் மார்களையும் அழைப்பித்துத் துரோணரிடம் ஒப்புவித்தார். துரோணருக்கு அளவற்ற தனம் கொடுத்தார். அப்போது துரோணர் பீஷ்மரை நோக்கி இங்கே கிருபாசாரியாரும் இருக்கிறார். அவருக்கு மனவருத்தம் உண்டாவதாயிருந்தால் நான் சொற்ப தனத்தை யாசகம் வாங்கிக்கொண்டு என் ஆச்சிரமம் போய் வீடுகிறேனென்றார். பீஷ்மர் கிருபர் இருக்கட்டும். அவரை யெப்போதும் பூஜிப்பேன். போஷிப்பேன். நீர் என் பேரர்களுக்குக் குருவாக இரும். உம்மைத்தான் ஆசாரியராகக் கருதுகிறேன். இந்தக் குமாரர்களைச் சிஷ்யர்களாகக் கொண்டு அஸ்திரங்களைக் கற்பியும் என்றார். பின்பு துரோணருக்கு வீட்டைக் கொடுத்துப் பல பண்டங்களாலும் அதை நிரப்பினார் வேண்டிய தனங் கொடுத்தார். பேரன் மார் எல்லாரையும் அவரிடம் விட்டு விட்டார். பிறகு துரோணர் தனித்திருக்கையில் எல்லாச் சிஷ்யர்களும் வந்து துரோணரை வணங்கினார்கள். துரோணர் அவர்களைப் பார்த்து, சிஷ்யர்களே! என்மனதில் ஒருகுறையிருக்கின்றது, நீங்கள் அஸ்திரங்களில் தேர்ச்சிபடைத்த பின் அதை நிறைவேற்றவேண்டும் என்றார். அதைக்கேட்டுக் கௌரவ புத்திரர்கள் எல்லாரும் சும்மா இருந்தார்கள். அர்ஜுனன் மாத்திரம அவர் கேட்டதை யெல்லாம் நிறைவேற்றுகிறதாக உறுதி கூறினான். துரோணர் அர்ஜுனனைப் பலவாறம் தழுவி, உச்சிமோந்து சந்தோஷித்தார். துரோணர் அசுவத்தாமாவை அழைத்து, நீ இவனைச் சினேகனுகக்கொள் என்று அர்ஜுனனைக் காட்டிசொன்னார். அர்ஜுனன் நல்லது என்று அசுவத்தாமாவைக் கட்டிக்கொண்டான். பின் குரு பாதங்களில் பணிந்து சுவாமீ! இன்றுமுதல் நான் உமக்கு உள்பட்டவன். உமது சிஷ்யன். உமது கருணையால் ஜீவிக்கிறவன் என்று சொன்னான். பிறகு துரோணர் தம் சிஷ்யர்களுக்கு அஸ்திரங்களைக் கற்பித்தார். யாரவர்களும், அநேக தேசத்து அரச குமாரர்களும்வந்து துரோணருக்குச் சிஷ்யராஞர்கள். கர்ணனும் சிஷ்யனானன். அவன் அர்ஜுனனிடம் பொறுமைகொண்டு துர்யோதனனிடம் சேர்ந்துகொண்டான். ஆனல் அர்ஜுனன் எல்லாரையும்விடச் சிறந்தவனானன், தன் புத்தி கோசரத்தினல் ஒன்றை நூறாக விருத்தியாக்கிக கொண்டான். துரோணர் அர்ஜுனனைச் சமானமில்லாதவனென்று மதித்தார். ஜலம்கொண்டு வருகிறதற்காக எல்லாருக்கும் கமண்டலங்களைக் கொடுத்தார். அசுவத்தாமாவுக்குக் குடத்தைக் கொடுத்தார். குடத்தில் சீக்கிரம் நீர் நிரம்பும். கமண்டலத்தில் நிரம்பாது. அசுவத்தாமன் சீக்கிரம் வந்துவிடுவான், மற்றவர்கள் தாமதிதது வருவார்கள, அவர்கள் வருகிறதற்குள் அசுவத்தாமாவுக்கு அநேக இரகசியங்களோ உபதேசித்தார். அர்ஜுனன் மாத்திரம் கமண்டலத்தை வருணஸ்திரத்தால் நிரப்பிக்கொண்டு அசுவத்தா

மாவுடன் கூடவருவான். அந்த இரகசியங்களை யுக்தியால் தெரிந்து கொள்வான். அர்ஜுனன் கற்றுக் கொள்வதில் ஊக்க முள்ளவனாக இருந்தான். அதைக்கண்ட துரோணர் வேலைக்காரனை யழைத்து எப்போதும் அர்ஜுனனுக்கு இருட்டில் அன்னம் போடாதே. வெளிச்சத்திலேயே போடு என்றார். ஒருநாள் அவன் சாப்பிடுகையில் விளக்கு அணைந்து இருட்டாய்விட்டது. அவன்கை பழக்கத்தினால் தவறாமல் அன்னத்தை வாயிலூட்டியது. அதைக்கண்ட அர்ஜுனன் இது பழக்கத்தினால் வந்ததென்று அறிந்து அதுமுதல் இருட்டிலேயும் அப்பியாசம் செய்யத் தொடங்கினான் ஒருநாளிரவில் அர்ஜுனனைப் பார்த்து, இனி உனக்குச் சமானமான வில்லாளிகள் உலகத்தில் இல்லையென்று சொல்லும்படியாகச் சிறந்த இரகசியமான விஷயங்களை உனக்கு உபதேசிக்கிறேனென்று சொன்னார்.

பிறகு துரோணர் அர்ஜுனனுக்குக் குதிரைச்சண்டை, யானைசசண்டை, தேர்ச்சண்டை, காலாட்படைச சண்டைகளில் பழக்கினார் கௌரவர்களுக்குப் பலவகைச் சண்டைகளைக் கற்பித்தார். இதைகேட்ட அளவிறந்த அரசரும் அரசகுமாரர்களும் அவருக்குச் சிஷ்யராகவந்து சேர்ந்தார்கள். ஏகலவியன் என்னும் வேடனும் வில்வித்தையை விரும்பித துரோணரிடம் வந்தான். துரோணர் அவனுக்கு வித்தை கற்பிக்காமல், அவனைப் பார்த்து உனக்கு எல்லாவித்தையும் வரும், நான் உதவவு கொடுக்கிறேன், நீ வீட்டுக்குப்போ என்றார் அவன் துரோணரை வணங்கி, வீட்டுக்குப் போனான், அங்கே துரோணரைப்போல ஒரு உருவமுண்டாக்கினான். அதைக் குருவாகக்கொண்டு அஸ்திராப்பிரயாசம் செய்து எதிரற்றவனானான். கௌரவர்களும் பாண்டவர்களும் குருவின் உத்தரவுபெற்று வேட்டைக்குப் போனார்கள். அவர்களோடு சென்ற ஒரு நாய் ஏகலவியனைக் கண்டு குரைத்தது. அவன் ஏழு பாணங்களை ஒரு கொத்தாக நாயின்வாயி லெய்தான். அது அம்போடு ஓராஜ குமாரர்களிடம் வந்தது. அவர்கள் அதன் வாயிலிருக்கும் அம்பைக்கண்டு ஆச்சரிய மடைந்தார்கள். அந்த ஏகலவியனையும் பார்த்தார்கள். அவனைப் பாண்டவர்கள் நீயாரென்று கேட்டார்கள். அவன் நான் ஹிரண்யதனுஸ் என்னும் வேடராஜனுடையகுமாரன். துரோணருடைய சிஷ்யன் என்றான். பாண்டவர்கள் நகரத்துக்கு மீண்டுவந்து அந்த அதிசயத்தைக் குருவுக்குச் சொன்னார்கள், அர்ஜுனனுக்கு மாத்திரம் அது மனவருத்தமா யிருந்தது குருவைத் தனியாகக்கண்டு, சுவாமீ! உமக்கு என்னைவிட மேலான சிஷ்ய னில்லையென்று சொன்னீர்கள். வேடகுமாரன் ஒருவன் என்னைவிட மேலான சிஷ்யனாக இருக்கிறானே என்று கேட்டான். துரோணர் அர்ஜுனனை அழைத்துக்கொண்டு வேடனிடம்போனார். ஏகலவியன்வந்து துரோணரை வணங்கி முறைப்படி அவரைப் பூஜித்து நான் உமது சிஷ்யனென்று சொன்னான் துரோணர் நீ யென் சிஷ்யனானால் உன் வலக்கைக் கட்டைவிரலை அறுத்து எனக்குக் குருதக்ஷிணையாகக்கொடு என்று கேட்டார் அவன சந்தோஷத்துடன் முகமலர்ந்து அப்

படியே அறுத்துக் கொடுத்தான். அர்ஜுனனும் திருப்தியடைந்தான். பீமனும் துர்யோதனனும் கதாயுத்தத்தில் தேர்ச்சி யடைந்தார்கள். அசுவத்தாமா இரகஸ்யமானவற்றை யெல்லாங் கற்றுக்கொண்டு சிறந்தவரானார். நகுல சகாதேவர்கள் நிலம்ப யுத்தத்தில் வல்லவரானார்கள். யுதிஷ்டிரர் தேர்ச் சண்டையில் தேறியிருந்தார். அர்ஜுனன் எல்லாவற்றிலும் வல்லவனும் உலகத்திலுள்ள அதிரதவீரர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவனுமாக் கீர்த்திபெற்றான், குரு பக்தியில் இணையற்றிருந்தான், பீமன் அர்ஜுனன் இருவரையும் துர்யோதனன் முதலானவர்கள் வெறுத்தார்கள்.

பிறகு துரோணர் தமது சிஷ்யர்களுக்குள் குறியை அடிக்கும் வல்லமை எவரிடத்திலிருக்கிறது என்று பார்க்க விரும்பினர். மரத்தால் ஒரு பட்சியைச்செய்து, அதை யொரு மரத்தின் நுனியில் கட்டிவைத்தார். அவர்களை அங்கே அழைத்துக்கொண்டு வந்து அந்தக் குறியை அவர்களுக்குக் காட்டினர். நீங்களெல்லாரும் வில்லை வளைத்து அம்புகளைத் தொடுத்துக்கொண்டு ஜாக்கிரதையாய்க் காத்திருங்கள். நான் சொன்னவுடன் அந்தப் பட்சியின் தலையை வெட்டிக் கீழே தள்ளவேண்டும், சித்தமாயிருங்கள் என்றார். தர்ம புத்திரரை அழைத்து அந்தப் பட்சியைப் பார் என்று சொன்னர். பிறகு நீ அந்தப் பட்சியைப் பார்க்கிறாயா என்றார். யுதிஷ்டிரர் ஆம் பார்க்கிறேன் என்றார். சற்று பொறுத்து நீ எங்களெல்லாரையும் பார்க்கிறாயா என்றார். அவர் ஆம் எல்லாவற்றையுந்தான் பார்க்கிறேன் என்றார். துரோணர் வெறுப்படைந்து, உன்னால் முடியாது நீ போ என்று சொல்லி யனுப்பிவிட்டார். பிறகு முறையே துர்யோதனன் முதலானவர்களைக் கேட்டார். அவர்களும் அப்படியே சொன்னபடியால் துரோணர் மனம் வருந்திப், பின் அர்ஜுனனைப் பார்த்து, இப்போது உன் முறை வந்திருக்கிறது. இந்தப் பட்சியைப் பார். நான் சொன்னவுடன் இந்தப் பட்சியின் தலையை வெட்டித் தள்ளவேண்டும் என்றார். சித்தமாயிருக்கும் அர்ஜுனனைப் பார்த்து நீ பட்சியைப் பார்க்கிறாயா என்று கேட்டார். அவன் ஆம் பார்க்கிறேனென்றான். சற்றுப் பொறுத்து அர்ஜுன! பட்சியையும், மரத்தையும், என்னையும் பார்க்கிறாயா என்று கேட்டார். அர்ஜுனன் இல்லை; பட்சியை மாத்திரம் பார்க்கிறேனென்றான். துரோணர் மகிழ்ந்து, சற்றுப்பொறுத்து அர்ஜுன! நீ இந்தப் பட்சியைப் பார்க்கிறது உண்மையா சொல் என்றார், அர்ஜுனன் நான் அதன் சிரத்தை மாத்திரம் பார்க்கிறேன். உடலையும் பார்க்கவில்லை என்றான். துரோணருக்கு உடம்பு புளகித்தது. உடனே விடு என்றார். அர்ஜுனன் அம்பை விட்டுவிட்டான். அது போய் அந்தப் பட்சியின் தலையை அறுத்து வீழ்த்தியது. துரோணர் உடனே யெழுந்து அர்ஜுனனைக் கட்டித் தழுவிக்கொண்டு, திருபதனை ஜயித்து விட்டால்போல மகிழ்ச்சி அடைந்தார். ஒரு நாள் துரோணர் தம் சிஷ்யர்களோடு கங்கையில் நீராடிக்கொண்டிருந்தார். அப்போது ஒரு முதலை அவரது காலைப் பிடித்துக்கொண்டது. துரோணர் எல்லாரையும் அழைத்து

இந்த முதலையைக் கொன்று என்னை விடுவியுங்கள் என்றார். அவர் வாய் மூடி முன் அர்ஜுனன் ஜலத்திற்குள் இருந்த முதலையை அம்புகளால் கொன்றான். மற்றொரு நாள் துரோணர், துரியோதனன், சித்திரசேனன், விவிம்சதி, துச் சாலனன், அசுவத்தாமா, அர்ஜுனன் இவர்களே அழைத்துக்கொண்டு போய் மண் பதுமை யொன்றை அவர்கள் பார்க்கும்படி தண்ணீருக்குள் போட்டார். அவர்களுடைய கண்களைக் கட்டிவிட்டார். பின்பு ஜலத்துக்குள் போட்ட பதுமையை அடிக்கச் சொன்னர். அர்ஜுனன் மாத்திரம் பதினேந்து பாணங் களால் அதை அடித்தான். அப்போது துரோணர் எல்லாச் சிஷ்யர்களிலும் அர்ஜுனனைச் சிறந்தவனாக மதித்தார். ஒரு நாள் துரோணர் அர்ஜுனனே அழைத்து, அதி ரதவீரனே! மஹா அருமையான பிரம்ம சிரஸ் என்னும் இந்த அஸ்திரத்தை மந்திரத்தோடு உபதேசிக்கிறேன். நீ இதை மனிதர்கள் மேலே பிரயோகம் பண்ணாதே. தேவாசுரர்களில் யாராவது உன்னை எதிர் த்து யுத்தஞ் செய்தால், அவர்களைக் கொல்வதற்கு மாத்திரம் இதை உப யோகம் செய் என்று சொல்லிக் கொடுத்தார். அர்ஜுனன் வாங்கிக்கொண் டான். துரோணர் அர்ஜுனனைப் பார்த்து உனக்குச் சமானமான வில்லாளி இந்த உலகத்தில் இடையாது என்று கூறிப் புகழ்ந்து அவனை மகிழ்வித்தார்.

144-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

துரோணர் தமது சிஷ்யராகிய இராஜகுமாரர்கள் எல்லாரும் அஸ்திரவி த்தையில் தேர்ச்சி யடைந்ததைக் கண்டு, இராஜ சபைக்குப்போய் எல்லாருக் கும் எதிரில், திருதராஷ்டிரனே நோக்கி மஹாராஜாவே! உமது புத்திரர்கள் வித்தையில் தேர்ந்துவிட்டார்கள். அதைப் பரிட்சித் தறிந்துகொள்ள வேண் டுமென்றார். திருதராஷ்டிர மஹாராஜன்மகிழ்ந்து அப்படியே யாகட்டுமென்று கூறினன். பின் வித்துரரைப்பார்த்து வித்துரா? ஆசாரியர் எப்படிச் சொல்லுகி ரூரோ அப்படியெல்லாம் செய்யென்று கட்டளையிட்டான். பிறகு துரோண ருடைய அபிப்பிராயப்படி அரங்கேற்றுசாலை (வித்தையைத் தெரிவிக்கும் இடம்) யைச் செய்து முடித்தார்கள். எல்லாத் தேசத்தரசர்களும் ஸ்திரீக ளும் தங்குவதற்குத் தனித்தனி யிடங்கள் வகுத்து அவற்றில் உட்காருகிறதற் குப் பீடங்கள் முதலியவற்றால் சிரப்பினர்கள். பின் தேசங்களோடும் இந்த காளைக் குறிப்பிட்டு ஓலை அனுப்பினர்கள், குறிப்பிட்ட தினம்வந்தது. அந்தத் தினத்தில் திருதராஷ்டிரன் பீஷ்மர் கிருபர்முதலிய பெரியவர்களோடும் பரி வாரங்களோடும் அரங்கேற்று சாலைக்கு வந்தான். காந்தாரிமுதலிய இராஜஸ் திரீகளும் வந்து சேர்ந்தார்கள். நகரத்து ஜனங்களெல்லாரும் வந்தார்கள். துரோணர் அசுவத்தாமாவோடு காட்சி சாலைக்கு வந்துசேர்ந்தார். துரோணர்

வியாசமுனிவருடைய அனுக்ஞை பெற்றுக்கொண்டு அரங்கபூஜை செய்தார். பிறகு ஆயுதங்களெல்லாம் வந்துசேர்ந்தன. கௌரவகுமாரர்களும் பாண்டவர்களும் விரற்பட்டி சுவசம்முதலியன தரித்துக்கொண்டு வில் அம்புகளுடன் சபைக்குவந்தார்கள். எல்லாரும் துரோணரையும் கிருபரையும் வணக்கி, ஆயுதங்களைப் பூஜித்தார்கள். பின் எல்லாரும் தத்தம் ஆயுதங்களை யெடுத்துக் கொண்டார்கள். ஜேஷ்ட கனிஷ்ட முறைப்படி விளையாடினார்கள். அதைப் பார்த்துக்கொண்டிருந்த ஜனங்களும் அரசர்களும் மெச்சிப் புகழ்ந்தார்கள். பீமசேனனும் துரியோதனனும் கதையை யெடுத்துக்கொண்டு வந்தார்கள். இருவரும் ஒருவரை யொருவர் மேம்பட வேண்டு மென்கிற கருத்தோடு சாமர்த்தியம் காட்டி விளையாடினார்கள்.

145-வது அத்தியாயம்.

லம்பவ பர்வத் தொடர்ச்சி.

அவ்விருவரும் விளையாடும்போது ஜனங்கள் இரு பிரிவாகப் பிரிந்து துர்யோதனன் பட்சத்திலும் பீமன் பட்சத்திலும் பிரியம் வைத்தார்கள். துரியோதனன் பட்சத்தார். கௌரவராஜனே! ஜயமடையக் கடவாயென்றனர். பீமன் பட்சத்தார் பீமனே வாழ்த்தினார்கள். என்ன கேடுமோ என்று சபையார் பயந்தார்கள். அப்போது துரோணர் அசுவத்தாமாவைப் பார்த்து அவ்விருவரையும் அடக்கு என்றார். அசுவத்தாமா அவர்களுக்கு நடுவில் புகுந்து சண்டையை நிறுத்துங்கள் என்று தடுத்தார் இருவரும் அடங்கிவிட்டார்கள். பின்பு துரோணர் சபையைப் பார்த்து இதோ இருக்கிற இந்த புத்திரனை அர்ஜுனன் வித்தையைப் பாருங்கள். அவன் எனக்கு புத்திரனெனுமவன். சகல வித்தைகளிலும் வல்லவன். விஷ்ணுவுக்கு ஒப்பானவன் என்று கூறி அர்ஜுனனுக்கு உத்தரவு கொடுத்தார். அர்ஜுனன் அம்பு வில்லோடு சபையில் வந்தான். அவனைக் கண்ட ஜனங்கள் முகமும் அகமும் மலர்ந்து இவன் அழகிற் சிறந்தவன். பாண்டவர்களில் நடுப்பிறந்தவன். தேவேந்திரனுடைய குமாரன். அஸ்திரங்களில் சிறந்தவன் கௌரவர்களைக் காப்பவன். தர்மிஷ்டன், அறிவில் மேலானவனென்று இரைந்து சொன்னார்கள். திருதராஷ்டிரன் இது என்ன சப்தமென்றான். விதுரர் அர்ஜுனன் சபையில் வந்திருக்கிறான் அதனால் அந்தச சப்தமுண்டாயிற்று எனறார். திருதராஷ்டிரன் மிகவும் சந்தோஷம் அடைந்தான். அர்ஜுனன் பாணங்களிலும் அநேக விநோதங்களைச் செய்தான். தேவாஸ்திரங்களினால் யாவரையும் வியப்படையும்படி செய்தான். சத்தி கதை முதலிய சகல ஆயுதங்களிலும் தனக்குள்ள வல்லமைமை காட்டினான். எல்லாரும் ஆச்சரியப்பட்டு அவனைப் புகழ்ந்தார்கள். பாண்டவர்கள் துரோணரைச் சூழ நின்றார்கள்.

146-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

அப்போது கர்ணன் சபையில் பிரவேசித்தான். துரோணரையும் கிருபரையும் வணங்கினான். பின் அர்ஜுனனை நோக்கிச் சொல்லுகிறான். அர்ஜுனா! நீ காட்டின வில்வித்தையை விட மேலான வித்தையை நான் காட்டப் போகிறேன். நீ கர்வப் படாதே யென்றான். அர்ஜுனனுக்கு வெட்கமும் கோபமும் மூண்டாயிற்று. துரியோதனனுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. கர்ண துரோணருடைய அனுமதியினால் அர்ஜுனன் செய்த எல்லாவற்றையும் செய்தான். துரியோதனன் கர்ணனைத் தழுவிக்கொண்டு, நீ வந்தது என் பாக்கியம். என்னையும் கௌரவருடைய இராஜ்யத்தையும் உன்னிஷ்டம் போல நடத்திக்கொள் என்றான். கர்ணன் அரசனே! எல்லாவற்றையும் அடைந்து விட்டேன் அர்ஜுனனோடு யுத்தஞ் செய்ய விரும்புகிறேன். நான் உனது சிநேகத்தை இச்சிக்கிறேனென்றான். துரியோதனன் அவன் கையைப்பிடித்து, அவனைக் கட்டிக்கொண்டு கர்ணா! நீ என்னோடு சகல போகங்களையும் அனுபவி. என் உறவினர்க்கு மகிழ்ச்சியை யுண்டாக்கு. என் பகைவர் தலையில் காலை வை என்று சொன்னான். அர்ஜுனன் கோபங் கொண்டு, கர்ணா! உன்னை அழைத்து கூப்பிடாமல் யாருமிறவர்களும், கேளாமற் பேசுகிறவர்களும் போகிற உலகத்துக்கு அனுப்பிவிடுவே னென்றான், கர்ணன் அர்ஜுனா! என் வீணிற் பேசுகிறாய். அம்பினாலே பேசு. குருவின் சந்நிதியிலே உன் தலையை அறுக்கிறேன் என்றான். அர்ஜுனன் குருவின் உத்தரவைப் பெற்றுக்கொண்டு யுத்தத்துக்குச் சித்தமானான். கர்ணனும் சித்தமானான். துரியோதனன் முதலியவர் கர்ணன் பக்கத்திலிருந்தார்கள். பீஷ்மர் துரோணர் முதலியவர்கள் அர்ஜுனன் பக்கத்தில் இருந்தார்கள். அப்போது கிருபாசாரியார் கர்ணனைப் பார்த்துச் சொல்லுகிறார். பாண்டு புத்திரனாகிய இந்த அர்ஜுனன் உன்னோடு யுத்தஞ் செய்யச் சித்தமாயிருக்கிறான். நீயும் உன் பெற்றோர் பேரையும், குலத்தையும் சொல். அதன் பின் அர்ஜுனன் உன்னோடு போர் செய்வானோ மாட்டானோ என்று பார்ப்போம். குலமும் குலாசாரமும் மில்லாதவர்களோடு இராஜ குமாரர்கள் சமானமாய் நின்று போர் செய்யமாட்டார்கள் என்றார். கர்ணன் வெட்கித் தலை குனிந்தான்.

அப்போது துர்யோதனன் கிருபரைப் பார்த்து ஆசாரியரே! இராஜர்கள் மூன்று வகையாயிருக்கிறார்கள். கல்ல குலத்தில் பிறந்தவன், சூரன், சேனையை நடத்துகிறவன் என்பவர்களாம். இப்படிச் சாஸ்திரம் கூறுகின்றது. ஜலத்திலிருந்து நெருப்பும், பிராமணனிடத்திலிருந்து க்ஷத்திரிய ஜாதியும், கல்லிலிருந்து லோகங்களும் உண்டாகின்றன. அவைகளின்சக்தி எங்கும் வியாபிக்கிறது. அதனால் குறை கூறத்தகாது. இராஜனில்லாதவனோடு அர்ஜுனன் சண்டை செய்யமாட்டா னென்றால் இவனை நான் இப்போது அங்க

தேசத்துக்கு அரசனுக்குகிறேன் என்றான். பின் திருதராஷ்டிரனுடைய அனுமதியினால் பாண்டவனை அந்த தேசத்துக்கு அரசனுக்கினான். அன்று முதல் கர்ணன் துரியோதனனோடு மிக ஒற்றுமையாய்ச் சிநேகித்தனனான்.

147-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

பிறகு சேர்ச்சாரதி சபைக்கு வந்தான். கர்ணன் எழுந்திருந்து பிதாவாகிய அவனை வணங்கினான். சாரதி அவனைத்தழுவி ஆலிங்கனம் செய்துகொண்டான். அதைப் பார்த்துப் பீமசேனன் சிரித்து, கர்ணா! நீ அர்ஜுனனால் கொல்லத்தக்கவனல்ல. அங்கதேச அரசுக்குந் தக்கவனல்ல. உடனே வீட்டுக்குப்போய் உன் குலாசார தருமமாகிய சாட்டையை எடு என்றான். துரியோதனன் பீமனைப் பார்த்து, க்ஷத்திரியர்களுக்குப் பலமே சிரேஷ்டம். க்ஷத்திரியனவன் சண்டை செய்தே தீரவேண்டும் சூரர்களுகரும், நதிகளுக்கும் உற்பத்தியைக் கவனிக்கத்தகாது. சுப்பிரமண்யருற்பத்தி, கிருபர், தூரோணர் முதலியவர்களுடைய பிறப்பு எப்படி? ஆதலால் சிறந்தவனை கர்ணனைக் குலஹீன னென்று சொல்வது தகாது இந்தக் கர்ணன் அங்கதேசத்துக்கு மாத்திரமல்ல, பூமி முழுமைக்கும் அரசனுகத்தக்கவன். இவன் பட்டாபிஷேகம் பெற்றது எவனுக்குப் பொறுக்கவில்லையோ அவன் யுத்தத்துக்கு எழுந்திருக்கட்டும் என்றான் சூரியாஸ்தமன மாயிற்று எல்லாரும் அரங்கை விட்டுப் புறப்பட்டுத் தத்தம் வீடு போய்ச் சேர்ந்தார்கள். கர்ணனோடு சேர்ந்துகொண்ட வுடனே துரியோதனனுக்கு அர்ஜுனனிடத்திலுள்ள பயமொழிந்தது.

148-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

துரோணர் இப்போது தான் காலம் என்று தம் சபதத்தை நிறைவேற்ற நினைத்தார். துரோணர் நூற்றைந்து இராஜ குமாரர்களையும் பார்த்து நீங்கள் எனக்கு ஒரு சிறந்த குரு தட்சணை கொடுக்கவேண்டுமென்று கேட்டார் அவர்கள் காரணங்கள் குரு தட்சணைக்காக என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள். நீங்கள் எல்லாரும் பாஞ்சால ராஜனுகிய துருபதனை யுத்தத்தில் வென்று பிடித்துக்கொண்டு வர வேண்டும். இதுதான் நான் விரும்புகிற குருதட்சணை யென்று சொன்னார். எல்லாரும் சம்மதித்து உடனே யுத்த சன்னாகஞ்செய்துக் கொண்டு புறப்பட்டுப் பாஞ்சால நகரம் போனார்கள். கர்ணன், துரியோதனன் துச்சாஸனன் முதலிய எல்லாரும் பாஞ்சால நகரத்தைச் சூழ்ந்தார்கள். அது கேட்ட பாஞ்சாலனும் தன் சகோதரர்களுடன் யுத்தத்துக்குப் புறப்பட்டு வந்து

அவர்களே சந்தித்தான் அப்போது அர்ஜுனன் துரோணரைப் பார்த்து இவர்கள் முதலிற் சண்டை செய்யட்டும். அதன் பின் நாங்கள் போகிறோம். இவர்களால் பாஞ்சாலனைப் பிடிக்க முடியாது என்று தன் சகோதரர்களோடு தூரத்திலேயே நின்று கொண்டிருந்தான். பாஞ்சாலனுடைய பாணங்கள் எங்கும் பரவின. துரியோதனன் முதலானவர்கள் மேல் கணக்கில்லாத அம் புகளைச் சொரிந்தான். கௌரவர்கள் பயந்து நடுங்கி ஓடினார்கள். அர்ஜு னன் இதுதான் சமயமென்று கண்டு யுதிஷ்டிரரை அங்கேயே நிறுத்திவிட்டு நகுல சகாதேவர்களைத் தன்க்கு இரதரட்சர்களாக வைத்துக்கொண்டு தேரி லேறிப் புறப்பட்டான். பீமசேனன் கதையை எடுத்துக்கொண்டு முன்னுலே போனான். பீமசேனன் பாஞ்சால சேனை சமுத்திரத்தில் புகுந்து கதையால் நொறுக்கினான். சேனைக்கடலைக் கலக்கினான். அர்ஜுனன் குருவின் எண் ணத்தை நிறைவேற்றக் கருதி பாணங்களே மழைபோலச் சொரிந்து யானைகுதி ரை காலாட்களை மூலைக்குமூலை சிதற வடித்துத் துரத்திக்கொண்டு திருபதனி டம் வந்து விட்டான். பாஞ்சாலரும் பாண வருஷம் பெய்தார்கள். அந்த யுத்தம் மிகப் பயங்கரமாக இருந்தது. அப்போது அர்ஜுனன் எதிரிகளின் பாணங்களே விலக்கி கூணத்துக்குள் அம்புகளே வாரியிறைத்து எங்கும் இருளே உண்டாக்கி விட்டான். ஆகாசமும் பூமியும் தெரியவில்லை. துருபதன் அர் ஜுனனே மெச்சி அவனே விரைந்து வந்து எதிர்த்தான். அர்ஜுனன் பெரும் பாணவருஷத்தால் பாஞ்சாலனை மூடி விட்டான் அந்தச் சேனையில் ஹா! ஹா! என்ற தொனி கிளம்பிற்று. சத்தியஜித்து என்பவன் பாஞ்சாலனுக்குச் சகாயமாக அர்ஜுனனே யெதிர்த்தான். அர்ஜுனன் கூரிய அம்புகளால் சத் தியஜித்தை யடித்து, அவன் வில்லே ஒடித்துவிட்டுப் பாஞ்சாலனை நோக்கிச் சென்றான். பாஞ்சாலனுடைய தேர் குதிரை சாரதிகளைக் கொன்று, வில்லே ஒடித்துவிட்டு, கத்தி கேடகங்களுடன் பாஞ்சாலன் தேரில் பாய்ந்து அவனைப் பிடித்துக் கொண்டான் பின் பீமனே நோக்கிப் பீமா பாஞ்சாலன் சேனை யைக் கொல்வதிற் பயனில்லே. பாஞ்சாலன் கௌரவர்களுக்குச் சிநேகிதன். நாம் குரு தட்சணைதானே கொடுக்க வேண்டும். சண்டையை நிறுத்து என் றான். பீமனும் திரும்பிவிட்டான். அர்ஜுனன் துருபதனைப் பிடித்துக் கொண்டு வந்து துரோணரிடம் ஒப்புவித்தான். பாஞ்சாலனைப் பார்த்துத் துரோணர் சொல்லுகிறார்.

யக்ஞசேனா! பயப்படாதே. நீ பால்யத்தில் என்னிடத்தில் வீணையாடி னதினுல் உன்னிடம் சிநேகிதம் வைத்தேன் இராஜ்யமில்லாதவரோடு நீ சிநேகிதம் செய்யமாட்டாய். ஆதலால் உன் இராஜ்யத்தில் கங்கைக்கு வட பாகம் என்னுடையது. தென் பாகத்தை உனக்குத் தருகிறேன். இப்போது நான் உனக்குச் சமமான இராஜாவாய் விட்டபடியால் என்னோடு சிநேகிதம் செய், நான் உன் நட்பை விரும்புகிறே னென்றார் பாஞ்சாலன் அப்படியே ஒப்புக்கொண்டான். துரோணர் அவனே விடுவித்து, தக்கபடி மரியாதை

செய்து, பாதி இராஜ்யத்தையும் கொடுத்தார். பிறகு அவமானப் பட்ட துருபதன் துரோணரை கொல்லும்படியான புத்திரனை பெறவேண்டுமென்று கருதி எங்கும் அலைந்து கொண்டிருந்தான். இப்படியாகப் பல தேசங்களடங்கியுள்ள அஹிச்சத்திரா புரியை அர்ஜுனன் ஜயித்து துரோணருக்குக் கொடுத்தான்.

149-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி

துருபதன் தான் துரோணரால் அவமானப்பட்டதை நினைத்துக்கொண்டு அன்று முதலாக நல்ல நித்திரையில்லாமலே யிருந்தான். அதற்குத் தக்க பிராமணர்களைத் தேடித் திரிந்துகொண்டே யிருந்தான். துரோணரை வெல்லத் தனக்கு அசாத்தியமென்று கருதி வருந்தினான். அதற்குத் தகுந்த பல முள்ள புத்திரர்களைப் பெறுவதற்காகக் கவலைப்பட்டு அலைந்து கொண்டிருந்தான். கங்காதீரத்தில் கல்மாஷியென்னும் நகரத்துக்கருகில் ஒரு பிராமணனிருப்பதையறிந்து அவரிடம் போனான். யாஜர் உபயாஜர் என்ற பிராமணர்களை யடைந்தான். உபயாஜரை யடைந்து அவர் விரும்பின எல்லாவற்றையுந் தருவதாகச் சொன்னான். அவர் நீர் வந்த காரியமென்னவென்று கேட்டார். துரோணரைக் கொல்லவேண்டும். அதற்கு முயற்சி செய்கிறேன். அதை நிறைவேற்றினால் விரும்பின எல்லாப் பொருள்களையும் தருவதாகச் சொன்னான். அவர் பொருள் எனக்கு வேண்டாம். பொருளே விரும்புவோரைத் தேடிக்கொண்டு போம் என்றார். அவருக்குப் பணி செய்துகொண்டு அங்கே ஒரு வருஷத்துக்குப் பின் உபயாஜர் துருபதனுக்குச் சொல்லுகிறார். இராஜனே! எனக்கு மூத்த சகோதரர் ஒருவரிருக்கிறார். அவருக்குப் பொருளாசை மிகுதியாக உண்டு. அவரிடம் போனால் காரியசித்தியாமென்றார். துருபதர் அவர் சொற்படியே யாஜரிடம் போனான். அவரைப் பூஜித்து மஹாரிஷியே! துரோணரை வெல்வதற்கு ஒரு புத்திரனும், அர்ஜுனனுக்கு மனைவியாக ஒரு பெண்ணும் எனக்கு வேண்டும். அதற்குத் தக்க யாகத்தைச் செய்வித்து என் துக்கத்தை மாற்றும். உமக்கு அளவில்லாத பசுக்களும் திரவியங்களும் தருவேனென்றான், யாஜர் சம்மதித்து யாகத்துக்கு ஆரம்பஞ் செய்யச் சொன்னார். உபயாஜரையும் தனக்குச் சகாயமாகச் சேர்த்துக்கொண்டார். யாகத்தைத் தொடங்கி நடத்தினார். ஸௌத்திராமணி யென்ற யாகத்தைச் செய்து பூர்ணாஹுதி சமயத்தில், துருபதன் மனைவி பூத்திருந்ததனால், அந்த ஹவிஸை அக்னியில் ஹோமஞ் செய்தார். அந்த யாகாக்னியிலிருந்து ஒரு குமாரன் வில் அம்புகளுடன் கவசம் தரித்துக்கொண்டவனும் எழுந்திருந்தான். அப்போது இக்குமாரன் துரோணருக்குச் சிஷ்யனாகவும் கூற்றமாகவும் ஜனித்திருக்கிறான் என்று அசரீரிவாக்கு உண்டாயிற்று. இரண்டாம் முறை ஹோ

மஞ் செய்ததில் பாஞ்சாலி தீயிலிருந்து தோன்றினள் அவள் அழகுக்குப் பூமியில் இணையில்லை. அவளுடைய தேகமணம் ஒரு காத தூரம் வீசும். அப் போது அசரீரி இவள் க்ஷத்திரியகுலத்தை நாசம் செய்யப் பிறந்திருக்கிறா ளென்று கூறிற்று. அது கேட்ட பாஞ்சாலர் மன மகிழ்ந்தார்கள். அந்தக் குமா ரனுக்கு த்ருஷ்ட த்யுமனன் என்று பேர் இட்டார்கள் புத்திரிக்கு நிறம் கருமையாக இருந்தபடியால் அவளுக்குக் கிருஷ்ணை யென்று பேரிட்டார்கள். திருஷ்டத்யுமனன் வேதாத்தியயனஞ் செய்தபின் அஸ்திர வித்தைக்காகத் துரோணரை அடைந்தான். துரோணரும் சம்மதித்து அவனைச் சிஷ்யனாகக் கொண்டார்.

150-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

ஜனமேஜயன், திருபதன் எப்படிப் பிறந்தானென்று கேட்க வைசம்பாய னர் சொல்லுகிறார். பாஞ்சால ராஜனுக்குப் புத்திரனில்லை. புத்திரர்களைப் பெறும் பொருட்டு அவன் காட்டுக்குச் சென்று அங்குள்ள ர்ஷிகளுக்குப் பணிவிடை செய்தான். வாயுபட்சணஞ்செய்துகொண்டு கொடுந்தவம் செய் தான். அப்போது மனைகை அங்கேவந்து பூக்கொய்துகொண் டிருந்தாள். அவளை அரசன்பார்த்தவுடனே வீரியம் வெளிப்பட்டது. அரசன் பதக்களால் மறைத்தான், அதிலிருந்து துருபதன் பிறந்தான். அப்படிப் பிறந்ததாலே தான் அவனுக்குத் துருபதன் என்று பேரிட்டார்கள். அரசன் புத்திரனைப் பரத்துவாஜரிடம் ஒப்புவித்துவிட்டுத் தான் பாஞ்சால தேசம் போனான். துருபதன் துரோணரிடம் கூடிச் சகல வித்தைகளையும் அப்பியாசம் பண்ணி னான். அவனுடைய பிதா இறந்த பின் துருபதன் அரசனானான் என்று சொ ன்னார்.

151-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

திருதராஷ்டிர மஹாராஜன் தரும புத்திரருக்கு இளவரசு பட்டங் கட்டி னான். யுதிஷ்டிரர் ஒழுக்கம், குணம், வெகு கீர்த்திகளையடைந்தார். பீமசே னன் பலராமரிடத்தில் கதை முதலிய சண்டைகளைக் கற்றுக்கொண் டான். அர்ஜுனன் அஸ்திரவித்தையில் இணையற்றவனானான். துரோணர் அவனுக்குச் சமானம் பூமியில் இல்லை யென்று நிச்சயித்தார். ஒரு நாள் அர்ஜு னனைப் பார்த்துச் சொல்லுகிறார்.

என் குருவான அக்னிவேசியர் அகஸ்தியருடைய சிஷ்யர். நான் அவ ருடைய சிஷ்யன். அவர் கொடுத்த ப்ரம்மசிரஸ் என்னும் அஸ்திரத்தை

உனக்குக் கொடுத்திருக்கிறேன். அது தேவலோகத்திலுள்ளது. அதற்குத் தகுந்தவன் நீதான். அதை மனிதர்மேல் ஏவாதே. மறைந்து மாயயுத்தம் செய்யும் தேவாசுரர்கள் பூதங்கள் முதலியவர்கள் மேல்வீடு. நான் கேட்குங் குரு தட்சணையுங்கொடு என்றார், அர்ஜுனன் கொடுக்கிறே னென்றான். அப் போது துரோணர் யுத்தம் நேரிடும்போது நீ எனக்குச் சரியாக நின்று யுத்தம் செய்யவேண்டுமென்று கேட்டார். அவன் சரியென்றொத்துக்கொண்டான். துரோணர் அவனைத் தழுவிக்கொண்டு, உனக்கு எதிரானவர்கள் ஒருவரும் இல்லை. நானே உனக்கு எதிராகமாட்டேன். யாதவ வம்சத்தில் பிறந்த கிருஷ்ணமூர்த்தி ஒருவர்தான் உனக்கு மேற்பட்டவர். அவர் சகல லோக கர்த்தர். அவரே பரபிரமம். அவரே மும்மூர்த்தியாயுள்ளவர். அவர உலக ரட்சணார்த்தமாக அவதாரம் செய்திருக்கிறார். அவர் உனக்குச் சினேகராவார் உனக்கும் அவருக்கும் மாறுத கேடமிருக்கும். அவர் நந்தகோபன் வீட்டிலிரு ந்த போது இந்திரன் அவரிடம் போய், பாண்டு புத்திரனுகிய அர்ஜுனன் என் அம்சம். பூபாரத்தீர்ப்பதற்கு உமக்குச் சகாயமாக இருப்பான். அவனை நீர் காப்பாற்றவேண்டுமென்று பிரார்த்தித்தான். அவர இந்திரனே! நான் அர் ஜுனனை அறிவேன். எனக்கும் அவனுக்கும் ஒருபோதும் விரோதம உண்டா காது அவனை நான் காப்பாற்றுவேன் என்றார நீ அவரையே சரணமாக அடை யென்றார். அர்ஜுனன் ஒப்புக்கொண்டான் அர்ஜுனன் முதலிய நால் வரும் யுதிஷ்டிரராகிய நமையனுக்கு அடக்கியிருந்தார்கள். ஸௌவீரன் என்னும் அரசனைப் பாண்டவர்கள் கொன்றார்கள. பாண்டு ஜயிக்காமலிருந்த யவனராஜனை அர்ஜுனன் அடக்கி விட்டான். விபுலனென்னும் ஸௌவீர ராஜனை அர்ஜுனன் ஜயித்தான். தத்தாமித்திரன் அல்லது சுமித்திரன் என் னும் ஸௌவீரராஜனையும் அர்ஜுனன் ஜயித்தான். மிழக்குத் தேசத்துப் பதி னாயிரம் மஹாரதவீரர்களை அர்ஜுனன் ஒருவனுகவே ஜயித்தான். தென் திசை முழுவதையும் ஜயித்தான். அரசர்கள் பலரையும் ஜயித்து அளவற்ற தனத்தைக் கொண்டுவந்து சேர்த்தான். இதனைக் கண்ட கௌரவர்கள் பயந் தார்கள். பீமனைப் பகைத்தார்கள். பாண்டவர்கள் பிறதேசங்களை வென்று தம் தேசத்தை விசாலமாகினார்கள். பாண்டவர் கீர்த்தியைக்கேட்டுத் திரு தராஷ்டிரனும் அவர்களை வெறுத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தான்.

152-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

துரியோதனன் அர்ஜுனனுக்கும் பீமனுக்கும் பயந்து பெருந்துக்க மடைந்தான். அதை யுத்தேஜித்துக் கர்ணன் சகுனி முதலியோர் பாண்டவர் களைக் கொல்லப் பிரயத்தனம் செய்தார்கள். பாண்டவர்களும் அதை யறிந் தும் இரகசியமாய் மனதில் வைத்துகொண்டும், விதுரருடைய உபாயத்தைக்

கேட்டுக்கொண்டும் ஜாக்கிரதையாக இருந்தார்கள். நகரத்து ஜனங்கள் சபையிலும் நாற்சந்திகளிலும் பாண்டவர்களைப் பற்றிப் புகழ்ந்து பேசினார்கள். குருடனுயிருப்பதால் திருதராஷ்டிரனுக்கு முன்னமே ராஜ்யமில்லை. பாண்டுவே ராஜாவாக இருந்தான். இப்போது அவன் அரசனுகமாட்டான். ஆகையால் யுதிஷ்டிரருக்கே பட்டாபிஷேகம் செய்யவேண்டும். அவரே பரிபாலிக்கத்தக்கவர் என்று கூறினார்கள். அதைக் கேட்ட துரியோதனனுக்கு மனவருத்தமுண்டாயிற்று. திருதராஷ்டிரனிடம் சொல்லுகிறான். நகரத்து ஜனங்கள் உம்மையும் பீஷ்மரையும் அலட்சியமாகப் பேசுகிறார்கள். யுதிஷ்டிரரைப் புகழ்கின்றார்கள். பாண்டு இராஜியமடைந்தான். உமகு கண்ணில் லாமையால் நீடைக்கவில்லை. யுதிஷ்டிரன் இராயஜித்தை யடைந்தால் அவனுக்குப் பின் அவன் புத்திரன் அரசு புரிவான். பரம்பரையாக அவன் சந்ததிக்கே யிராஜியம் சேரும். நாங்கள் இராஜியம் இழப்பதும் அல்லாமல் எங்கள் சந்ததியும் இழிவடையும். இதற்கு என்ன யுக்தியென்று கேட்டான். திருதராஷ்டிரன் சொல்லுகிறான்.

பாண்டு தர்மத்தவறுதலன், என்னிடத்திலும் என் ஜனங்களிடத்திலும் பிரியமுள்ளவன். எனக்குத் தெரியாமல் அவன் ஒன்றுஞ் செய்ததில்லை. அவனைப்போலவே அவன் புத்திரனுகிய யுதிஷ்டிரனும் தர்மிஷ்டன். எல்லாராலும் புகழ் பெற்றவன். ஜனங்களும் அவனை விரும்புகிறார்கள். அவனை நாம் எப்படி விலக்கலாம் சகல சேனைகளும் மந்திரிகளும் அவர்களுக்கு வசப்பட்டிருக்கிறார்கள். நாம் தர்மத்தை விட்டு அவர்களுக்கு விரோதம் செய்தால் ஜனங்கள் நம்மை வெறுத்து இராஜியத்திலிருக்க கூட விரும்ப மாட்டார்கள் என்றான். அது கேட்ட துரியோதனன் பீஷ்மர் ஒரு கட்சியிலும் சேர மாட்டார். அசுவத்தாமா என் பட்சத்திலிருக்கிறார். அவரிருக்கிற இடத்திலேயே துரோணரிருப்பார். இருபரும் அப்படியேதான். விதுரர் மாத்திரம் அவர்களிடம் அன்பு வைத்திருக்கிறார். ஆனுலும் நம்மை எதிர்க்கும் வல்லமை அவருக்கில்லை. ஆகையால் பாண்டவர்களை இப்போதே வாரணுவதத்திற்கு அனுப்பிவிடும், என் தகப்பனை எப்படியாவது சிலிர்த்திசெய்யும் என்று கூறினன்.

———

153-வது அத்தியாயம்.

ஸம்பவ பர்வத் தொடர்ச்சி.

திருதராஷ்டிரன் பாண்டவர்களுடைய குணங்களையும் பராக்கிரமத்தையும் கேட்டு விசனமடைந்தான். மந்திரிகளி லொருவராகிய கணிகர் என்னும் பிராமணரை அழைத்துப் பிராமணோத்தமரே! பாண்டவர்கள் கர்வீகள். நான் அவர்களை வெறுக்கிறேன். ஆதலால் அவர்கள் விஷயத்திலென்ன செய்யலாம். நீர் சொன்னபடி செய்கிறே னென்றான். துரியோதனன், கர்ணன்,

சகுனி முதலியோர் கணிகரே! பாண்டவர்கள் எப்போதும் ஜாக்கிரதையாக இருக்கிறார்கள். அவர்களுக்கு நாங்கள் பயப்படுகிறோம். ஆகையால் எங்களுடைய க்ஷேமத்துக்காக நாங்கள் எப்படி நடக்கவேண்டும் அதைச் சொல்லுமென்றார்கள். கணிகர் திருதராஷ்டிரனை நோக்கிச் சொல்லுகிறான். அரசனே! இராஜன் எப்போதும் தண்டனை செய்வதிலேயே கண்ணையிருக்கவேண்டும், சத்துருக்களுக்கு இடந்தரக்கூடாது. தான் அவர்களிடத்தில் பிரவேசித்து அவர்களை யடக்கிக் கொண்டிருக்க வேண்டும் தண்டத்தினால் எல்லாரும் அஞ்சுவார்கள். தண்டத்திலேயே அரசன்காரியம் சாதித்துக்கொள்ள வேண்டும் தன் குற்றங்களைப் பிறரறிந்து கொள்ளும்படி நடந்துகொள்ளாமல் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். பிறரைத் தவறும் தருணம் பார்த்து எதிர்க்கவேண்டும். ஆமை தன் அங்கங்களை யடக்கிக் கொண்டிருப்பதுபோல் அரசர்கள் தமது அங்கங்களை இரகசியமாக மறைத்து வைத்துக்கொள்ள வேண்டும். பிராமணர்களை பூஜிக்கவேண்டும் துஷ்டர்களை யடக்குவதற்கும் பிராமணர்களைப் பூஜிப்பதற்குமே அரசன் உற்பத்தியாயிருக்கிறான். துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனத்தினாலே இக பர சுகமிரண்டும் உண்டாகின்றன. அரசன் குற்றவாளியைத் தண்டிக்காமலிருக்கக்கூடாது. தண்டிக்காமல் விட்டால் உலகத்தில் நிந்தையும், மறுமையில் நரகத்தையும் அடைவான். அரசனுடைய பெருமை யடைந்ததை மறந்து இராசனுக்கே தீங்கு செய்ய நினைத்தால் அவனுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்துவிடவேண்டும். உத்தியோகஸ்தர்கள் அரசனுக்கு அடங்காமற் போனால் அவனை உடனே தள்ளிவிட்டு அந்த ஸ்தானத்தில் தர்மிஷ்டனை மற்றொருவனை நியமிக்கவேண்டும். அந்த உத்தியோகஸ்தர்கள் சரியாக நடக்கிறார்களா இல்லையா வென்று தூதர்களால் அறிந்துகொண்டு நடக்கவேண்டும். அரசன் ஒரு காரியத்தைத் தொடங்கினால் அதைப் பூர்ணமாக நிறைவேற்றவேண்டும். பகைவர்களைத் தாட்சண்யமில்லாமல் கொல்லவேண்டும் பராக்கிரமமுள்ள எதிரியை அவனுடைய ஆபத்துக்காலத்தில் கன்றாய் அடித்தத் தரத்திவேண்டும். இரக்கம் வைக்கக்கூடாது. சத்துருவை பல ஈனனென்று அலட்சியம் பண்ணக்கூடாது. சிறிய நெருப்பு பெரிய ஆதாரத்தைப் பற்றிக் காடு முழுவதையும் தகிக்கின்றது. பொட்டையாயிருக்க வேண்டியபோது பொட்டையாயிருக்க வேண்டும். செவிடனாயிருக்க வேண்டியபோது செவிடனாயிருக்க வேண்டும். வில்லைப் புல்லாக்கவேண்டும் மானைப்போல ஜாக்கிரதையாகப் படுக்கவேண்டும். வசப்பட்ட சத்துருவைச் சாம முதலிய உபாயத்தால் வசப்படுத்திக் கொல்லவேண்டும். சரணமடைந்தவனென்று இரக்கம் வைக்கக்கூடாது. கொல்லப்பட்டவனால் பயம் உண்டாவதில்லை, அபகாரம் செய்தவனையும் சத்துருவையும் கொன்றுவிட வேண்டும். சத்துரு பட்சத்தில் சேர்ந்தவர்களையும் இரக்கமில்லாமல் கொல்லவேண்டும். முடியாவிட்டால் அரசனை மாத்திரமாயினும் கொல்லவேண்டும். வேரற்றால் மரம் நிலை நில்லாததுபோல அரசனழிந்தால் அவனைச் சேர்ந்தவர்கள் நிலை கெட்டழிவார்கள். சத்துருவினிடத்தில்

எப்போதும் பயத்தோடிருக்க வேண்டும். அலட்சியமாயிருக்கக் கூடாது. யோகி, ஞானிகளைப்போல வேடம் பூண்டு மயக்கி நம்பச்செய்து, சமையம் வந்தபோது செந்நாயைப்போல விழுந்தடிக்க வேண்டும் என்றான். ஆசாரம் முதலியவை துறட்டுக் கோலைப்போலச் சத்துருக்களை வசப்படுத்தும் கருவிகளாம். தனக்கு நற்காலம் வருகிற வரையில் சத்துருவைத் தோளிலும் சுமக்க வேண்டும். காலம் வந்தபோது மண் சட்டியைபோலக் கீழே தள்ளி உடைக்க வேண்டும்; கெஞ்சினாலும் விடக்கூடாது. எப்படியாவது சத்துருவை ஒழித்துவிட வேண்டும் என்றான். திருதராஷ்டிரன் சாமாதி உபாயங்களால் சத்துருவை யெப்படிக் கொல்லலாமென, சொல்லுகிறான்.

மஹாராஜாவே! ஒரு சிறிய கதை சொல்லுகிறேன் கேளும். தந்திரமும் சாமர்த்தியமுமுள்ள ஒரு கரி யிருந்தது. அது புலி, எலி, கீரிப்பிள்ளை, செந்நாய் இவைகளோடு சேர்ந்து சுகேகமாய் வாழ்ந்தது. அக்தக காட்டில் ஒரு மான் கொழுத்துப் பருத்துப் பலசாலியாயிருந்தது. அதைக் கொல்ல ஒன்றுக்கும் வல்லமையில்லை. புலிக்குக் கூடச் சக்தியில்லை. கரி புலியைப் பார்த்து இந்த மான் பலமும் வேகமும் உள்ளது. ஆதலால் உன்னால் அதைக் கொல்ல முடியவில்லை. மான் படுத்திருக்கும்போது எலி அதன் காலை கடித்துக் காயப்படுத்திவிட்டால் அப்புறம் அதைக் கொல்வது எளிது என்று யுக்தி சொல்லிற்று. எல்லாம் சம்மதித்தன. எலி மானின் காலைக் கடித்தது. உடனே புலி அதைக் கொன்றது. கரி நீங்களெல்லாரும் ஸ்நானம் செய்யப்போங்கள். நான் இதைக் காத்துக்கொண்டிருக்கிறேனென்றது. புலி முதலில் ஸ்நானம் செய்து வந்தது, கரி மிகவும் விசனமாயுட்கார்ந்திருந்தது. புலி நீ ஏன் விசனப்படுகிறாய்; நாம் இந்த மாம்சத்தை புசித்து விலாயாடுவோம் என்றது. கரி நான் சொல்வதைக் கேள். எலி என்னிடத்தில் வந்து புலி மானைக் கொல்ல சக்தியற்றதாய் விட்டது இந்த மானை நான் கொன்றேனென்றது. அதன் கர்வத்தைப் பார்த்த பின் இந்த மாமிசத்தைத் தின்ன எனக்குப் பிரியமில்லையென்றது. புலி அப்படியா? நல்லது நான் என் வல்லமையால் சம்பாதித்துப் புசிக்கிறேனென்று போய் விட்டது. உடனே எலி வந்தது, அதைப் பார்த்து எலியே! கீரிப்பிள்ளை இக்கே வந்து இந்த மாம்சம் விஷம். நானிதைத் தொடேன். எலியைத் தின்னப் போகிறேனென்று கூறிற்று என்றது. எலி பயந்து ஓடிப்போயிற்று. பிறகு வந்த செந்நாயைப் பார்த்து, புலி உன் மேல் கோபமாயிருக்கிறது. அது தன் மனைவியோடு இப்போது வரும். பிறகு உன் இஷ்டம் என்றது. செந்நாய் பயந்து உடனே ஓடிப்போயிற்று. பிறகு கீரி வந்தது. கரி அதைப் பார்த்து புலி முதலானவை என்னோடு சண்டை செய்து தோற்று ஓடிப்போயின. நீயும் என்னை ஜெயித்து மாம்சத்தைப் புசி என்றது. உன்னோடு சண்டையிட எவ்ளுலாகாது என்றுகூறி அதுவும் ஓடிப்போய் விட்டது, ஆலோசனையும் புத்தியும் உள்ள கரி இந்த மாம்சத்தை நிரம்பத் தின்றது. இந்த கரியைப் போல நடக்கும் அரசனுக்கு ஒரு போதும் கெடுதிவராது. பய

முள்ளவர்களைப் பயமுறுத்திப் பிரிக்கவேண்டும். சூரனை வணங்கி விலக்கவேண்டும். ஒத்த பலசாலியையும் பொருளாசைக்காரனையும் பொருள் கொடுத்து அடக்கவேண்டும். தாழ்ந்தவனைத் தண்டத்தினாலொடுக்க வேண்டும். புத்திரனாலும், மித்திரனாலும், பிதாவாலும், சகோதரனாலும், குருவானாலும் தனக்குப் பகையாயிருந்தால் உடனே யோசிக்காமல் அவனைக் கொல்லவேண்டும். பொருள் கொடுத்தாவது, விஷமிட்டாவது, பொய்ச் சத்தியம் செய்து நம்பிக்கை வரப்பண்ணியாவது கொல்ல வேண்டும். கருவத்தோடு தன்மார்க்கத்தில் நடப்பவன் குருவானாலும் அவனைக் கொல்லவேண்டும். அரசன் தனக்குள்ளிருக்கும் பகையை வெளிப்படுத்தாமல் சிநேகிதனைப் போல பாசாங்கு செய்து கொண்டிருக்கவேண்டும். கோபமாய் ஒரு போதும் பேசக்கூடாது. எப்போதும் இன்பமாகவே பேசவேண்டும். தன்னை நம்பாதவனைத் தான் நம்பக்கூடாது. நம்பினவனிடத்திலும் பூர்ண நம்பிக்கை வைக்கக்கூடாது. தூதர்களை நாலா பக்கங்களுக்கும் அனுப்பி அங்கங்கே நடக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். தெரியவருகையே காணப்பட வேண்டும். ஆனால் காரியத்தில் கடினமாயிருக்கவேண்டும். தருமத்தை அதிகமாகச் செய்தால அவனுக்கு அர்த்த காமங்களில்லை. அர்த்தத்தைப் பெரிதாக நினைத்தால் தர்ம காமங்களில்லை. காமத்தை யதிகமாகக் கொண்டால் தர்மார்த்தங்களில்லை. எந்தக் காரியத்தையும் ஆலோசித்தே செய்யவேண்டும். ஆலோசனை வெகு இரகசியமாகவே யிருக்கவேண்டும். சத்துருவுண்டானால் அவனை அற்பமாக நினைக்கப்படாது. நினைத்தால் பனைபோலவேருன்றி வளருகிறான். ஆதலால் நீர் பாண்டவரிடத்தில் செய்யத்தக்கதை யோசித்துச் செய்யும். பாண்டவர்கள் உமது சகோதரன் புத்திரர்கள். பராக்கிரமசாலிகள். பின்னால் வருத்தமுண்டாகாதபடி தகுந்த உபாயத்தை யோசித்துச் செய்யுமென்று கணிகன் சொன்னான்.

154-வது அத்தியாயம்.

ஜதுக்ருக பர்வம

கணிகன் உபதேசத்தைக் கேட்டபிறகு துரியோதனன், கர்ணன் சகுனியோடியோசித்துப் பாண்டவர்களை யெரித்து விடத் தீர்மானித்தான். திருதராஷ்டிரனும் சம்மதித்தான். விதுரர் அவர்களுடைய எண்ணத்தை யுக்தியால் தெரிந்து கொண்டார். அவர் பாண்டவர்களோடும், குந்தியோடும் யோசித்துத் தப்பிப்போகும் மார்க்கத்தை ஆலோசித்தார். அதற்காக ஒரு கப்பலைச் செய்தார். அது காற்றுக்கும் அலைகளுக்கும் அசையாத பலமுடையது. இதனாலே தான் நீயும் உன் புத்திரர்களும் தப்பித்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னார்,

பின்பு ஒரு நாள் துரியோதனன் திருதராஷ்டிரனை நோக்கிப் பாண்டவர்களை வாரணவதத்திற்கு அனுப்பி விடுமென்றான். திருதராஷ்டிரன் பாண்டு தர்மிஷ்டன். அவன் புத்திரனுமிய யுதிஷ்டிரனும் அவனைப்போலவே தர்மம் தவறாமல் நடக்கிறான். எல்லாருக்கும் பிரியமுள்ளவனுமிருக்கிறான். அவனுக்கு இந்த இராஜ்யம் பாம்பரைக் கிரமப்படி வந்திருக்கிறது. அவனை நாம் எப்படி இராஜ்யத்தை விட்டுப் பலவந்தமாய்த் துரத்தக்கூடும்? அப்படிச் செய்தால் எல்லாரும் நமக்கு எதிரிகளாவார்கள். அதனால் நமக்கே அபாயம் சேரும் என்றான், அதைக் கேட்ட துரியோதனன் பிதாவே! நீர் சொன்னது சரிதான். அதற்காக நான் மந்திரி முதலானவர்களை ஐசுவரியத்தாலும், மற்ற உபாயங்களினாலும் வசப்படுத்தி யிருக்கிறேன். அவர்களெல்லாரும் நமது பட்சத்திலேயே யிருப்பார்கள். நீர் பயப்படவேண்டாம். பாண்டவர்களை உபாயமாக வாரணவதத்துக்கு அனுப்பிவிடும் என்றான். திருதராஷ்டிரன் குழைந்தாய்! எனக்கும் இந்த எண்ணமுண்டு. இது தகுதியற்றது. பீஷ்மர் துரோணர், கிருபர் முகவியார் சம்மதிக்க மாட்டார்கள் என்றான். பீஷ்மர் இருதிறத்தாருக்கும் ஒப்பாது. கிருபரும் துரோணரும் அசுவத்தாமா இருக்கிற பட்சத்திலே தானிருப்பார். அசுவத்தாமா என் பட்சத்திலே தானிருக்கிறார். விதுரர் பாண்டவர்களுக்குச் சகாயமாகத்தானிருக்கிறார். அவர் ஒரு வரால் என்ன ஆகும். நீர் பயப்படாமல் பாண்டவர்களை அனுப்பிவிடும். அப்படிச் செய்தால் தான் என் துக்கம் ஒழியும் என்றான்.

155-வது அத்தியாயம்.

ஜதுக்ருக பர்வத் தொடர்ச்சி.

யுயுத்ஸு ஒருவன் தவிர மற்ற தம்பிமார்கள் எல்லாரும் துரியோதனனுடைய எண்ணத்துக்கு ஒத்திருந்தார்கள். மந்திரிகளெல்லாரையும் துரியோதனன் தனக்கு வசப்படுத்திக் கொண்டான். சில மந்திரிகள் திருதராஷ்டிரனுடைய தூண்டுதலால் வாரணவத நகரத்தைப் புகழ்ந்து பேசி வந்தார்கள். அப்போது பாண்டவர்களுக்கு அந்த நகரத்துக்குப் போக எண்ணமுண்டாயிற்று. அதை அறிந்துகொண்ட திருதராஷ்டிரன் பாண்டவர்களைப் பார்த்து நீங்கள் சாஸ்திரங்களையும், அஸ்திரவித்தைகளையும் கற்றுத் தேர்ச்சி அடைந்திருக்கிறீர்கள். இனி இராஜ்யகாரியத்தை நானே பார்த்துக் கொள்ளுகிறேன். நீங்கள் வாரணவத நகரத்துக்குப் போய்க் கொஞ்சகாள் லீலோதமாய் காலம் கழியுங்கள். சில காலம் சென்ற பின் மறுபடியும் அஸ்தினபுரத்துக்கு வரலாம். உங்களுடைய பந்து மித்திரர்களோடு வாரணவதத்துக்குப் பிரயாணப்படுங்க ளென்றான். உண்மையை உணர்ந்துகொண்ட யுதிஷ்டிரர் தமக்கு ஒத்தாசையாக ஒருவரும் இராமையால் சரி யென்று ஒத்துக்கொண்டார். மனதில் வருத்தம் பொறுக்கக் கூடாமலிருந்தது. பின் பீஷ்மா முதலியவர்களை

யும், காந்தாரி முதலிய ஸ்திரீ ஜனங்களையும் பார்த்து மஹா ராஜாவினுடைய கட்டளையினல் காங்கள் வாரணவதம் போகிறோம். எங்களுக்கு ஆசீர்வாதம் பண்ணுங்கள், உங்களுடைய ஆசீர்வாதம் எங்களுக்கு க்ஷேமந் தருமென்றார். அவர்கள் எல்லாரும் மனமகிழ்ந்து பாண்டவர்களே! எல்லாத் தெய்வங்களும் உங்களைக் காப்பாற்றக்கடவன. நீங்கள் க்ஷேமமாயிருப்பீர்கள் என்று ஆசீர்வதித்தார்கள். பாண்டவர்கள் உடனே வாரணவதத்திற்குப் புறப்பட்டார்கள்.

156-வது அத்தியாயம்.

ஜதுக்ருக பர்வத் தொடர்ச்சி.

பாபியான துரியோதனன் இந்த செய்கையால் சந்தோஷ மடைந்து, கர்ணன் சகுனியுடன் கூடிப் பாண்டவர்களை யெழித்துவிட ஆலோசித்தான். புரோசனன் என்னும் மந்திரியை அழைத்து அவனிடத்தில் இரகசியமாகச சொல்லுகிறான். சிநேகிதனே! இந்த உலகம் எனக்குக் கிடைக்கும்படி நீ செய்யவேண்டும். உன்னைத் தவிர வேறு சிநேகிதன் எனக்கு இல்லை, என் சத்துருக்களை உபாயத்தினல் அழித்துவிடு. நீ சீக்கிரம் வாரணவதம் போ. அங்கே எதிரெதிராக காலு மாளிகைகள் கட்டு. அரக்கு மெழுகு அழிஞ்சில் முதலிய தீப்பிடிக்கும் வஸ்துக்களினல் கட்டு. இந்தத்தந்திரம் ஒருவரும் கண்டு கொள்ளாம லிருக்கும்படி செய்யவேண்டும். பாண்டவர்களையும் குந்தியையும் அதில் மரியாதையோடு குடியேற்ற வேண்டும், பாண்டவர்களுக்குச் சந்தேக முண்டாகாதபடி நடக்கவேண்டும். நகரத்தாருக்கு இந்த இரகசியம் தெரியக்கூடாது. சமயம் தெரிந்து அந்த கட்டிடத்தில் தீயிட்டுக் கொளுத்திப் பாண்டவர்களைத் தகித்துவிடு என்று கூறினன். புரோசனன் சம்மதித்து சீக்கிரம் வாரணவதம்போய்த் துரியோதனன் சொன்னபடி யெல்லாம் செய்து வைத்தான். துரியோதனன் கருத்தைப்போல அரக்கு மாளிகையுங் கட்டினன்.

157-வது அத்தியாயம்.

ஜதுக்ருக பர்வத தொடர்ச்சி.

பாண்டவர்கள் பிரயாணத்துக்குச் சித்தமானார்கள். பீஷ்மர் துரோணர் முதலியவர்களை வணங்கினர்கள். தாய்மார் முதலியவர்களுக்கும் வணங்கினர்கள், ஒத்தவர்களோத் தழுவி ஆலிங்கனம் செய்து கொண்டார்கள். எல்லாரிடத்தும் செலவு பெற்றுக்கொண்டு புறப்பட்டார்கள். விதுரர் மனவருத்ததுடனே கூடப்போனர். நகரத்துப் பிரஜைகளும், குரு வம்சத்திற் பிறந்த

வர்களும் பின் சென்றார்கள். பாண்டவர்கள் வருத்தத்துடன் செல்வதைக் கண்ட பிராமணர்கள், திருதராஷ்டிர மஹாராஜா வஞ்சனை செய்கிறார், தர்மத்தை விட்டு விட்டார், பாண்டவர்கள் மஹாத்மாக்கள், அவர்கள் அரசுபுரிவது திருதராஷ்டிர மஹா ராஜாவுக்கு மனம் சகிக்கவில்லை. பீஷ்மர் கூட அதற்குச் சம்மதித்திருக்கிறது ஆச்சரியம். நாம் இந்த நகரத்தை விட்டு பாண்டவர்களிருக்கு மிடத்துக்குப் போவோமென்று கூறினார்கள். அதைக் கேட்ட யுதிஷ்டிரர் நீங்கள் வருத்தப்பட வேண்டாம். நாங்கள் பெரியவரான திரிதராஷ்டிர மஹா ராஜாவின் இஷ்டப்படி நடக்கவேண்டு மென்பது எங்களுடைய விரதம். நீங்கள் எங்களுக்கு ஆசீர்வாதம் செய்துவிட்டு நகரத்துக்குப் போங்கள். சமையம் வந்தபோது எங்களுக்கு நன்மையைச் செய்யுங்களென்றார் ஜனங்கள் அப்படியே ஆசீர்வாதம் செய்துவிட்டுத் திரும்பிப்போனார்கள். பிறகு விதுரர் சொல்லுகிறார். சத்துருக்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டவன் பின் வரும் ஆபத்தை விலக்கிக்கொள்ளத்தக்க உபாயத்தைத் தேடவேண்டும். கூரிய அறிவுதங்களோ யறிந்து அதைத் தடுக்கும் யுக்தி தெரிந்தவனைச் சத்துருக்களால் ஜயக்க முடியாது. வனத்தை யெரிக்கும் பெரிய நெருப்பு வனைக்குள்ளிருக்கும் எலியைச் சுடாது என்று தெரிந்துகொண்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுகிறவன் சாகான். கண்ணில்லாதவன் வழியை யறியான். கண்ணில்லாத குருடன் திசைகளை யறியமாட்டான். தைரியமற்றவன் செல்வதை யடையான். புத்திசாலியாயிருப்பவன் சத்துருவின் ஆயுத்தை அவன் மேலேயே திருப்புகிறான். முள்ளம் பன்றியானது சுரங்கத்துக்குள் புகுந்துகொண்டு, தீயினால் நேரிடும் ஆபத்தினின்று தப்பித்துக் கொள்ளும். நடப்பவன் வழியை யறிவான். நட்சத்திரங்களினால் திக்குகளை யுணர்ந்து கொள்வான். புலன்களை யடக்கிக்கொள்கிறவன் கஷ்டப்படமாட்டான் என்று சொன்னார். அது கேட்ட யுதிஷ்டிரர் அறிந்து கொண்டேன் என்று சொன்னார். விதுரர் அவர்களுக்கு விடை கொடுத்து நகரத்துக்குத் திரும்பினார். எல்லாரும் போனபிறகு, குந்தி யுதிஷ்டிரரைப் பார்த்து, விதுரர் சொன்னது எங்களுக்குத் தெரியவில்லை. எங்களுக்குச் சொல்லக் கூடியதாயிருந்தால் சொல்லவேண்டு மென்று கேட்டாள். யுதிஷ்டிரர் அம்மா! விதுரர் விஷம் நெருப்பு இந்தப் பயங்களினின்று காத்துக் கொள்ளவேண்டும். நட்சத்திரங்களால் வழியைத் தெரிந்து கொள்ளவேண்டும். சுவர்களை நன்றாய்க் கவனிக்கவேண்டு மென்று சொன்னார் என்றார். பாண்டவர்கள் பல்குனி மாதம் எட்டாந்தேதி ரோஹிணி நட்சத்திரத்தில் புறப்பட்டுப்போய் வாரணவத நகரை அடைந்தார்கள்.

158-வது அத்தியாயம்:
ஜதுக்ருக பர்வத் தொடர்ச்சி.

பாண்டவர்கள் வருகிறதை யறிந்த வாரணவத நகரத்து ஜனங்கள் மங்களவஸ்துக்களுடன் எதிர்கொண்டு போனார்கள். எல்லா ஜனங்களும் பாண்ட

வர்களைச் சூழ்ந்துகொண்டு ஜயஜயவென்று வாழ்த்தினார்கள். பாண்டவர்கள் பதில் மரியாதை செய்து நகரத்துள் புகுந்து தங்களுடைய வீட்டை யடைந்தார்கள். புரோசனன் பாண்டவர்களுக்கு வேண்டிய வஸ்துக்களெல்லாம் கொடுத்து உபசரித்தான். அந்த வீட்டில் பத்து காளிருந்தார்கள். பிறகு புரோசனன் பாண்டவர்களுக் கென்று கட்டுவித்துள்ள வீட்டில் அவர்களைக் குடியேற்றினன். யுதிஷ்டிரர் அந்த வீட்டை யாராய்ந்து பார்த்து, நெய் அரக்கு கொழுப்பு இவற்றின் வாசனையை முகர்ந்து தெரிந்துகொண்டு, பீமசேனனைப் பார்த்து கூறுகிறார். பீமா! இந்த வீடு எளிதாக நெருப்புப் பற்றும்படியான உபாயத்தோடு கட்டப்பட்டிருக்கிறது. குங்கிலியம், சணல் விழல் முதலியவற்றை நெய்யிலூறவைத்து உபயோகித்திருக்கிறார்கள். வீட்டைச் சுற்றிலும் விழல் முதலிய நிப்பிடிக்கும் வஸ்துக்களை அமைத்திருக்கிறார்கள், புரோசனன் துரியோதனனுக்கு உள் கையாயி யிருந்துகொண்டு நம்மைக்கொளுத்தி யெரிக்கத் தீர்மானித்திருக்கிறன். இதை முன்னமே யறிந்த விதுரர் எனக்கு அறிவித்தார் என்றான்.

அது கேட்ட பீமன் அண்ணா! உமக்கு அப்படித் தோன்றினால் முன்னிருந்த வீட்டுக்கே போய் விடுவோம் என் ஆபத்துவருமென்று தெரிந்த விடத்தில் வசிக்கவேண்டு மென்றான். யுதிஷ்டிரர் பீமா! நாமிதை வீட்டுப்போகக் கூடாது. நமது எண்ணத்தைப் பிறர் அறியவுங்கூடாது. இங்கிருந்தே உபாயந் தேடிக் கொள்ளக்வேண்டும். நாம் தீக்கு பயந்து இதைவிட்டுப் வெளிப்படுவோமாயின் புரோசனன் இரகசியத்தை நாம் தெரிந்து கொண்டோ மென்று அறிவான். அதனால் நமக்கு ஆபத்து சீக்கிரம் வந்து விடும். துரியோதனன் இப்போது அரசனுயிருக்கிறன். பொக்கிஷமிருக்கிறது. சகாயமுள்ளவனுயிருக்கிறான். எவ்விதத்திலும் தந்திரத்தினால் நம்மைக் கொல்வான். ஆதலால்நாம் ஒன்றும் தெரியாதவர்கள்போல இதிலேயே வசித்துக்கொண்டிருந்து இவனையும் மஹா பாபியான புரோசனனையும் ஏமாற்றி விட வேண்டும். நமது கருத்து வெளிப்படாமல் வெவ்வேறு இடங்களில் வசிப்போம். அதற்காக நாம் வேட்டை யாடுவதிலேயே காரியமாக இருப்போம். அதனால் நாம் தப்பித்து ஓடிப்போவதற்கு மார்க்கங்கள் தெரியும். இப்போதே பூமிக்குள் ஒரு சுரங்கம் செய்வோம் அப்படிச் செய்துகொண்டால் நீப்பம்போது தப்பித்துக்கொள்ளலாம். ஆகையால் சுரங்கத்தை ஒருவரும் அறியாமல் இரகசியமாகச் செய்துகொள்ள வேண்டும் என்றார்.

———

159-வது அத்தியாயம்.

ஜதுக்ருக பர்வத் தொடர்ச்சி.

ஒரு நாள் விதுரருக்குச் சிநேகிதனான கனகன் என்ற ஒரு சிற்பி பாண்டவர்களே இரகசியமாகக் கண்டு சொல்லுகிறான். என்னை விதுரர் உங்களிடம் அனுப்பினர். நான் சுரங்க வேலையில் வல்லவன். விதுரர் மிலேச்ச பாஷையில் உம்மிடம் பேசினதும், நீர் சரி யென்றதும் தான் நீங்கள் என்னை நம்பக் கூடியது. இது விதுரர் எனக்குச் சொன்னர். ஆதலால் என்னை நம்பும். நான் செய்யவேண்டியதைக் கட்டளை யிடும் இக்கக்ருஷ்ணபட்சம் சதுர்த்தசி இரவில் புரோசனன் இந்த வீட்டுக்குத் தீயிடப் போகிறான் என்றான். யுதிஷ்டிரர் சிநேகிதனே! நீ விதுரருக்கு நண்பனென்பது எனக்குத் தெரியும். நீ அவருக்கு எப்படி வேண்டியவனோ அப்படியே எனக்கும் வேண்டியவன். நீ யெங்களுக்கு விதுரரைப்போலவேயாம். இந்த வீடு தீப்பற்றுகிறதற்குத் தக்கபடியே கட்டப்பட்டிருக்கிறது. ஆகையால் நாங்கள் அக்கினியினால் அழியாதபடி தருந்த உபாயத்தை செய்துகொடு, புரோசனனுக்குத் தெரியாதபடி செய்ய வேண்டுகிறேன் என்றார். கனகன் அப்படியே செய்கிறேன் என்றான்.

பிறகு கனகன் அகழியை இறைக்கிறவனைப்போல வேலைச் செய்யத்தொடங்கிச் சுரங்க வேலையைத் தொடங்கினான். அந்த வீட்டின் நடுவில் ஒருவருக்குந் தெரியாதபடி வேலை செய்தான். புரோசனன் எப்போதும் அந்த வீட்டின் வாயிலிலேயே வசித்தான். பாண்டவர்கள் பகலெல்லாம் வேட்டையாடித் திரிந்தனர். இரவில் ஆயுதங்களே யெடுத்துக்கொண்டு ஜாக்கிரதையாக இருந்தார்கள். தங்கள் கருத்தைப் பிறர் அறியாதபடி நடந்து கொண்டார்கள். கனகன் தவிர மற்றொருவருக்கும் அவர்களுடைய இரகசியம் தெரியாது.

160-வது அத்தியாயம்.

ஜதுக்ருக பர்வத் தொடர்ச்சி.

இப்படி ஒருவருஷமாயிற்று. புரோசனன் பாண்டவர்கள் தன்னிடம் சந்தேகமில்லாமல் நம்பியிருக்கிறார்க ளென்று நினைத்து மகிழ்ந்தான். பாண்டவர்களே யெரிக்க இதுதான் நல்ல கால மென்று நினைத்தான். தர்ம புத்திரர் அதை அறிந்து கொண்டார். தம்பி மார்களைப்பார்த்து, இந்தத் துரோகியான புரோசனன் நாம் அவனை நம்பி யிருப்பதாக நினைத்திருக்கிறான். துர் எண்ணமுள்ள இவன் எமாந்து இருக்கிறான். நாம் தப்பித்து ஓடிப்போவதற்கு இதுதான் நல்லகாலம். இந்த வீட்டையும் புரோசனனையும் ஆறுமணிநேரத்தையும் எரித்துவிட்டு ஓடிப்போவோம் என்றார். குந்தி இரவில் பிராமண

போஜனம் செய்வித்தாள். எல்லாரும் போஜனம் செய்துவிட்டு வீட்டுக்குப் போய் விட்டார்கள். புரோசனன் ஒரு வேடச்சியைக் குந்தியிடம் அனுப்பி யிருந்தான். அவள் குந்தியிட மிருந்து சமையம் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த வேடச்சிக்கும் ஐந்து புத்திரர்கள். அந்த வேடச்சி போஜனத்தை வீரும்பித் தன் ஐந்து புத்திரர்களோயும் அழைத்துக்கொண்டு வந்திருந்தாள். துரோக சிந்தையுள்ள அந்த வேடச்சி மதுவைக் குடித்து புத்திமயங்கித் தன் புத்திரர்களோடு அயர்ந்து தூங்கினாள். நடு ராத்திரியில் அதிகமாகக் காற்று வீசிற்று. அந்தச் சமையத்தில் பீமசேனன் புரோசனன் படுத்துக்கொண்டி ருந்த இடத்தில் நெருப்பிட்டு வீட்டைக் கொளுத்தினான். பிறகு வீட்டைச் சுற்றிலும் தீயிட்டுக் கொளுத்தினான் பின் வீட்டிலிருந்த பொருள்களே யெடு த்துக்கொண்டு வெளிப்பட்டான். முன்னேயே குந்தியையும் மற்றவரையும் சுரங்கத்தின் வழியாக அனுப்பி யிருந்தான். வீடு தீப்பற்றிக்கொண்டு சத்தத் தோடு எரிந்தது. நகரத்து ஜனங்கள் விழித்துக்கொண்டு பாண்டவர்கள் இருந்த வீடு எரிவதைப்பார்த்து வருந்தினார்கள். தூயான புரோசனன் துரி யோதனனுடைய ஏவுதலால் பாண்டவர்களே யெரிப்பித்தானே இந்த வீட் டைக் கட்டினான். வீடும் எரிகிறது. ஐயோ! திருதராஷ்டிரனுக்குப் புத்தி எனிப்படி ஆயிற்று. சத்துருக்களே எரிப்பதுபோலப் பாண்டவர்களே யெரித் து விட்டான் என்று சொல்லிக்கொண்டு வந்து வீட்டைச் சூழ்ந்துகொண்டு நின்றனர். பாண்டவர்கள் சுரங்கத்தின் வழியாகப்போய் வெளிப்பட்டு ஒரு வரும் அறியாதபடி நடந்தார்கள். பாண்டவர்கள் தூக்க மயக்கத்தினாலும் பயத்தினாலும் நடக்கச் சக்தியில்லாமற் போனார்கள். பீமசேனன் அவர்க ளெல்லாரையும் குந்தியோடு தூக்கிக்கொண்டு வேகமாய் நடந்தான்.

161-வது அத்தியாயம்

ஜதுக்ருக பர்வத் தொடர்ச்சி

அதற்கு முன்னமே விதுரரால் அனுப்பப்பட்ட ஒரு மனிதன் அந்த வன த்தில் வந்திருந்தான். அவன் பாண்டவர்களைக் கண்டான். அவன் பாண்ட வர்களைக் கங்கையாற்றங் கரைக்கு அழைத்துக்கொண்டுபோய், அங்கே விதுர ரால் நியமிக்கப் பட்டிருந்த ஒரு கப்பலைக் காட்டினான். பின் விதுரர் யுதிஷ் டிரருக்குக்கூறிய "இரகசிய வசனமானகாட்டையழிப்பதும் குளிரை போக்கு வதுமான நீ வளையிலிருப்பனவற்றை அழிப்பதில்லை என்று அறிந்து ஒருவன் அவ்வகையாகத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறவன் சாகான்" என்றதை அடையாளமாகச் சொன்னான். பின்னும் விதுரர், யுதிஷ்டிரர் துரியோதனனை கர்ணன் சகுனியோடு கொன்று வெற்றியடைவர் என்றும் கூறினரென்று சொன்னான். பாண்டவர்கள் அந்த வசனக்களைக் கேட்டு அவனை நம்பி அவன் பின் சென்றார்கள். அப்போது விதுரருக்கு வேண்டியவனான ஒரு செம்பட

வன் பாண்டவர்களைத் தேடிக்கொண்டு வந்தான். அவன் பாண்டவர்களைக் கண்டு நான் விதுரருடைய மனிதன், நீங்கள் இந்தக் கப்பலிலேறிச் செல்லுங்க ளென்று சொன்னான். அவர்கள் தாயாரோடு கப்பலிலேறித் துக்கத்துடன் சென்றார்கள். செம்படவன் உங்களைத் தூக்கப் படாமல் போகச் சொன்னார் என்று சொல்லி அவர்களை அக்கரைக்குக் கொண்டுவந்து விட்டுப் போய்விட்டான். பாண்டவர்கள் ஒருவரும் தங்களை அறியாதபடி வேகமாய் நடந்தார்கள். நட்சத்திரங்களினால் மார்க்கந் தெரிந்துகொண்டு மற்றொரு காட்டை யடைந்தார்கள். அப்போது யுதிஷ்டிரர் பீமனைப் பார்த்து நாங்கள் நடக்கச் சக்தியற்றிருக்கிறோம். ஆகையால் நீ எங்களைத் தூக்கிக் கொண்டு வேகமாகச் செல்லவேண்டும் என்று கூறினார். பீமசேனன் அப்படியே தாயாரோடு மற்றவர்களையும் தூக்கிக்கொண்டு வாயு வேகமாய் நடந்து போனான்.

---

162 வது அத்தியாயம்.

ஜதுக்ருக பர்வத் தொடர்ச்சி.

வீடிந்த பின் ஏகசக்ர ஜனங்கள் அனைவரும் பாண்டவர்கள் எப்படியானார்கள் என்று பார்க்க ஆவல்கொண்டு அந்த இடத்துக்கு வந்து கூடினார்கள். வீட்டை அனைத்து எரிந்துபோன புரோசனனையும் அரக்கு மாளிகையையும் கண்டார்கள். இந்தப் பாவி துரியோதனனுடைய ஏவுதலால் தான் இந்த வீட்டைக் கட்டினான். பாண்டவர்களைக் கொல்லவேண்டு மென்றே கட்டப்பட்டிருக்க வேண்டும் இது திருதராஷ்டிரனுக்குத் தெரிந்தே செய்யப்பட்டிருக்கும். அவன் தன் புத்திரர்களைத் தடுக்கவில்லை. பீஷ்மர் துரோணர் முதலியவர்கள் கூடச் சும்மா இருந்து விட்டார்களே! இது மஹா அநியாயம் தான் அவர்கள் கூட நீதி தவறிப்போனார்கள். கல்வி கேள்விகளால் சிறந்தவர்களும் கூடத் தனவந்தர்களுக் குட்பட்டே யிருக்கிறார்கள் பெரியோர்களாயிருப்பவர்களும் யோக்கியர்களைக் கவனிக்கவில்லை இனி திருதராஷ்டிரனுக்கு நீ பாண்டவர்களை யெரித்தவிட்டாய், அவர்கள் இறந்து போனார்கள், உன் எண்ணம் நிறை வேறிவிட்டது என்று சமாசாரம் தெரிவிப்போம் என்று பேசிக்கொண்டார்கள். பிறகு பாண்டவர்களைத் தேடினார்கள். தன் ஐந்து புத்திரர்களோடு எரிந்துபோன வேடச்சியைப் பார்த்தார்கள். அவர்களைக் குந்தியும் பாண்டவர்களு மென்றே நினைத்து வருந்தினார்கள். சுரங்கவழி மண்ணால் மூடப்பட்டிருந்தபடியால் ஒருவருக்கும் அது தெரியவில்லை. பிறகு பாண்டவர்கள் குந்தி புரோசனன் மூதலானவர்களோடு எரிக்கப்பட்டார்களென்று சமாசாரம் அனுப்பினார்கள். அது கேட்ட திருதராஷ்டிரன் மனதுக்குள் மகிழ்ந்து மேலுக்குத் தக்கமுள்ளவன் போலவே கதறி அழுதான். பின் திருதராஷ்டிரன் மற்றவர்களை நோக்கி இன்று நான் என் சகோதரனுடைய பாண்டு இறந்து போனானென்று கினைக்கிறேன். சேரம்

வாரணாவதத்துக்கு மனிதர்களை அனுப்பி அவர்களுக்குச் செய்யவேண்டிய கிரியைகளைச் சிறப்பாய்ச் செய்யவேண்டுமென்றான். பிறகு பீஷ்மர் முதலிய கௌரவ வம்சத்தாரெல்லாரும் துக்கசேலம் கொண்டு ஜல தர்ப்பணம் செய்யும் பொருட்டுக் கங்கைக்குச் சென்றார்கள். திருதராஷ்டிரன் பாண்டவர்களுக்கு ஜல தர்ப்பணம் செய்தான். அந்தக்கூட்டத்தாருள் சிலர் யுதிஷ்டிரருக்காகவும், சிலர் பீமனைப்பற்றியும், சிலர் அர்ஜுனனைக் குறியும், சிலர் நகுல சகாதேவர்களைக் குறித்தும் அதிகமாக புலம்பினார்கள். விதுரர் மட்டும் அதிக விசனமில்லாமலிருந்தார். வெளியில் துக்கமுள்ளவர்போலக் காட்டிப் பாண்டவர்கள் இப்போது எவ்வளவு தூரம் போயிருப்பாரென்று சிந்தித்துக் கொண்டிருந்தார். அவர் பாண்டவர்க ளெல்லாம் தமது புத்திரர்களென்றே கருதியிருந்தார். பீஷ்மர் மட்டும், ஆ யுதிஷ்டிரா! ஆ பீமா! ஆ அர்ஜுனா! ஆ இரட்டையர்களே! என்று வாய்விட்டுக் கதறி அழுதார். ஆ குந்தீ; நீ புத்திரர்களோடு சொர்க்கம் போய்விட்டாயோ; மலைகளை யுடைக்கவல்ல பீமார்ஜுனர்கள் இறந்தது ஆச்சரியம், அவர்கள் இப்படி இறந்து போவார்களென்று நான் நினைக்கவே யில்லை. அவர்களிறந்தது மெய்யாயிருந்தால் அது தர்மவிரோதந்தான். யுதிஷ்டிரன் பிராமணர்களால் புகழப்பட்டவன். அர்ஜுனன் வில்லாளிகளுக்குள் மேம்பட்டவன். தன் பிதாவுக்குப் பின் இளவரசனுக்குத் தனக்கும் தன் பிதாவுக்கும் கீர்த்தியைச் சம்பாதித்து வைத்த தர்மராஜன் எனக்கு ஒழியாத துக்கத்தை யுண்டாக்கி இறந்து போனான். அவனுக்கு எமன் எப்படி வந்தானே தெரியவில்லை. தெய்வம் கூடப் பயனற்றதாய் விட்டது. குந்தி சுகபோகமிலே யிறந்து போனாள். அவளுடைய எண்ணங்களும் நிறைவேறுமிலே போயிற்று. பீமன் இறந்து போனானென்பது நம்பத்தக்க தாயிருக்கவில்லை. கிழக்கேதசத்தாரையும், ஸௌவீர தேசத்தாரையும் ஜயித்து கீர்த்திபெற்றுச் சிறந்தவனும், வில்லாளிகளுக்கெல்லாம் மேலானவனும் நினைத்ததை முடிக்கும் திறமையுள்ளவனும், அஸ்திரபலத்தால் சிறந்த ஆண் பிள்ளை புமான அர்ஜுனன் இறந்தானென்பது பொய்யாகத் தோன்றுகிறது. பிழைவஞ்சிய என்னைத் துன்பப் படவைத்துவிட்டுக் குழந்தைகளான பாண்டவர்கள் பரலோகஞ் சென்றது எனக்கு எக்காளும் மாறாத துக்கமே யென்று சொல்லி புலம்பினார். அவர் படுந்துயரம் சகிக்க முடியாமல் விதுரர் பீஷ்மருக்கு இரகசியமாகச் சொல்லுகிறார்.

நீர் விசனப் படவேண்டாம். துக்கத்தை ஒழியும். பாண்டவர்கள் சாகவில்லை. சுகமாயிருக்கிறார்கள். அவர்கள் சாகாமலிருக்கும் படியான சகாயத்தைச் செய்திருக்கிறேன். அக்கினிக்கு இரையாக வில்லை. ஆகையால் நீர் அவர்களுக்காக ஜல தர்ப்பணம் பண்ணுதேயும் என்றார். பீஷ்மர் விதுரர் சமீபத்தில் போய் அவர்கள் எப்படித் தப்புவிக்கப்பட்டார்க ளென்று கம்மின குரலோடு மெதுவாய்க் கேட்டார். விதுரர் சொல்லுகிறார். திருதராஷ்டிரன் சகுனி துரியோதனன், புரோசனன் இவர் பாண்டவர்களை யெரிக்கத் நீர்

மானஞ் செய்தார்கள். நான் அதைத் தெரிக்து கொண்டேன். அரக்குமாளி கைக்குத் தீமூட்ட நான் வைத்துத் தீர்மானித்த பின், கனகனே யனுப்பி ஒருவ ரும் அறியாதபடி சுரங்கம் செய்வித்தேன். மாளிகை தீ யிடப்படுதற்கு முன் னுலேயே பாண்டவர்கள் வெளிப்பட்டுப் போய் விட்டார்கள். நீர் அவர்களைக் குறித்து வீசனப் படவேண்டாம். காலம் வந்தபோது அவர்களும் வெளிப்படு வார்கள் என்றார். பீஷ்மர் மனமகிழ்ந்து நல்ல காரியஞ் செய்தாய் என்று விதுரரைப் புகழ்ந்தார். பிறகு எல்லாரும் நகரம் போனார்கள். திருதராஷ் டிரன் முதலானவர்கள் மகிழ்ந்திருந்தார்கள். விதுரரும் பீஷ்மரும பாண்ட வர்கள் தப்பித்துக்கொண்டதைப் பற்றி மகிழ்ந்தார்கள். துரோணர் கிருபர் முதலியவர்களும், நகரத்து ஜனங்களும் பாண்டவர்கள் இறந்திருக்க மாட் டார்கள். ஜீவித்தே யிருப்பார்கள் என்று கருதினார்கள்.

63-வது அத்தியாயம்.

ஜதுக்ருக பர்வத் தொடர்ச்சி.

இரவில் பாண்டவர்களைத் தூங்கிக்கொண்டி போன பீமசேனன் வனத்தி லுள்ள மரம் செடி கொடிக ளெல்லாவற்றையும் முறித்துத் தகர்த்துக்கொண்டு வெகு வேகமாய் நடந்தான். அவனுடைய காலிலிருந்து உண்டான காற்று மரங்களே யெல்லாம் முறித்துச் சாய்த்தது. வேறென்ன சொல்வது, அவன் நடக்கிற வேகத்தினாலே அவன் தோளிலிருக்கிற பாண்டவர்கள் மூர்ச்சை ய டைந்தார்கள். சாய்ங்கால வேளையில் ஒரு வனத்துக்கு வந்தான் அந்த வனம் பயங்கரமாயிருந்தது மாலைக் காலம் வந்தது குந்தி எனக்கு மிகுந்த தாகமுண் டாயிருக்கிறது. இனி நடக்கமுடியாது. இங்கேயே தங்குவோம். களை வர்கள் உன்னை வெல்ல மாட்டார்கள். அவர்களுக்கு நாம் ஏன் பயப்பட வேண்டும் என்றாள். பீமன் வெகு வேகமாய் நடந்து, ஒரு ஆலமரத்தடியில் உட்காரவைத்து, ஒரு குளத்தைக்கண்டி தாகந் தீர்த்துக்கொண்டு, மற்றவர்க ளுக்கும் தீர்த்தம் கொண்டிவந்தான். அப்போது எல்லாரும் களைப்பினால் அயர்ந்து தூங்கிக்கொண் டிருந்தார்கள் அதைப் பீமசேனன் கண்டு பெரு மூச்சுவிட்டுப் பரதலித்துப் புலம்பினான். வசுதேவருடைய சகோதரியும், குந்திபோஜன் புத்திரியும் பாண்டு மஹாராஜாவின் மனைவியுமான குந்திதேவி அநாதையைப்போல இந்தப் புழுதியில் படுத்துக்கொண்டிருக்கிறாள். இந்திரன் வாயு, தருமன் முதலிய தேவர்களால் புத்திர பாக்கியம் பெற்றவளாகிய இவள் தரையில் படுத்திருப்பதை என் கண்கள் பார்க்கின்றன. திரிலோகங்களையும் ஆளும் தன்மையுள்ள இந்தத் தர்ம புத்திரரும், மனிசருக்குள் சமானமில்லாத அர்ஜுனனும், ரூபத்திற் சிறந்த இரட்டையர்களும் சாமானியமான மனிதர் களைப் போலப் பூமியில் புழுதிபடியப் படுத்துக கனைத்துத் தூங்குகிறார்கள். விரோதிகளான தாயாதிகளில்லாம லிருக்கிறவர்கள் கிராமத்தில் தனியாக

இருக்கும் மரத்தைப்போலச் சிறப்படைகிறார்கள். தர்மிஷ்டர்களும் வீரர்களுமான நாயகிகளை யுடையவர்களும் அவ்வாறே சிறந்து வாழ்கிறார்கள் திர்ப் புத்தியுள்ள துஷ்ட புத்திரர்களையுடைய திருதராஷ்டிரன் தர்மத்தினாலும் பேராசையினாலும் எங்களைக் காட்டிலோட்டி விட்டான். அக்கினியாலெரித்துவிடத் தீர்மானித்தான். விதுரருடைய புத்தியினாலும் சகாயத்தாலும் தப்பித் துக்கொண்டிருக்கிறோம் இனி எக்கே செல்வது என்று தெரியவில்லை தாரியோதனா! உன் எண்ணம் நிறை வேறியது செய்வதும் உன் பட்சத்திலிருக்கிறது. ஏ மூடா! உன்னைக் கொல்லும்படி தர்ம புத்திர மஹாராஜா எனக்கு உத்தரவுதரவில்லை. அதனாலே தான் நீ உயிரோடிருக்கிறாய். உத்தரவு கொடுத்திருப்பாரானால் கர்ணன், சகுனி, சகோதரர்களோடும் நீ எமபுரத்தில் வசித்துக்கொண்டிருப்பாய் என்று பலவாறுகச் சொல்லிப் புலம்பினான். தாக்காமல் விழித்துக்கொண்டே உட்கார்ந்திருந்தான்.

164-வது அத்தியாயம்.

ஹிடிம்ப வத பர்வம

அந்த வனத்தில் ஹிடிம்பன் என்று ஒரு அரக்கன் வாசம் பண்ணிக்கொண்டிருந்தான் பயங்கரமான கோர ரூபத்தை உடையவன். மலைபோன்ற பெரிய வடிவினையுடையவன். அவனுடைய உருவம் எமனுக்குக்கூடத் திகிலை யுண்டாக்கும். அவன் ஒரு ஆச்சாமரத்திலேறி உட்கார்ந்திருந்தான். தற்செயலாகப் பாண்டவர்களைப் பார்த்தான். பின் தன் சகோதரியைப் பார்த்து, நர மாம்சம் தின்று வெகு காலமாயின. இப்பொழுது கிடைத்தது. எனக்கு வாயூறுகிறது. நம்முடைய வனத்தில் வந்து படுத்துக்கொண்டு தூங்குகிற அவர்களை நீ போய்க் கொன்று கொண்டுவா, நாம் இருவரும் தின்று சந்தோஷத்தினால் கூத்தாடுவோம் என்றான். அது கேட்ட ஹிடிம்பி வெகு சீக்கிரத்தில் பாண்டவர்களிடம் வந்தாள் தூங்குகிற பாண்டவர்களையும், குந்தியையும் பார்த்தாள். அங்காமலுட்கார்ந்து கொண்டிருக்கிற பீமசேனனையும் பார்த்தாள். பார்த்தவுடனே அவனிடம் மோகம் கொண்டாள். கறுத்த திருமேனியும், நீண்டு திரண்ட கைகளும், சிங்கத்தை யொத்த தோள்களும், தாமரை மலரொத்த கண்களும், சங்கம்போன்ற கழுத்துமுள்ள இந்த புருஷன் எனக்குக் கணவனாகவேண்டும் என் சகோதரன் சொன்னபடி செய்யமாட்டேன். கணவனிடமுள்ள ஆசை வேறு. ஆசைகளெல்லாவற்றிலும் பெரிது. சகோதரன் நேசம் அப்படிபட்டதல்ல, இவர்களைக் கொன்ற தனால் சற்று நேரம் பசியில்லாமலிருக்கலாம், கொல்லாமலிருந்தால் வெகு காலம் ஆனந்த மடையலாமென்று தீர்மானித்துக்கொண்டு, மிகுந்த ரூபவதியாய்ப் பீமனிடம் வந்தாள். பீமனும் அவளைப் பார்த்தான். அவளைப் பார்த்துப் பின் ஆச்சரியம் அடைந்தான். பின் ஹி

டிம்பி பீமனைப் பார்த்து, ஏ மஹா புருஷரே! நீர் யார்? எங்கிருந்து வந்தீர்? இந்த அம்மாள் யார்? அதோ படுத்திருக்கிறவர்கள் உமக்கு என்ன உறவு என்று புன் சிரிப்போடு கேட்டாள். பின்னும் இது ஹிடிம்பன் என்னும் இராட்சதனுடைய காடு. அவன் மஹா கொடியவன். அவனுடைய உத்தரவினால் நான் உங்களைத் தின்ன வந்தேன். உம்மைப் பார்த்தபின் உம்மையே கணவனாக வரித்து விட்டேன். வேறு கணவனை விரும்ப மாட்டேன். நீரே எனக்குப் பர்த்தா. ஆகையால் நீர் என்னை மனைவியாக ஏற்றுக்கொண்டு ஆதரியும். இந்த ராட்சதன் அணுகாதபடி செய்வேன். நாம் இருவரும் உன்னதமான பர்வத சிகரங்களில் வசிப்போம். நான் ஆகாசத்தில் சஞ்சரிக்கும் வல்லமையுள்ளவளாதலால் விரைந்த இடங்களில் போய் வசிக்கலாம். என்னைத் தள்ளிவிடாதீயும். நீர் என்னைத் தள்ளிவிட்டால் நிச்சயமாகவே நான் உயிரை விட்டுவிடுவேன் என்றாள். பீமன் சொல்லுகிறான்.

இதோ இருக்கிறவர் எனக்கு மூத்த சகோதரர். அவருக்கு விவாகமாக இல்லை, ஆகையால் நீ என்னை விவாகம் செய்துகொள்ள மாட்டேன். நான் இராட்சதனுக்குப் பயந்து உன்னைப்பின்பற்றி வந்தால் இவர்கள் கதி என்ன? ஆண்பிள்ளையாயிருப்பவன் தாயாரையும் சகோதரரையும் இராட்சதனுக்கு இரையாகக் கொடுத்துவிடலாமா என்றான். அவள் உமது மாதாவையும் உம்மையும் காப்பாற்றுவேன். என் இடப்பில் ஏறிக்கொள்ளுமென்றாள். பீமன் நான் என் சகோதரரை விடமாட்டேன். அது என்பிரியமில்லை. நீ இங்கேயில்லாதே. போ என்றான். உமக்கு அப்படி விருப்பமிருந்தால் அவர்களையும் எழுப்பும். உங்களெல்லாரையும் இராட்சதன் பயத்தினின்றும் காப்பாற்றுவேனென்றாள். இராட்சதியே! இந்த அற்பமான அரக்கனுக்குப்பயந்து தூங்கிக்கொண்டிருப்பவர்களை யெழுப்பமாட்டேன். இராட்சதராகட்டும், யட்ச கந்தர்வர்களாகட்டும், நான் அவர்களுக்குப் பயப்படமாட்டேன். உனக்கெப்படிச்செய்யவேண்டுமோ அப்படிச்செய். இஷ்டமிருந்தால் உன்சகோதரனை அனுப்பு என்றான்.

இராட்சத இராஜனான ஹிடிம்பன், தன் சகோதரிபோய் வெகுநேரமாயும் வராமையால், மரத்திலிருந்து இறங்கிப் பாண்டவரிடம் வந்தான். அவனை ஹிடிம்பிக்கண்டு பயந்து பீமனைநோக்கி மஹாத்மாவே! துஷ்டனான இராட்சதன் வருகிறான். இப்போது அவர்களை யெழுப்பும், எல்லாரையுந் தூக்கிக்கொண்டு ஆகாசத்தில் கிளம்பிப் போய்விடுவோமென்றாள். பெண்ணே! அஞ்சாதே. நான் இருக்கையில் இந்த அரக்கன் ஒன்றும் செய்யமுடியாது என்றான். இவனையல்லாமல் எல்லாராட்சதர்களும் கூடிவந்தாலும் என்னை ஜெயிக்கமுடியாது. என்புஜங்களையும் மார்பையும்பார். என்னைத் தாழ்மையாக நினையாதே. என் பராக்கிரமத்தைப்பார் என்றான். ஹிடிம்பி மஹானுபாவா! நான் உம்மை இழிவாகப்பேசவில்லை. இந்த அரக்கனுடைய பராக்கிரமத்தை மனிதரிடத்தில்தான் பார்த்திருக்கிறேன் என்றாள்.

அப்படிப்பேசுகிற பீமனையும், மனித உருவத்துடன்நிற்கிற ஹிடிம்பியையும் பார்த்த ஹிடிம்பனுக்கு மஹாகோபம் மூண்டது. தன் சகோதரியின் சொரூபத்தைப்பார்த்து அவள் மனிதனைக் கணவனாகக்கொள்ள விரும்புகிறதாகநினைத்து அவள் மேல் கோபங்கொண்டான். ஹிடிம்பியைப் பார்த்து, என்பகிலேனாக குதவாமலிருக்கிற அந்தமனிதன்யார்? இவனு எனக்குத்தடைசெய்கிறவன் நீசமத்தால் மயங்கி என்னை மதியாமலிருக்கிறாய். நீ யெனக்கு பிரியமில்லாததைச்செய்தாய். நமது குலப்பெருமையைக்கெடுத்துவிட்டாய் ஆகையால் எனக்குவிரோதியான அவர்களெல்லாரையும் உன்னையும் இத்தருணத்திலேயே கொன்றுவிடுகிறேனென்றான். தூங்குகிற பாண்டவர்களை நோக்கிப் பல்லைக்கடித்துக்கொண்டு போனான். பீமசேனன் அவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு சொல்லுகிறான்.

இராட்சதா! தூங்குகிறவர்களை யெழுப்பாதே. என்னிடம்வா. குற்றமற்ற சிறுபெண்ணை இவளையும் கொல்லாதே. என்னிடம் சண்டையிடவா. உன்னை கூணத்துக்குள் எமபுரம் அனுப்பி வீடுகிறேனென்று சொன்னான். ஹிடிம்பன், உன்வாய்ப்பேச்சா லென்னபயன். செய்கையால் நிலைநிறுத்து. நீ கர்வங்கொண்டிருக்கிறாய். அந்த கர்வத்தை அடக்கி என் வல்லமையைக் காட்டுகிறேன். இவர்களை நான் இப்போது கொல்வதில்லை. முதலில் உன்னைக்கொன்று உன் இரத்தத்தைக் குடித்தபின் அவர்களைக் கொன்று உதிரம் குடிப்பேன். அதன் பின் ஹிடிம்பியைக் கொல்வேன் என்றான். இருவரும் கைகலந்து யுத்தஞ் செய்தார்கள், மஹா பயங்கரமாயிருந்தது. விருத்திரா சுரனும் தேவேந்திரனும் செய்த யுத்தம்போலிருந்தது. எதிர்ப்பட்ட பெரிய மரங்களை யெல்லாம் பிடுங்கி யடித்துக்கொண்டார்கள். மலைகளைப் பிடுங்கி ஒருவர்மேலொருவர் எறிந்துக் கொண்டார்கள். அவன் வனதைச் சூழ ஐந்து யோசனை தூரம் மரங்களும் கற்களும் இல்லாமல் போயின. பலிச் சக்கிரவர்த்திக்கும் இந்திரனுக்கும் நடந்ததுபோல இருவருக்கும் கைச்சண்டை நேர்ந்தது பதித்துக்கொண்டு தூங்கினவர்கள் இந்தச் சப்தத்தால் விழித்துக்கொண்டு ஹிடிம்பியைப் பார்த்தார்கள். அவளுடைய அழகைக்கண்டு அதிசயித்தார்கள்.

166-வது அத்தியாயம்.

ஹிடிம்ப வத பர்வத் தொடர்ச்சி.

குந்தி ஹிடிம்பியைப் பார்த்து மாதர்கட்காசியே! நீ யாருடைய புத்திரி? நீ என்னத்துக்கு வந்தாய்? எங்கிருந்து வருகிறாய்? நீ தேவதையா? மனுஷியா? என் இங்கே நிற்கிறாய் என்றாள். ஹிடிம்பி அம்மா! இந்த வனம் எனக்கும் ஹிடிம்பன் என்னும் அரக்கனுக்கும் சொந்தமானது. அந்த ராட்சதன் உன்னையும் உன் புத்திரர்களையும் கொன்று கொண்டுவரும்படியாக என்னை அனுப்பினான். அதற்காகத்தான் நான் இங்கே வந்தேன். உன் புதல்வனைக் கண்டதும்

ஆசைகொண்டு அவனையே கணவனாக வரித்தேன். அவனை இவ்விடம் விட்டு கொண்டுபோகப் பிரயத்தனப் பட்டேன். என்னால் முடியவில்லை. நான் வந்து சேரமாய் விட்டதை என்கிற கோபத்தினால் அந்த அரக்கன் உன்னையும் என்னையும் கொல்ல வந்தான். அவனுக்கும் உமது புத்திரனுக்கும் யுத்தம் நடக்கிறது என்று சொன்னாள். அப்போது பீமன் சற்றுக்களைத்ததைப் பார்த்து அர்ஜுனன் பீமா! அஞ்சாதே இதோ நான் வருகிறேன் என்றான். பீமன் அர்ஜுனனை நீ வரவேண்டியதில்லை. சற்றுப் பார்த்துக்கொண்டிரு. பீமனை யெதிர்த்த அரக்கனை அர்ஜுனன் கொன்றான். பீமனால் கொல்ல முடியவில்லை என்று எனக்கு அபவாதம் வரும். இவனைக் கொல்லாமல் விடமாட்டேன். பயப்படாதே என்றான். அர்ஜுனன், சண்டை தொடங்கி நெடு நேரமாயிற்று. பொழுது விடிவுகாலம் போகிறது. காலைச்சந்தியாகிய ருத்திரன் வேளை வரப்போகிறது. அப்போது அரக்கர்களுக்குப் பலம் அதிகம். இவனோடு விளையாட்டென்ன. நாம் வெகு தூரம் போகவேண்டும். சீக்கிரம் கொல்; உனக்குக் களைப்பிருந்தால் நானும் வருகிறேன். இல்லாவிட்டால் நானே இவனைக் கொன்று விடுவேன் என்று சொன்னான். இதைக் கேட்ட பீமசேனன், ஹிடிம்பனைக் கையால் தூக்கிக் கரகரவென்று சுழற்றி கீழே மோதி அடித்து துவைத்து கொன்று விட்டான். அந்த அரக்கன பெருங்கூச்ச விட்டுக்கொண்டு மடிந்தான். அந்தச் சத்தத்தினால் வனமெல்லாம் நடுநடுங்கிற்று. பின் பீமன் அவனுடைய கழுத்தைத் திருகி மேலே யெறிந்தான். அதைக் கண்ட பாண்டவர்கள் மகிழ்ந்தார்கள். தேவகந்தர்வர்களும், ஹிடிம்பியும் பீமனை புகழ்ந்தார்கள், அர்ஜுனன் பீமனை அதிகமாகப் புகழ்ந்து, அண்ணா! அந்த வனத்துக் குகையில் நகரமிருக்கிறதாக எனக்குத் தோன்றுகிறது. சீக்கிரமாக நாம் அங்கே போய்ச் சேருவோ மென்றான். நல்லதென்று எல்லாரும் புறப்பட்டார்கள் ஹிடிம்பியும் பின் தொடர்ந்தாள்.

167-வது அத்தியாயம்.

ஹிடிம்பவத பர்வத் தொடர்ச்சி.

ஹிடிம்பி, குந்தியையும், தர்மராஜாவையும் வணங்கி மரியாதை செய்து பின் பீமனை நோக்கி, நான் உம்மிடம் காதல் கொண்டிருக்கிறேன். உமக்குப் பணிவிடை செய்து கூடவே வசிக்க விரும்புகிறேன் என்றாள். பீமன் அரக்கர்கள் வஞ்சக நெஞ்சமுடையவர்கள். பிறரை மயக்கி மோசஞ் செய்வார்கள் ஆகையால் உன் சகோதரன் போனவழியே நீயும் போகக் கடவாய் என்றான். உடனே யுதிஷ்டிரர் பீமா! கோபியாதே பெண் ஹத்தி செய்யாதே. தர்மத்தை நினை, இந்த ராட்சதி நம்மை என்ன செய்யக்கூடும் என்றார் ஹிடிம்பி குந்தியையும் தர்ம புத்திரரையும் வணங்கிக் கைகளைக் கூப்பிக்கொண்டு சொல்லுகிறாள்

அம்மா தாயே! பெண்களுக்கு மன்மதனால் உண்டாகும் வாதை யெப் படி பட்டதென்று நீ அறிவாயல்லவா? அந்தத் துன்பம் எனக்கு கோரிட்டிருக் கிறது. காலத்தை யெதிர்பார்த்துப் பொறுத்துக் கொண்டிருக்கிறேன். அந்த காலமும் இதோ வந்துவிட்டது. எனக்குச் சௌக்கியம் உண்டாகும். நான் இராட்சதி யல்ல. சாலகடங்கடி யென்கிற தேவதை. ரிஷபப்பிருக்குச் சகோ தரி யென்கிற பேர் மாத்திரந்தான். என்னை உமது புத்திரருக்கு விவாகம் செய்து வையும். நான் உமது பணிவிடைகளைச் செய்து உங்களைக் காத்துக் கொண்டு மிருப்பேன். ஆபத்து வேளையில் உங்களுக்கு உதவி புரிவேன். நான் மூன்காலத்துச் சமாசாரங்களையும் அறிவேன். கருணை செய்யவேண்டு மென்றாள். நான் திரிகாலமும் அறியத்தக்கவ ளாதலால் உங்களுக்கு வரும் நன்மையைச் சொல்லுகிறேன். இப்போது ஒரு தடாகத்தைப் பார்த்து ஸ்நானம் செய்து மரத்தின் நிழற்படுத்திருப்பீர்கள். காலைக்கா லையில் வியாசபகவானைத் தரிசித்துத் துக்கத்தினின்றும் நீங்குவீர்கள். நீங்கள் அஸ்தினபுரம் விட்டு வாரணவதம் வந்தகாலம். அங்கே நடந்த தும் எல்லாம் அவருக்குத் தெரியும். சாலிகோத்திரரிஷியின் ஆச்சிரமத்தில் உங்களை வசிக்கச் சொல்லப்போகிறார். இந்த ஜலத்தைக் குடித்த வுடனே பசியும் களையும் நீரும். இந்த மரம் மழை காற்று வெயில் இவைகளினின்றும் காக்கும். இது சாலிகோத்திர மஹாரிஷியால் உண்டாக்கப் பட்டவையென் றான். அப்போது குந்தி யுதிஷ்டிரரைப் பார்த்து அப்பா! இவள் இராட்சதி யாகத் தோன்றவில்லை அப்படி யிருந்தாலும் நம்மை என்ன செய்யமுடியும். ஆகையால் இவள் பீமனைக் கணவனாக அடையக் கடவள் என்றாள் யுதிஷ்டிரர் ஹிடிம்பியைப் பார்த்து, நான் சொல்கிறபடி நட. நீ தினந்தோறும் ஸ்நானம் செய்து பரிசுத்தளாய் மங்களகரமாயிருக்க வேண்டும். பீமனும் ஸ்நானம் செய்து பரிசுத்தனாயிருக்கும்போது நீ அவனோடு சேர்ந்து லீலையாடிக்கொண் டிரு. பகல் காலத்தில் நீ இவனோடு உல்லாசிஷ்டம்போலிரு. அஸ்தமனத்துக் குள்ளாக இங்கே வந்து சேரவேண்டும். இரவில் எங்களோடு கூட இருக்க வேண்டும். நீ கர்ப்பந்தரிக்கிறவரையில் இப்படியே பீமனோடு கூடியிரு அதைக் கடந்து நடக்கக்கூடாது நீ எப்போதும் உபகாரியா யிருக்கவேண்டும். உன க்குரிய பணிவிடைகளைச் சரியாய்ச் செய்யவேண்டும் நன்மையையே செய்து கொண்டிருக்கவேண்டும் என்றார்.

168-வது அத்தியாயம்.

ஹிடிம்பவத பர்வத் தொடர்ச்சி.

ஹிடிம்பி அப்படியே செய்வதாக ஒத்துக்கொண்டு, குந்தியைத் தூக்கிக் கொண்டு பீமார்ஜுனர்களுக்கு மத்தியில் நடந்தாள். சாலிகோத்திரத் தடாகத் துக்கு எல்லாரும் வந்து சேர்ந்தார்கள். ஹிடிம்பி பாண்டவர்களுக்குத்தக்க

மும், தனக்கும் குந்திக்கும் இருக்கத்தக்க இடமும் செய்தாள். பாண்டவர் கள் ஸ்நானம் செய்து நித்திய கடன்களை முடித்துக்கொண்டு தண்ணீர் குடித் தார்கள். சாலிகோத்திர மஹாரிஷி பாண்டவர்களை உத்தேசித்து அன்ன பானாதிகளைச் சிந்தித்தார். பாண்டவர்கள் படித்துக்கொண்டு அரக்கு மாளி கை முதலியவற்றைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள் பிறகு குந்தி பீமனை நோக்கிப் பாண்டு மஹா ராஜாவைப் போலவே யுதிஷ்டிரனும் உன்னால் மரி யாதை செய்யத்தக்கவன் நான் தர்ம புத்திரனால் மரியாதை செய்யத்தக்கவள் ஆதலால் நான் சொல்வதைச் செய், மறுபேச்சுப் பேசவேண்டாம். உன்மேல் காதல் கொண்ட இந்த ஹிடிம்பக்குப் புத்திரனை உதவு. அந்தப் புத்திரன் நம க்குச சகாயமாயிருப்பா னென்றாள். பீமன் சரி யென்று ஒத்துக்கொண்டு எல்லார்க்கும் முன்னால் ஹிடிம்பியைப் பாராத்துப் பெண்ணே! உனக்குப் புத் திரன் உண்டாகிறவரைக்கும் உன்னுடன் கூடி யிருக்கிறேன். உன் குல தர்ம மான ஈனபுத்தியையும் தொழிலையும் விட்டு ஒழித்து என்னுடன் கூடியிரு என்றான். ஹிடிம்பி சரி யென்று ஒத்துக்கொண்டாள். பின் தன் வீடு போய்ப் பாண்டவர்களுக்கு இராஜ போஜனம் கொண்டுவந்து கொடுத்தாள். பிறகு பீமனைத் தூக்கிக்கொண்டு மலைக்கொடுமுடிகளிலும், வனங்களிலும் விளையாடிக் கொண்டிருந்தாள். பாண்டவர்களுக்கு வேண்டிய போஜன பதார்த்தங்கள், தாம்பூலம் முதலியவைகளைக் கொண்டுவந்து கொடுத்து, அவர்களுக்குப் பணி விடைகளையும் தவறாமல் செய்துகொண்டிருந்தாள்.

மறு நாள் காலையில் திவ்யஞான சொரூபியாகிய வியாச முனிவர் பாண்ட வர்களிடத்துக்கு வந்தார் பாண்டவர்கள் குந்தி ஹிடிம்பி யுடன் அவரைக் கைகூப்பி வணங்கினார்கள். திருதராஷ்டிரன் உங்களுக்கு அநியாயஞ் செய்து உங்களைத் துரத்திவிட்டது எனக்குத் தெரியும். அது நிமித்தம் உங்களுக்கு ஒத்தாசை செய்யக் கருதித்தான் வந்தேன் நீங்கள் விசனப்படாதீர்கள். இது பூர்வகர்ம பயனாகும். இதுவும் உங்களுடைய நன்மைக்காகவே நடந்திருக் கிறது. நான் சொல்லுகிறவரைக்கும் இந்த வனத்தில் மறைந்து வாசம் பண் ணுங்கள். இவ்விடத்தில் ஆறு மாசம் இருங்கள் என்று சொல்லிப் பின் குந்தி யைப் பார்த்து மருமகளே! வருந்தாதே, உன் புத்திரனுடைய யுதிஷ்டிரன் அர சர்களுக்கு அரசனாயிருந்து அரசுபுரிவான். பீமார்ஜுனர்களுடைய பராக்கிர மத்தினாலே இந்தப் பூமி முழுதும் தர்மபுத்திரன் வசமாகும். சந்தேகமில்லை. உன் மருமகளாகிய இந்தப் பெண்ணுக்குக் கமலமாலினை யென்று பேர். இவள் பீமனுக்கு ஒரு புத்திரனைப் பெறுவாள். அந்தப் புத்திரன் கஷ்டகாலங்களில் உங்களுக்கு உதவி புரிவான். நீங்கள் இங்கேயே இருங்கள். சீக்கிரம் மறு படியும் வருவேனென்று அவர்களிடம் சொலவு பெற்றுக்கொண்டு போனார்

169-வது அத்தியாயம்.

ஹிடிம்பவத பர்வத் தொடர்ச்சி.

வியாசர் போன பின் ஆறு மாசம் பாண்டவர்கள் அக்கேயே சவலையற்றி ருந்தார்கள். அப்போது ஹிடிம்பி கர்ப்பந்தரித்துப் பயங்கரமான சொரூபமும் போற்றலுமுடைய ஒரு புத்திரனைப் பெற்றாள். அந்தப் புத்திரன் உடனே மாதாபிதாக்களை வணங்கினன். அவனுக்குக் கடோற்கசன் என்று பேரிட் டார்கள் அவன் தன் பிதாக்களை வணங்கி நான் உங்களுக்கென்ன செய்ய வேண்டுமென்று கேட்டான். குந்திதேவி அவனைப் பார்த்துக் குழந்தாய்! நீ பரதவம்ச புத்திரன் பாண்டவர்கள் ஐவருக்கும் முதல் புத்திரன். நீ பீம னைப்போலவே பராக்கிரமசாலி. ஆதலால் நீ எங்களுக்குச் சகாயம் செய் என்றாள். கடோற்கசன் அம்மா! நான் இராவணன் இந்திரஜித்து என்பவர்க ளைப்போன்ற பலவான். நீங்கள் நினைத்தபோது வருவேன். என்று சொல்லி விட்டுத் தன் இருப்பிடம் நோக்கிப் புறப்பட்டான். பீமன் ஹிடிம்பியைப் பார்த்து நம் சேர்க்கை இன்றோடு முடிந்தது. நான் நெடுங்காலத்திலிருக்கும் போது வந்து சேர் என்று சொன்னான். அவள் வணங்கி அப்படியே ஆகட்டும், நீர் இராகியத்தில் விரும்பினபோது என்னை நினைத்தால் நான் அந்த நிமிஷத் திலே வந்து சேருகிறேன் என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு போய் விட்டாள்.

170-வது அத்தியாயம்.

ஹிடிம்பவத பர்வத் தொடர்ச்சி

சாலிகோத்திர மஹா ரிஷி பாண்டவர்களை உபசரித்தார். பாண்டவர் வர்கள் ஜடை மரவுரி முதலிய தரித்து, பிராமணர்களைப்போல வேதவேதாங் கங்களை அத்தியயனம் செய்துகொண்டிருந்தார்கள். நீதி சாஸ்திரம் தர்க்கம் முதலியவும் கற்றார்கள். பிறகு அவர்கள் எல்லாரும் அந்த வனத்தை விட்டுப் பிரயாணப் பட்டார்கள். வழியில் வியாசர் காட்சி தந்தார் பாண்டவர் அவ ரை வணங்கி நின்றார்கள். வியாசர் பாண்டவர்களை நோக்கி எல்லாம் எனக் குத் தெரியும் இதோ எதிரிலிருக்கிற நகரம் அழகானது செடுதியில்லாதது. ஆந்த நகரத்தில் நான் வருகிறவரையில் வசியுங்கள் என்று கூறி அவர்களைப் பிரயாணப்படச் சொன்னார். போகும்போது வீசனப்படுகிற குந்தியைப் பார்த்து மரு மகளே! முற்றும் தர்மத்தையே செய்தவனும், முழுதும் பாபத்தையே செய்த வனும் இல்லை. இரண்டையும் கலந்தே செய்கின்றனர். ஆதலால் இன்பதுன் பம் இரண்டையும் கலந்தே அனுபவிக்கிறார்கள். உங்களுக்கும் பாபத்தினாலே பெருந்துக்கம் சம்பவித்தது. ஆகையால் நீ துக்கப்படாதே யென்று சொல்லி அவர்களை ஏகசக்கிர நகரத்தில் ஒரு பிராமணன் வீட்டில் குடிவைத்துத் தமது ஊர்சிரமத்துக்குப் போய்ச் சேர்ந்தார்.

171-வது அத்தியாயம்.

பகவத பர்வம்.

பாண்டவர்கள் அந்த நகரத்தில் பிக்ஷை யெடுத்தார்கள். யுதிஷ்டிரரைச் சிந்தித்துக்கொண்டே பிக்ஷை யெடுத்தார்கள். அந்நகரத்து ஜனங்கள் எல்லாரும் அவர்களே நோக்கித்தார்கள். இவர்கள் பிட்சை யெடுத்துப் புசிக்கத தசாதவர்கள். இராஜ லட்சணங்கள் எல்லாம் இவர்களிடம் பொருந்தி யிருக கின்றன. ஆதலால் இவர்கள் அரசு புரிவதற்குத் தக்கவர்கள். ஏதோ ஒரு காரணத்தால் மாறு ரூபங்கொண்டு மறைந்து வசிக்கிறார்களென்று கருதினார்கள். அந்தப் பாண்டவர்களைத் தங்களுடைய பந்துக்களைப் போலவே மனைத்து உபசரித்தார்கள். பிக்ஷாபாத்திரம் நிரம்ப அன்னம், பட்சணம், கறி முத லிய கொடித்து உபசரித்தார்கள். பாண்டவர்கள் பிட்சாலன்னம் முதலியவற்றைத் தங்கள் தாயாரிடத்தில் கொண்டுவந்து கொடுப்பார்கள். குந்தி யிரு பாகமாகப் பகுந்து பீமனுக்கு ஒரு பாகத்தைக் கொடுத்து, மற்றொரு பாகத்தை ஐந்துபங்காகி மற்றவரும் புசிப்பார்கள். ஆயினும் பீமனுக்கு திருப்தியில்லை. இப்படி யிருக்கையில் பீமனுக்கு ஒரு குயவன் சிநேகமானான். அந்தக் குயவன் பீமனுக்கு ஒரு பெரிய மண் பாதநிரம் செய்து கொடுத்தான். அந்தப் பெரிய பாத்திரத்தை யெடுத்துகொண்டு பிட்சைக்குப் போனான். அதைக் கண்ட ஜனங்கள் நகைத்து அதை நிறைப்ப போஜன பதார்த்தங்கள் போட்டார்கள். அப்படி புஜித்தும் பீமன் தன் தாயாரிடத்தில் எனக்கு வயிறு நிரம்புகிறதே யில்லை யென்று தனிமையா யிருக்கும்போது சொன்னான். பின்பு ஒரு நாள் நால்வரும் பிட்சைக்குப் போனார்கள். பீமனும் குந்தியும் தனித்திருந்தார்கள். அந்தச் சமையத்தில் அந்தக் கிருகத்தில் துக்கத்தினால் ஒரு தொனி கேட்டது. குந்தி அதைக் கேட்டுப் பீமனைப் பார்த்து, நாம் இந்தப் பிராமணன் வீட்டில் சுக மாக வசிக்கிறோம். அவருக்குத் தீராத் துயரம் உண்டாயிருக்கிறது. அதை நாம் நிவர்த்தி செய்யவேண்டும். அப்போது நான் நாம் நன்றி மறவாதவர்களா யிருப்போம். நமக்கு உபகாரியாயிருக்கும் இவர்களுக்கு எப்போது பதில் உப காரம் செய்யப்போகிறோமென்று சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். இப்போது சமையம் வாய்த்திருக்கிறது. இவர்களுக்கு இந்தத் தருணத்தில் உபகாரம் பண்ணினால் புண்ணியம் உண்டாகும் என்றாள். பீமசேனன் அம்மா! நீ அதை விசாரித்துக்கொண்டு வா. அது எதுவாயிருந்தாலும் அவர்களுடைய துக்கத்தை நிவர்த்தி செய்வேன் என்றான். குந்திதேவி உடனே அந்தப் பிராமணனுடைய அந்தபுரத்தில் புகுந்தாள். அப்போது அந்தப் பிராமணன் தன் புத்திரன், மனைவி, மகள் இவர்களை நோக்கிச் சொல்லுகிறான், இந்தப் பூலோ கவாழ்வானது சாரமற்றது. பிரயோசனம் இல்லாதது. துன்பத்துக்கே காரணமானது பிறக்கிறோம் உட்பட்டுள்ளது. இது எனத்திற்கு? ஜீவித்திருப் பதினால் துக்கமே அதிகமாக உண்டாகிறது. அவனுக்கு இன்பதன்பம், லாபம் நஷ்டம், ஜயாபஜயம் முதலியன தவறாமல் வரும். திரவியலாபம் பெற்றால்

அவனுக்குத் துக்கங்களெல்லாமும் வருகின்றன பொருளைச் சம்பாதிப்பதே பெருந் துன்பம். இது சம்பாதித்தானபின் அதை விட மிகுந்த துக்கம். பொருளாசை உள்ளவனுக்கு அதை யிழந்தால் அதை விட வேறு விசனம் இல்லை. இஷ்டதனின்படி எத்தனை செல்வம் உண்டானாலும் அது அவ்வளவும் துக்க ஆணிகள் அடிக்கப்பட்டது போலாகின்றது. சொற்ப நாள் உள்ளதும் மிகுந்த பயங்கரமானதுமாகிய இந்த வாழ்வு எனக்குப் பிரியமில்லை. அதிலும் மனைவியோடு கூடின எனக்குத் தீராத் துயரமாயிற்று. இல்வாழ்க்கையில் வெறுப்பு வரவில்லை. இப்போது உண்டாயிருக்கும் ஆபத்தை நீக்கிக்கொள்ளத் தக்க உபாயம் எனக்குத் தோன்றவில்லை. முன்னேயே இவ்விடத்தை விட்டு ஓடிப் போக எத்தனித்தேன். அதை நீ கெடுத்தாய். உன் மாதா பிதாக்களையும் பந்துக்களையும் விட்டு வர உனக்கு மனமில்லாமற் போயிற்று. இப்போது அவர்கள் ஒருவருமில்லை. சுகம் எண்டாகத்தக்க இடம் வெகு தூரத்திலுள்ளதானாலும் உடனே போய்ச் சேரவேண்டும் அப்படிக் செய்யாமல் உன் பேச்சைக் கேட்டு இருந்ததனாலே என் புத்திரனை யிழந்து வருந்தவேண்டியான காலம் எனக்குச் சம்பவித்தது. நற்குண நற்செய்கைகளெல்லாம் நிறைந்து கற்புநெறி கடவாத உன்னையும் விட மனமில்லை. இளம் பருவமுள்ள புதல்வியையும் நீக்க முடியாது. இப்பர சுகங்களுக்கு எதுவான புத்திரனைத்தான் விட முடியுமா? என்னைப் பிரிக்கடனிலிருந்து விடுவித்துக் குலத்தைக் கரையேற்றும் சற் புத்திரனை விட முடியாது. உங்கள் மூவரில் ஒருவரையாவது அல்லது என் ஜீவனையாவது விடவேண்டிய கட்டாயம் வந்து விட்டது அது உன் பேச்சுக் கிணங்கி இங்கேயே வசித்ததின் பயன். நான் தப்பித்துக்கொள்வதற்காக உங்களை விட முடியாது உங்களை காப்பாற்றும்படியாக நான் இறந்தாலும் நீங்கள் பிறகு துன்பப்பட நேரிடும், உங்களை யார் காப்பாற்றுவார்கள். நான் மடிவதே தகுதி யென்றான்.

172-வது அத்தியாயம்.

பகவத் பர்வத் தொடர்ச்சி.

அதைக் கேட்ட மனைவி சொல்லுகிறாள். உலகத்தில் பிறந்த மனிதர் அனைவரும் இறக்கவேண்டியது நிச்சயம் சுபாவமான இந்த மரணத்தைக் குறித்து வருத்தப்படுதலது சரியல்ல. மனைவி மைந்தனுடைய எல்லாரும் தனக்காகத்தான் என்று கூறுகிறார்கள். சகலமும் கற்றறிந்த நீர் இந்த விஷயத்தில் சாதாரணமான மனிதரைப் போல விசனப்படுகிறது நல்லதல்ல. ஆகையால் நான் போகிறேன் தன்னுயிரைக் கொடுத்தாவது கணவனைக் காப்பாற்ற வேண்டியது மனைவிக்குரிய தருமம். அதுவே பெண்களுக்குப் பரலோகசாதகமாகிறது. உலகத்திலும் கீர்த்தி நிலைத்திருக்கும். மனைவியை அடைவதனால் பெரும் பயனை நீர் அடைந்து விட்டீர். அதென்னவென்றால் ஒரு புத்திரனையும்

புத்திரியையும் பெற்றுக்கொண்டிருக்கிறீர். உம்மைப் போல குழந்தைகளைப் போஷித்து வளர்க்க எனக்குச் சக்தியில்லை. உம்மை விட்டு நானிந்த உலகத்தில் நன்மார்க்கத்தில் நடந்துகொண்டு குழந்தைகளை காப்பாற்ற என்னால் முடியுமா ? பூமியில் விழுந்த மாமிசத்தைப் பட்சிகள் விரும்புவதைப்போலக் கணவனில்லாத மனைவியை எல்லாரும் விரும்புகிறார்கள். ஆதலால் சன்மார்கத்தில் நிலைத்திருப்பது அரிது. பெண் ஜன்மம் மிகவும் நிர்ப்பாக்கியமானது. சுதந்திரமாயிருக்கிற பெண் எப்போதும் இழிவை யடைந்து இகழப்படுவாள். நெய்யில் நனைத்த துணியை நாய்களிழுப்பதுபோலக் கணவனில்லாத பெண்ணைத் துஷ்டர்கள் தொடர்வார்கள். ஏக புத்திரனை இவனை முன்னோர் சென்ற வழியில் நடத்தவும், கல்வி முதலிய கற்பிக்கவும் என்னால் முடியுமா ? இந்தப் புத்திரியையும் அயோக்கியர்கள் இச்சித்து அபகரிப்பார்கள். அப்போது நான் இறப்பது நிச்சயம். நீரும் நானு மிறந்துபோனால் நீர் வற்றின குளத்தில் மீன்கள் படிவதுபோல இந்த குழந்தைகளும் அழிந்துபோவார்கள். அப்படியாகுமானால் நாமெல்லாரும் சந்ததியற்று மடிந்துபோகும்படி நேரிடுகிறது. ஆகையால் நீன் இராட்சதனுக்கு இரையாகப் போகிறேன். கணவனுக்கு முன்னால பரலோகம் போவது புத்திரனுள்ள மனைவிக்குப் பெருமையாகும். அவள் பாவதி தேவியின் உலகத்தை அடைவள். சுமங்கலியாய் இறந்து கணவன் கொடுக்கும் தர்ப்பணநீரை அருந்தவேண்டும். அவளோ பாக்கியவதி பார்வதியம்மனுக்குத் தோழி யாகிறாள் தாய் சந்தை புதல்வர் இவர்கள் அற்பப் பயனை யளிப்பவர்கள். கணவனோ அளவில்லாத பலனைத் தருபவர். கணவனில்லாமல் அக்னிஹோத்திராதி கர்மங்கள் செய்ய ஸ்திரீகளுக்கு அனுமதி யில்லை உபவாசம், பொறுமை, தூய்மைகளே விதிக்கப்பட்டிருக்கின்றன. ஆபத்துக்காகத் திரவியத்தைச் சேகரிக்கவேண்டும். தனத்தினால் மனைவியைக் காப்பாற்றவேண்டும். தனத்தாலும் மனைவியாலும் தன்னைக் காப்பாற்றவேண்டும். குடும்பம் முழுவதும் ஒரு தட்டு, தான் ஒரு தட்டு. அப்படியானால் குலத்தை விடத் தானே அதிகம். என்னால் உம்மைக் காத்துக்கொண்டு, உம்மால உம்மைக் கரையேற்றிக் கொள்ளும். தனக்கு மிஞ்சினது எதுவுமில்லை. எனக்கு விடைகொடும். குழந்தைகளைக் காப்பாற்றும். தர்மம் தெரிந்தவர்கள் ஸ்திரீகளைக் கொல்லக்கூடாதென்று கூறுகிறார்கள். இராட்சதர்களிலும் தர்மம் தெரிந்தவர்களுண்டு. ஒருக்கால் அந்த அரக்கன் என்னைக் கொல்லாமல் விடவும் கூடு மல்லவா? புருஷர்களைக் கொல்வதிலே சந்தேகமே யில்லை. நானே விரும்பின போகங்களை யனுபவித்தேன். தர்மங்களையும் செய்தேன். சந்ததியையும் அடைந்தேன். கீர்த்தியையும் பெற்றேன. என்னை மரணம் தின்பப்படுத்தாது. என்னை அனுப்பிவிடும். அதன் பின் நீர் வேறொரு பெண்ணை மணந்துகொண்டு தர்மத்தையும் செய்யலாம். புருஷர்கள் வெகு பத்தினிகளை அடையலாம். பெண்களுக்குக் கூடாது. ஆதலால் என்னை அனுப்பிவிட்டு நீர் சுகமாயிருமென்று

சொன்னாள். அதைக் கேட்ட புருஷன் அவளோத தழுவிக்கொண்டு கண்ணீர் விட்டு அழுதான். அன்புள்ளவளே! இப்படிச் சொல்லாதே, அறிவுள்ள புருஷன் மனைவியையும் குழந்தைகளையும் கைவிடக கூடாது. புத்திசாலியானவன் மனைவியை முக்கியமாகக் காப்பாற்றவேண்டியது. விடத்தகாத மனைவி புத்திரர்களை விட்டுப் புருஷன் உயிரோடிருந்தால் அவன் தர்மார்த்த காம மோட்சங்களில் ஒன்றையும் அறியாதவனென்று கூறுவார்கள் எனப் பிராமணன் கூறினான்.

173-வது அத்தியாயம்.

பகவத பாவத் தொடர்ச்சி.

இப்படித் துக்கப்படுகிற தாய் தந்தையரைப் பார்த்துப் புத்திரி சொல்லுகிறாள். ஏன் அப்படி நீங்கள் வருந்துகிறீர்கள்? நான் சொல்வதைக் கேளுங்கள். தாமப்படி நீங்கள் என்னை விட்டு விடலாம். எனையும்விட்டு உங்களெல்லாரையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அபத்துக்காகத் தான் சந்ததியை வீரும்புகிறார்கள். தெப்பத்தால் நதியைத் தாண்டுவது போல எவ்வளவு நீங்கள் அபத்துகளைக் கடந்து ஜீவியுங்கள். இவ் வுலகத்திலாவது துக்கத்தை நீக்கவேண்டும். பரலோகத்திலாவது துக்கத்தினின்றும் தாண்டுவிக்கவேண்டும். எவ் வகையிலாவது துன்பத்தினின்றும் விடுவிக்கிறவனே புத்திரனுவான். அறிவுள்ளவர்கள் புத்திரியினிடத்தில் லுண்டாகும் தெளஹித்திரனைச் சந்ததியாகக் கொள்ளுகிறார்கள். ஆகையால் நானே உங்களைக் காப்பாற்றுவேன். என் சகோதரனே குழந்தை. நீர் பரலோகம் போனால் இவன் சீகிரத்தில் அழிவான். நீரும் இறந்து இவனு மிறந்துபோனால் பிதிர்களுக்குப் பிண்டம் இல்லாமற்போகும். அப்போது பிதிர்கள் வெறுப்பார்கள். தாய் தந்தை சகோதரன் மூவரும் போய்விட்டால் நானும் துக்கத்தால் நிச்சயமாகவே மடிவேன். நீர் சாகாதிருந்தால் நாயும் சகோதரனும் ஜீவித்திருப்பார்கள். பிதிர்களும் திருப்தியடைவார்கள். நானே புத்திரன் மனைவி எனக்குத் துணை. பெண் பெருந்துயரம் என்று சொல்லுகிறார்கள். ஆகையால் பிதாவே! என்னை அனுப்பி நீர் துக்கத்தை விடும் அப்படிச் செய்தால் நான் தர்மம் செய்தவளாவேன். நீங்கள் போய் நானிருந்தால் சதா துக்கமுள்ளவளாகவே யிருப்பேன். நான் இறந்து இந்தக் குலத்தை துக்கப்படாமல் காப்பாற்றினால் பெரும் பயன் பெற்றவளாவேன். பரலோகத்தில் சுகத்தை அனுபவித்துக் கொண்டிருப்பேன். தாய் தகப்பனிருந்தால் புத்திரியைப் பெற்றுக் கொள்ளலாம். ஆகையால் என்னை அனுப்பிவிடும் என்றாள். இதைக் கேட்டுத் தாய் தகப்பன் பெண்மூவரும் புலம்பினார்கள். அதைக் கண்ட புதல்வன் அப்பா! அழாதே. அம்மா அழாதே. அக்கா அழாதே என்று சொல்லிக்கொண்டே அவர்கள் கிட்டப் போனான். அப்படிப் போனவன் ஒரு தருப்பை எடுத்துக்கொண்டு மனிதனைத்

தின்னுகிற அரக்கனை நான் இந்தத் துரும்பால் கொல்வேன் என்று சிரித்துக் கொண்டு சொன்னன். அதைக் கேட்டு அவர்களுக்குத் துக்கம் போய்ச் சந்தோஷம் உண்டாயிற்று. இது தான் சமையமென்று குந்தி அவர்களிடம் போனள்.

174-வது அத்தியாயம்.

பகவத பர்வதத் தொடர்ச்சி.

குந்தி அவர்களைப் பார்த்து நீங்கள் என் துக்கப்படுகிறீர்கள்? அதைத் தெரிந்துகொண்ட பின் கூடுமானல் அதையும் நிவர்த்திசெய்வேன் என்றள். பிராமணன் சொல்லுகிறான்.

அம்மா! நீ சொல்வது நியாயமே. இந்தத் துக்கம் ஒருவராலும் நீக்கமுடியாதது. ஆனலும் சொல்லுகிறேன். இந்த நகரத்தின் அருகில் பகன் என்று ஒரு ராட்சதனிருக்கிறான். அவன் மஹா கொடியவன். மனிதர்களைத் தின்பவன், துஷ்டன், மஹா பலசாலி, பீமனைத் ரூபமெடுப்பவன். அவனல் இந்த நகரத்துக்குப் பீடை யுண்டாகிறது. இது பதின் மூன்றவது வருஷம். அவனலே இந்த நகரத்துக்கு இராஜாக்கள் முதலியவர்களால் துன்பமில்லை. இங்குள்ள பிராமணர்கள் அவனைப் பூஜிக்கின்றார்கள். அவனல் இந்த நகரத்துக்குத் துன்பம் நேரிட்டிருக்கிறது. அவனிடத்திலிருந்து இந்த நகரத்தை விடுவிக்கதக்கவர்கள் ஒருவருமில்லை. அவன் நியமமின்றி அகப்பட்டவர்களை யெல்லாம் கொன்று தின்று கொண்டிருந்தான். இந்த நகரத்துப் பிராமணர்கள் எல்லாரும் கூடி அவனைப்பார்த்து, நீ சொன்னபடி எல்லாரையும் கொல்லாதே. உனக்கு வேண்டிய அன்ன மாமிசங்களை முறையாக கொடுக்கிறோம். மாம்சம், எள்ளுப்பொடி, நெய், கறிகாய் முதலியவற்றோடு அன்னம் கொடுப்போம். அப்பம், பொரி, கள்ளு, சாராயம், காய்ச்சியதும் காய்ச்சாததுமான பானங்கள், பக்குவம் அபக்குவமான மாம்சங்கள், சமைத்ததும் சமையாததுமான பன்றி, எருமைகளின் மாம்சங்கள், பலவகைச் சித்திரான்னங்களோடு வீட்டுக்கொரு மனிதன், இரண்டு காளைமாடுகளையும் முறையாக நாங்கள் கொடுத்துக்கொண்டு வருகிறோம். நீ இதை ஏற்றுக்கொள் என்று வேண்டினார்கள். அவனும் அங்கீகரித்தான். இந்த உடன்படிக்கையினல் காட்டு மிருகங்கள், அரசர்கள் முதலான பயமில்லாமல் எங்களைக் காத்துவருகிறான். இப்படி நெடுகாளாய், நடந்துவருகிறது. இந்தத் துன்பத்தினின்று எங்களை விடுவிப்பார் ஒருவருமில்லை இந்த நகரத்து அரசனும் சும்மா இருக்கிறான். அரசனில்லாதபோது மனிஷிமக்கள் எது? செல்வமேது? நான் இம்மூன்றும் உள்ளவனுக இருக்கிறேன். இன்று எங்கள் முறை வந்திருக்கிறது. அவனுக்குப் போஜனமும் மனிதனும் நான் அனுப்பவேண்டும் மனிதனை வாங்குவோ மென்றல் அதற்குத் தக்க பொருள் எனக்கில்லை. மனுஷி மக்களை அனுப்புவதும்

என்னால் முடியாது. அந்த இராட்சதனிடத்திலிருந்து தப்பித்துக்கொள்ள எனக்குச் சக்தியில்லை. அதனாலே துக்க சமுத்திரத்தில் முழுகியிருக்கிறேன். இந்த உறவினர்களோடு அவனிடம் போகிறேன். அந்தப் பாவி எங்கள் எல்லாரையும் சேர்த்துத் தின்னக்கடவன் என்றார்.

175-வது அத்தியாயம்.

பகவ- பர்வத தொடர்ச்சி

அதை கேட்ட குந்தி, இதற்காக நீர் பயப்படவேண்டாம். உம்மை விடுவிக்க உபாயம் எனக்குத் தெரியும. உமக்கு ஒரே புத்திரன். அவன் குழந்தையாயிருக்கிறான். ஒரே பெண். அவளும் பரிதாபமான நிலைமையிலிருக்கிறாள், நீராவது உமது மனைவியாவது போவதும் உசிதமல்ல. எனக்கு ஐந்து புத்திரர்களிருக்கிறார்கள். அவர்களில் ஒருவன் ஆகாரத்தோடு உமக்காகப் போவான் என்றாள். பிராமணன் நான் என்றுயிரை காப்பாற்றுவதற்காக அதிதியான பிராமணனைக் கொல்ல மாட்டேன். பிராமணவதம் தற்கொலை இவ்விரண்டினுள் தற்கொலை சிறந்தது. பிரமஹத்தி மஹாபாபம் அதற்குப் பிராயச்சித்தமுமில்லை. நானே இறப்பேன். நான்தானே தற்கொலை செய்து கொள்ளவில்லை என்னை மற்றொருவன் கொல்வதனால் எனக்குப் பயமில்லை வீட்டுக்கு வந்தவனையும், அபயமென்று அடைந்தவனையும், யாசிப்பவனையும் கொல்வது கொடிது. அறிஞரால் இகழப்பட்டது. அதை நான் செயயமாட்டேன். பிராமணவதஞ் செய்வதைவிடக் குடும்பத்தோடு நானிறப்பது மேலானது என்றார். குந்தி அது எனக்குத் தெரியும. ஆனால் என் புத்திரன் வீரன், மந்திர சித்தியுள்ளவன். அவன் இந்த போஜனத்தைக் கொண்டு போவான். அவன் சாகான். அதேக இராட்சதர்களை என் புத்திரன் கொன்றிருக்கிறான். இந்த அரக்கனையும் கொல்வான். இந்த இரகசியத்தை வெளியிடவேண்டாம் என்றாள் அதுகேட்ட பிராமணன் மகிழ்ந்து குந்தியைப் புகழ்ந்தான். பிராமணனும் குந்தியும் சேர்ந்து நீ இந்தக் காரியத்தைச் செய்யவேண்டுமென்றார்கள் அவன் அப்படியே செய்கிறேனென்று கூறினான்.

176-வது அத்தியாயம்.

பகவத பர்வத் தொடர்ச்சி.

பிறகு பாண்டவர்கள் பிக்ஷை யெடுத்துக்கொண்டு வந்தார்கள். யுதிஷ்டிரர் பீமனுடைய முகத்தைப் பார்த்து இவனுடைய சந்தோஷத்துக்குக் காரணம் என்ன ? யுத்தத்திலன்றி மற்றெதிலும் இவனுக்கு மகிழ்ச்சியுண்டாகாது என்று நினைத்துக்கொண்டு, தாயரைத் தனியாக அழைத்துப் பீமன் என்ன செய்ய நினைக்கிறான். ஏன் உத்தரவிலல் செய்ய நினைக்கிறானு அல்லது அவ

னே செய்வதாக நிச்சயித்துக்கொண்டானு என்றார். குந்தி, என்னுடைய உத்தரவினலேயே இந்த சுகரத்திற்கும், நம்மை ஆதரிக்கும் பிராமணனுக்கும் பெரிய நன்மையைச் செய்ய இச்சிக்கிறான். புத்திரா! பகாசுரனுக்காகச் சித்தம்பண்ணப்பட்ட சிறந்த போஜனத்தை ஒரு நாளாவது பீமன் புஜித்துத் திருப்தி யடையக்கடவனென்றாள். தர்மபுத்திரர் அம்மா! செய்ய முடியாத பெரிய செய்கையை நீ செய்யத் தீர்மானித்துவிட்டாய். பின்னையை விடுவதைப் பெரியோர் சிறந்ததாகச் சொல்லவில்லை. நீ பிறருடைய புத்திரனுக்காக உன் புத்திரனை அனுப்ப எப்படித் துணிந்தாய். இதனல் நீ சாஸ்திரத்துக்கும் உலகுக்கும் விரோதமான காரியத்தைச் செய்கிறாய்? இவனுடைய பலத்தைக் கொண்டல்லவோ கவலையின்றித் தூங்குகிறோம். இவனை நினைத்தல்லவோ துரியோதனன், சகுனி, சகுனி முதலானவர்கள் இரவிலுங்கூடத் தூக்கமில்லாமல் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவனைக்கொண்டல்லவோ நாம் இராஜ்யம் ஆளுகிறோம். இவனலல்லவோ அரக்குமாளிகையினின்றும் காப்பாற்றப்பட்டோம். அப்படிப்பட்ட புத்திரனை நீ விட்டுவிட நினைத்ததைப்பற்றி யென்றார். குந்தி யுதிஷ்டிரா! நான் புத்தியில்லாமல் இந்தக் காரியத்தைத் தொடங்கவில்லை. பீமனுக்காக நீ வருத்தப்படவேண்டாம். இந்தப் பிராமணனுடைய வீட்டில் துரியோதனன் அறியாமல் சுகமாக வசிக்கிறோம். அதற்குப் பதில் உபகாரம் இதைத் தவிர வேறு ஒன்று இருக்கிறதாக எனக்குத் தோன்றவில்லை. செய்நன்றி மறவாதவனே மனிதன். பிராமணனுக்காகச் செய்யும் தருமம் பெரிது. பீமனிடத்தில்தான் அத்தச் சமர்த்தியமிருக்கிறது. பதினயிரம் யானைபலமுள்ளவன். இந்திரனையும் பீமன் வெல்வன். இவன் பிறந்தவுடனே என் இடுப்பிலிருந்து மலைப்பாறையில் வீழ்ந்தான். பாறை பொடியாய்ப் போயிற்று. பீமனுடைய பலத்தை நான் அறிந்திருப்பதினல் சமையம் நேரிட்டபோது பிராமணனுக்கு உபகாரம்பண்ணத் தீர்மானித்தேன். இத்தச் செய்கை சிறந்ததுமமே. ஆதனல் பிரதியுபகாரம்செய்வதும், தர்மத்தைப் பரிபாலிப்பதுமான இரண்டு பலனுண்டாகிறது. க்ஷத்திரிய வைசியர்களுக்கு உபகாரம்பண்ணுகிற க்ஷத்திரியனும் கல்ல கதியடைவான். பிராமணனுக்கு உபகாரஞ் செய்தால் அதற்குச் சமானமில்லை யென்று வியாச பகவான் எனக்குச் சொல்லியிருக்கிறார். அதனலேதான் இந்தக் காரியம்செய்ய உத்தேசித்தேனென்றாள்.

177-வது அத்தியாயம்.

பகவத பர்வத் தொடர்ச்சி.

தாயே நீ பிராமணனைக் காப்பாற்றுவதற்காகச் செய்தது நியாயந்தான். அதனல் நிச்சயமாகவே பீமனும் ஜயம் பெற்றுவருவான். ஆனல் இந்த சுகரத்தார் இதை யறியாமலிருக்கவேண்டும். ஒருவருக்கும் சொல்லாதிருக்

கும்படி பிராமணனுக்குச் சொல்லு என்றார். பிறகு குந்தி மற்றப் புத்திரர்களுடனும் யோசித்துத் தீர்மானஞ் செய்துகொண்டாள். விடிந்தபின் பீமசேனன் பிராமணரிடம் போய்ப், பிராமணரே ! நான் உம்மை இராட்சத பயத்தினின்றும் குடும்பத்தோடு விடுவிப்பேன். நீர் பயப்படாமல் என்னைப் பலியாக அனுப்பும் என்று சொன்னான் நான் என் உயிரைக் கொடுத்து உங்களைக் காப்பாற்ற நிச்சயம் செய்துவிட்டேன். தாமதஞ் செய்யாமல் சீக்கிரம் அனுப்பும். சீக்கிரம் எல்லாவற்றையும் சித்தப்படுத்துமென்றான். அது கேட்ட பிராமணர் ஏகசக்கிரத்தாருக்குந் தெரிவித்துப் பீமனுக்குச் சிறந்த போஜனம் போட்டார். பிறகு காய்கறி நெய் தலியவற்றோடு கிறைந்த வண்டியிலேறி உட்கார்ந்தான். சிறு பிள்ளையாகிய இவன் தன் வயிற்றுப் பசிக்காகத் தானாகவே இராட்சதனுக்குப் பலியாகப் போகிறான் என்று ஜனங்கள் பேசிக்கொண்டு வாத்திய முழக்கங்களுடன் புறப்பட்டார்கள். பீமன் கரியமாடுகள் கட்டின வண்டியை ஓட்டினான். சந்தோஷமாகவே போனான். அந்தஸ்தத்துக்குப் போனதும் ஜனங்கள் பயந்து நின்றுவிட்டார்கள். பீமன் மாதத்தனித்துப் போனான். அந்த வழியில தனக்குக் குறித்துக் காட்டிய மரத்தண்டை போனான். அந்த மரம் எலும்பு, மயிர், கால், தொடை முதலியவற்றினால் நிறைந்திருந்தது. கழுகுகளும், பருந்துகளும் சுழ்ந்திருந்தன. நரிகள் நிரம்பியிருந்தன. கொடும் நாற்றமுள்ளதாயிருந்தது அம்மரத்தண்டை பீமன் வந்தான். அங்கே நின்றுகொண்டு யோசிக்கிறான். சகல கறி, பட்சணம், அன்னம் முதலியவை இவ்வண்டியில் நிரம்பி யிருக்கிறது. பகன் பார்ப்பதற்குள் நான் புசித்து விட வேண்டும். பின் இது எனக்குக் கிடைக்க மாட்டாது. பகனோடு சண்டை செய்யும்போது சிதறிப்போய்விடும். அவனைக் கொன்ற பின் அசுசியாயிருப்பதினால் உண்ணத் தகாது என்று சிந்தித்துக்கொண்டு உண்ணத் தலைப்பட்டான். மரங்களின் மேலிருந்து பார்த்துக்கொண்டிருந்த நகரத்தார் இராட்சதனையில்லாவிட்டால் இந்த உணவை உண்ணமுடியாது. பகனே பிராமண வடிவத்தோடு புஜிக்கிறான் என்று சொல்லிக்கொண்டார்கள். பீமன் உண்டானபின் பகனைப் பரிகாசம் பண்ணி அவனைப் பெயர் கூறி அழைத்தான். அதனால் கோபங்கொண்ட பகன் ஆக்கிரகத்தோடு அவ்விடத்துக்கு வந்தான். மலைபோன்ற பெரிய தேகமும், சிவந்த கண்களும், கோரமான ரூபமும், சிவந்த மயிரும், காதுவரையிலும் கிறந்திருக்கிற வாயும், ரூபம்போன்ற காதும் உள்ள பயங்கரமான பகாசுரன் உதட்டைக் கடித்துகொண்டும், புருவங்கள் நெற்றியிலேற நெரித்துக்கொண்டும் வந்து, அன்னத்தைப் புசிக்கும் பீமனைப் பார்த்து அடா! எனக்காகச் சேகரிக்கப்பட்ட அன்னத்தைத் தின்னுகிறாயே! அடா மதி கெட்டவனே! உன்னை எமலோகத்துக்கு அனுப்பப்போகிறேன். நீயார்? என்ற கேட்டான். பீமன் அதை கவனியாமல் புசித்துக்கொண்டேயிருந்தான் அரக்கன் கோபித்து இரைச்சலிட்டுக்கொண்டு பீமனைக் கொல்லவந்தான். அப்போதும் பீமன் உண்டுகொண்டேயிருந்தான். பகன் பீமனுக்குப் பின்

ஞல் நின்று முதுகில் குத்தினுன். அப்போதும் பீமன் அவனைத் திரும்பிப் பார்க்கவே யில்லை. புசித்துக்கொண்டே யிருந்தான். அரக்கன் ஒரு மரத்தைப் பிடுங்கிக்கொண்டு வந்து பீமனை அடித்தான். பீமன் இடக்கையால் அதைத் தடுத்துக்கொண்டு வலக்கையால் புசித்துக் கொண்டிருந்தான். பின் பகனுடைய கையை மரத்துடன் சேர்த்துப் பிடித்துக்கொண்டே புசித்தான். தயிர்க்குடங் களையும் நெய் குடங்களையும் குடித்துவிட்டுக் கையலம்பிக்கொண்டான். எதி ரில் மலைபோல இறுமாந்து நின்றன். பகன் ஒரு பெரிய மரத்தைப் பிடுங்கிக் கொண்டு பீமனை அடிக்க வந்தான். பீமனும் தோள்தட்டிச் சிங்காதஞ்செய் தி, அரக்கனைக் கூப்பிட்டுச் சொல்லுகிறன். அடா அதமா! மாம்சங்களைத் தின்று வளர்ந்திருக்கிற நீ என் கையில் அகப்பட்ட பின் ஆகாரம் உண்ணப் போகிற தில்லை. உன்னை எமனுலகம் அனுப்பப் போகிறேன். இன்று முதல் இந்த நகரத்தார் பயமில்லாமல் தூங்குவார்கள், உன் தேகத்தை காய் கரி கழுகு கள் தின்னும் என்றன். பகன் கோபித்துக்கொண்டு மரத்தைசசுழற்றிப் பீமன் மேலெறிந்தான். பீமன் தரித்துக்கொண்டு அதை இடது கையால் பிடித்துக் கொண்டான். பகன பின் அநேக மரங்களை யெறிந்தான். பீமன் அவை களை யிடதுகைவிரலால் தட்டிவிட்டான். இப்படி அவரிருவரும் கொடும் போர் புரிந்தார்கள். அந்த யுத்தம் பயங்கரமாக இருந்தது. அவர்களுடைய வேகத்தினுல் பூமி நடுநடுங்கிப்போயிற்று. பின் இருவரும் கைகலந்து மல்லு யுத்தஞ்செய்தார்கள் ஒருவரை யொருவர் அடித்தும் குத்தியும், உதைத்தும் யுத்தஞ் செய்தார்கள். அதில் உண்டான சத்தத்தால் வேத்திரகீயம் நடுங் கிற்று. பின் பீமன் பகனைப் பிடித்துக் கட்டியிறுக்கி முதுகை வளைத்து இடுப் பில் உதைத்தான். அதனல் அரக்கனுக்குக் சரீரம் விலவிலத்துக் கைகால்கள் தளர்ந்து பெருமூச்செறிந்து கதறிக்கொண்டு பூமியில் வீழ்ந்தான். பீமன் அவ னைக் காகாவென்றிழுத்தான் பின் பூமியில் தேய்த்து முழங்காலால் இடித்து உடலை முறித்துத் தள்ளினன். பகன் அண்டம் வெடிக்கும்படி கூவிக்கொ ண்டு உயிரை விட்டான்.

---

178 வது அத்தியாயம்.

பகவத பர்வத் தொடர்ச்சி.

பகனுடைய தம்பி பீமனிடத்தில் வந்து சரணமடைந்தான். இராட் சதர் எல்லாரும் பீமனைச் சரணமடைந்தார்கள். பீமன் அவர்களை நோக்கி நீங்கள் இனி ஒருபோதும் மனிதர்களைத் தின்னக்கூடாது. தின்றல் இத் தக் கதி சேரிடுமென்று கூறிப் பயமுறுத்தி நெறியில் நிறுத்தச்செய்தான் அன்றுமுதல் அங்குள்ள இராட்சதர்கள் ஒருவருக்குத் துன்பஞ் செய்யாமல் நல்லவர்களாகவே யிருந்தார்கள் ; இறந்துபோன பகனைப் பீமன் இழுத்துக் கொண்டுவந்து அந்நகரத்தின் கோபுரவாசலிற் போட்டுவிட்டு நகரத்துக்குள்

புருத்தான். அக்நகரத்திலுள்ள எல்லாரும் பகாசுரனே மறபடியும் வருகிறா னென்று பயந்து ஓடினார்கள். பீமன் வீட்டுக்குள் போய் மாடுகளையும் வண்டி யையும் பிராமணரிடம் ஒப்புவித்துவிட்டு, வாய்திறவாமல் வீட்டுக்குள் போ மென்று பிராமணருக்குச் சொல்லி அனுப்பிவிட்டுப், படுக்கை வீட்டுக்குப் போய்த் தன் சகோதரர்களுக்கும் தாயாருக்கும் யுத்தம் நடந்தது உள்ளபடி சொன்னான். விடியற்காலத்தில் சில மனிதர் கோபுரவாயிலில் இறந்து கிடக்கும் பகாசுரனைப் பார்த்து உள்ளே போய் எல்லாருக்குர் தெரிவித் தார்கள். நகரத்தாரெல்லாரும் கூட்டங் கூட்டமாக வந்து வேடிக்கை பார்த் தார்கள். தாங்கள் பிரார்த்தனை செய்துகொண்ட தேவர்களுக்குப் பூஜை செய்தார்கள். பின், இன்று பகனுக்கு இரையனுப்பவேண்டிய முறை யாரு டையதென்று யோசித்துத தெரிந்துகொண்டு, அந்தப் பிராமணரிடம் வந்து கேட்டார்கள். அந்தப் பிராமணர் பாண்டவர்களைக் காட்டாமல் சொல்லு கிறார்.

நான் வீசனப்பட்டுக்கொண்டிருந்ததை மந்திரசித்தியுள்ள ஒரு பிராமணர் விசாரித்துச் சமாசாரத்தைத் தெரிந்துகொண்டு, நீர் அந்த அரக்கனுக்குப் பயப் படவேண்டியதில்லை. என்னை அனுப்பும் என்றுசொல்லிப் பகனுக்கு வேண் டிய ஆகாரத்தோடு அவனிடம் போனார். அவரே யிந்த லோகோபகாரமான காரியத்தைச் செய்திருப்பாரென்று சொன்னார். பிறகு பிராமணர்கள் முத லிய எல்லாரும் பீமனைச் சூழ்ந்துகொண்டு, இவர் நமக்குப் பிதாவுக்கு ஒப்பா னவர், நாம் இவர் பாதத்தண்டையில் காத்துக்கொண்டு இடப்போமென்றார் கள். பின் அந் நகரத்தார் பீமனுக்குத் தயிர், நெய், மாமிச முதலிய வற்றால் உபசரித்து அன்னமளித்து வந்தார்கள். பாண்டவர்கள் ஏகசக்கர நகரில் தாயாரோடு சுகமாக வசித்தார்கள்

179-வது அத்தியாயம்.

சைத்ரரத பாவம்.

ஜனமேஜய மகாராஜன், பகாசுரனைக் கொன்றபின் பாண்டவர்கள் என்ன செய்தார்களென்று கேட்க வைசம்பாயனர் சொல்லுகிறார்.

மஹாராஜனே! பகனைக் கொன்ற பாண்டவர்கள் வேதாத்தியயனஞ் செய்துகொண்டு பிராமணன் வீட்டிலேயே வசித்துக் கொண்டிருந்தார்கள். சில நாட்களுக்குப்பின் தவசிரேஷ்டனான ஒரு பிராமணன் அந்த வீட்டுக்கு வந்தான். அந்த வீட்டுப் பிராமணன் வந்த அதிதியை உபசரித்துத் தன் வீட் டில் தங்கியிருப்பதற்கு இடங்கொடுத்தான். பாண்டவர்கள் வந்த பிராமண னிடத்தில் கதைகளைக் கேட்டுக்கொண்டு அவனை அடித்திருந்தார்கள். அந்தப் பிராமணன் தான் போய்வந்த பல புண்ணிய க்ஷேத்திரங்களையும், அங்குள்ள

அரசர்களையும், புண்ணிய தீர்த்தங்களையும் பற்றிப் பாண்டவர்களுக்குச் சொன்னான். பின் பாஞ்சால தேசத்தைப் பற்றிச் சொல்லும்போது அதிசயமான திரௌபதியின் அழகையும் அவள் பிறந்ததையும், திருஷ்டத்யுமனன், சிகண்டி முதலியவர்களையும் எடுத்து வர்ணித்துச் சொன்னர் பாண்டவர்கள் அந்தக் கதையை விஸ்தாரமாகக் கேட்க விரும்பிப் பிராமணனை நோக்கித் துருபதனுக்கும் துரோணருக்கும் எப்படிப் பகையுண்டாயிற்று, திருஷ்டத்யுமனன், திரௌபதை யிருவரும் அக்னியில் எப்படிப் பிறந்தார்கள்? இவற்றை விரிவாகச் சொல்லவேண்டுமென்று கேட்கப் பிராமணன் சொல்லுகிறான்.

180-வது அத்தியாயம்.

சைத்ரரத பர்வத் தொடர்ச்சி.

கங்கைக்கரையில் பரத்துவாஜ மஹரிஷி தவசு பண்ணிக்கொண்டிருந்தார். அவர் ஸ்நானஞ்செய்யப் போனபோது அங்கே ஸ்நானம் பண்ணிக்கொண்டிருந்த திருதாசி என்னும் தெய்வப் பெண்ணைக் கண்டார் அவளுடைய அழகில் மயங்கினர் உடனே அவருடைய வீரியம் நழுவிற்று. அதைத் துரோணமென்னும் பாத்திரத்திலேந்தினர். அதிலிருந்து துரோணர் பிறந்தார். அவர் வேதவேதாங்கங்கள் முற்றும் ஓதினர். பிருஷதன் என்னும் பாஞ்சால ராஜனுக்குத் துருபதன் என்னும் ஒரு குமாரன் பிறந்திருந்தான். அவன் தினந்தோறும் துரோணரிடத்தில் விளையாடிக்கொண்டு அத்தியயனமுஞ்செய்துகொண்டிருந்தான். பிறகு அவன் அரசனும் விட்டான். துரோணர் பரசுராமரிடம் திரவியத்தை யிச்சித்துப் போனர். பரசுராமர் என்னிடத்தில் என் தேகமும் அஸ்திரமும் இருக்கின்றன உனக்கு எது வேண்டுமென்று கேட்டார். துரோணர் அஸ்திரங்களைக் கொடுமென்று கேட்டுப் பெற்றுக்கொண்டு மீண்டு, துருபதனிடம் போய் நான் உன் சிநேகிதனென்னர். பாஞ்சாலன் அவரை அலட்சியம் பண்ணி நீர் எனக்குச் சிநேகிதரல்ல வென்று கூறினன். துரோணர் ஒரு சபதம் செய்துகொண்டு அஸ்தினபுரம் போய்க் கௌரவ குமாரர்களுக்கு வில்லாசிரியரானர். அத்தக் குமாரர்கள் தனுர்வித்தையில் தேர்ந்த பின் துரோணர் அவர்களை நோக்கி நீங்கள் துருபதனை ஜயித்துப் பிடித்து வாருங்கள் என்றனுப்பினர். தார்த்தராஷ்டிரர்கள் தோல்வி யடைந்தார்கள். பாண்டவர்களுள் அர்ஜுனன் பாஞ்சாலனை ஜயித்து, அவனைப் பிடித்துக்கொண்டு வந்து துரோணரிடம் ஒப்புவித்தான். அதைக் கண்டு பாஞ்சால நாட்டார் அர்ஜுனனுக்குச் சமானமான வீரன் ஒருவனும் உலகத்தில் இல்லை யென்று கூறிப் புகழ்ந்து லியர்தார்கள். துரோணர் பாஞ்சாலனைப் பார்த்து யக்ஞசேனா! நான் உன்னுடன் மறுபடியும் சிநேகமாயிருக்க விரும்புகிறேன். அதனால் நான் உன்னுடன் யுத்தஞ் செய்தேன். கங்கையின் வட கரைக்கு நான்

அரசன், தென் கரைக்கு நீ அரசனென்ற சொன்னார். திருபதனும் சம்மதித்தான். ஆனாலும் திருபதன் தனக்குண்டான அவமானத்தை மறக்காமல் மனம் உருக்கி யிருந்தான்.

181-வது அத்தியாயம்.

சைத்ரரதபர்வத் தொடர்ச்சி.

துரோணர் செய்த அவமானத்தைச் சகியாத திருபதன் நித்திரை யில்லா மலிருந்தான். எவ்வகையாலாவது துரோணரை வெல்லவேண்டுமென்று இருந்தான். அவரைத் தன்னுடைய க்ஷத்திரிய வல்லமையால் வெல்லமுடியா தென்று உணர்ந்து, அவரை வெல்வதற்கொரு புத்திரனைப்பெறவேண்டுமென்று கங்கை யமுனை யாற்றங்கரைகளில் அலைந்து கொண்டிருந்தான். யாஜர் உபயாஜர் என்பவர்களை அடித்துத் துரோணரைக் கொல்வதற்கொரு புத்திரனையும், அர்ஜுனனுக்கு மனைவியாம்படி ஒரு பெண்ணையுங் கொண்டான் அடையும்படி செய்தால் எதைச் கேட்டாலும் கொடுப்பேன் என்றான். உபயாஜர் மறுத்து விட்டார். ஒரு வருஷத்துக்குப் பின் அவர் திருபதனைப் பார்த்து அரசனே! என் தமையன் பொருளாசையுள்ளவர். குருகுலவாசம் செய்கையில் எறிந்துவிடப் பட்ட எச்சில் அன்னத்தில் அருகை யின்றிப் புகழ்ந்து எடுத்துப் புஜிப்பார். அவரிடம் போனால் உன் எண்ணம் பலிக்குமென்றார். திருபதனும் அப்படியே யாஜரிடம் போய்த் தன் மனகருதையை நீக்கினால் வேண்டிய எல்லாவற்றையும் தருவேனென்று சொன்னான். துரோணர் என்னை அவமானஞ் செய்தார். அவரை ஜயிக்க என்னால் முடியாது. அவரை ஜயிக்கும் க்ஷத்திரியன் இந்த உலகத்தில் ஒருவனுமில்லை. பரசுராமரைப் போல் க்ஷத்தியர்களை அழிக்கப் பிறந்திருக்கிறார். அவர் தனுர்வேதத்தில் ஈடு இல்லாதவர். அவருடைய பிரமதேஜஸை என் க்ஷத்திரிகதேஜஸால் ஜயிக்க முடியாமல் உம்மைச் சரண மடைந்தேனென்று கூறினான். யாஜர் சம்மதித்து உபயாஜரைச் சகாயமாகக் கொண்டு யாகத்தை நிறைவேற்றினார். யாக முடிவில் திருபதராஜ பத்தினி தான் வரக்கூடாதென்ற சொன்னபடியால் இந்த அவிஸை யாகாக்கினியில் ஹோமஞ் செய்தார். அந்த அக்கினியிலிருந்து திருஷ்டத்யுமனனும், திரௌபதையும் பிறந்தார்கள். பாஞ்சாலர் மகிழ்ந்தார்கள். இப்பப் புத்திரன் பாஞ்சாலனுடைய துக்கத்தை நீக்கவும், துரோணரை வதஞ் செய்யவும் உற்பத்தியானனென்று அசரீரி கூறிற்று. திரௌபதை தோன்றினபோது இவன் க்ஷத்திரியர் குலத்தை நாசஞ்செய்து தேவகாரியத்தை நிறைவேற்றப் பிறந்திருக்கிறான். கௌரவர்களுக்குப் பெருங்கஷ்டத்தை யுண்டாக்குவானென்று கூறிற்று. அது கேட்டு ஆனந்தக் கூத்தாடின பாஞ்சாலர்களைப் பூமி தாங்கமுடியாமலிருந்தது திருஷ்டத்யும்னன் வேதாத்தியயனஞ் செய்து துரோணரிடம் தனுர்வேதங் கற்றுச் தெர்ந்தவனானான்.

182-வது அத்தியாயம்.

சைத்ரரத பர்வத் தொடர்ச்சி.

சில பிராமணர்கள், அரக்கு மாளிகை எரிந்ததைக் கேட்டுப் பாஞ்சாலனி டத்தில் சொன்னார்கள். திருதராஷ்டிரனுடைய உத்தரவினால் வாரணவதத் தில் அரக்கு மாளிகையில் வசித்த பாண்டவர்களைப் புரோசனன் எரித்துவிட் டுத் தானும் எரிந்துபோனான். திருதராஷ்டிரன், பீஷ்மர் முதலிய கௌரவர் கள் அவர்களுக்கு ஜல தர்ப்பணஞ் செய்தார்கள். இந்த அசியாயம் எங்கும் கேட்டதில்லை யென்றார்கள். அது கேட்ட பாஞ்சாலன் தன் புத்திரர்களை யிழந்தது போலத் துக்கப்பட்டுப் புலம்பினான். பிறகு மந்திரிகளையும் மற்றவர் களையும் பார்த்து சொல்லுகிறான்.

ஆர்தர்களே! அழகு, வீரம், தைரியம் எல்லாவற்றிலும் சிறந்த அர்ஜு னனை நான் எப்போதும் நினைத்துக்கொண்டே யிருக்கிறேன். அவன் தன் சகோதரர் தாயாரோடு அரக்கு மாளிகையிலெரிந்து போனானும். இதை விட எனக்குத் துக்கம் வேறேது.காலத்தை யாராலும் கடக்க முடியாது.என் சபதம் வியர்த்தமாயிற்று. யாஜர், உபயாஜர் என்னும் மஹாத்மாக்களுடைய சகாயத்தால் துரோணரைக் கொல்வதற்கும், அர்ஜுனனுக்கு மனைவியாகிற தற்கும் திருஷ்டத்யுமனன், திருஷ்ணை யென்னும் குழந்தைகளைப் பெற்றேன். பாண்டவர்கள் தாயாரோடு மடிந்து போனார்கள், இனி நான் என்ன செய் வேனென்று பாஞ்சாலன் கதறி அழுதான். அதைப் பார்த்துப் பாஞ்சாலனு டைய புரோஹிதர் சொல்லுகிறார். பாண்டவர்கள் பெரியோர்களுடைய உபதேசத்தைக் கடவாதவர்கள், தர்மானுஷ்டானம் தவறுதவர்கள். அவர் கள் அழியவுமாட்டார்கள், தோல்வி யடையவு மாட்டார்கள். நானிதை நிச் சயமாகச் சொல்வேன். பிராமணர்கள் சொல்வதும், வேதம் கூறுவதும் தவறுபடாது. முன்னொரு காலத்தில் இந்திரன் காணமல் போனான். இந்தி ராணி குருமொழி கேட்டுத் தாமரைத் தண்டிலிருந்து அவனை அழைத்துக் கொண்டு வந்தது தெரியுமல்லவா? பாண்டவர்களும் அப்படியே சாகாமல் இருக்கிறார்கள், இது நிச்சயம். அவர்கள் இங்கே வருவார்கள். அதற்கு மார்க்கம் என்ன வென்றால் திரௌபதைக்குச் சுயம்வரமென்று பறையடித்துத் தெரிவித்தால் பாண்டவர்கள் எங்கிருந்தாலும் அவசியம் வருவார்கள். சந்தே கமே யில்லை யென்றார். அதைக் கேட்ட துருபதன் மகிழ்ந்து அப்படியே சுயம்வரம் சாற்றினான். இன்னும் எழுபத்தைந்து நாட்களுக்குப் பின் தை மாசம் சுக்லபட்சம் ரோகிணி சேர்ந்த சுப தினத்தில் திரௌபதைக்குச் சுயம்வரமென்று பறையடித்துத் தெரிவித்தான். அந்தச் சுயம்வரத்தைப் பார்க்கும்படி தேவர், யட்சர், கந்தர்வர், ரிஷிகள் எல்லாரும் போய்க்கொண் டேயிருக்கிறார்கள். ஆகையால் உன் புகல்வர் அழகுள்ளவர்கள்: மஹாத் மாக்கள்; இவர்களுள் ஒருவனுக்கு வாய்க்கவும் கூடும். தெய்வச் செயலை யார்

அறிவார்கள். ஆதலால் பிரியமிருந்தால் நீயும் போகலாம் என்று குந்தியை நோக்கிச் சொன்னார். பாஞ்சால ராஜன் தர்மிஷ்டன். பிராம்மணப்பைகாரி. பட்டணத்து ஜனங்களும் பிராம்மணப் பிரியர்கள். பாஞ்சால தேசமும் செழுமையானது. நானும் அங்கேதான் போகிறேன். உங்களுக்குப் பிரியமிருந்தால் நாம் சேர்ந்து போகலாமென்றார்.

183-வது அத்தியாயம்.

சைத்ரரத பர்வத் தொடர்ச்சி.

அது கேட்ட பாண்டவர்கள் எல்லாருஞ் திரௌபதையினிடம் ஆசை கொண்டு இரவு முழுவதும் தூங்காமலிருந்தார்கள். அதை யறிந்த குந்தி சொல்லுகிறாள்.

நாமிவ்விடத்தில் பிக்ஷை கிடைப்பதுபற்றியே தங்கினோம். இங்குள்ள சோலை காடு முதலியவற்றைக் கண்டு மகிழ்ந்தோம். பார்த்ததையே பார்த்துக் கொண்டிருப்பது சுகமில்லை. இந்த இடம் முன்போல இன்பமாகத் தோற்றவில்லை. பிக்ஷையும் முன்போல கிடைக்கவில்லை. புதிய இடங்களைக் காண்பதுதான் மனதுக்கு மகிழ்ச்சி. பாஞ்சால தேசம் செழிப்புள்ள தென்றும், பாஞ்சால ராஜன் பிராம்மண விசுவாசமுள்ளவனென்றும் கேள்விப் பட்டோம் ஒரே யிடத்தில் வெகு காலிருப்பதும் உசிதமில்லை. உனக்குப் பிரியமிருந்தால் நாம் பாஞ்சால தேசம் போவோம் என்று யுதிஷ்டிரரிடம் சொன்னாள். யுதிஷ்டிரர் அம்மா! நீ சொல்வதெல்லாம் எனக்குப் பிரியம்தான். தம்பிகளிஷ்டமெப்படியோ தெரியவில்லை யென்றார். பின் குந்தி மற்றவர்களிடம் இதைக்கூற அவர்கள் எல்லாரும் அப்படியே போவோ மென்றார்கள். பிறகு குந்தி வீட்டுப் பிராமணனிடம் செலவு பெற்றுக்கொண்டு புத்திரர்களோடு பாஞ்சால நகரம் நோக்கிப் புறப்படச் சித்தமானாள்.

184-வது அத்தியாயம்.

சைத்ரரத பர்வத் தொடர்ச்சி.

அந்தச் சமயத்தில் பாண்டவர்களைப் பார்க்கும்படி வியாசபகவான் அவர்களிடத்துக்கு வந்தார். பாண்டவர்கள் எதிர்கொண்டுபோய் நமஸ்காரம் பண்ணி வியாசருடைய உத்தரவினால் உட்கார்ந்துகொண்டார்கள். பின்பு வியாசர் பாண்டவர்களைப் பார்த்து, நீங்கள் தர்மம் தவறாமல் நடக்கிறீர்களா? பிராமணர்களை முறைதவறாமல் பூஜிக்கிறீர்களா? என்று கேட்டார். அவர்கள் தங்களுடைய இருபையால் ஒன்றும் தவறாமல் நடக்கிறதென்றார்கள். அதன் பின் பாண்டவர்களுக்கு வியாசர் அநேக புதிய கதைகளைச் சொன்னார். பின்பு சொல்லுகிறார்.

ஒருவனத்தில் அழகிற் சிறந்த ஒருபெண் இருந்தாள். அந்தக் கன்னி கை மிகுந்த அழகாயிருந்தாலும் அவளுக்குத்தக்க நாயகன் கிடைக்கவில்லை. அதனல் அவன் மனம் வருந்தி ஸ்ரீ பரமேசுவரனைக்குறித்துத் தவம்புரிந்தாள். பரமேசுவரன் அவளுக்குப் பிரத்யட்சமாய்ப் பெண்ணே ! நீ விரும்பியதைக் கேள் தருகிறேனென்றார். அவள் சகலகுணங்களும் நிறைந்த கணவன் வேண்டுமென்று பலதரம்சொன்னுள். பரமசிவன் உனக்கு ஐந்து புருஷர்கள் கிடைப்பார்களென்றார். அவள் சுவாமீ ! அது முறையல்ல ஆதலால் எனக்கு ஒரே புருஷனைக் கொடும் என்றுகேட்டாள். ஈசுவரன் நீ கணவனைத்தாவென்று ஐந்துதரம் கேட்டபடியால் உனக்கு ஐந்து புருஷர் மறுஜன்மத்தில் வருவாரென்று கூறி மறைந்தார். அவள்தான் திருஷ்ணையென்ற பெயருடையவளாய்த் துருபதனுக்குப் புத்திரியாய்வளர்ந்து வருகிறுள். அந்தத் திருஷ்ணை ஈசுவரன் வரத்தினுல் உங்கள் ஐவர்க்கும் மனைவியாவாள். அதன்பின் உங்களுக்குச் சௌக்கியமுண்டாகும். ஆகையால் நீங்கள் பாஞ்சாலதேசம் போய் அங்கே சிலகாலம் வாசம்பண்ணுங்கள் என்று கூறி விடைபெற்றுக்கொண்டு போய்விட்டார்.

185-வது அத்தியாயம்.

சைத்ரரத பர்வத் தொடர்ச்சி.

வியாசர் போனபின் பாண்டவர்கள் தாயாரோடு பிரயாணப்பட்டுப் பாஞ்சாலதேசம் நோக்கிச் சென்றார்கள். வழியில் போகும் அநேக பிராமணர்கள் பாண்டவர்களைப்பார்த்து நீங்கள் எங்கிருந்து எங்கே போகிறீர்கள் என்றார்கள். தர்மபுத்திரர் அவர்களைப்பார்த்து நாங்களெவரும் சகோதரர்கள். தேவதாதர்சனர்த்தமாகப் பாஞ்சாலதேசம் போகிறோம். நீங்கள் எங்கேபோகின்றீர்கள் என்று கேட்டார். பிராமணர்கள் நாங்களும் பாஞ்சாலதேசம்தான் போகிறோம் பாஞ்சாலனுடைய புத்திரி திரௌபதையென்று பெயருள்ளவள். அழகில் சமானமில்லாதவள். அவளுக்குச் சுயம்வரம் நியமகமாயிருக்கிறது. அதைப் பார்க்கப்போகிறோம். அங்கே அநேக ராஜர்களும் இராஜகுமாரர்களும், யாகஞ் செய்தவர்களும், வேதங்களை அத்தியயனம் செய்தவர்களும், தபசிகளும், அழகுள்ளவர்களும், பலசாலிகளும், அஸ்திரசஸ்திரங்களில் தேர்ந்தவர்களும், அதிரதர் மஹாரதர்களும் அங்கே வருவார்கள். இராஜாக்கள் தங்களுடைய கருத்து நிறைவேறும் பொருட்டு, அன்னபானுதிகளும், பலவகையான பட்சணங்களும், தனமும் கொடுப்பார்கள். திரௌபதையையும் சுயம்வரத்தையும், அவளை வரிக்கின்ற மஹா புருஷனையும், பார்த்துத், தட்சணையையும் வாங்கிக்கொண்டு களிப்படைவதற்காகப் போகிறோம். அன்றியும் பல தேசங்களிலிருந்து பாடகர்கள், சூதர்கள், மாகதர்கள் முதலிய வர்களும் வருவார்கள். அந்த விநோதங்களையும் கண்டு மகிழ்வோம். நீங்க

ஸும் அந்தச் சயம்வர மஹோத்சவத்தைக் கண்டு களித்து மகிழ்ந்து வரலாம் நீங்கள் அழகிற் சிறந்தவர்களாக இருக்கிறீர்கள். இரௌபதியை உங்களில் ஒரு வனுக்கு மாலை சூட்டினாலும் சூட்டலாம் என்று சொன்னார்கள்.

186-வது அத்தியாயம்.

கைலாச பர்வத தொடர்ச்சி.

பாண்டவர்கள் தங்கள் தாயாருடன் கூட இரவும் பகலுமாக நடந்தார்கள். கங்கைக்கரை போய்ச் சேர்ந்தார்கள். அப்பொழுது நதிராத்திரி வேளை. சுத்திராஸ்தமனமாகிற சமையமாயிருந்தது. அர்ஜுனன் வெளிச்சத்திற்காக ஒரு கட்டையைக் கொளுத்திப் பிடித்துக்கொண்டு முன்னுலே போய்க்கொண்டிருந்தான். அக்காலத்தில் ஒரு கந்தர்வராஜன் தன் பத்னிகளோடு கங்காநதியில் ஜலகிரீடை செய்து கொண்டிருந்தான். பாண்டவர்களுடைய சத்தத்தைக் கேட்டுக்கொண்டு வந்து பாண்டவர்களை வெளியில்லே நாணேற்றிக்கொண்டு சொல்லுகிறான்.

இரவின் முன் ராகங்களின் சந்தி சிவந்து படும் மாயிருளும் அதில் வண்டது விகாடிபோத மிராசமுள்ள நாடிகளை யட்ச கந்தர்வர்களுக்கு ரியன இது கீங்கிய காலமே மனிதர்களுக்கு ரியது. இந்த இடங்காலத்தில் சஞ்சரிக்கும் மனிதர்களை நாங்கள் இம்சிப்போம். இந்த காரணத்தினுலேதான் அரசர்கள் கூடத் தங்கள் சேனையோடு இரவில் ஜலதத்தின் அருகில் வரக்கூடாதென்கிற நியமம உள்ளது. நான் வந்திருப்பதை நீங்களேன் கவனிக்கவில்லே? நான் அங்காரபர்ணன் என்னும் கந்தர்வன் கிட்ட வராதீர்கள். எட்டியே நில்லுங்கள். நான் கௌரதையுள்ள பொருமைக்காரன, குபேரனுக்குச் சிநேகிதன் இந்த வனம் என்னுடையது. இதற்கும் அங்காரபர்ணம் என்றே பேர். நான் காமசுக மனுபவிக்கிற இடம் இங்கே தேவர்களும், இராட்சதர்களுங்கூட வரமாட்டார்கள். நீங்கள் என்ன தைரியங்கொண்டு வருகின்றீர்கள் என்ருன். அர்ஜுனன், அவனைப் பார்த்து ஏ மூடா! சமுத்திராத்திலும் இமயமலையினருகிலும், கங்காநதியிலும் எல்லாருக்கும் வரப் பாத்தியமுண்டு. நாங்கள் பூர்ண சக்தியுள்ளவர்கள். யுத்தஞ் செய்ய வல்லமையில்லாத மனிதர்கள் தாம் உங்களுக்கு அஞ்சுவார்கள். கங்கை, யமுனை, பிலட்சஜாநதி, சரஸ்வதி, ரதஸ்தை, சரயு, கோமதி, கண்டகி இவற்றின் ஜலத்தைப் பானம் பண்ணுகிறவனுக்குப் பாபமில்லே. மஹாபுண்ணிய நதியாகிய கங்காநதியை நீ தடுப்பது நியாயமல்ல, நாங்கள் இத்தப் புண்ணியத் தீர்த்தத்தைத் தொடாமலிரோம் என்ருன். அங்காரபர்ணன் கோபித்துக் கூர்மையான அம்பு களை அவன்மேலெய்தான். அர்ஜுனன் எரி கொள்ளியைச் சுழற்றி அந்த அம்புகளைச் சிதற அடித்தான். உடனே கந்தர்வனைப் பார்த்து இதோ ஆக்கி

னேயாஸ்திரம் வருகிறது, தப்பித்துக்கொள் என்று பிரயோகித்தான். அந்த அஸ்திரம் கந்தர்வனைப்பற்றி யெரித்தது. கந்தர்வன் சுழன்று விழுந்தான். அர்ஜுனன் அவன் குடுமியைப்பற்றிப் பிடித்துக்கொண்டான்.

பிறகு அர்ஜுனன் அந்தக் கந்தர்வனைத் தன் சகோதரர்களிடத்துக்கு இழுத்துகொண்டுவந்தான். அந்தக் கந்தர்வனுக்குக் கும்பீனசி என்று ஒரு மனைவியிருந்தாள். அவள் தர்மபுத்திரருடைய பாதங்களில் விழுந்து என் கணவனைத் தந்தருளும் என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். யுதிஷ்டிரர் அர்ஜுனு தோல்வியடைந்த இந்தக்கந்தர்வனை விட்டுவிடு என்றார். அர்ஜுனன், கந்தர்வா! கௌரவர் தலைவரான யுதிஷ்டிர மஹாராஜா உனக்கு அபயம் கொடுத்திருக்கிறார். ஆதலால் நீ உன் உயிரைப்பெற்றுக்கொள் என்றான். கந்தர்வன் நான் உன்னால் அபஜயமடைந்தேன். நீ ஜயித்தாய்; என்உயிரையும் காப்பாற்றினாய். உனக்கு என்னிடமுள்ள கந்தர்வ மாயையை உபதேசிப் பேன். பெற்றுக்கொள். இந்த வித்தைக்குச் சாக்ஷுஷீ என்று பெயர். இதைச் சந்திரன் மனுவினிடம் இருந்துபெற்றான். அவன் விசுவாவசு என்னும் கந்தர்வனுக்குக் கொடுத்தான், விசுவாவசு எனக்கு உபதேசித்தான். அதை நான் உனக்குத் தருவேன் என்றான். இதன் மஹிமை என்னவென்றால் திரிலோகங்களிலுள்ள எல்லாவற்றையும் எப்படிக்காண விருப்பமோ அப்படிக் காணலாம். ஆறுமாதம் ஒரு காலால் நின்று தவஞ்செய். பின் இந்த வித்தை உன்னிடம் வந்து அடையும் என்றான். இந்த வித்தையினாலேதான் நாங்கள் மனிதரைவிட மேலானவர்களாகினோமென்று கூறினான். அன்றியும் நான் உங்களுக்குத் தனித்தனியே நூறு கந்தர்வலோக குதிரைகள் தருவேன். இவை இவ்விடத்திலும் பலஞ்குறையாமலிருக்கும். குதிரையில் தேர்ந்தவனே நான். இந்தக் குதிரைகள் நினைத்தவர்ண முடையனவாயிருக்கும், நினைத்தபடி வேகமுள்ளனவாயிருக்கும், நினைத்த போது வந்துநிற்கும் என்றான்.

அர்ஜுனன், நான் உன்னிடமிருந்து பொருளாவது, வித்தையாவது பெறவேண்டுவதில்லை அதில் எனக்கு விருப்பமில்லையென்றான். கந்தர்வன் நான் உன்னிடத்திலிருந்து ஆக்நேயாஸ்திரமபெற விரும்புகிறேன். ஆதலால் நீ பெற்றுக்கொள்வதில் தடை சொல்லாதேயென்றான். அர்ஜுனன் ஒத்துக்கொண்டு மனிதர்கள் என்னத்தினால் உன்னாலுக்குப் பயப்படுகிறார்களென்றான். கந்தர்வன், உங்களுக்கு அக்கினி ஹோமங்களில்லை. பிராமணர்களை முன்னிட்டுக் கொண்டவரவில்லை. அதனால்தான் உங்களை எதிர்த்தேன். தபதி வம்சோற்பவனே! நான் என் தோல்வியடைந்தேனென்றால் நீ பிராமசரியவிரதம் தவறாமலிருக்கிறாய்; அதனாலேதான் நீ என்னை ஜயித்தாய்; காமத்தையடக்காத கூத்திரியன் இரவில் யுத்தஞ்செய்தால் ஜயிக்கமாட்டான். வேதவேதாங்கங்களைக் கற்றறிந்த பிராமணகுருவை முன்னிட்டுக்கொண்டு நடக்கிற அரசன் போல்வி அடைவதில்லையென்றான்.

187-வது அத்தியாயம்.

சைத்ர ரதபர்வத் தொடர்ச்சி.

அர்ஜுனன், நீ என்னைத் தாபத்தியன் என்று கூப்பிட்ட காரணமென்ன சொல்லவெண்டுமென்றான். கந்தர்வன் சொல்கிறான். சூரியனுக்குத் தபதி என்ற ஒரு பெண் இருந்தாள். அவள் சாவித்திரிக்கு இளையவள். அவளுடைய அழகுக்கு எந்த லோகத்திலும் ஒப்பு இல்லை. அவள் கற்புணம் நிறைந்தவள். கற்புநெறி தவறாத உத்தமி. அவளுடைய அழகுக்கும் குணத்துக்கும் தக்க கணவன் மூன்று லோகங்களிலும் அகப்படவில்லை. அப்போது கௌரவராஜனாகிய ரிட்சருடைய புத்திரன் ஸம்வர்ணன் என்பவன் சூரியனை ஆராதித்துக்கொண்டிருந்தான். அழகிலும் குணத்திலும் பராக்கிரமத்திலும் சிறந்த அந்த அரசனுக்குத் தன் புத்திரியைக் கொடுக்கவேண்டுமென்று சூரியன் நிச்சயித்தான். ஒருநாள் நிகரற்ற அந்த அரசன் வனத்தில் வேட்டையாடினான். அப்போது அவன் குதிரை இறந்துபோயிற்று. அரசன் காலால் நடந்து மலையில் ஏறினான். அங்கே வந்திருந்த தபதியைக்கண்டு அவன்மேல் மோகங் கொண்டான். எந்த லோகத்திலும் இவளைப்போன்ற அழகுள்ளவள் இல்லை. இவளுக்குச் சமானமே கிடையாது. இவள் இலட்சுமியோ வென்று கருதினான். பின் அவளைப் பார்த்து நீ யார்! யாருடைய மகள் உன் அழகில் நான் மயங்கிப்போனேன் என்று சொன்னான். அவள் பதிலொன்றும் சொல்லாமல் திடீரென்று மறைந்து போனாள். அரசன் எங்கும் தேடி அவளைக் காணாமல் வருந்தினான்.

188-வது அத்தியாயம்.

சைத்ரரத பர்வத் தொடர்ச்சி.

அரசன் அவளைக் காணாமையால் மோகமயக்கத்தால் கீழே விழுந்தான். பின்பு தபதி அவனுக் கெதிரில் தோன்றினாள். அரசனே! நீ யிப்படி மயங்கிக் கிடப்பது தகாது என்று கூறினாள். அரசன் அவளை மறுபடியும் பார்த்துப், பெண்ணே! உன்னைப் பார்த்தமாத்திரத்திலே மன்மத பாணங்களுக்கு இலக்காகி மயங்குகிறேன். நான் இறந்தழியாதபடி என்னுயிரைக் காப்பாற்ற வேண்டும். உன்னைப் பார்த்தப் பின் மற்றொரு பெண்ணைப் பார்க்க மனம் வரவில்லை. கந்தர்வ விவாகமுறைப்படி என்னைக் கூடி என்னை யிரட்சித்தருளவேண்டுகிறேன். நான் என்னிராஜ்யத்தோடும் உனக்குச் சுவாதீனமாய் விட்டேன் என்றான். அதைக் கேட்ட தபதி மஹாராஜாவே! பிதாவுக்கடங்கிய கன்னிகையாயிருக்கிறேன். நான் சுதந்தரமாய் நடக்கக் கூடாது, நீரும் என் உயிரை அபகரித்து விட்டீர். நானும் உம்மிடத்தில் கரைகடந்த காதல் கொண்டிருக்கிறேன். ஆனாலும் நான் வரம்பு கடந்து நடக்கக்கூடாது. உம

க்கு விருப்பமிருந்தால் என் பிதாவைக் கேளும். என் தகப்பன் சூரியன். அவரை ஆராதித்துக் கேட்டுக்கொள்ளும். அவருடைய அனுமதியினால் நீர் என்னை எப்போதும் சாசுவிதமா யடையலாமென்றாள்.

189-வது அத்தியாயம்.

சைத்ரரத பர்வத் தொடர்ச்சி.

இப்படிச் சொல்லிவிட்டுத் தபதி மறைந்தாள் அரசன் மனம் வருந்தி அவளையே நினைத்துக்கொண்டு புலம்பினான். மயக்கி விழுந்தான். பூமியெங்கும் தேடினான். மறுபடியும் மயக்கிப் பூமியில் விழுந்து கிடந்தான். அப்போது அரசனுடைய மந்திரி சேனையோடு கூடிவந்து விழுந்து கிடக்கிற அரசனைக் கண்டான். உடனே அரசனைத் தூக்கிக் களையாற உபசரித்தான். அரசன் களை தெளிந்து, சேனைகளை யனுப்பிவிட்டு மந்திரியை மாத்திரம் தனியாக வைத்துக்கொண்டான். பின்பு அரசன் பரிசுத்தனும் வசிஷ்டரைச் சிந்தித்தான், குருவாகிய வசிஷ்டர் பன்னிரண்டாம் நாளில் அரசனிடம் வந்தார். அரசனுடைய கருத்தைக் கண்டுகொண்டு உடனே சூரியனிடம் புறப்பட்டுப் போனார். சூரியனைக்கண்டு வணங்கினார். சூரியன் மகிழ்ந்து வசிஷடரே! உமக்கு வேண்டியதைக் கேளும். தருவேனென்றான். வசிஷடர் சூரியனை நோக்கி, ஜனன மரண மில்லாதவரே, மூன்று லோகங்களுக்கும் முதல்வரே, கிரகாதிபரே, மழைக்கு ஆதாரமானவரே, சிருஷ்டி கர்த்தாவே உமக்கு நமஸ்காரம். ஞான ஜீவியே, சகல பிராணிகளுக்கும் அந்தராத்மாவே, உலகங்களுக்குத் தீபம் போன்றவரே, உலகத்துக்கு க்ஷேமத்தை தருபவரே, சுயம்புவே ஆயிரம் கிரணங்களை யுடையவரே நமஸ்கரிக்கிறேன். பிரபஞ்ச உற்பத்தி ஸ்திதிலயகாரணமானவரே, மூன்றவேத சொரூபியே, மூக்குணங்களாலான சரீரத்தை தரித்தவரே, பிரமா விஷ்ணு மஹேசுவர சொரூபியாகிய உம்மை நமஸ்கரிக்கிறேன் என்று துதித்தார், சூரியபகவான், வசிஷடரே! உமது ஸ்தோத்திரத்தினால் மகிழ்ச்சி யடைந்தேன், இந்த ஸ்தோத்திரத்தைச் சொல்லித் துதிக்கிறவர்கள் இஷ்டகாமியங்களைப் பெறுவார்கள். ஆதையால் நீர் விரும்பியவரத்தைக் கேளும், தருகிறேனென்றார், வசிஷடர், தேவனே! உமது குமாரத்தி தபதியை ஸம்வர்ண மஹாராஜனுக்குக் கொடுத்தருளவேண்டும். அவன் எனது சிஷ்யன். மஹா புகழ்பெற்றவன், தர்மார்த்தங்களை நன்றாயறிந்தவன், மஹா புத்திமான். உமது புத்திரிக்குத் தகுந்த கணவன் என்று சொன்னார். சூரியதேவன் வசிஷடரே! ஸம்வர்ணன் சிறந்த அரசனென்று நானும் அறிவேன். நீர் ரிஷிகளில் சிறந்தவர். என் குமார்த்தி பெண்களில் சிறந்தவள். ஆதலால் உமது இஷ்டம்போலவே கொடுக்கிறேன் என்று சொல்லித் தபதியை வசிஷ்டரிட மொப்புவித்தார். வசிஷடர் சூரியபகவானிடத்தில் விடைபெற்றுத், தபதியையும் அழைத்துக்கொண்டு ஸம்வர்ணனிடம் வந்து சேர்ந்தார்.

மோகசமுத்திரத்தில் முழுகி மயங்கிக் கிடந்த அரசன் வசிஷ்டரோடு கூடத் தபதி வருகிறதைக் கண்டு மனமகிழ்ந்தான். தபதி வரும்போது ஆகாசத்திலிருந்து பின்னல்கொடி வருகிறதுபோலிருந்தது. வசிஷ்டருடைய கருணையால் தபதியை அங்கேயே மணந்து அவ்விடத்திலேயே விஹாயாடிக் கொண்டிருந்தான். மந்திரி இராஜ்ய காரியம் பார்த்து வந்தான். பன்னிரண்டு வருஷம் வரைக்கும் அவளோடு அந்த மலையிலேயே விஹாயாடிக்கொண்டிருந்தான். அந்தப் பன்னிரண்டு வருஷமும் அவன் தேசத்திலே மழை பெய்யவில்லை. அதனால் பிரஜைகளும் ஸ்தாவர ஜங்கமங்களும் அழிந்து போயின. பணிகூட இல்லாமற் போயிற்று. பயிர்கள் ஒன்றும் முளைக்கவில்லை. பசி தாகங்களினால் ஜனங்கள் வருந்தித் திக்குகள் தோறுஞ் சிதறினார்கள். கொலை திருட்டு முதலிய மஹாபாதகங்கள் அளவின்றி நடந்துவந்தன. பிணக்குவியலால் அந்த நகரம் ஸ்மஸாநம் போலிருந்தது. அதைக் கண்டு வசிஷ்டர் அரசனிடம் வந்தார். அரசனைப் பத்தினியோடு நகரத்துக்கு அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தார். இந்திரன் மழை பொழியக் கட்டளை யிட்டான். பயிர்கள் செழித்தன. குடிகளும் வந்து சேர்ந்தார்கள். ஸம்வாணன் தபதியோடு பன்னிரண்டு வருஷம் யாகஞ் செய்தான். அர்ஜுனா! இதனால் தான் உன்னைத் தாபத்தியனென்று கூறினேன் என்றான்.

190-வது அத்தியாயம்.

ஸைத்ரரத பர்வத் தொடர்ச்சி.

அது கேட்ட அர்ஜுனன் பூர்ண சந்திரன்போல முகத்தில் பிரகாசம் உண்டாகும்படி மகிழ்ந்து, கந்தர்வராஜனே! எங்கள் முன்னோரின் குருவான வசிஷ்ட மஹரிஷிக்கு அந்தப் பெயர் வந்த காரணமென்ன? அவருடைய மகிமை யெப்படிப்பட்டது? எனக்குச் சொல்லவேண்டு மென்று கேட்கக் கந்தர்வன் கூறுகிறான். வசிஷ்டர் பிரமதேவருடைய மானஸ புத்திரர். அருந்ததியின் கணவரானவர். தேவர்களாலும் ஜயிக்கப்படாத காம குரோதங்களை ஜயித்து அடக்கினபடியால் வசிஷ்டர் என்ற பெயர் பெற்றவர். எதிரிகள் எல்லாரையும் ஜயித்தவர். அளவில்லாத உலகங்களுக்குப் போகிற வழிகளை யறிந்தவர் திசைகளை ஜயித்தவர், மஹா சக்தி யுள்ளவர், யிருந்தும் விசுவாமித்திரரை அழிக்காமல் விட்டுவிட்டார். விசுவாமித்திரரால் கொல்லப்பட்ட புத்திரர்களை மீட்டுக்கொண்டு வர வல்லமையிருந்தும் தெய்வகதிக்கு அடங்கியிருந்தார். இக்ஷ்வாகு வம்சத்தார் வசிஷ்டரைக் குருவாக அடுத்தபடியிலேயே பூலோகத்தை வசப்படுத்தி அரசாண்டார்கள். ஆகையால் நீங்களும் ஒரு சிறந்த பிரமரிஷியைக் குருவாகக் கொள்ளவேண்டும். அப்படி அடைந்தால்தான் சுகப்படுவீர்கள். பூமியை ஜயித்து அரசாளவிரும் புகிற க்ஷத்திரியன்

மூதலில் ஒரு சற்குருவைப் பெற்றுக்கொள்ளவேண்டும். ஆகையால் நீங்களும் ஒரு பிராமண சிரேஷ்டரான குருவை அடையுங்களென்றான்.

191-வது அத்தியாயம்.

சைத்ரரதபர்வத் தொடர்ச்சி.

அர்ஜுனன் தபசிகளாகிய வசிஷ்ட விசுவாமித்திரர்களுக்கு எப்படிப் பகையுண்டாயிற்று என்று கேட்கக் கந்தர்வன் சொல்லுகிறான்.

அர்ஜுனா! வசிஷ்டருடைய சரித்திரத்தை சகல லோகத்தாரும் புராணம் என்கிறார்கள். அதை உள்ளபடி சொல்லுகிறேன். கான்யகுப்ஜ தேசத்திலே குசிகரின் புத்திரன் காதியென்கு ஒரு அரசனிருந்தான். அவன் மஹா கீர்த்தி பெற்றவன். அவனுடைய புத்திரன் விசுவாமித்திரன், அந்த அரசன் சேனை களோடு வனத்தில் வேட்டையாடிகொண்டிருந்தார் வேட்டையால் களைத் தத் தண்ணீரைத் தேடிக்கொண்டு வசிஷ்டருடைய ஆசிரமத்துக்கு வந்தார். வசிஷ்டர் அரசனுக்கு மரியாதைசெய்து உபசரித்தார் பிறகு காமதேனுவை அழைத்து விசுவாமித்திரருக்கு விருந்திட்டார். விசுவாமித்திரர் அறுசுவை உண்டி உண்டு, மனமகிழ்ந்தார் இந்தக் காமதேனுவைக்கண்டு ஆச்சரியமடைந்தார் பின் வசிஷ்டரைப்பார்த்து முனிவரே! பத்துக்கோடி பசு அல்லது என் ராஜ்யம் இவற்றில் எதையாவது வாங்கிக்கொண்டு இந்த காமதேனுவை எனக்குக் கொடும் என்றார் வசிஷ்டர் அரசனே! இந்தப்பசு தேவபிதிர் காரியங்களுக்காக வுள்ளது. நீர் எதைக்கொடுத்தாலும் கொடுக்கமுடியாது என்றார். விசுவாமித்திரர் நீர் கொடாவிட்டால் இதை நான் பலாத்காரமாகக் கொண்டுபோவேன் என்றார். வசிஷ்டர், நீர் அரசனாயிருக்கிறீர் சேனைகளோடு கூடியிருக்கிறீர். நினைத்த கருமத்தை முடிக்கச் சக்தியுள்ளவர் உம் இஷ்டம்போல நடத்துகொள்ளுமென்றார். உடனே விசுவாமித்திரன் அதைப் பிடித்து வரும்படி தன் சேனைக்கு உத்தரவு அளிக்க, அவர்கள் அதைத் தரத்திப்பிடிக்கத் தலைப்பட்டார்கள். அது வசிஷ்டரிடம் வந்து விசுவாமித்திரருடைய சேனைகள் அடித்தும் குத்தியும் இம்சிக்கின்றார்களே நீர் ஏன் என்னைக் கவனிக்கவில்லையென்று கேட்டது. வசிஷ்டர், விசுவாமித்திரர் பலாத்காரமாக பிடிக்கப்பார்க்கிறார். அதற்கு நானென்ன செய்யலாமென்றார். ஆனால் நீர் என்னைக் கைவிட்டுவிட்டீரோ என்றது. வசிஷ்டர் இல்லை. உனக்கு இஷ்டமிருந்தால் நில் என்றனர். அதுகேட்ட உடனே அந்தப்பசு கோபத்தினாலே யிருஷ்களும் சிவந்து கொடிய பார்வையாகப் பார்த்து அந்தச் சேனைகளைத் துரத்திற்று. அவர்கள் சாட்டையாலும், தடியாலுமடித்தார்கள். காமதேனு தன் சரீரத்திலிருந்து யவனர் பிரதர் முதலியவர்களை ராளமாகவுண்டாக்கிற்று. அந்தப்படைகள் விசுவாமித்திரருடைய சேனைகளை நாசம் செய்தன.

அதைகண்ட விசுவாமித்திரர் வில்லை வளைத்துக்கொண்டு வசிஷ்டர்மேல் அம்புகளை மழைபோலச்சொரிந்தார். வசிஷ்டர் அந்த அம்புகளைத் தமது மூங்கில் தண்டத்தினால் தட்டி உதிர்த்துவிட்டார். விசுவாமித்திரர் அளவில்லாத தெய்வாஸ்திரங்களை ஏவினர். வசிஷ்டர் அவைகளையும் தண்டத்தினால் தடுத்துவிட்டார். பின் விசுவாமித்திரரைப்பார்த்து, காதிகுமாரா! உன் சக்தி ஒழிந்தது; நீ தோற்றாய். மேலும் சக்தியிருந்தால் வெளிப்படுத்து என்றார். விசுவாமித்திரர் தலையிறக்கங்கொண்டு சும்மா நின்றார். பிரமதேஜஸ்ஸின் மகிமையையுணர்ந்து க்ஷத்திரியதேஜஸ்ஸில் வெறுப்பு அடைந்தார். உடனே ராஜ்யத்தையும் சகல வாழ்வுகளையும் விட்டு ஒழித்துத் தவத்திலே சித்தத்தைச் செலுத்தினர். உக்கிரமான தவசைச்செய்து பிரமரிஷியானரென்றான்.

192-வது அத்தியாயம்.

சைத்ரத பர்வத் தொடர்ச்சி

அர்ஜுனன், கந்தர்வராஜாவே! விசுவாமித்திரர் பிரமரிஷியானபின் அவருக்கும் வசிஷ்டருக்கும எப்படி விரோதம் வந்தது? அவ்விரு.வருடைய சரித்திரம் முழுவதும் கேட்க விரும்புகிறேன். அதைச் சொல்லவேண்டும் என்று கேட்கக் கந்தர்வன் சொல்லுகிறான்.

இக்ஷ்வாகுவம்சத்தில் கல்மாஷபாதன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் இணையற்ற பராக்கிரமசாலி. ஒருநாள் அவன் வேட்டையாடுவதற்காக வனத்துக்குப்போனன். வேட்டையாடி களைத்துத் திரும்பிவரும்போது வசிஷ்டருடைய மூத்தகுமாரரான சக்திமுனிவர் எதிராக வந்தார். அரசன் அவரைப்பார்த்து எனக்கு வழிவிட்டு விலகிப்போம் என்றான். அவர் க்ஷத்திரியன்தான் பிராமணனுக்கு வழிவிடவேண்டிய முறைமை; பிராமணன் க்ஷத்திரியனுக்கு வழிவிடுகிறது முறை தவறு என்றார். இப்படி இருவரும் வழக்காடிக்கொண்டிருந்தார்கள். ஒருவரும் விலகவில்லை. அரசன் கோபித்து இவரை அடித்தான். சக்திமுனிவர் கோபித்து அரசனைப்பார்த்து நீ இராட்சதனைப்போல ரிஷியை அடித்தபடியால் இன்றுமுதல் நீ நரமாமிசம் தின்னும் இராட்சதனுவாயென்று சபித்தார். கல்மாஷபாதனுக்குப் புரோகிதராகும் விஷயத்தில் விசுவாமித்திரருக்கும் வசிஷ்டருக்கும் பகையுண்டாயிற்று. அந்த விசுவாமித்திரர், இப்போது அரசனும் ரிஷியும் சண்டையிடும் இடத்துக்கு வந்தார். விசுவாமித்திரர் அவர் விவாதத்தைப் பார்த்துக்கொண்டே மறைந்துபோனர் அரசன் சக்திமுனிவர் வசிஷ்டருடைய புத்திரரென்று உணர்ந்து அவர் கோபத்தைத் தணிக்கும்பொருட்டு அவருக்கு வணக்கம் பூஜித்தான். விசுவாமித்திரர் அதை அறிந்து அந்த அரசன்மேல் ஒரு அரக்கனை ஏவினர். அந்தக் கிங்கரனென்னும் அரக்கன் அரசன்மேல் ஆவே

சமானன். அரசனும் திரும்பி வீடுவந்து சேர்ந்தான். முன்னமே ஒரு பிராமணன் மாம்சபோஜனம் வேண்டுமென்று அரசனேயாசித்திருந்தான். அரசன் அவனே நோக்கி இக்கேயிரும் தருகிறேனென்று கூறிப்போனன். அரசன் திரும்பிவரும்போது அத்தப் பிராமணனைப் பார்த்துக்கொண்டே அந்தப் புரம்போனன். போனதும் பிராமணனை மறந்துவிட்டான். நடு ராத்திரியில் நினைத்துக் கொண்டான். உடனே சமையற்காரனை அழைத்து இந்த வனத்துக்காருகில் ஒரு பிராமணன் மாம்சம் சேர்ந்த போஜனத்துக்காகக் காத்துக்கொண்டிருக்கிறான். நீ அவனைத் திருப்தி செய் என்று கட்டளையிட்டான். சமையற்காரன் நரமாம்சத்தைச் சமைத்து அந்தப் பிராமணனுக்குப் படைத்தான். அதை ஞானதிருஷ்டியால் உணர்ந்தஅந்தப் பிராமணன் எனக்குத் தகாதபோஜனம கொடுத்தபடியால் அந்த அரசன் சக்தி முனிவர் சாபப்படி இராட்சதனும் நரமாம்சபட்சணம் செய்துகொண்டு உலகமெல்லாம் திரியக்கடவனென்று சபித்தான் அரசனுக்குச் சாபம் உறுதிப்பட்டது. அரசன் அறிவிழந்து அரக்கனுமனத்தில் அலைந்துகொண்டிருந்தான். சக்திமுனிவர் அவனுக்கு எதிர்ப்பட்டார். அரசன் அவரைப்பார்த்து நீர் என்னை நரமாம்சம் தின்னும்படி சபித்தபடியால் முதலில் உம்மைத்தான் தின்று ஆரம்பஞ்செய்வேன் என்றுகூறி அவரைக்கொன்று தின்றான். விசுவாமித்திருடைய ஏவுதலால் வசிஷ்டருடைய மற்றப் புத்திரர்களையுந் தின்றான். அதைக்கேட்ட வசிஷ்டர் விசுவாமித்திரனைக்கொல்ல நினையாமல், துக்கத்தால்வருந்தி மேருவின சிகரத்திலிருந்து விழுந்தார். அப்படி வீழ்ந்தனால் அவர் இறக்கவில்லை. பிறகு வானமளவும் பற்றியெரியும் காட்டுத்தீயில் குதித்தார். அக்கினியும் அவரைச் சுடவில்லை. பிறகு கழுத்தில் ஒரு பாறையைக் கட்டிக்கொண்டு சமுத்திரத்தில் வீழ்ந்தார். சமுத்திரத்தின் அலைகள் அவரைக் கரையிற் கொண்டுவந்து சேர்த்தது. எவ்வகையிலும் தமக்கு மரணம் வாராமையை அறிந்து தமது ஆச்சிரமத்துக்குப் போனர்.

193-வது அத்தியாயம்.

சைத்ரத பர்வத் தொடர்ச்சி.

அர்ஜுனு! ஆச்சிரமத்திலே புத்திரர்களில்லாதிருப்பதைக் கண்டு மஹாதுக்கமுடையவராய் வெளியில்போய்ப், பிரவாஹித்தோடும் நதியைக்கண்டு, கயிறுகளால் அங்கங்களைக் கட்டிக்கொண்டு அதில் முழுகினர். அந்த நதி அவருடைய கட்டுகளையும் அறுத்து அவரையும் கரை சேர்த்தது. வசிஷ்டர் அந்த நதிக்கு வீபாவசை (கட்டை அவிழ்த்தது) என்று பேரிட்டார். பின்னும் துக்கம் பொறுக்கமுடியாமல் உயிரை மாய்த்துக்கொள்ள முயன்றார். இமையமலையில் ஓடிவரும் ஒரு நதியில் வீழ்ந்தார். அது பயந்து நூறு பிரிவுகளாகப் பிரிந்து ஓடிற்று. அதனால் அந்த நதிக்கு சதத்ரு என்று பேரையிற்று அதிலும் அவர் சாகாமையால் எங்குஞ் சுற்றித்திரிந்து ஆச்சிரமத்திற்கே சென்

முரு. சக்திமுனிவருடைய மனைவி அதிருசயந்தி என்பவள் அவருக்குப் பின்னாலே போனாள். வசிஷ்டர் நமக்குப் பின்னாலே யாரோ வேதம் கல்பம் முதலிய சாஸ்திரங்களை ஓதுகிற சப்தத்தைக்கேட்டார். என் பின்னே வருகிறவன் யாரென்று கேட்டார். மருமகளாகிய அதிருசயந்தி நான்தான் வருகிறேன் மற்றெவரும் இல்லையென்றாள். சக்தியின் குரல்போன்ற தொனி கேட்கின்றதேயென்றார். அதிருசயந்தி உமது குமாரருடைய கர்ப்பம் என் வயிற்றிலிருக்கிறது. வயிற்றிலேயே அந்தகுழந்தை வேதாத்தியயனமபண்ண ஆரம்பித்துப் பன்னிரண்டு வருஷங்களாகின்றன என்றாள். அதுகேட்ட வசிஷ்டர் மிழ்ந்து பிராணத்தியாகஞ் செய்துகொள்வதை நிறுத்திவிட்டார்.

அவர் தன் மருமகளுடன் காட்டின்வழியாக வருகையில் கல்மாஷபாதனைக் கண்டார். அவன் வசிஷ்டரைபுக்கொன்று தின்னக்கருதினன். அதிருசயந்தி அவனைக்கண்டு நடுநடுங்கி என்னைக் காப்பாற்றுமென்று வசிஷடர் பக்கம் வந்து சேர்ந்தாள். வசிஷடா பெண்ணே! பயப்படாதே இவன் அரக்கன் அல்ல, அரசன் என்று சொல்லி அவனை அதட்டி விரதத்தை, ஜலத்தைப் புரோட்சித்து அவன் சாபத்தை விலக்கினர். அவன் தன் சுயபுத்தியையடைந்து வசிஷ்டரைப்பணிந்து சுவாமீ! நான்செய்த அபசாரத்தைப் பொறுத்தருள வேண்டும் நான் தமக்கு என்ன செய்யவேண்டுமோ அதற்குங் கட்டளையிட்டருளுமென்றான். வசிஷடர் அரசனே! இனி பிராமணரை ஒருபோதும் அவமதிக்காதே. நீ உன் காட்டுக்குப்போய் ராஜ்யபரிபாலனம செய் என்றார். அப்படியே யாகட்டுமென்று கூறி, அவரைப் பார்த்துச் சுவாமீ! நீர் என் மனைவியைச்சேர்ந்து புத்திரசந்தானம் அருளவேண்டுமென்று இரந்தான். அவரும் கல்லதென்று ஒத்துக்கொண்டார். அவ்விருவரும சோர்ந்து அயோத்திக்குப்போனார்கள், நெடுங்காலத்துக்குப் பிறகு தங்கள் அரசன் வருகிற சந்தோஷத்தினால் ஜனங்கள் அமராவதியைப்போல தங்கள் நகரத்தை அலங்கரித்து, அரசனை எதிர்கொண்டழைத்து, நகரவலஞ்செய்வித்து மகிழ்ந்தார்கள். அரசனும் மகிழ்ச்சியோடு அரசளித்துவந்தான். பின்பு அரசன் கற்புடைமை தவறாத தன் மனைவி மதயந்தியைச சந்தானத்தை யுத்தேசித்து வசிஷட முனிவரிடம் அனுப்பினன். முனிவர் ஸ்பரிசமாத்திரத்தாலே அவளுக்குக் கர்ப்பத்தை உதவிசெய்தார். வெகுகாலம் பிரசவிக்காமலிருந்தாள். அதனால் கோபங்கொண்டு கல்லினால் வயிற்றில் இடித்துக்கொண்டாள். பன்னிரண்டாவது வருஷத்தில், அசமகன் என்னும் அரசன் பிறந்தான். அவன் யௌதேயம் எனனும் பட்டணத்தை உண்டாக்கினன்.

194-வது அத்தியாயம்.

சைத்ரரத பர்வத் தொடர்ச்சி.

அர்ஜுனா! கொஞ்சகாலத்துக்குப் பிறகு அதிருச்யந்தி ஒரு குமாரனைப் பெற்றாள். வசிஷடா அந்தக் குழந்தைக்கு ஜாதகர்மாதிகள் செய்து பராசரர்

என்று பேருமிட்டார். அந்தக்குழந்தை விட்டமையே தகப்பனுமாக் கருதி யிருந்தான். ஒரு நாள் அவன் வசிஷ்டரைப் பிதாவே! என்று கூப்பிட்டான். அவனுடைய தாய் கண்களில் நீர் பெருகக் குமாரனே! நோகிக குழந்தாய்! இவர் உனகுப் பிதாவல்ல; பாட்டனர்; உன் பிதாவுக்குப் பிதா உன் பிதாவை ஒரு அரககன் பட்சித்துவிட்டானெனறு கூறினள். அதுகேட்ட பராசரமுனிவருக்குத் துக்கமும் கோபமும் உண்டாயிற்று. எல்லா லோகங் களையும் நாசம்பண்ண உத்தேசித்தார். அப்போது வசிஷ்டர் சொல்லுகிறார்.

கிருதயீரியன் என்ற கீர்த்திபெற்ற அரசன் ஒருவன் இருந்தான். அவ னுக்குப் பிருகுமஹரிஷி வம்சத்தார் குரு. அவர்களால் அரசன் அனேக யாகஞ்செய்விக்கப்பட்டான். யாகமுடிந்ததும் அரசன் அவர்களுக்கு திருப்தி யாகும் மட்டும் தனமும் தானியமுங்கொடுத்துப் பரிபாலித்தான். அவன் சொர்க்கம்போய்விட்டான். அவனுடைய சந்ததியாருக்கு ஒரு காலத்தில் பொருள் கஷ்டமுண்டாயிற்று. அவர்கள் பிருகுவமசத்தாரிடம் யாசித்தார கள். அப்போது சில பார்க்கவர்கள் பொருளைப் பூமியின்கீழ்ப் புதைத்து விட்டார்கள் சிலர் பிராமணருகுத் தானஞ்செய்துவிட்டாரகள். சிலர் அரசருகு வேண்டிய திரவியங்கொடித்து உதவினர்கள். ஒரு காலத்தில் ஒரு கூத்திரியன் அந்த பார்க்கவர்களில் ஒருவன் வீட்டைத தோண்டினன். அங்கே திரவியமகப்பட்டது. அதைக்கண்ட கூத்திரியர்கள் அந்தப் பிராம ணர்கள் கெஞ்சிக் கேட்கவும விடாமல் அவர்களே வேட்டையாடுவதுபோல கண்டவிடங்களில் அம்புகளால் அடித்துக் கொன்றுகொண்டிருந்தார்கள். இறநத பிராமணர்களுடைய மனைவிகள் எல்லாரும் இமயமலையில் மறைத்து கொண்டு வசித்தார்கள். அவர்களுள் ஒருத்தி கர்ப்பவதியாயிருந்தாள். அவன் கூத்திரியாகளுகுப் பயந்து தன் கர்ப்பத்தை ஒரு துடையில் மறைத்துவைத் துக்கொண்டிருந்தாள் மற்றொரு பெண் அதையறிந்து கூத்திரியர்களிடம் போய் அதைச் சொல்லிவிட்டாள் கூத்திரியர்கள் அந்தக்கர்ப்பத்தை அழிக் குமபடி அங்கேபோனார்கள். கர்ப்பத்திலிருந்த சௌவானது அவளது துடை யைக் கிழித்துகொண்டு வெளிப்பட்டது. வெளிப்பட்டவுடனே கூத்திரி யர்களுடைய நேத்திரஙகளெல்லாம் குருடாகச் செய்துவிட்டது. கூத்தி ரியாகள் பயந்து அந்தப் பிராமணப்பெண்ணைச் சரணமாக அடைந்து கண் களை வேண்டி இருந்தார்கள்.

195-வது அத்தியாயம்.

சைத்ர பர்வத் தொடர்ச்சி.

அந்தப் பிராமணப்பெண் அவர்களைநோக்கி நான் உங்களுடைய கண்க ளைக் கெடுக்கவில்லை. இதோ பிறந்திருக்கிற குழந்தைஉங்கள்மேல் கோபித்து இந்த காரியத்தைச் செய்திருக்கிறான். தன் பந்து ஜனங்கள் உயிர் போய்

லப்பட்டதே அவனுடைய கோபத்துக்குக் காரணம். ஆகையால் நீகளும் இவனைப் பிரார்த்தியுங்கள் என்றாள். அப்படியே அவர்களெல்லாரும் குழந்தையை வேண்டிக்கொண்டார்கள். அந்தக்குழந்தையும் அநுகிரகம் செய்தது. இவர் தடையிலிருந்து பிறந்தபடியால் ஊருஜர், ஒளர்வர் என்று பேர் பெற்றார். அவர் சகல லோகங்களையும் அழிக்க ஆரம்பஞ்செய்தார். அதை உத்தேசித்து பெருந்தவஞ்செய்தார். அந்தத் தபாக்கினியால் சகல லோகங்களும் தபிக்கப்பட்டது. அதையறிந்த அவருடைய பிதிர்க்கள் அவருக்குப் பிரத்தியட்சமாய்க் குழந்தாய்! உன்னுடைய உகிரமான தவத்தினாலே உலகங்களெல்லாம் பிலகுலேகின்றன. உன் கோபத்தையடக்கு. தவத்தை நிறுத்து, உலகங்களுக்கு க்ஷேமத்தைச்செய். க்ஷத்திரியர்கள் எங்களைச் சங்கரித்த போது, அவர்களை என் நாங்கள் சிட்சிக்கவில்லையென்றால், நீண்ட ஆயுசினால் எங்களுக்கு மனவருத்தமுண்டாயிற்று. மரணம் தானாகவே எங்களுக்கு வரவில்லை. அதனால் மரணத்தை விரும்பியே க்ஷத்திரியர் எங்களைக் கொலை செய்தபோது தடுக்காமலிருந்துவிட்டோம். வீட்டிலே தனதானியத்தை வைத்ததுகூட க்ஷத்திரியர்களுக்குக் கோபமுண்டாக்கும்பொருட்டுத்தான். இந்தத் தனத்தினால் என்ன பிரயோஜனம்? சொர்க்கத்தை விரும்புகிற நமக்குத் தனம் என்னத்திற்கு? எமன் எங்களிடம் அணுகக்கூடாமலிருந்தபடியால் மரணத்தை விரும்பின நாங்கள் இந்த உபாயத்தைச்செய்து பரலோகயாத்திரை செய்தோம். தற்கொலைசெய்துகொள்கிறவன் புண்ணியலோகத்தை அடையமாட்டானல்லவா? தற்கொலை கூடாதென்று இப்படிச்செய்தோம். உலகங்களை அழிப்பதான பாபத்துக்கிடமான தவத்தைவிடு. தவசையழிக்கும்படியான கோபத்தையடக்கு என்று கூறினார்கள்.

---

196 வது அத்தியாயம்.

சைத்ர ரத பர்வத் தொடர்ச்சி.

அப்போது ஒளர்வர் பிதிர்க்களே! நான் எல்லா லோகங்களையும் அழித்துவிடுகிறதாக மனதில் சங்கல்பம் செய்துவிட்டேன். அது வியர்த்தமாகக் கூடாது. கொண்டகோபத்தை நிறைவேற்றிவிட்டால் அது என்னையே யழிக்கும். சரியான காரணத்தோடு கொண்டகோபத்தை முடிக்காமல்போனால் அவன் தர்மார்த்தங்களில் ஒன்றையேனும் காப்பாற்றமாட்டான். க்ஷத்திரியர்கள் நமது வம்சத்தையழித்தபோது தாயின் தடையில் அடங்கியிருந்த நான் தாய்மார்களின் புலம்பலைக்கேட்டேன் அப்பொழுதேயெனக்குக்கோபம் பிறந்தது. நீக்கற்றவர்களைப்போலப் பிருகுவம்ச ஸ்திரீகள் கதறுகையில் அவர்களை ஒருவரும் காப்பாற்றவில்லை. பாபியைச் சிட்சித்துத் தர்மத்தைப் பரிபாலிப்பது அவசியம். பாபச்செய்கையைத் தடுக்கச சக்தியிருந்தும் சும்மா இருக்கிறவனைக்கூட அந்தப் பாபம் சேரும். உலகங்களை அழிக்க எனக்கு வல்ல

மையிருக்கிறது. இருந்தும் உங்களுக்கு அடங்கவும் வேண்டியிருக்கிறது. ஆகையால் உலகங்களிற்கும் எனகரும் கெடுதியில்லாத மார்க்கத்தைச் சொல்லுங்கள் என்றார்.

பிதிர்க்கள் உன் கோபாக்கினியை ஜலத்தில் விட்டுவிடு. உலகங்கள் ஜலத்தையே ஆதாரமாக உடையன. ரசங்களெல்லாம் ஜலமயம். உலகமே ஜலமயம். உன் கோபாக்கினியை ஜலத்தில்விடு. அது சமுத்திரத்தில் ஜலத்தை யெரித்துக்கொண்டிருக்கும். இதனால் தேவர்களும் உலகமும் அழியாமலிருக்கும், உனக்கும் சுகமுண்டாகும் என்று சொன்னார்கள். ஒளர்வர் அப்படியே தமது கோபத்தைச் சமுத்திரத்திலே விட்டார். அதுதான் குதிரைத் தலைபோலாய்ச் சமுத்திர ஜலத்தைப் பட்சித்துக்கொண்டிருக்கிறது. அதற்கு வடவாமுகாக்கினியென்று பெயர். பராசரனே நீயும் உன் கோபத்தை ஒழி. உலகங்கள் முக்கியமானவையென்று கருது. அவைகளுக்கு நீ கெடுதி செய்யாதேயென்று சொன்னார்கள்.

197-வது அத்தியாயம்.

சைத்ரரதபர்வத் தொடர்ச்சி.

பராசரர் அப்படியே கோபத்தை விட்டுவிட்டார். பின் ராட்சதஸத்ரமென்னும் யாகஞ்செய்தார். தமது பிதாவைக்கொன்ற ராட்சதர்களில் அநேகரை அந்த யாகத்தில் எரித்தார். வசிஷ்டர் இவனுடைய இந்த எண்ணத்தையுந் தடுப்பது தகுதியல்லவென்று இருந்துவிட்டார். பிறகு அத்திரிமஹாரிஷி அந்த யாகசாலைக்குவந்தார். புஸ்தியர், புலகர் முதலிய ரிஷிகளும் வந்தார்கள். புலஸ்தியர் கூறுகிறார். அய்யா! குற்றமற்றவர்களும் குற்றமுள்ளவர்களுமான சகல ராட்சதர்களையும் சங்காரிப்பது உனக்குநியாயமாக இருக்கிறதா? இராக்ஷதர்கள் என்னுடைய சந்ததி என் சந்ததியை நிர்மூலம்பண்ணுதே இது தபஸ்விஷேஷடர்களான பிராமணர்களுடைய செய்கையல்ல. பிராமணர்களுக்குச் சாந்தியே சிறந்த தர்மம். நீ பிராமண சிரேஷடனாக இருந்தும் பெரிய பாபகாரியத்தைச் செய்கிறாய். உன் பிதா கோபத்தினாலே அரசனைச் சபித்தார், அந்தசாபம் காரணமாக இறந்தார் அவரைத் தின்பதற்கு வந்த ராட்சதனுமாகாது. விசுவாமித்திரர் ஏவிய இராட்சதனன்றே அவரைத்தின்றான். இராட்சதன் வசிஷ்டகுமாரர்களைத் தின்னும்போது, அவர்கள் சாமர்த்தியமுள்ளவர்களாக இருந்தும் அரக்கனைச் சபிக்கவில்லை. தாங்கள் தப்பித்துக் கொள்ள வழி தேடவுமில்லை. வேறு சரீரத்தை அடையவேண்டுமென்கிற அவலால் செயலற்றிருந்தார்கள். கல்மாஷபாதனும், வசிஷ்டருடைய புத்திரர்களும் சொர்க்கத்தில் ஆனந்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் வசிஷ்டருக்குத்தெரியும். உன்னுடைய யாகத்தினால் என் சந்ததியாகிய இராட்சதர்களுக்கு அழிவுவந்து சேர்ந்தது போதும். இத்துடன் யாகத்தை

நிறைத்து என்றார். வசிஷ்டரும் அப்படியே சொன்னார். பராசரர் அந்த யாகத்தைப் பூர்த்திசெய்து ரிஷ்யந்தியை இமயமலைச்சாரலிலுள்ள பெரியவனத்தில் விட்டார். இமயமலையின் வடபுறத்திலுள்ள காட்டில் மரங்களும் நிராட்சதாகளும், கற்களும் எரிந்துகிடந்தன அங்கேயே எப்போதுமிருக்கிறது. அந்த வனத்தில் இப்பொழுதும் பாவகாலங்களில் காணப்படுகிறது.

198-வது அத்தியாயம்.

சைதன்ய பர்வத தொடர்ச்சி.

சக்திபுத்திரனான பராசரர் தமது பிதாவின் மரணத்துக்குக் காரணமாயிருந்த விசுவாமித்திரரைக் கொல்லத்தருதி வேள்விசெய்ய தொடங்கினர். அப்போது சுப்பிரமண்யக்கடவுள் விசுவாமித்திரரைக் காப்பாற்ற உத்தேசித்து அந்தப் யகாக்கினியை விழுங்கிவிட்டார் என்று கந்தாவன் சொன்னன். அதைக்கேட்ட அர்ஜுனன் அதிருக்கட்டும். கல்மாஷபாதை ஏன் தன் மனைவியை வசிஷ்டரிடம் அனுப்பினன்? சகலமும் அறிந்த வசிஷ்டர் ஏன் அந்தப் பாபச் செய்கைக்கு உடன்பட்டார் என்று கேட்கக் கந்தர்வன் சொல்கிறன். கல்மாஷபாதன் சகதிமுனிவர் சாபப்படி இராட்சதனானன். அவன் காட்டிலிருக்கும்போது ஒரு பிராமணன் தன் மனைவியை அழைத்துக்கொண்டு அந்த வழியாகத் தன்னூருக்குப் போய்க்கொண்டிருந்தான் கல்மாஷபாதனைக்கண்டு பயந்து அவளிருவரும் ஓடினார்கள். அரசன் அந்தப் பிராமணனைப் பிடித்துக்கொண்டான். அதைக்கண்ட பிராமணப்பெண் அரசனே! தாம தெறி தவறுதவனே! தர்மத்திற் பிரதாபமுடையவனே! சூரியவமசத்தரசே! பாபம்பண்ணுதே. என் பர்த்தாவை எனக்குக் கொடுத்து என்னைக் காப்பாற்று என்று வேண்டிக்கொண்டாள். அரசன் அவள் சொல்வதைக் கவனியாமல் அந்தப் பிராமணனைக்கொன்று தின்றான். அப்போது துக்கத்தினால் அவள் அழுதாள். அவருடைய கண்ணீர்த்துளிகள் பூமியில் விழுந்ததும் நெருப்பாயின. அந்தப்பெண் கல்மாஷபாதனைப்பார்த்து மூடா! அறிவற்றவனே! என் கண்முன்னே என் கணவனைத்தின்ற நீ உன் பத்தினியைக்கூடும் போது சாகக்கடவாய் என்று சபித்தாள் பிறகு அரசன் அந்தப்பெண்ணையிரந்து தன் சாபத்தை நீக்கும்படி கேட்டுக்கொண்டான் அந்தப் பிராமணப் பெண் வசிஷ்டமஹாரிஷியைக்கலந்து உன் மனைவி புத்திரனைப்பெற்று உன் சந்ததியை விருத்தியாக்குவாள் என்று அநுக்கிரகம் செய்தாள். பிறகு எரிகின்ற தீயில் மூழ்முகினள். அரசன் சாபந்தீர்ந்தபின் தன் மனைவியைக்கூட எத்தனித்தபோது அவள் நடுத்துச் சாபம் தீர்ந்திருப்பதையும் அவனுக்குச் சொன்னள். அந்தச்சாபம் அரசனுக்கு மனைவு வந்தது. அதனாலேதான் வசிஷ்டரால் புத்திரசந்தானம் பெற்றுக்கொண்டான். கல்மாஷபாதனென்று கந்தாவன் சொன்னன்.

199-வது அத்தியாயம்.

சைத்ரரத பர்வத் தொடர்ச்சி

அர்ஜுனன் கந்தர்வராஜனே! எங்களுக்குத் தகுந்த புரோஹிதர் யார்? என்று கேட்டான். கந்தர்வன் அர்ஜுனே! தேவலருக்கு இளைய சகோதரர் தௌமியர் என்பவர். தவத்தில் சிறந்தவர். இதோ காணப்படுகிற வனத்தில் உத்தரகாசமென்கிற புண்ணியதீர்த்தக்கரையில் தவஞ்செய்துகொண்டிருக்கிறார். அவரைப் புரோஹிதராகக் கொள்ளுங்களென்றான். பின் அர்ஜுனன் ஆக்நேயாஸ்திரத்தை முறையோடு அவனுக்கு உபதேசித்தான். அவன் சந்தோஷமடைந்து அனகனே! சிறந்த குதிரைகளை உனக்குக் கொடுப்பேன். சாக்ஷுஷியன்னும் வித்தையைப் பெற்றுக்கொள் என்றான். அர்ஜுனன் அந்த வித்தையைக் கிரகித்துக்கொண்டு கந்தர்வராஜனே குதிரைகள் உன்னிடத்திலேயே இருக்கட்டும். தகுந்த காலத்தில் பெற்றுக்கொள்வேனென்று சொல்லக் கந்தர்வன் ஒப்புக்கொண்டுபோய்விட்டான் பாண்டவர்கள் உத்தோச தீர்த்தத்தில் இருக்கிற தௌமியருடைய ஆச்ரமத்துக்குப்போய, அவரைத் தங்களுக்குப் புரோஹிதராயிருக்கும்படி கேட்டார்கள். அவர் அவர்களை உபசரித்துப் புரோஹிதராயிருக்க ஒப்புக்கொண்டார். தௌமியர் வேதமுழுதுங் கரைகண்டவர். சகல சாஸ்திரங்களையு முணர்ந்தவர். மந்திர ஜ்ரகசியங்களை யறிந்தவர். கூர்ந்த புத்தியுள்ளவர். வாக்சக்திலாசமுள்ளவர். பிரகஸ்பதிக்குச் சமானமானவர். பாண்டவர்கள் அவரைப் புரோஹிதராகப் பெற்றதும் இராஜ்யலாபமடைந்ததாகவே மனமகிழ்ச்சிபடைத்தார்கள். அவரை முன்னிட்டுக்கொண்டு பாஞ்சாலநகரம்போகத் தீர்மானித்தார்கள்.

200-வது அத்தியாயம்.

சுயம்வர பர்வம்.

பிறகு பாண்டவர்கள் தௌமியரோடு பாஞ்சாலநகரம் நோக்கிப் புறப்பட்டார். அந்த வழியில் வியாசமுனிவர் பிரத்தியட்சமானார். பாண்டவர்கள் அவருக்கு முறைப்படி பூஜை செய்தார்கள். அவரது கருணையைப்பெற்றுக் கொண்டு காமபாலகளின் விநோதங்களைப் பார்த்துக்கொண்டே போனார்கள். பாஞ்சாலநகரம் சேர்ந்தபின் ஒரு குயவனுடைய வேலைச்சாலையில் தங்கினார்கள். பிட்சையெடுத்துப் புஜித்தார்கள். ஒருவரும் அவர்களை அறியவில்லை. பாஞ்சாலராஜன் அர்ஜுனனுக்குப் பெண்ணைக் கொடுப்பதனால் பீஷ்மரிடத்திலுள்ள பயம் ஒழிந்துவாழக் கருதினான். பாண்டவர்களைக் கண்டுபிடித்துப் பெண்ணைக் கொடுப்பதற்காக ஒரு ஏற்பாடு செய்தான். அதாவது வியாக்ரபதன் புத்திரனுடைய ஸ்ருஞ்சயனுக்குத் தேவர்கள் ஒரு வில்லைக் கொடுத்திருந்

தார்கள். அது மஹா வல்லமையுடையது. கிந்நரமென்று கீர்த்திபெற்றது. கடினமானது. அந்த வில்லை வருவித்தான். அதற்கு இருப்புநாண் கட்டப் பட்டிருந்தது. அந்த நாணை ஒருவனும் இழுக்கமாட்டான். பரமேசுவரனால் கொடுக்கப்பட்டது. அந்த வில்லை வளைத்துக் குறித்த இலட்சியத்தை அடிப்ப வனுக்குக் கிருஷ்ணையைக் கொடுப்பதென்று தீர்மானித்தான். அற்புதவேஷப் பாடுள்ள ஒரு யந்திரஞ்செய்வித்தான். அது ஆகாயத்தில் சுழன்றுகொண்டி ருக்கும் இயல்புள்ளது. அதற்குமேல் இலட்சியம் அமைக்கப்பட்டது. இந் த வில்லை வளைத்து இந்த அம்பைப்பூட்டி இலட்சியத்தை அடிப்பவனே கிருஷ் ணைக்குரியவனென்று ஏயமித்தான். அதைப்பார்க்கும்படி சகல தேசத்தரசர் களும் வந்திருந்தார்கள். காணீன், சகோதரர்களோடு துரியோதனனும் வந் தான். கிருஷ்ணமூர்த்தியும் யாதவர்களோடு வந்திருந்தார். அநேக ரிஷிக ளும் வந்திருந்தார்கள். எல்லாரும் சுயம்வரசாலையில் வந்துத் தத்தமக்கு இடப்பட்ட ஆசனத்தில் உட்கார்ந்தார்கள். முப்பத்துமூக்கோடி தேவர்களும் அந்தரத்தில் வந்து நின்றார்கள். பாண்டவர்களும் பிராமணக்கூட்டத்திற் கலந்து உட்கார்ந்திருந்தார்கள். அந்தச் சபையில் ஆடல் பாடல் முதலிய வினோதங்கள் பலகாள நடந்தன. பதினாறுவதுநாள் கிருஷ்ணைக்கு மங்களஸ் நானம் செய்வித்து, ஈரந்துவட்டி, உயர்ந்த ஆடையாபரணங்களால் அலங்க ரித்து, இலுப்பைப்பூவும் அறுகும்புல்லும் சேர்த்துகட்டின மாலையை அவள் கையில் கொடுத்தார்கள். அவளுடைய அழகைக்கண்டு பெண்கள் எல்லாரும் மகிழ்ந்தார்கள். அவளுடைய தாயாருக்கும் அத்திரம் மகிழ்ச்சியுண்டாகவில்லை. எந்தக்கணவன் கிடைப்பானேயென்னும் ஏக்கம் உண்டாயிற்று. பின் தரு பதனுடைய கட்டியால திரௌபதையைப் பெண்யானைமேலேற்றினார்கள். அவளுடைய பாங்கிமார்களும் பெண்யானைகளின்மேலேறிக்கொண்டு அவ ளைச் சூழ்ந்தார்கள். பலவகை மங்களவாத்தியங்களும் கோஷித்தன. சுமங் கலிகள் மங்களப்பாட்டு பாடினார்கள். திருஷ்டத்யுமனன் ரதமேலேறிக் கொண்டு முன்னே செல்ல, நாலுபக்கத்திலும் வில்லாளிகளான பெரும்படை சூழத் திரௌபதை சுயம்வர மண்டபத்துக்கு வந்தாள். பிராமணர்கள் ஹோமமாதி வைதிகசடங்குகளை முடித்தார்கள். வாத்தியகோஷங்களும் அமர்ந்தன. திருஷ்டத்யுமனன் கிருஷ்ணையை அழைத்துகொண்டு சபை யின் நடுவில் வந்துநின்ற மேகமூழக்கம்போல் உரமாய்ச் சொல்லுகிறான் சகல அரசர்களும் நான் சொல்வதைக் கேட்கட்டும். இது வில்; இது இலட்சியம்; இவை அம்புகள், சுழலுகிற யந்திரத்தின் துவாரவழியாக ஐந்து அம்புகளினால் இலட்சியத்தை அடிக்கவேண்டும். அப்படி அடிக்கிறவனே இதோ இருக்கிற என் சகோதரி கிருஷ்ணைக்குக் கணவன். உண்மையாகச் சொல்லுகிறேனென் றான். பின் தன் சகோதரிக்கு அங்கே வந்திருக்கும் அரசர்களுடைய பேர் குலம் முதலியவற்றை விவரித்துச் சொல்லத் தொடங்கினான்.

201-வது அத்தியாயம்.

சுயம்வர பர்வத் தொடர்ச்சி.

தங்கையே! துரியோதனன், துர்முகன், விவிம்சதி, விகர்ணன், ஸஹன், துச்சாஸனன், யுயுத்ஸு, பீமவேகன், உக்ராயுதன். பலாகி முதலிய திருதராஷ்டிரன் புத்திரர்களும் கர்ணனும் வந்திருக்கின்றார்கள். சகுனி முதலான காந்தாராஜ புத்திரர்கள் வந்திருக்கிறார்கள். பிருகர்தன், மணிமான், உத்தரன் முதலிய புத்திரர்களோடு விராடமஹாராஜனும் வந்திருக்கின்றார். ஸுசேது வுந்தன் குமாரர்களோடு வந்திருக்கிறான். ஸுசித்ரன், ஸுகுமாரன், ஸத்ய திருதி, ஸுர்யதுவஜன், ரோசமானன், நீலன், சித்ராயுதன், அம்சுமான், சேகிதானன், சிரேணிமான், ஜலஸந்தன், தண்டன், விதண்டன், பௌண்ட்ர வாசுதேவன், பகதத்தன், கலிங்கன். தாம்ரலிப்தன், ருக்மாங்கதன், ருக்மரதன் முதலிய புத்திரர்களுடன் சல்லியமஹாராஜனும், பூருவம்சத்தரசர்களும், கிருஷ்ணன், பலராமன் முதலிய யாதவர்களும், பரீரதன், ப்ருகத்க்ஷத்ரன், ஜயத்ரதன், ப்ரக்ரதன், பாஹ்லீகன், சுருதாயு, உலூகன், கைதவராஜன், வத்ஸராஜன், கோஸலாதிபதி, சிசுபாலன், ஜராஸந்தன். இன்னும் கீர்த்திபெற்ற மஹாராஜர்களும் உனக்காக வந்திருக்கிறார்கள். இவர்களுள் குறிக்கப்பட்ட இந்த யந்திரத்தை அறுக்கிறவனே நீ கணவனாக மாலையிடு என்று சொன்னான்.

202-வது அத்தியாயம்.

சுயம்வர பர்வத் தொடர்ச்சி.

இவ்வாறு திரௌபதியின் நிமித்தம் அங்கேவந்து கூடின இராஜாக்கள் ஒருவரையொருவர் மிஞ்சக்கருதினர். திரௌபதி எனக்கு எனக்கு என்று வீரம் பேசிக்கொண்டார்கள். திரௌபதையின் நிமித்தம் மன்மதனல் வருத்தப்பட்டனர். சிருங்கேரிகளாயிருந்த அரசர்கள்கூடத் திரௌபதியினிமித்தம் ஒருவரையொருவர் பகைத்தார்கள். தேவர், கருடர், நாகர், யட்சர், கந்தர்வர் களும் வந்து கூடினார்கள். பாதவர்கள் கிருஷ்ணனுக்கடங்கிச் சும்மா இருந்தார்கள். பிராமணர் கூட்டத்திலிருக்கும் பாண்டவர்களோக் கிருஷ்ணன் பல ராமருக்குக் காட்டினார். மற்றவர் ஒருவரும் பாண்டவர்களே யறியாமலிருந்தார்கள். சகல வாத்தியங்களும் தேவதுந்துபிகளு முழங்கின. அக்காலத்தில் வீரர்களான அரசர்கள் தத்தம் பராக்கிரமத்தைக் காட்டத் தொடங்கினர்கள். அந்த வில்லை நாண் பூட்டமட்டும் ஒருவராலுமாகவில்லை. அதேசமயமாக வில்லையெடுத்தும் அதன் அதிர்ச்சியினல் தடுமாறி வீழுந்தார்கள். திரௌபதி யின்மேல் வைத்த ஆசையை ஒழித்திருந்தார்கள். பிறகு சிசுபாலன் வில்லின் அருகில் வந்தான். அந்த வில்லை வளைத்து நாண்பூட்ட ஒரு உளுந்தளவு இருக்கையில் வில்லினலெறியுண்டு விழுந்தான். மூழங்காலும் மடித்துக்

கொண்டது.உடனே அவன் தன் தேசம் போய்விட்டான்.அதன்பின் அரசரில் சிறந்த ஜராஸந்தன் வந்தான். அவன் வில்லை வளைத்து நாண் பூட்டக்கூடஎவு இருக்கையில் அவனைத் திருப்பி யடித்தது. அவனுக்குப் பின் சல்லியன் வந்து வில்லையெடுத்து வளைத்து நாணிழுத்துப்பூட்ட பயனளவிருக்கையில் தூக்கி யெறிந்தது. உடனே அவன் தன் சேமையை நோக்கிச் சென்றான். இந்த வில் லின் நாணைப் பூட்டுபவன் யார்? அவனைப் பார்ப்போமென்று உட்கார்ந்தான். பின் துரியோதனன் வந்தான், நாணேறிட எள்ளளவிருக்கையில் நிலைகெட்டு வீழுந்தான். அவன் வெட்கத்தோடு தன்னிடம்போயுட்கார்ந்தான். பின் கர் ணன் வில்லை வளைத்து நாணையிழுத்துப் பூட்ட மயிரிழையிருக்கையில் எறியப் பட்டு வீழுந்தான். வில்லாளிகளிற் சிறந்தவனென்று பேர்பெற்ற கர்ணன் தோல்வியடையவே மற்றவர் வில்லின் கிட்டவர அஞ்சினர்கள். இராஜர்கள் எல்லாரும் இகிலடைந்து வில்லின் கிட்டப்போகவும் கருதாமல் இருந்ததை யுணர்ந்த அர்ஜுனன்தான் நாணேறிட உத்தேசித்தான். அப்போது கண்ண பிரான் அர்ஜுனன் இரௌபதியை யடைந்துவிட்டதாகப் பலராமருடன் பேசி மகிழ்ந்தார். இராமகிருஷ்ணாகளும் தௌமியரும் தவிர மற்றவர்கள் பாண்டவர்களை அறியவில்லை.

203-வது அத்தியாயம்.

சுயம்வர பர்வத்தொடர்ச்சி.

இராஜாக்கள் அனைவரும் வில்லை வளைக்கும் எண்ணமில்லாமலிருந்த போது அர்ஜுனன் பிராமண கூட்டத்தின் மத்தியிலெழுந்து நின்றான். அர் ஜுனன் எழுந்திருந்ததைக்கண்ட பிராமணக் கூட்டங்கள் கிருஷ்ணஜினங் களை வீசியெறிந்து ஆரவாரித்தார்கள். சிலர்க்கு வருத்தமும், சிலர்க்குக் களி ப்புமுண்டாயின. கர்ணன் முதலியோரால் வளைக்கப்படாதவில்லை எவர்தாம் வளைப்பார்? ஆசையினால் சக்தியற்ற இந்தச் சிறுவன் எழுந்திருந்தான். இவ னால் முடியுமா என்றார்கள். இவன் வில்லை வளைக்காவிட்டால் பிராமணர்க ளுக்கு அவமானம் என்றார்கள் சிலர். வேறு சிலர் இவனுடைய கெம்பீரமான நடை தோற்றம் முதலியவற்றால் இவன் வளைப்பானென்று தோன்றுகிறது என்றார். சிலர் சக்தியில்லாதவன் தானுகவே போகமாட்டான். பிராமணருக்கு அசாத்தியமானது ஒன்றுமில்லை. தவத்தால் மெலிந்து வருந்திய சரீரத்தை யுடையவர்களும் பெரிய காரியத்தைச் செய்திருக்கிறார்கள். சக்தி குறைகிறதில்லை. பரசுராமர் க்ஷத்திரியர்களெல்லாரையும் வென்றார். அகஸ்தியர் கடலைக்குடித் தார் அதுபோல இவனும் வில்லைவளைக்கக் கடவன் என்ற சிலர் சொன்னார் கள். எல்லாப் பிராமணர்களும் சரியென்றார்கள். இப்படிப் பேசிக்கொண் டிருக்கையில் அர்ஜுனன் வில்லின் கிட்டவந்து மலைபோல அசைவற நின் றான். பின் திருஷ்டத்யுமனனைப்பார்த்து இந்த வில்லை பிராமணரும் வளைக்

கலாமோ என்று கேட்டான். திருஷ்டத்யுமனன் பிராமணோத்தமரே! பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் இவர்களில் யார் வளைத்தாலும் அவனுக்கு என் சகோதரி மனைவியாவாளென்றான். பின் அர்ஜுனன் வில்லைப் பிரதக்ஷணம் செய்து, ஈசுவரனைத் தியானித்துக், கிருஷ்ணனையும் மனதில் சிந்தித்தான். அந்த வில்லை யெடுத்து வளைத்து, ஒரு க்ஷணத்திற்குள் நாண் பூட்டினான்.அதன் பின்பு ஐந்து பாணங்களால் இலட்சியத்தையும் அறுத்தான். இலட்சியம் யந்திரத்தின் த்வாரமார்க்கமாகப் பூமியில் விழுந்தது. வானத்தில் தேவர்களும், பூமியில் மனிசர்களும் ஆரவாரித்தார்கள். தேவேந்திரன் அர்ஜுனன் தலையில் பூமழை பொழிந்தான். பிராமணர்கள் உத்தரீயத்தை வீசியெறிந்து மகிழ்ந்தார்கள். துருபதன் அவனைப்பார்த்துக் களித்தான். தன் சேனைகளுடன் அவனுக்குத் துணைசெய்யக் கருதினான். சத்தமுண்டானபோது யுதிஷ்டிரர் நகுல சகாதேவர்களோடு தமது இருப்பிடத்துக்குப் போனார். கிருஷ்ணை அவனைப்பார்த்து மகிழ்ந்து அவனுக்கு மாலையிட்டாள். அர்ஜுனன் கிருஷ்ணையோடுகூடத் தனதிருப்பிடம் நோக்கிப்போனான்.

204-வது அத்தியாயம்.

சுயம்வரப் பர்வத் தொடர்ச்சி.

துருபதன் தன் மகளைப் பிராமணனுக்குக் கொடுக்க நினைத்தானென்று இராஜ கூட்டங்கள் கோபமுற்றன. எல்லா அரசர்களும் ஒன்றுகூடிப் பேசினார்கள். துருபதன் அழைத்தபடியினாலே சுயம்வரத்துக்கு வந்தோம். இவன் அரசர்களை அலட்சியம் செய்து தன் மகளை ஒரு பிராமணனுக்குக் கொடுக்கத் தீர்மானித்தான். இவன் மரியாதை செய்யத்தக்கவனல்ல. ஆகையால் நாம் எல்லாரும் சேர்ந்து இவனைக் கொன்று விடுவோம். சுயம்வரத்தில் பிராமணர் வர அருகரல்லர்.க்ஷத்திரியர்களுக்குத்தான் சுயம்வரம் என்பது ஏற்பட்டது. இந்தப் பெண் க்ஷத்திரியர்களை விரும்பாவிட்டால் அவளை நெருப்பிலிட்டு எரித்து விடுவோம், பிராமணனைக் கொல்லக்கூடாது. எனென்றால் நமது இராஜ்யம் வாழ்வு எல்லாம் பிராமணர்களுக்கு உரியவையே. இனி மேலும் இராஜர்கள் இப்படிப்பட்ட எண்ணங்கொண்டு க்ஷத்திரியர்களை அவமதிக்காதபடி செய்யவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டு இராஜ வீரர்கள் எல்லாரும் அவனை யெதிர்த்தார்கள். அதைக் கண்டு துருபதன் பயந்து பிராமணர்களிடம் சரணம் புகுந்தான். மதங்கொண்ட யானை போல்போல இறுமாந்திருக்கும் பீமார்ஜுனர்கள் அந்த அரசக்கூட்டத்தை யெதிர்த்தார்கள். அரசர்கள் அவ்விருவரையும் கொல்ல உத்தேசித்து எதிர்த்தார்கள். பீமன் ஒரு பெரியமரத்தை வேரோடு பிடுங்கி இலைகளை உதறி உதிர்த்தான். அதை யேந்திக்கொண்டு எமனைப்போல அர்ஜுனனுக்குப் பக்கத்தில் நின்று

கொண்டிருந்தான். அர்ஜுனன் இராஜகூட்டத்தை மதியாமல் வில்லை யேந்தி யெதிர்த்து நின்றான். அதைக் கண்டு கண்ணபிரான் பலராமருக்குச் சொல்லுகிறார்.

சிங்கத்தைப்போல இறுமாந்து நின்ற பனை உயரமுள்ள வில்லை இழுத்து வளைக்கிறானே இவன்தான் அர்ஜுனன். அவன் பக்கத்தில் வீருட்சத்தை யேந்திக்கொண்டு நிற்பவன் பீமன். இதில் சந்தேகமே யில்லை. அதோ நிற்கிறவர் தர்மபுத்திரர். மற்றிருவரும் நகுல சகாதேவர்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் அரக்கு மாளிகையில் எரிக்கப்படவில்லை என்று நான் கேள்விப்பட்டேனென்றார். அப்படியானால் எனக்கு மஹா சந்தோஷம் என்று சொன்னார்.

205-வது அத்தியாயம்.

சுயம்வர பர்வத் தொடர்ச்சி.

அப்போது அங்குள்ள பிராமணர்கள், நீங்கள் அஞ்சவேண்டியதில்லை, நாங்கள் இந்த க்ஷத்திரியர்களை அழித்துவிடுகிறோமென்று திருஷ்டத்யும்னர்களை உதறிக்கொண்டு இளம்பிள்ளைகள். அர்ஜுனன் சிரித்துக்கொண்டு நீங்கள் யுத்தம் செய்யவேண்டாம். என் பக்கத்தில் நின்றுகொண்டு வேடிக்கை பாருங்கள். நான் அம்புகளை வாரியிறைத்து அவர்களை அடக்குவேனென்றான். பின் கன்னியாசுல்கமாகத் தனக்குக் கிடைத்த வில்லை வளைத்துக்கொண்டு அசையாமல் நின்றான். அரசர்கள் பிராமணர்களைத் தூற்றினார்கள். கர்ணன் அர்ஜுனனை யெதிர்த்தான். சல்லியன் பீமனை யெதிர்த்தான். அர்ஜுனன் தன்னை யெதிர்த்த கர்ணனை முதுகுகாட்டி யோடும்படிகூரிய அம்புகளால் அடித்தான். கர்ணன் பிரமைகொண்டு மதிமயங்கித் தைரியம் விடாமல் மீண்டும் அவனை யெதிர்த்தான். அர்ஜுனன் எய்த அம்புகளைத் தடுத்தான். அவனுடைய சேனைகள் சந்தோஷக் கூச்சலிட்டன, பின் கர்ணன் அர்ஜுனனைப் பார்த்துப் பிராமணனேதானா? உன்னுடைய கரசாலவேகத்தால் சந்தோஷமடைந்தேன். நீ யந்திரமனே? அல்லது திருமாலோ? அல்லது பரசுராமனோ? உருவதை மறைத்துக்கொண்டு யுத்தஞ்செய்கிறாய். அர்ஜுனனையும் இந்திரனையுந்தவிர என்னெதிர்க்கும்மூண்பிள்ளைகள் உலகத்திலெங்குமில்லை. அர்ஜுனன் தன் சகோதரர் தாயாரோடு மூன்றமே அரக்குமாளிகையிலே யெரிந்துபோனான். அர்ஜுனன், நான் பரசுராமனும் இந்திரனுமல்ல. தனுர்வேதம்வல்ல பிராமணன் உன்னை வெல்வதற்குச் சித்தமாக இருக்கிறேன். நீ அசையாமல் நில்லு. அல்லது தோற்றேனென்றாவது சொல்லிவிட்டு சுகமாகப்போ என்றான். இப்படிச் சொல்லிக்கொண்டே கர்ணனுடைய வில்லை முறித்தான். கர்ணன் வேறு வில்லையெடுத்து அம்புதொடுத்தான்.

அர்ஜுனன் அந்த வில்லையும் அம்புகளோடு முறித்து அவனையும் கோக அடித்தான், கர்ணன் அடி பொறுக்கமுடியாமல ஓட்டம்பிடித்தான். சற்று நேரத்துக்குப் பின் மறுபடியும் சண்டைக்குவந்து அர்ஜுனன்மேல் அம்புமாரி பெய்தான். அர்ஜுனன் அவற்றை விலகி மறுபடியும் அவன் கருவம் அடங்கும்படி அடித்தான். கர்ணன் நிலைகொள்ளாமல் ஓடினான்.

பீமனும் சல்லியனும் எதிர்த்து மல்யுத்தஞ்செய்தார்கள். அவர்கள் ஒருவரையொருவர் அடித்தும் குத்தியும் உதைத்தும் சண்டை செய்தார்கள். அவர்கள் அடித்துக்கொண்ட அடியினால் கல்லோடு கல்லை மோதுவது போன்ற கடினசப்தமுண்டாயிற்று. பீமன் சல்லியனைப்பிடித்துத் தூக்கித் திடுமென்று கீழேபோட்டான். அதைகண்ட பிராமணர்கள் சிரித்தார்கள். கீழே விழுந்துகிடந்த சல்லியனைப் பீமன் கொல்லாமல் விட்டதைப்பற்றி எல்லாரும் ஆசசரியப்பட்டார்கள். பிறகு பீமன் ஒரு பெரிய மரத்தைப் பிடுங்கச் சென்றான். தருமர் ஜாடைகாட்டித் தடுத்தார். அதனால் தடைபட்டு நின்றான். துரியோதனனைத் தருமர் அம்புகளாலடித்தார். அவன் ஓடிப்போனான். துச்சாதனன் சகாதேவர்களால் அபஜயப்பட்டு ஓடினான். பிறகு கௌரவர்கள் அந்தப் பிராமணர்களோடு யுத்தம் செய்யவேண்டாம் நாம் நமது நகரத்துக்குப்போவோம் என்றார்கள. பீமார்ஜுனர்கள் திரௌபதியை அழைத்துக் கொண்டு சென்றார்கள். அரசர்கள் ட்டங்கூட்டமாகக்கூடி இந்தப்பிராமணர்கள் யார்? கர்ணனும், சல்லியனும், துரியோதனனையும் வெல்லத் தக்க இவர்களே யாரென்று கொளரவேண்டுமென்று பேசிக்கொண்டார்கள். பாண்டவர்கள் ஒன்றும் சொல்லாமலிருந்தார்கள். அப்போது கிருஷ்ணபகவான் அரசர்களே அழைத்துத் திரௌபதையை அவர்கள் தர்மமாக அடைந்தார்கள். யுத்தம் செய்வது தகாதென்று சமாதானம்செய்தார். அவர்கள் சுயம்வரமண்டபத்தில் பிராமணர்கள் மேன்மையடைந்தார்கள். பாஞ்சாலி பிராமணனுக்கு மாலையிட்டாள் என்று கூறிச்சென்றார்கள். பாண்டவர்கள் பாஞ்சாலியோடு தங்கள் கிருகம்நோக்கிச் சென்றார்கள். பிட்சாகாலமாகியும் தன் புத்திரர்கள் வராமையால் அவர்களுக்கு ஏதேர அபாயம் நேரிட்டதென்று குந்திவருந்தினாள். அப்போது அர்ஜுனன் பாஞ்சாலியுடன் வீடு வந்து சேர்ந்தான்.

206-வது அத்தியாயம்.

சுயம்வர பர்வத் தொடர்ச்சி.

சாய்ங்கால வேளையில் பாண்டவர்கள் வீடு வந்து சேர்ந்து குந்தியிடம் பிட்சை கொண்டுவந்தோ மென்று, திரௌபதையைக் குறித்துச் சொன்னார்கள். குந்தி அதைப் பாராமல் ஐவரும் புசியுங்கள் என்று சொன்னாள். பிறகு

கிருஷ்ணையைப் பார்த்து நான் மோசம் போனேன் என்று நினைத்து வருந்தினாள். பிறகு குந்தி கிருஷ்ணை கையைப் பிடித்தழைத்துக்கொண்டு யுதிஷ்டிரரிடம் போய்ச் சொல்லுகிறாள்.

இராஜாவே! உன் தம்பிகள் இந்தப் பெண்ணைக் கொண்டுவந்து பிட்சை கொண்டுவந்தோமென்றார்கள், நான் வழக்கம்போல் ஐவரும் புசியுங்கள் என்று கூறிவிட்டேன் இதற்கென்ன செய்வேனென்றாள், யுதிஷ்டிரர் அவளைச் சமாதானப்படுத்தி, அர்ஜுனனைப் பார்த்து அர்ஜுனா! பாஞ்சாலியை நீ ஜயித்து வந்தாய் ஆகையால் நீ அவளை மணம் புரிந்துகொள் என்றார். அவன் அண்ணா! அது மஹாபாபம். எனக்குப் பெரியவர்களாகிய நீங்களிருவரும் விவாகமில்லாமலிருக்கையில் நான் மணம் புரிந்துகொள்வது தகுதியல்ல. நாங்களும் இவளும் உமக்கு அடிமை, உமது இஷ்டம்போல கட்டளையிடும் அப்படியே நடந்து கொள்வோமென்றான். தர்மபுத்திரர் ஐவரும்அவள்மேல் காதல்கொண்டிருப்பதை யுணர்ந்து பாஞ்சாலி ஐவருக்கும் பாரியை யாவாளென்று வியாசர் கூறினார் என்றார்.

ஜனமேஜயன் வைசம்பாயனரைப் பார்த்து, கிருஷ்ணன் அந்த வில்லை ஏன் வளைக்கவில்லை? அவருக்குச் சக்தியில்லையா? சக்தியிருந்தும் என் சும்மா இருந்தாரென்று கேட்க வைசம்பாயனர் சொல்லுகிறார். பாண்டவர்கள் அரக்கு மாளிகையில் சாகாமல் தப்பித்தது கொண்டார்கள் என்று கேள்விப் பட்டிருந்தார். ஆனால் அவர்கள் எங்கிருக்கிறார்களென்று தெரியாது அவர்களைக் கண்டு பிடிக்கும் முயற்சியிலிருந்தார், இந்தச் சுயம்வரபண்டபத்தில் பாண்டவர்களும் வந்திருப்பார்கள் என்றும். மற்ற இராஜாக்களால் இந்த வில்லை வளைக்க முடியாதென்றும், அர்ஜுனன் ஒருவன்தான் வளைப்பானென்றும் அவர் நிச்சயம் செய்து கொண்டார். அதைக் கண்டறியும் பொருட்டாகவே அவர் வில்லை வளைக்க நினைக்கவேயில்லை. நிற்க, பாண்டவர்கள் யுதிஷ்டிரர் சொன்னதைக் கேட்டு அப்படியே செய்ய நிச்சயித்திருந்தார்கள். கிருஷ்ணபகவான் பாண்டவர்களைப் பார்க்கும்படி குயவன் வீட்டுக்கு வந்தார். அங்கே யுதிஷ்டிரரையும், அவரைச் சூழ விருக்கும் மற்றவரையும் பலராமருடன் வந்த கிருஷ்ணன் கண்டார். கண்ணன் தர்ம புத்திரரை வணங்கி நான் கிருஷ்ணன் என்று சொன்னார். பின் குந்தியையும் நமஸ்கரித்தார். யுதிஷ்டிரர் கண்ணனை நோக்கிக் கிருஷ்ணா! நீர் மறைந்து வசிக்கும் எங்களை யெப்படிக் கண்டுகொண்டீர் என்று கேட்டார். கிருஷ்ணன் அகவினி மறைந்திருந்தாலும் அறியப்படும். உங்களைவிட இந்த வில்லை வளைக்கத்தக்கவன் எவன் இருக்கிறான் என்றார். பின், நல்ல வேளை. நீங்கள் அரக்கு மாளிகையில் அழியாமல் தப்பினீர்களே என்றார். துரியோதனன், அவனுடைய மந்திரிகளினுடைய எண்ணங்கள் நிறைவேறவேயில்லை என்றார். நீங்களிருப்பதை அரசர் அறியாமலிருப்பதும் ஒருவருக்குத் தெரியக்கூடாது. ஆகையால் நாங்களும்

வீடு போகிறேம் என்று கூறி விடை பெற்றுக்கொண்டு வீடு போயச் சேர்ந் தார்.

207-வது அத்தியாயம்.

சுயம்வர பர்வத் தொடர்ச்சி.

பாண்டவர்கள் குயவன் வீட்டுக்குப் போகும்போது திருஷ்டத்யுமனன் அவர்களுக்குத் தெரியாதபடி அவர்களைத் தொடர்ந்து போனான். அவன் தன்னை ஒருவரும் அறியாதபடி ஒரு பக்கத்தில் மறைந்து பார்த்துக்கொண்டி ருந்தான். பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் இந்த நால்வரும் பிக்ஷை யெடுத்துக்கொண்டு வந்து யுதிஷ்டிரர் முன்னிலையில் வைத்தார்கள். குந்தி திரௌபதியைப் பார்த்து அன்புள்ள மருமகளே! அதில் பலியையும் பிராமணருக்கும் கொடு.அனனத்தை விரும்புகிறவர்களுக்கும், நம்மை அடித்தி ருப்பவர்களுக்கும் கொடு. மிச்சத்தை இரண்டாகப் பகுத்து ஒரு பாகத்தை பீமனுக்கு இடு. மற்றதை நம் அறுவருக்கும் பகுத்து இடு என்றாள். திரௌப தியும் மகிழ்ச்சியோடு செய்தாள். எல்லாரும் புஜித்தார்கள். சகாதேவன் தர்ப்பையினால் படுக்கைபோட பின்பு அதன்மேல் கிருஷ்ணஜினங்களைப் போ ட்டுக்கொண்டு, தென் திசையில் தலையை வைத்துக்கொண்டு படுத்தார்கள். தலை மாட்டில் குந்தி உட்கார்ந்திருந்தாள். கால் புறத்தில் திரௌபதை ,தர்ப் பையின்மேல் படுத்தாள். அதனால அவளுக்கு மனவருத்தமுமில்லை. பாண் டவர்களைக் குறைவாக நினைக்கவும் இல்லை. பாண்டவர்கள் யானை குதிரை கள், ஆயுதங்கள் முதலியவற்றைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். இவை களைப் பார்த்துக்கொண்டிருந்த திருஷ்டத்யும்னன் விரைந்து சென்று துருபத னுக்குச் சொன்னான். துருபதன் திருஷ்டத்யுமனனைப் பார்த்து, சேற்றுக் கால் நமது தலையிற் படாமலிருக்கிறதா? புஷ்பமாலை மயானத்தில் விழாம லிருக்கிறதா? அந்த மனிதன் பிராமணன் தானே? அல்லது க்ஷத்திரியனே? என் மனதுக்குச் சந்தோஷ மூண்டாகுமா? பந்தயத்தை ஜயித்துப் பெண் ணைக் கைப்பற்றினவன் யார்? பாண்டவர்கள் பிழைத்திருக்கிறார்களா? அர் ஜுனன் இலட்சியத்தை அடித்தானே? உண்மையை எனக்குச் சொல் என்று கேட்டான்

208-வது அத்தியாயம்.

வைவாஹிக பர்வம்.

அது கேட்ட திருஷ்டத்யும்னன் தன் பிதாவுக்குச் சொல்லுகிறான். தே வனுக்குச் சமானமாய் நின்று வில்லை வளைத்து இலட்சியத்தை யறுத்த வீரனை

பிராமணர்கள் சூழ்ந்துகொண்டு சென்றார்கள். அவன் அசுரர்களை ஜயித்த இந்திரன்போலப் போனான். கிருஷ்ணை அவன் பின்னாலே மகிழ்ச்சியோடு கவலையின்றிச் சென்றாள். அந்த வீரன் கர்ணனை ஜயித்து அலட்சியமாய் அடித்து ஓட்டினான். அவனே அர்ஜுனன் என்றுதான் நான் நினைக்கிறேன். அவன் பக்கத்தில் நின்றுகொண்டு மத்தைப் பிடுங்கிகொண்டு ராஜ கூட்டத்தை யமபுரத்துக்கனுப்பினவன் பீமனை இருக்கவேண்டும். அவ்விரு வரும் இராஜ கூட்டங்களோடு துரத்தி யடித்து ஒருவராலும் கண்ணெடுத்துப் பார்க்க முடியாதபடி சூரியனைப்போல பிரகாசித்துக்கொண்டு, கிருஷ்ணையோடு குயவனுடைய வேலைசாலைக்குட் புகுந்தார்கள். அங்கே அக்கினிபோல ஜ்வலிக்கின்ற மூன்று புருஷர்களோடு உட்கார்ந்திருந்தவள் தான் குந்தியென்று நினைக்கிறேன். அவளிடம் கிருஷ்ணையை ஒப்புவித்தார்கள். பின் பிக்ஷை யெடுக்கச் சென்றார்கள். அவர்கள் கொண்டுவந்த பிக்ஷையைக் கிருஷ்ணை வாங்கிக்கொண்டு பலி கொடுத்துப்பிராமணாகளுக்கும் கொடுத்துப் பின் எல்லாருக்கும்இட்டதானும் புசித்தாள். அவர்கள் எல்லாரும் படுத்தபின் கிருஷ்ணை அவர்களுடைய கால்மாட்டில் படுத்தாள். அவர்கள் வெகு கம்பீரமாகப் பலவித சம்பாஷணை செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் வாயிலிருந்து பிராமணர், வைசியர், சூத்திரர்களுக்குரிய பேச்சுவரவேயில்லை. அவர்கள் யுத்தத்தைப் பற்றியே பேசினார்கள். அதனாலே அவர்கள் க்ஷத்திரியர்களாகவே யிருக்க வேண்டும். நம்முடைய கருத்து நிறைவேறி விட்டதென்றே நினைக்கிறேன். ஸந்தேகமில்லை. அவர்களுடைய குணம், செய்கை, பேச்சு முதலியவற்றினால் மாறு ரூபம்கொண்டு மறைந்து வசிக்கிற பாண்டவர்கள் என்பது தான் நிச்சயம் என்றான். துருபதன் மகிழ்ந்து புரோகிதரை அழைத்து அவரை யவர்களிடம் போய் நீங்கள் பாண்டவர்களா? உங்களை நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டு வரும்படி அனுப்பினான். புரோகிதர் உடனே அவர்களிடம் போய்த் துருபதன் சொன்னவற்றை யெல்லாம் சொல்லுகிறான்,

வரம்பெறத் தக்கவர்களே! வரங்களைத் தரதக்க பாஞ்சால ராஜன் உங்களை தெரிந்துகொள்ள இச்சிக்கிறான். இலட்சியத்தை அடித்த இத்தப் புருஷனைப் பார்த்த பின் அரசனுக் குண்டான ஆனந்தத்துக்கு அளவில்லை. உங்கள் வம்சபரம்பரையைச் சொல்லுங்கள். சத்துருக்களின் சிரசில்பாதத்தை வையுங்கள். எங்களை மகிழ்ச்சி செய்யுங்கள். பாண்டு மஹாராஜா துருபத மஹாராஜனுக்கு உயிர்த்தோழர். அந்தப் பாண்டு மஹாராஜனுக்குக் கிருஷ்ணை மருமகள் ஆவாளென்கிற எண்ணமிருக்கிறது. அர்ஜுனன் இவளை மணஞ்செய்யப் பெறுவானு? என்கிற எண்ணம் துருபதனுக்கு மனதை விட்டு நீங்காமலிருக்கிறது. அது இப்போது நிறைவேறி யிருந்தால் அது எனது பாக்கியம். எனக்குக் கீர்த்தி; என்னுடைய புண்ணியம் என்று துருபதராஜன் சொல்லுகிறார் என்று கூறிப் புரோகிதன் மரியாதையோடு இருந்தார். அதைக் கேட்ட யுதிஷ்டிரர் பீமனை நோக்கிச் சொல்லுகிறார். இவர்

துருபத மஹாராஜாவின் புரோஹிதர். இவருக்கு அக்கிய பாத்தியாதிகள் கொடு. விசேஷமாகப் பூசைசெய் என்றார். பீமன் உடனே செய்து முடித்தான். புரோஹிதர் அந்தப் பூசையைப் பெற்றுக்கொண்டு சுகமாய் உட்கார்ந்த பிறகு அவரைப் பார்த்து யுதிஷ்டிரர் சொல்லுகிறார்,

பாஞ்சால ராஜன் தர்மத்தைப் பார்த்துப் பெண் கொடுத்தார். மனவிருப்பப்படி கொடுக்கவில்லை. பெண்ணுக்குப் பந்தயம் நியமித்திருந்தார், அவள் அதையே அனுசரித்தாள். அந்தப் பந்தயத்தில் குலகோத்திர விவஸ்தை ஏற்படுத்தவில்லை, வில்லை வளைத்து நாணேற்றி இலட்சியத்தை யடிப்பதற்காகப் பெண் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. இராஜ கூட்டத்துக்கு நடுவில் இந்த வீரன் பந்தயத்தை யிறைவேற்றிப் பெண்ணைக் கைப்பற்றினான். இப்படி யிருக்கையில் அரசன் பின் மனஸ்தாபப் படுவது நியாயமல்ல. துருபத மஹாராஜாவின் எண்ணமும் நிறைவேறும் பிராமணரே! அந்த வில் அற்ப பலசாலியால வளைக்க முடியாது. அஸ்திர தேர்ச்சி யில்லாத ஈன ஜாதியாளல் இலட்சியம் அடிக்கவும முடியாது. அதையால் பாஞ்சால ராஜன் இனிப் பெண்ணுக்காக வருத்தப்படுவது சரியல்ல என்றார். இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் ஒரு மனிதன் வந்து போஜனம் சித்தமாயிருக்கிறது என்று சொல்ல வந்தான்.

209-வது அத்தியாயம்.

வைவாஹிக பர்வத தொடர்ச்சி.

வந்தவன் துருபத மஹாராஜாவினல் அன்போடு போஜனம் சித்தம் செய்யப்பட்டுள்ளது. குதிரை வண்டிகள் வந்திருக்கின்றன. கிருஷ்ணையோடு அதி லேறிக்கொண்டு சீக்கிரம் அரண்மனைக்கு வாருங்கள். தாமதம் செய்யவேண்டாம் என்றான். அப்படியே பாண்டவர்கள் அந்த இரதங்களிலேறிக்கொண்டு சென்றார்கள். கிருஷ்ணையும் குந்தியும் ஒரு தேரிலேறிப் போனார்கள். ஸ்திரீகள் சந்தன புஷ்பங்களும் ஆடையாபரணங்களும் தந்தார்கள். வாத்தியங்கள் முழங்கின. அநேக பிராமணர்கள் சூழ்ந்து சென்றார்கள். மங்கள தீபங்கள் ஏந்தி வரப்பட்டன. இந்த வைபவத்துடன் பாண்டவர்கள் சென்றார்கள். முன்னலேயே புரோஹிதர் சென்று யுதிஷ்டிரர் சொன்னதையெல்லாம் அரசனுக்குச் சொன்னார். அதைக்கேட்ட பின் பாண்டவர்களைத் தெரிந்துகொள்வதற்காகவே துருபதன் அநேகம் பொருள்களைச் சேகரித்து வைத்தான். துருபன், கனிகள், பூமாலைகள், அழகிய கவசங்கள், தோல்கள் ஆசனங்கள், பசுக்கள், கயிறுகள், வீதைகள், முதலியவும், சிற்பத்துக்குரிய பனவும், விளையாட்டிற்குரியவைகளெல்லாவற்றையும் சேர்த்து வைத்தான். பலவகையான ஆபரணங்களும் சேர்த்து வைக்கப்பட்டன. குந்தி கிருஷ்ணையை அழைத்துக் கொண்டு அந்தப்புரம் போய்ச் சேர்ந்தாள். அரண்மனை ஸ்திரீகள் குந்திதேவி

தகுந்த மரியாதை செய்து அழைத்தார்கள். பாண்டவர்களைப் பார்த்து அரசன், மந்திரி, இராஜ புத்திரர்கள், மற்றுமுள்ள ஜனங்கள் எல்லாரும் மகிழ்ந்தார்கள். பாண்டவர்கள் அங்கிருந்த ஆசனங்களில் கூச்சப் படாமல் வரிசைக் கிரமமாக உட்கார்ந்தார்கள். பலவகையான போஜனமும் போஜனத்துக்குரிய பதார்த்தங்களும பரிமாறப்பட்டன போஜனமான பின் அவர்கள் எல்லாவற்றையுங் கடந்து, யுத்த சாமான்களிருக்கும் இடத்துக்குப் போனார்கள். பாஞ்சால ராஜன் முதலானவர்கள் அவர்களைப் பாண்டவர்களென்றே நிர்மானித்தார்கள்.

210-வது அத்தியாயம்.

வைவாஹிக பர்வத் தொடர்ச்சி.

அதன் பின் பாஞ்சால ராஜன் யுதிஷ்டிரரை அழைத்து, அவருக்குப் பிராமணருக்குரிய மரியாதைசெய்து பூஜித்துச்சொல்லுகிறான் நாங்கள் உங்களைப் பிராமணரென்று நினைக்கிறதா? க்ஷத்திரியரென்று எண்ணுகிறதா? வைசியரென்று கருதுகிறதா? சூத்திர ரென்று கொள்ளுகிறதா? அல்லது மாயாரூபங்கொண்டு பூமியில் சஞ்சரிக்கும் சித்தர்களென்று பாவிக்கிறதா? என்ன நினைக்கிறதென்று தெரியவில்லை. திரௌபதியின் சுயம்வரம் காணத் தேவர்களும் வந்திருக்கின்றனர். எனக்கு இ விஷயத்தில் பெரிய சந்தேகமிருக்கிறது. என் சந்தேகத்தை நிவர்த்திசெயும். ராஜாக்களிடத்தில் சத்தியந்தான் வீளங்கும். யாகஞ் செய்வது மூதலியபோலப் பொய் சொல்லாமலிருப்பதும் பெரிய தருமம். பொய் சொல்லவே கூடாது தேவதைக்கு ஒப்பான வரே! என் அதிருஷ்டம் நல்லதாயிருக்குமா? வஞ்சனையில்லாமல் உண்மையைச் சொல்லும். விவாகத்துக்கு எந்தனஞ் செய்யவேண்டுமென்னுரன்.

யுதிஷ்டிரர், பாஞ்சால தேசத்தரசனே! உமக்குச் சந்தேகம் வேண்டாம். சந்தோஷமுண்டாகக் கடவது. உமது தோரிக்கை நிறைவேறிற்று. சந்தேகமில்லை. நாங்கள் க்ஷத்திரியர்கள் தான். மஹாத்மாவான பாண்டவின் புத்திரர்கள். நான் குந்தியின் ஜ்ஷ்டகுமாரன் இவ்விருவரும் மாத்ரு னர்கள். இவர்கள் இரட்டையர்கள். திருஷ்ணையினிட மிருப்பவள் குந்தியென்று தெரிந்து கொள்ளும். சந்தேகம்வேண்டாம். திருஷ்ணை க்ஷத்திரிய குலத்திலேயே புகுந்தாள். நீர் எங்களுக்கு ஆசாரியருப்பவராதலால் உண்மை சொல்லுனென்றார். உடனே துருபதனுக்குச் சந்தோஷ முண்டாய் ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று. அவனுக்குப் பேச வாய் எழவில்லை. நீங்கள் எப்படி அரக்கு மாளிகையில் தப்பித்துக் கொண்டீர்களென்று கேட்டான். யுதிஷ்டிரர் அவனுக்கு அதை விரிவாகச் சொன்னர். அதைக்கேட்ட துருபதன் திருதராஷ்டரனே இகழ்ந்து அலட்சியம் செய்தான். யுதிஷ்டிரருக்குத்

தேறுதல் சொன்னான். இராஜ்ய உபகார விஷயத்திலும் வாக்கு தத்தஞ்செய தான். பிறகு ஒரு பெரிய மாளிகையில் குந்தி, திருஷ்ணையோடி பாண்டவர் களுள் இருபிரிவினர்களுஞ் செய்தார்கள். அங்கே அவர்கள் சுகமாக வாழ்ந்தனர். பிறகு திருபதன் யுதிஷ்டிரரை நோக்கி மேன்மையுள்ளவரே! இன்றைக்குச் சுபதினம். அர்ஜுனன் பாணிக்கிரகணம் செய்துகொள்ளக் கடவன் என்றார். யுதிஷ்டிரர் மஹாராஜாவே! எனக்கும் விவாகமாகவில்லை. நானும் பாணிகிரகணம் செய்ய உத்தரவு தாரும் என்றார். திருபதன் நீராவது, உமக்குப் பிரியமான வெறுக்காவது பாணிக்கிரகணம் செய்வியும் என்று சொன்னான். யுதிஷ்டிரர் திரௌபதை எங்கள் ஐவருக்கும் பத்தினியாயிருக்கவேண்டும். என் தாயாரால் இப்படி அநுக்கிரகிக்கப் பட்டது என்றார். எங்களில் ஒருவருக்கும் விவாகமாகவில்லை. கிடைத்ததைச் சோத்து அனுபவிப்பதென்பது எங்களுடைய கட்டுப்பாடு. மஹாராஜாவே! எங்கள் உடன்பாட்டை காக்கள் விடமாட்டோம்" என்றார். நாங்கள் ஐவரும் அவளை முறையாகப் பாணிகிரகணஞ் செய்து கொள்வோ மென்றார். திருபதன், தர்ம புத்திரரே! ஒருவருக்கு அநேக மனைவிகளிருக்கலாம், இது சாஸ்திர சம்மதம். ஒருத்திக்குப் பல கணவர்களிருப்பதைக் கேள்விப்பட்டது கூட இல்லை. நீர் சொல்வது வேதசாஸ்திரங்களுக்கும் உலகத்திற்காவது சம்மதமில்லை. விதி தாமாகவே இருக்கின்றது. தர்மம் தெரிந்த உத்தமராகிய நீர் அதர்மத்தைச் செய்யக்கூடாது மாட்டீர். அப்படியிருக்க இவ்விஷயத்தில் உமக்கேன் விபரீத புத்தி வந்தது? என்றான். யுதிஷ்டிரர் மஹாராஜாவே! தாமம வெகு நுட்பமானது, அதன் வழியை நாம் அறியோம். முன்னோர்கள் பரம்பரையாக நடத்திக காட்டினதை நாம் அனுசரிக்கிறோம். என வாயில் பொய்யும் தவறும் வாரா. என் தாயாரும் இப்படிதான சொல்லுகிறள். என் கருத்தும் இதுதான், உரு திரமூர்த்தியால் அனுப்பப்பட்ட வியாச மஹரிஷியும் இப்படித்தான் சொன்னர். இது நிசசய மாகவே தர்மதான் என்றார். திருபதன் யுதிஷ்டிரரே! நீரும் குந்தியும் திருஷ்டத்யும்னனும் யோசித்து இப்படிச் செய்யவேண்டுமென்பதை எனக்குத் தெரிவியுங்கள் காலோக்கே நடத்துவோமென்று சொன்னான். பின் எல்லாரும் கூடிப் பேசினார்கள். அப்போது வியாசர் அங்கே தற்செயலாக வந்து சேர்ந்தார்.

211-வது அத்தியாயம்.

வைவாஹிக பர்வத் தொடர்ச்சி.

எல்லாரும் வியாசனை யெதிர்கொண்டழைத்து வந்து வந்தனஞ் செயது பூஜித்தார்கள். பூஜையை வியாசர் ஏற்றுக்கொண்டார். பிறகு ஒரு ஆசனத்தின் மேலுட்காந்தார். ஒவ்வொருகொருவர் யோக க்ஷேமங்களை விசாரித்துச்

சந்தோஷ மடைந்தார்கள். பிறகு துருபதன் வியாசரை நோக்கி ஒருத்திக்குப் பல புருஷர்களிருப்பது தருமமா? உள்ளபடி சொல்லவேண்டு மென்றார். லோகத்திற்கும் வேதத்திற்கும் இந்த விஷயத்தில் உங்களுடைய அபிப்பிராயங்களை சொல்லுங்கள் என்று கேட்டார். துருபதன் இது அதர்மமென்பது என் கருத்து. உலகம் வேதம் இரண்டுக்கும் விரோதமானது ஒருத்தி பலருக்குப் பத்தினியாவது எங்குமில்லை. மூன்னோர்களால் அனுஷ்டிக்கப்படவும் காணேம். தெரிந்தவர்கள் எவ்வகையிலும் அதர்மம் செய்வது கூடாது. ஆதலால் இந்த விவாகத்தை நான் ஸ்சயிக்க விரும்பவில்லை. இந்த ஆசாரம் எக்காலத்தும் சந்தேகிக்கத் தக்கதாகவே தோன்றுகிறது என்று சொன்னபின் திருஷ்டத்யுமனன் பிராமணோத்தமரே! சதாசாரம் வழுவாத தம்பி தமையன் தாரத்தொடு கலக்கலாமா? தர்மமோ வெகு நுட்பமானது. நாங்கள் அறிந்துகொள்ள முடியாததாயிருக்கின்றது. ஆதலால் இது தர்மம் அல்லது அதர்மம் என்று எங்களால் அறிந்து சொல்ல முடியாது. ஐவருக்கும் கிருஷ்ணை மனைவியாவது எங்களுக்குச் சம்மதமே யில்லை என்றான். யுதிஷ்டிரர் நான் பொய் சொல்வதே கிடையாது. என் வாயும் பொய்யறியாது. என் புத்தி அதர்மத்தில் செல்லாது, என் மனமோ இந்த விஷயத்தில் செல்லுகிறது. தர்மத்திற் சிறந்த ஐம்லேசப்த ரிஷிகளுக்கும் மனைவியாயிருந்தாளென்று புராணம் கூறுகின்றது. வார்க்ஷி என்பவள் பிரசேதஸ் என்று ஒரே பெயர் கொண்ட பத்துச் சகோதர்களுக்கும் மனைவியாயிருந்தாள். பெரியோருடைய சொல் தர்ம விரோதமாகாதென்று கூறுவார்கள். பெரியோரெல்லாரிலும் சிறந்த மாசாவானவன் பிகூஷைப்போல ஐவரும் புசியுங்கள் என்று கூறினாள். ஆகையால் இது சிறந்த தருமமென்றே நான் நினைக்கிறேனென்றான். குந்தி, தர்மக் தவறாத யுதிஷ்டிரன் சொல்லுகிறபடிதான் நடக்கத்து சகோதர்களுடன் சேர்ந்து புஜியென்று அர்ஜுனனுக்குச் சொன்னேன். நான் பொய் சொல்லப்பயப்படுவேன். பொய் சொல்லுகிற பாபத்தினின்று எப்படித் தப்பித்துக் கொள்வேன் என்றாள்.

வியாசர் குந்தியை நோக்கி, மருமகளே! நீ பொய்யிலிருந்து விலகிக்கொள்வாய் என்று சொல்லிப் பின் பாஞ்சாலனை நோக்கி அரசனே! இது எக்காலத்தும் எல்லாரிடத்திலும் உள்ள தர்மந்தான். சாஸ்திர சம்மதம் தான். யுதிஷ்டிரர் சொல்லுகிறபடி இது தர்மமேயாமென்று சொல்லி, உடனே எழுந்திருந்து பாஞ்சாலன் கையைப் பிடித்து ஓர் அறையினுள் அழைத்துக்கொண்டு போனார் அங்கே போய் பல பேருக்கு ஒரு மனைவி யிருக்கலாம் என்பதையும், கிருஷ்ணை பாண்டவர்களுள் ஐவருக்கும் மனைவியாம்படி பெற்ற வரத்தையும் கூறத் தொடங்கினார்.

212-வது அத்தியாயம்.

வைவாஹிக பர்வத் தொடர்ச்சி.

அரசனே! உன் பெண் ஐந்து பேருக்கு மனைவியாயிருக்கிறதைப் பற்றி நீ மனஸ்தாபப் படவேண்டாம். யாகம் பண்ணும்போதே இவளுடைய தாயார் என் பெண் ஐந்துபேருக்கு மனைவியாயிருக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டாள். தர்மந்தவறாத யாஜோப யாஜர்கள் இவளுக்கு ஐந்து பதிகளை அமைத்தனர். அதனாலேதான் திருஷ்ணையைப் பாண்டவர் ஐவரும் விரும்புகிறார்கள். மற்றொரு காரணம் சொல்லுகிறேன். இவள் பூர்வ ஜன்மத்தில் நளாயினி. இவள் மௌத்கல்லியரென்ற ஒரு ரிஷிக்குப் பத்தினியானாள். அவர் ஏழை. குஷ்டரோகி அவருக்குத் தவறாமல் பணிவிடை செய்து கொண்டிருந்தாள். அவர் கொடுமையும் நிலையற்றதுமான மனமுள்ளவர். வாயில் துர்க்கந்தம் வீசிக்கொண்டிருக்கும். விகாரரூப மூடையவர். ஒருநாள் அவர் போஜனஞ்செய்கையில் அவருடைய கட்டை விரல் இற்று உண் கலத்தில் விழுந்தது. அதைச் சோற்றிலிருந்து எடுத்துவிட்டு அந்த அன்னத்தை வெறுப்பில்லாமல் உண்டாள். அது கண்ட அந்த ரிஷி அவளிடத்தில் மிகுந்த பட்ச மூடையவராய் அன்போடு பேசி உனக்கு வேண்டிய வரங்கேள் என்றார். அவள் சுவாமீ! மஹா சக்திபுள்ளவரே! நீர் உமது சரீரத்தை ஐந்தாகக்கொண்டும், பின் ஒரு ரூபமாகவும் இருந்து என்னோடு புணரவேண்டுமென்றாள். மௌத்கல்லியர், பெண்ணே! நான் கிழவனுமில்லை. ரோகியுமில்லை. கொடியனுமில்லை. வாயில் துர்க்கந்த முள்ளவனுமில்லை அன்புடையாளே! உன்னை நான் எப்படி வைத்துக்கொள்ளவேண்டும்? எப்படி இன்பந்தரவேண்டும்? நீ விரும்புகிறதை உள்ளபடி சொல், அப்படியே செய்வேன் என்றார். அவள் முன் சொன்னதுபோலவே சொன்னாள். அப்படியே மௌத்கல்லியர் ஐந்து சரீரங்களை யெடுத்துக்கொண்டு அவளோடு கூடி இருந்தார். அவ்விருவரும் சொர்க்கலோகத்துப் போனபின், அங்கே அமிர்த பானம் பண்ணி அங்கேயே இன்பம் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அவ்விடத்தில் நளாயினி மஹேந்திரசேனை யென்று பேர் பெற்றாள்

பிறகு மஹா மேருவிலும் வசித்தார். சந்திரகிரணங்களிடையில் தன் பத்தினியோடு நெடுங்காலம் வசித்தார். பிறகு மலை யுருவக்கொண்டார். அவளும் அம்மலை நடுவில் நதியாகப் பிரவாகித்தோடிக்கொண்டிருந்தாள். ரிஷி மலர்கள் நிறைந்த மரமானார். அவள் ஒரு கொடியாய் அந்த விருட்சத்தைச் சுற்றிப் படர்ந்தாள். இப்படியாக இருவரும் நெடுங்காலம் கூடி இன்பமனுபவித்தார்கள். அவள் இஷ்டப் படியே ஐந்து புருஷர்களே கூடியிருந்து பின்பு ஒரு புருஷனையே கூடி வாழ்ந்தாள். அந்த நளாயினியே உனக்குத் திருஷ்ணையாகப் பிறந்திருக்கிறாள் என்று கூறி, உன் புத்தி வேறு படவேண்டாம் என்றார்.

213-வது அத்தியாயம்.

வைவாஹிக பர்வத தொடர்ச்சி.

திருபதன், பகவானே! நளாயினி எனக்கு எப்படிப் புத்திரியாளள்? அதற்குக் காரணமென்ன? சொல்லவேண்டு மென்று கேட்க வியாசர் சொல்லுகிறார்.

பூர்வ ஜன்மத்தில் மஹேந்திர சேனை யென்று போ பெற்ற நளாயினி மௌனத்தல்லியரோடு கூடி வாழ்ந்திருந்தையில் அநேக வருஷங்கள் கழிந்தன. பிறகு அவர் சிற்றின்பத்தில் வெறுப்புண்டார். அதனால் அவா நளாயினியை விட்டுவிட்டார். அவள் பூமியில் விழுந்தாள். அப்போது நளாயினி சுவாமீ! என்மேல் இரங்கவேண்டும். எனக்கு இன்னமும் போகத்தில் திருப்தி பூர்ணமாக வில்லை என்று சொன்னாள். அவர் பெண்ணே! நீ பூலோகத்தில் திருபதராஜனுக்குப் புத்திரியாகி ஐந்து புருஷர்களோ மணந்து, அவர்களுடன் நெடுங்காலம் இன்பம் அனுபவிக்கக் கடவாய் என்று சொன்னார். அதனால் அவள் துர்க்கத்திலிருந்து ஒரு காட்டிற் புகுந்தாள். அந்தக் காட்டில ஸ்ரீ பரமேசுவரரைக் குறித்துத் தவம் செய்தாள். சந்திரசேகரரான பரமசிவன் அவளுடைய நெடுங்தவத்துக்கு மகிழ்ந்து பிரத்தியட்சமானார். நளாயினியைப் பார்த்து நீ அடுத்த ஜன்மத்தில் தேவேந்திரர்களுக்கு கொப்பான ஐந்து புருஷர்கள் வருவார்கள் நீ அவர்களுக்கு மேலாய்ப் பெரிதான காரியத்தை நிறைவேறறுவாய் என்ற வரங்கொடுத்தார் நாயினி தேவதேவனே! நான் ஒரு புருஷனைக் கேட்டேன். ஐவர் புருஷராவது எப்படி? ஒருத்திக்கு ஒரு புருஷன்தானே உலகத்தில் உண்டு. பல புருஷர்கள் கிடையாதே என்றாள். பெண்ணே! நீ புருஷனைத் தா என்று ஐந்து தரம் கேட்டாய் அதலால் உனக்கு ஐந்து புருஷர்கள் உண்டு அதனால் உனகுப் பாபம் வராது என்று சொல்லிக் கங்கை பாறறவகையில் நீ முதலில் காண்கிற புருஷனே யெண்ணிடம் அழைத்துக்கொண்டு வா என்றார். அவள் கங்கைக்கரை போய்ச் சேர்ந்தான்.

214-வது அத்தியாயம்.

வைவாஹிக பர்வத் தொடர்ச்சி

பூர்வகாலத்தில் தேவர்கள் நைமிசாரணியத்தில் ஸத்ரயாகம் செய்து தொண்டிருந்தார்கள். அந்த யாகத்தில் எமன் ஸாமித்திரம் என்னப்படுகிற பகவதஞ் செய்யும் வேலையில் அமர்ந்தான். அவன் ஜனங்களில் ஒருவரையும் கொல்லவில்லை. அதனால் மனிதர்கள் அபிவிருத்தியாய்ச் சாகாமலே நெடுங் காலம் இருந்தார்கள். அப்போது இந்திரன் முதலிய தேவர்கள் பிரமாவிடம்

போய்ச் சுவாமீ! மனிதர்கள் விருத்தி யடைவதனால் நாங்கள் வருந்தி உம்மை அடைந்தோம். எங்களுடைய துக்கத்தை ஒழித்தருளவேண்டு மென்றார்கள். பிரமதேவர் தேவர்களாகிய நீங்கள் மனிதருக்குப் பயப்படுவானேன். பயப் படுவது சரியல்ல என்றார். இறக்கத்தக்க மனிதர்கள் சாகாதவர்களாய் விட் டால் அவர்களுக்கும் எங்களுக்கும் வித்தியாசமில்லையே. அதனால் எங்களுக்கு நிறப்பில்லை. அதை உத்தேசித்தே உம்மிடம் வந்தோ மென்றார்கள். யமன் ஸத் ரயாகம் செய்கிறான். அதனால்தான் மனிதர்கள் சாகாமலிருக்கிறார். யமனு டைய சரீராம்சமும் உங்கள் அம்சமும் சேர்ந்து அவிர்பாகத்தி செய்யப்பட்டிருக் கிறது. இந்தச் சரீரமே மனிதாகளுக்கு முடிவில் மரணத்தை யுண்டாக்கும். நீப் போது மனிதர்களுக்குச் சுகதியாதது என்றார். அது கேட்ட தேவர்கள் யமன் யாகஞ் செய்யுமிடத்துக்குப் போனார்கள். அந்தத் தேவர்கள் கூடி உட் கார்ந்திருக்கையில் கங்கை யாற்றில் ஒரு வெண்டாமரைப் பூவைப் பார்த்தார் கள். இந்திரன் அதனிடம் சென்றான். அங்கே ஒரு பெண் நீற்காக் கண் டான். அந்தப் பெண் அழுதுகொண்டிருந்தாள். அவளுடைய கண்ணீர் கங் கையில் விழுந்த வுடனே பொற்றாமரையாயிற்று. அதைக் கண்ட இந்திரன் அதிசயித்து, அவள் கிட்டப்போய் நீ யார்? ஏன் அழுகிறாய்? என்று கேட் டான். அந்தப் பெண் இந்திரனே! நான் போகிறேன. நீ என் பின்னே வா அப்போது நான் அழுகிறதற்குக் காரணம் தெரியும் என்று சொல்லி நடந்தாள் இந்திரனும் அவள் பின்னே போனான். ஒரு மலையில் சிந்தாசனம் போட்டு உட்கார்ந்துகொண்டு, ஒரு சிறு டெண்ணைத் தொக்கட்டானுடிக்கொண்டிருந் த ஒரு அழகுள்ள சிறுவனைக் கண்டான். அந்தச் சிறுவன் இந்திரனை லட் சியம் செய்யவே யில்லை. அதைக் கண்ட இந்திரன் கோபித்து நான் திரி லோகாதிபதியாகிய இந்திரன் லோகேசுவரனென்றான். அச்சிறுவன் நகைத்து இந்திரனைப் பார்த்தான். உடனே இந்திரன் ஸ்தம்பித்துக் கட்டைபோல அசைவற்று நின்று விட்டான். விசாயாட்டி முடிந்த பின் அவர் அந்தப் பெ ண்ணைப் பார்த்து, நீ இவனை என்னிடம் கொண்டுவா என்றார். இவன் கர் வத்தை அடக்கவேண்டும் என்றார். அந்தப் பெண் அவனைத் தொட்ட வுட னே அவனுக்குச் சரீரம் சுவாதீனமில்லாமற் போயிற்று அவர் இந்திரனே நோ க்கி இந்திரா! இவ்வகையாக ஒருபோதும் கருவமடையாதே. அதோ இருக்கிற மலைக்குகையில் உன்னைப்போன்ற இந்திரர்கள் இருக்கிறார்கள் என்றார். அப் படியே அவன் அந்த மலைகுகையைத் திறந்து தன்னைப்போல ரகு இந்திரர் களை கண்டான். கண்டதும் எனக்கும் இந்தக் கதிதான் வரும் என்று வருந்தி னான். பரமசிவன் நீ என்னை அவமதித்தபடியால் இந்தக் குகையுள் வுழை என்றார். அதைக் கேட்ட தேவேந்திரன் நடுநடுக்கினான். இந் ன அஞ்சலி யஸ்தனாய் நீர்தாம் உலகங்களுக செல்லாம் முதன்மையான தேவன் என்றான். ஈசன் நகைத்து இத்தன்மையானவர்கள் அநுக்கிரகத்துக்குத் தகாதவாகள். இவர்களும் உன்னைப்போல இறுமாந்தவர்களே. நீயும் இதில் புகுந்திரு. இவள் உங்களுக்கு மனைவியாவாள். அப்போது செய்வதற்கரிதான பெருஞ்

செய்கைகளைச் செய்து அநேகம் பகைவர்களை வென்று புண்ணியத்தினால் மறுபடியும் இந்திரலோகம் வந்து சேருவீர்கள். நான் சொன்னவற்றைச் செய்து முடிக்க வேண்டியது அவசியமென்றார்.

இந்திரர்கள் நாங்கள் கட்டளைப் படியே பூலோகம் போகிறோம். ஆனால் இந்திரன், எமன், வாயு, அசுவினி தேவர்களாகிய இவர்களே எங்களைத் தாயினிடம் கர்ப்பதானம் செய்யவேண்டுமென்று கேட்டார்கள். புதிய இந்திரன் எனக்குப் பிறக்கும் புத்திரனை ஐந்தாமவனாகத் தருவேன் என்றான். அவர்கள் முறையே விசுவபுக், பூததாமன், சிபிச்சக்கிரவர்த்தி, சாந்தி தேஜஸ்வி என்பவர்களாம். ஈசன அவர்கள் கேட்டபடி தந்து, அந்தப் பெண்ணை அவர்களுக்குப் பாரியையாம்படி சொன்னார். திருமாலும் அத்தொத்துக்கொண்டார. நரனை ஐந்தாமவனாக இந்திரனுக்குப் பிறக்கத்தக்க ஜிஷ்ணு என்பவனாகத் தீர்மானித்துப் புவனியில் பிறந்தார்கள். திருமால் தமது தலையிலிருந்து கறுப்பும் வெளுப்புமான இரண்டு மயிரிழையை எடுத்து விசித்தார். அவையே இராம கிருஷ்ணர்களாயின. வெண்மயிர்தான் பலராமர். கரியமயிர் கிருஷ்ணன். பரமசிவனால் குகையிலடைக்கப்பட்டிருந்த இந்திரர்களே பாண்டவர்கள். அர்ஜுனன் இந்திரன் அம்சமே. இந்தக் கிருஷ்ணை ஐவருக்கும் மனைவியாயிருக்கும்படி முன்னேயே விதிக்கப்பட்டிருக்கிறது. தெய்வ கட்டளையினாலே தான் உன்னுடைய யாகத்தில் இருந்து சோன்றினள். அரசனே! உனக்கு ஞான திருஷ்டி தருகிறேன். நீ அவர்களை கேளில் பாரென்று சொன்னார்.

பாஞ்சாலன் ஞானதிருஷ்டியினால் பாண்டவர்களை முன்னேயதேவ சரீரங்களோடு பார்த்தான். அவர்கள் பொற்சிரீடங்களும பொன்னாரி மாலைகளும் புனைந்திருந்தார்கள். இந்திரனையும அக்கினியையும், சூரியனையும் ஒப்பான ஒளியுள்ளவர்களாயிருந்தார்கள். ஓரைமைப் பருவ முள்ளவர்களாய்த திவ்ய சரீரமுடையவர்களாயிருந்தார்கள். பிணைமர உயரமுள்ளவர்களாயிருந்தார்கள். அர்ஜுனனை இந்திரனுக்கே பார்த்து மகிழ்ச்சியடைந்தான். இது தெய்வமாயை. கமது சிற்றறிவுக் கெட்டாதது என்று கருதினான். உடனே வியாசர் பாதத்தில் வணங்கிச் சுவாமீ! இது எம்மிடத்தில் அதிசயமல்ல வென்று உபசார வசனங் கூறினான்.

பின் வியாசர் திரௌபதியை நோக்கி விவாக விஷயத்தில் பூர்வீக இராஜரிஷிகளின் சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேள் என்று கூறுகிறார். முன்னே நிதத்துவென்ற ஒரு அரசனிருந்தான். அவனுக்கு ஸால்வேயன், குரசேனன், சுருதசேனன், பிரத்துசாரன் அதிசாரன், என்று ஐந்து புத்திரர்கள். அவ்வை வரும் ஒருவரையொருவர் மீறி நடப்பதில்லை. இன் சொல்லே பேசுவார்கள். இணிமையானவைகளே செய்வார்கள் பொறாமை யில்லாதவர்கள். தர்மம் தெரிந்தவர்கள் கொடுமையற்றவர்கள். சிபி சக்கிரவர்த்திக்குப் பௌமாசலி என்றொரு பெண். அவள் சுயமவரத்தில் இவ்வைவரையும் கணவர்களாகவரித்

தாள். அவ்வைவரும் அவளே மணந்து வாழ்ந்தார்கள். அவளிடமாக ஐந்து புத்திரர்கள் பிறந்தார்கள். அந்த ஐந்து புத்திராகளும் ஸால்வேயன், சூரசேனன், சுருததேனன், திந்துசாரன், அதிசாரன் என்பவர்களாம். இவாகளின் சந்ததி இந்தப் பெயராலேயே வழங்கப் படுகின்றன. அந்தப் பௌமாசவியை போலவே உன் புதல்வியும் ஐவருக்கும் பத்தினியாக விதிக்கப்பட்டாள்.

அரசனே! இன்னம் சேளும் ஒரு வனத்தில் ஒரு ரிஷி புத்திரி இருந்தாள். அவள் அழகானவளாயிருந்தும் கணவன் கிடைக்கவில்லை. அவள் பரமசிவனே நோக்கித் தவம் செயதாள். அவர் பிரத்தியட்சமாய் உனக்கு என்னவேண்டுமெ என்று கேட்க, அவள் சகலகுணங்களும் நிறைந்த கணவன் வேண்டுமென்ற பல முறை சொன்னாள். ஈசுவரன் பெண்ணே! உனக்கு ஐந்து கணவா வருவார்கள் என்று வரம் தந்தார். அவள் ஈசுவரா! நான் ஒரு கணவனைக் கேட்டால் ஐந்து கணவன் தருவது முறைமையல்ல, ஒரு பதியை அருளுமென்றாள். ஈசுவரன் நீ கணவன் வேண்டுமென்று ஐந்து தரம் கேட்டபடியால் உனக்கு ஐந்து கணவாதான். அப்படியே நடக்கும் என்று அருளி மறைந்தார். துருபதனே! அவள்தான் இந்தக் கிருஷ்ணையாகும். அவளே நளாயனியாகி மௌத்கல்லியரைப் பதியாக அடைந்து பின் பரமசிவனிடம் வரம்பெற்று கிருஷ்ணையாக உன்னிடம் பிறந்திருக்கிறாள். இவள் சிவ பிரசாதத்தினால் பாண்டவாகள் ஐவருக்கும் மனைவியாவாள். இது தேவ ரகசியம். தேவாகளால் விரும்பப்பட்டவள் அந்தக் கன்னிகை கன் கருமத்தினாலே ஐவருக்கும் மனைவியாக இருக்குமாறு பிரமதேவரால் சிருஷ்டிக்கப்பட்டாள். அரசனே! இனி உமது இடம்பாலச செய்யும் என்றார்.

215-வது அத்தியாயம்.

வைவாஹிக பர்வத தொடாச்சி.

துருபதன் மஹாத்மாவே! விதியையிலக்க முடியாது. தெய்வம் முடிந்த முடிச்சை யாரால் அவிழ்க்க முடியும் அந்த விதிதானே மூண்டிருக்கிறது. ஈசுவரன் விதித்ததற்குக் காரணம் அவருக்குத்தான் தெரியும். ஈசுவரன் விதிஅப்படி இருந்தால் அது தர்மமோ அதர்மமோ எதுவாயிருந்தாலும் வென்குற்றமன்று. ஆதலால் பாண்டவர்கள் இஷ்டப்படி ஐவரும மணம் புரிந்து கொள்ளட்டும் என்றான்.

வியாசர், அரசனே! மானிடர்களுக்கு இது பொருந்தாது, பாண்டவர்கள் தேவர்கள். இவள் இலட்சுமி. தெய்வத்தன்மை யுள்ளவர்களுக்கு இந்த விதி நியாயம். மற்றவர்களுக்கு மநுதர்மத்தில் கூறிய விதியே பொருத்தமுடையது என்றுசொன்னர். உடனே பாண்டவர்கள் இருக்குமிடம் வந்து சேர்ந்தார்கள். வியாசர் யுதிஷ்டிரனைப்பார்த்துப் புஷ்ய நட்சத்திரம் சேர்ந்த இந்தச் சுப

தினத்தில் நீ முதலில் கிருஷ்ணையைப் பாணிக்கிரகணம் செய் என்று சொல்லி, மற்றவர்களை நோக்கி நீங்களும் முறைப்படி பாணிக்கிரகணம் செய்யுங்கள் என்றார். பிறகு துருபதன் மனமகிழ்ந்து கிருஷ்ணையை அலங்கரித்து மணப்பந்தலுக்கு அழைத்து வந்தான், பட்டணத்திலுள்ள ஜனங்களும், மந்திரிகளும் பிராமணர்களும் விவாக மஹோத்சவம் காண வந்து கூடினார்கள், பாண்டவர்களும் மங்கள ஸ்நானம் செய்து அலங்கரித்துக்கொண்டு வந்து சேர்ந்தார்கள். தௌமியர் அக்கினி சந்தானம் செய்வித்து, அந்த அக்கினியில் ஹோமஞ் செய்வித்தார். யுதிஷ்டிரர் பிராமணர்களுக்குத் தனங்களும், பசுக்களும் தானம் செய்து பின் முறைப்படி கிருஷ்ணையைப் பாணிக்கிரகணம் செய்தார். மறுதினம் முதல் ஒவ்வொரு நாளில் மற்றவரும்முறையாகப் பாணிக்கிரகணம் செய்தார்கள். கிருஷ்ணை அன்றன்றும் கன்னிகையாகவே யிருந்தாளாம். இது காரணர் கூறிய இரகசியம். விவாகமான பின் துருபதன் பாண்டவர்களுக்குத தனம், குதிரை, யானை, தேர்களேயும் கொடுத்தான். ஒவ்வொருவருக்கும் அழகான தூறு தாதிகளேயுங் கொடுத்தான். ஆடையாபரணங்கள் அளித்தான். பாண்டவர்கள் இவைகளே யெல்லாம் பெற்றுகொண்டு அந்த நகரத்திலேயே மகிழ்ந்து வசித்தார்கள்.

216-வது அத்தியாயம்.

வைவாஹிக பர்வதி தொடர்ச்சி.

துருபதன் பாண்டவர்களுடைய சம்பந்தம் பெற்ற பின் தேவர்களிடத்திலுங் கூட நிர்ப்பயமாயிருந்தான். கிருஷ்ணை குந்தியை வணங்கினாள். குந்தி இந்திரனுக்கு இந்திராணிபோலவும், அக்கினிக்குச் சுவாகாதேவி போலவும், சந்திரனுக்கு ரோகிணிபோலவும், வருணனுக்கு தமயந்தி போலவும், குபேரனுக்குப் பத்திராதேவி போலவும், வசிஷ்டருக்கு அருந்ததிபோலவும், திருமாலுக்கு இலட்சுமிபோலவும் நீ உன் கணவர்களுக்கு இருக்கக் கடவாய். பூர்ணமான இராஜ போகங்களே யெல்லாம் அடைவாயாக. தீர்க்காயுசான வீரர்களேப் பெறுவாயாக. யாகபத்தினியாகவும் பதிவிருதையாகவும் இருக்கக்கடவாய்க. தேடிவந்த விருந்தினரை உபசரிக்கக் கடவாய். தாமத்தில் சிறந்த நீ இராஜ்யாபிஷேகம் பெறுவாய். பராக்கிரமசாலிகளான உன் கணவர்களால் ஜயிக்கப்பட்ட எல்லாவற்றையும் அசுவமேத யாகத்தில் பிராமணர்களுக்குத தானமளித்து விவேயாக. நீ நூறு வயசு சுகஜீவியாயிருந்து பூமியில் கிடைக்கத்தக்கவைகளை எல்லாவற்றையும் அடைவாயாக என்று ஆசீர்வதித்து இன்று உன்னைக் கண்டு மகிழ்வது போலவே உனக்குப் புத்திரர்கள் பிறந்த பிறகு மறுபடியும் சந்தோஷப் படுவேன் என்றாள் பாண்டவர்களுக்கு விவாகமான பின் கிருஷ்ணையார்த்தி அநேக ஆடையாபரணங்கள், தனங்கள் வாகனம், ஆசனம் பாத்திரங்கள் முதலிய எல்லாம் அனுப்பினார். அநேக பணிவிடைக்குரிய

பெண்களையும் அனுப்பினர். யானை தேர்களை மனுப்பினர், பொன் காண யங்கள், தக்கக்கட்டிகள் பசுக்கள் எல்லாம் அனுப்பினர். பாண்டவர்கள் மகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்டார்கள்.

217-வது அத்தியாயம்.

வைவாஹிக பர்வத் தொடர்சகி.

பிறகு தூதர்கள் தங்கள் தங்கள் அரசரிடத்தில் பாண்டவர்கள் திருஷ ணையை மணம் புரிந்தார்கள். வில்லை வளைத்த மஹாத்மாவே அர்ஜுனன், சல்லியனைத் தூக்கிப்போட்டவன் பீமன். துரியோதனனை யுத்தத்தில் வெ ன்றவர் தர்மபுத்திரர். துரியோதனன் தம்பிகளுடன் யுத்தம் செய்தவர்கள் இரட்டையர்கள் என்றும் சமாசாரத்தைத் தெரிவித்தனர். பாண்டவர்கள் பிராமண வேஷம் தரித்து அடங்கியிருந்து வெளிப்பட்டதற்கு அரசர்கள் அதி சயித்தார்கள். குந்தி சுன் புத்திரர்களுடன் அரக்கு மாளிகையில் எரிந்துபோ னாள் என்று கேள்விப்பட்டிருந்த திராஜாக்கள் எல்லாரும் அச்சரியப்பட்டார் கள். திருதராஷ்டிரனையும் பீஷ்மரையும் இகழ்ந்தார்கள். சுயம்வரம் அன வுடனே துரியோதனன் ஒரு சபை கூட்டினான். அதில் சருசியானவன், சத்துருக்கள் இருவகை. ஒருவகை சத்துருவின் பலத்தைக் குறைக்கவே ண்டும், மற்றொருவனை வருததேயிண்டும். குந்தி புத்திராகளை மட்டும் ஒழித் தேவிடவேண்டும் அபஜய மடைந்து சும்மா திரும்பிப்போனால் பின்பு நீங் கள் தூனபப்படவேண்டிவரும். பாண்டவர்களைப் பிடித்துக் கொள்வதற்கு இதுதான் இடம் இதுவே தகுந்த காலம். இப்படிச் செய்யாமல் போனால் உலகம் நகைக்கும். இவர்கள் அடித்திருக்கும் துருபதன் சேனு பலம் குறைந்த வன். துருபதனுக்குச் ஒடுகெதனை சேதிராஜனும், யாதவர்களும் பாண்டவர் கள் பிழைத்திருப்பதை அறியும் முன்னமேதான் நமக்கு ஜயகாலம். அவர் கள் தெரிந்து கொண்டால் பாண்டவர்கள் பலசாலியாய் விடுவார்கள். அர சர்கள் பாண்டவர்கள் ஜீவித்திருப்பதை அறியாமலிருக்கிறபொழுது தான் பாண்டவர்களைக் கொல்வதற்குத் தகுந்த காலமாம். பாம்பின் வாய்ப்பட்டுத் தேரை திரும்பி வந்ததுபோல நமக்கு மாளிகையிலிருந்து தப்பித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள் அவர்களைச் சும்மா விட்டுவிட்டால் நமக்குப் பெரிய அபாயம் வரும். யாதவர்களும அரசர்களும் இங்கே வந்து கூடிப் பாண்டவர் களும் இவ்விடத்திலேயே நீலத்துவிட்டால் அவர்களை வெல்வது அசாத்திய மாகும். இந்த சமயத்தை இப்பொழுதே எதிர்க்கவேண்டும் என்ன ராஜனே யென்று சொன்னான். அதைக்கேட்ட சோமதத்த புத்திரன் சொல்லுகிறான்.

அரசன், அமைச்சன், மித்திரன், பொக்கிஷம் தேசம, தூர்கம், படை ஆகிய ஏழு அங்கங்களோடு சண் பக்கத்திலும் எதிரி பக்கத்திலும் ஜராயவே

ண்டும். காலத்தையும் இடத்தையும் யோசிக்கவேண்டும். சந்தி, விக்கிரகம், யானம், ஆசனம், துவைதீபாவம், ஸமாச்ரயம் என்கிற ஆறையும் உபயோகிக்க வேண்டும். ஸ்தானம், விருத்தி, க்ஷயம, பூமி, மித்திரர், சக்தி என்பவற்றை பக்ஷத்திலும் இரு ஆராய்ந்து தெரிந்துகொண்டு சத்ரு, காமம், சூதாட்டம் முதலியவற்றால் எதிரி கொருக்கப்படும்போது எதிர்த்துச் செல்லவேண்டும். பாண்டவர்களோ ஒன்றினாலும் குறைவற்றவர்களா யிருக்கிறார்கள். ஜனங்களால் நேசிக்கப்படுகிறார்கள். அர்ஜுனன் தன் ரூபத்தினால் சகல ஜனங்களின் கோக்கத்தைக் கவருகிறான். இன் மொழியால் காதலை வசிக்கின்றான். அன்பாலே மாத்திரம் ஜனங்கள் அவனை நேசிக்கவில்லை. அவர்கள் விருப்பமெதுவானாலும் அதை நிறைவேற்றினான். பார்த்தன் சொல் யுக்தி விரோதமாக இராது. தனக்குப் பயன் படுவதாகவுமிராது. அசத்தியமாகவும் பிறருக்குத் துன்பம் தருவதாகவும் இருந்ததில்லை. இப்படிப்பட்ட குணவான்களான பாண்டவர்களை அழிக்கத்தக்க சக்தியுள்ளவர்களோ நான் பார்த்ததேயில்லை. பிரபுத்துவம், மந்திரித்துவம், உற்சாகம், சோர்வின்மை முதலியன பாண்டவர்களிடத்தில் நிரம்பி யிருக்கின்றன. யுதிஷ்டிரர் மூலபலம், காலபலம், மித்திர பலம் முதலியவற்றை அறிந்து சத்துருக்களை ஸாம தான பேத தண்டங்களால் ஜயிக்க வல்லவர். இராம கிருஷ்ணராகளுடைய சகாயத்தை பெற்ற பாண்டவர்களை இந்திராதி தேவர்களாலும் வெல்லுவது அரிது. உங்களுடைய சொந்த நன்மைகளை நீ விரும்பினாலும், என பேச்சை உங்களுக்குச் சம்மதமாக இருப்பதானாலும் நீங்கள் பாண்டவர்களோடு சமாதானம் செய்து கொள்வதே உத்தமம் என்றான். துருபதனுடைய ராஜ்யம் மஹா பலமான காவலோடு கூடியிருக்கிறது. நகரத்து ஜனங்கள் துருபதனிடம் பிரியமாகவே யிருக்கிறார்கள். பராக்கிரமமுள்ள அரசர்கள் பாண்டவர்களுக்கு விரோதமாகப் பாஞ்சால நகரத்தைச் சூழ்ந்தார்கள் என்று கேட்டவுடனே யாதவ விரோஷ்டர்கள் ஆயுதங்களை ஏந்திக்கொண்டு வந்து விடுவார்கள். ஆகையால் துரியோதனனைப் பாண்டவர்களோடு சந்தி செய்வித்துச் சமாதானம் பண்ணிக்கொண்டு நகரத்துக்குத் திரும்புவதே நன்மை யென்பது என் அபிப்பிராய மென்றான்.

218-வது அத்தியாயம்

ஸைன்யநிர்யாண பர்வ தொடர்ச்சி

வைசம்பாயனர் சொன்னதைக் கேட்ட – காண சனையத்துக்குப் பிறகு பீஷ்மர் சொல்லுகிறான். இந்த வசனமெல்லாம் யுக்திகரும் நீரி சான திரத்துக்கும் ஒத்திருக்கிறது. இதில் எனக்கு விரோதமில்லை நான் சொல்வதையும் கேளுங்கள். மனிதர்கள் எப்போதும் அபிப்பிராய பாறபட்டு இருக்கிறார்கள். எதிராளி செல்வத்தாலும் பலத்தாலும் இங்கே சிற்பரனாலும், வருத்தப்படுகி

துவதனலும் திருபதனுடைய சுகரத்தைப் பிடிப்பது அசாத்தியம். பெரும் போர் செய்வதும் யுக்தமில்லை. யுத்தப் பிரியர்களாகிய யாதவாகள் நமது பின் இடத்தைப் பிடிப்பதற்குமுன்னல் நாம் அவர்களே அழிப்பதற்கு இது காலமென்று தோன்றுகிறது. நீங்களும் அதற்குத் தக்கபடி உற்சாக முள்ளவர்களாகவும் கை வலிமை உள்ளவர்களாகவும் இருக்கிறீர்கள். இந்த நகரத்து மதில்களே யிடியுங்கள். அகழியைத் தூர்த்து விடுங்கள். ஜலத்தை குறைத்து விடுங்கள். மேடு பள்ளங்களே சமனுக செய்யுங்கள். அகழியைப் புல்லாலும் கல்லாலும் தூர்த்து விடுங்கள். எதிரிகளின் காலாள் யானை குதிரை களுக்கு கொல்லுகிற வணுக்குத் தனமும் வெகுமானம் கொடுக்கவேண்டும். ஒரு யானைக்கு பதினாயிரம் பொன். குதிரைக்கும் காலாட்களுக்கும் ஐயாயிரம பொன். இரதத் திற்கு யானைக்கு இரண்டு மடங்கு அதிக பொன்னும் வெகுமானம் கொடுக்க வேண்டும் என்று பறை யடித்துத் தெரிவிக்க வேண்டும். சிற்றின்பப் பிரியர்களும், சிறுவர்களும், கிழவர்களும், யுத்தஞ்செய்ய மனதில்லாதவர்களும் இருக்கட்டும். அவர்கள்மேல் அம்பு எய்யக்கூடாது. உத்சவமில்லாமல் ஒரு வரும் போகக்கூடாது. கீர்த்தியை விரும்புகள். உங்களுக்கு சுகமுண்டாகட்டும். நாம் பகைவரை வெல்வோம். காற்றும் நாம் செல்லுந் திக்கை நோக்கி அடித்துக்கொண்டிருக்கிறது, இரு நல்ல சகுனங்கள் அளவில்லாதனை காணப்படுகின்றன என்றன்.

அப்படிச் சொல்லிய காணன் சொல்லைக் கேட்டுத் துரியோதனன் சண்டை செய்வதற்கே நிர்மானித்தான். மற்றைய அமசர்களும் அவனைப் பின் பற்றி யுத்தத்துக்குப் புறப்பட்டார்கள். அந்த விஷயத்தில் எல்லாரும் ஒரே மனதாயும் விருப்பமுள்ளவர்களாகவும் இருந்தார்கள். அந்த சேனை சமுத்திர மானது காணுதிய காற்றிரைந்து கூடியிருந்தது. ஜயத்ரதனென்னும் அலை களால் நோஷித்துக்கொண்டிருந்தது. துசாசனனுகிற மச்சம் உலாவியது துரியோதனனுகிய முதலையை புடையதாயிருந்தது. பயங்கரமான சதசமுடையதாயிருந்தது. இந்தச் சண்மையுள்ள சேனை சமுத்திரமானது துருபத சுகரத்தை அபசவ்யமாகச் சூழ்ந்து சென்றது, நீயைப் போலவும் சுர்ப்பங்களைப்போலவும் பிரகாசிக்கின்ற ஆயுதங்களுடைய அந்த சேனையைக் கண்டு திருடன் ரோகள் கர்ஜித்துக் கிளம்பிளைகள் சென்றி, திருவுடத்யுமனன், சத்தி ரன், பிரியதாசனன் முதலிய துருபத குமாரர்கள் எதிரிகளே ஜயிக்க வேரும்பிப் போருக்கெழுந்தார்கள். துருபத ராஜனும் புறப்பட்டான இரண்டு சேனைகள் ஒன் றெடு சலப்பதுபோல இருதிறத சேனைகளும் கலந்து யுத்தஞ்செய்ய ஆரம்பித்தன. இந்தச சண்டையிலுண்டான சத்தத்தைக் கேட்டுப் பாண்டவர்களும் சத்துருக்கள் நடுங்கும்படி புறப்பட்டு வந்து கூடினார்கள். யுத்தச சண்ணமாக விற்களே யேந்திவரும் வீரர்களான பாண்டவர்களைக் கண்டவுடனே எதிரிகளாகிய அமசர்களுக்கு அச்சமும் நடுக்கமும் உண்டாயிற்று. பாண்டவர்களைக் கண்ட துருபசேனைக்கு உற்சாகமுண்டாயிற்று. ஜயதில் நம்பிக்கை உண்டா

யிற்று. சேருங்கின சண்டையில் கர்ணன் ஜயத்ரதனிருவரும் அர்ஜுனனுக் கெதிரில் பிரியதர்சனனையும் சுமித்ரனையும் கொன்றார்கள். அதைப் பார்த்த அர்ஜுனன் கர்ணன் புத்திரன் சுகாமனையும், ஜயத்ரதன புத்திரனையும் தங்களுடைய புதல்வர்களின் யெதிரிலே யடித்து வீழ்த்தினான். காணனும் ஜயத்ரதனும் தங்களுடைய புதல்வர்களே அர்ஜுனன் கொன்றதைப பார்த்து மஹா கோப மடைந்தார்கள். அர்ஜுனன் மீதரை சூழ்ந்து கொண்டார்கள் அர்ஜுனன் தேர்க்குதிரைகளையும் மூன்றைக் கொன்றார்கள் அதனல் கௌரவர்சேனையில் ஹா ஹா என்ற சத்த முண்டாயிற்று. பீமசேனன ஒரு நிமிஷத்துக்குள் வேறு குதிரைகளைப் பூட்டினான். அந்தத் தேர் வருகிறதைக் கண்டு சகுனி ஸௌமதத்தி, துரியோதனன் இவர்களும் வந்து எதிர்த்தார்கள். அவ்வேவரையும் பீமன் எதிர்த்துத் தடுத்து யுத்தஞ் செய்தான். பீமனுடைய சாரதி குதிரைகளைக் கொன்றார்கள். பீமன் கதியுடன் கீழே குதித்து உலாவித் திரிந்தான். சத்துருக்களின் யானை குதிரை தே கலாட்படை முதலிய எல்லாவற்றையும் வெட்டி வீழ்த்திக்கொண்டே போனான். அதைக் கண்ட அர்ஜுனன், திருஷ்டத்யுமனன் முதலியவர்கள் அவர்களுக்குச் சகாயமாகக் கூடினார்கள். அம்புகள் ஆகாயத்தை மறைத்து விட்டது. சண்டை சமஸ்தமே வெகு நேரம் நடந்தது. அர்ஜுனன் மிஞ்சி யவர்களை அடித்து வருத்தினான். கர்ணனை மூன்று பாணங்களால் அடித்தான் அவன் பிரக்ஞை தப்பி விழுந்தான். சாரதி அவனை வெளியிலே கொண்டு போனான். கர்ணன் தோற்றதும் அர்ஜுனன் வென்றதும கண்ட துரியோதனனுக்குப் பயம் உண்டாயிற்று. அர்ஜுனனல் அடிக்கப்பட்ட சௌவீரனே மேலே குலைந்து சிதறலாயிற்று. சகுனியுந் துரியோதனனும் நேற்றி மதுபடியும் எனறு சோத்தார்கள். பீமன் துரியோதனனைக் கண்டதும் அரக்கு மாளிகையை நினைத்துக்கொண்டான் ஒரு பெரிய மரத்தைப் பிடுங்கிக் கொண்டு வீசி யடித்துத் துரத்தினான். பீமார்ஜுனர்களால் கலக்கப்பட்ட அந்தச் சேனைக்கடல் காலாதிசையிலும் சிதறிற்று. அப்படி ஓடுகிற குதிரை வீரர்களையும் யானை வீரர்களையும் பாண்டவர்கள் பின் தொடரவில்லை. அடிக்கவுமில்லை. அடிபட்ட அரசர்கள் தந்தம் நகரம் போனார்கள். பாண்டவர்களும் மற்றவர்களும் மிக மகிழ்ந்து நகரத்துக்குப் போனார்கள். ஜனங்களுக்கு ஆனந்த மூண்டாயிற்று. கர்ணன், சகுனி, ஜயத்ரதன் துரியோதனன் முதலியவர்கள் பாண்டவர்கள் கல்ல தவம் புரிந்தார்கள். கிருஷ்ணை கல்ல நோன்பு நோற்றாள். திரௌபதன் நினைத்த காரியத்தை முடித்துவிட்டான் என்று பேசிக்கொண்டார்கள். மனதுக்குள் தாங்க முடியாததுக்கம் ஸ்ரீகாந்தது. வாய் திறந்து கூறாமல் புறப்பட்டுப் போய்ச் சேர்ந்தார்கள்.

சண்டை தொடங்கா முனனா பாண்டவர்கள் தங்கள் சௌக்கியத்தைக் கிருஷ்ணனுக்குச் சொல்லும்படி குதிரைப் படைகளை அனுப்பி யிருந்தார்கள். அவர்கள் துவாரகை போய்ப் பல சமாசாரமும கிருஷ்ண ரூர்த்தியையும் கண்

டார்கள். கண்டு அந்தகர்கள், விருஷ்ணிகள், யாதவர்கள் எல்லாருக்கும் பாண்டவர்களின் க்ஷேமத்தைச் சொன்னார்கள். தாங்கள் அரக்கு மாளிகையில் அழியாமல் தப்பித்துக்கொண்டதாகச் சொல்லச் சென்றார்கள். சகல குணங்களும் நிரம்பின திரௌபதை சுயம்வரத்தில் தங்களுக்குக் கிடைத்ததாகச் சொல்லச் சொல்லிஞர்கள் என்று சொன்னார்கள் அந்தச் சொல்லைக் கேட்டுக் கிருஷ்ணமூர்த்தி எல்லாம் எனக்குத் தெரியு மென்ற மறுமொழி சொன்னர். உடனே சேனையோடு பாஞ்சால நகரம் நோக்கிப் புறப்பட்டார்கள். போய்க் குந்திக்கு வணங்கினர். திரௌபதைக்கு வஸ்திராபரணங்கள் கொடுத்தார் பாண்டவர்களுக்கு மரியாதை செய்தார்கள். த்ருபதன் கேட்டு உடனேவந்து கிருஷ்ணனுக்குத் தக்கபடி பூஜித்து உபசரித்தான்.

219-வது அத்தியாயம்.

விதுராகமன பர்வம்.

ஹஸ்தினபுரம் சென்ற துரியோதனனுக்குத் தீராத்தாபம் உண்டாயிற்று. திரௌபதை பாண்டவரை வரித்ததை கினைத்து வருந்தினன். துச்சாதனன் துரியோதனனைப்பார்த்து அ னன் பிராமணரு யில்லாவிட்டால் திரௌபதையை அடைந்திருக்க மாட் ன் அவன் விஜயனென்று ஒருவரும் உணரவில்லை. முயற்சி பயனற்றது தெய்வமே சிறந்தது. பாண்டவர்கள் கம்முடைய கண்களையும், மற்றவர்களுடைய கண்களையும் மறைத்துக் கிருஷ்ணையை விவாகஞ் செய்து கொண்டார்கள். பாண்டவர்கள் இராஜாக்கள் மேலேமேல் இடது காலை வைத்தார்கள். இவர்கள் அரக்கு மாளிகையிலிருந்து எப்படி வெளிப்பட்டார்களோ தெரியவில்லை. பரோசனன் பாண்டவர்களைக் கொளுத்துவதற்குப் பதிலாகத் தானெரிந்து போனன். நம்மைவிடப் பாண்டவர்கள் புத்திசாலிகள். அரக்கு மாளிகையிலிருந்து தப்பித்துக் கொண்டவர்களுக்கும், மரணபயமில்லை என்று சொன்னன்.

இப்படிப் பேசிக்கொண்டு புரோசனன், வேடச்சி, விதுரர் மூவரையும் இகழ்ந்தார்கள். அரக்கு மாளிகையிலிருந்து தப்பித்துக்கொண்ட பாண்டவர்களைக் கண்டு மனம் புழுங்கினர்கள். அவர்களை த்ருபதனுடன் ஸ்நேகஞ் செய்துகொண்டதையும், திருஷ்டத்யுமனன் கெண்டி முதலியவைகளுடைய பராக்கிரமத்தையும் கினைத்து மனம் நொந்தி அஸ்தினபுரம் போனர்கள். பாண்டவர்கள் திரௌபதையைப் பாணிக்ரஹணம் செய்துகொண்டதையும், அதை கண்டு துரியோதனன் முதலானவர்கள் கர்வம் அடங்கி வெட்கி வந்ததையும் கேட்ட விதுரர் மனமகிழ்ந்தார் திருராஷ்டிரனைப் பார்த்து மஹா ராஜாவே கல்லகாலமானதால் தெளவர்கள விருத்தியாகிறனர் என்று சொன்னர். திருதராஷ்டிரன விதுரர் கருததைஅறியாமல் துரியோதனன்தான் துருபதன்

புத்திரியை வரித்து வந்தானென்று எண்ணிக்கொண்டு நல்ல காலம், நல்ல காலம் என்றான். இந்நிகழ்ச்சியை அழைத்துக்கொண்டுவா. அவளுக்கு உயர்ந்த ஆடையாபரணங்களைக் கொடு என்று தன் புத்திரனாகிய துரியோதனனுக்கு உத்தரவு கொடுத்தான். விதுரர் நான் சொன்னது உமது புத்திரர்களையல்ல. பாண்டவர்கள் தாம் விருத்தியடைந்தார்க ளென்றேன். அந்தப் பாண்டவர்களைக் கிருஷ்ணை வரித்தாள். துருபதன் அவர்களைப் பூஜிக்கின்றான். அவர்கள் சிறந்து வாழ்கின்றார்கள் என்றார். அது கேட்ட திருதராஷ்டிரன் விதுரா! அப்படியானால் உனக்குச் சுகமுண்டாகக் கடவது. பாண்டவர்கள் உயிரோடிருக்கிறார்களா? அமிருதத்துக்கு ஒப்பான உன் வசனத்தினால் எனக்குக் கரை கடந்த ஆனந்தம் உண்டாகிறது. அவர்கள் நல்லொழுக்க முள்ளவர்கள் ஆதலால் அவர்களுக்குத் திருபதனுடைய சம்பந்தம் கிடைத்தது. நல்ல காலம் என்று சொன்னான். திருபதன் உபரிசரவஸுவின் வம்சமாகிய மத்ஸ்ய குலத்தில் பிறந்தவன். ஒழுக்கம், தவம், கல்வி தலியவற்றில் பெரியவன். இராஜ சிரேஷ்டன். அவனுடைய புத்திர பௌத்திராகன் சரியாகப் பிரமசரியவிரதம் அனுஷ்டித்தவர்கள். அவர்களைச் சேர்ந்தவர்கள் மஹா பலசாலிகள், எனக்குப் பாண்டவர்களிடத்திலுள்ள பட்ச மற்றவருவரிடத்திலும்கிடையாது இது சத்தியம். அந்தப் பாண்டவர்களுக்கு தகுந்த மித்திரர்களை அடைந்திருப்பதினால் துரியோதனனும் அப்படியே நடந்தான். பாண்டவர்கள் தீயிலெரிந்து போனார்களென்ற கேள்விப்பட்டதில் மனம் கொதித்துக்கொண்டிருந்தது. ஆதாம நித்திரையின்றி யிருந்தேன். என் புத்திரர்களுக்கு நல்ல துணை புண்டாயிற்று. சுற்றத்தாருடன் கூடின துருபதனைச் சிநேகிதனைப் பெற்றவன் தரித்திரனாயிருந்தாலும் கோமத்தை யடைவானென்பதில் தடையில்லை என்று சொன்னான். விதுரர் மஹாராஜாவே! இந்த எண்ணம் தூற்றுண்டி காலமும் தலையாயிருக்கவேண்டும் என்று பதில் சொன்னார். பிறகு விதுரர் தம் வீடுபோனார். பின் துரியோதனனும் கர்ணனும் திருதராஷ்டிரனிடம் வந்து பிதாவே! விதுரருக்கெதிரில் உம்மைக் குற்றங்கூற எங்களுக்கு தைரியமில்லை. இப்போது தனித்திருப்பதினாலே சொல்லுகிறோம். நீர் என்னசெய்ய உத்தேசித்திருக்கிறீர். எதிரியின் அபிவிருத்தியை உமது விருத்தியாகக் கருதுகிறீர். விதுரரிடத்தில் அவராகவே புகழ்கின்றீர். நாம் எப்போதும் அவர்களுடைய பலத்தைத் தடுக்கவேண்டும். அவர்கள் நம்மை வம்சத்தோடு ஒட்டிக்காதபடி காலத்துக்கேற்றதை யோசிப்போம் என்றார்கள்.

220-வது அத்தியாயம்.

விதுராகமன பர்வத தொடர்ச்சி.

அது கேட்ட திருதராஷ்டிரன் கர்ணனையும் துரியோதனனையும் நோக்கிச் சொல்லுகிறான் மேன் நினைத்தபோலவே நடந்தும் செய்ய வேண்டிய

றேன். விதுரனுக்கு என் அந்தரங்கத்தை வெளியிட எனக்குப் பிரியமில்லை விதுரன் என் கருத்தைக் குறிப்பிலுணரும் அறிவாதிருக்கவேண்டு மென்று பாண்டவர்களைப் புகழ்ந்து பேசுகிறேன். உங்களிருவருக்கும் எது சுகுதியென்று தோன்றுகிறதோ அதைச் சொல்லுங்கள் என்றான். துரியோதனன் சமர்த்தர்களான பிராமணர்களை அனுப்பிக் குந்தி புத்திரர்களுக்கும் மாத்திரி புத்திரர்களுக்கும் விரோதம் உண்டாகும்படி மித்திரபேதஞ் செய்விப்போம். துருபதனுக்கு அளவற்ற நிதியாதரைக் கொடுத்துப் பாண்டவர்களை விட்டு விலகும்படி செய்விப்போம் அல்லது பாண்டவர்கள் அங்கேயே வசிக்கும்படி செய்விப்போம். அல்லது பலபேரை அனுப்பிப் பாண்டவர்கள் ஒருவருக்கொருவர் விரோதியாகும்படி செய்விப்போம் அல்லது பீமனை எப்படியாவது கொலை செய்விப்போம். அவன்தான அவர்களுக்குள் பலவான் அவனுடைய தோளாலேதான் யுதிஷ்டிரன் சம்மை அலட்சியம் பண்ணினான். அந்தப் பீமன் இறந்தால் மற்றவர்க இராஜ்யததைக் குறித்துப் பிரயத்தனம் செய்ய மாட்டார்கள். பீமசேனன பக்கபலமாயிருப்பதினாலே தான் அர்ஜுனனை ஜயிப்பது கஷ்டமாயிருக்கிறது அவனில்லா விட்டால் கர்ணன் பலத்தில் கால்பாகு பலங்கூட அர்ஜுனனுக்கு இராது. அல்லது அவர்கள் இங்கே வந்த பிறகு அவர்களை நிக்கிரகிப்போம். நீ ருபதன் புத்திரர்களுக்கும் பாண்டவர்களுக்கும் பேதம் செய்வீகலாம் அல்லது அழகான ஸ்திரீகளைக் கொண்டு பாண்டவர்களை மயகசெயது திரௌபதிகுப் பாண்டவரிடததில் வெறுப்புண்டாம். அவர்களை இங்கே அழைத்து வந்து யுக்தியினால் அழித்து விடலாம என்றான்.

221-வது அத்தியாயம்.

விதுராகமன பர்வத் தொடர்ச்சி

கர்ணன், துரியோதன மஹாராஜாவே! உன் யோசனை ஒன்றும் சரியல்ல. அந்தப் பாண்டவர்களைத் தந்திரத்தினால் ஜயிக்கமுடியாது. நீ முன்மே செய்த தந்திரங்களினாலே அவர்களை வென்றாயா? இவ்விடத்தில் சிறை[illegible]ர் களாயிருந்தபோதே உன்னால் முடியாமற் போயிற்றே, இப்போது அவர்கள் வேறு தேசத்தில் சிறப்படைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு அதிர்ஷ்டமிருப் பதினால் காமம் முதலிய துன்பத்தால் வெல்லுதும் முடியாத காரியம். அன்றியும் அவர்கள் சக்திபுள்ளவர்கள். தங்களுக்குப் பரம்பரையா ன இராஜ்யத்தைப் பெற விருப்பமுள்ளவர்கள்: அவர்களுக்குள் மித்திரபேதஞ் செய்வது முடியாது. ஒரு மனைவியிடம் நேசம் வைத்தவர்கள் விரோதப்படார். திருஷ்ணையை அவர்களிடத்தில் விரோதிக்கும்படி செய்யமுடியாது. இவர்களை அவர்களையே வரித்தவள், இப்போது சிறந்திருக்கும்போது வெறுப்படைவா

ளோ? ஒருத்திக்குப் பல கணவர்கள் இருப்பது பெண்கள் விரும்பக் கூடிய விசேஷம் அதைக் கிருஷ்ணை யடைந்திருக்கிறாள். அவளே மித்திர பேதஞ் செய்ய முடியாது. துருபதன் யோக்கியனான அரசன் அவன் திரவியத்தை அபேக்ஷிக்கமாட்டான். இராஜ்யம் முழுவதும் கொடுத்தாலும் பாண்டவர்களை விடமாட்டான் என்பது நிச்சயம். திருஷ்டத்யும்னனும் அப்படியே. ஆதலால் ஜயிப்பது முடியாது. பாண்டவர்கள் வேருன்றிக் கொள்வதற்கு முன்னமே அவர்களை புதரத்தில் ஜயிக்கவேண்டும். இதுதான் தற்காலத்துக்கேற்ற தகுந்த யோசனை. நமது பட்சம் வலுத்தும் துருபதன் பட்சம இளைத்தும் இருக்கிற இந்தச் சமயத்திலேயே யுத்தஞ் செய்து ஜயிக்கவேண்டும். ஆனையால் வாகனங்களும், படைகளும், துணைகளும் அவர்களுக்கு மிகுதியாவதற்கு முன் அவர்கள் மேல் எதிர்த்து செல்லு. பாஞ்சால ராஜன் மஹாபராக்கிரமசாலியான தன் புத்திரர்களுடன் யுத்தத்துக்குச் சித்தமாவதற்கு முன்னமே யெதிர்த்துச் செல்லு. கிருஷ்ணை பாதவ வீரர்களோடு பாஞ்சாலதேசம் போவதற்கு முன்னமே புறப்பட தொடங்கு. கூத்திரியர்களுக்கு பராக்கிரமமே சிறந்தது. பராக்கிரமத்தாலேயே இந்திரன் இராஜ்யம் பெற்றான். ஆகையால் பராக்கிரமத்தைச் செலுத்திப் பாண்டவர்களே ஜயிக்க முயற்சி செய். உபாயத்தால பாதவர்களே ஜயிக்கலாமென்பது எவ்வகையிலு முடியாத சாபம் என்று கிருஷ்ணன் கர்ணன் சொன்னதைக் கேட்ட திருதராஷ்டிரன் அவனைப் புகழ்ந்து: ர சொல்லுகிறான். கர்ணு! மிகுந்த புத்திசாலியும் தனுர்வேதத்தில் சிறந்தவனுமான நீ கூறியது சரியானதுதான், ஆயினும் பீஷ்மர், துரோணர், விதுரன் மூவரோடும் கலந்து யோசித்துச் செய்யுங்கள என்று சொல்லிப் பீஷ்மர், துரோணர் முதலானவர்களையும், மந்திரிகளையும் வருவித்து யோசனை செய்தான்.

222-வது அத்தியாயம்.

விதுராகமன பாவத் தொடர்ச்சி.

பீஷ்மர், பாண்டு புத்திரர்களோடு விரோதம் வைத்துக்கொள்வது எனக்குச் சிறிதும் மார்க்கத்திலும் இஷ்டமில்லை. எனக்குத் திருதராஷ்டிரனும் பாண்டவர்களும் சமானமானவர்களே. குந்தி புத்திரர்களும் காந்தாரி புத்திரர்களும் சரியானவர்களேயாம். அந்தப் பாண்டு புத்திரர்களைக் காப்பாற்றுகிறது எனக்குக் கடமை யிருக்கிறது போல உனக்குங் கடமை. எனக்கும் உனக்கும் எப்படியோ அப்படியே தான் துரியோதனனுக்கும் மற்ற சௌரவர்களுக்கும் அது கடமை. ஆகையால் அவர்களோடு கலகம் செய்வதில் எனக்குப் பிரியமில்லை. அவர்களோடு சமாதானமாய் அவர்களுக்குரிய பாதி ராஜ்யத்தை அவர்களுக்குக் கொடுப்பதே தகுதியாம் இந்த இராஜ்யம் துரியோதனனுக்கு

மாத்திரமல்ல. பாண்டவர்களுக்கும் பரம்பரையாக வந்த இராஜ்யம்தான். சூழ்ச்சாய் தூரியோதனு! இந்த இராஜ்யத்தை நீ விரும்புகிறதுபோலவே அவர்களும் தங்களுடைய பிதிரார்ஜிதமென்று அதைப் பெற விரும்புகிறார்கள். அந்தப் பாண்டவர்கள் இந்த இராஜ்யத்துக்குரியவராகா விட்டால் உனகுத் தான் ஏது? பரத வம்சத்தில் பிறந்த மற்றவர்களுக்குத்தான் ஏது? துரியோதனு! நீ முறை தவறாக இராஜ்யத்தை அடைத்திருக்கிறாய். அவர்களும் உனக்கு முன்னமே இராஜ்யத்தை யடைந்தவர்களேயாம். அவர்களுக்குரிய பாதி யிராஜ்யத்தை அவர்களுக்குக் கொடுப்பதுதான் நியாயம. இப்படிச் செய்வதைத் தான் சகல ஜனங்களும் விரும்புகிறார்கள். மாறிச் செய்தால் ஒருவருக்கும் இஷ்டமாகாது. உனக்கும் தீராத அபகீர்த்தி வரும். கீர்த்தி பைத் காப்பாற்ற முயலு, கீர்த்திதான் நிறந்தவலிமை புகழ் அழிந்த மனித னுடைய வாழ்வு பயனற்றது, துரியோதனு! கீர்த்தி அழியாமல் உள்ள வரையில்தான் உயிருள்ளவன். ழிந்த பின் பிணத்துக்குச் சமானமேயாவான். ஆதலால் குருவம்சத்துக்கு தகுதியுள்ளதான இந்தக் காரியத்தைச் செய், நல்ல காலத்தினால் பாண்டவர்கள் ஜீவிதரிருக்கிறார்கள், நல்ல காலத்தினால் அந்தக் குந்தியும் பிழைத்திருக்கிறாள். நல்ல காலத்தினால் புரோசனன் தன் எண்ணம் முடியாமல் எரிந்து போனான். துரியோதனு! குந்தியும் குந்தி புத்திரர்களும் நகிக்கப்பட்டார்கள் என்ற கேட்டுப் பட்டதுமுதல் இந்த உலகத்தில் எதையும் பார்க்க எனக்குப் பிரியமில்லை. இந்த விஷயத்தில் உலகம் உனனைக் குறைமூள்ளவனெச் சொல்லுவதுபோலப புரோசனனைச் சொல்ல மாட்டாது. அவர்களை தப்பிப் பிழைத்திருப்பது உனது சூற்றத்துக்குப் பரிகாரமாகும், பண்டவர்களுடன் தேசத்தை நீ விரும்பவேண்டாம். அவர்கள் ஜீவித்திருக்கையில் அவர்கள் சுதந்தரத்தை யெடுத்துக்கொள்ள இந்திரனலும் முடியாது. அவர்களனைவரும் தர்மந்தலமுறைவர்கள் எல்லாரும் ஒரே பலமுள்ளவர்கள். இராஜ்யம் உனக்கும் அவர்களுக்கும் பொதுவாயிருக்கின்றது. நீயோ அதர்மத்தினால் அவர்களை விலக்கிவிடப் பார்க்கிறாய். தர்மத்தையும், என் இஷ்டத்தையும் உன் க்ஷேமத்தையும் செய்ய விரும்பினால் அவர்களுக்குரிய பாதி இராஜ்யத்தை அவர்களுக்குக் கொடுத்து விடு என்று சொன்னார்.

223-வது அத்தியாயம்.

விதுராகமன பர்வத் தொடர்ச்சி.

துரோணர் சொல்லுகிறார். திருதராஷ்டிர மஹாராஜா இராஜ்ய ஆலோசனைக்காக அழைக்கப்பட்ட ஆப்தர்களானவர்கள் தர்ம அர்த்தம் புகழ் இவைகளுக்கு ஒத்துப் பேசவேண்டும். பீஷ்மருடைய அபிப்பிராயம் எதுவோ அதுவே என் கருத்துமாம். பாண்டவர்களுக்குப் பாகம் கொடுக்கவேண்டியது

அவசியம். இது புராதனமான தர்மம். பாண்டவர்களுக்குச் சேரந்த பொருள் களோடு ஒரு வன் திருபத ராஜனிடம் போகவேண்டும். அவன் இன் சொல் பேசுகிறவனுக இருக்கவேண்டும் திருபதனுடைய சம்பந்தத்தினால் மிகுந்த மேன்மை நமக்கு உண்டாயிருப்பதாக அவனுக்குச் சொல்லவேண்டும். அந்த மனிதன் காரியத்தை இரகசியமாக வைத்துக்கொண்டு அவனிடம் போகவே ண்டும். பாண்டவர்கள் ஜீவித்து சேமத்துடனிருப்பதற்காக நீயும் தாயோ தனனும் மிகுந்த சந்தோஷம் அடைந்திருப்பதாகத் திருபதனிடம் சொல்ல வேண்டும். அவனிடத்தும் அவன் புதல்வர்களிடத்திலும் அவாகளுடைய சம்பந்தம் மிகுந்த யோக்கிய முடையதென்று பல முறை விரித்துச் சொல்ல வேண்டும். பாண்டவர்களுக்கும் சுற்றத்திற்கும் பிரிய வசனங் கூறவேண்டும். திரௌபதிக்குப் பலவகை ஆடையாபரணங்களை அனுப்பவேண்டும். பிறகு பாண்டவர்களை இங்கே அனுப்பவேண்டுமென்று திருபதனிடம் கேட்கவேண்டும். அவன் சம்மதித்த பின் சாதனனும் வீரர்களும் அவர்களை அழைத்துவரும்படி சேனைகளுடன் போகவேண்டும். பாண் டவர்கள் உம்மால் கௌரவம் செய்யப்பட்டு தங்களுடைய பிதாவின் இராஜ் யத்தில் சுகமாக இருக்கவேண்டும். இதுதான் நீ அவர்களிடத்திலும் உனது புத்திரர்களிடத்திலும் நடந்துகொள்ளவேண்டிய முறைமையாகும். இதுதான் எனது அபிப்பிராயம் என்ற சொல்லினார்.

இதைக்கேட்ட கர்ணன், திருதராஷ்டிர மஹாராஜனே! உம்மாலே பொ ருளையும் பெருமையையும் பெற்றும், உமக்கு அந்தரங்கமா யிருக்கிற இவ்விரு வருமே உமது நன்மையை யோசித்துக சொல்லவில்லை. இதை விட ஞாசரி யமேது? மனதிலே துர் எண்ணத்தை வைத்துக்கொண்டு, உண்மையை வெளி படுத்தாமலிருப்பவன் சன்மார்க்க முடையவனுவதில்லை. கஷ்டம் வருமபோ து மித்திரர்கள் நன்மைக்கும் தீமைக்கும் உபயோகப்படுவதில்லை. இனபம் வரு வதும் துன்பம் வருவதும் விதியைப் பொறுத்தது. மனிதன் அறிவுள்ளவனு ஞலும், அறிவில்லாதவனுலும், தியவனுலும், பெரியவனுலும் துணை புள்ளவனுலும, இல்லாதவனுலும், எவ்விடத்தும் எல்லாவற்றையும் தன் விதிக்குத்தக்கபடி அடைகிறான். மகததேசத்தில் அம்புவீசன் என்றொரு அரசனிருந்தான். அவன் எல்லாக காரியங்களிலும் மந்திரிகளையே நம்பி யிருந்தான். தான் ஒரு காரியமும் பார்ப்பதில்லை. அவனுடைய மந்திரி மஹாகர்வியாகி தனி அரசனுக இருந்தான். அவனை அரசனே அவமதித்தான். அரசனுடைய மனைவி, திரவிய முதலிய எல்லாவற்றையும் அபகரித்தான். பின் பேராசையால் இராஜ்யத்தையும் எடுத்துக்கொள்ள உத்தேசித்தான். ஆனலும் அதுமட்டும் முடியவில்லை. எதினுல் என்றால் இராஜ்யத்தை யெடுத் துக்கொள்ளும் விதி அவனுக்கு இல்லை. அவ்வரசனுக்கு அந்த ராஜ்யம் விதி யினுல் ஏற்படுத்தப்பட்ட தென்பது நிச்சயம். மஹாராஜனே! உனக்கும் இரா ஜ்யம் விதியினுல் கொடுக்கப் பட்டதானுல் அதை ஒருவராலும் அசைக்கமுடி

யாது. உன்னை விட்டும் அது போகாது. இப்படியே மந்திரிகளின் யோக்கியதை அயோக்கியதைகளையும் ஊகித்தறிந்துகொள்ள வேண்டும. நல்லவருடைய பேச்சையும் கெட்டவர் பேச்சையும் தெரிந்துகொள்ளவேண்டும் என்று சொன்னன். துரோணர் கோபம்கொண்டு, துஷ்டா! நீ யெதிரகாக இந்தப் பேச்சைப் பேசினயென்பது எங்களுக்குத் தெரியும் நீ பாண்டவரிடம கொண்ட துவேஷத்தினலே எங்கள் மேலும் குற்றம கூறினய். சர்ஜ! நான் பரதகுல அபிவிருத்தியைக் கருதி மேலான நன்மையைச சொன்னேன். நீ துர்ப்புத்தியினல் கெடுதலாக வினைத்தாய் இதற்குமாறுக எதாவது செய்தால் கௌரவ குலம் சீக்கிரத்தில் கெடும் என்றார்.

224-வது அத்தியாயம்.

விதுரராகமன பர்வத் தொடர்ச்சி.

பின் விதுரர் திருதராஷ்டிரனை நோக்கி மஹாராஜாவே! உன்னுடைய பந்துக்கள் உனது நன்மையைச் சொல்லவேண்டும். உனக்குப் பிரியமில்லாவிட்டால் சொல்வதினல் பயனில்லை.பீஷ்மர் உனது நன்மையையும் நீ விரும்பவேண்டியதையும் சொன்னர். துரோணரும் அப்படியே பலதரம் சொன்னர். நீ அதை ஏற்றுகொள்ளவில்லை. ன் உனக்கு நன்மையைச் சொல்லவில்லை. என் புத்திக் கெட்டினடில் பீஷ்மர் துரோணரைவிட மேலான அறிவுள்ளவனும இருப்பானென்று நான் நினைக்கவில்லை. இவரிருவரும் புத்தியாலும் கல்வியாலும் வயதாலும பெரியவர்கள். உன்னிடத்திலும பாண்டவரிடத்திலும சமபுத்தியுடையவர்கள். தானத்திலும் சத்தியத்திலும் மேன்பட்டவர்கள். இதற்கு முன்னுமிலேயும் உனக்குத் தீமை சொன்னவர்களில்லை. உன் விஷயத்தில் யாதொரு தீங்கு செய்ததாகவும் தோன்றவில்லை. அப்படிப்பட்ட புருஷ சிரேஷடர்கள் ராஜனுக்கிய நீ குற்றமறறவனுக ஆருக்கையில் உன் நன்மையை எண்ணிக்கமாட்டார்கள். தர்மம் தெரிந்த இவர்கள் ஆசையினல் பட்சபாதகமாகப் பேசமாட்டார்கள் துரியோதனியர்கள் உனக்குப் புத்திரர்களாக இருப்பதுபோலவே பாண்டவர்களும் உனக்குப்புத்திரர்கள்; பாண்டவர்களுக்கு விரோதமாகப் பேசுகிற மந்திரிகள் உன்னுடைய க்ஷேமத்தை யோசியாதவர்களே யாவாகள். பீஷ்ம துரோணர்கள் பாண்டவர்களை வெல்ல முடியா தென்று சொன்னர்களே அதும உண்மைதான். ஆனல் உனக்குச் சுகமுண்டாகவேண்டும். ராஜாவே! பிறக்தவனும் ஸவயசாசியுமான தனஞ்செயனை வெல்ல தேவேந்திரனுக்கு ஆகாது என்பது நிச்சயம். இடிம்பனையும் பகாசுரனையும் தன் கையால் வென்ற பதினயிரம் யானைபலமுள்ள பீமனை வெல்லத் தேவராலும் ஆகாது. நகுலசகாதேவர்களை வெல்ல நினைக்கிறவன் தன்னுயிர்க்கே தீங்கு நினைப்பவனவான். தைரியம், தயை, பொறுமை, சத்தியம், பராக்கிரமம் இவைகளோ ஸ்திரமாகவுடைய பா

ண்டவர்களில் மூத்தவரான யுதிஷ்டிரரை வெல்ல எவரால் மூடியும்? பலராமரை ஆதாரமாகவும், கண்ணனே மந்திரியாகவும் சகாதேவனே சகோதரனுகவும், சாத்யகியைத் துணையாகவும் பெற்ற விளங்குகிற பாண்டவர்கள் ஜயம் பெறுவார்களென்பதில் என்ன தடை யிருக்கிறது; அரசனே! நீ அவர்களை ஜயிக்க மூடியா தென்பதையும் அவர்கள் இராஜ்யத்துக்குரியவர்கள் என்பதையும் ஆராய்ந்து பார்த்து அவர்கள் விஷயத்தில் எப்படி நடக்க வேண்டுமோ அப்படி நடந்துகொள். அரசனே! புரோசனனால் உண்டான அபகீர்த்தியான மாசு உன்மேல் சுமந்திருக்கிறது. பாண்டவர்களிடத்தில் இப்போது தயை செய்வதினால் அதை ஒழித்துக்கொள். அவர்களிடம் இப்போது தயை பாராட்டுவது நமது குலத்துக் கெல்லாம் பிராணதாரமும், க்ஷேமமும், கூத்திரியர்களுக்கு அபிவிருத்தியுமாகும். தருபதனும் பெரிய இராஜன். நம்மிடத்திலும் முன்னமே விரோதம் கொண்டவன். நம்முடைய குல க்ஷேமத்துக்காக அவனைச் சிநேகிதம் செய்துகொள்ள வேண்டும். யாதவர்களும் பராக்கிரமசாலிகள். கிருஷ்ணன் சேருகிற பட்சத்திலேதான் அவர்கள் எல்லாரும் சேருவார்கள். கிருஷ்ணன் எந்தப்பட்சத்தில் சேருவாரோ அங்கேதான் ஜயம் நிச்சயம். இனிய சொல்லினால் சாதிக்கக் கூடிய காரியத்தை பகையால் மூடிக்க விரும்புகிறவன் சாபவசப்பட்டவனுவான். பாண்டவர்கள் ஜீவித்திருப்பதைக் கேட்டு நகரத்திலுள்ளவர்களும், தேசத்திலுள்ளவர்களும் அவர்களைப் பார்க்க விருப்பமாயிருக்கிறார்கள், அவர்களின விருப்பத்தையும் நிறைவேற்றவேண்டியதாக. துரியோதனன், கர்ணன், சகுனி இவர்களுக்கு எப்போதும் பாவத்திற் சிந்தைசெல்லும். அவர்கள் புத்திகெட்ட நீசர்கள். அவர்கள் சொல்லுகிறபடி செய்யாதே. துரியோதனன் ஒருவனுடைய குற்றத்திலேனு இந்த ஜனங்களெல்லாரும் அழியப்போகிறார்கள் என்பதை முன்னமே சொல்லியிருக்கிறேன் என்று சொன்னர்.

225-வது அத்தியாயம்.

விதுராகமன பர்வத் தொடர்ச்சி.

திருதராஷ்டிரன், விதுரா! பீஷ்மரும், துரோணரும் நன்மையைச் சொன்னர்கள். நீயும் அப்படியே சொன்னாய் வீரர்களான பாண்டவர்கள் பாண்டவர்க்கு புத்திரர்களாயிருப்பது போலவே எனக்கும் புத்திரர்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்த இராஜ்யம் என் புத்திரர்களுக் குரியதாவது போலவே அவர்களுக்கு முரியதுதான். விதுரா! நீயே புறப்பட்டுப் போய் பாண்டவர்களையும் கிருஷ்ணையுடன் குந்தியையும் அழைத்துக்கொண்டு வா. நல்லதாலம். பாண்டவர்கள் ஜீவித்திருக்கிறார்கள். மஹாரத வீரர்களான

பாண்டவர்கள் கிருஷ்ணனை அடைந்ததும் சர்தோஷமே. அதிருஷ்டத்தினாலே நாமெல்லாரும் அபிவிருத்தியாகிறோம். புரோசனன் ஒழிந்ததும் நல்ல காலம் தான். விதுரா! எனது பெருந்துயரம் நல்ல காலத்தினால் ஒழிந்தது. நீ போய் உடனே அவர்களை அழைத்துகொண்டு வா என்றான். அப்படியே விதுரர் வேகமாய்ச் செல்லும் குதிரைகள் கட்டின தேரிலெறிச் சீக்கிரத்தில் பாஞ்சால நகரம் போனார். குருபதனுக்கும் கிருஷ்ணைக்கும், பாண்டவர்களுக்கும் பலவகையான நிதிகளைகள், நிலையங்களை யெடித்துக்கொண்டு போனார். துருபதனிடம் முறைப்படியே போனார் துருபதனும் அவரை மூறைப்படி அழைத்தான். ஒருவருக்கொருவர் மரியாதை செய்து யோக க்ஷேமத்தை விசாரித்து மகிழ்ந்தார்கள். விதுரர் அவளிடத்தில் பாண்டவர்களையும் கிருஷ்ணையும் பார்த்துத் தழுவிக்கொண்டு மகிழ்ந்தார். திருதராஷ்டிரன் பாண்டவர்களுடைய யோக க்ஷேமத்தைப் பல முறை விசாரித்ததாகச் சொன்னார். அவர்கள் செய்த பூஜை ஏற்றுக் கொண்டார் தாம் கொண்டுவந்த வெகு மதிகளை அவரவர்களுக்குக் கொடுத்தார். பிறகு எல்லாருக்கும் முன்னிலையில் திருபதனை நோக்கிச் சொல்லுகிறார்.

அரசனே! மந்திரிகளோடும், புத்திரர்களோடும் என் சொல்லைக் கேளும் திருதராஷ்டிர மஹாராஜன் தன் பந்து, மித்திரர், மந்திரிகளோடு யோக க்ஷேமத்தை விசாரிக்கின்றார். உமது சம்பந்தத்தினால் மிகுந்த சந்தோஷமடைந்திருக்கிறார் பீஷ்மரும், கௌரவர்களும் அன்புடன் உன் க்ஷேமத்தை விசாரிக்கிறார்கள். அவர்கள் உமது சம்பந்தமடைந்ததாலே கிருதார்த்தர்களானதாக நினைத்து மகிழ்கிறார்கள் நீ இதை மனத்தில் பாண்டவர்களை அனுப்பவேண்டும். கௌரவர்கள் பாண்டவர்களைப் பார்க்க மஹா ஆவலுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். கௌரவ ராஜஸ்திரீகளெல்லாரும் பாஞ்சாலியைப் பார்க்க விரும்புகிறார்கள் எங்கள் நகரத்திலும் தேசத்திலுமுள்ள ஜனங்களெல்லாரும் விரும்புகிறார்கள். ஆகையினால் பாண்டு புத்திரர்கள் பத்தினியோடு கூட எங்கள் நகரம் போக விடை கொடுக்கவேண்டும். நீ உத்தரவு கொடுத்த பின் பாண்டவர்கள் வரப்போகிறார்கள் என்று திருதராஷ்டிரனுக்குத் தூதர்களை அனுப்பவேண்டும் என்று கூறினார்.

226-வது அத்தியாயம்.

விதுராகமன பர்வத் தொடர்ச்சி.

துருபதன் சொல்லுகிறான், ஞானவானாகிய விதுரரே! நீர் எனக்குச் சொல்லியது சரி. எனக்கும் இந்த சமபந்தம் சர்தோஷமே. மஹாத்மாக்களான பாண்டவர்கள் தங்கள் தேசம் போவதும் நியாயம். ஆனாலும் நான் என் வாயால் சொல்லத் தகாது. பாண்டவர்களும் இராம கிருஷ்ணர்களும்

எப்பொழுது அப்படி நினைப்பார்களோ அப்போது போகலாம் இராமகிருஷ்ணர்கள் பாண்டவர்களுடைய இதச்தையே நிந்திப்பவர்கள் என்றார். யுதிஷ்டிரர், அரசனே! நானும் என்னைச் சேர்ந்தவர்களும் உமக்குச் சுவாதீனமானவர்கள். நீர் அன்போடு எதைச் சொன்னலும் நாங்கள் செய்வோம் என்றார். பின் கிருஷ்ணசுவாமியானவர், முன் சொன்னதே சரியென்று எனக்குத் தோன்றுகிறது சகல தர்மங்களுந் தெரிந்த துருபத மஹாராஜா என்ன எண்ணுகிறாரோ தெரியவில்லை யென்றார். துருபனை, பாண்டவர்கள் எனக்கு எப்படியோ அப்படியே கிருஷ்ணனுக்கும். பாண்டவர்களின் சுமைமையைப் பற்றிக் கிருஷ்ணன் நினைபபதுபோல யுதிஷ்டிரரும் நினைப்பதில்லை. ஆகலால் கிருஷ்ணன் இந்த காலத்திற்கேற்ற தென்று சொல்லுகிற தெதுவாலும் அதுவே எனது சம்மதமென்றான் பிறகு விதுரர் குந்தியிடம் போய் அவள் பாதங்களில் வணங்கினார் குந்தி மிகவும் விநயப்பட்டு உமது புத்திரர்களை நீர் எப்படியோ காப்பாற்றினீர். அரக்கு மாளிகையில் இறந்துபோனவர்களை உமது கிருபையால் மீண்டுவந்தார்கள் ஆமை தான் எங்கே இருந்தாலும் தன் குஞ்சுகளை நினைப்பதுபோல உமது எண்ணத்தினாலே உமது புத்திரர்களும் க்ஷேமமாக யடைந்தார்கள். உமது புத்திரர்கள் உம்மிடம் வைத்திருக்கும் பக்தியினாலேயே பிழைத்திருந்தார்கள் குயில் குஞ்சுகளைக் காக்கை வளர்ப்பதுபோல நீர் என் புத்திரர்களைக் காப்பாற்றுகிறீர். இனி செய்யத் தக்க காரியத்தையும் நீரே யறிந்து செய்யவேண்டும். நான் ஒன்றும் அறியேன் என்றாள். விதுரர், குந்தி! மஹா பலசாலியான உன் புத்திரர்கள் அழிவதில்லை. அவர்கள் சீக்கிரத்தில் தங்கள் இராஜ்யத்தைப் பெறுவார்கள். நீ வருத்தப்படாதே யென்றார்.

துருபன் சம்மதப்பட்ட பின் விதுரர், கிருஷ்ணனையும் பாண்டவர்களையும் அழைத்துக்கொண்டு அஸ்தினபுரம் போனார். அப்போது பாஞ்சாலன் சாவாலகுமாரர்களோடு கூடிய ஆயிரம் யானைகள், ஆயிரம் தேர்கள் ஐம்பதினாயிரம் குதிரைகள், பதினாயிரம் தாதிகள், பதினாயிரம் தேவர்கள் மற்றும் வேண்டியவெல்லாம் கொடுத்தான். படுக்கைகள் பல்லக்குகள், ஆசனங்கள் பரிவாரங்கள், பசுக்கள் முதலியவெல்லாம் கொடுத்தான் திருஷ்டத்யும்னன் வெகு தூரங்களோடு தங்கையை அழைத்துக்கொண்டு போனான், திருதராஷ்டிரன் பாண்டவர்களை எதிர் கொள்ளும்படி துரோணர் கிருபர், விகர்ணன் சித்திரசேனன் முதலானவர்களை அனுப்பினான். நகரத்து ஜனங்கள் பாண்டவர்கள் வந்ததைக் கேட்டு நகரத்தை அலங்கரித்தார்கள். எங்கும் நண்ணீர் தெளித்து, மலர்களைத் தூவி, மங்கள தாவியங்களிட்டு, தூபம் போட்டு தோரணங்களை மாலைகள் கட்டி அலங்கரித்திருந்த அஸ்தினபுரத்தில் பாண்டவர்கள் பிரவேசித்தார்கள். இந்த வீரர்கள்மூன்று திருதராஷ்டிரனால் வருத்தப்பட்டு இப்போது மீண்டு வந்தார்கள். நல்ல காலம்தான் என்று ஜனங்கள் பேசிக்கொள்வதைப் பாண்டவர்கள் எவ்விடத்தும் கேட்டார்கள். நம்மைத் தம் குழந்தை

களைப்போலக் காப்பாற்றும் புருஷர் இதோ வந்து விட்டார். இந்த பாண்டு மஹாராஜாவின் கமண்டலுவை நீக்க வனத்திலிருந்து வந்தாற் போலிருக்கிறது. நாம புண்ணியம் பண்ணினபடியால் நாம் விரும்பின பொருள் கிடைக்கப் பெற்றோம் இவர்கள் ஏழு வருஷம் இங்கேயிருந்து அரசாளவேண்டுமென்று சொன்னார்கள். பாண்டவர்கள் பீஷ்மர் முதலிய பெரியோரை வணங்கினர். நகரத்தாரெல்லாரும் வந்து க்ஷேமம் விசாரித்தார்கள். பின் அரண்மனையிற் புகுந்தார்கள்.

227-வது அத்தியாயம்.

ராஜ்யலாப பர்வம்

துரியோதனன் வியாகுல சாரிராஜன் புத்திரி திருதராஷ்டிரனுடைய மற்ற புத்திரர்களுடைய மனைவிமார்களுடன் வந்து, இலட்சுமியைப் போல விளங்கும் திரௌபதியை மரியாதையோடு அழைத்தாள். குந்தி திருஷ்ணையோடு காந்தாரிக்கு நமஸ்காரம் செய்தாள். காந்தாரி அவர்களை ஆசீர்வதித்து திருஷ்ணையைத் தழுவிக் கொண்டாள். அப்போது இவள்தான் என் புத்திரர்களுக்கு எமன் என்ற சப்தம் உண்டாயிற்று. பின் காந்தாரி யுதிஷ்டிரனை யோசிக்கத் விதுரரைப் பார்த்து கல்யாணகுர்த்தத்தில் குந்தியைப் பாண்டவர்கள் இங்கு அழைத்துக்கொண்டு போம் அவள் தன் சொந்த வீட்டில் வசிப்பது நல்லது என்றாள். விதுரரும் அங்கீகரித்து அப்படியே செய்தார். நகரத்தாரும் பீஷ்மர் முதலியவர்களும் அவர்களை உபசரித்தார்கள். விதுரர் பாண்டவர்களுக்கு வேண்டியவைகளைக் குறைவறச் செய்து வந்தார்.

சொஞ்சகாலமான பிறகு திருதராஷ்டிரனும் பீஷ்மரும் அவர்களை வரவழைத்தார்கள். திருதராஷ்டிரன், யுதிஷ்டிரா! நான் சொல்வதைக் கேள். இந்த ராஜ்யம் பாண்டுவினால் ஸ்ருஷ்டி செய்யப்பட்டது. என் கட்டளையால் எல்லாக் காரியங்களையும் செய்து வந்தான என் புத்திரர்கள் துஷ்டர்களென்று நீ நினைக்காதே. நம காரியத்தையே பார்ப்பவர்கள் என கட்டளை செய்யமாட்டார்கள். இவர்களோடு விரோதம் வேண்டாம். நீ காண்டவப் பிரஸ்தத்துக்குப் போ. இந்திரனால் தேவர்கள் காக்கப்படுவதுபோல சகோதரர்களால் காக்கப்பட்டுவருகிற உன்னை வருத்தப்பிடித்த ஒருவராலும் முடியாது. பாதி இராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு காண்டவப்பிரஸ்தம் போய்ச்சுகமாய் அரசுபுரி. திருஷ்ணைக்கும் இஷ்டமிருந்தால் அப்படியே செய்யலாமென்றான். பாண்டவர்கள் அந்த வாக்கியத்தை அங்கீகரித்துக் கொண்டார்கள். அவனுக்கு நமஸ்காரம் செய்தார்கள் திருதராஷ்டிரன் விதுரரை அழைத்து பட்டாபிஷேக சாமக்ரியைகளைச் சேகரம பண்ணுவென்றான் பிராமணர்களையும் சங்கத்தலைவர்களையும், நகரத்தாரையும் அழைக்கவேண்டும். பிராமணர்

களுக்குக் கோதானம், பூதானம் முதலிய தானங்கள் செய்யவேண்டும். அயிரத்தெட்டு யானைகளில் கங்கா ஜலங்கொண்டுவர வேண்டும். யுதிஷ்டிரனுக்கு மகுடாபிஷேகம் செய்து ஆபரணங்களைப் பூட்டி அலங்கரித்த இராஜவாகனத்தில் வெண்சாமரை வீச விளக்குவதைக் கண்டு அவன் சிநேகிதர்களும் பந்துக்களும் களிக்கட்டும். இப்படிச் செய்வதனால் பாண்டு எனக்குச் செய்த உபகாரத்துக்குப் பிரதி உபகாரம் செய்ததாகும் என்றான்.

அது கேட்ட பீஷ்மர், துரோணர், கிருபர், விதுரரும் சரி சரி யென்றார்கள். கிருஷ்ணரும் அவ்வண்ணமே பெற்ற மஹாராஜாவே இது தகும் என்றார். இது கௌரவர்களுக்குக் கீர்த்தியைச் செய்யத்தக்கது. இந்த காரியத்தைச் சீக்கிரத்தில் நிறைவேற்றும் என்றார். இப்படிச் சொல்லித் தூரிதப்படுத்தித் திருதராஷ்டிரன சொன்னதை அப்போதே செய்வித்தார். வியாசர் யுதிஷ்டிரரைச் சிம்மாசனத்திலிருந்து சீக்கிரம் இராஜசூய ஜயித்து இராஜ்யமும் முதலிய யாகங்களைச் செய்து வேண்டியவர்களுடன் மகிழ்ந்திருக்கக் கடவா யென்று வாழ்த்தினார். பின் எல்லாரும் தர்மபுத்திரரை அரிவலித்தார்கள். அபிஷேகம் செய்யப்பெற்ற யுதிஷ்டிரர் அளவற்ற தனத்தைத் தானம் செய்தார். பின் நகர்வலம் வந்து பிரஜைகளால கொண்டாடப்பெற்று வீட்டில் பிரவேசித்தார். இதனால் துரியோதனன் முதலானவர்களுக்குத் துக்கமுண்டாயிற்று. அதைக் கண்ட திருதராஷ்டிரன் யுதிஷ்டிரரை அழைத்துச் சொல்லுகிறான். நீ நல்ல மனமில்லாதவர்கள் அடையக் கூடாத இராஜ்யத்தைப் பெற்றாய். இப்போதே காண்டவப் பிரஸ்தம் போ. ஆயு, புரூரவன், யயாதி முதலிய பூருவம்சத்தாரெல்லாருக்கும் இராஜதானி. புரூரவனுடைய லோபத்தனத்தினாலே ரிஷிகள் அதை அழித்தார்கள். நீ சீக்கிரம் அங்கே போய் அதை விருத்தி செய் என்றான். பாண்டவர்கள் அவன் சொல்லியேற்று உடனே புறப்பட்டார்கள். நகரத்து ஜனங்களும் அவர்களுடன் போகப்புறப்பட்டனர். அந்தஜனபுரி ஜனங்கள் பாண்டவர்கள் கூடப் போகக் கூடாதென்று துரியோதனன் பரதபடைவித்தான். பாண்டவர்களுடன் கூடக் கண்ணனும் அந்நகரம் போனார். பின் அந்த நகரத்தைச் சொர்க்கம்போலச் செய்தார் கிருஷ்ணன் இந்திரனை நினைத்தார். இந்திரன் விசுவகர்மாவை அழைத்து காண்டவ்ய பிரஸ்தம் இன்று முதல் இந்திரப்பிரஸ்தமென்ற பூமியில் சிறந்து இருக்கும்படி செய் என்றான். அவன் போய்க் கிருஷ்ணனைக்கண்டு நான் என்ன செய்கிறது என்றான். இந்த நகரத்தை அமராவதிபோலிருக்கும்படி செய் என்றார். அவன் உலகத்தார் வியக்கும்படி செய்தான். வியாசர் முதலியவர்கள் சமஸ்தோமஞ் செய்து அது இந்திரப்பிரஸ்தமாகட்டு மென்றார். அது அகழிகளாலும் மதிலரணாலும் இந்திர நகரம் போல விளங்கிற்று. சகல ஆயுதங்களாலும் பண்டங்களாலும் நிரம்பியிருந்தது. அதில் விளங்கின யுதிஷ்டிரருடைய அரண்மனை இந்திரன், குபேரன் அரண்மனைகளைப்போல விளங்கிற்று. பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் சூத்திரர் முதல் எல்லா

ரும இதுசான் நல்ல நகரமென்று அறிந்து வசித்தார்கள். அந்த நகரத்தைச் சூழப் பல சோப்புகள் விளங்கின குளங்கள் பொய்கை யெல்லாம தாமரைக ளுலகசாளால நிரம்பின ஒரு ஆறு அந்நகரத்தைச சூழ ஓடிகொண்டிருந்தது. யானை குதிரை ஒட்டகங்களால விளங்கிற்று மற்றென்ன கூறுவது. அந்த நகரம இந்திரநகரம போலவே விளங்கியது அந்நகரத்தில் தாம புத்திரா கிருஷ்ணருடன பிரவேசித்தபோது அப்போது சங்கம் முதலிய வாத்தியங்கள் ஒலித்தன பிராமணாகள் ஜயஜயவென்று வாழ்த்தினாகள் வந்தியர் மாகதர் துதித்தாகள. நகரத்து ஜனங்கள் பிராமணரகளோடும கிருஷ்ணனையும் தாமரையும பூஜித்தாகள். பிறகு நாலாபகமும் இருந்து ஜனங்கள வந்து குடியேறினர்கள. பாண்டவர்களால் அரசுபுரியபபட்ட அந்நகரம் போகவதி யெனலும் பாதாள நகரம்போல விளங்கியது. பிறகு தாமபுத்திரா வியாசருக , விசுவகாமாவுக்கும் விடை கொடுதனுப்பினர். கிருஷ்ணனும் ஊருகுக சல்ல விருப்பமகொண்டார. அவரை நோக்கி கிருஷ்ண! உமது கருணையால் நான இராஜ்யம் பெறறேன். உமது கருணையாலேதான் இந்நகரம் வெகு மேன்மை யடைந்தது. உமது தயவினலே தான் நாங்கள் இராஜ்யதிலே நிலைதிருகிறோம். சகல காரியங்களையும் நீரே அறிந்து செயயவேண்டும் என்றார தருமர் கேட்ட கிருஷ்ணன மஹாராஜாவே! உமது சகதியினல் உமககு இராஜ்யம கிடைததது. பரம்பரையாக வந்த இராஜயம உமககு கிடைத்தது துரியோதனன் என்ன செயயகூடும் என்றார தாமததோடு இராஜ்யம் நாங்கிப் பிரஜைகளின் இஷ்டதைத அனுசரிதது பரிபாலனம செயயும பிராமணாகளை எவவகையிலும திருப்தி செயயும. மகிமைபுள்ள நாரதமுனிவர் இப்போது வருவர். அவர சொல்வதை முறைமையாக ஏற்றுகொள்ளும். அவர் உபதேசப்படி நடந்துகொள்ளுமென்று சொல்லிக் குந்திக்கு நமஸகாரம் செய்து நான் செலவு பெற்றுக் கொள்ளுகிறேன் என்று மதுர வசனமாகப் பேசினர். யாதவோத்தமனே! நான அரசகு மாளிகையிற் புகுந்தது உனககும் பலராமருக்குந்தான் தெரிந்திருநதது கோவிந்தா! நீ நாதரை எற்பட்டபடியால் பெருந்துயரத்தைக கடந்தேன நாதனில்லாதவாகளுக்கும் நீ நாதனல்லவா? நீர் னைப்பாராத்த உடனே எனகுமெலலாம விலகிப் போகின்றன கோவிந்தா! இந்தப் பாண்டவாகளை உன ஞாபகததில் வை நீ நினைப்பதினலேதான் இவாகள் ஜீவித்திருகினறனர எனறு சொன்னள் கிருஷ்ணரும் அப்படியே பாகட்டுமென்று சொல்லி அவரிடமிடை பெற்றுகொண்டு பலராமருடன் துவாரகை போய சேரநதார.

228-வது அத்தியாயம்.

இராஜ்யலாப பர்வத் தொடர்ச்சி.

ஜனமேஜயர், தபோதிதியே! பாண்டவர்கள் இராஜ்யத்தை அடைந்த பின் இந்திரப் பிரஸ்தத்தில் என்ன செய்தார்கள்? திரௌபதி அவர்களிடம் எப்படி நடந்து கொண்டாள்? பாண்டவர்கள் கிருஷ்ணை ஒரு தியினிடம் எப்படி நடந்து கொண்டார்கள்? விரோதப்படாமலிருந்தார்களா? இவைகளை யெல்லாம் கேட்க விரும்புகிறேன் என்று கேட்க வைசம்பாயனர் சொல்லுகிறார்.

பாண்டவர்கள இந்திரப பிரஸ்தத்தில் கிருஷ்ணையுடன் கூடிச்சுகித்திருந்தார்கள். சத்துருக்களை அடக்கி யிராஜ்ய பரிபாலனஞ் செய்து வந்தார்கள். இராஜ்ய விவகாரங்களை நடத்திக்கொண்டு சிலகாலங்களில் வீற்றிருந்தார்கள் அப்படி யிருக்கையில் ஒரு நாள் நாரத மஹரிஷி வாசுதேவ ராஜாவைப் பார்க்க விரும்பி ஆசாயமாக வந்தார். வேதம் வேதாங்கம் பலவகைச் சாஸ்திரம, உதாரபூர்வமீமாம்ஸை, இராஜநீதி தர்மங்கியம முதலியவை எல்லாம் வல்ல காரணமுனிவரைக் கண்ட யுதிஷ்டிரர் எதிர்கொண்டழைத்து வந்து வந்தனம் செய்து, அபிவாதனம பண்ணி ஆசனம் முதலிய பாத்திய ஆசமனீயங்களால் உபசரித்தது, இராஜ்பதனையும சிடத்து ஒப்புவித்தார் நாரத மஹரிஷி பூஜையைப் பெற்றுகொண்டு யுதிஷ்டிரரை ஆசீர்வதித்து யுதிஷ்டிரரை உட்கார உத்தரவளித்தார பின திரௌபதிக்கு நாரதர் வரங்களும் செய்தி தெரிவித்தார். அவள் உடனே வந்து நாரதருக்குப் பணிந்து கைகூப்பி நின்றாள். நாரதர் அவளை ஆசீர்வதித்து நீ அந்தப்புரம போகலாமென்றார். அவளும உடனே போய் விட்டாள். அவள் போன பிறகு பாண்டவர்களைப் பார்த்துக் கிருஷ்ணை உங்கள் ஐவருக்கும் பதினியா யிருக்கிறாள். இதனால் உங்களுக்குள் விரோதம் வராதபடி நடந்து கொள்ள வேண்டும் பூர்வத்தில் சுந்தோபசுந்தர் என்ற இரண்டு சகோதரர்கள் ஒற்றுமையுள்ளவர்களா யிருந்தார்கள் திரிலோகங்களிலும கீர்த்தி பெறறிருந்தார்கள். எவராலும ஜயிக்கமுடியாதவர்களாய் இருந்தார்கள். அவரிருவருக்கும் ஆசனம் ஒன்று, ஆசனம் ஒன்று; படுக்கை ஒன்று; இவ்வாறு பிரியமாக கூடியிருந்தார்கள். திலோத்தமை காரணமாகப் பகைமூண்டு ஒருவரையொருவர் வதைத்துக்கொண்டார்கள். ஆகையால் இது விஷயத்தில் விரோதம் உண்டாகாத மார்க்கத்தைச் செய்து கொள் என்று யுதிஷ்டிரருக்கு இரகசியமாகச் சொன்னார். யுதிஷ்டிரர் மஹரிஷியே! சுந்தோபசுந்தர்கள் என்பவர் யார்? யாருடைய புத்திரர்கள்? என்ன காரணம் உண்டாயிற்று? ஒருவரையொருவர் எப்படி வதை செய்தார்கள். திலோத்தமை யாருடைய பெண்? அவள் அப்சரஸ் ஸ்திரீயோ? அவள் யாருக்குச் சொந்தம்? இவைகளை விரிவாகக் கேட்க விரும்புகிறேன் என, வைசம்பாயனர் சொல்லுகிறார்

229-வது அத்தியாயம்.

இராஜ்யலாப பர்வத் தொடர்ச்சி.

நாரதர், குந்தி புத்திரா? இந்தச் சரித்திரத்தைச் சொல்லுகிறேன் உன் னுடைய சகோதரர்களுடன் கேளு. ஹிரண்யகசிபு எல்லும் அசுரராஜன் யமசதனில் நிகும்பனென்று ஒரு அசுர அரசனிருந்தான் அவனுக்குத தான் சுந்தோபசுந்தர்கள் பிறந்தார்கள். அவரிருவரும் ஈருடலுக்கு ஒருயிராய்ப் பிரிதல்லாமல் ஒரேமனமுள்ளவர்களாய் வாழ்ந்தார்கள். அவர்களுகு மூன்று லோகங்களையும் ஜயிக்கவேண்டு மென்கிற பிரியம் யற்று. அதற்காக தவஞ்செய்ய ஆரம்பித்தாகள் விந்தியமலையில் உக்கிரமான தபம் பண்ணினர் கெடுகாலம் வாபு பட்ச ம் செய்துகொண்டி தவம் புரிந்தார்கள். அவர்க ளுடைய தபாகனியாஞ் கெகப்பட்ட விந்தியமலையிலிருந்து புகை கிளம் பற்று. அது மிகவும் ரியமாக இருந்தது. அந்தத் தவத்தைக் கண்டு தேவர்கள் பயந்து அதற்கு இடையூறு செய்யத் தொடகினார்கள் அதேக அப்ஸரஸ்களை அனுப்பினார்கள். அவர்கள் அப்ஸரஸ்களைக் கண் லிழிதுப் பாராகவில்லை. பின்னும் அளவில்லாத மாயாஜாலங்களை யேவினார்கள். ஒன் றும் பயன்படவில்லை. பின் பிரமதேவரிடத்தில் அந்த அசுரர்களுகுப் பிரத்தியட்ச மாக வர்து வரந் தருகிறேன் என்றார். வ்விருவரும் பிரமதேவரை வினயத் தோடு வணங்கி, உயக்கு என்களிடம் ணையிருந்தால் நாங்களிருவரும் சகல அஸ்திரங்களையும் மாயைகளையும் தொகதுகொள்ளவேண்டும். நினைத்த ரூ பங்களை யெடுத்துக்கொள்ளும் சக்தியுள்ளவர்களாகவேண்டும், மரணமில் லாதவர்களாக இருகவேண்டும் எனறார்கள் பிரமதேவா மரணமில்லாநிருப் பது தவிர நீங்கள் கேட்ட மற்றலை யெல்லாம் உங்களுக்கு வரும் பாக்கிய விஷயத்தில் தேவர்களுச்குக் சமானமாக இருக்கும்படிக் கேளுங்கள். நீங் கள் ஜகவரியத்தை விரும்பித் தவம் செயதீர்கள். திரிலோகங்களையும் ஜயிக் விரும்பினீர்கள் ஆகையால் உங்களிஷடப்படி செய்கிறேன். மரணமில்லா மையைக் கொடுகக முடியாது என்றார். அசுரர்கள். பிதாமகரே! அப்படியானால் எங்களில் ஒருவரால் அல்லாமல் மூன்று உலகத்திலும் உள்ள ஸ்தாவர ஜங் மங்களினலாவது, வேறெதனலாவது எங்களுக்கு மரண பயமில்லாமலி வேண்டும் என்று கேட்டார்கள். அப்படியே தந்தேன் என்றார் பின் பிரம தேவா தம்முலகம் போனார் சுந்தோப சுந்தர்களும் தம் வீடி போய் சேர்ந் தார்கள். அது முதல் அவ்விருவரும் லீலை மதிக்கப் படாதபடி டையாபர ணங்களினல் அலங்காரம் பண்ணிக்கொண்டார்கள். தமது த்தாரோடு எப்போதும் சுகத்தோடிருந்தார்கள். நிலா வில்லாத காலத்திலும் விளாவை யுண்டு பண்ணிக்கொண்டார்கள். ஒவ்வொரு அசுரர் வீட்டிலும் தின், உண், குடி, பாடு, ஆடு என்கிற சொற்களே கேட்கப்படும். ஆடல் பாடல்களும் விளையாட்டுக்களுமே யெங்கும். இப்படி அநேக வருஷங்கள் ஒருதினம் போலச சென்று கழிந்தன.

230-வது அத்தியாயம்.

இராஜ்யலாப பர்வத் தொடர்ச்சி.

அவ்வீருவரும் மூன்று உலகங்களையும் ஜயிக்க விரும்பிச் சேனைகளை யெவ்விடத்துக்கும் அனுப்பினர்கள். தங்கள் கிரேஷ்டாதிடத்திலும், பெரியோர்களிடத்திலும் செலவு பெற்றுக்கொண்டு, மகாகட்சத்திரம் கூடின சுப தினத்தில் இராத்திரி தாங்களும் புறப்பட்டார்கள். சாரணரென்னும் பாடகர்கள் மங்கள பாடல்களையும் ஸ்தோத்திரங்களையும் பாடினர்கள். அசுரர்கள் ஜயஜய வென்று ஆரவாரஞ் செய்துகொண்டு பிரயாணப் பட்டார்கள். முகலில் சொர்க்கலோகம் போனார்கள். அதைக் கேட்ட தேவர்கள் சொர்க்கலோகத்தை விட்டுப் பிரமதேவரிடம் போய்ச் சேர்ந்தார்கள். ஸப்தரிஷிகள் சொர்க்கத்தைக் கைப்பற்றிக்கொண்ட பின் யட்சர் முதலியவர்கள் எல்லா லோகத்தானையும் ஜயித்தார்கள். பாதாளலோகம் போய் நாகர்களை ஜயித்தார்கள். பூமியில் தீவுகளெல்லாவற்றையும் ஜயித்தார்கள். பின் பூமி முழுவதையும் ஜயிக்க விரும்பித் தங்கள் படை வீரர்களை நோக்கி ராஜரிஷிகள் மஹா யாகங்களினாலும், பிராமணர்கள் ஹோமங்களினாலும், சிராத்தங்களினாலும் தேவர்களுக்குப் பலத்தை அபிவிருத்தி செய்கிறார்களே, அதையால் அவர்களை நாம் வதம்செய்யவேண்டும் என்று கூறினர்கள். இவ்விதி ஆலோசனை செய்து மஹாசமுத்திரத்தின் கீழ்கரை நோக்கிச் சென்று யஜ்ஞஞ் செய்கிறவர்கள் செய்விக்கிறவர்கள் எல்லாரையும் கொன்று திரிந்தார்கள். அவருடைய படைகளும் அப்படியே ரிஷிகளையும் பிராமணர்களையும் அதுபோல் செய்தார்கள். ரிஷிகளுடைய சாபங்கூட அசுரராஜர்களிடத்தில் அணுகவில்லை. ஆசிரமங்களெல்லாம் பாழாயின. அப்போது ரிஷிகள் மறைந்து போனார்கள். அசுரர்கள் ரிஷிகளை வதைக்கும் பொருட்டு பலபலமாய வடிவங்களை யெடுத்துக்கொண்டு திரிந்தார்கள். காடு மலை முதலிய இடங்களில் மறைந்திருக்கும் ரிஷிகளைக் கண்டு பிடித்து வதைத்தார்கள் உலகமெல்லாம் பாழ்பட்டுப் போயிற்று. தேவர் சந்திர சூரியர்கள் முதலான யாவரும் துக்கமடைந்தார்கள். இப்படி பூமியை ஆக்கிவிட்டுச் சந்தோஷத்துடன் சூரு க்ஷேத்திரத்தில் வாசம் பண்ணினர்

231-வது அத்தியாயம்.

இராஜ்யலாப பர்வத் தொடர்ச்சி.

இந்தக் கெடுஞ் செய்கையைக் கண்டு தேவர்கள் சித்தர்கள் பிரமரிஷிகள் முதலானவர்கள் துக்க மடைந்தார்கள். அவர்களெல்லாரும் பிரமலோகம் சென்றார்கள். பிரமரிஷிகள் தேவர்கள் சூழக் கொலுவிருக்கும் பிரமதேவரைக் கண்டார்கள். பிரமதேவருக்கு சுந்தோபசுந்தர்களுடைய கொடுஞ் செய்கையைத் தெரிவித்தார்கள். தாங்கள் அவர்களால் படுந்துயரத்தை விரி-

துக் கூறினார்கள். தேவர்களும் அப்படியே சொன்னார்கள். அதைக் கேட்ட பிரமதேவர் சற்று நேரம் யோசித்தார். அவர்களைக் கொல்லும் உபாயத்தை யோசித்து விசுவகர்மாவை அழைத்தார். விசுவகர்மாவைப் பார்த்து யாவரும் ஆசைப்படத்தக்க அழகிய சிறந்த ஒரு பெண்ணைச் சிருஷ்டி செய் என்றார். விசுவகர்மா அப்படியே சிருஷ்டிக்கத் தொடங்கினான். மூன்று லோகங்களிலும் உள்ள தாவர ஜங்கமங்களிலுள்ள இன்பமான பாகங்களையெல்லாம் சேர்த்து தெடுத்துக் கூட்டி ஒரு பெண்ணைச் சிருஷ்டித்தான். கோடி கோடியாக இரத்தினங்களினாலேயே சிருஷ்டித்தான் திரிலோகசுந்தரியும் அந்தப் பெண் சிகரற்ற அழகுள்ளவளாயிருந்தாள் மனிதரூபம் எடுத்துகொண்ட இலட்சுமிபோல விளங்கினாள். அவள் பிரமாவிடம் சென்றாள். பிரமதேவரை வணங்கி நான் என்ன செய்யவேண்டுமென்றாள் அவர் மகிழ்ந்து அவளுக்கு வரமளித்தார். அந்த வரத்தினாலும், விசுவகர்மாவின் வேலைத்திறமையினாலும் ஒளியையும் அழகையும் பற்று ஒப்புயர்வற்று விளங்கினாள். எல்லாப் பிராணிகளுடைய மனசையும் கண்களையும் கவர்ந்தாள். இரத்தினங்களிலுள்ள அழகில் எள்ளளவு எள்ளளவாக எடுத்துச் சிருஷ்டிக்கப்பட்டதனால் அவளுக்குத் திலோத்தமை யென்று பேரிட்டார். அவள் பிரமதேவரை வணங்கி லோகேசா! என்னைக் சிருஷ்டித்தது என்னிமித்தம்? நான் என்ன செய்யவேண்டும்? என்று கேட்டாள். பிரமதேவ பெண்ணே! சுந்தோபசுந்தர்களிடம் போ, உன் அழகினால் அவர்களை மயக்கு செய்து அவர்களுள் விரோதமுண்டாகச் செய் என்றார். அவள் அப்படியே யாகட்டும் என்று சொன்னாள். பிரமதேவரையும் ரிஷி கூட்டங்களையும் வணங்கிப் பிரதட்சணமாகப் போனாள் யாவரும் இவளால் காரியசாதகமாகும் என்று நிச்சயித்தார்கள். பிரமதேவர் சபையிலிருந்த எல்லாருக்கும் உத்தரவு கொடுத்தனுப்பி விட்டார்.

232-வது அத்தியாயம்.

இராஜ்யலாப பர்வத் தொடர்ச்சி.

சுந்தோபசுந்தர்களிருவரும் மூன்று லோகங்களையும் தங்கள் கவனத்தில் வைத்துக் கொண்டார்கள். தங்களைத் தடுப்பவர் ஒருவருமில்லாதிருப்பதைக் கண்டு தேவர்களைப்போலக் கவலை யற்று விளையாடிக் கொண்டிருந்தார்கள். சகல போகங்களையும் அனுபவித்துக்கொண்டிருந்தார்கள். ஒரு காலத்தில் விந்தியமலைச் சாரலில் விளையாடிக்கொண்டிருந்தார்கள். தேவலோகத்திலுள்ள இனிய வஸ்துக்களையெல்லாம் கொண்டுவந்து வைத்துக்கொண்டு மனதுக்கினிசைந்த பெண்களுடன் விளையாடிக்கொண்டும், ஆடல் பாடல்களால் மகிழ்ந்து மிருந்தார்கள். திலோத்தமை அந்தச் சமயத்தில் மெல்லிதான வெந்த ஒற்றை வஸ்திரம் தரித்துக்கொண்டு சர்வாலயங்களும் தோன்றும்படியாக, மலர்களைக் கொய்துகொண்டு மெல்லமெல்ல வந்தாள். கள்ளைக் குடித்து

புத்தி மயங்கியிருந்த அந்த அசுரராஜர்கள் அவளைக் கண்ட வுடனே புத்தி மயங்கினர்கள். உடனே எழுந்திருந்து அவளிடம் ஓடினர்கள். சுந்தன் அவளுடைய கலக்கையைப் பிடிததிக் கொண்டான். உபசுந்தன் இடது கையைப் பிடித்துக்கொண்டான். சுந்தோபசுந்தரிருவரும் ஒரு வரையொருவர் பார்த்துப் புருவத்தை நெரித்தார்கள் காமாவேசமொன்றே சொல்லுகிறதாகள். சுந்தன், தமபீ! இவள் என்னுடைய மனைவி, நீ யிவளுக்குத் தாய்போல மரியாதை செய்யவேண்டு மென்றான். உபசுந்தன், அண்ணா! இவள் என் மனைவி, உனக்கு மருமகள் என்று சொன்னான். இப்படிச் சிறிது நேரம் வாதாடினபின் போர் செயியத தொடங்கினர்கள். கடபுத்தினால் ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டு இருவரும் மடிந்தார்கள். பிரஜாபதி பிரமதேவர் இவ்விடத்துக்கு வந்தார் தேவர்களும் ரிஷிகளும் அவரை தொடர்ந்து வந்தார்கள் பிரமதேவர் இவர்களுடைய சரீரத்தமையை நோக்கி நீ வேண்டிய வரத்தைக் கேள் தருகிறேன் என்றார். அவளைக் கிஷ்டமான வரங்களைக் கேட்டுமன்றி, சூரியனை பிரகாசிக்கும் உலகங்கள் எல்லாம் நீ தடையின்றிச் சஞ்சரிப்பாயாக, உன் ஒளியினால் உன்னை ஒருவரும் உறறுப் பார்க்க முடியாதிருக்கக் கடவது எனறார். இந்திரனுக்குத் திரிலோகாதிபதியத்தைக் கொடுத்த நளினா பிரமதமது லோகத்துக்குப் போய்விட்டார். இப்படிப் பிரியாமல் ஒரேமனசுள்ளவர்களான சுந்தோபசுந்தாகளிருவரும் திலோத்தமை யென்னும் பெண் நிமித்தமாகப் பகைத்துப் போர் புரிந்து மடிந்தார்கள். ஆகையால் பாரதமே! நீங்களும் அப்படி மனஸ்தாப மடையாதபடி, திரௌபதி நிமித்தம் ஒரு ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். என் அபிப்பிராயப்படி நடந்துகொள்வீரானல் உங்களுக்குள் விரோதம் வராதிருக்கும் என்றார்.

அது கேட்ட பாண்டவர்கள் சரி யென்று ஒத்துக்கொண்டு, நாரதர் முன்னிலையிலேயே ஒரு ஏற்பாடு செய்து கொண்டார்கள். பாண்டவாகள் ஒவ்வொருவருடைய வீட்டிலும் திரௌபதி ஒவ்வொரு வருஷம் வசிக்கவேண்டும் திரௌபதி ஒருவனிடமிருக்கும்போது மற்றொருவன் பார்த்தால் அவன் பன்னிரண்டு மாசம் பிரமசரிய விரதத்தோடு வனவாசம் பண்ணவேண்டும் என்று நியமனஞ் செய்து கொண்டார்கள். இப்படி ஏற்பாடு செய்துகொண்ட பின்னாரதர் மகிழ்ந்து இஷ்டமான இடத்துக்குப் போனார். இந்த ஏற்பாட்டினால் பாண்டவர்கள விரோதமற்று ஒற்றுமையாய் வாழ்ந்தார்கள்.

233-வது அத்தியாயம்.

அர்ஜுனன் வனவாச பர்வம்.

பிறகு பாண்டவர்கள் மற்ற அரசர்களைத் தங்கள் வல்லமையால் தோற்பித்துக்கொண்டு இந்திரப் பிரஸ்தத்தில் வசித்தார்கள். திரௌபதி ஒவ்வர்

கும் அடங்கி வாழ்ந்தார்கள். பாண்டவர்கள் தர்மமாக நடந்து வருகையில் குரு தேசத்திரத்தில் சேர்ந்த தேசமெல்லாம் தன்பமற்றுச் சௌக்கியமாக வாழ்ந்தன. இப்படி வாழுங்காலத்தில் ஒரு நாள் ஒரு பிராமணனுடைய பசுக்களைச் சில திருடர்கள் திருடிகொண்டு போனார்கள். அதனால் அந்தப் பிராமணன் வருந்திக் கண்டவப் பிரஸ்தத்துக்கு வந்து பாண்டவர்களே! என்னுடைய கோதனத்தைச் சில திருடர்கள் பலாத்காரமாகக் கொண்டு போனார்கள். பாண்டவர்களே! சீக்கிரம் வாருங்கள். சாந்தமான பிராமணனுடைய கூவிசு காக்கைகளாக [illegible]வரப்பட்டது. புலியில்லா [illegible] அதன் குகையை ஈனமான நரி மிதிக்கின்றது. ஆறிலொருகடமை வாங்கி குடிகளைக் காபாற்றுமலிருக்கிற அரசன மஹா பாபியாகிறான் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. பசுக்களை [illegible] மனம் வருந்துகிற இந்தச் சமையத்தில் நீங்கள் எனக்கு உதவிசெய்யவேண்டும் என்று கூறினன். இதை அர்ஜுனன் கேட்டான். அதைக் கேட்டவுடன் அவன் பிராமணன் கிட்டவந்து நீ பயப்பட வேண்டாம் என்றான். பாண்டவர்களுடைய ஆயுதங்களிருந்த வீட்டில் தர்ம புத்திர் திருவிணையோடு கூடி யிருந்தார். ஆயுதங்களை எடுக்க முடியவில்லை. தவசியான பிராமணனுடைய கண்ணீரைத் துடைக்கவேண்டுமென்பது சாஸ்திரக் கருத்து, யுதிஷ்டிரரைப் பார்ப்பதனால் தர்ம விரோதம் வருகிறது. இந்தப் பிராமணனைக் காப்பாற்ற விட்டால், கீர்த்திவரும். இராஜாவின் உத்தரவின்றிப் போனால் ராஜாவும நானும சத்தியத் தவறினவர்களாவோம். இராஜா விருக்குமிடம் போனால் நான் வனவாசம் செய்ய நேரிடும்.எது வந்தாலும் வரட்டுமென்று தீர்மானித்,அதற்கொண்டு, நன் முகத்தை நன்றாய் மூடிக்கொண்டு அரசன் உதரவினால் உள்ளே புகுந்து ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு வெளியில் வந்து மகிழ்ந்து பிராமணா! வாரும், சீக்கிரத்தில் உமது பசுக்களை மீட்டுக்கொடுப்பேனென்று கூறினன். தேரிலேறிப் புறப்பட்டுப் போய்த் திருடர்களைக் சங்கரித்துப் பசுக்களை மீட்டுப் பிராமணனுக்குக் கொடுத்துப் பிரா, மணனை உபசரித்தது அனுப்பிவிட்டுப் புகழ்ச்சியோடு நகரம் வந்து சேர்ந்தான்.

அர்ஜுனன் பெரியோர்களை வணங்கி அவர்களுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்ட பின், தர்மராஜாவிடம் போய், மஹாராஜாவே! எனக்கு ஒரு வரதத்தைக் கட்டளையிட்டருள வேண்டும். நான் தங்களைப் பார்த்ததனால் கமது உடன்படிக்கையைத் தவறிப்போனவனானேன். நான் வனவாசம் போகிறேன். இது அல்லவா? நமது ஏற்பாடு என்றான். அதைக் கேட்ட யுதிஷ்டிரர் வருத்தப்பட்டு, என்னவென்று குளறிப் பேசினர். குரு [illegible]ய்? நான் உனக்குக் கட்டளையிடுகிறவனை இருந்தால் என் வசனத்தைக் கேள். உள்ளே வந்ததனால் எனக்கு நீ வெறுப்பாகச செய்தவற்றை யெல்லாம் நான் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்கிறேன். எனக்கு வெறுப்பில்லை. பெரியவனிருக்கு மிடத்தில் சிறியவன் வருவது கெடுதியாகாது. இளையவனிருக்கு மிடத்துக குப் பெரியவன் போனால் அது தரும விரோதமாகும். தயையால் நீ வனவா

சம் பொய்யென்பதை விடு. நான் சொன்னபடி செ[illegible] உனக்குத் தாம
தமில்லை. நீ அதிக்கிரமிக்கவுமில்லை என்று சொல்[illegible]ர். அது கேட்ட
அர்ஜுனன் படைமாதர் தர்மஞ் செய்யக்கூடாது என்[illegible]ருந்தான் தங்களி
டம் கேட்டேன். நான் சத்தியம் தவறமாட்டேன். [illegible] ஆயுதத்தை தொட்
டுச் சத்தியம் செய்கிறேன் என்று கூறித் தீகை பெ[illegible]க்கொண்டு பன்னி
ரண்டு மாசம் வனவாசம் செய்யப் புறப்பட்டான்.

234-வது அத்தியாயம்.

அர்ஜுனன் வனவாச பர்வத் தெ[illegible]சல்.

அர்ஜுனன் வனவாசம் போகும்போது வே[illegible]னைக் கரை கண்ட அகஸ்
தம் பிராமணர்களும் கூடச் சென்றார்கள். அதே[illegible]க்திமான்களும், மாகதர்
களும், புராணம் சொல்பவர்களும் உடன் போனார்கள். இப்படித் தேவர்க
ளால் சூழப்பட்ட இந்திரனைப் போலப் போனான். அகேகநதிகளையும் தேசங்
களையும், வனங்களையும் கடந்து கங்கோற்பத்தியை யடைந்து அங்கே வசித்
தான். ஒரு நாள் அர்ஜுனன் கங்கையி[illegible]ஸ்நானம் செய்து பிதிர்த்தர்ப்பணமும்
செய்தான். அக்கினிஹோத்திரம் [illegible]ய்யக் கரையேற நினைத்தான். உலூபி
யென்னும் நாக கன்னிகை அவனைக் [illegible]டி மயல்கொண்டு அவனை இழுத்துக்
கொண்டு போனாள். கௌரவ்யன் என்னும் நாகராஜன் வீட்டிற்குக் கொண்டு
போனாள். அக்கினி சித்தமாயிருந்தது. அர்ஜுனன் அதில் அக்கினிஹோத்
திரம் செய்தான். அக்கினி பகவானும் திருப்தி யடைந்தார். பிறகு உலூபி
யைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு, பெண்ணே! நீ யென்ன காரியம் செய்
தாய்? இது யாருடைய நிருகம்? நீ யாருடைய பெண்? என்று கேட்டான்.
உலூபி, மஹாராஜாவே! ஐராவத நாகவம்சத்திற் பிறந்த கௌரவ்யன்
என்கிற நாகராஜன் ஒருவனிருக்கிறான். நான் அவன் புத்திரி. நான்
ஸ்நானம் செய்ய கங்கைக்கு வந்தேன். உன்னைக் கண்டு உன் அழகில் மயங்கி
மோகங்கொண்டேன். நான் கன்னிகை. மன்மதனால் வருந்துகிறேன். ஆகை
யால் என்னை ஆனந்தப்படுத்தவேண்டு மென்றாள். அர்ஜுனன் நான் பன்னி
ரண்டு மாசம் பிரமசரிய விரதம் அனுஷ்டிக்கவேண்டும். உன் விருப்பத்தை
யும் நிறைவேற்ற வேண்டும். நான் பொய்யுனகாமல் உன் விருப்பம் நிறை
வேறுவது எப்படி? ஆகையால் என் தர்மம் கெடாமலிருக்கும்படி நீ செய்
என்றான்.

உலூபி, பாண்டவோத்தமா! நீ வனவாசம் வந்த விதமெல்லாம் எனக்குத்
தெரியும், அந்த விரதம் என் விஷயத்தில் கெடாது. தன்பப்படுகிறவர்களை
காப்பாற்றுகிறதும் தர்மத்தானே! உன் தர்மத்திற்குச் சிறிது குறைவு வந்தா
லும் எனக்குப் பிரசன்னம் செய்வதனால் அது தீரும். நீ என்னிடம் அன்பு

வையாவிட்டால் [illegible]ன் இறந்தே போவேன். இது நிச்சியம். நான் உன்னை யே கதியாக அண்டி[illegible]ந்தேன். எனக்கு உயிரைக்கொடு. உன்னைச் சரணம டைந்து பிரார்த்திக்கி[illegible]றேன். என்னைக் காப்பாற்று என்றாள். அர்ஜுனன் தாமததைக கருதி[illegible] சம்மதித்து அன்று இரவு முழுதும் அவளுடன் கூடி பிருந்தான். அவள் [illegible]ராவான் என்னும் புத்திரனைக் கர்ப்பந்தரித்தாள். விடி ந்த உடன் அவளுட[illegible]கங்கோற்பத்தி வந்து சேர்ந்தான். உலூபி ஜலத்திலும் பாதாலும் ஜியிக்கப்பு[illegible]மாட்டாய். ஜலஜந்துக்களெல்லாம் உனக்கு வசப்படும் னறு வரம் கொடுத்[illegible]விட்டுப் போனாள்.

35-வது அத்தியாயம்.

வனவாச பர்வத் தொடர்ச்சி.

அர்ஜுனன் நடந்தவை யெல்லாம் பிராமணர்களுக்குச சொன்னான். பின் இமயமலைச் சாரலுக்குப் போனான். அகஸ்தியவடம், வசிஷ்டபர்வதம் முத லியவற்றைத் தரிசித்துப் பிருகுதுங்கம் என்னும் இடம் போனான். அங்கே ஸ்நானம் செய்து அநேக தானம் பூஜனம் முதலிய மஹா தானங்களைச் செய்தான். பின் ஹிரண்யபிந்து மஹா [illegible]யின் தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து அநேக புண்ணிய க்ஷேத்திரங்களைத் [illegible]த்தான். பிறகு மேற்திசை நோக்கிச் சென்று சைமிசாரண்யத்தை யடைந்து, அதன் சமீபத்திலுள்ள உத்பலி நதி, சந்தா நதி, அபரசந்தா நதி, கௌசிகி நதி, கயாக்ஷேத்திரம், மஹா நதி எல்லா வற்றையுந் தரிசித்தான். அங்கவங்க களிங்கம் முதலிய தேசங்களிலுள்ள தீர்த் தம் க்ஷேத்திரங்கள் எல்லாவற்றையும் தரிசித்தான். அங்கங்கே அநேக தா னங்களைச் செய்தான். அவனுடன் கூடப்போன பிராமணர்கள் களிங்கதே சம் போனவுடனே பிரிந்தார்கள். அர்ஜுனன் களிங்க தேசத்தை கடந்து மஹேந்திர பர்வதத்தைத் தரிசித்து, கோதாவரியில் ஸ்நானம் செய்து, காவேரி நதியை யடைந்தான். பின் பாண்டிநாட்டின் இராஜதானியான மணலூரை படைந்தான். சித்திரவாகனனென்னும் பாண்டிய ராஜனைக் கண்டான். அந்தப் பாண்டியனுடைய பெண் சித்ராங்கதையைப் பார்த்து அவள்மேல் மோகங் கொண்டான். அரசனைக் கண்டு உமது புத்திரியை எனக்குக் கொ டும் என்று கேட்டான். அவ்வரசன், அர்ஜுனா! இந்தப் பாண்டிய குலத்தில் பிரபஞ்சன் என்னும் அரசன் சந்ததியற்றப் போனான் அவன் பரமசிவனைக் குறித்துத் தவம் செய்தான். உமாபதி பிரத்தியட்சமானார். [illegible]னி உன் வம் சத்தில் ஒவ்வொரு குழந்தை தான் பிறக்கும் என்று வரமளித்தார். அதுபோ லாகப் பாண்டிய ராஜர்களுக்கு ஒவ்வொரு குழந்தையே பிறக்கின்றது. என் முன்னோர்கள் எல்லாருக்கும் புத்திரர்களே பிறந்தார்கள். [illegible]னக்கு இந்த ஒரே பெண் பிறந்திருக்கிறது. இவள் தான் எல் குலத்தை [illegible]விளக்கவேண்டும். இவளிடம் பிறக்கும் புத்திரனே எனக்குக் கொடி, அவன் [illegible]க்கே யிருந்து அர

சாண்டி என் சந்ததியை விருத்தியாக்க வேண்டும். [illegible]டன்படிக்கையின் படி நீ லீவாகம் செய்துகொள் என்றான். அர்ஜுனன் [illegible]தித்துச் சித்திராங் கதையை மணம் புரிந்துகொண்டான். அங்கே மூன்று மாதம் வசித்தான்.

236-வது அத்தியாயம்.

அர்ஜுனன் வனவாச பர்வத தொடர்ச்சி.

பிறகு அர்ஜுனன் சமுத்திரக் கரை கோகர்ணம் சென்றான். அகஸ்தியதீர்த்தம், ஸௌபத்ர தீர்த்தம், பௌலோம தீர்த்தம், காரந்தம தீர்த்தம், பரத்வாஜ தீர்த்தம் என்கிற ஐந்து தீர்த்தங்களைக் கண்டான். ரிஷிகள் அதைக் கண்டு விலகுவதையும், அவற்றில் ஜனங்களில்லாமலிருப்பதையும் பார்த்து அங்கே யிருக்கிற ரிஷிகளைப் பார்த்து இந்தத் தீர்த்தங்களை அணுகாமலிருப்பதற்குக் காரண மென்னவென்று வணங்கிக் கேட்டான். அவர்கள் இவற்றில் முதலைகளிருக்கின்றன. அவை ரிஷிகளை இழுத்துக்கொண்டு போகின்றன. இது தான் காரணம் என்றார்கள். அதைக் கேட்டு அர்ஜுனன் அவற்றில் ஸ்நானம் பண்ண விரும்பினான். ரிஷிகள் தடுத்தது கேட்கவில்லை. ஸுபத்ரர் என்னும் ரிஷியின் பேராழுழங்குகிற ஸௌபத்ர தீர்த்தத்திலிறங்கி ஸ்நானம் பண்ணினான். அதிலுள்ள முதலை அவன் காலைப் பிடித்ததுக்கொண்டது. அர்ஜுனன் முதலையைத் தூக்கிக்கொண்டு கிளம்பினான். அவன் தூக்கினவுடனே அது சர்வாலங்காரமுள்ள ஒரு அப்சரஸ்ஸாயிற்று. அர்ஜுனன் ஆச்சரியப்பட்டு அவளைப் பார்த்து நீ யார்? என் முதலை யாரைய் என்று கேட்டான். வர்க்கை என்னும் அவள், நான் தேவலோகத்து அப்ஸரஸ்; என் பெயர் வர்க்கை; குபேரனுக்குப் பிரியமானவள். எனக்குத் தோழிமார் நால்வர் இருக்கிறார்கள். அவர்களோடு நான் குபேரன் வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்தேன். அங்கே ஒரு பிராமணன் தவசு பண்ணிக்கொண்டிருந்தான். அவன் தவசைக் கெடுக்க உத்தேசித்து அங்கே தங்கினேம். ஸௌரபேயி, ஸமீசி, புத்புதை, லதை, நான் ஐவரும் ஆடிப் பாடித்திரிந்தோம். அவன் எங்களைக் கண்டு மயங்காமல் நீங்கள் நூறு வருஷ காலம் முதலையாகக் கிடப்பீர்கள் என்று சபித்தான்.

237-வது அத்தியாயம்.

அர்ஜுனன் வனவாச பர்வத் தொடர்ச்சி.

அந்த சாபத்தைப் பெற்று வருந்தி அவரைப் பணிந்து சுவாமீ! நாங்கள் அறிவீனத்தினாலே [illegible]செய்துவிட்டோம்; மன்னித்தருளவேண்டும் என்று கெஞ்சினோம். அவர் [illegible]ங்கள் அவ்விற்றகாலம் இருந்தேயாகவேண்டியதில்லை.

முதலியாயிருந்து [illegible]னைக்களே யிம்சித்துக் கொண்டிருக்கையில் ஒரு புருஷன் உங்களைத் தாக்கி [illegible] கரையில் போடுவான். அப்போதே நீங்களும் உங்கள் சுயரூபம் பெறுவீர்கள் என்றார். நீங்களிருந்த தீர்த்தம் நாரீ தீர்த்தமென்று சிறந்து விளங்கு [illegible]என்றார். பிறகு நாங்கள் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் போய்ச் சக்கிரதீர்த்தில் நமது சாபத்தை நீக்கத்தக்க புருஷனை யெங்கே அடையலாமென்று யோசித்துக்கொண்டிருக்கையில் நாரதர் வந்தார். அவரை வணங்கி எங்கள் துக்கத்தைச் சொல்லிகொண்டோம். அவர் தென் சமுத்திரக் கரையில் ஐந்து தீர்த்தங்களிருக்கின்றன. நீங்கள் அங்கே போங்கள். பாண்டு புத்திரனாகிய அர்ஜுனன் வந்து உங்கள் சாபத்தை நிவர்த்தி செய்வான் என்றார். அவர் சொன்னபடியே நாங்கள் இங்கே வந்தோம். அவர் சொல் சத்தியமாயிற்று. மற்றதெல்லாவரையும் விவரிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தாள். அர்ஜுனனும் அப்படியே மற்ற காலு தீர்த்தத்திலும் முழுகி அவர்களையும் கரையில் சேர்த்தான். அவர்களும் நங்கள் சுயரூபம் பெற்றார்கள். அவர்கள் அர்ஜுனனை வணங்கி விடை பெற்றுக்கொண்டு போனார்கள். அந்த தீர்த்தங்களும் பயன்பட்டன. மறுபடியும் சித்திராங்கதையைப் பார்ப்பதற்காக மணலூருக்குப் போனான். பப்புருவாகன் என்னும் புத்திரன் பிறந்தான். அந்தக் குழந்தையைப் பாண்டிய ராஜனுக்குக் கன்னியா சுல்கமாகக் கொடுத்துவிட்டுச் சித்திராங்கதையைப் பார்த்து நீ குழந்தையைப் போஷித்துக் கொண்டிரு. பிறகு இந்திரப் பிரஸ்தம் வந்து நமது பந்துக்களுடன் கூடிக் களித்திருக்கலாம். யுதிஷ்டிரர் இராஜசூய யாகம் செய்யப் போகிறார். அப்போது உன் பிதாவும் வருவார். நீயும் அவர் கூட வந்து சேரு. வருத்தப் படாதே என்று தேற்றி விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டுப்போய்க் கேரள தேசங் கடந்து கோகருண க்ஷேத்திரம் போனான்.

238-வது அத்தியாயம்.

அர்ஜுனன் வனவாச பர்வத் தொடர்ச்சி.

அர்ஜுனன் மேற்குச் சமுத்திரதிலுள்ள தீர்த்தங்களெல்லாம் தரிசித்துகொண்டு பிரபாஸத்துக்கு வந்தான். கதன் என்ற யாதவன் சுபத்திரையின் அழகை வர்ணித்து கூறியிருந்தான். அர்ஜுனன் இப்போது அதை நினைத்தான். அவளை எப்படி யடையலாமென்று சிந்தித்தான். சந்நியாசி வேஷம் பூண்டு, கிருஷ்ணனுடைய அரண்மனைக்குப் போய்ச் சுபத்திரையை பார்த்துவிட்டுக், கிருஷ்ணனைக் கண்டு, அவருடைய அநுக்கிரகத்தால் அவளை அடைவேன் என்று தீர்மானித்துக் கொண்டான். உடனே சந்நியாசி வேஷம் அடைந்தான். ஒரு ஆலமரப்புதரில் அடைந்தான். அப்போது மழை பொழிந்தது. அர்ஜுனன் அங்கே ஸ்ரீ கிருஷ்ணனைக் [illegible]ந்தித்துக் கொண்டிருந்தான். கிருஷ்ணன் சீத்தியபாமையுடன் சயனித்துக் கொண்டிருந்தார்.

அர்ஜுனன் எண்ணத்தை யறிந்து திடீரென்று சிரித்து சுதத்தியபாமை சுவாமீ! காரணமில்லாமல சிரிப்பானேன? அதை எனக்கு சொல்லி அருள வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டாள். கிருஷ்ணன், அர்ஜுனன் தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டு வந்தான். அது முடிந்தது திரும்புகையில் சுபத்திரையை நினைத்துக்கொண்டு சந்தியாசி வேஷமெடுத்து ஆலமரத்தடியில் இருக்கிறான் மழை பொழிகையில் யோகபார மனைவியை சுமந்து வருகிறான் அதற்காகச் சிரித்தேன். நீ உன் சகோதரனைப் போரென்று சொல்லி உடனே புறப்பட்டாள் அர்ஜுனனிடம் தனித்துப் போனாள். அர்ஜுனன் பிரபாசதீர்த்தத்திலே கண்டு ஒருவரையொருவர் ஆலிங்கனஞ் செய்துகொண்டு யோக க்ஷேமங்களை விசாரித்துக் கொண்டார்கள். பின இருவரும் உட்கார்ந்தார்கள் கிருஷ்ணன், அர்ஜுனா! என்ன நீ தீர்த்தயாத்திரை செய்கிறாயென்றார் அர்ஜுனன் தீர்த்த எல்லாவற்றையும் சொன்னான். அதைக் கேட்ட பின இருவரும் ரைவத பர்வதத்திற்குப் போனார்கள். முன்னமே தானே கிருஷ்ணனுடைய கட்டளையிலே வேலைக்காரர்கள் போஜனம கொண்டுவந்து வைத்திருந்தார்கள். அதை இருவரும் உண்டார்கள். இருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள் அர்ஜுனன்தான் தீர்த்தயாத்திரையில் கண்ட விசேஷங்களெல்லாவற்றையும் கண்ணனுக்குச சொன்னான. பின்பு நிதானமாய்க் காலையில் விழித்துக்கொண்டான் அர்ஜுனன் அங்கேயிருந்து விட்டான. கிருஷ்ணன் துவாரகைக்குப் போனார்

239-வது அத்தியாயம்.

சுபத்திராஹரண பர்வம.

கொஞ்ச காட்களுக்குப் பின், ரைவத பர்வதத்தில் நடக்கும கிரியூசை யென்னும ஒரு உற்சவம் வந்தது. அந்த மலையின நாலு பக்கங்களும நன்றாய் அலங்காரம் செய்யப்பட்டது. ஜனங்களெல்லாரும் அலங்கரித்துக்கொண்டு மலைக்கு வந்தார்கள். எங்கே பார்த்தாலும் ஆடல் பாடல் வாத்திய கோஷங்கள் நிறைந்திருந்தன. பலராமா மதபானத்தினால மயங்கி ரேவதியுடன கூட உலாவிக்கொண்டிருந்தார், உக்கிரசேனன் எனனும யாதவராஜனும் அப்படியே சஞ்சரித்துக் கொண்டிருந்தான் யாதவ வீருஷ்ணிகள், போஜர்கள் எல்லாரும் அந்த உற்சவத்தைச சிறப்பித்தார்கள். கிருஷ்ணனும் தமது பரிவாரங்களுடன் வந்து அங்கே உலாவினார். பின் சந்தியாசியைக கண்டார். இருவரும சேர்ந்து உலாவினார்கள் சுபத்திரையும அலங்கரித்துக்கொண்டு தோழிகளுக்கு மத்தியிலிருந்தாள். அவளைக் கண்டவுடன் அர்ஜுனன மனம் அவளிடம் சென்றது. அதை யுணர்ந்த கிருஷ்ணன, அர்ஜுனா! காட்டில் சஞ்சரிக்கும சந்யாசியின் மனம சிற்றின்பத்தில் மயங்குகிறதே! இது என

ண ஆச்சரியம் என்னுர். பின் அர்ஜுனு! இவள் என் தங்கை. என் பிதாவுக்கு அன்புள்ள பெண். உனக்குப் பிரியமிருந்தால் என் பிதாவுக்கு நானே சொல்வேன் என்ருன். உமக்குச் சகோதரியாகிய இவள் எனக்கு மனைவியானுல் நான் சகல [illegible]ண்மைகளையும் அடைந்தவனுவேன். இவளே நான் பெறும் உபாயமென்ன [illegible] என்னுல் கூடியவைகளே யெல்லாம் நான் செயவேன் என்ருன். அர்ஜுனு! சுயம்வரம்தான் க்ஷத்திரியர்களுக்குரிய விவாகம். அது நிச்சயமில்லே. பலாத்காரமாகக் கொண்டுபோவதும் க்ஷத்திரியர் தர்மம் என்று சாஸ்திரங்கள் கூறுகிறன. நீ சந்தியாசியாக இருக்கு சமையம் பார்த்து என் சகோதரியைப் பலாத்காரமாக எடுத்துக்கொண்டு போ என்ருர். பிறகு இருவரும் அதற்கேற்ற உபாயத்தை நிச்சயம் பண்ணிக்கொண்டு, தர்ம புத்திராக்கு இவற்றைத் தெரிவிக்கும்படி தூதரை அனுப்பினுர்கள். தர்ம புத்திரரும் அனுமதி தந்தார். கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு அப்படியே கொண்டு போக உத்தரவு கொடுத்தனுப்பிட்டுத் தாம் துவாரகைக்குப் போனுர். காரியத்தை இப்படி நடத்தவேண்டு மென்று மனதில் நிச்சயம் பண்ணிக் கொண்டார்.

240-வது அத்தியாயம்.

சுபத்திராஹரண பாவத தொடர்ச்சி.

அர்ஜுனன், கிருஷ்ணனுடைய அனுமதியினுல் துவாரகையின் சமீபத்திலுள்ள ஒரு சோலையில் தங்கினுன். அப்போது உற்சவம் முடிந்தது. யாதவர்கள் எல்லாரும் ரைவதத்தை நோக்கி வந்தார்கள். அத்தச் சோலையில் ஒரு பாறையின் மேல் சுபத்திரையை நினைத்துக்கொண்டு அர்ஜுனன் உட்கார்ந்திருந்தான். யாதவர்கள் அர்ஜுனனுடைய யதியைக் கண்டார்கள். எல்லாரும் சந்தியாசிக்கு வணக்கி அவரைச் சூழ்ந்துகொண்டார்கள். சந்தியாசி எல்லாரையும் கல்வரவு விசாரித்து, எல்லாரையும் உட்காரச் சொன்னுன். சமீபத்தில் எல்லாரும் உட்கார்ந்தார்கள். பலராமர், பிராமணேத்தமரே! எங்கிருந்து வருகின்றீர்? நீங்கள் பார்த்த வனம், நதி, க்ஷேத்திரம், மலே முதலியவற்றிலுள்ள விசேஷங்களைச் சொல்லவேண்டும் என்ருர்.

அர்ஜுனன், பலராமர் கேட்டபடி மலே, வனம் முதலியவற்றின் சிறப்புக்களைத்தான் கண்டபடி விரித்துச் சொன்னுன். இந்தத் திவ்யகரித்திரங்களே யாதவர்கள் கேட்டுச் சந்தியாசியைப் பூஜித்தார்கள். பிறகு இந்த சந்தியாசியை எவ்விடத்தில் இருக்கும்படி செய்யலாமென்று யோசித்தார்கள். அப்போது கண்ணன் வந்தார். பலராமர் அவரைப் பார்த்துச் சூழ்ந்தாய்! வா என்று அழைத்து இந்தச் சந்தியாசி நம் தேசத்துக்கு அதிதியாக வந்திருக்கிருர். மழை காலமாகிய நாலு மாதமும் நம் தேசத்தில் வசிக்கவந்திருக்கிருர். எவ்விடம் இவர்

வசிக்க யோக்கியமான தாயிருக்கும் சொல் என்று கேட்டார். கண்ணன் நீங்க விருக்கையில் நான் என்ன சொல்லக்கூடும்? உமக்குப் பிரியமான இடத்தில் வைக்கலாமென்றார். பலராமர் கண்ணனைத் தழுவிக்கொண்டு, கிருஷ்ணா! நமது சுபத்திரையின் கன்னியாமாடத்திலுள்ள கொடிமரத்தில் வசிக்கலாமென்று கருதுகிறேனென்றார். நீ சம்மதித்தால் யாதவர்கள் எல்லாரும் சம்மதிப்பார்கள் என்றார். கண்ணன் அண்ணா! இவர் அழகும் ஒளியுள்ளவருமாயிருக்கிறார். பலசாலியாயுமிருக்கிறார். மதுரமாகப் பேசுகிறார். கல்வி கேள்விகளில் சிறந்தவருமாயிருக்கிறார்; ஆகையால் கன்னியாமாடத்தில் வசிக்கத் தகாதவர் என்று தோன்றுகிறது. ஆனால் இவர் பெரியவர், எல்லாம் அறிந்தவர், தர்மதத்தை அறிந்தவர். நீர் சொன்னபடி செய்வேன் என்றார், பலராமர், கிருஷ்ணா! இவர் ஜிதேந்திரியர் நம் தேசத்துக்கு அதிதி; மகிமையுள்ளவர். திருப்தியுள்ளவர். தர்மிஷ்டராயிருக்கிறார். ஆகையால் நான் சொன்னபடி இவரைச் சுபத்திரையின் கன்னியாமாடத்திற்கு அழைத்துக்கொண்டு போ. சுபத்திரைக்குச் சொல்லிப் போஜனம் முதலியவற்றால் உபசரிக்கச் சொல் என்றார்.

241-வது அத்தியாயம்.

சுபத்திராஹரண பர்வத் தொடர்ச்சி.

கிருஷ்ணர் சரியென்று ஒப்புக்கொண்டு மனதில் மகிழ்ச்சியடைந்தார். அர்ஜுனனை அழைத்துக்கொண்டு நகரத்துக்குள் புகுந்தார். தமது அரண்மனைக்குப் போய் ருக்மணி சத்தியபாமை யிருவருக்கும் அர்ஜுனன் தீர்த்த யாத்திரைக்கு வந்திருப்பதைச் சொன்னார். அவ்வீரரும் பாண்டு புத்திரனை அர்ஜுனன் நமது ஊருக்கு எப்போதாவது வருவானு? அவனைப் பார்க்கவேண்டு மென்கிற ஆசை எங்களுக்கு எப்போது மிருக்கிறது என்றார்கள். அதைக்கேட்டுச் சந்தியாசி சந்தோஷ மடைந்தான். உருவத்தை மறைத்துக் கொண்டிருக்கும் அர்ஜுனனை எல்லாரும் பூஜித்தார்கள். கிருஷ்ணன் மனமகிழ்ந்து தாமும் பூஜித்தார். பிறகு சுபத்திரையை நோக்கிக் கிருஷ்ணன் சொல்லுகிறார்.

இந்த ரிஷி நமது ஊருக்குப் புதியவராக வந்திருக்கிறார். நியமம் தவறாதவர். உன்னுடைய கன்னிகாமாடத்தில் வசிப்பார். நீ அவரை எப்போதும் பூஜிக்கவேண்டும். அப்படிச் செய்யும்படி அண்ணா பலராமர் கட்டளையிட்டிருக்கிறார். பட்சணம் போஜனம் முதலிய கொடுத்து இந்தச் சந்தியாசியை நீ எப்போதும் பூஜைசெய். இவர் சொல்வதைச் சந்தேகமில்லாமல் செய்ய வேண்டும். மூன்று லோகத்திலும் யதிகள் இப்படித்தான் கன்னிகாமாடத்திலே வசிப்பார்கள். கணவனாகத்தகுந்த வாசிகளான பெண்கள் அந்த சந்தியாசி

களைத் தவறுதலின்றி மனமால் பூஜிப்பார்கள் என்றார். சுபத்திரை அப்படியே செய்கிறேன் என்றாள். இப்படிச் சுபத்திரை பூஜை செய்யச் சந்தியாசி ரூபத்துடன் சில காலம் வசித்தான். தினந்தோறும் பழகுவதினாலே அவனுக்குச் சுபத்திரைமேல் அதிக காதல் உண்டாயிற்று. கிருஷ்ணைகூட இந்தச் சுபத்திரை அழகுக்குச் சமானமில்லையென்று நினைத்தான். தன் சகோதரர்களையும் மறந்து விட்டான். மெய்யப் பெண்கள் கூடச் சுபத்திரை அழகுக்கு ஒப்பாகார் களென்று கருதினாள். சுபத்திரை தன் தோழிகளுடன் விளையாடிக்கொண்டு இருப்பதைக் கண்டவன் அவள்மேல் காதல் கொண்டான்.

கதன் என்னும் யாதவவீரன் அர்ஜுனனுடை [illegible] வளர்ப்பு முதலிய வற்றைச் சுபத்திரைக்குச் சொல்லியிருந்தான். ஒரு தரம் கண்ணன் இடி முழக்கத்தைக்கேட்டு அதை அர்ஜுனனுக்கு உபமானமாகச் சொன்னார். யாதவ வீரர்களும் வில்லாளிகளுள் அர்ஜுனனையே உபமானமாக எடுத்துக்கூறுவது வழக்கம். தங்கள் சாமர்த்தியத்தைப் பேசும்போது தான் அர்ஜுனனுக்கு ஒப்பானவனென்று கூறுவார்கள். அர்ஜுனன் கூட எனக்கு ஈடாகமாட்டான் என்பார்கள். யாதவர்கள் தங்களுக்குக் குழந்தைகள் பிறந்தால் அந்தக்குழந்தை பை நீ பராக்கிரமத்தில் அர்ஜுனனுக்கு ஒப்பாகக் கடவாயென்று வாழ்த்துவதும் வழக்கம். அதையெல்லாம் கேட்ட சுபத்திரை அவன்மேலே ஆசை வைத்திருந்தாள். அவனுடைய அ[illegible] வல்லமை இரண்டினாலும் அவன்மேல் மோகம் வைத்திருந்தாள். தூதர்கள் அதிதிகள் கதனென்னும் யாதவன இவர்களால் கேள்விப்பட்டே தான் பாராத அர்ஜுனன்மேல் ஆசை கொண்டிருந்தாள். எவனுவது குரு தேசத்தைப் பற்றிப் பேசினால் அவனிடத்தில் அர்ஜுனனைப் பற்றிக் கேட்டு மகிழ்வாள். இதனால் அர்ஜுனன் சுபத்திரை கண்களுக்கு முன் நிற்பவன் போலிருந்தான். சந்தியாசியின் கைகளில் நாண் உரப்பிருப்பதாலும் அவனுடைய சொரூப லக்கணங்களாலும் இவன் அர்ஜுனனாகவே யிருக்கவேண்டுமென்று சுபத்திரை நினைத்தாள். தான் எப்படி அர்ஜுனனைப் பற்றிக் கேட்டிருந்தாளோ அப்படியே யதியின் வடிவமும் இருக்கக் கண்டு மகிழ்ந்தாள்.

ஒரு நாள் அர்ஜுனன் உட்கார்ந்திருக்கும்போது சுபத்திரை வந்து முனிவரே! நீர் பலதேசங்களிலும் கிராமங்களிலும் சஞ்சரித்திருக்கின்றீர். அப்படி சஞ்சரிக்கும்போது எந்தெந்தத் தேசங்களுக்குப் போனீர்? எந்தெந்த மலைகள், வனங்கள், நதிகள் முதலியவற்றைப் பார்த்திருக்கிறீர்? அந்தந்த விசேஷங்களுடன் எனக்குச் சொல்ல வேண்டுகிறேன் என்றாள். அர்ஜுனன் அவைகள் எல்லாவற்றையும் விஸ்தரித்துச் சொன்னான். பிறகு ஒரு புண்ணிய தினத்தில் சுபத்திரை அர்ஜுனனிடம் வந்து சுவாமி! தாங்கள் பலவிடங்களில் சஞ்சரித்தபோது சாண்டவப்பிரஸ்தம் போனீர்களா? அங்கள் அத்தை குந்தியைப் பார்த்தீர்களா? யுதிஷ்டிரர் சகோதரர் எல்லாராடும் சிகேமமாகவும்

சந்தோஷமாகவும் இருக்கிறார? பீமன் தர்மராஜாவிடம் தன் கடமைகளைச் செய்து வருகிறானே? தர்மராஜாவின் இஷ்டப்படி நடக்கும் விஜயன் வனவாசத்தைக் கழித்து விட்டானே? அவன் இப்பொழுது எங்கே யிருக்கிறான்? பகவானுடைய தாங்கள் அர்ஜுனனைக் கண்டாலது கேட்டாலது திருப்பீர்களா? என்று கேட்டாள். அதைக்கேட்ட அர்ஜுனன் சிரித்துக்கொண்டே குந்திதேவி புத்திரர்களோடும் மருமகளோடும் காண்டவபிரஸ்தத்தில் சுகமாக இருக்கிறான். தனஞ்செயன் சந்தியாசி ரூபத்தோடு துவாரகையில் வசிக்கிறான். நீ எப்போதும் அவனை நினைத்துக்கொண்டிருந்தும் அவனை மறவாமலிருக்கிறாய் என்றான். அதைக்கேட்ட சுபத்திரை பெருமூச்சுவிட்டுப் பிரியக்கிறிக்கொண்டிருந்தாள் பின் அர்ஜுனன் பெண்ணே! தனஞ்செயன் வந்தான். நீ கேள்வியினால் விரும்பம் கொண்டது போல, எனக்கும் கேள்வியினால் உன்னிடம் விரும்பம் மிகுந்திருக்கின்றது. நல்ல காளில் தானம் பிரகாரம் உன்னை மணந்து சத்தியவான் சாவித்திரியை யடைந்ததுபோல் நானும் உன்னை மனைவியாகப் பெறுவேன் என்று சொல்லி கொடி வீட்டில் புகுந்தான். அதன் பின் சுபத்திரை வெட்கமும் ஆசையும் உடையவளாய்ச் சென்று சயனத்தில் படுத்து மயங்கி யிருந்தாள். வெட்கமடைந்தவளா யிருந்ததனால் சந்தியாசிக்குப் பூஜை செய்யவில்லை. இதை யறிந்த கிருஷ்ணன் அர்ஜுனனுக்குப் போஜனங்கள் கொடுக்கும்படி ருக்மணிக்குச் சுட்டளை யிட்டார் அர்ஜுனன் சுபத்திரையை நினைத்துக்கொண்டு மதி மயங்கி யிருந்தான். சுபத்திரையும் அர்ஜுனன் பிரிவைச் சகிக்காதவளாயிருந்தாள். இவ்வாறு முகநிறமாறி யிருந்தாள். சதா விசனமாகவே யிருந்தாள், அதைக் கண்ட ருக்மணி சுபத்திரா! தைரியத்தை விடாதே. விசனப்படாதே யென்று சொன்னாள். பிறகு ருக்மணி தன் மாமியார் தேவகியிடம் இரகசியமாகப் போய் அர்ஜுனன் யதி வேஷத்தோடு வந்து சுபத்திரையின் கன்னிகாமாடத்தில் வசிக்கிறான். சுபத்திரை அவன்மேல் மயல் கொண்டு வருந்துகிறளென்று சொன்னாள்.

தேவகி சுபத்திரையினிடம் போய் அவளைப் பார்த்துக் குழந்தாய்! தைரியத்தோடு விசனப்படாமலிரு. வசுதேவருக்கும் கிருஷ்ணனுக்குந் தெரிவித்து உன் வருத்தத்தை ஒழிப்பேன். உன் சமாசாரத்தைப் பிறகு கேட்டுக்கொள்ளுகிறேன். பெண்ணே விசனப்படாதே என்று சொன்னாள். உடனே வசுதேவரிடம் போய் அவருக்குத் தெரிவித்தாள். சுபத்திரை விசனப்பட்டுக் கொண்டிருக்கிறாள். யதியாக வந்திருப்பவன் அர்ஜுனன் என்று கேள்விப் படுகிறேன். தருமபுத்திரன், கிருஷ்ணன், சாத்யகி, ஆஹுகனுக்கும் இச்சமாசாரத்தைத் தெரிவித்துத் தக்கப்படி நடத்தவேண்டு மென்றாள். வசுதேவர் அப்படியே அந்தரங்கர்களோடும் ஆலோசித்தார். எல்லாரும் தங்களுக்குள் ஒரு நிச்சயம் செய்துகொண்டார்கள். ருக்மணி, சத்தியபாமை, தேவகி, ரோகிணி இக்கால்வரும் ரோகிதர் சொற்படி நடந்து இன்று பன்னிரண்டாவது நாள் விவாகத்தை முடிக்க உத்தேசித்தார்கள். உடனே மஹாதேவ பூஜைக்

காக இன்று நாலாவது நாள் இங்ஙகரத்திலுள்ளவரனைவரும் தீவுக்குப் போக வேண்டும். தீவில் முப்பத்துநாலு நாள் மஹாதேவ ஆராதனை நடக்கவேண்டும். சகல வருணத்தாருடனும் யாதவரும் போய்ச் சேரவேண்டும் என்று பறை சாற்றினார்கள். அப்படியே எல்லாரும் தீவுக்குப் போனார்கள். அப்போது சுபத்திரை கண்ணனிடம் போய் எல்லாரும் போய்விட்டால் யதி பூஜையை யார் செய்வது என்று கேட்டாள். கண்ணன் சுபத்திரா! உன்னை தவிர யார் செய்யத்தகவராகள். நீதான் செய்யவேண்டு மென்று சொன்னார். சொல்லி விட்டுப் பல வாதிய[illegible]ளோடும் புறப்பட்டுப் போனான். ஏழு யோசனை அகலமும் பதது யோசனை நீளமுமுள்ள அந்தத் தீவு யாதவர்கள் அந்தகர்கள் முதலியோருக்குச் சொர்க்கம் போல விளையாட ரமியமாய் இருந்தது. அவ்விடத்தில் எல்லாரும் தானதருமங்களோச் செய்துகொண்டும், திருவீழாவை நடத்திக் கொண்டும் முப்பத்து நாலுநாள் வசித்துக்கொண்டிருந்தார்கள். கண்ணபிரான் உற்சவ முடிவில் திரும்பி வரும்போது விவாக காலமாகும் என்று அர்ஜுனன் நினைத்தான்.

242-வது அத்தியாயம்.

சுபத்திராஹரண பர்வத் தொடர்ச்சி.

எல்லாரும தீவுக்குப் போய்விட்டதை உணர்ந்த அர்ஜுனன் சுபத்திரையைப் பார்த்துச சொல்லுகிறான் பெண்ணே! எல்லா வருணத்தாருக்கும் தர்மத்தை அநுசரித்து விவாகம் பலவகையாக ரிஷிகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது தந்தை, சகோதரன், தாய், மாமன் முதலியவர்கள் கன்னிகாதானஞ் செய்யத்தகவர்கள். உன் தந்தை சிவபிரானைத் தரிசிக்கிறதற்காகத் தம் புத்திரர்களோடு தீவுக்குப் போயிருக்கிறார். என் உறவினரும் தூரத்திலிருக்கிறார்கள். ஆகையால் காந்தர்வம் என்கிற விவாகமே நமக்கு ஒத்தது. காந்தர்வ விவாகத்துக்கு ஜோசாதி நியமைகளில்லை. விரும்பமுள்ள பெண்ணும் புருஷனும் இரகசியத்தில் கூடுவதுதான் காந்தர்வ விவாக முறைமை அப்படித்தான் நமது விவாகமும் நடக்கவேண்டும் சுபகாலம் கூடியிருக்கிறது. இன்று இரவில் வைகாசி மாசம், சுக்கிலபட்சம், திரிதியைதிதி, மகாலக்ஷனம், மைத்திர முகூர்த்தமும் கூடி வரப்போகின்றன சூரியன் அஸ்தமிக்கப் போகின்றது. நான் என்ன செய்கிறதென்று தெரியாமல் பிரதற்றுகின்றேன். எனக்கு என்ன சொல்லுகிறாய்? மாதவியே! என் ஒரு மறுமொழியும் கூறாமலிருக்கின்றாய் என்றான். சுபத்திரைக்கு உடனே கண்களில் நீர் பெருகியது. வாய்திறந்து பேசவில்லை கிருஷ்ணனைச் சிந்தித்துக்கொண்டிருந்தாள். அர்ஜுனன் கொடிமாடத்துக்குள் புகுந்து தன் பிதாவான இந்திரனை நினைத்துக்கொண்டு தக்கப்பட்டான். தன் புத்திரன் சிந்தித்ததை அறிந்து இந்திரன் இந்திராணியுடன் பிரயாணமாகுன்[illegible]ரதா முதலிய தேவரிஷிகளும், கந்தர்வர்களும்,

சாரணர்களும், யட்சர்களும், தெய்வலோகத்து அப்ஸரஸ்களும், அருந்ததி யோடு வசிஷ்டரும் கூட வந்தார்கள். கிருஷ்ணன் சுபத்திரை சிந்தித்ததை அறிந்தார். பலராமர் தூங்குகிற சமையம் பார்த்து அக்ரூரன், சினி, கதன் ஆகுகன், வசுதேவர் தேவகி முதலிய பந்துக்களுடன் புறப்பட்டு அர்ஜுனனி ருக்குமிடம் வந்து சேர்ந்தார். கிருஷ்ணன் நாரதர் முதலியவர்களைப் பூஜித்து க்ஷேமலாபங்களை விசாரித்தார். தேவேந்திரன் கிருஷ்ணனை நோக்கி சுபத்தி ரையை அர்ஜுனனுக்கு விவாகஞ் செய்து தரவேண்டுமென்று பிரார்த்தித் தான். கிருஷ்ணனும் அப்படியே செய்வோ மென்றார். வசுதேவர், சாத்யகி அக்ரூரன் முதலானவர்களை இந்திரனை நோக்கித் தேவேந்திரனே! லோகநாத னே! லோகரட்சகனே! உனக்கு நமஸ்காரம். நீ பிரியம் கேட்டதனால் நாங் கள் கிருதார்த்தர்களானோம் என்று சொன்னார். இவ்வாறு கூறி இந்தி ரனுக்கு மரியாதை செய்து அவனுடைய அநுக்ஞை பின்மேல் விவாக சடங்கு செய்யத் தொடங்கினார்கள். அருந்ததி தேவகி இந்திராணி முதலியவர்கள் அர்ஜுனனுக்கும் சுபத்திரைக்கும் மங்கள காரியங்களைச் செய்தார்கள். சபையிலுள்ள நாரதர் முதலானவர்கள் அர்ஜுனனுக்கு ஆசீர்வாதம் செய் தார்கள். தேவேந்திரன் அர்ஜுனனுக்கு மங்கள ஸ்நானம் செய்வித்து ஹார குண்டலகேயூர கடகங்களால் அலங்கரித்து அவனை ஆலிங்கனம் செய்து கொ ண்டான். இந்திராணி, அருந்ததி முதலியவர்கள் சுபத்திரைக்கு மங்களஸ்நானஞ் செய்வித்துச் சர்வாபரணங்களாலும் அலங்கரித்தார்கள். சுபத்திரை அப்போது இந்திராணிபோல விளங்கினாள். அர்ஜுனன் மந்திரங்களினால் ஹோமஞ் செய்து சுபத்திரையைப் பாணிக்கிரகணம் செய்தான். அப்போது தேவர்க ளும் மற்றவர்களும் சுபத்திரைக்கு அர்ஜுனன் தக்க கணவனென்றும் அர் ஜுனனுக்குச் சுபத்திரையே தகுந்தபத்தினி யென்றும் கூறி மகிழ்ந்தார்கள். பிறகு தேவர்கள் கிருஷ்ண மூர்த்தியிடம் விடை பெற்றுக்கொண்டு சென்றார் கள். யாதவர்கள் அர்ஜுனரிடம் விடை பெற்றுக்கொண்டு உள் தீவுக்குப் போனார்கள். கிருஷ்ணன் அர்ஜுனனை நோக்கிப் பார்த்தனே! இருபத்திர ண்டு நாள் இவ்விடத்தில் ருக்மணி வீட்டில் வசி. அதுவரையும் யதி வேஷத் துடனேயே யிரு. அதன பின் என் இரதத்திலே சுபத்திரையுடன் ஏறிக்கொ ண்டு காண்டவப் பிரஸ்தம் போய்ச் சேரு என்று திட்டஞ் செய்துவிட்டு உள் தீவுக்குப் போய் விட்டார்.

பிறகு அர்ஜுனன் தான் வெகு பாக்கியவானாய் விட்டதாக நினைத்தான். சுபத்திரையும் அர்ஜுனனும் ஒருவரையொருவர் தத்தம் உயிரைபோல நினைத்தார் கள். அர்ஜுனன் சுபத்திரையை அடைந்த பின் சரத்காலத்தில் உதயமாகும் சூரியன்போல் அவனும் தேஜஸாலும் விளங்கினான். சுபத்திரையும் அர் ஜுனன்மேல் பூர்ண அன்புவைத்து அவனைவிட்டுப் பிரியாமலிருந்தாள்.

243-வது அத்தியாயம்.

சுபத்திராஹரண பர்வத் தொடர்ச்சி.

இப்படித் தாரகையில் இருபதிரண்டு நாள் விசித்தபின் அர்ஜுனன் காண்டவப் பிரஸ்தம் போக நினைத்து சுபத்திரையை அழைத்துச் சொல்லுகிறான், நீ ஒரு பொய் விரதம் முடிப்பதாகச் சொல்லிப் பிராமணபோஜனஞ் செய்வித்து தருந்தானம் கொடு, பிறகு நாம் காண்டப்பிரஸ்தம் போக வேண்டும். மஹாராஜாவின் அரண்மனைக்குப் போய்ச் சிருஷ்ணனுடைய இரத்தத்தைச் சித்தம் பண்ணு. சகல ஆயுதங்களுடன் இரதத்தைக் கொண்டு வா என்றான்.

சுபத்திரை அர்ஜுனன் சொன்னபடி செய்வேனென்று கூறி அரண்மனைக்குப் போனாள். அங்கிருக்கிற காவலாளிகளைப் பார்த்து, நான் விரதத்தை முடிப்பதற்காக வந்திருக்கிறேன். சிருஷ்ணமூர்த்தியின் தேரை அலங்கரித்துக்கொண்டு வாருங்கள். நான் அதில் ஏறிக்கொண்டு போகவேண்டும் என்றாள். உடனே காவற்காரர்கள் தேரில் குதிரைகளைப் பூட்டிக்கொண்டு வந்து நிறுத்தி அவளை வாழ்த்திக் கை குவித்து நின்றார்கள். சுபத்திரை அதில் சகல ஆயுதங்களையும் நிரப்பி அர்ஜுனனிடம் கொண்டு வந்தாள். அர்ஜுனனைப் பார்த்து அதிரதவீரா! உன்னிஷ்டம்போல தேர் வந்திருக்கிறது. உன் தூரத்துப் போல உன் நகரம் போகலாமென்றாள். அதன் பின் சுபத்திரை பிராமணர்களுக்கு நல்ல போஜன மளித்து மிகுந்த தட்சணையும் கொடுத்தாள். அவர்கள் ஆசீர்வாதம் பண்ணிவிட்டுப் போனார்கள். சுபத்திரை அர்ஜுனனைப் பார்த்து, அர்ஜுனா! நான் தேர் ஓட்டுவதில் சாமர்த்தியமுள்ளவள் என்று சொல்லியிருந்தாள். அவன் முதலில் தேரின்மேலேறி உட்கார்ந்து கடிவாளத்தைப் பிடித்தாள். அர்ஜுனன் சந்நியாசி வேஷத்தைக் களைந்து வெள்ளை வஸ்திரம் உடுத்து, கவசந்தரித்து, வில்லேந்தரித்து, இந்திரன் கொடுத்த கிரீடத்தைச் சிரசில் அணிந்துகொண்டு தேரிலேறினான். இப்படிப் பிரயாணத்துக்குச் சித்தமாயிருக்கும் இருவரையும் பார்த்து கன்னியாமாடத்தில் இரைச்சல் உண்டாயிற்று. சுபத்திரையின் தோழிகள் சுபத்திரையே! உலகத்தில் இணையற்றவனும் மஹாரதவீரனுமான அர்ஜுனனுக்கு மனைவியாய் உன் கோரிக்கையை நிறைவேற்றிக் கொண்டாய். உனக்குச் சுக முண்டாகட்டும். உன் பந்துக்களுடன் போய்ச் சேரு என்று வாழ்த்தினார்கள். சுபத்திரை குதிரைகளை ஓட்டினாள். அவளுடைய தோழி பக்கத்திலிருந்து வெண்சாமரை வீசிக் கொண்டிருந்தாள். தேரானது மேககர்ஜனைபோல இரைச்சலிட்டுக்கொண்டு வேகமாய்ச் சென்றது. அதை கரத்து ஜனங்கள் பார்த்தார்கள். அர்ஜுனன், இந்திராணியுடன் கூடியிருக்கும் இந்திரன்போல விளங்கினான். சுபத்திரையை அர்ஜுனன் கொண்டுபோகிறதைப் பார்த்து நகரத்து ஜனங்கள் கூச்சலிட்டார்கள். பலர் அவனைப் பிடியுங்கள் அடியுங்கள் என்று கூறு பல்

சத்திலும் சூழ்ந்துகொண்டு ஆயுதங்களை வீசினார்கள். அர்ஜுனனும் ஒருவருக்கும் தன்பழுண்டாகாதபடி அம்புகளை மழைபோலச் சொரிந்தான். அரண்மனைகளிலும் பிரபுக்களின் வீடுகளிலும் பொழிந்தான். சூரியன் முத்திரத்தை கருடன் கலக்குவதுபோல நகரத்தை கலங்கி விட்டு ரைவத பர்வதத்தினருங்கி வந்தான்.

244-வது அத்தியாயம்.

சுபத்திராஹரண பர்வத் தொட

விப்ருது என்பவன் ரைவதபர்வதத்தில் பெருஞ் யோடி காவல்செய்து கொண்டிருந்தான். நகரத்து இரைசலைக் கேட்டு ர சேனைகளை யனுப்பினான், தானும் புறப்பட்டுவந்து சூரியனைப்போலவிளங் தம் அர்ஜுனனைப்பார்த்தான். அவனைக் கண்ட யாதவவீரர்கள் ஆசரியமடைந்தார்கள். சுபத்திரை அந்தச் சேனைகளைக் கண்டு அர்ஜுனனைப் பார்த்து புருஷோத்தமனே! நீ பெரும் யுத்தம் பண்ணும்போது உனக்குத் தேரோட்டவேண்டு மென்று வெகு காலாக ஆசைகொண்டிருந்தேன், வேகமும் பராக்கிரமும் உள்ள உனக்குத் தேரோட்டும்படி நான் பழகியிருக்கிறேன் என்றாள். அர்ஜுனன் மகிழ்ந்து தேரைவீடு உன் சேனையில் அது புகுவோம். என் கை வல்லமையைப் பார் என்றான். சுபத்திரை சந்தோஷத்துடன் தேரை ஓட்டினாள். அந்த சேனையும் அர்ஜுனனை யெதிர்த்துப் பாணவருஷம் பொழிந்துகொண்டு அர்ஜுனனைச் சூழ்ந்துகொண்டது. அர்ஜுனன் தேர்மேலும் குதிரைகளின் மேலும் அம்புகளை யெய்தார்கள். அர்ஜுனன் அவர்களையெய்த அம்புகளைத் தடுத்து ஆகாயத்தை மறைத்தான். அவர்களுடைய தேர்கள், குதிரைகள், யானைகள் மேலும் பாணங்களைப் பொழிந்து அவைகளைத் துண்டு துண்டுகளாகச் சிதறச் செய்தான். அவர்களைக் கொல்ல விரும்பாமல் அவர்களுடைய விற்களை முறித்துக் கவசங்களைச் சிதைத்தான். சுபத்திரை அதைப் பார்த்து அர்ஜுனா! நான் பாக்கியசாலியானேன். நீ தடையின்றிச் சுகமாகப்போ என்றாள். விப்ருது ஓடிவந்து தன் சேனைகளைப் பார்த்தது ஸலலுங்கள், யுத்தம் பண்ணவேண்டாம் என்றான். அதைக் கேட்ட சேனைகள் அடங்கி நின்றன. விப்ருது தன் தேரை விட்டிறங்கி வந்து அர்ஜுனனை ஆலிங்கனம் செய்துகொண்டான். அர்ஜுனா! நீ யிங்கே வந்திருப்பதை வெகு நாட்களுக்கு முன்னமே கிருஷ்ணன் எனக்குச் சொல்லி யிருக்கிறார். சுபத்திரையின் மேலுள்ள ஆசையினால் நீ செய்தவல்லாம் எனக்குத் தெரியும். தனஞ்செயா! பலராமரையும் கிருஷ்ணனையும் உறவாகப் பெற்றாய். இந்த விவாக விஷயமான யோசனையில் கிருஷ்ணனே என்னைத்தான் மந்திரியாக வைத்துக்கொண்டு யோசித்தார். உன் எண்ணம் நிறைவேறியது. விசனம் நீங்கியிருக்கிறாய். சீக்கிரம் உன் சகோதர்களிட போய்ச் சேரு என்று சொன்னான். அர்ஜுனன் விப்

ருதுவுக்கு நமஸ்காரம் பண்ணி விடை பெற்றுக்கொண்டு தேரை நடத்தினான். சேனையிலுள்ள ஜனங்கள் அர்ஜுனன் சுபத்திரையைக் கொண்டுபோவதைக் குறித்துச் சந்தோஷ ஆரவாரம் செய்துகொண்டு நகரத்துட் புகுந்து சுதர்மை யென்னும் சபைக்குப் போய்க் காவலாளிகளுக்குச் சொன்னார்கள். அதைக்கேட்ட காவற்காரன் பெரிய பேரிகையை அடித்தான். அந்தப் பேரிகை யுத்தத்துக்கு சித்தம் பண்ணுவதற்காகவே அடிக்கப்படும். அந்தச் சத்தம் கேட்ட போஜர்கள், விருஷ்ணிகள், அந்தகர்கள் எல்லாரும் கலக்கமடைந்து ஒன்றாகக் கூடினார்கள், எல்லாரும் ஆயுதபட்டு வந்து சபையில் உட்கார்ந்தார்கள். காவற்காரன் அவர்களுக்கு அர்ஜுனன் செய்த காரியமெல்லாம் சொன்னான். அதைக் கேட்டுக் கோபம்கொண்ட யாதவ வீரர்கள் ஆயுதங்களை யெடுங்கள், தேரைப் பூட்டுங்கள், சீக்கிரகமாகச் செல்லுங்களென்று பலவாறாகச் சொன்னார்கள். பலராமா அவாகளைப் பார்த்து வீராகளே! கிருஷ்ணன் சும்மாயிருக்கும் போது நீங்களேன் வீண் ஆரியம் செய்கிறீர்கள். அவன் தன் கருத்தை வெளியிடட்டும். அவனுக்கு எப்படிச் செய்யப் பிரியமோ அப்படிச் செய்யுங்கள் என்று சொன்னார். எல்லாரும் சரி சரி என்று கூறித் தத்தம் இடங்களில் உட்கார்ந்தார்கள். அதன் பின் பலராமர் கிருஷ்ணனைப் பார்த்துச் சொல்லுகிறார்.

எல்லாவற்றையும் அறிந்தவனே! ஜனார்த்தனா! என் தலை குனிந்து உட்கார்ந்துகொண்டிருக்கிறாய்! நாங்களெல்லாரும் உன மித்தம் அர்ஜுனனுக்கு மரியாதை செய்தோம். குலத்தை கெடுக்கும் தூர எண்ணமுள்ள அவனை அந்த மரியாதைக்குப் பாத்திரனல்ல. யோக்கியனுனவன் அன்னம் புசித்த விடத்தில் பாத்திரத்தை உடைப்பானு? முன்னமே செய்த சம்பந்தத்தைக் கொண்டாடிப் பின்னும் சம்பந்தத்தை விரும்புகிற புத்திமான் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்வானு? தன் பெருமையை விரும்பினவன் இது போன்றதைச் செய்வானு? அவன் நம்மை அவமதித்து, உன்னையும் என்னையும் கவனியாமல் நமக்கு மிருத்துவான சுபத்திரையைக் கொண்டு போயிருக்கிறான். கிருஷ்ணு! என் தலைமேல் தாலை வைத்தான். சாலால் மிதித்தால் பாம்பு பொறுக்குமா? அதைப்போல நானும் இவன் செய்ததைப் பொறுக்கவில்லை. இப்போது நான் ஒருவனே பூமியில் கௌரவர்கள் இல்லாமற் செய்து விடுவேன். அர்ஜுனன் செய்த அக்கிரமம் பொறுக்க முடியவில்லை என்றார். மற்றவர்களும் அதற்குச் சார்பாகவே பேசினார்கள்.

245-வது அத்தியாயம்.

ஹாரணஹரண பர்வம்.

யாதவர்கள் எல்லாரும் தங்கள் பராக்கிரமத்துக் கேற்றபடி பேசினதைக் கேட்டுக் கிருஷ்ணன் சொல்லுகிறார், முன்னே நான் சொன்னதை நீங்க

லெல்லாரும் கேட்கா மலிருந்தீர்கள். போனது போனதே. ஒரு போதும் திரும்புவதில்லை. நான் சொல்வதைக் கேளுங்கள். அர்ஜுனன் நமக்கு அவமானம் உண்டாக்கவில்லை. அவன் செய்கையால் இப்போது நமக்கு மிகுந்த மானமான பெருமை உண்டாயிருக்கிறது. இது நிச்சயம். நீங்கள் பொருளாசையுள்ளவர்க ளென்று மனத்தில் நினைத்துக்கொண்டு பசுவைப் போலக் கன்னிகையைத் தானம் பண்ணுகிறதை யார் ஒப்புக்கொள்வார்கள். எவன் கன்னிகையை விற்பான், மற்றைய விவாகங்களில் [illegible] தோஷமிருப்பதை அவன் கவனித்து [illegible] பலாத்காரமாக பெண்ணை கொண்டுபோவது அரசர்களுக்குச் சிறப்பு அம்முறை [illegible] அர்ஜுனன் கொண்டுபோனது தர்ம நியாயமே. இந்தச் சம்பந்தமும் சரியானது தான். பத்திரையும் அர்ஜுனனும் சரிபான பெருமையுள்ளவர்கள். ஆதலால் [illegible] பலாத்காரமாகக் கொண்டு போனான். அர்ஜுனனே கணவனுக்க அடைதற்கு எந்தப் பெண்தான் விரும்பமாட்டாள், திரிலோகத்திரான ருத்திர மூர்த்தியைத் தவிரத் தேவர்களிலாகட்டும் மனிதர்களிலாகட்டும் அர்ஜுனனை ஜயிக்க வல்லவர் ஒருவருமில்லை என்பது என் கருத்து. மஹாவேகமாகப் பாணங்களை வருஷிக்கும் யுத்தவீரன். அவனுக்குச் சரியாக எவன் அம்பு தொடுப்பான் ஆதையால் நீங்கள் சந்தோஷத்துடன் போய் அவனைத் திரும்பி அழைத்துக்கொண்டு வாருங்கள். இது தான் முடிவான என் யோசனை. அர்ஜுனர் புஜபலத்தால் உங்களை ஜயித்து தன் ஊர் போய்ச் சேர்ந்தால் உங்கள் புகழ் உடனே கெடும். சமாதானம் செய்து கொள்வதினால் தோல்வியில்லை என் அத்தை மகன் நமக்குச் சத்துருவாக மாட்டான் என்றார். அது கேட்ட யாதவர்கள் அப்படியே செயய ஆரம்பித்தார்கள். பெரிசை அடித்துக்கொண்டு கிளம்பினார்கள் அந்த சத்தம் கேட்ட அர்ஜுனன், சுபத்திரையைப் பார்த்து யாதவாகளெல்லாரும் உனக்காக போர புரிய வருகிறார்கள். குடித்து வெறிகொண்டு வரும் அவர்களை எம லோகம் அனுப்புவேன். அல்லது அவர் குடித்ததைக் கக்கும்படி செய்வேன். என்று சொல்லித் திரும்பினன். அதைக் கண்ட சுபத்திரை பயந்து அர்ஜுனனைப் பார்த்துச் சொல்லுகிறாள். அர்ஜுனா! அப்படிச் செய்யாதே. சுபத்திரை யாதவர்களை அழிக்கக் கலியாகப் பிறந்திருந்திரள் என்று இங்கரத்தார் என்னைத் தூஷிப்பார்கள். அதனால் எனக்குத் தீராத்துக்கம் உண்டாகும் எனக்கு உலகத்தில் அபவாதமில்லாதிருக்கும்படி அனுக்கிரகம் செய். யாதவர்களை வதைக்க நினையாதே என்று வணங்கிச் சொன்னாள். அர்ஜுனன் அதற்குச் சம்மதித்துத் தன் ரதகியைத் தழுவிக்கொண்டு காண்டீவப் பிரஸ்தத்துக்குத் தேரைச் செலுத்து என்றான். சுபத்திரையும் குதிரைகளை வேகமாக நடத்தினாள். யாதவர்கள் அர்ஜுனனை யழைக்க இராஜ மார்க்கமாக வரும்போது மாளிகையிலும் மேடைகளிலும் அர்ஜுனனுடையபாணங்களைப் பார்த்துக் கிருஷ்ணன் சொன்னது மெய்தானென்று அச்சரியப் பட்டார்கள் லிப்புது அர்ஜுனன் வெகு தூரம் போய் விட்டானென்று சொன்னதலுல்

யாதவவீரர்கள் அனைவரும் தொடராமல் திரும்பி நகரத்துக்கு வந்தார்கள். பிறகு அர்ஜுனன் காடு மலை, தடாகங்களையெல்லாம் கடந்து, கிரிவிரஜ நாட்டையும் தாண்டி, ஸால்வ தேசத்தையும் மத்ஸ்ய தேசத்தையும் கடந்து, தேவாரண்யம் என்னும் வனத்தை யடைந்தான். அங்குள்ள ரிஷிகள் அர்ஜுனனுக்கு மரியாதை செய்தார்கள். பின்பு அவ்விடம் விட்டுப் புறப்பட்டுக் களிங்க தேசம் வந்து தவழ்ந்து பட்டணமாகிய கிரிவ்ரஜ நகரத்தைத் (இந்திரப் பிரஸ்தத்தை) தூரத்திலேயே பார்த்தான்

246-வது அத்தியாயம்.

மகாபாரத பர்வத் தொடர்ச்சி.

அந்தப் பட்டணத்துக்கு ஒரு யோசனை தூரத்திலே அர்ஜுனனுடைய பசுக்கொட்டிலிருந்தது. சுபத்திரையோடு அங்கே யிறங்கினான். சுபத்திரை பைப் பார்த்து நீ இடச்சி வேஷம் தரித்துக்கொண்டு காண்டவப்பிரஸ்தம் போ. நீ யென்னுடன் கூட வந்தால் கிருஷ்ணை உன்னைக் கோபிப்பாள். மாறு வேஷத்துடன் போனால் உன்னிடம் இனிமையாய்ப் பேசுவாள். அவள் முதலில் சொன்னதை ஒருபோதும் மறுத்துப் பேச மாட்டாள். ஆகையால் நீ மாத்திரம் இடைச்சி வேஷத்துடன் போ என்றான். அவன் சொன்னபடியே செய்வேனென்றாள். அர்ஜுனன் மகிழ்ந்து இடையர்களை யழைத்து இளம்பருவதான இடைப் பெண்கள் எல்லாரும் திரௌபதியைப் பார்ப்பதற்குச் சுபத்திரையுடன் போகவேண்டுமென்று கட்டளையிட்டான். சுபத்திரை இடைச்சி வேஷத்துடன் கோப ஸ்திரீகள் சூழப் போய் வீட்டுக்குள் புகுந்தாள். முதலில் குந்திக்கு நமஸ்காரம் பண்ணினாள். குந்தி அவளைத் தழுவி ஆலிங்கனம் செய்துகொண்டு ஆசீர்வாதம் பண்ணினாள் பிறகு சுபத்திரை திரௌபதியிடம் போய் அவளை நமஸ்கரித்து நான் உன் அடிமை என்றாள். திரௌபதி அவளைத் தழுவிக்கொண்டு உன் கணவன் எதிரி யில்லாமலிருக்கக் கடவன். நீ வீரரான புத்திரரை பெறக்கடவாய். உன் கணவனுடைய பிரியத்துக்குப் உரியவளாயிருக்கக் கடவாயென்றாள். சுபத்திரை சந்தோஷித்து அப்படியே ஆகவேண்டுமென்று சொன்னாள். அதன் பின் குந்தி சுபத்திரையை மடியில் வைத்துக்கொண்டு வசுதேவரைப்புகழ்ந்து மகிழ்ந்தாள். அப்போது யாதவவீரர்கள் வருகிற ஆரவாரம் கேட்டது அவர்கள் அர்ஜுனனைப் பின் தொடர்ந்து வந்தார்கள். அவர்களுடைய வைபவங்களை நகரத்தார் கூட்டங் கூட்டமாக கூடிப் பார்த்தார்கள். அந்த யாதவர்களுடன் அர்ஜுனன் வந்து நகரத்துட் புகுந்து, ஜனங்கள் எதிர் கொண்டழைக்க மகிழ்ந்து அரண்மனை போய்த் தௌம்யரையும் குந்தியையும் நமஸ்கரித்தான். பின் தர்மபுத்திரரையும் பீமனையும் வணங்கினான். நகுல சகாதேவர்களைத் தழுவிக்கொண்டு நகரத்து ஜனங்கள் பிராமணர்கள் எல்லாருக்கும் தகுந்தபடி மரியாதை செய்

தான். தான் போன இடங்களில் கண்ட அதிசயங்களை யெல்லாம் யுதிஷ்டிரருக்கும் மற்றவர்களுக்கும் சொல்லிக் கொண்டிருந்தான். எல்லாரும் சுபத்திரையைப் புகழ்ந்து தங்கள் வீட்டுக்கு வந்த இலட்சுமி என்று கூறி மகிழ்ந்தார்கள். அவளும் எல்லாருக்கும் பிரியமுண்டாம்படி நடந்தாள். திரௌபதியும் குந்தியும் சுபத்திரை யிடத்தில் மிக அன்புள்ளவர்களாயிருந்தார்கள்.

247-ஆது அத்தியாயம்.

ஹம்ஸரூபம் தொடர்

துவாரகா நகரத்து ஜனங்கள் அர்ஜுனன் சுபத்திரையைக் கொண்டுபோனதைப் பற்றிச் சந்தேகித்தார்கள். கிருஷ்ணன், பிருந்தி கன்னிகாமாடத்தில் இருக்கத்தகாதென்று சொன்னதற்குக் காரணம், பார்த்த யதி அர்ஜுனனென்று அவர் முன்னேயே தெரிந்து கொண்டது தான். கிருஷ்ணன் தெரிந்தே சும்மா இருந்தார். அர்ஜுனனுக்குச் சாதகமாகவும் இருந்தார் என்றும், அவனுக்கு மரியாதை செய்தாரென்றும் சொல்லிக்கொண்டார்கள். கிருஷ்ணன சுபத்திரையை அர்ஜுனனுக்குக் கொடுக்கப் பிரியமாயிருந்தார். விப்ருதுக்கும் முன்னேயே தெரியும் என்றும் பேசிக்கொண்டார்கள். அர்ஜுனன் காண்டவப் பிரஸ்தம் போன்ற அறிந்த கண்ணன் அவ்விடம்போக ஆலோசித்தார். பலராமர், அக்ரூரன், உக்ரசேனன், விதூரதன், விப்பிருது முதலானவர்களோடு யோசித்தார். பலராமர் அணுமதி கொடுத்ததின் மேல் காண்டவப் பிரஸ்தம் போகச் சேனைகளை ஆயத்தப் படுத்தினர். யாதவவீரர்கள் சந்தோஷத்துடன் யானை குதிரை தேர்களைச் சித்தப்படுத்தினர்கள். பின் கிருஷ்ணசுவாமியானவர், அக்ரூரன், விப்பிருது, கதன், சத்யகன், சாத்யகி, உத்தவர், கிருதவர்மா, சாம்பன், பிரத்யும்னன, முதலானவர்களுடன் அநேக சேனைகளை எடுத்துக்கொண்டு இந்திரப்பிரஸ்தம் போய்ச் சேர்ந்தார். யுதிஷ்டிரர் கிருஷ்ணன் வருகிறதைக் கேட்டு அவரை எதிர்கொண்டு அழைத்துவரும்படி நகுல சகாதேவர்களை அனுப்பினர். அவர்களோடு கூடக் கண்ணன் நகரத்திற் பிரவேசித்தார். இந்திரப்பிரஸ்தம் கிருஷ்ணன் வருகிறதை உத்தேசித்து வெகு சிங்காரமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. கிருஷ்ணனும் பலராமரும் நகரத்து ஜனங்களால் பூஜிக்கப்பெற்று யுதிஷ்டிரரது அரண்மனையில் பிரவேசித்தார்கள். யுதிஷ்டிரர் பலராமருக்குத் தக்க மரியாதை செய்து கிருஷ்ணனே உச்சிமோந்து ஆலிங்கனம் செய்து கொண்டார். கிருஷ்ணன் அன்போடு தருமரை வணங்கினர். பிறகு தருமர் வந்தவர்கள் எல்லாருக்குந் தக்க மரியாதை செய்தார். குந்தியும் பாண்டவர்களும் கிருஷ்ணையும் கண்ணனிடம் போய்க் கண்டு மனமகிழ்ந்தார்கள். இராமகிருஷ்ணர்களிருவரும் பாண்டவர்களுடம் நேசமாயிருப்பதையும் பிரியமாய்ப் பேசுகிறதையும் குந்தி பார்த்துத் தன் குமாரர்களுக்கும் பந்துக்களிருக்கிறார்களென்று களித்

தான். பலராமரும் அக்குரூரரும் சுபத்திரைக்குச் சீதனமாகத் திவ்யத்தைக குவியலாகக் கொடுத்தனுப்பினர்கள். முத்தாரங்கள், இரத்தினாரங்கள், பவழாரங்கள் மற்றுமுள்ள பலவகையான ஆபரணங்கள், இரத்தின கம்பளம், மெத்தைகள், புலித்தோல்ஆசனங்கள், எல்லாம் கொடுத்தார்கள். சுபத்திரைக்கு மகிழ்ச்சி யுண்டாம்படி விவாஹ உற்சவம் ஏழு நாள் நடந்தது. கிருஷ்ணன் பாண்டவர்களுக்குச் சம்பந்தி மரியாதையாக ஏராளமான திரவியங் கொடுத்தார். அநேகமாயிரம் யானைகள், குதிரைகள், தேர்கள், பசுக்கள், கோவேறுகழுதைகள், பணிப்பெண்கள், காணயங்களாக கட்டிகட்டான தங்கம் முதலிய வெல்லாம் கொடுத்தனுப்பினர். பலராமரும் மிகுந்தியான ஆயிரம் யானைகள் அர்ஜுனனுக்குக் கொடுத்தார். தாம்புலம் பரும் சம்பந்திகளுக்குத தக்கபடி பதில் மரியாதை செய்தார். யாதவர்களும் விருஷ்ணிகளும் அந்தகர்களும் கௌரவர்களும் கூடித்தேவர்களைப் போலக் களித்திருந்தார்கள். தங்கள் தங்களுக்கு இஷ்டமானபடி ஆடியும் பாடியும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். இப்படிப் பல தினங்களான பின் எல்லாரும் கௌரவர்களால் தகுந்த மரியாதை செய்யப் பெற்றுத் துவாரகை போய்ச் சேர்ந்தார்கள். பலராமர் சுபத்திரையைத் தழுவிக்கொண்டு மரியாதை செய்து, திரௌபதியினிடம் இவள் உன் அடைக்கலம் என்று சுபத்திரையை அவளிடம் ஒப்புவித்துவிட்டுக் குந்திக்கு வணங்கி விடை பெற்றுச் சென்று கொண்டு துவாரகை போனார். கிருஷ்ணன் மாத்திரம் இந்திரப்பிரஸ்தத்திலே அர்ஜுனன் கூட முப்பத்தைந்து நாள் வசித்தார். யமுனை நதிக்கரையிலே வேட்டை யாடிகொண்டு களித்திருந்தார், சுபத்திரை ஜயந்தனைப்போல ஒரு புத்திரனைப் பெற்றாள். அந்தப் புத்திரனுக்கு அபிமன்யு என்று பேரிட்டார்கள். அவன் சகல சாஸ்திரங்களையும் கற்றுக்கொண்டான். தனுர்வேத இரகசியங்க ளெல்லாவற்றையும் அர்ஜுனனிடம் தெரிந்து கொண்டான். அர்ஜுனன் தன் புத்திரனுக்கு அஸ்திரசஸ்திர வித்தையிலும், அங்கங்களின் அமைப்பிலும் உள்ள சகல இரகசியங்களையும் கற்பித்தான். எல்லாவற்றிலும் தனக்கு ஒப்பாகச் செய்தான். பூலோகத்திலும் தேவலோகத்திலுமுள்ள சகல வித்தைகளிலும் இணையில்லாமல் செய்தான். திரௌபதியும் ஐந்து பர்த்தாக்களுக்கும் ஐந்து புத்திரர்களைப் பெற்றாள். யுதிஷ்டிரருக்குப் பிரதிவிந்தியனைப் பெற்றாள். பீமனுக்கு ஸுத ஸோமன் பிறந்தான். அர்ஜுனனுக்குச் சுருதகர்மாவைப் பெற்றாள். நகுல னுக்குச் சதானீகன் பிறந்தான். சகாதேவனுக்கு சுருதசேனன் உதித்தான். இந்தப் புத்திரர்களுக்கு எல்லாம் ஜாதகர்மாதிகள் செய்யப் பட்டது. முறைப்படி வேதாத்தியயனம் பண்ணிப் பிரமசரிய வீரதத்தையும் முடித்தார்கள். அர்ஜுனனிடத்தில் தனுர்வேதம் அப்பியசித்துச் சிறந்து விளங்கினார்கள். இப்படிப் பாண்டவர்கள் புத்திரர்களுடன் கூடித்தேவர்களைப் போல மகிழ்ந்திருந்தார்கள்.

248-வது அத்தியாயம்.

காண்டவதாஹ பர்வம்.

பாண்டவர்கள் இந்திரப்பிரஸ்தத்தில் வசிக்கையில் [illegible]ஷ்மர், திருதராஷ்டிரன் இவர்களுடைய கட்டளைப்படிப் [illegible]கவான அரசாட்சி ஜயித்தார்கள். பிரஜைகள் எல்லாரும் [illegible]வர்களைப் போலச் சுகமடைந்தார்கள். சகல விதமான தர்மங்களும் விருத்தியாயின. பிரஜைகள் தர்மத்திரரை நேசித்தார்கள். தர்மரும் நீதி வழுவாமல் பரிபாலித்து வந்தார். மற்ற நால்வரும் தர்மருக்கடங்கி, பகைவர்களுடைய [illegible]ண்டாக்கி [illegible]கொண்டிருந்தார்கள்.

சில காட்களுக்குப் பின்பு அர்ஜுனன் கிருஷ்ணனை நோக்கிக் கிருஷ்ணா வெப்பம் மிகுதியாக இருக்கிறது. நமக்கு வேண்டிய பரிகாரங்களுடன் யமுனா நதிக்குப் போவோம் என்றான். கிருஷ்ணனும் சம்மதித்தார். இருவரும் தர்ம புத்திரரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு தங்களுக்கு வேண்டியவாகளுடன் போனார்கள். யமுனா நதிக்கரையில் உலாவிக்கொண்டிருந்தார்கள். காண்டவ வனத்தைக் கண்ணன் கண்டார். கரடி, புலி, சிங்கம், பலவகையான குரங்குகள், நானாவகையான பட்சிகள், நானாவகையான பாம்புகள், இராட்சதர்கள், எல்லாம் வாழுமிடமான அந்த காண்டவ வனத்தை அழிக்கவேண்டுமென்று [illegible]னைத்தார். ஸ்திரீகளும் புருஷர்களுமாகத் தங்களுக்கு இஷ்டமானபடி இஷ்டமான இடங்களில் விளையாடிக்கொண்டிருந்தார்கள். திரௌபதை, சுபத்திரை, சத்தியபாமை முதலானவர்கள் ஸ்திரீகளுக்கு வஸ்திரதானம் பண்ணினார்கள். இப்படி விளையாடிக்கொண்டிருந்தனர். கிருஷ்ணனும் அர்ஜுனனும் ஒரு ஆசனத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். ஒரு பிராமணன் அவர்களிடம் வந்தான். அவனைக் கண்டு இருவரும் எழுந்து நின்றார்கள்.

249-வது அத்தியாயம்.

காண்டவதாஹ பர்வத் தொடர்ச்சி.

அந்தப் பிராமணன் கிருஷ்ணார்ஜுனர்களைப் பார்த்து, நான் பிராமணன்; அதிக போஜனம் செய்கிறவன். எப்போதும் குறைந்த போஜனமே செய்கிறேன். உங்களிடம் யாசிக்கிறேன். எனக்குத் திருப்தியாய்ப் போஜனம் போடுங்கள் என்றான். அப்போது கிருஷ்ணார்ஜுனர்கள் ஓய் பிராமணா! உமக்கு எப்படிப்பட்ட போஜனம் வேண்டும்? சொன்னால் பிரயத்தனப் படுகிறோம் என்றார்கள். பிராமணன், நான் அன்னத்தை விரும்பவில்லை, நான் அக்கினி தேவன். எனக்குச் சரியான போஜனம் இந்த காண்டவ வனந்தான். இதை இந்திரன் எப்போதும் கண் கொட்டாமல் காக்கிறான். இந்திரனுடைய சினேகிதனான தட்சகன் இதில் வசிக்கிறான். இந்திரன் அவனுக்காக இதைப் பாது

காக்கிறான். நானிதை எரிக்கத் தொடங்கினால் இந்திரன் மழை பொழிவித்து அணைத்து விடுகிறான். உங்களுடைய சகாயத்தைப் பெற்று இந்த வனத்தைத் தகிக்க விரும்புகிறேன். இதுதான் என் விரும்புகிற போஜனம் என்றான்.

ஜனமேஜயன், பிராமணோத்தமா, காண்டவ வனத்தை அக்கினி எரிக்க விரும்பினது என்? அக்கினி காண்டவ வனத்தை எரிக்கிறதற்குரிய காரணம் அற்புதமாயிராது. அதைச் சொல்லவேண்டுமென, வைசம்பாயனர் சொல்லுகிறார். இந்திரனுக்கு சமானமான சுசேகி என் ஒரு அரசனிருந்தான். அவன் புராண பிரசங்கமான அவனுக்கு யாகம் செய்வதைத் தவிர வேறு பிரியமில்லை. ஒவ்வொரு நாளும் சென்றுகொண்டு வந்தான். இதனால் ரித்துவிக்குகளுக்கு யாகப்புகையினால் கண்கள் கெட்டுப் போயின. அவர்கள் அரசனைவிட்டு விலகிக் கொண்டார்கள். அரசன் அவர்களை வேண்டிக் கொண்டான். அவர்கள் வரவில்லை. அவர்களுடைய சம்மதத்தின்மேல் வேறு பிராமணர்களைக் கொண்டு அந்த ஸத்ர யாகத்தை முடித்தான். பிறகு நூறு வருஷம் செய்யக் கூடிய ஒரு ஸத்ரயாகம் செய்ய நினைத்தான். ரித்துவிக்குகள் மறுத்து விட்டார்கள். அரசன் அவர்களைக் கெஞ்சிக் கேட்டுகொண்டான். அவர்களுக்கு வேண்டியவற்றை யெல்லாம் தருகிறேனென்றான். என்ன சொல்லியும் அவர்கள் மறுத்து விட்டார்கள். அரசன் கோபித்து நான் யாகம் செய்வதில் விருப்பமுள்ளவனாயிருக்கிறேன். நானே யாகம் செய்விக்கத் தகாத பாவியாயிருந்தால் என்னை விட்டுவிடுங்கள். நீங்கள் என்னை வெறுத்துத் தள்ளிவிட்டால் வேறு ரித்துவிக்குகளிடம் போகிறேனென்றான். அவர்கள் அரசனே! யாகங்களை இடைவிடாமற் செய்தபடியால் நாங்கள் களைத்துப் போனோம். அதனாலே தான் முடியாது என்கிறோம். நீ ருத்திர மூர்த்தியிடம் போனால் அவர் உனக்கு யாகம் செய்விப்பார் என்றார்கள். அவன் அப்படியே கைலாசம் போய் ருத்திரமூர்த்தியைக் குறித்து உக்கிரமான தபசு செய்தான். அவனுடைய தபசுக்கு மெச்சி ருத்திரமூர்த்தி பிரசன்னமானார். அரசனைப் பார்த்து என்ன வரம் வேண்டுமென்று கேட்டார், அவன் நீரே எனக்கு இஷ்டப்படி யாகம் செய்விக்க வேண்டுமென்றான். நீ பன்னிரண்டு வருஷம் பிரமசரிய விரதத்தோடிருந்து, இடைவிடாமல் நெய்த்தாரைகளைச் சொரிந்து அக்கினிக்குத் திருப்தி செய்வித்தால் அதற்கேற்ற வரம் பெறுவா யென்றார். அவன் அப்படியே செய்தான். மறுபடியும் ஈசன் பிரத்தியட்சமாய், நானே நேராக யாகம் செய்விப்பது கூடாது. எனது அம்சமான துர்வாசரிஷி செய்து வைப்பார். நீ யாகத்துக்கு வேண்டியவற்றைச் சேகரம் செய் என்றார், அவன் சேகரம் பண்ணினான். பரமசிவன் துர்வாசரை அனுப்பினார். அவர் போய் யாகத்தைக் குறைவில்லாமல் செய்வித்தார். அரசன் திருப்தி படைந்து தன் நகரம் போய்ச் சேர்ந்தான். பன்னிரண்டு வருஷம் நெய் குடித்தபடியால் அக்கினி பகவானுக்கு வேறு யாகங்களில் ஹோமத்திரவியங்களை வாங்கிக்கொள்ள விருப்பமில்லை. ஒளி குறைந்து வாட்ட முண்

டாயிற்று. தன் சக்தி குறைந்து போனதை அறிந்து அக்னி பகவான் பிரம லோகம் போய்ப்பிரமாவை வணங்கி, பகவானே! சுவேதகி ராஜன் யாகத்தில் அளவிடப்படாத நெய்யால் ஹோமஞ் செய்தபடியால் நான் சக்தியற்றுப் போனேன். சக்தியுண்டாகும்படி செய்ய வேண்டுமென்றான். பிரமதேவர் அக்னியே நீ காண்டவ வனத்தைத் தகித்துவிட்டால் உன் நோய் தீரும் என்று சொன்னார். அக்னி பகவான் அப்படியே போய்க் காண்டவ வனத்தைப் பற்றி யெரிக்கத் தொடங்கினான். அதிலுள்ள யானைகளும் சர்ப்பங்களும் நீரைக்கொண்டு வந்து பொழிந்து அடிக்கடி அணைத்து விட்டன. காண்டவ வனத்தில் ஏழு தரம் தீபற்றி அணைந்

250-வது அத்தியாயம்.

காண்டவதாஹ பர்வத் தொட

அக்னி தேவன் தன் எண்ணம் நிறைவெறுமல் வருந்திப் பிரமாவிடம் போய் நடந்ததைச் சொன்னான். பிரமதேவர், நீ கொஞ்சகாலம் பொறுத்திரு. நாராயணர்கள் பூமியில் மனிதராக அவதரிப்பார்கள். அந்தக் காலத்தில் நீ காண்டவ வனத்தைத் தடையில்லாமல் யெரிக்கலாம் என்றார். நெடுங்காலத்திற்குப் பின் நாராயணர்கள் பூமியில் அவதரித்திருப்பதை யறிந்து அக்னி பிரமாவிடம் போனான். பிரமதேவா அக்னியே நீ இப்போது காண்டவ வனத்தை யெரிக்கலாம். நரன் அர்ஜுனனாகவும் நாராயணன் கிருஷ்ணனாகவும் அவதாரம் செய்திருக்கிறார்கள். அவ்விருவரும் இப்போது காண்டவ வனத்துக்கருகில் இருக்கிறார்கள். நீ போய் அவர்களைக் கேட்டுக்கொள். இந்திரன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அதை யெரிக்கலாம். அவ்விருவரும் இந்திரனையும் தேவர்களையும் அடித்து உனக்கு உபகரிப்பார்கள் என்று சொன்னார். அதைக் கேட்டு அக்னிதேவன் கிருஷ்ணார்ஜுனர்களிடம் சீக்கிரமாகப் போய்க் கேட்டான். அக்னிதேவன் வார்த்தையைக் கேட்டு அர்ஜுனன் சொல்லுகிறான்.

அக்னி பகவானே! என்னிடம் அளவற்ற திவ்யாஸ்திரங்களிருக்கின்றன. எத்தனை இந்திரர்கள் வந்தாலும் தடுத்து யுத்தஞ் செய்ய முடியும். யுத்தத்தில் என் கைவேகத்தையும் வல்லமையையும் தாங்கத் தகுந்த வில் இல்லை. அம்புறாத்தூணியுமில்லை. ஆகையால் தேவேந்திரன் வந்து மழை பொழியச் செய்யும்போது அவனை யெப்படி நான் வெல்லுகிறது? அதற்கொரு உபாயம் செய்தால் உமது காரியத்தை நிறைவேற்றுவேன் என்றான்.

251-வது அத்தியாயம்.

காண்டவதாஹ பர்வத் தொடர்ச்சி.

அர்ஜுனன் மொழியைக் கேட்ட அக்கினி பகவான் வருணனை நினைத் தான். வருணன் அதை யறிந்து வந்து சேர்ந்தான். அக்கினி வருணனுக்கு மரியாதை செய்து உனக்குச் சந்திரன் கொடுத்த காண்டீபம் என்னும் வில், இரண்டு தூணிகள் வானரக் கொடியுள்ள தேர் இவைகளைச் சீக்கிரமாக என்னிடம் கொடு என்று கேட்டான். உடனே காண்டீபமென்னும் வில்லையும் தூணியையும், இரதத்தையும் கொடுத்தான். அர்ஜுனன் அவற்றைப் பெற் றுக்கொண்டு சந்தோஷத்தோடுந்து தேரைப் பிரதக்ஷணம் பண்ணி அதன்மே லேறிக்கொண்டான். அக்கினியைப் பணிந்து காண்டீபத்தை வளைத்து நா ணேற்றினான். அதிலுண்டான சப்தத்தினாலே உலகமெல்லாம் நடுங்கின. பின் அக்கினி கண்ணனுக்கு ஒரு சக்கராயுதம் கொடுத்தான். வருணன் ஒரு கதை கொடுத்தான். அப்போது கிருஷ்ணார்ஜுனர்கள் அக்கினியே! நாங்க ளிப்போது தேவாசுரர்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து கூடி வந்தாலும் ஜயிக்க வல் லவர்களாக இருக்கிறோம் என்றார்கள். அர்ஜுனன் அக்கினியே! இந்த ஜனார்த்தனர் செய்யக்கூடாத காரியம் ஒன்றுமில்லை. நானும் இப்போது உலகங்களை யெல்லாம் வெல்ல வல்லவனாக இருக்கிறேன். நீ இப்போது இந்த வனத்தின் நாலாபக்கங்களிலும் பற்றி யெரிக்கலாம். இந்திரன் இந்த வனத் தைக் காப்பாற்ற வந்தால் தேவர்களுடைய துன்பத்தையே காண்பான். நீ பயப்படாமல் ஆரம்பஞ் செய் என்றான். அக்கினி மகிழ்ந்து தனது ஜ்வாலா ரூபத்தை யெடுத்துக்கொண்டு பிரளய காலாக்கினியைப் போல ஜ்வலித்துக் கொண்டு வனத்தை யெரிக்க ஆரம்பித்தான். வனத்தில் எங்கும் அக்கினிக் கொழுந்து பரந்தன.

252-வது அத்தியாயம்.

காண்டவதாஹ பர்வத் தொடர்ச்சி.

கிருஷ்ணார்ஜுனர்களிருவரும் இரண்டு தேர்களில் ஏறிக்கொண்டு அந்த வனத்தின் இரண்டு பக்கங்களிலும் நின்றுகொண்டு எதிர்ப்பட்ட பிராணிகள் எல்லாவற்றையும் கொன்றார்கள். அதிலுள்ள பிராணிகள் கூச்சலிட்டுக்கொ ண்டு மேலே ஜம்பி யோடின. அப்படிப் போனவை எரிந்து கரிந்து அதி லேயே விழுந்தன. சரீரம் பாதி வெந்ததும், கால் வெந்ததும், கண் வெடித் ததுமாக அதேக மடிந்தன. சகோதரர் பிள்ளை முதலியவர்களைக் கட்டிக் கொண்டு ஜம்பி அதிலேயே மீண்டும் விழுந்து மடிந்தார்கள். தடாகங்க ளெல்லாம் கொதிப்படைந்து ஆமைகளும் மீன்களும் மிதந்தன. மேலே யெ ழும்புகிற பிராணிகள் எல்லாவற்றையும் அம்புகளால் துண்டு துண்டுகளாக

வெட்டி அதிலேயே வீழ்த்தினான். வேறின்ற பிராணிகளின் பேரொலி சமுத்திரம் கடைகிறபோதுண்டான ஒலியைப்போலக் கேட்கப்பட்டது. அக்கினி ஜ்வாலை ஆகாயமட்டும் எட்டி யெரிக்கத்தொடங்கி அப்போது தேவர்களும் ரிஷிகளும் பயந்து இந்திரனிடம் போய் லோகசே[illegible] இதென்ன பிரளயகாலமா? உலக முடிவு அடையுமே என்றார்கள். அப்போது இந்திரன் காண்டவ வனத்தைக் காப்பாற்றப் புறப்பட்டான். இந்திரன் மழையைப் பொழிவித்தான். மேகங்கள் தேர் அச்சைப்போல் மழைத் தாரைகளைப் பொழிந்தன. அது ஆகாயத்திலேயே சுண்டிப்போயிற்று. பிறகுமஹா மேகங்களைக் கொண்டு மழைபொழியச் செயதான். அந்த [illegible] கையுமாயிருந்தது.

253-வது அத்தியாயம்

காண்டவதாஹ பர்வத் தொடர்ச்சி.

அர்ஜுனன் தன் சாமர்த்தியத்தினலே இந்திரன் பொழிந்த மழையை அம்பு மாரியினலே தடுத்தான். அம்புகளினலே காண்டவ வனத்தை மறைத்தான். அப்படி மறைத்தபடியினலே உள்ளேயிருந்து ஒரு ஜந்துவும் வெளியில் போக முடியவில்லை. நாகராஜனுடைய தக்ஷகன் அப்போது அங்கேயில்லை. குருக்ஷேத்திரம் போயிருந்தான். அவனுடைய குமாரன் அசுவசேனன் அங்கேயிருந்தான். அவன் வெளியிற் போக முடியவில்லை. அவனுடைய தாயார் அவனை விழுங்கிப் பின்னல் வெளியில் விட நினைத்தாள். வாலிலிருந்து விழுங்கிக் கொண்டே வெளியில் இளம்பினன். அர்ஜுனன் அவள் தலையை அம்பினால அறுத்தான். அதை இந்திரன் பார்த்தான். காற்று மழையை உண்டாக்கி அர்ஜுனனே மயங்கச் செய்தான். அசுவசேனன் தப்பித்துக் கொண்டான். அர்ஜுனன், கிருஷ்ணன், அக்கினி மூவரும் அசுவசேனனை விலையற்றுப் போகக் கூடாதென்று சபித்தார்கள். இந்திரன் மோசஞ் செய்ததை நினைத்து அர்ஜுனன் கோபத்தோடு அவன்மேல் போருகெழுந்தான். இந்திரனும் கோபத்தோடு ஆகாயம்முழுவதையும் மறைத்து ஐந்திராஸ்திரத்தை விடுத்தான். அது மின்னல் இடி மழைகளோடுண்டாக்கிப் பயங்கரமாயிருந்தது. அர்ஜுனன் வாயுவாஸ்திரத்தினல் அதை அழித்தான். மழை வரண்டு போயிற்று. மின்னலும் இடியும் மறைந்து போயின. ஆகாயத்திலுள்ள கலக்கம் நீங்கிற்று. சூரியன் பிரகாசித்தது. குளிர்ந்த காற்று வீசிற்று. அக்கினி சந்தோஷமடைந்து ஜ்வலிரீது எரிந்தது. கருடன் முதலிய பட்சிகளும், சர்ப்பங்களும் ஆகாயத்தில் பறந்து கிருஷ்ணார்ஜுனர்களைக் கொல்ல வந்தன. அவைகளையெல்லாம் அர்ஜுனன் துண்டு துண்டாக வெட்டி அக்கினியில் தள்ளினான். பின் தேவர்கள், கந்தர்வர்கள், யட்சகர், நாகர்கள், ராட்சதர்கள் எல்லாரும் ஆயுதங்களை யேந்திக் கர்ஜித்துக்கொண்டு கிருஷ்ணார்ஜுனர்கள் மேலே சீறி வந்தார்கள். அவர்கள் எல்லாரையும் அர்ஜுனன் அம்புகளால் அறுத்து தெ

ருப்பில் வீழ்த்தினன். கிருஷ்ணனும் க்ஷத்திரியர்களை நாசம் செய்தார். அதைக் கண்டு இந்திரன் கோபித்து வஜ்ராயுதத்தை யெடுத்துக்கொண்டு யுத்தத்துக்கு வந்தான். இன்றோடே கிருஷ்ணர் க்ஷத்திரியர்கள் அழிந்தார்கள் என்று கூறி வஜ்ரம் என்னும் பாணத்தை அவர்கள் மேல் விடுத்தான். அவர்களும் தத்தம் ஆயுதங்களைப் பிரயோகித்தார்கள். கிருஷ்ணார்ஜுனர்கள் பின் வாங்காமல் போர் செய்து தேவ கூட்டத்தாரை பாணங்களால் அடித்து வருத்தினார்கள். தேவர்கள் பலதரம் முயன்று போர் செய்தும் கிருஷ்ணார்ஜுனர்களால் அடிபட்டுத் தோல்வியடைந்து ஓடுவதைக் கண்ட தேவரிஷிகள் ஆச்சரியப்பட்டார்கள். இந்திரனும் அவர்களை [illegible] யுத்தியத்துக்கு மிகுந்து மறுபடியும் யுத்தத்துக்கு வந்தான். இந்திரன் அவனுடைய சாமர்த்தியத்தை அறியவும்பிப் பெரிய கல் மழை பொழியச் செய்தான். அர்ஜுனன் பாணங்களால் கல் மழையைத் தடுத்தான். இந்திரன் மந்திர கிரியின் சிகரத்தைப் பெயர்த்து அர்ஜுனன் மேலெறிந்தான். அர்ஜுனன் அதை ஆயிரம் துண்டுகளாகச் சிதற அடித்தான். அந்தத் துண்டுகள் வனத்தில் விழுந்து அநேகமுள்ள பிராணிகளைக் கொன்றன.

254-வது அதியாயம்.

மயதர்சன பர்வம்

பலவகையான மிருகங்கள், பறவைகள், தேவர், கந்தர்வர், ராட்சதர், நாகர், நாக ஸ்திரீகள் முதலிய எல்லாரையும் கிருஷ்ணார்ஜுனர்கள் கொன்று தீயிலே வீழ்த்தினார்கள். அவ்விருவரையும் ஜயிப்பவன் ஒருவனுமில்லை. தேவர்களும் பின்னிட்டு ஓடினார்கள். அதைக்கண்டு அக்கினி மகிழ்ந்து நின்றான். அப்போது ஒரு அசரீரி இந்திரனை அழைத்தது, உன் சினேகிதனான தட்சகன் குருக்ஷேத்திரம் போயிருக்கிறான். இந்த கிருஷ்ணார்ஜுனர்களை எந்த விதத்தாலும் ஜயிக்கமுடியாது. என்பதை அறிந்துகொள் இவ்விருவரும் ஆதி தேவர்கள் என்று கோத்திரி பெற்ற நாராயணர்கள். அவர்களுடைய மகிமை உனக்கும் நன்றாய்த் தெரியும். ஆகையால் இந்திரா! யுத்தத்தை விட்டுப் போ என்று கூறிற்று. இந்திரன் சொர்க்கம் போய்விட்டான். இந்திரன் போவதைக் கண்டு தேவர்கள் சேனைகளோடு அவன் பின்னாலே போனார்கள். தேவராஜன் யுத்தத்தை விட்டுப் போவதைப் பார்த்த கிருஷ்ணார்ஜுனர்கள் சிங்காதனம் செய்தார்கள். பின் எதிர்ப்பட்ட பிராணிகளைக் கொன்று வீழ்த்திக் கொண்டவனத்தை யெரிப்பிதனர். இப்படித் திருப்தி செய்யப்பட்ட அக்கினி ஆகாயமட்டும் ஜ்வாலித் தெழுந்தது. பிராணிகளின் கொழுப்பு, மீனம், மாமிசம் முதலிய தின்று மகிழ்ந்து திருப்தி யடைந்தான். ஆனந்தத்தையும் சுகத்தையும் அடைந்தான். அப்போது மயன என்னும் அசுரன் தட்சகன் வீட்டில் இருந்து வேகமாய் ஓடினான். அதை கிருஷ்ணன் பார்த்து அவனைக் கொல்ல சக்கரத்தை ஓங்கினார் அதைப் பார்த்த மயன், அர்ஜுன! உனக்கு அபயம், சீக்கிரமாக வந்து

என்னைக் காப்பாற்று என்றான். அர்ஜுனன் பயப்படாதே யென்று அவனுக்கு அபயம் கொடுத்தான். கிருஷ்ணனும் அவனைக் கொல்ல நினைக்கவில்லை. கிருஷ்ணர்ஜுனர்களுடைய சகாயத்தினால் அக்கினி தேவன் பதினைந்து நாள் காண்டவ வனத்தை யெரித்தான். அதிலிருந்து மயன், அசுவசேனன், சாரங்கமென்னும் நான்கு பறவைகள் இவ்வைவரும் தஹிக்கப்படாமல் தப்பினார்கள்.

255-வது அத்தியாயம்,

பாவத் தொடர்ச்சி

ஜனமேஜயன் பகவான்னே [illegible] களை யெனைததினால் எரிந்து போகாமலிருந்தனை? மயன், அசுவசேனன் இருவரும் சாகாமலிருந்ததற்குக் காரணம் சொன்னீர்கள். சார்ங்கங்கள் தஹிக்கப்படாமைக்குக் காரணம் சொல்ல வேண்டுமென, வைசம்பாயனர் சொல்லுகிறார்.

தர்மாத்மாவும் சாஸ்திரங்களைக் கற்று உணர்ந்தவருமான மந்தபால முனிவர் என்று ஒரு ரிஷி யிருந்தார். அவர் தவசை மூடித்துச் சரீரத்தை ஒழித்துவிட்டுப் பிதிர்லோகம் போனார். அவர் அங்கே தவத்தின் பலனைப் பெறவில்லை. அதனால் அவர் வருந்தி யமனிடட இருக்கும் தேவர்களைப் பார்த்து, என்னுடைய தவத்தால் சம்பாதிக்கப்பட்ட இந்த உலகங்கள் என்ன மூடப்பட்டிருக்கின்றன? என்ன தவத்தை நான் செய்யாமற் போனேன்? எதற்காக இந்த உலகங்கள் மூடப்பட்டன? அதைச் சொல்ல வேண்டுகிறேன் என்று கேட்டார். நீர் யாசத்தினால் தேவர் கடனையும், வேதமோதினத்தினாலே ரிஷி கடனையும் தீர்த்துவிட்டீர். பிதிர்க் கடனைத் தீர்ப்பதற்குச் சந்ததியுண்டாக்க வில்லை. ஆகையால் இந்த உலகங்கள் மூடப்பட்டன. நீர் சந்ததியுண்டாக்கிக் கொண்டால் இவ்வுலகபலன்களை அனுபவிப்பீர் என்றார்கள். அவர் அப்படியே செய்கிறேன் என்று கூறி வந்தார். பின் எந்த ஜனனத்தினால் அதிக சந்ததி யுண்டாமென்று சிந்தித்தார். பறவைகளுக்குச் சந்ததி அதிகமென்று கண்டு சார்ங்க பட்சியின் உருவ மெடுத்துக்கொண்டு ஜரிதை யென்னும் பெயருள்ள பெண் பட்சியை மனைவியாக அடைந்தார். ஜரிதை காலு குஞ்சுகளைக் கர்ப்பந்தரித்தாள். அந்தக் குஞ்சுகள் முட்டையிலிருக்கும்போதே லபிதை என்னும் மற்றொரு பறவையை அடைந்தார், ஜரிதை அந்தக் குஞ்சுகள் வெளிப்பட்ட பின் தன் ஆகாரத்தினால் போஷித்தாள், அப்போது காண்டவவனத்தை யெரிக்க வருகிற அக்கினிதேவனை மூனிவர் கண்டார். அக்கினியின் எண்ணத்தையுணர்ந்த மந்தபாலர் அக்கினியைஸ்தோத்திரம் பண்ணினார். அக்கினியே நீ எல்லா வுலகங்களுக்கு முகமாக யிருக்கிறாய். ஹோமஞ் செய்பவற்றை யுண்பவன். குற்றமற்றவன். நீ எல்லாப் பிராணிகளுக்குள்ளும் மறைந்து வசிக்கிறாய். உன்னை ஒருவனாகவும், மூவராகவும், எண்மராகவும் பெரியோர் சொல்லுகின்றனர், நீயே உலகங்களை யெல்லாம் படைத்தாயென்று சொல்லுகிறார்கள். நீ யில்லாவிட்டால் உலகமெல்லாம் அழியும்.

பிராமணர்கள் உன்னை வணங்கித் தேன் மேலான கதியை அடைகிறார்கள். மின்னலுடன் கூடி வானத்திலிருக்கும் மேகங்களும் நீயே. உன் ஜ்வாலைகள் எல்லாவற்றையும் நாசமாக்கும். நீயே [illegible]கத்தைப் படைத்தாய். ஸ்தாவரஜங்கமங்கள் எல்லாம் உனது சிருஷ்டியே. ஆதியில் ஜலத்தை நீயே படைத்தாய். உலகம் உன்னிடத்திலே தானிருக்கிறது. [illegible]ஹவ்ய கவ்யங்கள் உன்னிடத்திலே தான் கொடுக்கப்படுகின்றன. நீயே பிழைப்பவன். நீயே படைப்பவன். நீயே பிரமா. நீயே பிருகஸ்பதி. நீயே அசுவினி தேவர்கள். நீயே சூரியன். நீயே சந்திரன். நீயே வாயு யென்று துதித்தார். அக்கினி மகிழ்ந்து உமக்கு நான் என்ன செய்யவேண்டுமென்று [illegible]மர், முனிவர்களே, நீர் காண்டவ வனத்தை கொளுத்தும்போது அதிலிருக்கும் எல்லா புத்திரர்களையும் விட்டுவிட வேண்டும் என்றார். அக்கினி அப்படியே ஆகட்டுமென்று வரங்கொடுத்தார். அதனாலே தான் அக்கினி சார்ங்கங்களை யெரிக்கவில்லை.

256-வது அத்தியாயம்.

மயதர்சன பர்வத் தொடர்ச்சி.

அந்தக் காண்டவ வனம் தீபடி யெரியும்போது அந்த சார்ங்கங்கள் தப்பித்துக்கொள்ளும் வழியை உணரவில்லை. ஜரிதையானவள், நான் என்ன செய்வது அக்கினி காட்டை யெரித்துக்கொண்டு கிட்டே வருகிறது என் குஞ்சுகள் பறந்து தப்பித்துக்கொள்ளச் சக்தியற்றவைகள். எதை விட்டுப் போவேன். எதை விடுவேன். சந்ததியை விருத்தியாக்கும் குஞ்சுகளை விட மனம் வரவில்லை. அக்கினி நெருங்கி வருகிறது. எனக்குத் தக்கம் மேலிடுகின்றது. பிள்ளைகளே! நான் என்ன செய்வேன்? என் சிறகினாலே உங்களை மறைத்துக்கொண்டு உங்களுடன் கூட இறக்கப் போகிறேன். ஜரிதாரி யென்னும் ஜேஷ்டபுத்திரன் இக்கட்டும்பத்துக்கு ஆதாரமாயிருப்பான். ஸாரிஸ்ருக்வன் தன் பிதிர் வம்சத்தைச் சந்ததியினால் விருத்தியாக்குவான். ஸ்தம்பமித்திரன் தவத்திற் சிறந்திருப்பான். துரோணன் பிரமஞானி யென்று உங்கள் பிதா கூறியிருக்கிறார். இப்போது இரக்கமில்லாமல் எல்லாரையும் விட்டுப் போய் விட்டார். உங்களில் எவரை யெடுத்துக் கொண்டு போவேன். தீராத சோகத்துக் காலம். என்ன செய்வே னென்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தது. அதைக் கேட்ட புத்திரர்கள் தாயே! எங்களிடத்தில் ஆசையை ஒழித்து விட்டு நீ பறந்துபோ. நாங்களிறந்தாலும் உனக்கு வேறு புத்திரர்கள் உண்டாகலாம். நீ இறந்தால் குலத்துக்குச் சந்ததியே யுண்டாகாமற்போம். இவ்விரண்டையும் ஆராய்ந்து பார்த்துச் செய்யத் தக்கதைச் செய். இது தான் தகுந்த காலம். தாய், பிள்ளைகளே! இந்த வேளையில் நுழைந்து கொள்ளுங்கள் இதில் அக்கினி பிரவேசியாது. பின் இந்த வேளையைப் புழுதியால் மூடிவிடுவேன். அக்கினி அணைந்த பின் புழுதியைத் தள்ளி விடுவேன். இதுதான் நல்ல வழி என்றது. அம்மா! மாமிசம் தின்னும் எலி எங்களோத் தின்று விடும்

தெரிந்திருந்தும் இந்த வலையிற் புகுந்துகொள்ள மாட்டோம. வலையில் புகுந்தால் எலியால் மரணம். வெளியிற் போனால் நீயால் மரணம். எலியால் மரணம் அடைவது சொடியது. நீயால் மரணம் அடைவது நல்லது. அக்கினியிலிறந்தே எங்களுக்குப் பயம். அக்கினியில் மடிந்தோமால் பிரமலோகத்தில் நிரந்தரமான வாழ்வைப் பெறுவோம என்றன.

257-வது அத்தியாயம்.

சர்சனபர்வத் தொடர்ச்சி.

தாய், பிள்ளைகளே! [illegible] எலி வலையில் வந்தது. அப்போது ஒரு பருந்து அதைத் தூக்கிக்கொண்டு போயிற்று. ஆகையால் உங்களுக்குப் பயமில்லை என்றது. பிள்ளைகள், அந்த எலியைப் பருந்து கொண்டு போனதை நாங்கள் அறியவே யில்லை. வேறு எலிகளிருக்கும் அவற்றால் மரணம் நிச்சயம். அசகினி இங்கே வருமென்கிற சமசயமில்லை. நிச்சயமான மரணத்தை விடச சந்தேகப்பட்ட மரணம் சிலாக்கியம். ஆகையால் சாயே நீ வழக்கப்படி ஆகாயதலிற் பறந்து போ. பின் நல்ல புதிராகளை அடையலாம் என்றன. தாய் பிள்ளைகளே! பருந்து எலியைத் தூக்கிகொண்டு போகும்போது நான் பார்த்தேன். அதைப் பின் தொடர்ந்து போய்ப் பருந்தை சனே! [illegible] பகையான எலியை எடுத்துக்கொண்டு போகிற நீ பறவற்றுச் சொர்க்கதில் சிறந்து வாழக் கடவாயென்று ஆசீர்வதித்துக் கொண்டே போனேன். அது எலியைத தின்ற பின் அதனிடம விடை பெற்றுக்கொண்டு திரும்பி வந்தேன். ஆகையால் இந்த வலையில் பயமில்லை. இதில் புழைபுகுங்கள் என்றது. தாயே அதை நாங்கள் பார்க்கவேயில்லை. தெரிந்து கொள்ளாமல் வலையிற் புகமாட்டோம். நாங்கள் உனக்கு ஒருதவியும் செய்யவில்லை. நாங்கள் யார் என்பதையும் நீ அறியாய். உன்னை உபத திரவப்படுத்தின எங்களைக் காப்பாற்றுகிறாய். எங்களுக்கு நீ யார்? உனக்கு நாங்கள் யார்? நீ சிறு பெண்ணாயிருக்கிறாய், உன் கணவனிடம் போ. நல்ல புத்திரர்களை அடையலாம். நாங்கள் இந்த அக்கினியில் மடிந்து புண்ணிய லோகம் போகிறோம்; எங்களைத் தீ யெரிக்காமலிருந்தால் நீ வரலாம் என்றன. அதைக் கேட்ட தாய் குஞ்சுகளை அங்கே விட்டுப் பறந்து பயமில்லாத இடம் போயிற்று.

258-வது அத்தியாயம்.

மயூராசன பர்வத் தொடர்ச்சி.

ஜாக்ரூரி, அறிவுள்ள மனிதன் ஆபத்து வருவதற்கு முன்னமே அதைத தடுக்க முயற்சி செய்வான். அவன் கஷ்ட காலத்தில் மருத்தப்படுகிறதில்லை. கஷ்டம் வரும் என்பதை முன்னே யறிந்து ஜாகரூரதைப் படாதவன் ஆபத்து

வந்தபின் தூக்கப்படுகிறான். அவனுக்கு கண்மை யில்லை யென்றது. ஸாரிஸ்ருக்வன், கலங்காதவன், புத்திசா கமருக்கு பிராதூபாயம் நோக்கிருக்கி றது. பல போகளில் ஒருவன் தா புத்திமானுகவும் வீரனுகவுமிருப்பான். எல்லாருமிருப்பதில்லை என்றது. வீ ம்பபித்தான், தனை பிதாவைப் போ ன்றவன். தமையனே கூட கால ல் காப்பாற்றுகிறான். தமையன் அந்த வழியை அறியாமலிருந்தால் தம்பி எ னை செய்யக் கூடும் என்றது. தரோ ணன், அங்கினி ஜ்வலிததாகொண்ட நமஸை நோ கி வருகின்றது என்று சொல்லிற்று. இப்படிப் பேசிகொ டிருந்த ன் அவைகள் முறையே ஒன்றின் பின ஒன்று ன்னி திப செய்தன.

ஜரிதாரி ஸதோத்திரம் செய்கிறான், அக்னி தேவனே! நீ காறறுக்கு ஆத்மாவைப் போலிருக்கிறாய். ஓஷதிகளுக்குச் சரீரம போன்றிருக்கிறாய். ஜலம் உனக்குக் காரணம், நீ ஜலதாகுக்குக் காரணம் நீ பரிசுத்தமாயிருக்கி றாய். மஹாவல்லமை புகலவன். உனது ஜ்வாலைகள் சூரிய கிரணங்களைப் போல நாலு பக்கங்களிலும் பரவுகின்றன என்று துதித்தது. ஸாரிஸ்ருக்வன், அக்கினியே தாயார எங்களை விட்டுப் போய்விட்டார் தந்தையை அறியோம். எங்களுக்கு இரக்கை முளைக்கவில்லை. எங்களை இரட்சிக்கிறவன் உன்னை விட யாருமில்லை. ஆகையால் அக்கினி தேவனே! குழந்தைகளாகிய எங்களை நீ யிரட்சிக்கவேண்டும். மங்களமான உனது சொரூபத்தை , உனது ஜ்வா லைகளாலும் துன்பமடைந்து, உன்னை சரணமடைந்தோம். எங்களை விட்டுச் சிகவேண்டும. அக்கினி தேவனே! நீயே தவதாகுக்கு காரணம். நீ சூரிய ரிஷிகளுக்கும் உபகாரம் கொடுக்கிறாய் சிலபேர்களும், ரிஷி புதிதிரர்களு மான எங்களைக் காப்பாற்று. ஹவிசுகளை ஏற்றுக்கொள்ளுகிறவனே! எங்களை விட்டுத் தூரமாகப் போகவேண்டும் என்று துதித்தது. ஸ்தம்பபித்திரன், எல்லாம் நீ ஒருவனே. இந்த உலகமெல்லாம் உன்னிடத்தில் இருக்கிறது. நீயே எல்லாவற்றையும் தாங்குகிறாய். நீயே ஜலத்தை விருத்தியாக்குகிறாய். நீதான் விருத்தியாகுமபடி செய்கிறவன் ஹோமஞ் செயயப்பட்ட திரவியங் களை தேவர்களுக்குக் கொடுகிறாய். ஹோம திரவியமும் நீயே. அறிஞர் உன்னை எகமாகவும் அதிகமாகவும் கருதுகிறார்கள். எல்லாஸ்தாவரங்களையும் நீயே படைத்துக் காத்து ச சங்காரிக்கின்றாய். உலகங்களுக்கு உற்பத்தி காரணம் நீயே. லயிக்கு மிடமும் நீயே என்றது துரோணன், ஜகதீசனே! நீ சுரர்களுக்குள் மறைந்து விருத்தி யடைந்து பிராணிகளை புஜிக்கும் ஆகாத்தை ஜீரணமாக செய்கின்றாய். எல்லாம் உன்னிடம் ஸாரமாகக் கொண்டிருக்கின்றன. அக்கினி தேவனே! நீ சூரியனுக நிருந்து பூமியிலுள்ள ஜலத்தையும், பூமியிலுற்பத்தியாகின்ற சாரத்தையும் இழுத்து மறுபடியும் சரியான காலத்தில் மழையாகப் பொழிந்து, அந்த மழையால் எல்லாவற்றையும் விருத்தி செய்கிறாய். ஓஷதிகளும கடலும் உன்னாலேயே உற்பத்தியாகின் றன. எங்களைக் காப்பாற்றவேண்டும. அழிகாதே. பொன்னிறமான கண

களையும், சிவந்த கழுத்தையும், கறுத்த வீதியையும், உடையவனே! ஹோமஞ் செய்ததைப் புழிப்பவனே! விலகிப்போற் கடலின் மனைவிகளாகிய நதிகளை விடுவதுபோல எங்களை விடு என்றது. இதைக் கேட்ட அக்கினி தரோணனை பார்த்து நீ துரோணரென்னும் ரிஷிபாயநகிறார். நீ சொன்னது வேதம். நீ விரும்பினதைச் சேய்வேன். நீ புலப்படாதே. உங்கள் தந்தையும் உங்களை யெரிக்காமல் வி டுவிடும்படி சொல்லி யிருக்கிறார். உன் ஸ்தோத்திரத்தினாலே நான் சந்தோஷமடைந்தேன். சிறந்த பிராமணனே! உனக்குச் சுகமுண்டாகக் கடவது என்று சொன்னான். துரோணன், இந்தப் பூனைகள் எப்போதும் எங்களுக்கு அசௌகரியமாயிருக்கின்றன. அவற்றை வம்சத்தோடு நாசம் செய்து விடு என்றது. அக்கினி அப்படியே பாகட்டுமென்று கூறி அவர்களைவிட்டுவிட்டுப் பூனைகளை யெரித்துக்கொண்டவனைத்தையும் எரித்தது.

---

259 வது அத்தியாயம்.

மயதர்சன பர்வத் தெர்டர்ச்சி

மந்தபால முனிவர் அக்கினியைத் தவிர்த்துத் தன் புதல்வர்களைக் காப்பாற்றும்படி கேட்டுக்கொண்டிருந்தபோதிலும் மனதில் துன்பம் நீங்கவில்லை. லபிதையை நோக்கி, என் சிறு புத்திரர் அக்கினிக்கு எப்படித் தப்புவார்கள். அவர்களுடைய தாயார் தாலட்டுகிறவள் யெப்படிக் காப்பாற்றித் தானும் தப்பித்துக்கொள்வாள். இவர்கள் எப்படி யானார்களோ தெரியவில்லை யென்று துயரப்பட்டார். அதைக் கேட்ட லபிதை பொறுமை யடைந்து உமக்குப் புத்திரர்களைப் பற்றி கவலை யேன்? அவர்கள் மகிமையுள்ளவர்களென்று சொல்லி யிருக்கிறீரே? அவர்களுக்குத் தீயின் பயமில்லை. அக்கினியையும் பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டிருக்கிறீர். அவரும் காப்பாற்றுவதாக வாக்குக் கொடுத்திருக்கிறார். உமக்கு உமது பிள்ளைகளைப் பற்றிக் கவலையுண்டாகவில்லை. என் பதிவிரதையான நிதியைப் பற்றித்தான் கவலைப் படுகிறீர். நீர் அவளிடம் போம். நான் சகாயமற்றவளாகத் திரிவேன் என்றது. மந்தபாலர் நீ சொல்லுவது போல நானிருக்கவில்லை. நான் புத்திர சந்தானத்துக்காகச் சஞ்சரிக்கிறேன். உள்ளதை விட்டுவிட்டு இனிமேல் வரப் போகிறதை விரும்புகிறவன் மூடன். அவனை ஜகம் துஷிக்கும். நீ உன் பிரியப்படி நடந்துகொள்ளலாம். என் புத்திரர்கள் அக்கினி கஷ்டத்திலிருக்கின்றனர், அதனால் என் மனம் வருந்துகிறது என்றார். அது கேட்ட லபிதை தானும் தேற்றப்பட்டுக் கணவனுக்கு உபசார மொழிகள் கூறிற்று. அக்கினி சூழ்ந்திருந்த இடத்தை விட்டு நீங்கினதும் ஜரிதை அங்கே வந்து சூழ்ந்தகள் அபாயமின்றிச் சப்தித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தது. பார்த்த வுடனே கண்களில் நீர் சொரிந்தது. பின் அவற்றினிடம் போய்ப் பேசியது. குஞ்சுகளைத் தழுவி முத்தமிட்டது. அப்போது மந்தபாலரும் வந்து சேர்ந்தார். அத்தப் பிள்ளைகளிலொன்றும் அவரைப் பிரியமாய் அழைக்கவில்லை.

அவருக்கு மரியாதைக்காக மாத்திர[illegible]மஸகரிக்கிறேனென்றன. அவர் அந்த குழந்தைகளைத் தாமே யழைத்துச் [illegible]மூவி உச்சிமோந்து, அவைகளிடத்தும் ஜரிதையிடத்தும் பல சடவை பே[illegible]ர். அவைகள் ஒன்றும் சொல்லவில்லை. பின் மனைவியைப் பார்த்து ஜரிதை [illegible] இவர்களில் மூத்த ன் யார்? அவனு க்கு இளையவன் எவன்? அவனுக்கு [illegible]ளையவன் யார்? டைசிப் பிள்ளை எவ னென்று கேட்டார், பின் பெண்[illegible]ர! வருத்தப்படக் கேட்கிற னைக்கு என் மறுமொழி கூறவில்லை? நான் அ[illegible]கினி தேவ[illegible]த்தில் தகுந்த ஏற்பாடு செய்தேன் என்று சொல்லித் தன் பத[illegible]னியைத் [illegible]விக்கொடுத்தார். ஜரி தை மூத்தவனுலாவது [illegible]க்காக வேண்டிய தென்ன? ஒரு கதியும் இல்லாமல் விட்டு யாரிடம[illegible]னீரா அவளிடத்துக்கே மீண் டும் போம் என்றது. பெண்களுக்கு வேறு புருஷர்களை யடைவதை காட்டி லும் கெடுதி யொன்றுமில்லை. பரலோகத்தை அது அழிக்கும். சக்களத்தி யிருந்தால் இதத்தில் சுகமில்லை. அது துவேஷத்தை யுண்டாக்கும். துக்கத் தை விருத்தியாக்கும். அருந்ததி கூட வசிஷ்டரிடம் சந்தேகப் பட்டாள். அவள் வசிஷ்டரை அவமதித்தாள். புத்திரரைக் கருதி வக்திருக்கிற என்னை, அருந்ததி வசிஷ்டரை அவமதித்தது போல நீ அவமதிக்கிறாய். புத்திரர்களை பெற்ற ஸ்திரீ புருஷனிடத்தில் பிரியமாக மிருக்கிறதென்று நினைப்பதில்லை என்று யெடுத்துச் சொன்னாள். பி[illegible]ள்ளைகளெல்லாரும் அவரை உபசரித் தார்கள். அவரும் பிள்ளைகளை[illegible]ரையும் தேற்றினார்.

---

260 வது அத்தியாயம்.

மயதாசன் பர்வத் தொடர்ச்சி

உங்களை யெரிக்காமல் கரு[illegible]ம். முற்றும்படி அக்கினி பகவானைக் கேட்டுக் கொண்டேன். அக்கினியும் அப்படியே காப்பாற்றுகிறேனென்று சொன்னார். அதையும், உங்களுடைய மகிமையையும், உங்கள் [illegible]யார் தர்மம் தெரிந்தவ னென்பதையும் அறிந்தபடியால்தான் நான் இங்கே வ[illegible]மலிருந்தேன். ஆகை யால் நீங்கள் என்னிடம் வருத்தம் வைக்கக் கூடாது. நீங்கள் ரிஷிகளென்று அக்கினி தேவன் நன்றாய் அறிவார் என்று கூறி, மனைவியையும் குழந்தை களையும் அழைத்துக்கொண்டு மந்தபாலர் வேறு தேசம் போனார். அக்கினியும் காண்டவ வனத்தை எரித்தான் கொழுப்பும் இரத்தமும் ஆறாக அங்கே ஓடிற்று அக்கினி அவற்றைப் பானம் பண்ணித் திருப்தி யடைத்து [illegible]ர்ஜுனனைப் பார் த்துக் களித்தான். பிறகு தேவேந்திரன் தேவர்கள் சூழக் [illegible]ருஷஸ்ரேஷ்டர்ஜுனர் களிடம் வந்தான். அவர்களைப் பார்த்து நீங்களிருவரும் தேவர்களாலும் செய் வதற்கரிய பெரிய செய்கையைச் செய்து முடித்தீர்கள். ஆகையால் நான் மன மகிழ்ந்தேன். மனிதர்களுக்குக் கிடைப்பதற்கரிய வரங்களைக் கேட்டுக் கொள்ளுங்கள் என்று சொன்னான். அர்ஜுனன் தேவதாஸ்திரங்கள் எல்லா

வற்றையுந் தரவேண்டு மென்று கேட்டனை. இந்திரன் மகிழ்ந்து அர்ஜுனனே! சிவபிரான் உனக்குப் பிரத்தியட்சம் ஆட்போது சகல தேவகாஸ்திரங்களையும் உனக்கு நாளை கொடுப்பேன். அதற்கு காலம் எனக்குத் தெரியும். அப்போது அஸ்திரமோக மெறம பெரிவும் உடையவனாயிருப்பாய் என்றான். கிருஷ்ணன் ஸந்தோஷப்பட்டு தேவனே! இந்த அர்ஜுனனிடத்தில் எனக்கு நீங்காத ஸ்நேகம் இருக்கவேண்டு மென்று கேட்டார் இந்திரன் அப்படியே கொடுத்து போனான். தும்புரு தேவன் மிருதபட்சிகளுடன் அந்த வனத்தை யெரித்து இருபத்தோரு நாட்களுக்குப் பின் தணிந்தான். அக்கினி கிருஷ்ணார்ஜுனர்களை [illegible] உயிருவராலுந் திருப்தியடைந்தேன். உங்களுக்கு [illegible] கோகிறேன். உமக்குப் பிரியமான இடத்துக்குப் போகலாம். அர்ஜுனனே! காண்டீவமென்னும் சிறந்ததனுசும் பாணம் வற்றாத தூணிகளும், அழியாத தேரும், சுக்கியாத குதிரைகளும் உனக்குக கொடுத்திருக்கிறேன். இவற்றைக்கொண்டு தேவாசுர மனிதாகளெல்லாரையும் நீ ஜயித்து மகிழக் கடவாய் என்று [illegible] கொடுத்துவிட்டுப் போனான். கிருஷ்ணார்ஜுனர்கள் மயனுடைய கூடப்பிறந்தவனுடைய [illegible] நதிகரையில் உட்கார்ந்தார்கள்.

ஆதிபர்வம் முற்றிற்று.